முத்துவியம்



கழக வெளியீடு

21 JAN1975

முத்துவீரியம்

ஆசிரியர்:
முத்துவீர உபாத்தியாயர்

TNSDA
04020

கழக வெளியீடு

முத்துவீரியம்

பதிப்பாசிரியர்:

பண்டித வித்துவான், சைவப்புலவர்,
சித்தாந்த நன்மணி

கு சுந்தரமூர்த்தி, எம் ஏ,

கழக வெளியீடு : எசசுங


திரிசிரபுரம் உறையூர் வித்துவான்
முத்துவீர உபாத்தியாயர்

இயற்றிய

முத்துவீரியம்

[ஐந்திலக்கணங்களும் அடங்கியுள்ளன]

(திருநெல்வேலி திருப்பாற்கடலுதன் கவிராயர் உரையுடன்)



பதிப்பாசிரியர் :
பண்டித வித்துவான், சைவப்புலவர்
சித்தாந்த நன்மணி
கு சுந்தரமூர்த்தி, எம் ஏ, அவர்கள்


★

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை-1.
திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
1972

குப்புசாமி முதலியார் சுந்தரமூர்த்தி (1930)

© 1972 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Ed 1 (Kazhakam) November 1972



P31, JxM80,1
M72

894.811
முத்

MUTHUVEERIYAM

(Eaztthu, Sol, Porul, Yappu & Ani)

Appar Achakam, Madras-1. (1/-)

பதிப்புரை

செந்தமிழ் மொழியின் சீர்மைகள் பலவற்றுள்ளும் முதன்மையாகக் குறிக்கத் தக்கது அதன் இலக்கண வரம்பின் ஏற்றமே என்பது அனைவரும் ஒப்பமுடிந்தவோர் உண்மையாகும். அவ்விலக்கணந்தானும் உலகிடை வழங்கும் ஏனைய மொழிகளுள் எம்மொழியிலும் பயிலப் பெறுத பொருளிலக்கணத்தொடு பொருந்தி எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னுமாற்றால் அமைந்துள்ள திறம் தமிழ் மொழியின் தன்னேரில்லாத் தனித் திறனாகும்.

ஐந்திலக்கணங்களும் ஒருங்கமையப்பெற்ற தொன்னூல்களுள் இன்றைய நமக்குக் கிடைத்திருப்பது தொல்காப்பிய மொன்றுமே யாகும். இத் தொல்காப்பியத்துள், எழுத்துச் சொற்பொருள் என்னும் மூன்றதிகாரங்களில் ஐந்திலக்கணங்களும் கூறப்பட்டுள்ளன. யாப்பும் அணியும் பொருளில் அடக்கிக் கூறப்பட்டுள்ளன. எனவே, பிற்காலத்தில் யாப்புக்கும் அணிக்கும் தனித்தனி நூல்கள் சிலரால் இயற்றப்படலாயின. ஈதன்றித் தொல்காப்பியத்திற் கூறப்பட்டுள்ள இலக்கணத்துறைகள் ஐந்தும் நுண்மாண் நுழைபுல முடையார்க்கே தெள்ளிதின் விளங்குவனவாகவும் ஏனையோர்க்கு எளிதில் விளங்காதனவாகவும் உள்ளன. எனவே, அறிஞர் சிலர் தொல்காப்பியத்திற்கு வழி நூலாக ஐந்திலக்கண முழு நூல் இயற்றலாயினர். இவ்வகையில் தோன்றிய நூல்கள் முறையே, வீரசோழியம், தமிழ்நெறி விளக்கம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல், முத்துவீரியம் என்பனவாகும். முத்துவீரியத்திற்குப் பின்னர்த் தோன்றிய நூல்களும் சிலவுள.

இந் நூல்களுள் 'தமிழ்நெறி விளக்கம்' என்பது முழுமையாகக் கிடைத்திலது. நன்னூல் கிடைத்துள்ளதில் எழுத்தும் சொல்லும் இடம் பெற்றுள்ளனவன்றி ஏனைய மூன்றும் இடம் பெற்றில. எஞ்சிய ஐந்திலக்கண முழுநூல்களுள் வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் என்னும் மூன்றும் முத்துவீரியத்திற்கு முற்பட்டனவாகும். இந் நூல்களிருப்பவும் 'முத்துவீரியம்' இயற்றப்பட்டதற்குக் காரணம் காலப்போக்கில் இலக்கியங்களில் தோன்றிய இலக்கண விகற்பங்கள் சிலவற்றை இயம்ப

வேண்டு மென்னும் ஆர்வமும், இலக்கண விதிகள் சிலவற்றிற்கு மேலும் விளக்கந் தரல் இன்றியமையாதது என்னும் உணர்ச்சியின் தூண்டுதலுமே யாகும்.

இவ்வாற்றான் கி. பி. 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த **உறையூர் முத்துவீரப்ப உபாத்தியாயர் என்பவரால் இயற்றப்பட்ட** நூலே **முத்துவீரியம்** ஆகும். தொல்காப்பியரால் இயற்றப்பட்ட இலக்கணம் 'தொல்காப்பியம்' என வழங்கப்பெறுவதுபோல் முத்துவீரப்பரால் இயற்றப்பட்ட நூல் முத்துவீரியம் எனப்பெறுகின்றது.

தாம் இயற்றிய நூலின் இன்றியமையாமை மக்களுக்குப் புலப்படும் வகையில், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் இலக்கணத்துறை ஐந்தனுள்ளும் புதுமைக் கருத்துக்கள் சிலவற்றைப் பொருத்தமுற இந்நூலாசிரியர் புகன்றுள்ள திறம் போற்றற்குரிய தொன்றாகும். தொல்காப்பியத்தின் வழி நூலாகத் தோன்றிய அனைத்திலக்கண நூல்களும் தொல்காப்பிய உரையாசிரியர்கள் பலருடைய கருத்துக்களைத் தழுவியும், மாறுபட்டும் அமைந்தனவாகும். அவ்வகையில் இம் முத்துவீரியமும் தொல்காப்பிய நூற்பாக்கள் சிலவற்றிற்கு உரை விளக்கம் போன்றமைந்துள்ளது. நன்னூலும் அங்ஙனமமைந்ததொரு நூலேயாகும். பலவிடங்களில் நன்னூலார் கருத்துக்களை முத்துவீரிய நூலாசிரியர் ஏற்றுப் போற்றியிருப்பது நன்னூலின் பெருமையை விளக்குவதாகும்.

சொற்பொருட் சுவை நலந்துய்த்து மகிழும் விழுப்பண்பாளர் இதனாற் பயன் யாதெனும் வினவை யெழுப்பாமல் சுவையே பயனாகக் கருதியமைவர்.

> "நுண்ணுணர்வி னுரொடு கூடி நுகர்வுடைமை
> விண்ணுலகே யொக்கும் விழைவிற்றால்"

என்பது நூல்களுக்கும் பொருந்துவதாகும். இத்தகு தொன்னூல்களுட் சில போற்றுவாரின்மையால் இறந்தொழிந்தன வெனுங் குறிப்பினைச் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரையிற் காணுங்கால் தமிழார்வலர் நெஞ்சந்துணுக்குறுதல் இயல்பாகும். எனவே, இது போழ்து எஞ்சியுள்ள தொன்னூல்களுட் சில இறந்தொழியா வண்ணம் அவற்றைப் பேணுதல் வேண்டு மென்னும் அவாவினால் உந்தப்பெற்று இதன் முனைவர், **வீரசோழியம்** என்னும் நூலைக் கழக வாயிலாக வெளியிட்டோம். **இலக்கண விளக்கம்** என்னும் நூல் வெளிவரும் தறுவாயிலுள்ளது. **முத்துவீரியம்** இப்பொழுது வெளிவருகின்றது.

21 JAN1975

இம் முத்துவீரிய நூலுக்கு உரையாசிரியராய் அமைந்தவர் திருநெல்வேலி திருப்பாற் கடலுதன் கவிராயர் என்பார். இவர் தம்முரை பண்டை இலக்கண நூலுரையாசிரியர்களாகிய இளம் பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியவர்களுரையை ஒருவாறொத்திருப்பினும் பொழிப்புரையாகச் சுருக்கமாக அமைந் துள்ளது. முன்னோர் உரைகளுக்கெல்லாம் விளக்கக் குறிப்புத் தருவது போன்றே இவ்வுரைக்கும் விளக்கக் குறிப்புத் தருதல் நன்றுமென்று கருதினேம்.

எம் கழக வாயிலாக வெளிவந்துள்ள தொல்காப்பியச் சொல்லதிகாரம் இளம்பூரணருரை, கல்லாடருரை, நச்சினார்க் கினியருரை, தெய்வச்சிலையாருரை யாகியவற்றிற்குத் திருப்பனந் தாள் தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் பண்டித வித்துவான் சைவப் புலவர் சித்தாந்த நன்மணி திரு. கு. சுந்தரமூர்த்தி, எம்.ஏ., அவர்கள் விளக்கக் குறிப்புரை எழுதியுதவி யுள்ளார்கள். அவ் விளக்கக் குறிப்புரைகள் புலவர் பெருமக்களின் பாராட்டைப் பெற் றுள்ளன. எனவே, இம்முத்துவீரிய நூலுக்கும் விளக்கக் குறிப்புரை வரைந்துதவுமாறு அவர்களேவேண்டினேம். அவர் களும் இசைந்து விளக்கக் குறிப்புரையுடன் மேற்கோட் செய்யுள் களில் பலவற்றிற்கு இடக் குறிப்பும் தந்துதவியுள்ளார்கள்.

மேலும், அவர்கள் இந்நூலுக்கு அரியதோர் ஆராய்ச்சி முன்னுரையும் வரைந்து அணி செய்துள்ளார்கள். அவ்வாராய்ச்சி யுரையின்கண் இம்முத்துவீரியத்தின் சிறப்பியல்புகளைத் தெளிவுற விளக்கியுள்ளார்கள். அல்லாமலும் அவ்வாராய்ச்சியுரை ஐந் திலக்கண நூல்கள் பற்றிய ஒரு திறனாய்வுக் கட்டுரை போன்று சுவைபட அமைந்துள்ள திறம் போற்றுதற்குரியதாகும்.

ஐந்திலக்கண நூல்கள் உள்ளன பிறவற்றிற்கும் இம் முத்து வீரியத்திற்கு மிடையே யமைந்த இயைபு வேறுபாடுகளை அடைவே எழுத்து முதல் அணியீறாக வுள்ள அதிகாரங்கள் ஐந்தினின்றும் எடுத்துக் காட்டுக்கள் தந்து விளக்கியுள்ள முறை இவர் தம் ஆழ்ந்தகன்ற கல்விப் பெருமைக்குச் சான்றாக அமைந் துள்ளது.

சங்க காலத்திற்குப் பிறகு புறப்பொருள் நூல்கள் படிப் படியே சுருங்கி, அகப்பொருள் நூல்களே பல்கிப் பெருகலாயின மைக்குக் காரணங் காட்டுவாராய்,

"சங்ககால வாழ்வியலில் நாட்டையும் தன்னையும் காத்துக் கொள்ளும் பொறுப்புத் தனிமனிதன் ஒவ்வொரு

வன் உள்ளத்திலும் வேரூன்றி வளர்ந்திருந்தது. அத்தகைய உணர்வு தேவையாயும் இருந்தது.

'வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே'

என்பன போன்ற பாடல்கள் எழுந்தன.

காலப் போக்கில் நாட்டைக் காக்கும் பொறுப்பு அவ்வக் காலத்தில் காவற்சாகாடுகைக்கும் அரசற்கே உரியதாயது. காவலனும் அவனுக்கிருக்கும் படைகளுமே அதனைச் செய்யும் பொறுப்பை ஏற்றனர். ஆதலால்தான் போர்முறை பற்றிய இலக்கணங்களும் நெகிழலாயின''

எனக் குறித்துள்ள கருத்து இவர்தம் சிந்தனை யாழத்தைத் தெளிவுற விளக்குவதாகும்.

இனி, இத்தகு நூல்கள் தமிழ் கற்பவர்கள் அனைவராலும் விரும்பிப் பெற்றுக் கற்கப்படமாட்டா என்பதை நன்கறிவோம். எனவே, புலவர் தேர்விற்கு இது பாடமாக அமையப் பெறுதல் வேண்டுமென்னும் விழைவு ஒருபாலுடையேம். எனினும், அந் நோக்கோடு நாம் இதனை வெளியிட முன்வரவில்லை. ஊதிய நோக்கம் பெரிதின்றிப் பண்டைய நூல்களைப் பேணிக் காத்தல் வேண்டுமென்னும் பெருநோக்க மொன்றே குறிக்கொண்டு இதன் முன்னர்ச் சில நூல்களை வெளியிட்டிருத்தல் போன்றே இந்நூலையும் வெளியிட்டுள்ளோம்

ஆயினும், தமிழைப் போற்றுதல் தங்கள் தலையாய பணிகளுள் முதன்மையானதாகக் கொண்டு கோலோச்சி வரும் தமிழக அரசினர் இத்தகு பணிகளுக்கு இயன்ற வகையில் பொருளுதவி புரிதல் வேண்டும். நூலகப் பொறுப்பாளர்கள், தமிழார்வலர்களில் பொருள்வளம் வாய்க்கப்பெற்றவர் ஆகியோர் இந்நற்பணிக்கு உறுதுணையாக நிற்கவும் வேண்டும்.

'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்னும் அறிவுரைக் கிணங்கத் தமிழின் உயர்வே கருதித் தொண்டாற்றும் எம்முயற்சிக்குத் துணை புரியுமாறு, இறைவன் திருவருளை வழுத்துகின்றோம்.

இதன் முதற் பதிப்பை 1889ஆம் ஆண்டில் பிழையின்றி அழகியதாக சென்னை அல்பீனியன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்ட திரு பழனியாண்டி அவர்கட்கும், அதற்கு நல்லுரை

வழங்கிய திருநெல்வேலி திருப்பாற்கடனுதன் கவிராயர் அவர் கட்கும் கழகமும் தமிழகமும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையன வாகும்.

இப்பதிப்பு நன்முறையில் வெளிவருதற்குத் துணைநின்ற பேராசிரியர் **பண்டித வித்துவான் திரு. கு. சுந்தரமூர்த்தி** எம். ஏ., அவர்களுக்குக் கழகத்தின் பாராட்டையும் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

PUBLISHER'S NOTE

(First Edition)

The first two parts of this Grammar were published in 1881, by the kind aid of Mr. Pattabiram Pillay, a Deputy Collector in Government service.

It will be admitted that a *complete* Tamil Grammar, treating of the 5 parts in a style like that of the present work, is a desideratum amongst the present scholars; and I have therefore ventured to publish the "Muthuviryam" in full, by obtaining the work in manuscript from the author.

1889 **S. PULNEY ANDY**, M.D., F.L.S.

முதற் பதிப்பின் பதிப்புரை

அகத்தியம், தொல்காப்பிய முதலிய முன்னூல் களும், இலக்கணவிளக்க முதலிய பின்னூல்களும், ஐந்திலக்கணத்தன வாயினும், அவை, மூலமும் உரையும் மிகக் கற்றுவல்ல சான்றோர்க்கே யன்றி ஏனையோர்க்கு அரிதுணர் பான்மைத்தாய் அருநடை யுள்ளன வாதலானும், இது, எளிய நடையுள்ளதும், பழையன கழிதலால், அக்காலத்து வழங்கிய சில விதிகள், இக்காலத்து வழங்கிப் பெரும்பயன்றராமை கருதி ஒழித்தும், புதியன புகுதலால், அக்காலத்து வழங்காதிருந்து இக்காலத்துப் பெரும்பயன்றருதல் கருதிச்சேர்த்தும் செய்யப்பட்டிருப்பதுமா யிருத்த லானும், இக்காலத்து, ஐந்திலக்கணமும் முறையே யொருவாறு கற்கப்புகு மாணாக்கர்க்கு மிகவும் பயன்படு மென்பதுகருதி, யாம் இதனை அச்சிட்டு வெளியிட லாயிற்று.

1889 S. P. A.

உள்ளுறை

பக்கம்

ஆராய்ச்சி முன்னுரை 13
சிறப்புப் பாயிரம் க
பொதுப் பாயிரம் உ

க. எழுத்ததிகாரம் எ

க. எழுத்தியல் அ
உ. மொழியியல் ஙஙூ
ஙூ. புணரியல் சஞ்

உ. சொல்லதிகாரம் கஉச

க. பெயரியல் கஉச
உ. வினையியல் கசஉ
ஙூ. ஒழிபியல் களள

ஙூ.. பொருளதிகாரம் உகஞ

க. அகவொழுக்கவியல் உகஞ
உ. களவொழுக்கவியல் உஙூ0

க. கைகோள் இரண்டு ,,
உ. மன்றல் எட்டு ,,
ஙூ. தலைமகனுக்குரிய குணம் உஙூக
ச. தலைமகளுக்குரிய குணம் உஙூஉ
ஞ. களவொழுக்கம் நிகழுமாறு ,,
ஷ. அகத்திணை நிகழ்ச்சி உஙூஙூ
எ. கைக்கிளையின் வகை உஙூச
அ. இயற்கைப் புணர்ச்சி உஙூள
கூ. பாங்கற் கூட்டம் உசக
க0. இடந்தலைப்பாடு உஞ்ச
கக. மதியுடம் படுதல் உஞ்ஞ
கஉ. இருவருமுள்வழி யவன்வர வுணர்தல் உஞ்ஙூ
கஙூ. முன்னுற வுணர்தல் உஷ0
கச. குறையுற வுணர்தல் உஷக
கஞ. நாணநாட்டம் உஷஙூ
கஷ. நடுங்க நாட்டம் உஷஞ

களⁿ.	மடற்றிறம்	உசுசு
கஅ.	குறைநயப்புக் கூறல்	உளo
ககூ.	சேட்படை	உளச
உo.	பகற்குறி	உஅஇ
உக.	இரவுக்குறி	உகஅ
உஉ.	ஒருவழித்தணத்தல்	கூகஉ
உங.	உடன் போக்கு	கூகள
உச.	வரைவு முடுக்கம்	கூசo
உஞ.	வரைபொருட் பிரிதல்	கூசள
கூ.	கற்பொழுக்கவியல்	கூசுக
உசு.	மணஞ் சிறப்புரைத்தல்	கூசுஉ
உள.	ஓதற் பிரிவு	கூசுசு
உஅ.	காவற் பிரிவு	கூசுஅ
உங.	பகைதணிவினைப்பிரிவு	கூசுங
கூo.	வேந்தற் குற்றுழிப்பிரிவு	கூளo
கூக.	பொருள் வயிற்பிரிவு	கூளள
கூஉ.	பரத்தையிற் பிரிவு	கூஅசு
ச.	யாப்பதிகாரம்	சoஅ
க.	உறுப்பியல்	,,
உ.	செய்யுளியல்	சஉஉ
கூ.	ஒழிபியல்	சசக
ஞ.	அணியதிகாரம்	சகஎள
க.	சொல்லணியியல்	,,
உ.	பொருளணியியல்	ஞகங
கூ.	செய்யுளணியியல்	ஞஞக
	நூற்பா முதற்குறிப்பு அகரவரிசை	ஞசுக
	பொருட்குறிப்பு அகரவரிசை	ஞளஞ

———

ஆராய்ச்சி முன்னுரை

[பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி, எம்.ஏ., திருப்பனந்தாள்]

தமிழ் மொழி மிகத் தொன்மையது மட்டுமன்று. காலப் போக்கில் வளர்ந்துவரும் வளர்ச்சியும் உடையது. தமிழில் இலக்கியங்கள பல்கியிருத்தல் போன்றே இலக்கண நூல்களும் பல்கியுள்ளன. இங்கிலியில் கிளைத்த இலக்கண நூல்கள் பல. அவற்றுட் சில காலப்போக்கில் மறைந்தொழிந்தன. மிகத் தொன்மையவாய நூல்களுள் காலப்போக்கால் அழிந்துபடாது வளர்ச்சிக்கேற்ற கருத்தினை நல்கிப் பொன்றுது நின்றிலங்குவது தொல்காப்பியமொன்றுமேயாகும். இஃது எழுத்துச் சொற் பொருள் ஆகிய மூப்பிரிவுகளை உடையது. பொருளதிகாரத்தின பகுதியாக யாப்பணிகள் அமைந்துள்ளன.

மூன்று ஐந்தாயினமை : நம் மொழியில் இயற்றமிழிலக்கணம் தொடக்கத்தே எழுத்துச் சொற் பொருளென்ற மூப்பொருட் பாகுபாட்டளவினதாகவே யமைந்திருந்தது. இறையனர் அகப் பொருட் காலத்துப் பொருளினின்றும் யாப்புப் பிரிந்தது. பின்னர்ப் பொருளதிகாரத்தின் பிரிவாகிய அகப்புறப் பொருள்கள் பற்றிய தனித்த நூல்கள் எழலாயின. அதனையடுத்து யாப்புப் பற்றிய தனி நூல்கள் பலவும் அணியிலக்கணம் பற்றிய தனி நூல்கள் பலவும் தோன்றலாயின.

ஐந்திலக்கண நூல்கள் : இங்ஙனம் விரிந்த இலக்கண வகை ஐந்தினையும் ஒருங்கு கூறும் நூல்களும் காலப்போக்கில் வளர லாயின. இவற்றுள் முதலாயது **வீரசோழியம்** என்னும் நூலாகும். இந்நூல் ஐந்திலக்கணமும் கூற எழுந்ததெனினும் வடமொழி இலக்கண அமைப்பையே பெரிதும் தழுவிக் குறியீடு களைக் கூட அப்பெயரால் அமைத்திருத்தலின் பெரிதும் பயிலப் படாததாயிற்று. இதன் காலம் கி. பி. 11ஆம் நூற்றாண்டாகும். இரண்டாவதாகக் குறிக்கத்தக்கது **தமிழ்நெறி விளக்கம்** என்னும் நூலாகும். இந்நூலில் அகப்பொருள் பற்றிய உரி நூற் பாக்களே இருஞாற்று கிடைத்திருப்பினும் இஃது ஐவகை இலக்கணமும் அமைந்த முழுநூலாக விளங்கியிருத்தல் வேண்டு மென இதன் முன்னுரையால் தெரிகின்றது. இதன் **காலம்**

கி. பி. 12ஆம் நூற்றாண்டாகும். இதனை அடுத்துக் கருதத் தகுந்தது நன்னூலாகும். இதன் சிறப்புப் பாயிரத்தில் "அரும் பொருள் கிளந்தையும் யாவருமுணரத் தொகைவகை விரியில் தருகென"ச் சீயகங்கன் கேட்டுக் கொண்டதற்கிணங்கப் பவணந்தியார் இந்நூலை இயற்றியதாகக் கூறப்பட்டுள்ளது. எனினும், இன்று இந்நூலிற் காணப்படுவன எழுத்தும் சொல்லுமேயாகும். ஏனைய பொருள், யாப்பணிகள் பற்றிய இலக்கணம் அக்காலத்து இருந்து அழிந்தன போலும். இந்நூலின் காலம் கி. பி. 12ஆம் நூற்றாண்டாகும். இதன் பின்னர் எழுந்தது இலக்கண விளக்கமாகும். தமிழ் மரபு தழுவி மிக விரிவாக எழுந்த ஐந்திலக்கண நூல் இதுவாகும். இதன் காலம் கி. பி. 17ஆம் நூற்றாண்டாகும்.

இதற்குப்பின் எழுந்த ஐந்திலக்கண நூல் **தொன்னூல் விளக்கமாகும்.** இஃது ஐந்திலக்கணமும் கொண்டதாயினும் பொருள்பற்றி விளக்கும் முறை மிகப் புதியதாகும். இது கி. பி. 18ஆம் நூற்றாண்டில் எழுந்ததாகும்.

இதன் பின்னர் எழுந்த நூல் **முத்துவீரியமாகும்.** தமிழ் மரபையே பெரிதும் தழுவி மிக விரிந்ததாய் அமைந்த நூல் இதுவாகும். இதன் காலம் கி. பி. 19ஆம் நூற்றாண்டாகும். இக்காலத்தே **சாமி கவிராசர்** என்பவரால் **சாமிநாதம்** என்ற பெயரில் ஐந்திலக்கணமும் கொண்ட நூல் எழுந்தது. இந்நூல் முழுமையாக வெளிவந்திலது. **தண்டபாணி சுவாமிகள்** என்பார் இவ்வைவகை இலக்கணத்தோடு **புலமை இலக்கணம்** என்ற ஒன்றைக் கூட்டி **அறுவகை இலக்கணம்** என்னும் பெயரில் ஒரு நூல் செய்துள்ளார்.

முத்துவீரியம்: இந்நூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், யாப்பதிகாரம், அணியதிகாரம் என்னும் ஐம்பெரும் பிரிவுகளை உடையது. கடவுள் நூற்பாக்களை உடையது. நூற்பாக்கள் ஆசிரியப்பாவால் அமைந்தவை. ஒவ்வோர் அதிகாரத்திலும் மும்மூன்றியல்களுள. அதிகாரந்தோறும் தனித்தனியே கடவுள் வாழ்த்துக்களுள. ஐந்திலக்கண நூல்களுள் மிகவிரிந்த நூல் இதுவாகும்.

நுவலும் பொருளும் திறனும்:

எழுத்ததிகாரம்: இஃது எழுத்தியல், மொழியியல், புணரியல் என்னும் மூன்று பிரிவுகளை உடையது.

எழுத்தியல்: எழுத்தியலில் எழுத்துக்களின் வகை, வடிவு, பெயர், பிறப்பு, மொழி முதலிடையிறுதியில் வரும் எழுத்துக்கள், மாத்திரை, போலி ஆகியவை பற்றி ஆராயப்பட்டுள்ளன. சார்பெழுத்து மூன்றென்பர் தொல்காப்பியர். நன்னூலார் பத்தென்பர். இவர் இரண்டென்பர்.

"சார்பு உயிர்மெய் தனிநிலை இருபால"

என்பது அந்நூற்பாவாகும். குற்றியலிகரமும் குற்றியலுகரமும் மெய்யொடு கூடியே வருதலின் அவ்விரண்டையும் உயிர்மெய் யென அடக்கிக் கூறினர் எனலாம். அளபெடையில் இயற்கை அளபெடை, செயற்கை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை, நெடிலளபெடை, குறிலளபெடை, ஒற்றளபெடை, எழுத்துப்பேரளபெடை என எண்வகையாகப் பாகுபாடு செய்து இருப்பது தொல்காப்பியத்திலும் நன்னூலிலும் காணப்படாத தொன்றாகும். இங்ஙனமே மெல்லெழுத்துக்கள் தலையினிடமாகப் பிறக்கும் என்றும், ஆய்தம் உந்தியினிடமாகப் பிறக்கும் என்றும், ஓசை வகையில் "எடுத்தல் படுத்தல் இரண்டே ஓசை" எனக் கூறுவதும் அந்நூல்களில் இல்லாப் புதுமைக் கருத்தாகும். மொழி முதலிலும் இடையிலும் வரும் எழுத்துக்களைக் கூறுங்கால் பெரிதும் நன்னூலாரையே தழுவியுள்ளார். இறுதிக்கண் வரும் எழுத்துக்களைக் கூறுங்கால் பெரிதும் தொல் காப்பியரையே தழுவியுள்ளார். இங்கிலீயில் தொல்காப்பியர்

"உஊகாரம் நவவொடு நவிலா"

எனக் கூறியதை மாற்றி இவர்

"உஊ நகரமோடு உருவென மொழிப"

எனக் கூறியிருப்பது உளங்கொள்ளுதற் குரியதாகும். மாத்திரை யில் கால், அரை, முக்காலுக்கும் வரையறை கூறியிருப்பது புதிய நெறியாகும்.

"உன்னல் காலே ஊன்றல் அரையே
முறுக்கல் முக்கால் விடுத்தல் ஒன்றே"

என்பது அந்நூற்பாவாகும். அன்றியும் இவ்வியலில் ஆசிரியர் செய்திருக்கும் வேறொரு புதுமை சிற்சில பெயர்களுக்கு மறுபெயர் கூறியிருப்பதாகும்.

"இரேகை வரிபொறி யெழுத்தின் பெயரே" (கூ)

"அச்சாவி சுரம்பூத மாமுயி ரென்ப" (எ)

"குறுமை யிரச்சுவங் குறிலெனப் படுமே" (கூ)

"நெடுமையுந் தீர்க்கமு நெட்டுயி ராகும்" (கக)

"ஊமையு மொற்று முடலெனப் படுமே" (கஉ)

"வன்மைவன் கணம்வலி வல்லெழுத் தாகும்" (கஙி)

"மென்மைமென் கணமெலி மெல்லெழுத் தாகும்" (கள)

"இடைமை யிடைக்கண மிடையிடை யெழுத்தே" (கக)

"புல்லல் சார்தல் புணர்தல் சார்பெனலே" (உஉ)

"அஃகேனந் தனிநிலை யாய்த மாகும்" (உஅ)

"காட்டல் குறித்தல்சுட் டாங்கரு திடினே" (உக)

"வினவல் கடாவல் விளைவெனப் படுமே" (ஊ0)

"அளபும் புலுதமு மளபெடைப் பெயரே" (ஊஉ)

"சங்கம் புணர்ச்சி சையோக மயக்கம்
புல்லல் கலத்தலும் பொருளொன் றேயாம்" (ஊசு)

தமிழ்ப் பெயர்களுக்கு மறு பெயர்களாக வடமொழிப் பெயர் கூறியிருப்பது அக்காலப் போக்கைக் காட்டுகிறது.

மொழியியல் : இவ்வியலில் ஒரெழுத்தொரு மொழியாகும் எழுத்துக்களைக் கூறிப் பின் மொழியின் வகைகளைக் கூறி அதன் பின் வடமொழி ஆக்கமே மிகுதியும் கூறியுள்ளார். பதவியல் என்னது மொழியியல் எனப் பெயர் கொடுத்தனரேனும் வடமொழிச் சொற்கள் தமிழில் வருங்கால் எவ்வெத்திரிபு பெற்றுவரும் என்பதையே விரிவாகக் கூறியுள்ளார். மொழியைத் தனிமொழி, இணைமொழி, துணைமொழி, பொதுமொழி, தணமொழி, கண மொழி, கலப்புறுமொழி என எழுவகைப் படுத்துவார் கூற்றைப் பிறன்கோட் கூறலாகக் கூறியிருப்பதும், சொற்களைச் சங்கதம், பாகதம், சௌரசேனகம், அவப்பிரபஞ்சனம் எனப் பாகுபாடு செய் திருப்பதும், சந்தியைத் தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தி எனப் பாகுபாடு செய்து விரித்துரைத்திருப்பதும் இவ்வியலில் இவர் கூறும் புதிய செய்திகளாகும். தமிழிலக்கணம் கூறுவார் வடமொழி ஆக்கம் பற்றி இத்துணை அளவு விரித்துரைத் திருப்பது வேண்டாததொன்றே யாகும். நன்னூலார் காலத்தில் தொடங்கிய இங்கிலை வரவர வளர்ந்து விட்டது.

புணரியல் : இவ்வியல் தொல்காப்பியத்திலுள்ள தொகை மரபு, புணரியல், உருபியல், உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகிய இயல்களின் கருத்துக்களைப் பெரும்பான்மையும் தழுவியதாகும். சாரியைகளுள் 'மான்' என்னுஞ் சாரியையை இவர் புதிதாகக் கொண்டுள்ளார்.

"னகர மொற்றும் ஆவு மாவும்"

"ஓகார இறுதிக்கு ஒன்னே சாரியை"

என்ற நூற்பாக்களால் ஆ, மா என்பன ஆன், மான் என னகர ஒற்றையும், கோ என்பது ஒன் சாரியையும் பெறுமெனத் தொல் காப்பியர் கூறினர். நன்னூலார்

"ஆமா கோனவ் வஃணயவும் பெறுமே"

என்றனர். இவ்வாசிரியரோ இவர்களின் வேருக—

"அவற்றுள்

ஆமாகோ இன்ன டையவும் பெறுமே" (களஎ)

எனக் கூறுகின்றார். இங்ஙனமே கோ, மா என்ற சொற்களின் முன் உயிர் வரின் வகரமேயன்றி யகரமும் உடம்படு மெய்யாயி வரும் என இவர் கூறியிருப்பது புதியதும் தேவையானதும் ஆகும்.

"கோமா முன்வரின் யகரமும் குதிக்கும்" (கஅச)

என்பது அந்நூற்பாவாகும்.

சொல்லதிகாரம்: இது பெயரியல், வினையியல், ஒழிபியல் என மூன்று பிரிவுகளை உடையது.

பெயரியல்: இவ்வியல் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தி லுள்ள பெயரியல், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய நான்கியல்களில் கூறப்படும் கருத்துக்களைப் பெரிதும் தழுவியுள்ளது. சொல்லைப் பொருள் உணர்த்தும் வகையில் ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மூவகை யாகப் பாகுபாடு செய்திருப்பதும், உயர்திணை ஆண்பாற்குரிய சிறப்புப் பெயர்களையும் பெண்பாற்குரிய சிறப்புப் பெயர்களையும் விதந்து கூறியிருப்பதும், ஆரும் வேற்றுமையை விரித்துரைத் திருப்பதும் நன்னூலைத் தழுவியதாகும்.

வினையியல்: கூஉ, கூஉஅ, கூஉஉ, கூஉச ஆகிய நூற் பாக்கள் நன்னூல் நூற்பாக்களையே கொண்டெடுத்து மொழிவதா யிருப்பினும் ஏனைய கருத்துக்களைக் கூறும் அமைப்புக்களிலெல் லாம் தொல்காப்பியத்தையே இவ்வியல் தழுவியுள்ளது. தொல் காப்பியர் வியங்கோள், தன்மை முன்னிலைக்கண் வாராதென்பர். நன்னூலார் "இயலும் இடம்பால் எங்கும்" என்பர். இவ்வாசிரியர் தொல்காப்பியர் கூற்றிலேயே உறுதிப்பாடு உடையவராய்

"அவற்றுள்

தன்மை முன்னிலையொடு வாரா வியங்கோள்"

எனக் கூறியிருப்பது இதற்கரணுகும்.

ஒழிபியல்: இவ்வியல் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தி லுள்ள இடையியல், உரியியல், எச்சவியல், இளவியாக்கம் ஆகிய இயல்களிலுள்ள கருத்துக்களைத் தன்னகத்துக் கொண்டதாகும். இடைச்சொல் பெயரொடும் வினையொடும் ஙடைபெற்றியலுவ தல்லது தமக்கெனப் பொருளுடையனவல்ல ஆதலானும், உரிச் சொற்கள் பெயர்வினை போன்றும் அவற்றிற்கு முதனிலையாயும் வருதலானும் அச்சிறப்பின்மை கருதி இவற்றை இவ்வியலில் அடக்கினர் போலும்.

பொருளதிகாரம்: இஃது அகவொழுக்கவியல், களவொழுக்க வியல், கற்பொழுக்கவியல் என மூன்று பிரிவுகளை உடையது.

அகவொழுக்கவியல்: இவ்வியலில் கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்பவற்றினியல்பும், ஐந்திணைக்குரிய முதல் கருவுரிப் பொருள்களும், அகத்திணைக்குப் புறனுகிய வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை என்ப வற்றினியல்பும் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் சிறுபொழுது ஐந்தெனக் கூறியிருப்பதும், ஐவகை நிலத்திற்குரிய கருப்பொருள் களை விரித்துரைத்திருப்பதும் நம்பியகப் பொருளைத் தழுவிய தாகும். அறுவகைப் பெரும்பொழுது, ஐவகைச் சிறுபொழுது ஆகிய காலங்களில் நிகழும் இயற்கை நிகழ்ச்சிகளை விரித்துரைத் திருப்பது நம்பியகப் பொருளில் காணப்படாத தொன்றுகும். ஐந்திலக்கணங்களையும் ஒக்க ஆராயும் இலக்கண நூல்களில் புறத்திணைபற்றி விரித்துரைத்திருப்பது தொல்காப்பியமும் இலக்கண விளக்கமுமே யாகும். வீர சோழியம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் ஆகிய இம்மூன்று நூல்களிலும் புறத்திணை பற்றிய விரிவான செய்திகள் இல்லை. இந்நூலில் புறத்திணை எட்டென வகுத்தவர்,

"வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்லுதல் வஞ்சியாம்—உட்காது
எதிரூன்றல் காஞ்சி எயில்காத்த னெஞ்சி
அதுவளைத்த லாகு முழிஞை—யதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்தி னென்னுர்
செருவென் றதுவாகை யாம்"

என்பதைத் தழுவி எட்டு நூற்பாக்கள் அமைத்துள்ளனரேயன்றி வேறு துறைகளோ வேறு விளக்கமோ கூறினரல்லர்.

இந்நிலையேன் ?: பொதுவாகவே போர்த்திறன் பற்றிய இலக்கிய நூல்களோ போர்முறை பற்றிய இலக்கண நூல்களோ சங்க காலத்தில் எழுந்த அளவிற்குப் பிற்காலத்தில் எழவில்லை. புறப்பொருள் வெண்பா மாலையும், தொல்காப்பியப் புறத்திணை இயலையும் புறப்பொருள் வெண்பா மாலையையும் தழுவியெழுந்த இலக்கண விளக்கப் புறத்திணையியலுமே சங்க காலத்திற்குப் பின் எழுந்தனவாய்ப் புறப்பொருள் இலக்கணம் பற்றி அறிதற்கு ஏற்புடையனவாயுள்ளன. சங்க கால வாழ்வியலில் நாட்டையும் தன்னையும் காத்துக்கொள்ளும் பொறுப்புத் தனி மனிதன் ஒவ்வொருவன் உள்ளத்திலும் வேரூன்றி வளர்ந்திருந்தது. அத்தகைய உணர்வு தேவையாயும் இருந்தது. ஆதலால் தான்

[1] "வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

[2] "ஈன்ற வயிறே வியுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே"

[3] "கெடுக சிந்தை கடிதிவ டுணிவே
மூதின் மகளி ராத றகுமே
மேனு ஞற்ற செருவிற் கிவடன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருநு லுற்ற செருவிற் கிவள்கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுப்பட் டனனே
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடுஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
ஒருமக னல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே"

என்பன போன்ற பாடல்கள் எழுந்தன. காலப்போக்கில் நாட்டைக் காக்கும் பொறுப்பு அவ்வக் காலத்தில் காவற்சாகா டுகைக்கும் அரசற்கே உரியதாயது. காவலனும் அவனுக் கிருக்கும் படைகளுமே அதனைச் செய்யும் பொறுப்பை ஏற்றனர். ஆதலால்தான் போர்முறை பற்றிய இலக்கணங்களும் நெகிழ் லாயின. இதுமட்டுமன்று. இறையனர் களவியலுரையில், பொருளதிகாரம் வல்லாரைக் காணுது கவன்றுகொண்டிருந்த அரசனுக்கு இறையனர் "அன்பினைந்திணை" என்று தொடங்கும்

---

1. புறம். ஈகஉ. 2. புறம். அசு. 3. புறம். உஎக.

அறுபது சூத்திரங்களையும் செய்தருளியதாக ஒரு குறிப்புக் காணப்படுகின்றது. இதனை நோக்குழி அகப்பொருள் இலக்கணமே பொருளதிகாரத்துள் சிறப்பித்துப் பேசப்படும் பெருமையும் வாய்ப்பும் அக்காலத்துப் பயின்றிருந்தது என இனையவும் இடந்தருகின்றது.

புறத்திணை அகத்திணைக்குப் புறனும் என்று கூறிய வகையில் தொல்காப்பியரோடு ஒத்தும், எண்வகைத் திணைகளை விளக்குங்கால் புறப்பொருள் வெண்பாமாலையை ஒத்தும் புறப் பொருள் பற்றிய இலக்கணத்தை அமைத்துள்ளார் இவ் வாசிரியர்.

களவொழுக்கவியல், கற்பொழுக்கவியல் : இவ்விரு இயல்களும் திருக்கோவையாருக்குப் பேராசிரியர் எழுதிய உரைச் சூத்திரங் களைத் தழுவி அமைந்துள்ளன. திருக்கோவையார் உரைச் சூத்திரங்களில் ஒரே நூற்பாவாக இருப்பது இந்நூலில் இருநூற் பாவாகப் பிரிக்கப்பட்டுள்ளது (அஅடு, அஅசு காண்க). அஅச, அஅஅ—நூற்பாக்கள் திருக்கோவையார் உரைச் சூத்திரத்துள் உள்ளவாறே உள்ளன. ஏனைய நூற்பாக்கள் சொல்லளவில் சிற்சில மாற்றம் பெற்றுள்ளன.

> "ஐய நாட லாங்கவை யிரண்டு
> மையறு தோழி யவன்வர வுணர்தல்"

என்பது திருக்கோவையார் உரைச் சூத்திரம்.

> "ஐய மழிதலு மறிவு நாடலு
> மையறு தோழி யவன்வர வுணர்தல்" (அசஅ)

என இந்நூலிலுள்ளது. இவ்விரு நூற்பாக்களும் சொல்வகை யான் பெரிதும் வேறுபடுவன போலத் தோன்றினும் பொருள் வகையில் வேற்றுமையின்றி யுள்ளன. இந்நூற்பாவில் ஐயமறிதல் என்றிருப்பின் பொருத்தமுடையதாக இருக்கும். இங்ஙனமே அநசஆம் நூற்பாவில் முதல் வரியாக இருக்கும் "வரைந்த பின்னர் மணஞ சிறப்புக் கூறு கிற்றல்" என்ற பகுதி நூற்பா வோடு இயைபுடையதன்று. திருக்கோவையார் உரைப்பகுதி அந்நூற்பாவினோடு இயைந்து விட்டது.

இவ்விரு இயல்களும் திருக்கோவையாருக்கு இலக்கணமாக அமைந்துள்ளமை பாராட்டுதற்குரியதாகும். நம்பியகப்பொருக் கிலக்கியமாய்த் தஞ்சைவாணன் கோவை அமைந்துள்ளது. இதுவோ திருக்கோவையாருக்கு இலக்கணமாய் 'இலக்கியம் கண்டதற் கிலக்கணம் இயம்பலின்' என்ற வகையில் அமைந் துள்ளது.

இதன்கண் பிறிதொரு சிறப்புமுளது. இயற்கைப் புணர்ச்சியை அடுத்து இடந்தலைப்பாடு கூறினர் நம்பியகப்பொருள் ஆசிரியர். ஆனல், திருக்கோவையார், இறையனர் களவியல், இந்நூல் ஆகிய மூன்றிலும் இயற்கைப் புணர்ச்சியை அடுத்துப் பாங்கற் கூட்டமும் அதனையடுத்து இடந்தலைப்பாடும் காணப்படுகின்றது. இதுவே முறையும் மெய்மையும் ஆகும் என்பதை இறையனர் களவியலுரை மிக அழகாக விளக்குகின்றது. ஒருவனுக்கு ஒரு வினை நிகழவேண்டுமேயானல் தன் சுற்றத் தாரையோ நட்டாரையோ முதற்கண் துணைவேண்டுவன். அம் முயற்சிகள் பயன் தாராவாயின் விதிவழி யாகும் என நினைந்து அமைதி கொள்வன். இவ்வாற்றுன் இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் பாங்கற் கூட்டத்தையே தலைமகன் விரும்புவன். அஃது இயலாதாயின் தந்த தெய்வம் தருமனைச் சேருவன். இந்நிலையில் பாங்கற் கூட்டத்தை அடுத்து இடந்தலைப்பாடு வைத்தல் பொருத்தமெனக் கருதினர் இம்மூவாசிரியர்களும்.

யாப்பதிகாரம் : இஃது உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்னும் மூன்று பிரிவுகளை உடையது.

உறுப்பியல் : இவ்வியலில் அசை, சீர், தளை, அடி, தொடை பற்றிய இலக்கணம் கூறப்பட்டுள்ளது. தளைகளைப் பற்றிக் கூறும் விளக்கம் மிகத் தெளிவாக உள்ளது. அஎ0, அஎக, அஎஉ, அஎங ஆகிய நூற்பாக்களைக் காண்க.

செய்யுளியல் : இவ்வியலில் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா ஆகிய ஐவகைப் பாக்களின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. வெண்பா வகையினுள் சவலை வெண்பா என்ற ஒன்று கூறப்பட்டுள்ளது. இது யாப்பருங்கலக் காரிகையினுள் காணப்படாததாகும்.

"இருகுறள் சவலை ஓரடிகற் பாகும்" (கூ0அ)

என்பது அந்நூற்பாவாகும். காரிகையுள் கலிப்பாவின் வகையாகக் கூறப்பட்ட கலிவெண்பாவை இவர் வெண்பா வகையுள் அடக்கியுள்ளார். வெண்கலிப்பாவைக் கலிப்பாவின் வகையினுள் அடக்கியுள்ளார். நால்வகைப் பாக்களுக்கும் உரிய ஓசைகளின் வகைகளைக் காரிகையின் உரையாலேயே அறிய முடிகின்றது. இவ்வாசிரியர் அவற்றைச் சூத்திரமாகவே அமைத்துள்ளார். கூகஙு, கூகச, கூகஞ, கூகசு, கூஙo, கூஙஉ, கூஙங, கூசச, கூசஞ, கூசசு, கூசள, கூஞஞ, கூஞசு, கூஞள, கூஞஅ ஆகிய நூற்பாக்களைக் காண்க. காரிகையுள் மருட்பா, புறநிலை, கைக்கிளை, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ ஆகிய நால்வகைப் பொருள்களிலும்

வரும் என்று கூறப்பட்டுள்ளது. இவ்வாசிரியர் புறநிலை, கைக்கிளை ஆகிய இருபொருளில் வரும் என்று கூறுகின்றார்.

ஒழிபியல்: இவ்வியலுள் சில எழுத்துக்கள் அலகு பெறுமாறும், சீரும் தளையும் செய்யுளகத்து நிற்குமாறும், அடிமயக்கம், வண்ணங்களின் வகை, பத்து வகைக் குற்றங்கள், பாட்டியல் இலக்கணம் ஆகியவைகளும் விரிவாக ஆராயப் பட்டுள்ளன. இவற்றுள் வண்ணமும் பாட்டியல் இலக்கணமும் ஒழிந்தன காரிகை ஆசிரியரைத் தழுவி உரைத்தனவாகும். தொல்காப்பியர் வண்ணம் இருபதென்பர். காரிகை உரையாசிரியர் நூறு என்பர். இவ்வாசிரியர் தொல்காப்பியரைத் தழுவி வண்ணம் இருபது என்றனர். ஐந்திலக்கண நூல்களில் இலக்கண விளக்கத்திலும் தொன்னூல் விளக்கத்திலும் பாட்டியல் இலக்கணம் உள்ளமை போன்றே இந்நூலிலும் உள்ளது. இலக்கண விளக்க ஆசிரியர் பாட்டியலைத் தனி இயலாகக் கொண்டார். இவர் தொன்னூல் விளக்க ஆசிரியர் போல யாப்பிலக்கணத்தின் ஒரு பகுதியாகக் கூறியுள்ளார்.

இதன்கண் நான்கு பாக்களுக்குமுரிய நாள், கிரகம், நிலம், குலம், நிறம், இராசி ஆகியவைகளும், ஆசுகவி முதலிய கவிஞர்களின் இயல்பும், ஒரு பாவின் முதற்சீர் எப்படி அமைதல் வேண்டும் என்ற வரையறையும், 90 வகைப் பிரபந்தங்களின் இயல்பும் கூறப்பட்டுள்ளன. இத்தகைய நியதிகள் இடையில் ஏற்பட்டனவே. அவ்வாறே இடையில் மறைந்து விட்டன. உள்ளத்துணர்வை வடித்துக் காட்டும் செய்யுள்களுக்கு இத்துணை வரையறை தேவையற்றதாகும். பிரபந்தங்கள்—நூல்கள். இத்தகைய பெயர் பெறுதற்குரியன இவர்கள் கூறும் பிரபந்தங்களுள் சிலவே தகுதியுடையன. ஆதலின், இவை காலப் போக்கில் நிலைபெறுதொழிந்தன.

அணியதிகாரம்: இது சொல்லணியியல், பொருளணியியல், செய்யுளணியியல் என்னும் மூன்று பிரிவுகளையுடையது. தண்டியலங்கார ஆசிரியர் கூறிய இயல்முறை இதன்கண் தலைகீழாக மாறியுள்ளது.

சொல்லணியியல்: இவ்வியலில் மடக்கின் வகை விரிவாகவும், சித்திரக்கவிகளின் அமைப்புச் சுருக்கமாகவும் கூறப்பட்டுள்ளது.

பொருளணியியல்: இவ்வியலில் நூற அணிகள் கூறப்பட்டுள்ளன. பலபடப்புனைவணி, கூடாமையணி, தகுதியின்மையணி, தகுதியணி, பெருமையணி, சிறுமையணி, ஒன்றற்கொன்று தவி

யணி, சிறப்புநிலையணி, முறையில் படர்ச்சியணி, ஒழித்துக் காட்டணி, கூட்டவணி, இன்பவணி, துன்பவணி, அகமலர்ச்சி யணி, இகழ்ச்சியணி, வேண்டலணி, மறையணி, பொதுமை அணி, மறையாமையணி, உலக வழக்கு நவிற்சியணி, வல்லோர் நவிற்சி யணி என்பன தண்டியலங்காரத்தில் காணப்படாத அணிக ளாகும். தண்டியலங்கார ஆசிரியர் திரிபதிசயம் எனக் கூறியதை இவர் மயக்கவணி என்பர். அவர் தூரகாரிய ஏது என்பதை இவர் தொடர்பின்மை அணி என்பர். அவர் பரிவர்த்தனை என்பதை இவர் மாற்றுநிலையணி என்பர். அவர் சமாகித அணி என்பதை இவர் எளிதின் முடிபணி என்பர்.

செய்யுளாராய்ச்சி : இவ்வியலில் தொகைநிலை, குளகம், முத்தகம், தொடர்நிலை ஆகிய நால்வகைச் செய்யுள்களினியல்பும், வைதர்ப்பர் விரும்பும் பத்துவகை நெறிகளும், எண்வகைப் பொருள்கோள்களதியல்பும், பிரிபொருட் சொற்றொடர் வழுவா மாறும் அஃது அமைதியாமாறும் கூறப்பெற்றுள்ளன.


ஆசிரியர் : இந்நூலாசிரியர் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த உறையூரில் வண்டிக்காரத் தெருவில் இருந்தவர். **முத்துவீர உபாத்தியாயர்** என்னும் பெயரினர். கொல்லர் மரபினர். ஆதலின் கம்மாள வாத்தியார் என்றும் அழைக்கப்பட்டனர். இவர் தம் பெயரினாலேயே இந்நூலைச் செய்தனர். இதனை

> "முத்து வீரியம் எனத்தற்பெயர் நிறீஇ
> வகுத்தனன் உறந்தை வாழிய
> முத்து வீரமா முனிவன் என்பவனே,"
>
> "முத்து வீரியம் எனத்தற் பெயர்நிறீஇ
> வகுத்தனன் உறந்தை அகத்தெழுந் தருளிய
> முத்து வீரமா முனிவன் என்பவனே"

எனவரும் சிறப்புப் பாயிரங்களால் அறியலாம். இவர் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பழுதறக் கற்றவர். வடமொழியிலும் வல்லுநர். முத்துவீர உபாத்தியாயர் என்று வழங்குதற்கேற்ப இவர் பன்னிரண்டு சிறப்பின் நல்லாசிரியராய் விளங்கினர். திருச்சியில் S. P. G. கல்லூரியில் தமிழாசிரியராக இருந்த அமிர்தம் பிள்ளை, மறைமலை அடிகளாரின் சமய ஆசிரியரான சோமசுந்தர நாயக்கர், உறையூர் பிச்சை இபுராஹிம் புலவர் முதலியோர்க்குப் பேராசிரியராகத் திகழ்ந்தவர். இவர்தம் மாணவர் பரம்பரையைப் பின்வருமாறு வகைப்படுத்திக் கூறுவர்.[1]

---

1. மயிலை சினி வேங்கடசாமி-தமிழ் இலக்கிய வரலாறு. பக். 293.


உறையூர் முத்துவீர உபாத்தியாயர்
[மாணவர்கள்]
நாகை நாராயணசாமிப் பிள்ளை
அமிர்தகவி அமிர்தம் பிள்ளை
உறையூர்
பிச்சை இபுராகிம் புலவர்
நாகூர் குலாம்
காதிறு நாவலர்
மதுரை நாயகம்
பிள்ளை
நாகை வேதாசலம் பிள்ளை
(மறைமலையடிகள்)
மனோன்மணீயம்
சுந்தரம் பிள்ளை
ந. மு. வேங்கடசாமி
நாட்டார்

"முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
அழியா மரபினது வழிநூ லாகும்"

என்பதற்கேற்ப இவர் இந்நூலை யாத்துள்ள திறம் பாராட்டுதற் குரியதாகும். இவர் முன்னோர் மொழிபொருளே யன்றி அவர் மொழியும் பொன்னேபோல் போற்றும் பெற்றியர். தொல்காப்பி யத்திலிருந்து ஏறத்தாழ ஈ00 நூற்பாக்களுக்கு மேலும், நன்னூலி லிருந்து ஏறத்தாழ நூ0 நூற்பாக்களுக்கு மேலும் மாற்றமின்றி எடுத்து மொழிந்துள்ளமை இதற்கரணாகும். இவர் இருபதாம் நூற்றாண்டு காலத்தில் சென்னையில் வாழ்ந்தவர் எனத் தெரிகிறது.

சமயம்: இவர் சைவ சமயத்தினர். இதனை இவ்வாசிரியர் ஐந்திகாரங்களிலும் நுதலிப்புகும் தற்சிறப்புப் பாயிரத்தால் அறியலாம்.

"எப்பொருள் வயினுயி ரெதிர்ந்து மறைகுவ
தப்பொரு ளடிதொழு தறைகுவன் எழுத்தே"

"உருபமும் அருபமும் உருபரு பமுமுளன்
இலனெவ னவற்றொழு தியம்புவன் சொல்லே"

"மெய்ப்பொருள் பகாப்பொருள் வேத முதற்பொருள்
அப்பொரு ளகத்தணிந் தறைகுவன் பொருளே"

"எலாந்தா மாக விருக்கும் பொருளெது
அதனடி மலர்தொழு தறைகுவன் யாப்பே"

"சுத்தமெய்ஞ் ஞானச் சுடர்மணி விளக்கைச்
சித்தம திருத்திச் செப்புவ லணியே."

இந்நூற்பாக்களால் உலகத்திற்கு அந்தத்தைச் செய்கின்றவனே ஆதியாவன் என்பதும், அப்பரம்பொருள் உயிர்களை ஆட் கொள்ளுதற்காக உருவத் திருமேனி, அருவத்திருமேனி, அருவுருவத் திருமேனி ஆகிய மூவடிவையும் கொள்ளும் என்பதும், அப்பொருளே வேத முதற்பொருள் ஆகுமென்பதும், எல்லாவற்றையும் விழுங்கி நிற்கும் தற்பரமாக விளங்கு வதும் அதுவே என்பதும், அஃது ஆணை அறிவாய் அடிய வரிடத்து அகலாது விளங்கும் என்பதும் பெறப்படுகின்றன. இவ்வுண்மைகள் சைவசித்தாந்தச் செந்நெறியை விளக்குவதாகும். அன்றியும் திருக்கோவையாரைப் பொருண்மையாகவும் முதன்மை யாகவும் கொண்டு தம் அகப்பொருள் இலக்கணத்தைச் செய் திருப்பதும் இவ்வாசிரியர் சைவரே என்றற்குச் சான்றாகும்.

காலம்: திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றிய அகிலாண்டநாயகி பிள்ளைத் தமிழுக்கு

இவ்வாசிரியர் சிறப்புப் பாயிரம் கொடுத்துள்ளார். பிள்ளை அவர்களின் காலம் கி. பி. 19 ஆம் நூற்றாண்டாகும். ஆதலின் இவர் தம் காலமும் அதுவேயாகும்.

காரணம்: இந்நூலுக்கு இரு சிறப்புப் பாயிரங்களுள. முழுமையாக உள்ள நூலின் சிறப்புப் பாயிரத்தில் நெல்லைப் பதியினரான சுப்பிரமணிய தேசிகர், எழுத்தெதாடு சொற்பொருள் யாப்பணி ஐந்தும் எளிதில் புலப்பட இயற்றித் தருகெனக் கூற இவ்வாசிரியர் இந்நூலைச் செய்தார் என உளது. யாப்பதிகாரம் மட்டும் வெளிவந்துள்ள நூலின் சிறப்புப் பாயிரத்தில், வேலூர் முத்துக்கிருட்டினன் கூற இவ்வாசிரியர் இந்நூலைச் செய்தார் என்றுளது. எனவே இவரது புலமை நலமறிந்த பலரும் விரும்பவே இந்நூலைச் செய்தார் எனத் தெரிகின்றது.

உரையாசிரியர்: இதன் உரையாசிரியர் திருப்பாற்கடல் நாதன் கவிராயர் ஆவர். திருநெல்வேலிப் பதியினர். இந்நூற் கமைந்த சிறப்புப் பாயிரம் இரண்டையும் இவரே இயற்றினர் என்ப. C. T. E. ரேனியஸ் என்னும் செர்மன் அறிஞர் இவரிடம் தமிழ் பயின்றனர் என்பர். இவரது காலம் நூலாசிரியர் காலமே ஆகும். இவர் சைவ சமயத்தினர்.

உரைநலம்: இவர் தம் உரை நூல் முழுமைக்கும் உள்ளது. உரை பொழிப்புரையாக அமைந்துள்ளது எடுத்துக் காட்டுக்கள மிகச் சுருக்கமாக வேண்டிய அளவுள்ளன. எழுத்ததிகாரத்தைப் பொறுத்தமட்டில் இளம்பூரணரையும், சொல்லதிகாரத்தைப் பொறுத்தமட்டில் சேனவரையரையும் இவருரை பெரிதும் தழுவிச் செல்லுகிறது. எனினும், அவர்தம் உரைகளில் உள்ள பொருந்தா வுரைக்கோளை இவர் விலக்கியே செல்லுகிறார்.

"குற்றிய லுகரமு மற்றென மொழிப" (உ)

என்ற நூற்பாவிற்குக் குற்றியலுகரமும் மேலே ஒரு புள்ளியைப் பெறும் என இவர் உரைத்திருப்பது இதற்கரணாகும். பொருளதிகாரத்திற்கு உரை எழுதுங்கால் பேராசிரியர் உரையையே பெரிதும் தழுவிச் செல்லுகிறார். இவர் தரும் எடுத்துக் காட்டுக்களுட் சில, பிறர் கூறுத வகையில் அமைந்துள்ளன. கூஉகூஆம் நூற்பாவில் ஆசிரிய விருத்தத்திற்குத் திருவிளையாடற் புராணப் பாடலையும், கூசஅஆம் நூற்பாவில் கலித்தாழிசைக்குக் கலிங்கத்துப்பரணியையும், கூடுகஆம் நூற்பாவில் கலிவிருத்தத்திற்கு 'உலகெலாம் உணர்ந்து' எனத் தொடங்கும் பெரிய புராணப் பாடலையும் எடுத்துக் காட்டுவது இதற்குச் சான்றாகும்.

இங்ஙனமே கூ0ங, கூ0அஆம் நூற்பாக்களில் சிதம்பரச் செய்யுட் கோவையிலுள்ள செய்யுள்களை எடுத்துக் காட்டுகிறார்.

பதிப்புக்கள்: இந்நூலின் யாப்பதிகாரம் மட்டும் கஅசுஉ அக்டோபர்த் திங்கள் கடிஆம் நாள் வெளிவந்துள்ளது. அதன் பின் இந்நூலின் எழுத்துச் சொல் ஆகிய இரண்டதிகாரங்கள் மட்டும் கஅஅக மேத் திங்களில் வெளிவந்துள்ளது. இது தென்னிந்திய ரெயில்வே அப்பாத்தகிரி திரு வெ. அப்பாசாமி மூப்பனார் அவர்களின் வேண்டுகோளின்படி திரிசிரபுரம் வருவாய்த் துறைத் தலைமைச் செயல (ஹெட் சிரஸ்தார்) ராகவிருந்த திரு பட்டாபிராம பிள்ளை அவர்களின் பொருளுதவியால் பதிப் பிக்கப்பட்டது. அடுத்து கஅஅசுல் நூல் முழுதுமாகத் திரு பழனியாண்டி என்பவரால் பதிப்பிக்கப்பட்டது. அவ்வப் பொழுது பதிப்பித்து வெளியிட்ட அறிஞர் பெருமக்களுக்கு அறிஞர் உலகம் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

என்னுடைய பணி: எனினும் இப்பதிப்புக்கள் படிப்போர்க்குத் தக்க விளக்க மின்றியும், ஆங்காங்குப் பல பிழைகள் மலிந்தும் இருந்தன. அவையனைத்தும் திருத்தப் பெற்று இப்பதிப்பு வெளிவருகின்றது. இப்பதிப்பில் நூற்பாக்களால் நுவலப்படும் பொருட்குத்தகத் தலைப்புக்கள் தரப்பெற்றுள்ளன. உரையும் காட்டும் தனித்தனியே நன்கு விளங்குமாறு பிரித்துக் காட்டப் பெற்றுள்ளன. செய்யுளாக அமைந்த எடுத்துக் காட்டுக்கள் அனைத்தும் அவ்வவ்வியாப்பமைதி பிழையாது சீர்பிரித்து அமைக்கப் பெற்றுள்ளன. இன்றியமையா இடங்கள் பலவற் றிற்கும் தக்க விளக்கவுரை எழுதி இணைக்கப்பெற்றுள்ளது. ஆராய்ச்சி முன்னுரையில் நூலாசிரியர் உரையாசிரியர் பற்றி அறியத்தகும் சிறப்புச் செய்திகளும், "நுவலும் பொருளும் திறனும்" என்னும் தலைப்பில் இந்நூலால் அறியப்படும் புதுமைச் செய்திகளும், பிற இலக்கண நூல்களோடு ஒத்தும் வேறுபட்டும் இருக்கும் செய்திகளும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

இந்நூலைப் பதிப்பிக்க வேண்டுமென என் கெழுதகை அன்பரும், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆட்சியாளருமான உயர்திரு **தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை அவர்கள்** விரும்பி அப்பொறுப்பை என்பால் நல்கினர். திருவரு ளால் அப்பணி நிறைவுபெற்றது. நிறைவு பெறச் செய்தருளிய திருவருளை வாழ்த்தி வணங்குகின்றேன். உயர்திரு **வ. சுப்பையா பிள்ளை அவர்கள்** தம் கழகவழிப் பல்வேறு வகையில் பல்வேறு நூல்களை வெளியிட்டு வருபவர்கள் ஆவர். குறிப்பாக மறைந்தோ ரருகியோ வரும் நூல்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்

என்னும் பெருவிருப் புடையவர்கள் ஆவர். அத்தகைய ஆர்வத்தின் வழிவரும் இந்நூலை அறிஞர் உலகம் ஏற்றுப் போற்றி மகிழும் என்பது ஒருதலை. பேரன்பினராய திரு. வ. சுப்பையாபிள்ளை அவர்களுக்கு என் உளங்கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் வெளியிடும்பொழுது மெய்வருத்தம் பாராது படியெடுத்துக் கொடுத்த அன்பரிருவர். ஒருவர் புலவர் திரு. மு. பரசுராமன் என்பார். மற்றையவர் திரு. ந. செல்வமூர்த்தி என்பார். இவர்கள் இருவருக்கும் செந்திலாண்டவன் திருவருள் பாலிக்க வேண்டுகின்றேன்.

"கரவா கியகல் வியுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோ கதயா பரனே."

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

முத்துவீரியம்

சிறப்புப்பாயிரம்

அகனுல குவப்பப் பகல்கான் றெழுதரும்
இரவியிற் ருனேரு முதலே யாகி
நிலவணி வேணிய னலர்தரு தன்மையின்
அகவிரு டோலேதர வறம்பொரு ளின்பம்வீ
டோவற வருளிய மூவறு மொழியுளும்
வடவேங் கடந்தென் குமரியா யிடைத்தமிழ்
எழுத்தோடு சொற்பொரு ளியாப்பணி யையந்தும்
எளிதிற் புலப்பட வியற்றித் தருகென
உகளிள வராலின மகணிசூழ் நெல்லேப்
பதியின னிலக்கண விதிமுழு துணர்ந்தோன்
சங்கரன் மிலேந்த கங்கையில் வந்தோன்
சுப்பிர மணியதே சிகன்கவிப் பெருமான்
அறைந்த ன்னுக வகத்திய நூல்வழி
முத்துவீ ரியமெனத் தற்பெயர் நிறீஇ
வகுத்தன னுறந்தை யகத்தெழுந் தருளிய
முத்து வீரமா முனிவனென் பவனே.

என்பது யாதெனில், யாதானுமோர் நூலுரைப்புழிப் பாயிரமுரைத்துரைக்க வென்பது இலக்கணம். என்னே,

> ''ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
> பாயிர மில்லது பனுவ லன்றே''

என்ருராகலின்: நூல் கேட்கப்புகும் மாணாக்கன் பாயிரங்கேட்க வேண்டும்; கேளாக்கால் குன்றுமுட்டிய குரீஇப்போல இடர்ப் படும்.

பொதுப்பாயிரம்

அப்பாயிரம் பொதுப்பாயிரமெனவும் சிறப்புப்பாயிரமெனவும் இருவகைப்படும். அவற்றுள், பொதுப்பாயிரம் எல்லா நூன் முகத்தும் உரைக்கப்படும்; அது நான்கு வகைப்படும்.

என்னை,

''ஈவோன் றன்மை யீத லியற்கை
கொள்வோன் றன்மை கோடன் மரபென
ஈரிரண் டாகும் பொதுவின் றொகையே''

என்றுராகலின்.

ஈவோர், கற்பித்தற் குரியரும் கற்பித்தற் குரியரல்லரும் என இருவகையர். அவருள், கற்பித்தற் குரியர் நான்குதிறத் தரும், கற்பித்தற் குரியரல்லர் நான்குதிறத்தருமாம்.

என்னை,

''மலைநிலம் பூவே துலாக்கோ லென்றின்னர்
உலைவி லுணர்வுடை யோரா குவரே
கழற்பெய் குடமே மடற்பனை முடதெங்கு
குண்டிகை பருத்தியோ டிவையென மொழிப''

என்றுராகலின்.

ஈதலியற்கை, பொழிப்பு முதலிய வுரைகளிற் பயின்று தெளிந்த அறிவினனுய்க் கற்பிக்கப் புகுங்கால் தன்றெய்வம் வாழ்த்தி மாணாக்கன் உளங்கொள்ளுமாறு அறிவுறுத்தலாம்.

என்னை,

''ஈத லியல்பே யியல்புறக் கிளப்பிற்
பொழிப்பே யகல நுட்ப மெச்சமெனப்
பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்
புகழ்ந்த மதியிற் பொருந்து மோரையில்
திகழ்ந்த வறிவினன் றெய்வம் வாழ்த்திக்
கொள்வோ னுணர்வகை யறிந்தவன் கொள்வரக்
கொடுப்ப தியல்பெனக் கூறினர் புலவர்''

என்றுராகலின்.

கொள்வோர், கற்பிக்கப்படுவோரும், கற்பிக்கப்படாதோரும் என இருவகையர்; அவருள், கற்பிக்கப்படுவோர் அறுவகையர், கற்பிக்கப்படாதோர் ஏழ்வகையர்.

என்னை,

''தன்மகன் ஆசான் மகனே மன்மகன்
பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே
உரைகோ ளாளற் குரைப்பது நூலே.

மடிமானி பொச்சாப்பன் காமுகன் கள்வன்
அடுநோய்ப் பிணியாளன் ஆறுச் சினத்தன்
தடுமாறு நெஞ்சத் தவனுள்ளிட் டோரெண்மர்
நெடுநூலைக் கற்க லாகா தாரே''

என்றுராகலின்.

கோடன்மரபு, பொழுதொடுசேறல் முதல் கேடீடவை கேடீடவை போற்றிக்கோடல் இறுதியாகவுள்ள குணங்களை யுடைய ரெனலாம்.

என்னை,

''கோடன் மரபு கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடன் முனியான்
முன்னும் பின்னு மிரவினும் பகலினும்
அகலா னுகி யன்பொடு புணர்ந்தாங்
காசற வுணர்ந்தோன் வாவென வந்தாங்
கிருவென விருந்து சொல்லெனச் சொல்லிப்
போவெனப் போகி நெஞ்சு களனுகச்
செவிவா யாகக் கேட்டவை கேட்டவை
போற்றிக் கோட லதுவதன் பண்பே''

என்றுராகலின்.

சிறப்புப்பாயிரம் ஆக்கியோன் பெயர் முதலிய எட்டுப் பொருளையும் விளக்கித் தன்னாலுரைக்கப்படும் நூற்கின்றி யமையாதிருப்பது.

என்னை,

''ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனே டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே''

என்றுராகலின்.

நூல்செய்தான் பாயிரஞ்செய்யில் தன்னைப் புகழ்ந்தானும்.

என்னை,

''தோன்ரு தோற்றித் துறைபல முடிப்பினுந்
தான்றற் புகழ்த்த றகுதி யன்றே''

என்ரூராகலின்.

பாயிரஞ்செய்வார் தன்னுசிரியனும், தன்னே டொருங்கு கற்ற ஒருசாலே மாணுக்கரும், தன் மாணுக்கரும், தகுந்த உரைகாரருமாகிய இவராம், இவருள் இந்நூற்பாயிரஞ் செய்தார் தகுமுரைகாரராகிய திருநெல்வேலி மகாவித்துவானுகிய திருப்பாற் கடனுதன் கவிராயர்.

(இதன் பொருள்) விசாலமாகிய உலகோர் வியப்புற ஒளியைக் கக்கிவரும் இரவியினெளியைத் தரும் திருமேனியையுடைய தாளெரு முதலேயாகி, இளம்பிறை வேய்ந்த சடிலச் சிவபிரான் அலர்தரு தன்மையின் அகக்கட்டோன்றிய அக்கியான இருள் நீங்க, அறம் பொருள் இன்பம் வீடாகிய நாற்பொருளும் நீக்கமறக் கூறிய பதினெண்ணிலத்து மொழிகளுள்ளும், வடக்குத் திருவேங் கடமும், தெற்குக் கன்னியாகுமரியும் ஆகிய எல்லேக்குட்பட்ட தமிழ் ஐந்தையும் விளங்கச்செய்து தருகென, இளவரால்களுங் கழனி சூழ் நெல்லேயிலிருப்போன், வியாகரணம் வல்லோன், சிவபிரான் வேய்ந்த கங்கையில் வந்தோன், சுப்பிரமணிய தேசிகன் கேட்க, அகத்திய நூல்வழி முத்துவீரியம், எனத் தன்னுமம் நிறீஇக் கூறினன்; உறையூர் வாசமாகிய 'மூத்துவீர மாமுனி' என்னும் இயற்பெயருடையான் எனவறிக.

(விளக்கவுரை) ஆயிரமுகம் - ஆயிர வறுப்புக்கள்; எண்ணிக்கை மிகுதி கூற வந்தது; வரையறையன்று. குரீஇ - குருவி.

பொதுப்பாயிரத்தை நூல், நுவல்வோன், நுவலும் திறம், கொள் வோன், கோடல் மரபு என ஐந்தாகப் பகுப்பர் நன்னூலார். இவ் வாசிரியர் தொல்காப்பிய மரபைப் பின்பற்றியுள்ளார். ஐவகையாகப் பகுத்தற்குரிய காரணத்தைச் சங்கர நமச்சிவாயர் விளக்குவர். அது வருமாறு:—

''ஈவோன் றன்மை யீத லியற்கை
கொள்வோன் றன்மை கோடன் மரபென
ஈரிரண் டென்ப பொதுவின் றொகையே''

என்பாரு முளராலோவெனின், பாயிரங் கூறுதல் நூல்கட்கன்றிப் பிற வற்றிற்கன்றே? அங்ஙனமாதலின், நூல்களின் வரலாறென்றுமே கூற வேண்டும்; அதனேடு ஆசிரியன் வரலாறு முதலிய நான்கினையும் உடன்

கூறுதல் வரலாற்று முறைமையின் வாராதார் நூல்களைக் கற்பிக்கவும் கற்கவும் புகின்,

''பொய்படு மொன்றே புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்'' (குறள். 836)

என்றவாறேயாய் நூல்களருமையும் பெருமையும் கெட்டுப் பயன் படாவாமென்பது கருதியென்க. (நன் - பொதுப்பாயிரம் - கூ)

''மலையே
அளக்க லாகாப் பெருமையும் அருமையும்
மருங்ககல முடைமையும் ஏறற் கருமையும்
பொருந்தக் கூறுப பொச்சாப் பின்றி.''

''நிலத்தின் இயல்பே நினைக்குங் காலைப்
பொறையுடை மையொடு செய்பாங் கமைந்தபின்
விளைதல் வண்மையும் போய்ச்சார்ந் தோரை
இடுதலும் எடுத்தலும் இன்னண மாக
இயையக் கூறுப இயல்புணர்ந் தோரே.''

''பூவின தியல்பே பொருந்தக் கூறின்
மங்கல மாதலும் நாற்ற முடைமையும்
காலத்தின் மலர்தலும் வண்டிற்கு நெகிழ்தலும்
கண்டோ ருவத்தலும் விழையப் படுதலும்
உவமத் தியல்பின் உணரக் காட்டுப.''

''துலாக்கோல் இயல்பே தூக்குங் காலை
மிகினும் குறையினும் நில்லா தாகலும்
ஐயந் தீர்த்தலும் நடுவு நிலைமையோடு
எய்தக் கூறுப இயல்புணர்ந் தோரே''

என வருவனவற்றுல் மலை, நிலம், பூ, துலாக்கோல் ஆகிய இவற்றின் இயல்பை அறியலாம்.

''பெய்தமுறை யன்றிப் பிறழ உடன்றருஞ்
செய்தி கழற்பெய் குடத்தின் சீரே''

''தானே தரக்கொளி னன்றித் தன்பால்
மேவிக் கொளக்கொடா இடத்தது மடற்பனை''

''பல்வகை யுதவி வழிபடு பண்பின்
நல்லோரொழித் தல்லோர்க் களிக்குமுடத் தெங்கே''

''அரிதிற் பெயக்கொண் டப்பொருள் தான்பிறர்க்
கெளிதீ வில்லது பருத்திக் குண்டிகை''

என வருவனவற்றுல் கழற்பெய் குடம், மடற்பனை, முடத்தெங்கு, பருத்திக் குண்டிகை ஆகிய இவற்றின் இயல்பை யறியலாம்.

மன்மகன் = அரசன் மகன், மானி-மாண்பிறந்த மானமுடையவன், இருமுதுகுரவர், ஆசிரியர், சான்றோர்களை வழிபடுதற்கு விரும்பாதவன். பொச்சாப்பன் - மறதியுடையவன். சடிலம் - சடை. வியாகரணம் - இலக்கணம்.

நெல்லைச் சுப்பிரமணிய தேசிகன் எழுத்தொடு சொற்பொருள் யாப்பணி ஐந்தும் எளிதிற் புலப்பட இயற்றித் தருகென அறைந்தனனாக, உறையூர் முத்துவீரமாமுனிவன் முத்துவீரியம் எனத் தன் பெயர் நீறீஇ இந்நூலை வகுத்தனன் என்பதாம்.

க. எழுத்ததிகாரம்

தற்சிறப்புப்பாயிரம்

எப்பொருள் வயினுயி ரேதிர்ந்து மறைகுவ
தப்பொரு ளடிதொழு தறைகுவன் எழுத்தே.

இச்சூத்திரம் என்னுதலிற்றே வெனின், தற்சிறப்புப் பாயிரம் உணர்த்துத னுதலிற்று.

என்னை,

''தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும்
எய்த வுரைப்பது தற்சிறப் பாகும்''

என்றாராகலின்.

(இதன்பொருள்) ஐம்பெருங் பூதங்களும், அவற்றின்கண் தோன்றிய சராசரங்களும் எப்பொருளின்கண் தோன்றி ஒடுங்குவ, அப்பொருளி னடியை வணங்கி யான் எழுத்திலக்கணத்தைக் கூறுவேனென்க.

ஏகாரம் ஈற்றசை.

எழுத்ததிகார மென்பது, எழுத்தினது அதிகாரத்தை யுடையதென அன்மொழித்தொகையாய்ப் படலத்திற்குக் காரணக்குறியாயிற்று. அதிகாரமென்பது அதிகரித்தல்; அஃது இருவகைப்படும். அவற்றுள், ஒன்று அரையினிருந்துழி யிருந்து தன்னிலமுழுதும் தன்னாணையில் நடப்பச் செய்வது போல, ஒருசொல்நின்றுழி நின்று பலசூத்திரங்களும் பலவோத்துக்களும் தன்பொருளே நுதலிவரச் செய்வது. ஒன்று சென்று நடாத்தும் தண்டத் தலைவர்போல ஓரிடத்துநின்ற சொல் பல சூத்திரங்களோடு சென்றியைந்து தன்பொருளைப் பயப்பிப்பது, எழுத்தை நுதலிவரும் பலவோத்தினது தொகுதி 'எழுத்ததிகாரம்' என்றாயிற்றென்க.

(விளக்கவுரை) உலகிலுள்ள பொருள்களனைத்தும் தோன்றி ஒடுங்குவதற்குக் காரணமாக இருப்பது எப்பொருளோ, அப்பொருளை வணங்குவன் என்பதால் இவர்தம் சமயநெறி விளங்குகிறது. 'அந்தம் ஆதி யென்மனார் புலவர்' எனச் சிவஞானபோதம் கூறுவதும் ஈண்டு உணரத்தக்கது.

இங்ஙனமே ஏனைய சொல், பொருள், யாப்பு, அணி அதிகாரங் களின் தோற்றுவாயிலும் இறைவனைப் பொதுப்படக் கூறுவர். 'அப் பொருள் அடிதொழுது' என்பதால் தெய்வ வணக்கமும், 'அறைகுவன் எழுத்தே' என்பதால் செயப்படு பொருளும் எய்தப் படுதலின் இது தற்சிறப்புப் பாயிரமாயிற்று. அதிகரித்தல் - மேற்படுதல். ஒரு நூலி லிருக்கும் பல பகுதிகளிலும், எவ்வெப் பகுதியில் எவ்வெப் பொருள்கள் தலைமையாக எடுத்துரைக்கப்படுகின்றனவோ அவற்றைக்கொண்டு அவ்வப் பகுதிகள் பெயர் பெறும். எழுத்ததிகாரம் என்ற பகுதியில் எழுத்துக்களின் இலக்கணமே தலைமையாகக்கொண்டு அப்பகுதி முழுதும் எடுத்துச் சொல்லப்படுதலால் எழுத்ததிகாரமாயிற்று.

தண்டத்தலைவர் - தாணுத்தலைவர். 'நல்லவை யெல்லாம் நீயவாம்' என்ற திருக்குறளில் ஊழ் என்பது அதிகாரத்தான் வந்தது என எழுதி யிருப்பது பின்னையதற்குக் காட்டாகும்.

க. எழுத்தியல்

எழுத்தென்றற்குக் காரணம்

க. எழுதப் படுதலி னெழுத்தா கும்மே.

(இ - ள்.) கையில் எழுத்தாணியைக் கொண்டு மடன்மேல் எழுதப்படுதலால் எழுத்தாகுமென்க. (க)

அதன் வடிவு

உ. எழுத்தோலி வடிவரி வடிவையு மேற்கும்.

(இ - ள்.) எழுத்துச் செவிப்புலனால் அறியும் ஓசை வடிவையும், கட்புலனால் அறியும் வரி வடிவையும் ஏற்குமென்க. (உ)

எழுத்தின் மறுபெயர்கள்

ங. இரேகை வரிபொறி யெழுத்தின் பெயரே.

(இ - ள்.) இரேகையெனினும், வரியெனினும், பொறி யெனினும் எழுத்தென்னும் ஒருபொருட்கிளவி. (ங)

எழுத்தின்வகை

ச. அதுமுதல் சார்பென வாமிரு பாலன.

(இ - ள்.) அவ்வெழுத்து, முதலெழுத்தெனவும் சார் பெழுத்தெனவும் இருபகுதியவாகுமென்க. (ச)

முதல் எழுத்தின்வகை

நு. உயிருட லெனமுத லோரிரு வகைய.

(இ - ள்.) முதலெழுத்து, உயிரெழுத் தெனவும் மெய் யெழுத்தெனவும் இரண்டு பிரிவினவாமென்க. (நு)

உயிர் எழுத்து

சு. அகர முதலுயி ராறிரண் டாகும்.

(இ - ள்.) உயிரெழுத்து அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய பன்னிரண்டுமாமென்க. (சு)

உயிர் என்பதன் மறுபெயர்கள்

எ. அச்சாவி சுரம்பூத மாமுயி ரென்ப.

(இ - ள்) அச்செனினும், ஆவியெனினும், சுரமெனினும், பூதமெனினும் உயிரென்னும் ஒருபொருட்கிளவி. (எ)

குற்றெழுத்து

அ. அ, இ, உ, எ, ஒக்குறி லாகும்.

(இ - ள்.) முற்கூறிய உயிர் பன்னிரண்டனுள், அ, இ, உ, எ, ஒ இவை ஐந்தும் குற்றெழுத்தாமென்க. (அ)

குறுமையின் மறுபெயர்கள்

கூ. குறுமை யிரச்சுவங் குறிலெனப் படுமே.

(இ - ள்.) குறுமையெனினும், இரச்சுவமெனினும், குற் றெழுத்தென்னும் ஒருபொருட்கிளவி. (கூ)

நெட்டெழுத்து

கஂ. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔநெடில்.

(இ - ள்.) மேற்கூறிய உயிர் பன்னிரண்டனுள், ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ இவ்வேழும் நெட்டெழுத்தாமென்க. (கஂ)

நெடுமையின் மறுபெயர்கள்

கக. நெடுமையுந் தீர்க்கமு நெட்டுயி ராகும்.

(இ - ள்.) நெடுமையெனினும் தீர்க்கமெனினும் நெட்டெழுத்தென்னும் ஒருபொருட்கிளவி. (கக)

மெய்யெழுத்து

கஉ. ககரமுதன் மூவாறுங் காத்திர மாகும்.

(இ - ள்.) மெய்யெழுத்து க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன ஆகிய பதினெட்டுமா மென்க. (கஉ)

மெய்யின் மறுபெயர்கள்

கங. ஊமையு மொற்று மூடலெனப் படுமே.

(இ - ள்.) ஊமையெனினும், ஒற்றெனினும், மெய்யென்னும் ஒருபொருட்கிளவி. (கங)

வல்லெழுத்து

கச. அவற்றுள்
வல்லெழுத் தென்மனார் கசட தபற.

(இ - ள்.) முற்கூறிய பதினெட்டு மெய்யினுள் க, ச, ட, த, ப, ற ஆகிய ஆறும் வல்லெழுத்தாகும். (கச)

வன்மையின் மறுபெயர்கள்

கடு. வன்மைவன் கணம்வலி வல்லெழுத் தாகும்.

(இ - ள்.) வன்மையெனினும், வன்கணமெனினும், வலியெனினும், வல்லெழுத்தென்னும் ஒருபொருட்கிளவி. (கடு)

மெல்லெழுத்து

கசு. மெல்லெழுத் தென்மனார் ஙஞண நமன.

(இ - ள்.) ங, ஞ, ண, ந, ம, ன ஆறும் மெல்லெழுத்தாமென்க. (கசு)

மென்மையின் மறுபெயர்கள்

கஎ. மென்மைமென் கணமெலி மெல்லெழுத் தாகும்.

(இ-ள்.) மென்மையெனினும், மென்கணமெனினும், மெலி யெனினும் மெல்லெழுத்தென்னும் ஒருபொருட்கிளவி. (கஎ)

இடையெழுத்து

கஅ. இடையெழுத் தென்மனார் யரல வழள.

(இ - ள்.) ய, ர, ல, வ, ழ, ள ஆறும் இடையெழுத் தாகும். (கஅ)

அதன் மறுபெயர்கள்

கஆ. இடைமை யிடைக்கண மிடையிடை யெழுத்தே.

(இ - ள்.) இடைமையெனினும், இடைக்கணமெனினும், இடையெனினும் இடையெழுத்தென்னும் ஒருபொருட்கிளவி. (கஆ)

இனவெழுத்துக்கள்

உ0. உயிர்மூதன் முப்பது மொன்றற் கொன்றினம்.

(இ - ள்.) அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ—க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன ஆகிய முப்பதெழுத்துக்களுள், குறிலுக்கு நெடிலும், வல்லினத்துக்கு மெல்லினமும் இனமாகும். இடையினத்துக்கு இனமிலவா மென்றுணர்க. (உ0)

ஐ ஔ என்பவற்றுக்கினம்

உக. அவற்றுள்,
இ, உ, ஐ, ஔக் கினமென மொழிப.

(இ - ள்.) மேற்கூறிய முப்பதெழுத்துக்களுள் ஐகாரத்துக்கு இகரமும், ஔகாரத்துக்கு உகரமும் இனமாகும். (உக)

(வரலாறு.) ஐ, இ; ஔ, உ.

சார்பெழுத்தின் வகை

உஉ. சார்புயிர் மெய்தனி நிலையிரு பாலன.

(இ - ள்.) சார்பெழுத்து, உயிர்மெய் ஆய்தம் என இரண்டுவகைப்படுமென்க.

(வி - ரை.) உயிர்களோடும் மெய்களோடும் கூடியும் கூடாதும் அலி போலதி தனித்து நிற்றலின் ஆய்தம் தனிநிலை எனப்பட்டது. உயிர்மெய் உயிரும் மெய்யும் கூடிப் பிறத்தலானும், ஆய்தம் ஒரு மொழிக்கண்ணும் தொடர்மொழிக்கண்ணும் விதித்த முதல் எழுத்துக்கள் இருமருங்கு நின்றெழுப்ப இருசிறகெழுப்ப எழும் உடலது போல் இடையெழுந்து ஒலிப்பதன்றி ஒருவாற்றானும் முதலாகவோ அன்றி ஈறாகவோ வரும் தன்மையதன்றாகலானும் இவையிரண்டும் சார்பெழுத்தாயின.

தொல்காப்பியர் சார்பெழுத்து மூன்று என்பர். நன்னூலார் பத்து என்பர். இத்திறமெல்லாம் அவ்வந் நூல்கொண்டு அறிக. (உஉ)

சார்பு என்பதன் மறுபெயர்கள்

உங. புல்லல் சார்தல் புணர்தல் சார்பெனலே.

(இ - ள்.) புல்லலெனினும், சார்தலெனினும், புணர்தலெனினும் சார்பென்னும் ஒருபொருட்கிளவி. (உங)

உயிர்மெய்

உச. உயிரே மெய்யூர்ந் துயிர்மெய் யாகும்.

(இ - ள்.) பன்னிரண்டு உயிர்களும், பதினெட்டு மெய்களின் மேலும் ஏறி நடப்பது உயிர்மெய் யாகுமென்க.

(வ - று.) க் - அ = க, க் - ஆ = கா, க் - இ = கி, க் - ஈ = கீ, க் - உ = கு, க் - ஊ = கூ, க் - எ = கெ, க் - ஏ = கே, க் - ஐ = கை, க் - ஒ = கொ, க் - ஓ = கோ, க் - ஔ = கௌ பிறவுமன்ன. (உச)

முற்றுய்தம்

உரு. தனிநிலை குறில்வலி தனக்கிடை வருமே.

(இ - ள்.) ஆய்தம் குற்றெழுத்துக்கு முன்னும் உயிரேறிய வல்லினத்துக்குப் பின்னும் வரும்.

(வ - று.) எஃகு.

(வி - ரை.) வெஃகாமை, வஃகான் என்புழிப் பிறவுயிர் வரவு சிறுபான்மை வரும். தனிக்குறில் என வரைந்து ஓதாமையின் 'விலஃஃகு வீங்கிருள் ஒட்டுமே மாதர், இலஃஃகு முத்தின் இனம்' எனவும் வரும். (உஇ)

சுட்டெழுத்து

உசு. அ, இ, உச்சுட் டாமென மொழிப.

(இ - ள்.) அவன் என அகரமும், இவன் என இகரமும், உவன் என உகரமும் தனித்துச் சுட்டுப்பொருளைத் தரின் சுட்டெழுத்தாமென்க. (உசு)

வினவெழுத்து

உஎ. எயா வினவேன் றிசைக்கப் படுமே.

(இ - ள்.) எவன் என எகரமும், யாவன் என யாகாரமும் தனித்து வினப்பொருளைத் தரின் வினவெழுத்தாகும். (உஎ)

ஆய்தத்தின் மறு பெயர்கள்

உஅ. அஃகேனந் தனிநிலை யாய்த மாகும்.

(இ - ள்.) அஃகேனம் எனினும் தனிநிலை எனினும் ஆய்தம் எனினும் ஒரு பொருட்கிளவி. (உஅ)

சுட்டென்பதின் மறு பெயர்கள்

உக. காட்டல் குறித்தல்சுட் டாங்கரு திடினே.

(இ - ள்.) காட்டலெனினும், குறித்தலெனினும், சுட்டென்னும் ஒருபொருட்கிளவி. (உக)

வினவென்பதின் மறு பெயர்கள்

ஙo. வினவல் கடாவல் வினவெனப் படுமே.

(இ - ள்.) வினவல் எனினும் கடாவல் எனினும் வினவென்னும் ஒருபொருட் கிளவியாமெனவறிக. (ஙo)

அளபெடை

ஙக. இசைகெடி னேட்டெழுத் தெல்லாந் தமக்கினம் ஆகிய குறிலொடு மளபெழு மெனலே.

(இ - ள்.) பாட்டின் ஓசை கெடவரின் நெட்டுயிரேழும் தமக்கினமாகிய குற்றுயிரோடு 'ஆ அவலவன்', 'ஈ இரிசை'

(காரிகை – மேற்கோள்) எனத் தன்மாத்திரையின் மிகுந்தொலிக்கு மென்க. (கூக)

அதன் வகை

கூஉ. அதுதான்
இயற்கை செயற்கை யின்னிசை சொல்லிசை
நெடில்குறில் ஒற்றள பெழுத்துப் பேறளபு
எண்வ கைப்படும் என்மனூர் புலவர்.

(இ - ள்.) அவ்வளபெடை இயற்கையளபெடை, செயற்கை யளபெடை, இன்னிசை யளபெடை, சொல்லிசை யளபெடை, நெடிலளபெடை, குறிலளபெடை, ஒற்றளபெடை, எழுத்துப் பேறளபெடை என எட்டுவகைப்படும்.

(வ - று) அழைத்தல் விலிகூறல், புலம்பல் எழுத்துச் செயற்கை யின்றிப் பிறந்தது இயற்கை யளபெடை. செய்யுளில் சீர் தளை கெட்ட விடத்துப் புலவன் கொள்ளுதல் செயற்கை யளபெடை கெடுப்பதூஉம். (குறள் - வான் சிறப்பு) குற்றுகரமளபெடுத்த இன்னிசை யளபெடை. அஃஇ (குறள்-இனியவை கூறல்) ஐகாரக்குறுக்க மளபெடுத்த சொல்லிசை யளபெடை. ஆ அ நெடிலளபெடை. மணீ இ. குற்றெழுத்து நெட்டெழுத் தாகி யளபெடுத்த குறிலளபெடை. சிந்நந்து ஒற்றளபெடை. சந்திரனே யராஅப் பற்றிற்று விகாரத்தெழுந்த எழுத்துப் பேறளபெடை என வந்தமை காண்க. (கூஉ)

அளபெடையின் மறு பெயர்கள்

கூங. அளபும் புலுதமு மளபெடைப் பெயரே.

(இ - ள்.) அளபெனினும், புலுதமெனினும், அளபெடை யென்னும் ஒரு பொருட்கிளவி. (கூங)

குற்றியலிகரம்

கூச. யகரம் வரும்வழி யிகரங் குறுகும்.

(இ - ள்.) யகரமுதன் மொழிவரக் குற்றியலுகரம் திரிந்த இகரம் தன் மாத்திரையில் குறுகும்.

(வ - று.) ஆகி யாது, எஃகி யாது, வரகி யாது, கொக்கி யாது, சங்கி யாது, தெள்கி யாது, சுண்ணம் பியாது. (கூச)

இதுவுமது

கூடு. அசைச்சோன் மியாவி னிகரமு மற்றே.

(இ - ள்.) அசைச் சொல்லாகிய மியாவின் மகரமெய்யிலிருக்கிற இகரமும் தன்மாத்திரையில் குறுகும்.

(வ - று.) கேண்மியா.

(வி - ரை.) இதுவும், மேலிய நூற்பாவும்,

"யகரம்வரக் குறள் உத்திரியிகரமும்
அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய" (எழுத் - கூஅ)

என்ற நன்னூலைத் தழுவியன. (கூஇ)

குற்றியலுகரம்

கூசு. நெட்டெழுத் திம்பருந் தொடர் மொழியீற்றுங்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே.

(இ - ள்.) ஆகு என நெட்டெழுத்துக்கு முன்னும் எஃகு என ஆய்தம், வரகு என உயிர், கொக்கு என வலி, சங்கு என மெலி, தெள்கு என இடை, ஆகிய அறுவகைத்தொடர் மொழியீற்றினும் வல்லினத்திலேறிய உகரம் தன் மாத்திரையில் குறுகுமென்றுணர்க.

(வி - ரை.) தொடர்மொழி என்றது ஆய்தம், உயிர், வலி, மெலி, இடைத்தொடர்க் குற்றுகரங்களைக் குறிக்கும். (கூசு)

ஐகார ஔகாரக் குறுக்கம்

கூஎ. மொழிமுத லிடைகடை மூவிடத் தினும்ஐ
அஃகு முதலிடத் தௌவு மற்றே.

(இ - ள்.) ஐகாரமொழிக்கு முதலினும் நடுவினும் கடையினும் தன்மாத்திரையில் குறுகும் ஔகாரமுதலில் குறுகும்.

(வ - று.) ஐப்பசி, மடையன், குவளை, ஔவை எனவரும்.

(வி - ரை.)

"தற்சுட் டளவொழி யைம்மூ வழியும்
நையு மௌவு முதலற் றுகும்" (எழுத்து - சஂ0)

என்பது நன்னூல். (கூஎ)

மகரக்குறுக்கம்

கூஅ. மகரம் ணனக்கீழ் வம்மேற் குறுகும்.

(இ - ள்.) மகரமெய், மருண்ம் போன்ம் என ணகர னகரங்களுக்கு முன்னும், தரும் வளவனென வகரத்துக்குப் பின்னும் தன் மாத்திரையில் குறுகுமெனவறிக

(வி - ரை.)

"ணனமுன்னும் வஃகான் மிசையும் மக்குறுகும்" (எழுத்து - சக)

என்பது நன்னூல். (கூஅ)

ஆய்தக்குறுக்கம்

கூகூ. லளவிறு புணர்ச்சியி னுய்த மஃகும்.

(இ - ள்.) கஃறீது முஃடெதன லகர ளகர வீற்றுப் புணர்ச்சியினுகிய ஆய்தம் தன்மாத்திரையில் குறுகுமென்க.

(வி - ரை.)

"லளவீற் றியைபினு மாய்த மஃகும்" (எழுத்து - சஉ)

என்பது நன்னூல். (கூக)

மெய்யின்வடிவம்

சஂ. மெய்யீ றெல்லாம் புள்ளியோடு நிலையில்
இறுதியாகிய பதினேட்டு மெய்களு மேலே.

(இ - ள்.) இறுதி க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என ஒரு புள்ளியைப் பெறுமென்க. (சஂ)

எகர ஒகரத்தின் வடிவம்

சக. [1]எகர ஒகரத் தியற்கையு மற்றே.

(இ - ள்.) எ, ஒ, இரண்டுயிரும் மேலே ஒரு புள்ளியைப் பெறும். (சக)

குற்றியலுகரத்தின் வடிவம்

சஉ. [2]குற்றிய லுகரமு மற்றென மொழிப.

(இ - ள்.) குற்றியலுகரமும் மேலே ஒரு புள்ளியைப் பெறும்.

(வ - று.) நாகு. (சஉ)

---

1. தொல் - எழுத்து - நூன்மரபு - கள.
2. ,, ,, புணரியல் - கூ.

எழுத்துக்களின் பிறப்பிடம்

சஉ. உயிரிடை யின மிடறுரம் வலியுச்சி
மெலியிட மாமென வேண்டப் படுமே.

(இ - ள்.) உயிர் பன்னிரண்டிற்கும், இடையினம் ஆறுக்கும் கழுத்திடமாகும். வல்லினம் ஆறுக்கும் நெஞ்சிட மாகும். மெல்லினம் ஆறுக்கும் தலையிடமாகுமென்க.

(வி - ரை.)

"ஆவி இடைமை இடம்மிட ருகும்
மேவும் மேன்மைமூக் குரம்பெறும் வன்மை"

(எழுத்து - உ0)

என்பர் நன்னூலார். மெல்லினம் ஆறும் மூக்கினிடமாகப் பிறக்கும் எனத் (பிறப் - கஉ) தொல்காப்பியரும், நன்னூலாரும் கூற இவ் வாசிரியர் தலையிடமாகப் பிறக்கும் என்றல் புதியதாகும். எனினும் தலையை இடமாகக் கொண்டு எவ்வெழுத்தும் பிறப்பதில்லை யென்பர் இக்காலத்து ஆய்வாளர்கள். (சஉ)

அ, ஆ.

சஊ. அவற்றுள்
அ, ஆ, வங்காப் போடுவரு மென்ப.

(இ - ள்.) அகரமும், ஆகாரமும் வாயைத் திறத்தலால் பிறக்கும். (சஊ)

இ, ஈ, எ, ஏ.

சஎ. இ, ஈ, எ, ஏ, ஐயங் காப்போடு
மேல்வாய்ப் பல்லடி நாவிளிம் புறவரும்.

(இ - ள்.) இகர ஈகார, எகர ஏகார, ஐகாரங்கள் வாயைத் திறத்தலோடு மேல்வாய்ப் பல்லடியை நாவோரம் பொருந்தப் பிறக்கும். (சஎ)

உ, ஊ, ஒ, ஓ, ஔ.

சஏ. [1]உ, ஊ, ஒ, ஓ, ஔவிதழ் குவிவே.

(இ - ள்.) ஊகர உகார, ஓகர ஓகார ஔகாரங்கள் மேல் உதடும் கீழ்உதடும் குவிதலால் பிறக்கும். (சஏ)

---

1. நன் - எழுத் - உக.

க, ங

சஎ. அடிநா வடியண மழுத்தக் கஙவரும்.

(இ - ள்.) *ககர ஙகரங்கள் அடிநாவடி மேல்வாயை அழுத்தப் பிறக்கும்.* (சஎ)

ச, ஞ

சஅ. இடைநா விடையண மிறுக்கச் சஞவேழும்.

(இ - ள்.) *சகரஞகரங்கள் நடுநா நடு மேல் வாயைப் பொருந்தப் பிறக்கும்.* (சஅ)

ட, ண

சகூ. நுனிநா நுனியண நோக்க டணவரும்.

(இ - ள்.) *டகர ணகரங்கள் நுனிநா நுனிமேல் வாயைப் பொருந்தப் பிறக்கும்.* (சகூ)

த, ந

நிஂ. [1]அண்பல் லடிநா முடியுறத் தநவரும்.

(இ - ள்.) *தகர நகரங்கள் மேல்வாய்ப் பல்லடியை நாநுனி பொருந்தப் பிறக்கும்.* (நிஂ)

ப, ம

நிக. இரண்டித ழுறப்பம வெழுமென மொழிப.

(இ - ள்.) *பகர மகரங்கள் மேலுதடும் கீழுதடும் பொருந்தப் பிறக்கும்.* (நிக)

ய

நிஉ. அடிநா வடியண முறவரும் யகாரம்.

(இ - ள்.) *யகரம் அடிநாவடி யணத்தைப் பொருந்தப் பிறக்கும்.* (நிஉ)

ர, ழ

நிஙூ. [2]அண்ண நுனிநா வருட ரழவரும்.

---

1. நன் - எழுத் - உஙி.
2. ,, ,, உஅ.

(இ - ள்.) ரகர முகரங்கள் மேல்வாயை நாநுனி தடவப் பிறக்கும். (நுஙூ)

ல

நுச. லகரமணப் பல்லடி நாவிளிம் புறவரும்.

(இ - ள்.) லகரம் மேல்வாய்ப் பல்லடியை நாவோரம் தடித்துப் பொருந்தப் பிறக்கும். (நுச)

ள

நுடு. ளகரமேல் வாயை நாநுனி தடவப்
பிறக்கு மென்மனுர் பேரிதுணர்ந் தோரே.

(இ - ள்.) ளகரம் மேல்வாயை நாவோரம் தடித்துத் தடவப் பிறக்கும். (நுடு)

வ

நுசு. [1]மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே.

(இ - ள்.) வகரம் மேல்வாய்ப் பல்லுக் கீழுதடு பொருந்தப் பிறக்கும். (நுசு)

ற, ன

நுள. அண்ண நுனிநா வழுத்த றனவரும்.

(இ - ள்.) றகர னகரங்கள் மேல்வாயை நாநுனி மிக வழுத்தப் பிறக்கும். (நுள)

ஆய்தத்திற்கு இடமும் பிறப்பும்

நுஅ. உந்தி தனிநிலை யுற்றங் காந்தெழும்.

(இ - ள்.) ஆய்தத்துக்கு உந்தி இடமாம், வாயைத் திறத்தலாற் பிறக்கும்.

(வி - ரை.) ஆய்தம் தலையினிடமாகப் பிறக்கும் என்பர் இளம்பூரணம் நன்னூலாரும். நச்சினர்க்கினியர் நெஞ்சினிடமாகப் பிறக்கும் என்பர். இவர் உந்தியை இடமாகப் பிறக்கும் என்று கூறுவது புதியதாம். (ஆ அ)

1. நன். எழுத்து - கூ0.

ஓசையின் வகை

நிக. எடுத்தல் படுத்த லிரண்டே யோசை.

(இ - ள்.) ஓசையெடுத்துக் கூறலும், படுத்துக் கூறலு மென இரண்டுவகைப்படுமென்க.

(வி - ரை.) நலிதல், விலங்கல் ஆகியவற்றினும் ஓசை வேறுபடும் என்பர் இளம்பூரணர். (தொல்-பிறப்-சூ) (நிக)

மொழிக்கு முதலாகும் எழுத்துக்கள்

சூ0. முன்னான் குயிரு மொழிமுத லாகும்.

(இ - ள்.) பன்னிரண்டுயிரும் மொழிக்கு முதலாகும்.

(வ - று.) அணி - ஆசை, இருள் - ஈகை, உலகு - ஊமை, எருமை - ஏணி, ஐயம், ஒருவன் - ஓகை, ஔவியம். (சூ0)

இதுவுமது

சூக. பன்னீ ருயிரோடுங் க, ச, த, ந, ப, ம வரும்.

(இ - ள்.) க, ச, த, ந, ப, ம க்களாகிய ஆறு மெய்யும் பன்னிரண்டுயிரோடு மொழிக்கு முதலாகும்.

(வ - று.) கலை - காமன், கிளி - கீரி, குருகு - கூகை, கெறுவம் - கேகயம், கைத்தாளம், கொறுக்கை, கோதை - கௌவை எ-ம். சடை - சாரிகை, சித்திரம் - சீனம், சுக்கு - சூகை, செக்கு - சேனை, சையம் - சொக்கு - சோமன், சௌரி எனவும்வரும். பிறவுமன்ன.

(வி - ரை.) சகரம் அ, ஐ, ஔ ஆகிய மூன்றெழுத்துக்களுடன் வாராதென்பர் தொல்காப்பியர். (மொழிமரபு-உக). நன்னூலாரும் பிரயோக விவேக நூலாரும் பன்னீருயிருடனும் வரும் என்பர். இவ் வாசிரியர் இவர்களைத் தழுவியுரைத்துள்ளார். சகரம் அகரத்துடன் கூடிவரும் சொற்கள் தமிழ்ச் சொற்களாக வுள்ளன. ஐகார ஔகாரங் களுடன் கூடிவரும் சொற்கள் பெரும்பாலும் வடசொற்களாகவே இருக்கின்றன. இந்நுண்மையறிந்த இலக்கண விளக்க நூலார் சகரம் ஐகார ஔகாரங்களுடன் வருதலை மட்டும் விலக்கினர். இதுபற்றிச் சிவஞான முனிவர் கூறியுள்ளதும் ஈண்டு நினைவு கூர்தற்குரியதாகும். இனிச் 'சகரக்கிளவியும் அவற்றே ரற்றே, அ, ஐ, ஔ வெனும் மூன்றலங் கடையே' என்பது முதலாக இன்னோரன்ன சில வெழுத்துக்களை மொழிக்கு முதலாகாவென ஆசிரியர் தொல்காப்பியர் விலக்கினாலோ வெனின், இவ்வடமொழிகளும் திசைச்சொற்களும் அக்காலத்து இவ்வாறு தமிழின்கட் பயின்று வாராமை பற்றியென்க' என்பது அவர் உரை. சையம், சௌரி என்பன ஆரியச் சிதைவு என்பர் இளம்பூரணர். (சூக)

இதுவுமது

சூஉ. [1]அ, ஆ, எ, ஒ, வ்வோ டாகு ஞம்முதல்.

(இ - ள்.) ஞகரமெய் அ, ஆ, எ, ஒ ஆகிய நான்குயிரோடு மொழிக்கு முதலாகும்.

(வ - று.) ஞமலி - ஞாயிறு, ஞெகிழி - ஞொள்கிற்று, எனவரும்.

(வி - ரை.) தொல்காப்பியர் ஞகரம் ஆ, எ, ஒ ஆகிய மூன்று யிருடன் மட்டுமே வரும் என்பர். நன்னூலார் அகரத்தோடு வருதலையும் ஏற்றனர். இவ்வாசிரியரும் இவரைத் தழுவினர். ஞெகிழி - கொள்ளி. ஞொள்கிற்று - இளைத்தது. (சூஉ)

இதுவுமது

சூஊ. அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ வோடு
யகர மொழிமுத லாகு மென்ப.

(இ - ள்.) அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ ஆகிய வாறுயிரோடும் யகர மெய்மொழிக்கு முதலாகும்.

(வ - று.) யவனர் - யாகம், யுகம் - யூகம், யோகம் - யௌவனம்.

(வி - ரை.) 'அ ஆ உ ஊ ஒ ஔ யம் முதல்' (எழுத்-சசு) என்பது நன்னூல். இதனைத் தழுவியே இவ்வாசிரியரும் கூறியுள்ளார். தொல் காப்பியர் யகரம் ஆ என்பதோடுமட்டுமே வரும் என்பர். யகரம் ஆகாரத்தோடு கூடிவருவனவே தமிழ்ச்சொல்லாக வரும். ஏனைய ஆரியச் சிதைவாகும். ஆதலின் தொல்காப்பியர் கூறுவதே பொருத்தம் உடைய தாகும். (சூஊ)

இதுவுமது

சூஎ. உ, ஊ, ஒ, ஔ வலவோடு வவ்வரும்.

(இ - ள்.) உ, ஊ, ஒ, ஔ, ஆகிய நான்குயிருமல்லாத வெட்டுயிரோடும், வகரமொழிக்கு முதலாகும்.

(வ - று.) வசை - வாகை, வீனை - வீமன், வெளி - வேதம், வையகம் - வௌவால் எனவரும். (சூஎ)

வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

சூஏ. வேற்றுநிலை க, ச, த, ப, வல்லன மெய்பதி
னொன்கு மென்மனூர் நற்றமிழ் வல்லோர்.

---

1. நன். எழுத்து - ஆ0.

(இ - ள்.) க, ச, த, ப க்களல்லனவாகிய பதினொன்று மெய்யும் தன்னினத்தோடும் பிறமெய்யோடுங் கூடுங்கூட்டம் வேற்றுநிலை மெய்ம் மயக்காகுமென்க.

(வி - ரை) மயக்கம் - கூட்டம். எழுத்துக்கள் ஒன்றொடு ஒன்றுகூடி வருங்கால் தம்மொடுதாமே கூடிவருவனவும் தம்மொடு பிறவே கூடிவருவனவும், தம்மொடுதாமும் தம்மொடு பிறவும் கூடி வருவனவும் என முத்திறமாகக் கூறப்படும். இவற்றுள் தம்மொடு தாம் மயங்குவதை உடனிலை மெய்ம்மயக்கம் என்பர். தம்மொடு பிறமயங்குவதை வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்பர். (சுஞ)

இடைநிலையின் மறுபெயர்கள்

சுசு. சங்கம் புணர்ச்சி சையோக மயக்கம்
புல்லல் கலத்தலும் பொருளோன் றேயாம்.

(இ - ள்.) சங்கமெனினும், புணர்ச்சியெனினும், சையோகமெனினும், மயக்கமெனினும், புல்லலெனினும், கலத்தலெனினும், இடைநிலையென்னும் ஒருபொருட்கிளவி. (சுசு)

இடைநிலை மெய்ம்மயக்கம்

சுஎ. ஞகாரை முன்னர்க் ககார மயங்கும்.

(இ - ள்.) ஞகரத்து முன்னர்க் ககரம்வந்து மயங்கும்.

(வ - று.) புங்கம், கொங்கம். (சுஎ)

இதுவுமது

சுஅ. வருஞ்சய ஞகாரமுன் மருவி யென்ப.

(இ - ள்.) ஞகரத்துக்கு முன்னர்ச் சகர யகரங்கள் வந்து மயங்குமென்க.

(வ - று.) கஞ்சன், உரிஞ்யாது. (சுஅ)

இதுவுமது

சுகூ. க, ச, ப, ட கரமுற் கலந்து மயங்கும்.

(இ - ள்.) டகரத்துக்கு முன்னர்க் க, ச, ப க்கள் வந்து மயங்கும்.

(வ - று.) வெட்கம், புட்சிறை, நுட்பம். (சுகூ)

இதுவுமது

எ0. [1]ணனமுன் னினங் க, ச, ஞ, ப, ம, ய வவ்வரும்.

(இ - ள்.) ண, ன க்களுக்கு முன்னர்க் க, ச, ஞ, ப, ம, ய, வ இவ்வேழு மெய்யும் வந்து மயங்கும்.

(வ - று.) குண்டலம், தென்றிசை; வெண்கலம், சோறு, ஞமலி, பல், மலர். மண்யாது, மண்வலிது. பொன்கலம், சாடி, ஞமலி, பல், மலி, யாது, வலிது. (எ0)

இதுவுமது

எக. யகரமுந் தகரமு நகரமுன் ஞகும்.

(இ - ள்.) நகரத்துக்கு முன்னர் யகரமுந் தகரமும் வந்து மயங்கும்.

(வ - று.) பொருந்யாது, சந்தம். (எக)

இதுவுமது

எஉ. [2]மம்முன் ப, ய, வ, மயங்கு மென்ப.

(இ - ள்.) மகரத்துக்கு முன்னர் ப, ய, வ க்கள் வந்து மயங்கும்.

(வ - று.) கம்பன், கலம்யாது, நிலம்வலிது. (எஉ)

இதுவுமது

எங. [3]ய, ர, ழ, முன்னர் மொழிமுதன் மெய்வரும்.

(இ - ள்.) ய, ர, ழ க்களுக்கு முன்னர்க் க, ச, த, ந, ப, ம, வ, ய, ங, ஞ க்களும் வந்து மயங்கும்.

(வ - று.) வேய், வேர், வீழ், குறிது, சிறிது, நீது, நீண்டது, பெரிது, மலிது, வலிது, வேய்ங்குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு. (எங)

இதுவுமது

எச. ல, ள முனர்க் க, ச, ப, வ, ய வரு மென்ப.

---

1. நன் - எழுத்து - இங.
2. ,, ,, ஙo.
3. ,, ,, ஙங.

(இ - ள்.) ல, ள முனர்க் க, ச, ப, வ, ய க்கள் வந்து மயங்கும்.

(வ - று.) வேல், வாள், கடிது, சிறிது, பெரிது, வலிது, யாது; வேல்கடிது, வாள்கடிது, சிறிது, பெரிது எனப் புணர்த்தி நோக்குக. (எச)

இதுவுமது

எடு. வகாரை முன்னர் யகாரை மயங்கும்.

(இ - ள்.) வகரத்துக்கு முன்னர் யகரம் வந்து மயங்கும்.

(வ - று.) தெவ்யாது எனவரும். (எடி)

இதுவுமது

எசு. க, ச, ப, றகாரைமுற் கலக்கு மென்ப.

(இ - ள்.) றகரத்துக்கு முன்னர்க் க, ச, ப க்கள் வந்து மயங்கும்.

(வ - று) கற்க, பொற்சிலை, கற்பு. (எசு)

குற்றெற்றுகாதன

எஎ. ரகார ழகாரங் குற்றெற் றெற்று.

(இ - ள்.) ர, ழ க்கள் குற்றெழுத்தைச் சாராவாம்.

(வ - று.) வேர்பெரிது, வீழ்சிறிது, வேய்செய்.

(வி - ரை.) தொல்காப்பியத்தில் இந்நூற்பா 'அவற்றுள்' என்ற தனிச்சொல்லுடன் கூட்டிச் சொல்லப்பட்டுள்ளது. ஆகா என முடிந் துள்ளது. (எழுத்து - மொழி - கசு) (எஎ)

உடனிலை மெய்ம்மயக்கம்

எஅ. ர, ழ, வல்லன வுடனிலை யென மொழிப.

(இ - ள்.) ர, ழ க்களல்லாதனவாகிய பதினாறு மெய்யுந் தம்மொடு தாங்கூடுங் கூட்டமுடனிலை மெய்மயக்காகும்.

(வ - று.) அக்கம், அச்சம், அங்ஙனம், அஞ்ஞானம், அட்டை, அண்ணல், அத்தம், அந்நூல், அப்பம், அம்மை, அய்யம், அல்லி, அவ்வை, அள்ளல், அற்றம், அன்னை. (எஅ)

உயிர்மெய் மயக்கத்திற்கு அளவில்லை

எக. உயிர்மெய் மயக்கிற் கோரள வின்றே.

(இ - ள்.) உயிர்மெய் மயங்கும் மயக்கத்திற்கு வரையறை யில்லையாம். (எசு)

செய்யுட்கண்வரும் ஈரொற்றுக்கள்

அ0. [1]ல, ள, மெய்திரிந்த ன, ண, முன் மகாரம்
நைந்தீ ரொற்றுஞ் செய்யு ளுள்ளே.

(இ - ள்.) ல, ள கீகள் திரிந்த ன ண கீகளுக்கு முன்னின்ற மகரந் தன்மாத்திரையிற் குறுகி இரண்டொற்றுக மயங்கும்.

(வ - று.) போன்ம், மருண்ம். (அ0)

முதல் இடை கடைகளில் வரும் எழுத்துக்கள் தம் பெயர் மொழியின் மயங்கும்

அக. [2]தம்பெயர் மொழியின் மூதலு மயக்கமும்
இம்முறை மாறியு மியலு மென்ப.

(இ - ள்.) தம்பெய ருரைக்குங்கால் மொழிக்கு முதலிலு மிடையிலுமிம் முறையை மாறியு நடக்கும்.

(வ - று.) 'ல, ள மெய்திரிந்த.' (அ0) (அக)

மொழிக்கு ஈருகும் உயிரெழுத்துக்கள்

அஉ. ஈராரு றுயிரு மிறுதியா மெனவே.

(இ - ள்.) பன்னிரண்டுயிரும் மொழிக்கீருகும்.

(வ - று.) விள, பவா, கிளி, குரீ, கடு, மரூ, சே, தை, நொ, கோ, வௌ. (அஉ)

குறில் அளபெடைக்கண் ஈருகும்

அங. அளபிற் குற்றுயி ரந்த மாகும்.

(இ - ள்.) முற்கூறியவற்றுள் குற்றுயிரைந்தும் அள பெடுப்புழி ஈருகும்.

(வ - று.) ஆ அ, ஈ இ, ஊ உ, ஏ எ, ஓ ஒ. (அங)

---

1. நன் - எழுத்து - சுடு.
2. ,, ,, சுசு.

எகரம் தனித்து நின்றே ஈறுகும்

அச. எகரம் புள்ளியோ டிணைந்தீ றுகா.

(இ - ள்.) எகரவுயிர் மெய்களோடு கூடியீறுகாவாம். (அச)

ஒகரம் நகரத்தோடு ஈறுகும்

அஜ. ஒகர நகரமெய் யோடிறு வாகும்.

(இ - ள்.) ஒகரவுயிர் நகரமெய்யோடீறுகும்.

(வ - று.) நொ. (அஜ)

ஔ ககர வகரத்தோடு ஈறுகும்

அசு. ஔகான் ககர வகரமோ டன்ன.

(இ - ள்.) ஔகாரவுயிர் ககரவகரங்களோ டீறுகும்.

(வ - று.) கௌ, வௌ.

(வி - ரை.)

''குற்றுயிர் அளபின் ஈறும் எகரம்
மெய்யொடு ஏலாது ஒந்நவ் வொடாம் ஔ
ககர வகரமொ டாகும் என்ப'' (எழுத் - இஉ)

என்ற நன்னூலின் கருத்தை அக முதல் இந் நூற்பா வரையுள்ள நூற் பாக்களில் காணலாம். (அசு)

உகர ஊகாரம் நகரத்தோடு ஈறுகா

அஎ. உ, ஊ, நகரமோ டீறுவென மொழிப.

(இ - ள்.) உகர ஊகார உயிர் நகரமெய்யோடு ஈறுகாவாம்.

(வி - ரை.) 'இந்நூற்பா உ ஊகாரம் நவவொடு நவிலா' என்ற தொல்காப்பிய நூற்பாவை யுளங்கொண்டு கூறியதாகும். இதற்குரிய உரை பொருத்த மற்றதாகும்- இதுபற்றி யான் தொல்காப்பிய இளம் பூரண ருரையில் விளக்கி யுள்ளேன். அது வருமாறு :—

உ ஊ என்பன வொன்றுமே நகரத்தொடும் வகரத்தொடும் வாரா எனப் பொருள் கூறினர் இளம்பூரணரும் நச்சினர்க்கினியரும்.

ஆனால் தொல்காப்பியரே 'செலவினும் வரவினும் தரவினும்' என்றும், 'அளவும் நிறையும்' என்றும், 'களவினுட் டவிர்ச்சி' என்றும் நூற்பா செய்துள்ளமையானும், 'புன்கண் உடைத்தாற் புணர்வு' (குறள் - இஉ) எனச் சான்றோர் செய்யுளில் வருதலானும், இவர்கள் கருத்து இந் நூற்பாவிற்குப் பொருந்துவதன்றும்.

ஆதலின் இந் நூற்பாவிற்கு 'உகரம் நகரத்தோடும், ஊகாரம் வகரத்தோடும் வாராது' என நிரனிறையாகப் பொருள் உரைப்பின் ஒருவாறு பொருந்துவதாகும்.

அரசன் சண்முகனார் தாம் எழுதிய பாயிர விருத்தியில் இக்கருத்தே வலியுடையது எனக் கூறல் காண்க. எனினும் 'பொருநுக் கடிது' என உகரம் நகரத்தோடும் வருதலின் இதுவும் ஆராயத் தக்கதேயாம். (அஎ)

எல்லா மெய்யெழுத்துக்களோடும் கூடி ஈறாகும் உயிர்கள்

அஅ. எஞ்சிய வெல்லா மிறுதி யாகும்.

(இ - ள்.) இவை யொழிந்த வுயிர்கள் எல்லா மெய்களோடும் ஈறாகும். (அஅ)

மொழிக்கு ஈறாகும் எழுத்துக்கள்

அக. அந்தமாம்

ஞ, ண, ந, ம, ன—ய, ர, ல, வ, ழ, ள, வே.

(இ - ள்.) ஞ, ண, ந, ம, ன ய, ர, ல், வ, ழ, ள இப்பதினொரு மெய்யுமீறாகும்.

(வ - று.) உரிஞ், மண், வெரிந், நிலம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள். (அக)

ஒரு மொழிக்குரிய எழுத்துக்கள்

கூ0. அவற்றுள்,

ஞ, ங வொரு மொழிக்குரித் தாமென மொழிப.

(இ - ள்.) முற்கூறியவற்றுள் ஞ, ங க்களொரு சொற்குரியவாம்.

(வ - று.) உரிஞ், பொருந்.

(வி - ரை.) நகரம் இருமொழிக்கு ஈறாகும் எனக் கூறிப் பொருந், வெரிந் என்பனவற்றை எடுத்துக் காட்டுவர் இளம்பூரணர். (மொழி மரபு - சூசு) (கூ0)

நான்கு மொழிக்குரிய எழுத்து

கூக. வகர நான்மொழிக் குரியன வாகும்.

(இ - ள்.) வகரமெய் நான்குசொற் குரியவாம்.

(வ - று.) அவ், இவ், உவ், தெவ். (கக)

குற்றியலுகரமும் மொழிக்கு ஈறுகும்

கூஉ. எஞ்சிய வுகரமு மிறுதி யாகும்.

(இ - ள்.) குற்றியலுகரமு மீறுகும்.

(வ - று.) நாகு. (கூஉ)

உயிர்மெய் நிற்கும் முறை

கூங. ஒற்றுமுன் னுயிர்பின் னுறுமுயிர் மெய்யே.

(இ - ள்.) உயிர்மெய், ஒற்றெலி முன்னும் உயிரொலி பின்னுமாக வரும்.

(வி - ரை.)

''மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே'' (நூன் - கஅ)

எனத் தொல்காப்பியரும்,

''ஒற்று முன்னுய் வரும் உயிர்மெய்'' (எழுத் - ஙச)

என நன்னூலாரும் கூறுதல் காண்க. (கூங)

உயிர், மெய்யோடியையினும் தந்நிலை திரியாது

கூச. மெய்யோடு மேவினும் வேறு படாவுயிர்.

(இ - ள்.) உயிர் மெய்களோடு கூடினும் வேறுபடாவாம்.

(வ - று.) கோ, பூ, தீ, பா, கௌ.

(வி - ரை.) மெய்யெழுத்துக்கள் தாம் கூடிய உயிரின் மாத்திரையே தமக்குரிய மாத்திரையாகக் கொள்ளும் என்பது இதன் கருத்தாகும்.

''மெய்யோ டியையினும் உயிரியல் திரியா'' (நூன் - கo)

என்பது தொல்காப்பியம். (கூச)

மெய்கள் அகரத்தோடு கூடிவரும்

கூஞ. மெய்யி னியக்க மகரமோடு சிவணும்.

(இ - ள்.) மெய் பதினெட்டும் அகரவுயிரோடியலும்.

(வ - று.) க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன. (கூஞ)

மாத்திரையின் அளவு

கூசு. [1]இயல்பெழு மாந்த நிமைநொடி மாத்திரை.

(இ - ள்.) மக்கள் சுபாவமாக எழுங் கண்ணிமைத்தலும், கைந்நொடித்தலு மாத்திரைக்களவாம். (கூசு)

அதன் வேறு பெயர்கள்

கூஎ. மட்டள வோடுமிதம் வரைமாத் திரையே.

(இ - ள்.) மட்டெனினும், அளவெனினும், மிதமெனினும், வரையெனினும், மாத்திரையென்னும் ஒரு பொருட் கிளவி. (கூஎ)

மாத்திரையின் நாற்கூறு

கூஅ. உன்னல் காலே யூன்ற லரையே
முறுக்கன் முக்கால் விடுத்த லொன்றே.

(இ - ள்.) உன்னல் கால்மாத்திரை, ஊன்றல் அரை மாத்திரை, முறுக்கல் முக்கால் மாத்திரை, விடுத்தல் ஒரு மாத்திரையாம். (கூஅ)

குறில், நெடில்களுக்குரிய மாத்திரை

கூக. ஒன்றே குறினெடி லிரண்டள பாகும்.

(இ - ள்.) குற்றெழுத்துக்கு ஒரு மாத்திரை, நெட்டெழுத்துக்கு இரண்டு மாத்திரையாம்.

(வ - று.) அ. ஆ. (கூக)

ஒரு மாத்திரை பெறும் எழுத்துக்கள்

கமக. ஐ,ஔக் குறுக்கமொற் றளபேடை யொன்றே.

(இ – ள்.) ஐகாரக் குறுக்கத்துக்கும், ஔகாரக் குறுக்கத்துக்கும், ஒற்றளபெடைக்கும் தனித்தனி ஒரு மாத்திரையாம்.

(வ - று.) ஐப்பசி, ஔவை, சங்ங்கு. (கமக)

அரை மாத்திரை பெறும் எழுத்துக்கள்

கஅக. அஃகிய இ, உ. வாய்தமெய் யரையே.

---

1. நன் - எழுத்து - சஙி.

(இ - ள்.) குற்றியலிகரத்துக்கும், குற்றிய லுகரத்துக்கும், ஆய்தத்துக்கும், மெய்க்கும், தனித்தனி யரைமாத்திரையாம்.

(வ - று) நரகியாது, நாகு, ஃ, க். (கo௯)

கால் மாத்திரை பெறும் எழுத்துக்கள்

கo௨. அஃகிய மகரமு மாய்தமுங் காலே.

(இ - ள்.) மகரக்குறுக்கத்துக்கும், ஆய்தக்குறுக்கத்துக்கும் தனித்தனி மாத்திரை காலாம்.

(வ - று.) போன்ம், கஃறீது.

(வி - ரை.)

"மூன்றுயி ரளபுஇரண் டாம்நெடில் ஒன்றே
குறிலோடு ஐஒளக் குறுக்கம் ஒற்றளபு
அரைஒற்று இஉக் குறுக்கம் ஆய்தம்
கால்குறள் மஃகான் ஆய்தம் மாத்திரை" (எழுத் - சூச)

என்ற நன்னூலார் கருத்தை கூகூ முதல் இந் நூற்பா வரையிலுள்ள நூற்பாக்களில் காணலாம். (கo௨)

ஒரெழுத்து மூன்று மாத்திரை பெறுது

கo௩. ஓரேழுத் தொருமூன் றிலிப்ப தின்றே.

(இ - ள்.) ஒரெழுத்து மூன்று மாத்திரை யாகாவாம்.

(வி - ரை.)

"மூவள பிசைத்தல் ஒரெழுத் தின்றே" (நூன் - கி)

என்பது தொல்காப்பியம். (கo௩)

உயிரள பெடைக்குரிய மாத்திரை

கo௪. அளபெடை மூன்றன்மே லாமென மொழிப.

(இ - ள்.) உயிரளபெடை மூன்று மாத்திரையே யன்றி நான்கு மாத்திரையுமாகும்.

(வ - று.) ஓ ஒதல், பதா அ அகை. (கo௪)

மாத்திரை அளபிறந்து ஒலிக்கும் இடம்

கo௫. விற்கை புலம்பிசை விளியினு மிகுமே.

(இ - ள்.) விலே கூறலினும், புலம்பலினும், இசையினும், விளியினும் அளவைக் கடந்திசைக்கும். (க0டு)

போலி எழுத்துக்கள்

க0சு. இகரமும் யகரமு மிறுதியில் விரவும்.

(இ – ள்.) இகரவுயிரும், யகரமெய்யு மிறுதியில் விரவி வரும்.

(வ - று.) பேஇ—பேய், நாஇ—நாய். (க0சு)

இதுவுமது

க0எ. அகரமு மிகரமு மைகார மாகும்.

(இ - ள்.) அகரமும் இகரமும் புணர்ந்து ஐகாரமாக திவாலிக்கும்.

(வ - று.) அ+இ=ஐ. (க0எ)

இதுவுமது

க0அ. அகரமு முகரமு மௌகார மாகும்.

(இ - ள்.) அகரமும் உகரமும் புணர்ந்து ஔகாரமாக திவாலிக்கும்.

(வ - று.) அ+உ=ஔ. (க0அ)

எழுத்துச் சாரியைகள்

க0கூ. நெட்டெழுத் தெல்லாங் காரமோடு நிலேயும்.

(இ - ள்.) நெட்டெழுத்துக்க ளெல்லாங் காரச்சாரியை பெறும்.

(வ - று.) ஆகாரம், பிறவுமன்ன. (க0க)

இதுவுமது

ககo. அவற்றுள்,
ஐ, ஔக்கானு மடையவும் பெறுமே.

(இ - ள்·) மூற்கூறியவற்றுள், ஐயும் ஔவும் கான்சாரியையும் பெறும்.

(வ - று.) ஐகான், ஔகான். (ககo)

இதுவுமது

ககக. காரங் கான்கரம் பெறுமிரு மைக்குறில்.

(இ - ள்.) உயிர்க்குறிலும், உயிர்மெய்க் குறிலும் காரம், கான், கரமும் பெறும்.

(வ - று·) அகரம் அகாரம் அஃகான். மகரம் மகாரம் மஃகான். (கக க)

மொழிமுதற் போலியும் மொழியிடைப் போலியும்

ககஉ. ச, ஞ, ய, முன் அ, ஐ,யாகு முதலிடை.

(இ-ள்.) ச, ஞ, யக்களுக்கு முன்னின்ற அகரம் முதலினும் நடுவினும் ஐகாரமாகத் திரியும்.

(வ - று.) பசல் - பைசல், முரஞ்சு - முரைஞ்சு, பயல் - பையல்: அரயர் - அரையர். (ககஉ)

மொழியிடைப் போலி

ககஙூ. ஐகான் யவ்வழி நவ்வோடு சில்வழி[1]
ஞஃகா னுறழு மென்மனோர் புலவர்.

(இ - ள்.) தனி ஐகாரத்துக்குப் பின்னும் யகரமெய்க்குப் பின்னும் வருகிற நகரம் ஞகரமாகுஞ் சிலவிடங்களில்.

(வ - று.) ஐநூறு - ஐஞ்ஞூறு, நெய் நின்று - நெய்ஞ்ஞின்று. (ககஙூ)

மொழியிறுதிப் போலி

ககச. அஃறிணைப் பெயர்ச்சோ லிறுதி மகாரம்
னகரமா மொரோவழி நாடுங் காலே.

(இ - ள்.) மகரமெய்யிறுதியாகிய அஃறிணைப் பெயர்ச் சொற்களிற் சில வகரம் னகரமாகத் திரியும்.

---

1. நன் - எழுத் - சூகூ.

(வ - று.) அகம் - அகன், முகம் - முகன்.

(வி - ரை.) னகர ஈற்று அஃறிணைப் பெயர்களிற் சில மகரமாகத் திரியும் என்றும், அங்ஙனம் மயங்காதன ஒன்பதுள என்றும் கூறுவர் தொல்காப்பியர். ஆனல் நன்னூலார் மகர ஈற்று அஃறிணைப் பெயர்களே னகரமாகத் திரியும் என்பர். இவ்வாசிரியர் நன்னூலார் கருத்தைத் தழுவியுரைத்துள்ளார். இஃது ஆராயத் தக்கது. (ககச)

எழுத்தியல் முற்றிற்று.

உ. மொழியியல்

சொல்

ககஙி. சொன்ன வெழுத்தினுற் சொல்வதே சொல்லாம்.

(இ - ள்.) மேற்கூறிப்போந்த வெழுத்துக்களா லியம்புவதே மொழியாகுமென்க.

(வி - ரை.)

"எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின் பதமாம்"

என நன்னூலாரும் கூறுதல் காண்க. (க)

ஒரெழுத்தொருமொழி

ககசு. உயிர்நெடி லேழு மோரெழுத் தொருமொழி.

(இ - ள்.) நெட்டெழுத்தேழு மோரெழுத் தொருமொழி யாம்.

(வ - று.) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ.

ஆ - பசு, ஈ-தேன்வண்டு, ஊ-இறைச்சி, ஏ-அம்பு, ஐ-அழகு, ஓ-மதகுநீர் தாங்குபலகை, ஔ-கடிதத்தல்.

(வி - ரை.)

"நெட்டெழுத் தேழே ஒரெழுத் தொருமொழி"

என்பர் தொல்காப்பியர். ஔகாரம் நீக்கி ஆறென்பர் நன்னூலார். (உ)

மொழியாகாத குற்றெழுத்துக்கள்

ககஎ. குற்றெழுத் தைந்துங் கொளாமொழி யென்ப.

(இ - ள்.) அ, இ, உ, எ, ஒ ஆகிய குற்றெழுத்து மொழியாகாவாம்.

(வி - ரை.) மொழி கொளா என மாற்றுக. மொழியாகக் கொள்ளப்பட மாட்டா என்பது கருத்து.

"குற்றெழுத் தைந்தும் மொழிநிறை பிலவே"

என்பர் தொல்காப்பியர். (கூ)

ஒரெழுத்தொரு மொழியாகும் உயிர்மெய்கள்

ககஉ. உயிர்போற் க, ச, த, ந, ப, ம, வ வென்மொழி
ஆகு மென்மனு ரழிந்திசி னோரே.

(இ - ள்.) நெட்டுயிரோ ரெழுத்தொரு மொழியானது போலக் க, ச, த, ந, ப, ம, வ வேழு மெய்களினெடிலு மோரெழுத் தொரு மொழியாகுமென்க,

(வ - று.) கா, கூ, கை, கோ—சீ, சே, சை, சோ—தா, தீ, தூ, தே, தை—நா, நீ, நை, நோ—பா, பூ, பே, பை, போ—மா, மீ, மே, மை, மோ--வா, வீ, வை, வௌ.

(வி - ரை.) உயிர்மெய் நெட்டெழுத்துக்களில் மொழியாதற் குரிய எழுத்துக்களின் முதல் எழுத்தை மட்டுமே ஆசிரியர் குறித் துள்ளார். எனினும் உரையாசிரியர் அவ்வவ்வின எழுத்துக்களையும் குறித்துச் சென்றுள்ளார். ககர, சகர, நகர, வகர இனங்களில் நந் நான்கும், தகர, பகர, மகர இனங்களில் ஐயைந்தும் உரையில் குறிக்கப் பட்டுள்ளது. நன்னூலார் மகர இனத்தில் ஆறும், நகர இனத்தில் ஐந்தும், யாவும், உயிர்மெய்க் குற்றெழுத்தில் நொ, அவும் ஒரெழுத் தொரு மொழியாய் வரும் என்பர்.

"உயிர்மவில் ஆறும் தபநவில் ஐந்தும்
கவசவில் நாலும் யவ்வில் ஒன்றும்
ஆகும் நெடில்நொது வாங்குறில் இரண்டோடு
ஒரெழுத் தியல்பதம் ஆறேழ் சிறப்பின"

என்பது நன்னூல். (பதவி - உ.)

கா - சோலை. கூ - நிலம். சீ - நீக்கு. தூ - பற்றுக்கோடு, தே - தேன், நை - வருந்து, நோ - துன்பம், பே - அச்சம், மீ, மே - மேல், மை - மேகம், வீ - மலர், வை - கூர்மை, வௌ - வவ்வுதல், ஏனைய வெளிப்படை. (ச)

மொழியின் வகை

ககக. மொழிபெயர் வினையென மொழியப் படுமே.

21 JAN 1975

(இ - ள்.) மொழி பெயரெனவும், வினையெனவும் இரு வகையாம். (கு)

பெயர்

கஉ0. பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலோடு
வருவது பெயரென வழுத்தப் படுமே.

(இ - ள்.) பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய அறுவகையான் வருவது பெயராகுமென்க.

(வ - று.) பொன்னன், பொருளால் வருபெயர். அகத்தன், இடத்தால் வருபெயர். வேனிலான், காலத்தால் வருபெயர். மூக்கன், சினையால் வருபெயர். கரியன், குணத்தால் வருபெயர். ஓதுவான், தொழிலால் வருபெயர்.

(வி - ரை.) பொருள், இடம், காலம், சினை, குணம், தொழிலின் வருபெயர் (நன் - பத - கு) என்பதற்கேற்ப அவ்வறுவகையான் வருவது பெயர் என்றார். (கூ)

வினை

கஉக. வினைபல நிகழினும் வினையெனப் படுமே.

(இ - ள்.) பலவாக வினைகள் நடப்பினும் வினையாகு மென்க.

(வ - று.) நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நொ, போ, வெள, உரிஞ், உண், பொருந், திரும், தின், தேய், பார், செல், வவ், வாழ், கேள், அஃகு.

(வி - ரை.)

"நடவா மடிசீ விடுகூ வேவை
நொப்போ வெளவுரிஞ் உண்பொருந் திரும்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கேள் அஃகென்று
எய்திய விருபான் மூன்று மீற்றவும்
செய்யென் னேவல் வினைப்பகாப் பதமே"

(நன் - பதவியல் - கo) என்பர் நன்னூலார். (எ)

பெயர்திணைபால் இடங்கட்கு உரியதாமாறு

கஉஉ. பெயரிரு திணையும் பான்மூ விடம்பெறும்.

(இ - ள்.) பெயர், உயர்திணை அஃறிணையாகிய விரு திணையும், ஆண்பால் பெண்பால் பலர்பால் ஒன்றன்பால் பலவின்

பாலாகிய ஐம்பாலிலும், தன்மை முன்னிலை படர்க்கையாகிய மூவிடனிலும் பெறும்.

(வ - று.) அவன், அவள், அவர் உயர்திணை. அது, அவை, அஃறிணை. நான், தன்மை. நீ முன்னிலை. அவன் படர்க்கை. (அ)

மொழியின் வகை

கஉங. மொழியே,
தனியிணை துணைபொது தணங்கணங் கலப்புறு
மொழியோ ரேழென மொழிகரு மூளரே.

(இ - ள்.) தனிமொழி, இணைமொழி, துணைமொழி, பொதுமொழி, தணமொழி, கணமொழி, கலப்புறுமொழி, ஏழென்றுரைப்பவரும் சிலருளரா மெனவறிக.

(வ - று.) நிலம், நீர் இவை பிரிக்கப்படாத தனிமொழி. தேரன், ஊரன் இவை பிரிக்கப்படு மிணைமொழி. மூவர் வந்தார், அரசர் கூடினர் இவை தொடர்ந்துவந்த துணைமொழி. நங்கை, வேங்கை இவை இருபொருள் கொண்ட பொதுமொழி. முனிவர்கள், தேவர்கள் இவை பன்மையைக் காட்டுங் கணமொழி. இந்திரன், சந்திரன் இவை யொருமையைக் காட்டுந் தணமொழி. ஆண், பெண் இவை இருதிணையிலுங் கலந்து பொதுவாக வந்த கலப்புறுமொழி. (கூ)

மொழிக்குரிய எழுத்துவரையறை

கஉச. மொழியே,
ஓரெழுத் தாதியோன் பானெழுத் தந்தமாம்.

(இ - ள்.) மொழி, ஓரெழுத்துமுதலாக வொன்பதெழுத்திறுதியாகத் தொடர்ந்துவருமென்க.

(வ - று.) கா, அணி, அறம், அகலம், அருப்பம், அம்பலவன், அரங்கத்தான், உத்திராடத்தான் - உத்திரட்டாதியான்.

(வி - ரை.) நன்னூலார் 'பகாப்பதம் ஏழும் பகுபதம் ஒன்பதும், எழுத் தீருகத் தொடரும்' என்பர். இவர் பகுபதம் பாகப்பதம் என்ற பகுப்பின்றி இவ்வொன்பதையே வரையறையாகக் கொண்டுள்ளார். (கூ)

உயிரில் தழிழுக்கும் வடமொழிக்கும் உரிய பொதுவெழுத்துக்கள்

கஉடு. இடையி னொன்கு மீற்றி ரண்டும்
அல்லா வுயிர்போது வாமென மொழிப.

(இ - ள்.) ஆரியவுயிர் பதினறனுள் நடுவிலிருக்கு நான்கு யிருங் கடையிலிருக்கு மிரண்டுயிருமல்லாத பத்துயிரும் ஆரியத் திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்தாமென்க.

(வி - ரை.) ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவாகிய எழுத் துக்கள் :—அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஒ, ஔ என்பன. (கக)

ரு-இகரமாகவும் இருவாகவும் திரிதல்

கூஉசு. அவற்றுள்,
ஏழா முயிரிய்யு மிருவு மாகும்.

(இ - ள்.) மேற்கூறியவற்றுள் ஏழாமுயிராகிய ரு-இகர மாகவானாலும், இருவாகவானாலுந் திரியும்.

(வ - று.) இடபம், இருடி எனவரும்.

(வி - ரை.) நன்னூலார் பதவியலுள் தொகுத்துக் கூறியுள்ள கருத்தை இவ்வாசிரியர் கூஉசு முதல் கஉடு வரையுள்ள நூற்பாக்களால் தனித்தனியே எடுத்துக் கூறியுள்ளார்.

"அவற்றுள்,
ஏழாமுயிர் இய்யும் இருவும்ஐ வருக்கத்
திடையின் மூன்றும் அவ்வம் முதலும்
எட்டே யவ்வு முப்பது சயவும்
மேலொன்று சடவு மிரண்டு சதவும்
மூன்றே யகவும் ஐந்திரு கவ்வும்
ஆவீ றையு மீயீ றிகரமும்"

என்பது நன்னூல் (பதவி - உ0). இவற்றுள் 'ஐ வருக்கத்து இடையில் மூன்றும் அவ்வம் முதலாகும்' எனக் கூறியதை மட்டும் இவ்வாசிரியர் கூறவில்லை. ஏனைய ஒத்துள்ளன. (கஉ)

மெய்யில் தமிழுக்கும் வடமொழிக்கும் உரிய பொதுவெழுத்துக்கள்

கூஉஎ. ஐந்து வருக்கத் தாதியு மந்தமும்
யரல வளக்களும் பொதுவெழுத் தாகும்.

(இ - ள்.) ஆரியமெய் முப்பத்தேழனுள், ககரமுதலிலந்து வருக்கங்களின் முதலிலிருக்கின்ற க, ச, ட, த, ப க்களுங் கடையி லிருக்கின்ற ங, ஞ, ண, ந, ம க்களும், ய, ர, ல, வ, ள க்களும் இருமைக்கும் பொதுவெழுத்தாகும். (கங)

ஏனைய திரிந்து வருதல்

கஉஅ. ஏனைய வெழுத்துக ளெல்லாந் திரியும்.

(இ - ள்.) இவையொழிய மற்றைய வெழுத்துக்களெல்லாந் திரிந்துவந்து வடமொழியாகும். **(கச)**

ஐ யகரமாகத் திரிதல்

கஉக. அவற்றுள்,
எட்டா மெய்யே யகார மாகும்.

(இ - ள்.) மேற்கூறிப் போந்தவற்றுள் எட்டாவது மெய்யாகிய ஐ-யகரமாகத் திரியும்.

(வ - று.) பங்கயம். **(கஙி)**

ஸ சகரமாகவும் யகரமாகவும் திரிதல்

கஙo. ஆறைந் தாமெய் சயவா கும்மே.

(இ - ள்.) முப்பதா மெய்யாகிய ஸ முதலிற் சகரமும் நடுவில் யகரமுமாகத் திரியும்.

(வ - று.) சாலை, மயானம். **(கசு)**

ஷ சகரமாகவும் டகர மாகவும் திரிதல்

கஙக. ஒருமுப் பானேன் றுடல்சட வாகும்.

(இ - ள்.) முப்பத்தொன்று மெய்யாகிய ஷ முதலிற் சகரமும், நடுவில் டகரமுமாகத் திரியும.

(வ - று.) சட்டி, இடபம். **(கஎ)**

ஸ சகரமாகவும் தகரமாகவும் திரிதல்

கஙஉ. ஆறைந் திரண்டுட லாகுஞ் சதவே.

(இ - ள்.) முப்பத்திரண்டா மெய்யாகிய ஸ முதலிற், சகரமும், நடுவில் தகரமுமாகத் திரியும்.

(வ - று.) சித்தி, வாதனை. **(கஅ)**

ஹ அகரமாகவும் ககரமாகவும் திரிதல்

கஙங. ஆகுமுப் பான்மூன் றுக்கை யகவே.

(இ - ள்.) முப்பத்துமூன்று மெய்யாகிய ஹ முதலில் அகர மூன், ஈடுவிற் ககரமுமாகத் திரியும்.

(வ - று.) அரன், மோகம். (ககூ)

கஷ இரு ககரமாகத் திரிதல்

கஈச. ஐந்துதலை யிட்ட வாறைந் திருகவ்வே.

(இ - ள்.) முப்பத்தைந்தா மெய்யாகிய கஷ இரண்டு ககர மாகத் திரியும்.

(வ - று.) அக்கரம். (உ0)

ஆகார இறுதி ஐகாரமாதல்

கஈடு. ஆகார விறுபெய ரைகார மாகும்.

(இ - ள்.) ஆகார விறுதிப் பெயர்கள் ஐகாரமாகத் திரியும்.

(வ - று.) மாலை. (உக)

ஈகார இறுதி இகரமாதல்

கஈசு. ஈகார விறுபெய ரிகரமா மென்ப.

(இ - ள்.) ஈகார விறுதிப் பெயர்கள் இகரமாகத் திரியும்.

(வ - று.) புரி. (உஉ)

ரகரம் மொழிக்கு முதலாகுமாறு

கஈள. ரவ்விற் கம்முத லாமுக் குறிலு
மொழிமுத லாகி முன்வரப் பெறுமே.

(இ - ள்.) ரகரமெய்க்கு அ, இ, உ ஆகிய மூன்று குற் றெழுத்துக்களிலொன்று மொழிக்கு முதலாகி முன்னர்ப் போதரும்.

(வ - று.) அரங்கம், இராமன், உரோமம். (உக)

லகரம் மொழிக்கு முதலாகுமாறு

கஈஎ. இ, உ, லகரமுன் னெதிர்தரு மென்ப.

(இ - ள்.) லகரமெய்க்கு இ, உ ஆகிய விரண்டு குற்றெழுத்துக்களிலொன்று மொழிக்கு முதலாகி முன்னர்ப்போதரும்.

(வ - று.) இலாபம், உலோபம். (உசு)

யகரம் மொழிக்கு முதலாகுமாறு

கஙக. யகரக் கிகரமு மாகிமுன் வருமே.

(இ - ள்.) யகரமெய்க்கு இகரம் மொழிக்கு முதலாகி முன்னர்ப் போதரும்.

(வ - று.) இயக்கன். (உஞ)

(வி - ரை.) ககஎ ஆம் நூற்பா முதல் இந்நூற்பா வரையுள்ள கருத்துக்கள்.

"ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்
லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற்
கிய்யு மொழிமுத லாகிமுன் வருமே"

எனவரும் (நன்னூல் - பதவி - உக) நன்னூலார் கூற்றோடு ஒத்து நிற்கின்றன.

ஈரெழுத்தினைந்து வருங்கால் வரும் முறைமை

கசo. இணைந்தியல் காலை யரலக் கிகரமும்
மவ்வக் குகரமு நகரக் ககரமும்
மிசைவரும் ரவ்வழி யுவ்வு மாம்பிற.[1]

(இ - ள்.) ஆரியமொழியுள் இரண்டெழுத்து இணைந்து ஒரெழுத்தைப்போல நடக்குங்காலைப் பின்னின்ற, ய, ர, லக்களுக்கு இகரமும், ம, வக்களுக்கு உகரமும், நகரத்திற்கு, அகரமும் மேலே வரும். ரகரத்திற்கு உகரமும் வரும்.

(வ - று.) வாக்கியம், வக்கிரம், சுக்கிலம்; பதுமம், பக்குவம்; அரதநம்; அருத்தம். (உசு)

சொல்லின் வகை

கசக. சங்கதம் பாகதஞ் சங்கீர கம்மவப்
பிரஞ்சன நான்கெனப் பேசுங் கிளவி.

---

1 நன் - பதவியல் - உஉ.

(இ - ள்.) சொல், சங்கதமெனவும், பாகதமெனவும், சநுக்கிரகமெனவும், அவப்பிரஞ்சன மெனவும் நான்கு வகைப் படும் (உ எ)

தேவமொழி

கசஉ. சங்கதஞ் சநுக்கிரகந் தருநிலத் தவருரை.

(இ - ள்.) சங்கதமுஞ் சநுக்கிரகமுந் தேவர்மொழியாகும். (உ அ)

இழிசனர் மொழி

கசக. அவப்பிரஞ் சனமசே தனர்மொழி யாகும்.

(இ - ள்.) அவப்பிரஞ்சன மிழிசனர் மொழியாகும். (உ கூ)

பாகதமொழி

கசச. எல்லா நாட்டினு மியல்வது பாகதம்.

(இ - ள்.) நாடுகளெல்லாம் வழங்குவது பாகதமாம். (கூ ஐ)

பாகதத்தின் வகை

கசஞ. தற்பவந் தேசிகந் தற்சம மெனப்படும்.

(இ - ள்.) பாகதம், தற்பவமெனவும், தேசிகமெனவும், தற்சமமெனவும் மூன்றுவகைப்படுமெனவறிக. (கூ கி)

தற்பவம்

கசசு. ஆரியச் சிறப்பெழுத் தாற்பொதுச் சிறப்பால்
ஆனவீ ரெழுத்தா லமைவது தற்பவம்.

(இ - ள்.) ஆரியச் சிறப்பெழுத்தானும் பொதுவுஞ் சிறப்பு மாகிய விரண்டெழுத்தானுந் தமிழிற் சிதைந்து வருவது தற் பவமாமென வறிக.

(வ - று.) சுகி, போகி, சிறப்பு, அரன், அரி, பொது. (கூ உ)

தேசிகம்

கசஎ. தேசிக மென்பது திசைச்சொல் லாகும்.

(இ - ள்.) தேசிக மென்பது திசைச் சொல்லாம்.

(வ - று.) தாய், தள்ளை, தந்தை, அச்சன், பிறவுமன்ன. (கூகூ)

தற்சமம்

கசஅ. ஆரியந் தமிழ்பொது வாமொழி தற்சமம்

(இ - ள்.) ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்தா லாகிய மொழி தற்சமமாமென்க.

(வ - று.) அமலம், கமலம், காரணம் பிறவுமன்ன. (கூச)

சந்தியின் வகை

கசக. சந்தி தீர்க்கங் குணமே விருத்தி
எனமூ வகைப்படு மென்மனுர் புலவர்.

(இ - ள்.) சந்தி, தீர்க்கசந்தியெனவும், குணசந்தி யெனவும், விருத்தி சந்தியெனவும் மூவகைப்படுமென்க. (கூடு)

தீர்க்கசந்தி

கஞ. அ, ஆ, விறுதிமுன் அ, ஆ, வரினே
இருமையுங் கெடவா வேற்கு மென்ப.

(இ - ள்.) அகர ஆகாரங்களே இறுதியாகிய மொழிக்கு முன், அகர ஆகாரங்களே முதலாகிய சொல்வரின் இலேமொழி யிறுதியும் வருமொழி முதலுங் கெட்டு ஆகாரமாகும்.

(வ - று.) பத + அம்புயம் = பதாம்புயம். சேநா + அதிபதி = சேநாதிபதி எனவரும். (கூசு)

இதுவுமது

கஞக. இ, ஈ, யிறுதிமுன் இ, ஈ, வரினே
இருமையுங் கெடவீ யேற்கு மென்ப.

(இ - ள்.) இகர ஈகாரங்களே இறுதியாகிய மொழிக்கு முன் இகர ஈகாரங்கள் முதலாகிய சொல்வரின் இலேமொழி யிறுதியும் வருமொழி முதலுங் கெட்டு ஈகாரமாகும்.

(வ - று.) மகி + இந்திரன் = மகீந்திரன். கரீ + இந்திரன் = கரீந்திரன் எனவரும். (கூஎ)

இதுவுமது

கடுஉ. உ, ஊ, விறுதிமுன் உ, ஊ, வரினே
இருமையுங் கெடவூ வேற்கு மென்ப.

(இ - ள்.) உகர ஊகாரங்களீ இறுதியாகிய மொழிக்கு முன், உகர ஊகாரங்களீ முதலாகிய சொல்வரின் நிலைமொழி யிறுதியும் வருமொழி முதலுங்கெட்டு ஊகாரம் வரும்.

(வ - று.) குரு + உபதேசம் = குரூபதேசம். சுயம்பூ + உபதேசம் = சுயம்பூபதேசம் எனவரும். (கூஅ)

குணசந்தி

கடுகூ. அ, ஆ, விறுதிமுன் இ, ஈ, வரினே
இருமையுங் கெடவே யேற்கு மென்ப.

(இ - ள்.) அகர ஆகாரங்களீ இறுதியாகிய மொழிக்கு முன், இகர ஈகாரங்களீ முதலாகிய சொல்வரின் நிலைமொழி யிறுதியும் வருமொழி முதலுங்கெட்டு ஏகாரம் வரும்.

(வ - று.) நர + இந்திரன் = நரேந்திரன். உமா + ஈசன் = உமேசன் எனவரும். (கூக)

இதுவுமது

கடுசு. அ, ஆ, விறுதிமுன் உ, ஊ, வரினே
இருமையுங் கெடவோ வெய்து மென்ப.

(இ - ள்.) அகர ஆகாரங்களீ இறுதியாகிய மொழிக்கு முன், உகர ஊகாரங்களீ முதலிலேயுடைய சொல்வரின் நிலைமொழி யிறுதியும் வருமொழி முதலுங்கெட்டு ஓகாரம் வரும்.

(வ - று.) தாம + உதரன் = தாமோதரன். கங்கா + உற்பத்தி = கங்கோற்பத்தி எனவரும். (சஐ)

விருத்தி சந்தி

கடுடு. அ, ஆ, விறுதிமுன் எ, ஐ, வரினே
இருமையுங் கெடவை யெய்து மென்ப.

(இ - ள்.) அகர ஆகாரங்களீ இறுதியாகிய மொழிக்கு முன், எகர ஐகாரங்களீ முதலிலேயுடைய சொல்வரின் நிலைமொழி யிறுதியும் வருமொழி முதலுங்கெட்டு ஐகாரம் வரும்.

(வ - று.) சிவ + ஐக்கியம், = சிவைக்கியம். மகா + ஐச்சுவரியம் = மகைச்சுவரியம் எனவரும். (சக)

இதுவுமது

கருசு. அ, ஆ, விறுதிமுன் ஒ, ஒள, வரினே
இருமையுங் கெடவௌ வெய்து மென்ப.

(இ - ள்.) அகர ஆகாரங்களே இறுதியாகிய மொழிக்கு முன், ஓகார ஔகாரங்களே முதலிலேயுடைய சொல்வரின் நிகில மொழியிறுதியும் வருமொழி முதலுங்கெட்டு ஔகாரம் வரும்.

(வ - று) கலச + ஓதனம், = கலசௌதனம். மந்திரா + ஔடதம் = மந்திரௌடதம் எனவரும். (சஉ)

கருஎ. இ, ஏ, முதற்கை யாமென மொழிப.

(இ - ள்.) மொழிமுதல் இகர ஏகாரங்கள் ஐகாரமாகும்.

(வ - று.) கிரியிலுள்ளன = கைரிகம்; வேரம் = வைரம். (சஙூ)

கருஅ. முதலில் உ, ஊ, ஓ, ஔவா கும்மே.

(இ - ள்.) மொழிமுதல், உகர ஊகார ஓகாரங்கள் ஔகாரமாகும்.

(வ - று.) குருகுலத்தார் = கௌரவர்; சூரன்மகள் = சௌரி; சோமன் மகன் = சௌமியன். (சச)

கருக. அகர முதன்மொழி ஆகார மாகும்.

(இ - ள்.) முதன்மொழி அகரம் ஆகாரமாகும்.

(வ - று) சனகன்மகள் = சானகி எனவரும். (சஞ)

மொழியியல் முற்றும்.

இயல் உ-க்குச் சூத்திரம் கசுக.

கூ. புணரியல்

புணர்ப்பு இன்னதென்பது

கசுஂ. நிலைவரு மொழியொடு நேர்வது புணர்ப்பே.

(இ - ள்.) நிலைமொழி வருமொழியோ டொன்றுபட்டுப் புணருவது புணர்ச்சியாகு மெனவறிக.

(வ - று.) விளகுறிது, ஒளிமணி, கலைமதி, சிவகாமி, பாலாழி, மதகளிறு, புதுமதி எனவரும். பிறவுமன்ன. (க)

அதன்வகை

கசுக. அதுதான்,
இயல்பு விகார மெனவிரு பாலன.

(இ - ள்.) அப்புணர்ச்சி இயல்புப்புணர்ச்சி யெனவும், விகாரப்புணர்ச்சியெனவு மிருபகுதிய வாகுமென்க. (உ)

இயல்பு இன்னதென்பது

கசுஉ. விகார மனைத்து மேவல தியல்பே.[1]

(இ - ள்.) மேல்வரும் விகாரவகையெல்லாம் அடையாதது இயல்புப் புணர்ச்சியாகும்.

(வ - று.) கால் + ஆழி = காலாழி. (ங)

விகாரம் இன்னது என்பது

கசுங. ஆக்கந் திரிபழி வாகும் விகாரம்.

(இ - ள்.) விகாரம் தோன்றலும், திரிதலும், கெடுதலு மாம்.

(வ - று.) அவரைக்காய், பஃறலை, மரவேர். (ச)

மரூஉவும் புணர்தற்குரியது

கசுச. [2]மருவின் றொகுதியு மயங்கியன் மொழியும்
உரியவை யுளவே புணர்நிலைச் சுட்டே.

---

1. நன் - உயிரீற் - கூ.
2. தொல் - எழுத்து - புணரி - கூ.

(இ - ள்.) மருவிய சொற்களும், மயங்குதலியன்ற சொற்களும், புணருங்கிலைமைக்கண் உரியனவுளவாமென்க.

(வ - றை.) முன்றில், மீகண், மருஉ, தெய்வமால்வரை.

(வி - ரை.) இது தொல்காப்பிய நூற்பாவாகும். இதற்கு நச்சினார்க்கினியர் 'மரு மொழியும்,' இன் தொகுதி மயங்கியல் மொழியும் எனப் பிரித்துப் பொருள் காண்பர். அதனைத் தழுவி இவ்வுரை இயன்றுள்ளது. மருஉ மொழியாக வரும் சொற்களும், பொருள் அமைப்பிற் கேற்ப நில்லாது இன்னோசை தருதற்காக இடையில் சில சொற்களை ஏற்று மயங்கி நிற்கும் சொற்களும் நிலைமொழியும் வருமொழியுமாய் நின்று புணர்தற்குரியன என்பது இந் நூற்பாவின் கருத்தாகும்.

இவற்றில் மீகண், முன்றில் என்பனவற்றிற்குரிய புணர்ச்சி யிலக்கணத்தைப் புணரியலில் ககக, கஅகஆம் நூற்பாக்களில் முறையே காணலாம்.

தெய்வ வரை என நிற்க வேண்டுவது இடையில் மால் என்பதோடு சேர்ந்து மகர வொற்றுக் கெட்டு தெய்வமால் வரை என நின்றது. இதனையே மயங்குதலியன்ற சொற்கள் என்றார் உரையாசிரியர். (இ)

புணர்ச்சியின் வகை

ககூரு. அல்வழி வேற்றுமை யாமிரு பாலன.

(இ - ள்.) புணர்ச்சி அல்வழிப்புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சியென இருபகுதியவாமென்க. (கூ)

அல்வழி

ககூசு. அவற்றுள்,
அல்வழி வினைத்தொகை யன்மொழி யுவமை
உம்மை குணமெழு வாய்விளி யிடையுரி
அடுக்கீ ரேச்சமுற் றுரோடு மேட்டே.

(இ - ள்.) மேற்கூறிப் போந்தவற்றுள், அல்வழிப் புணர்ச்சி, வினைத்தொகையும், அன்மொழித் தொகையும், உவமைத் தொகையும், உம்மைத்தொகையும், பண்புத் தொகையும், எழுவாய்த் தொடரும், விளித்தொடரும், இடைத் தொடரும், உரித்தொடரும், அடுக்குத்தொடரும், பெயரெச்சத் தொடரும், வினையெச்சத் தொடரும், தெரிநிலை வினைமுற்றுத் தொடரும், குறிப்பு வினைமுற்றுத் தொடருமெனப் பதினொன்று வகைப்படும்.

(வ - றை.) அடுகளிறு, பொற்றொடி, கிளிமொழி, ஒன்றரை, ஆதி பகவன், சாத்தன்மகன், கொற்ற போகேல், தருங்கொல், நனிபேதை,

பாம்பு பாம்பு, வந்தசாத்தன், வந்துபோனான், நடந்தான்சாத்தன், குழையினன் கொற்றன் எனவரும். (எ)

வேற்றுமை

ககூஎ. ஐயோடு குவ்வின் னதுகண் வேற்றுமை.

(இ - ள்.) வேற்றுமைப் புணர்ச்சி ஐயும், ஒடுவும், குவ்வும், இன்னும், அதுவும், கண்ணுமென அறுவகையாம்.

(வ - று.) மரம்வெட்டினான், மகன்றந்தைவந்தான், சாத்தன் மகன், மலைவீழருவி, தன்கை, குன்றக்குகை.

(வி - ரை.) 'வேற்றுமை தானே விளியோ டெட்டே' (சொல்-சகூ) என மேற்கூறுவார் எழுவாயும் விளியுமொழித்து ஈண்டு ஆறென்ற தென்னையெனின் :—பெயர்ப்பொருளே வேற்றுமை செய்தலான் வேற்றுமை யெட்டென்பார், எழுவாய்க்கும் விளிக்கும் உருபு பெயரும் பெயரது விகாரமுமன்றி வேறின்மையின் அவ்விரண்டினையுமொழித்துத் தமக்கென உருபுடையன இடைநின்ற ஆறுவேற்றுமையுமே யாதலின், அவற்றின் உருபாறும் தொக்கும் விரிந்தும் இடைநிற்க அவ்வாறேடும் பதங்கள் பொருந்தும் புணர்ச்சியை வேற்றுமைப் புணர்ச்சி யென்றாரென்க. (அ)

ஏழு, நான்காம் வேற்றுமைகள்

ககூஅ. ஏழ நான்குமொற் றிடைமிகு மென்ப.

(இ - ள்.) ஏழாம் வேற்றுமையும், நான்காம் வேற்றுமையும், வல்லொற்றிடையின் மிக்குமுடியும்.

(வ - று.) மணி + கண், = மணிக்கண். மணி + கு, = மணிக்கு.

(வி - ரை.)

"வல்லெழுத்து முதலிய வேற்றுமை யுருபிற்கு
ஒல்வழி யொற்றிடை மிகுதல் வேண்டும்"

(தொல் - புணரி - கூ) என்பது தொல்காப்பியம். (க)

ஆறும் வேற்றுமை

ககூக. ஆற னுருபி னகரமூன கெடும்.

(இ - ள்.) ஆறும்வேற்றுமை யுருபி னகரமூன மழியும்.

(வ - று.) தம் + அது = தமது.

(வி - ரை.)

''ஆறன் உருபின் அகரக் கிளவி
ஈருகு அகரமுனைக் கெடுதல் வேண்டும்''

(தொல் - புணரி - கஉ) என்பது தொல்காப்பியம். (கஏ)

வேற்றுமையுருபுகள் வரும் இடம்

கஎ஠. பெயர்க்குப் பின்வரும் வேற்றுமை யுருபே.

(இ-ள்.) வேற்றுமையுருபுகள் பெயர்கட்குப் பின்வரும்.

(வ - று.) நம்பியை, நம்பியொடு, நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிக்கண் எனவரும்.

(வி - ரை.)

''வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே''
(தொல் - புணரி-கச)

''பெயர்வழித் தம்பொருள் தரவரும் உருபே''
(நன் - உருபு - உ)

என மூன்னூல்களும் கூறும். (கக)

திணையிரண்டு

கஎக. உயர்திணை யஃறிணை யோரிரு வகையன.

(இ - ள்.) திணை, உயர்திணையும், அஃறிணையுமென விரு வகையனவாம்.

(வ - று.) உயர்திணை உயர்குலம், அஃறிணை இழிகுலம்.

(வி - ரை.) திணை என்பது நிலம், குலம், ஒழுக்கம் ஆகிய பொருளைக் குறிக்கும். அவற்றுள் ஈண்டுக் குலத்திணை யுணர்த்தி நின்றது என்னூர் இவ்வுரையாசிரியர். சங்கர நமச்சிவாயரும் இக்கருத் தினரே. திணை யென்பது ஒழுக்கம், அஃது ஆகுபெயராய் ஒழுக்கத்தை யுடைய பொருளை யுணர்த்தி நின்றது என்பர் நச்சினார்க்கினியர். இதுவே பொருத்தம் உடையதாகும். 'ஒழுக்கம் உடைமை குடிமை' எனத் திருவள்ளுவர் கூறுதல் இதற்கு அரணுகும். (கஉ)

உயர்திணை, அஃறிணை

கஎஉ. அவற்றுள்,
உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனர வவரல பிறவே.

(இ - ள்.) மேற்கூறிப் போந்தவற்றுள் மக்களுந் தேவரும் நரகரு முயர்திணையாம். அவரல்லாத பிறவெல்லா மஃறிணை யாம்.

(வி - ரை.) மக்கட் சுட்டு - மக்கள் என்று நன்கு மதிக்கப்படும் பொருள்.

எனவே அங்ஙனம் மதித்தற்குரிய பண்பு அவர்மாட்டில்லையாயின் மக்களாகார் என்பது கருத்து. நூற்பாவின் போக்கு இங்ஙனம் இருக்க, 'மக்கள் தேவர் நரகர் உயர்திணை' என்ற நன்னூல் கருத்திணை நோக்கி உரை எழுதியுள்ளமை அத்துணைப் பொருத்தம் இன்றும். நரகர் என்பார் ஆணும் பெண்ணுமாய்க் கூடி யின்பம் நுகர்தலின்மையின் அவர்களைச் சேர்த்தல் கூடாது என்பர் தெய்வச்சிலையார். (கஉ)

சாரியை வரும் இடம்

களஉ. அவைதாம்,
சாரியைச் சொற்களைச் சார்ந்துநின் றியலும்.

(இ - ள்.) மேற்கூறிப்போந்த இருதிணைகளுஞ் சாரியைச் சொற்களைச் சார்ந்தொழுகும்.

(வ - று.) ஆடுஉ + கை = ஆடுஉவின்கை; மகடுஉ + கை = மகடுஉ வின்கை.

(வி - ரை.) தனியாக நிற்கும் நிலைமொழியையும் வருமொழி களையும் தம்மில் சார்தற் பொருட்டு இடையில் வரும் சொற்களை அல்லது எழுத்துக்களைச் சாரியை யென்பர். இவை சொற்களைச் சார்ந்தல்லது தனித்து வாரா.

ஆடுஉ + கை = ஆடுஉவின்கை; இவ்விடத்து இன்னென்பது நிலை மொழி வருமொழிகளை இயைவித்து, அவற்றின் இடையே நிற்றல் காண்க. (கச)

சாரியைகள்

களச. அத்தம் மானக் கின்னன் னொன்னிக்
கற்றுத் தங்நம் நும்மு மாம்பிற.

(இ - ள்.) அத்து, அம், மான், அக்கு, இன், அன், ஒன், இக்கு, அற்று, தம், நம், நும் ஆமெனவறிக.

(வி - ரை.) இவற்றுள் அத்து, அம், அக்கு, இன், அன், ஒன், இக்கு, தம், நம், நும் என்பன ஆசிரியர் தொல்காப்பியர் கூறியவை. தொல் காப்பியர் வற்று எனக் கூறியதை நன்னூலார் கூறியதுபோல அற்று என இவரும் கொண்டனர். இவர் புதிதாகக் கூறியிருப்பது மான் என்ப தாகும். (கடி)

இன் சாரியை

களடு. அவற்றுள்,
ஆமா கோவின் னடையவும் பெறுமே.

(இ - ள்.) மேற்கூறிய் சாரியைகளுள் ஆ, மா, கோ இவை இன்சாரியை பெறுதலுமாம்.

(வ - று.) ஆவை, ஆவினை. மாவை, மாவினை. கோவை, கோவினை.

(வி - ரை.)

''னகரம் ஒற்றும் ஆவும் மாவும்'' (தொல் - உயிர் - உக)

''ஓகார இறுதிக்கு ஒன்னே சாரியை'' (தொல் - உருபு - அ)

என்பவற்றுல் ஆ, மா என்பன னகர வொற்றும், கோ என்பது ஒன் சாரியையும் பெறும் எனத் தெரிகிறது. நன்னூலார்

''ஆமா கோனவ் வடையவும் பெறுமே''

என்பர். இவ்வாசிரியர் அவர்களின் வேறுக இன் சாரியை பெறும் எனக் கூறியது புதியதாகும். (கக)

அற்றுச் சாரியை

களக. அற்றுழிற் சுட்டை கானழி தருமே.

(இ - ள்.) அற்றுச்சாரியை யுறிற்சுட் டைகாரங் கெடும்.

(வ - று.) அவை; அவற்றை, இவற்றை, உவற்றை.

(வி - ரை.) அவை + அற்று = அவற்றை, 'சுட்டு ஐகான் அழிதருமே' என்பதால் அவை என்பதில் உள்ள ஐகாரம் கெட, நின்ற மெய்மேல் உயிர் ஏறி முடிந்தது. தொல்காப்பியர் வற்றுச் சாரியை பெறும் என்பர். (தொல் - உருபு - ஙி) (கள)

னகர ஈற்றுச் சாரியைகள்

களள. னகர விறுதிநாற் சாரியை னகரமும்
றகர மாகு நான்க னுரூபிற்கு.

(இ - ள்.) னகரவிறுதியாகிய இன், ஒன், அன், ஆன் ஆகிய நாற்சாரியையின் னகரமும் றகரமாகத் திரியும், நான்காம் வேற்றுமை யுருபிற்கென வறிக.

(வ - று.) விளவிற்கு, கோஒற்கு, அதற்கு, ஒருபாற்கு.

(வி - ரை)

''ஙஃகான் றஃகான் நான்க னுருபிற்கு''

(தொல் - புணரி - உக)

என்பது தொல்காப்பியம். (கஅ)

அத்துச் சாரியை

களஅ. அத்துறி னகரவீ றழியு மென்ப.

(இ - ள்.) அத்துச்சாரியை அகர வீற்றுச்சொன் முன் இல்லையாகும்.

(வ - று.) மகத்தை எனவரும்.

(வி - ரை.)

''அத்தின் அகரம் அகரமுனை யில்லை'' (தொல்-புணரி - உசு)

என்பது தொல்காப்பியம். (கக)

இக்குச் சாரியை

களக. இக்குறி னிகர விறுதியு மற்றே.

(இ - ள்.) இக்குச்சாரியை இகரம் இகரவீற்றுச்சொன் முன்னில்லையாம்.

(வ - று.) ஆடிக்குக்கொண்டான்.

(வி - ரை-) ஆடி + கொண்டான் என்பது இக்குப் பெற்று ஆடிக்குக் கொண்டான் எனவரும். ஆடித்திங்களில் கொண்டான் என்பது பொருள்.

''இக்கின் இகரம் இகரமுனை யற்றே'' (தொல் - புணரி - உச)

ன்பது தொல்காப்பியம். (உ0)

இதுவுமது

கஅ0. ஐகான் முன்னரு மவ்விய னிலையும்.

(இ – ள்.) இக்குச்சாரியை இகரம் ஐகாரவீற்றுச்சொன் முன்னுமில்லையாம்.

(வ - று.) சித்திரைக்குக்கொண்டான்.

(வி - ரை.) சித்திரை என்னும் ஐகார ஈறு இக்குப் பெற சித்திரை இக்கு என ஆகும். இந்நூற்பா விதியால் இகரம் கெட்டு சித்திரைக்கு என முடியும்.

''ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும்'' (தொல் - புணரி - உஇ)

என்பது தொல்காப்பியம். (உக)

இதுவுமது

கஅஅக. அக்கிறு கெடும்வலி யடையுங் காலே.

(இ - ள்.) வல்லெழுத்து வரிற் கடைநின்ற அக்குச்சாரியை கெடும்.

(வ - று.) குன்று + அக்கு + கூகை = குன்றக்கூகை.

(வி - ரை.) அக்கிறு கெடும்—அக்குச் சாரியையின் இறுதியாள (கு) கெடும் என்பது கருத்து.

''எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
அக்கின் இறுதிமெய் மிசையொடுங் கெடுமே
குற்றிய லுகரம் முற்றத் தோன்றுது'' (தொல் - புணரி - உஅ)

எனவரும் தொல்காப்பியமும் காண்க. (உஉ)

இன் சாரியை வாராத இடம்

கஅஉ. இன்னின் றைந்தாம் வேற்றுமை யியலும்.

(இ - ள்.) ஐந்தாம்வேற்றுமை யின்சாரியையின்றி நடக்கும்.

(வ - று.) பலாவின்கோடு.

(வி - ரை.)

''இன்னென வருஉம் வேற்றுமை யுருபிற்கு
இன்னென் சாரியை இன்மை வேண்டும்''
(தொல் - புணரி - உக)

என்பர் தொல்காப்பியரும். (உகூ)

உடம்படுமெய்

கஅஊ. இ, ஈ, ஐவழி யவ்வு மேனை
உயிர்வழி வவ்வு மேமுன்னிவ் விருமையும்
உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்.[1]

---

1. நன் - எழுத்து - உயிரீற் - கூ.

(இ - ள்,) இ, ஈ, ஐ முன் உயிர்வரின் யகரமும், மற்றைய வுயிர்முன் உயிர்வரின் வ்கரமும், ஏ முன் உயிர்வரின் யகரவகரமூ மூடம்படுமெய்யாகும்.

(வ - று.) கரியழகு, நீயழகு, பணையழகு; விளவழகு, பலாவழகு, கடுவழகு, கூவழகு, கோவழகு; சேவேறி, அவனேயவன்.

(வி - ரை.)

"எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்"

(தொல் - புணரி - ஈஅ)

எனத் தொல்காப்பியர் உடம்படுமெய் வரும் எனப் பொதுவாகவே கூறினர். இளம்பூரணர் அதனை வகைப்படுத்தினர். அதனை யுளங் கொண்டு கூறிய நன்னூலார் கூற்றையே இவ்வாசிரியரும் தழுவினர். (உச)

கோ, மா என்பவற்றுக்குச் சிறப்புவிதி

கஅச. கோமா முன்வரின் யகரமுங் குதிக்கும்.

(இ - ள்.) கோ, மா முன்னுயிர்வரின் வகரமேயன்றி யகரமூ மூடம்படுமெய்யாம்.

(வ - று.) கோயில், மாயிருஞாலம்.

(வி - ரை.) இவ்விதி புதியதும் இனிமையுடையதுமாகும். கோ+இல்=கோயில். இங்ஙனம் திரிபின்றிப் புணர்தற்கு 'இல்லொடு கிளப் பின் இயற்கை யாகும்' (தொல் - உயிர் - கக) எனத் தொல்காப் பியத்தில் விதியுண்டு. எனினும் யகர உடம்படுமெய் பெறுதற்கு விதி யில்லை. காரணம் உயிர்முன் உயிர் வருங்கால் உடம்படுமெய் பெற்றே வரும் என்பதை நியதியாகக் கொள்ளாமையே யாகும். அன்றியும் கோ+இல்=கோவில் எனவும் வரும் வழக்காறுண்டு. ஆஞல் மாயிரு ஞாலம் என்பது மாவிரு ஞாலம் என வருவதில்லை. இதற்கு விதி தேவையே. சங்கர நமச்சிவாயர் "மாயிரு ஞாலம்" என உரிச்சொல் ஆகார வீற்றின் வழி யகரவுடம்படுமெய் வந்த தென்னையெனின், அஃது "இடையுரி வட சொலி னியம்பிய கொளாதவும்" என்னுஞ் சூத்திரத்தான் அமைய மென்க எனக் கூறிப் புறனடையால் அமைத்தனர். இவ் வாசிரியர் இவ்விரு சொற்களுக்கும் வழக்காறு தழுவி விதி கூறியது சுவை பயப்ப தாகும். (உடு)

உயிரீற்றின் முன் மெல்லினம்

கஅடு. இருவழி யினுமுயி ரிறுதி முன்னர்
ஞ, ந, ம, ய வரினியல் பாமென மொழிப.

(இ - ள்.) அல்வழி வேற்றுமையினு முயிரீருகிய சொற் களுக்கு முன் ஞ, ந, ம, யகீகள் வரி னியல்பாகும்.

(வ - று.) விள, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது. பிறவு மன்ன.

(வி - ரை.)

"ஞநமயவ வெனும் முதலாகு மொழியும்
உயிர்முத லாகிய மொழியும் உளப்பட
அன்றி யனைத்தும் எல்லா வழியும்
நின்ற சொன்முன் இயல்பா கும்மே"
(தொல் - தொகை - உ)

எனத் தொல்காப்பியரும்,

"எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்
முன்வரும் ஞநமய வக்கள் இயல்பும்"

என நன்னூலாரும் கூற, இவர் வகாரத்தை மட்டும் நீக்கியதற்குக் காரணம் தெரிந்திலது. (உசு)

இதுவுமது

கஅசு. அவற்றுள்,
மெல்லெழுத் தியற்கை யுறழினும் வரையார்.

(இ - ள்.) மேற்கூறிப் போந்தவற்றுள் மெல்லெழுத் துறழ்ந்து முடியினு நீக்காது கொள்வார் புல்வர்.

(வ - று.) கதிர் ஞெரி-கதிர்ஞ்ஞெரி; நொமாடா-நொம்மாடா.

(வி - ரை.) 'அவற்றுள், மெல்லெழுத் தியற்கை உறழினும் வரையார்; சொல்லிய தொடர்மொழி யிறுதி யான' (தொல் - தொகை - கூ) என்பது தொல்காப்பியம். இதனுள் மூன்றும் வரியை விலக்கியது இவ்விதி தொடர்மொழிக்கே யன்றி ஒரெழுத்தொரு மொழிக்கும் கொள்ளுதற்கே யாம். இதனை இளம்பூரணர் வருமொழி முற்கூறியது கொண்டு ஏற்றனர். எடுத்துக் காட்டில் கதிர்ஞெரி என்பது தொடர்மொழிக்கும், நொமாடா என்பது ஒரெழுத்தொரு மொழிக்கும் உரியதாதல் காண்க. நன்னூலார், 'நொதுமுன் மெலி மிகலுமாம்' (உயிரி - அ) என எடுத்து விதப்பர். (உள)

முன்னிலை வினை முன் வல்லினம்

கஅள. வலிவரின் முன்னிலை வினையுறழ் தலும்விதி.

(இ - ள்.) முன்னிலை வினைமுன் க, ச, த, பக்கள் வரினியல்புமிகலுமாம்.

(வ - று.) நடகொற்ரு - நடக்கொற்ரு

(வி - ரை.)

''உயிரீ ருகிய முன்னிலைக் கிளவியும்
புள்ளி யிறுதி முன்னிலைக் கிளவியும்
இயல்பா குநவும் உறழ்பா குநவுமென்று
ஆயீ ரியல வல்லெழுத்து வரினே'' (தொல் - தொகை - கூ)

என்னும் தொல்காப்பியர் கூற்றைத் தழுவியது இந்நூற்பா. (உஅ)

ண, ன முன் ஞ, ய

கஅஅ. ண, ன முனர் வருஞய வோருவினை கோள்ளும்.

(இ - ள்.) ண, னக்களுக்கு முன்வரும் ஞ, ய க்களொரு வினையைக்கொண்டு முடியும்.

(வ - று.) மண்யாத்த கோட்டமழகளிறு - மண்ஞாத்தகோட்டம் பொன்யாத்ததார் புரவிபரிக்குமே-பொன்ஞாத்ததார் புரவி எனவரும்.

(வி - ரை.) ணகர னகரத்தின் முன் யகரம் நிற்க வேண்டுமிடத்து ஞகரம் நிற்பினும் ஒக்கும் என்பது இதன் கருத்தாகும். ஒரு வினையைக் கொண்டு முடியும் வினைச் சொற்கள் முதல் எழுத்தாதற்கு ஒரு தன்மைய வாம் என்பது கருத்தாகும். இங்ஙனம் வருதலே 'போலி' என்றும் இதனை இறந்தது விலக்கலால் நன்னூலார் கூறிற்றிலர் என்றும் கூறுவர் சங்கர நமச்சிவாயர் (நன் - எழுத் - கஉச உரை காண்க.)

''ணனவென் புள்ளிமுன் யாவும் ஞாவும்
வினையோ ரனைய என்மனர் புலவர்'' (தொகை - சு)

என்பர் தொல்காப்பியரும். (உக)

ண, ன முன் முதலாகெழுத்துக்கள்

கஅக. அல்வழி யிவ்விரு மையுமுத லாகெழுத்
தெல்லா மூன்வரி னியல்பா கும்மே.

(இ - ள்.) அல்வழிக்கண் ண, னக்களை யீறாகிய சொற் களுக்கு முன் மொழிக்கு முதலாகிய வெழுத்துக்களையுடைய சொற்கள் வரி னியல்பாம்.

(வ - று.) பொன், மண், அரிது, குடம், ஞமலி, வலிது, பொன் னரிது, மண்ணரிது, பொன்குடம், மண்குடம். (கo)

ண, ன முன் மென்மையும் இடைமையும்

கஅo வல்லெழுத் தல்வழி யியல்பாம் வேற்றுமை,

(இ - ள்.) வேற்றுமைக்கண் வல்லெழுத்தை முதலாக வுடைய சொற்களல்லாத வெழுத்துக்களையுடைய சொற்களுக்கு முன், ண, னக்களை இறுதியாகிய சொற்களியல்பாம்.

(வ - று.) மண், பொன், வலிது, நீட்சி, யாப்பு. (கூக)

ண ள; ன, ல என்பவற்றின் முன் த, ந

ககூக. ண, ள, ட ணவாம் ன, ல, றனவாந்த நவரின்.

(இ - ள்.) ண, ள க்களுக்குமுன் த, நக்கள்வரின் ட, ணக்களாம். ன, லக்களுக்குமுன் த, நக்கள்வரின் ற, னக்களாம்.

(வ - று.) மண் + தீது, = மண்டீது. தெள் + நலம், = தெண்ணலம். பொன் + தீது, = பொன்றீது. கல் + நலம். = கன்னலம். வாள் + தீது, = வாடீது. வாள் + நன்மை, = வாணன்மை, வேல் + தீது, = வேறீது. வேல் + நன்மை, = வேனன்மை.

(வி - ரை.)

''னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகும் தநக்கள் ஆயுங் காலே'' (மெய்யிற் - கூச)

என்பர் நன்னூலாரும். (கூஉ)

ஒள, ஞ, ந, ம, வ என்பவற்றின் முன் முற்றுகரம்

ககூஉ. ஒளவிறு ஞ, ந, ம, வ விறுதியு முகர
முற்றுகர முன்னிலை யுறழ்தலும் விதியாகும்.

(இ - ள்.) ஒளவீறும் ஞ, ந, ம, வவீறும், முற்றுகர முன்னிலையாயினுகரச்சாரியை பெற்று ஒருகால் இயல்பும் ஒருகால் மிகலுமாம்.

(வ - று.) கௌவுகொற்று - கௌவுக்கொற்று; உரிஞுகொற்று - உரிஞுக்கொற்று; பொருநுகொற்று - பொருநுக்கொற்று; திருமுகொற்று - திருமுக்கொற்று; தெவ்வுகொற்று - தெவ்வுக்கொற்று என வரும். (கூக)

உயர்திணைப்பெயர் முன் நாற்கணம்

ககூங. இருவழி யினுமுட லுயிரையு மிறுதியாம்
உயர்திணை முனரெலா மூறவியல் பாகும்.

(இ - ள்.) அல்வழிவேற்றுமை யிரண்டிடத்து மெய்யையும் உயிரையு மிறுதியாகிய வுயர்திணைப் பெயர்க்குமுன் வல்லண

மென்கணம் இடைக்கண முயிர்க்கணமாகிய நாற்கணமும் வரினியல்பாம்.

(வ - று.) நம்பிபெரியன், நம்பிநல்லன், நம்பிவலியன், நம்பியவன் அவன் சிறியன், அவனல்லன், அவன்வலியன், அவனரியன். (சூ)

எய்தியதன்மேற் சிறப்புவிதி

ககூ. அவற்றுள்
இ, ஐ யிறுதிமுன் வன்கண மிகுமே.

(இ - ள்.) மேற்கூறிப் போந்தவற்றுள், இ, ஐ இறுதி முன் வன்கணம்வரின் மிக்குமுடியும்.

(வ - று.) செட்டிக்கூத்தன், நங்கைப்பெண். (சூ)

பொதுப்பெயர்முன் நாற்கணம்

ககூ. இருமைக் கும்பொது வியல்பா தலுமுள.

(இ - ள்.) அஃறிணைக்கும் உயர்திணைக்கும் பொதுவாகிய பொதுத்திணை யியல்பாதலுமுள.

(வ - று.) சாத்தன் பெரியன், சாத்தனல்லன், சாத்தன்வலியன், சாத்தனரியன், சாத்திபெரியள், சாத்திநல்லள், சாத்திவலியள், சாத்தியரியள் எனவரும்.

(வி - ரை.)

''அஃறிணை விரவுப்பெயர் இயல்பு மாருளவே'' (தொகை-சகூ)

என்பர் தொல்காப்பியர். (சூ)

வினை முதற்பொருளான் வரும் தொழிற்சொல்

ககூ. இனமாந் தொழிற்பெய ரேய்தின் வேற்றுமை
வழியியல் பாதலு முறழ்தலு மாகும்.

(இ - ள்.) வேற்றுமைக்கண், மெய்யையுமுயிரையும் ஈறுகிய மொழிக்குமுன், மூன்றுவதற்குரிய வினைமுதற்பொருளான் உளவாகிய தொழிற்சொற்கள்வரினியல்பாதலும் உறழ்தலுமாம்.

(வ - று.) பேய்கோட்பட்டான் = பேய்க்கோட்பட்டான். புலிகடிக்கப்பட்டான் = புலிக்கடிக்கப்பட்டான்.

(வி - ரை.) பேய் புலி என்னும் மெய், உயிரீற்றுச் சொற்கள் வினைமுதற்பொருளாக வந்தன. அவற்றுன் ஆகிய தொழில்கள் முறையே

கோட்படுதலும், கடிக்கப்படுதலுமாம். இவை இயல்பாகவும் உறழ்ந்தும் வந்தமை காண்க.

''புள்ளி யிறுதியும் உயிரிறு கிளவியும்
வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையால்
தம்மி னுகிய தொழிற்சொல் முன்வரின்
மெய்ம்மை யாகலும் உறழத் தோன்றலும்
அம்முறை இரண்டும் உரியவை உளவே
வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்'' (தொகை - கச)

என்பர் தொல்காப்பியரும். (கூ எ)

ஐகார வேற்றுமைத் திரிபு

கக்கூ எ. வலிமிகும் வழிமெலி மிகுதலு மெலிமிகும்
வழிவலி மிகுதலு மியல்பின் வழிமிகு
தலுமுயிர் வழியுயிர் கெடுதலுஞ் சாரியை
வரும்வழி சாரியை கெடுதலும் மெய்வே
ருகிடத் தியற்கை யாதலும் போதுப்பெயர்க்
கவ்விய னீலையலு மையுரு பியல்பே.

(இ - ள்.) வன்கணம் மிகும்வழி மென்கண மிகுதலும்; மென்கண மிகும்வழி வன்கண மிகுதலும்; இயல்பின்வழி மிகுதலும்; உயிர்வரும்வழி யுயிர்கெடுதலும், சாரியை வரும்வழி சாரியை கெடுதலும், மெய்வேருகிடத் தியற்கையாதலும், பொதுப் பெயர்க்குருபு தொகாதே நிற்றலும் ஐயுருபினியல்பாம்.

(வ - று.) மரங்குறைத்தான், வலிவழிமெலிமிகல்; விளக்குறைத் தான், மெலிவழிவலிமிகல்; தாய்க்கொலை, இயல்பின்வழிமிகல்; தழுக் கொணர்ந்தான், உயிர்வரும்வழி உயிர்கெடல்; வண்டுகொணர்ந்தான், சாரியைவரும்வழி சாரியைகெடல்; புளிகுறைத்தான், மெய்வேருகிடத் தியற்கையாதல்; கொற்றனைக்கொணர்ந்தான், உருபுதொகாது நிற்றல் எனவரும். (கூ அ)

அல்வழியில் இ, ஐ

கக்கூ அ. அல்வழி இ, ஐ முனரியல் பாதலு
மிகுதலு முறழ்தலும் வேண்டப் படுமே.

(இ - ள்.) அல்வழிக்கண் இ, ஐ முன் க, ச, த, பக்கள் வரினியல்பாதலு மிகுதலும், ஒருகால் மிகுதலும் ஒருகால் மிகாமையுமாம்.

(வ -று.) பருத்திகுறிது, காரைகுறிது, மாசித்திங்கள், சித்திரைத் திங்கள், கிளிகுறிது, கிளிக்குறிது, திணைகுறிது, திணைக்குறிது எனவரும். (சுக)

சுட்டு முதலாகிய இகர ஐகாரம்

ககூகூ. இகரச் சுட்டு மைகா னிறுதியும்
மிகுதலும் உறழ்தலும் உளவென மொழிப.

(இ - ள்.) சுட்டுமுதலாகிய விகரமு மைகாரமும் மிகுதலும் உறழ்தலுமாம்.

(வ - று.) அதொளிக்கொண்டான், ஆண்டைக்கொண்டான், அவ்வழிகொண்டான், அவ்வழிக்கொண்டான்; ஆங்கவைகொண்டான், ஆங்கவைக்கொண்டான். (சo)

ஆறனுருபும் நான்கனுருபும்

உoo. ஆறு நான்கு மிரட்டுத லிலவே.

(இ - ள்.) ஆறனுருபு நான்கனுருபும் இரட்டுத லிலவா மென்க.

(வ - று.) தமது, தமக்கு; நமது, நமக்கு.

(வி - ரை.) தனிக்குறில்முன் ஒற்று. உயிர்வரின் இரட்டுதல் விதி. ஆயினும் தாம் நாம் என்பன ஆறனுருபையும், நான்கனுருபையும் ஏற்கும்கால் தம், நம் எனக் குறுகி வரும் உயிருடன் ஏறி முடிதலேயன்றி இரட்டுதல் இல்லை என்பது இதன் கருத்தாகும். (சக)

நும்

உoக. நும்மெ னிறுதியு மங்ஙிலை தீரியாது.[1]

(இ - ள்.) நும்மென்னு மகரவீ றும் மிரட்டுதலிலவாமென்க.

(வ - று.) நுமது, நுமக்கு எனவரும். (சஉ)

எண்ணுப் பெயரும் நிறைப் பெயரும் அளவுப் பெயரும்

உoஉ. எண்ணிறை யளவு மேயொடு சிவணும்.

(இ - ள்.) எண்ணுப்பெயரு நிறைப்பெயரு மளவுப்பெயரு மேகாரச்சாரியை பெறும்.

---

1. தொல் - எழுத்து - தொகைமரபு - உo.

(வ - று.) காலேகாணி, தொடியேகஃசு, கலனேதூணி எனவரும். (சஙூ)

எண், நிறை, அளவின்கண் அரைவருதல்

உoங. அரைவரின் ஏயகன் ரூடு மற்றே.

(இ - ள்.) அரையென்னுஞ் சொல்வரின் ஏகாரச்சாரியை பெறுவாம்.

(வ - று.) காலரை, களஞ்சரை, உழக்கரை.

(வி - ரை.) அற்றே: அசைநிலை. (சஜ)

அவற்றின்முன் குறை என்பது வருதல்

உoச. குறைவரின் வேற்றுமை கொளின்மிகு மென்ப.

(இ - ள்.) வேற்றுமைக்கண் குறையென்னும் சொல்வரின் மிக்குமுடியும்.

(வ - று.) காணிக்குறை, தொடிக்குறை, உரிக்குறை. (சஞ)

குற்றியலுகரம் இன் சாரியை பெறுதல்

உoஞ. குற்றிய லுகரக் கின்னே சாரியை.[1]

(இ - ள்.) குற்றியலுகரம் இன்சாரியை பெறுமென்க.

(வ - று.) நாகின்வளர்ச்சி, எஃகின்கால், வரகின்கதிர், கொக்கின்கால், குரங்கின்கண், தெள்கின்கால், ஒன்றின்குறை, களஞ்சின்குறை, ஆழாக்கின்குறை. (சசு)

கலத்தின்முன் அத்து வருதல்

உoசு. கலமென் னளவே யத்தோடு சிவணும்.

(இ - ள்.) கலமென்னு மளவுப்பெயர் அத்துச்சாரியை பெறும்.

(வ - று.) கலம் + குறை = கலத்துக்குறை. (சஎ)

பனையும் காவும் இன்னொடு வருதல்

உoஎ. பனையுங் காவு மின்னொடு சிவணும்.

---

1. தொல் - எழுத்து - தொகைமரபு - உஞ.

(இ - ள்.) பனையென்னும் மரப்பெயரும், காவென்னும் பொழிற்பெயரு மின்சாரியைபெறும்.

(வ - று.) பனையின்கோடு, காவின்சோலை எனவரும். (சஅ)

யாவர், யாது

உ0அ. யாவ ரவர்முன் அடுப்பின் நடுநிலை
வகரங் கெடுதலும் யாதது முன்வரின்
வகரம் வருதலு மதனியல் பாகும்.

(இ - ள்.) அவரென்னு மொழிக்குமுன் யாவரென்னுஞ் சொல்வரினடுநின்ற வகரங்கெடுதலும், அதுவென்னு மொழிக்கு முன் யாதென்னுஞ் சொல்வரின் வகரவுயிர்மெய் தோன்றலு மதனியல்பாம்.

(வ - று.) அவர்யாவர், அவர்யார்; அதுயாது, அதுயாவது.

(வி - ரை.) யாவர் என்பது இடையில் வகரம் கெட்டு யார் என்றும், யாது என்பது இடையில் வகரம் பெற்று யாவது என்றும் நிற்பன மரூஉ முடிபாகும். ஈண்டுக் கூறப்பெறும் யார், யாவது என்பன பெயராக நிற்கும். யார், யாது என வினாப்பொருளில் வருவன வினைச்சொற்களாக நிற்கும். சொல்லால் ஒத்து நிற்பினும் இவை பொருளால் வேறுபடும். (தொல் - தொகை - உ0 நச்சினார்க்கினியர் உரை காண்க.) (சக)

இன்சாரியை பெறும் ஈறுகள்

உ0கூ. அ, ஆ, உ, ஊ, ஏ, ஒள விறுபெயர்
முன்வரு முருபிற் கின்னே சாரியை.

(இ - ள்.) அ, ஆ, உ, ஊ, ஏ, ஒள விறுவாகிய மொழிக்குமுன் வருகிற வேற்றுமையுருபுகட் கின்சாரியை வரும்.

(வ - று.) விளவினை, பலாவினை, கருவினை, தழுவினை, சேவினை, வெளவினை யெனவரும். (கo)

அற்றுச்சாரியை பெறும் ஈறுகள்

உகo. அகர விறுபெய ரற்றேடு சிவணும்.

(இ - ள்.) பன்மைப்பொருளைக் கருதிய அகரவிற்றுச் சொற்கள் அற்றுச்சாரியை பெறுமென்க.

(வ - று.) பலவற்றை, பல்லவற்றை; சிலவற்றை, சில்லவற்றை. (கச)

இதுவுமது

உகக. யாகார வினுவு மவற்றே ரற்றே.

(இ - ள்.) வினுப்பெயரைத் தராநின்ற யாவும் அற்றுச் சாரியை பெறுமென்க.

(வ - று.) யாவற்றை. (இஉ)

அன் சாரியைபெறும் சொற்கள்

உகஉ. உவ்விறு சுட்டன் னெடுவரு மென்ப.

(இ - ள்.) சுட்டு முதலாகிய உகரவிற்றுச்சொற்கள் அன் சாரியை பெறும்.

(வ - று.) அதனை, இதனை, உதனை. (இஊ)

நீ யென்னும் பெயர்

உகங. நீயெனு மொருபெயர் நின்னெனத் திரியும்.

(இ - ள்.) நீயென்னு முன்னிலை யொருமைப்பெயர் நின் னெனத் திரியுமெனவறிக.

(வ - று.) நின்னை. (இசு)

ஒன் சாரியைபெறும் ஈறு

உகச. ஓகார விறுதிக் கோன்னே சாரியை.[1]

(இ - ள்.) ஓகார விறுதிப்பெய ரொன்சாரியை பெறு மென்க.

(வ - று.) கோஒனை, கோஒனல், கோஒற்று. (இஙி)

அத்துச்சாரியை பெறும் மரப் பெயர்கள்

உகடு. அ, ஆ விறுமர மத்தோடு சிவணும்
ஏழ னுருபுவந் தியையுங் காலே.

(இ - ள்.) மரப்பெயரை யுணர்த்தும் அ, ஆ வீற்று மொழிகள் ஏழாம் வேற்றுமை வந்தியையுங்கால் அத்துச் சாரியை பெறும்.

---

1. தொல் - எழுத்து - உருபியல் - அ.

(வ - று.) விளவத்துக்கண், பலாவத்துக்கண். (இசு)

இன்சாரியை பெறும் ஈறுகள்

உகசு. ஞநவிறு மொழியின் ஞெநேடை பெறுமே.

(இ - ள்.) ஞநக்களோ இறுதியாகிய மொழிகள் இன் சாரியை பெறுமென்க.

(வ - று.) உரிஞினை, பொருநினை. (இள)

அற்றுச்சாரியை பெறும் சொற்கள்

உகள. சுட்டுமுதல் வகர மற்ரெடு சிவணும்.

(இ - ள்.) அவ், இவ், உவ் என்னுஞ் சுட்டெழுத்தை முதலாகவுடைய வகரவீற்றுச் சொற்கள் அற்றுச்சாரியை பெறும்.

(வ - று.) அவற்றை, இவற்றை, உவற்றை. அவ் + அற்று + ஐ = அவற்றை எனவரும்.

(வி - ரை)

"வவ்விறு சுடிற் கற்றுறல் வழியே" (உருபு - கக)

என்பது நன்னூல். (இஅ)

தெவ் என்னும் சொல் இன் பெறுதல்

உகஎ. ஏனைய வகரக் கின்னே சாரியை.

(இ - ள்.) இவை யொழிந்த தெவ் வென்னுஞ்சொல் இன் சாரியை பெறும்.

(வ - று.) தெவ்வினை.

(வி - ரை.)

"ஏனை வகரம் இன்ரெடு சிவணும்" (உருபு - கூ)

என்பது தொல்காப்பியம். (இசு)

மகர இறுதி அத்துப் பெறுதல்

உக்கூ. மஃகான் புள்ளிமூன் னத்தே சாரியை[1].

---

1. தொல் · எழுத் - உருபு · கசூ.

(இ - ள்.) மகரமெய் இறுதியாகிய சொற்கள் அத்துச் சாரியை பெறுமென்க.

(வ - று.) மரத்தை. (கூ0)

எய்தியதன்மேற் சிறப்பு விதி

உஉ0. இன்னேடு வருதலு மதனியல் பாகும்.

(இ - ள்.) மகரவீற்றுச்சொற்க ளத்துச்சாரியையே யன்றி இன்சாரியையும் பெறும்.

(வ - று.) உருமினை. (கூக)

நும்மென்னிறுதி இயல்பாகும்

உஉக. நும்மத் தின்னையு நோக்கா தியலும்.

(இ - ள்.) நும்மென்னு மகரவீற்றுச்சொல் மேற்கூறிய அத்துச் சாரியையும் இன்சாரியையும் பெறுதியல்பா மென்க.

(வ - று.) நும்மை.

(வி - ரை.)

"நும்மென் இறுதி இயற்கை யாகும்" (தொகை - கரி)

என்பது தொல்காப்பியம். (கூஉ)

நெடுமுதல் குறுகும் சொற்கள்

உஉஉ. தாமு நாமு நெடுமுதல் குறுகும்.

(இ - ள்.) தாம் நாம் என்னுந் தன்மைப் பன்மைப் பெயர், அத்தும் இன்னும் பெறுது நெடுமுதல் குறுகுமென வறிக.

(வ - று.) தம்மை, நம்மை. (கூங)

யாம் எம்மெனத் திரியும்

உஉங. யாமேம் மாகுமா ராயுங் காலே.

(இ - ள்.) யாமென்னும் பெயர் எம்மாகும் ஆராயுமிடத்து.

(வ - று.) எம்மை. (கூச)

எல்லாம் எனும் பெயர்

உஉச. அற்றெல் லாம்பெறு மாயிடை யும்மை
இறுதியோடு சிவணு மென்மனோர் புலவர்.

(இ - ள்.) எல்லாமென்னும் பொதுப்பெயர் அற்றுச்சாரி பெறும், சாரியையீற்றில் உம்மை நிலைபெறும்.

(வ - று.) எல்லாவற்றையும் என வரும். (சுஇ)

உயர்திணையில் எல்லாம் எனும் பெயர்

உஉடு. உயர்திணை யாயி னம்மிடை தோன்றும்.

(இ - ள்.) எல்லாமென்னும் பொதுச்சொல் உயர்திணை யாயின், நம்முச்சாரியை பெற்றுக் கடையில் உம்மை நிலைபெறு மென வறிக.

(வ - று.) எல்லா நம்மையும்.

(வி - ரை.)

"உயர்திணை யாயின் நம்மிடை வருமே" (உருபு - கஅ)

என்பது தொல்காப்பியம். (சுசு)

எல்லாரும் எல்லீரும் என்னும் பெயர்கள்

உஉசு. எல்லாரு மேல்லீரு மேன்பவற் றும்மை
தள்ளி நிரலே தம்நும் சாரப்
புல்லு முருபின் பின்ன ரும்மே[1].

(இ - ள்.) எல்லாருமென்னும் படர்க்கைப்பெயரும் எல்லீரு மென்னும் முன்னிலைப்பெயருமாகிய இரண்டு பெயர்களும் ஈற்றி னும்மையை நீக்கி, முறையே தம்மும் நும்மும் பொருந்த வுருபின் பின் உம்மைவரும்.

(வ - று.) எல்லார் தம்மையும், எல்லீர் நும்மையு மெனவரும். (சுள)

தான், யான் எனும் பெயர்கள்

உஉள. தான்முதல் குறுகும் யானென் னகும்.

(இ - ள்.) தானென்னுந் தன்மை யொருமைப்பெயர் நெடு முதல் குறுகும், யானென்னுந் தன்மையொருமைப்பெயர் என் எனத் திரியும்.

---

1. நன் - எழுத்து - உருபு - எ.

(வ - று.) தன்னே, என்னே. (சுஅ)

இன்னெடு சிவணும் எண்ணுப்பெயர்கள்

உஉஅ. எல்லா வெண்களு மின்னெடு சிவணும்.

(இ - ள்.) எண்ணுப்பெயரெல்லாம் இன்சாரியை பெறும்.

(வ - று.) ஒன்றினே, இரண்டினே, மூன்றினே, நான்கினே. பிறவு மன்ன.

(வி - ரை.)

''எண்ணின் இறுதி அன்னெடு சிவணும்'' (உருபு - உசு)

என்பர் தொல்காப்பியர். இவர் அதற்கு மாறுக இன்னெடு சிவணும் என்று கூறுகிறார். வழக்கறிந்து ஏற்பது கொள்க. (சுசு)

டறவொற்றிரட்டும் குற்றியலுகர ஈற்றுச் சொற்கள்

உஉசு. ஒற்றிடை மிகூஉங்குற் றுகரமு முளவே.

(இ - ள்.) இடையிலொற்று மிக்குமுடியுங் குற்றிய லுகரங்களும் உளவாம்.

(வ - று.) ஆட்டை, கயிற்றை.

(வி - ரை.) நெடிற் றொடர்க்குற்றுகர ஈறும், உயிர்த்தொடர்க் குற்றுகர ஈறும் உருபேற்குங்கால் இடையில் ஒற்றுமிக்கு நிற்றலும் உள என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

யாடு + ஐ = யாட்டை; முயிறு + ஐ = முயிற்றை.

''நெடிலோடு உயிர்த் தொடர்க் குற்றுகரங்களுள்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே''
(உயிரீற் - சுசு)

என்னும் நன்னூல் நூற்பா இதனை நன்கு விளக்குதல் காண்க. (எ0)

ஒன்று முதல் எண்முன் பத்து வருதல்

உசo. ஒன்று முதலெட் டாறு மெண்களோ
ஊர்ந்து வரும்பத் தாஞெடு சிவணிப்
பகரவொற் றெழியமே லெல்லா மோடும்.

(இ - ள்.) ஒன்றுமுத லெட்டாறுகிய வெண்களோயூர்ந்து வரும் பத்தென்னு மெண் ஆனெடு சிவணிப் பகரமெய்யொன்று நிற்க மறறைய வெழுத்துக்க ளெல்லாங் கெடும்.

(வ - று.) ஒன்று + பத்து + ஐ = ஒருபானை, இருபானை, முப்பானை, நாற்பானை, ஐம்பானை, அறுபானை, பிறவுமன்ன. (எக)

ஒன்பதின் முன்னும் ஆன்வருதல்

உகக. ஒன்பது மாலெடு மொத்து நடக்கும்.

(இ - ள்.) ஒன்பதென்னு மெண்ணுப்பெயரும் ஆனைப் பெறும்.

(வ - று.) ஒன்பது + ஐ = ஒன்பானை. (எஉ)

சுட்டுமுதலாகிய ஆய்தப்பெயரும் யாதென்பெயரும்

உகஉ. ஆய்தச் சுட்டும் யாது மன்பெறும்
ஆவயி னாய்த மழியுஞ் சுட்டே.

(இ - ள்.) சுட்டுமுதலாகிய வாய்தவீறும், யாதெனவருங் குற்றிய லுகரவீறும் அன்சாரியைபெறும். ஆயிடைச் சுட்டு ஆய்தங்கெடும்.

(வ - று.) அஃது + ஐ = அதனை; இதனை; உதனை; யாதனை. (எக)

திசைப்பெயர்முன் ஏழனுருபு வருதல்

உகக. திசைப்பெயர் முன்வரு மேழ னுருபிற்
கின்னென் சாரியை யின்றியு மியலும்.

(இ - ள்.) திசைப்பெயர்க்கு முன்வரும் ஏழாம் வேற்றுமை யுருபிற்கு இன்சாரியை யின்றியும் வரும்.

(வ - று.) வடக்கின்கண், வடக்குக்கண் எனவரும். (எச)

க. அகர ஈறு

அகரச்சுட்டு முதலியவற்றின் முன் வல்லினம் வருதல்

உகச. அகரச் சுட்டு மாங்கவு முவமையும்
எனவென் னெச்சமு மிருவழி யினுமிகும்.

(இ – ள்.) அல்வழி வேற்றுமையினும், அகரச்சுட்டும், ஆங்க என்னுமுரையசைக்கிளவியும், உவமையுருபும், எனவென்னும் வினையெச்சமும், க, ச, த, பக்கள் வரின் மிக்குமுடியும்.

(வ - று.) அக்கொற்றன், ஆங்கக்கொண்டான், புலிபோலக் கொண்டான், கொள்ளெனக்கொண்டான். (எஅ)

வினையெச்சம் மிக்கு முடிதல்

உசுரு. வினையெஞ்சு கிளவியு மிகுமென மொழிப.

(இ - ள்.) வினையெச்சமொழிகளும் மிக்குமுடியும்.

(வ - று.) கூவப்போயினன்; செய்யப்போனன் எனவரும்.

(வி - ரை.)

''வினையெஞ்சு கிளவியும் உவமக் கிளவியும்
எனவென் எச்சமும் சுட்டின் இறுதியும்
ஆங்க என்னும் உரையசைக் கிளவியும்
ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே''

(தொல் - உயிர்மயங் - உ)

என்ற நூற்பாவில் உசுசு, உசுரு ஆகிய இரு நூற்பாக்களின் கருத்துக்கள் அடங்கி நிற்றல் காண்க. (எசு)

அகரச்சுட்டின் முன் மென்கணம் வருதல்

உசுசு. அகரச் சுட்டின்முன் ஞ, ந, மத் தோன்றிற்
றத்தமொற் றிடைமிகு மென்மனார் புலவர்.

(இ - ள்.) அகரச்சுட்டின் முன் ஞ, ந, மக்கள் வரின், தத்தம் மெய்களிடையின் மிக்குமுடியுமெனவறிக.

(வ - று.) அ + ஞாண் = அஞ்ஞாண்; அந்நூல்; அம்மணி எனவரும்.

(வி - ரை.)

''சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின்
ஒட்டிய ஒற்றிடை மிகுதல் வேண்டும்''

(தொல் - உயிர்மயங் - கூ)

என்பது தொல்காப்பியம். (எள)

அகரச்சுட்டின் முன் இடைக்கணம் வருதல்

உசுள. வயவரின் வகரம் வருமென மொழிப.

(இ - ள்.) அகரச்சுட்டின்முன், வ, யக்கள் வரின், வகர வொற்று இடையில் வரும்.

(வ - று.) அ + வனை = அவ்வனை, அ + யாழ் = அவ்யாழ்.

(வி - ரை.)

''யவமுன் வரினே வகரம் ஒற்றும்'' (உயிர்மயங்கியல் - ச)

என்பது தொல்காப்பியம். (எஅ)

அகரச்சுட்டின் முன் உயிர்க்கணம் வருதல்

உசுஅ. ஆவி வரினு மவ்வில னிலையும்.

(இ - ள்.) அகரச்சுட்டின் முன் உயிர்வரினும், வகரவொற்று இடையில் வரும்.

(வ - று.) அ + அடை = அவ்வடை; பிறவுமன்ன.

(வி - ரை.)

''உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது''

(உயிர்மயங்கியல் - இ)

என்பது தொல்காப்பியம். (எக)

செய்யுட்கண் அகரம் ஆகார மாதல்

உசுக. யாப்பினுள் அ, ஆ வாகு மென்ப.

(இ - ள்.) செய்யுளில் அகரம் ஆகாரமாகும்.

(வ - று.) அ + இடை = ஆயிடை எனவரும்.

(வி - ரை.)

''நீட வருதல் செய்யுளுள் உரித்தே''

(உயிர்மயங்கியல் - சு)

என்பது தொல்காப்பியம். (அ0)

சாவ என்பதில் இறுதி உயிர்மெய் கெடுதல்

உசஅ. சாவவென் மொழியீற் றுயிர்மெய்சா தலும்விதி[1].

(இ - ள்.) சாவவென்னும் வினையெச்சச் சொல்லின திறுதி மெய் கெடுதலுமாம்.

(வ - று.) சாவக்குத்தினன் = சாக்குத்தினன். (அக)

---

1. நன் - எழுத் - உயிரீற்று - கக.

அகர ஈற்றில் மிகாதன

உசக. வியங்கோ ளண்மை விளியு முவமையுஞ்
செய்த செய்யிய வெனுமீ ரேச்சமும்
அம்மவும் பலவு மிகாதியல் பாகும்.

(இ - ள்.) வியங்கோளும், அண்மை விளியும், உவமையும், செய்த வென்னும் பெயரெச்சமும், செய்யியவென்னும் வினை யெச்சமும், அம்மவென்னு முரையசைக் கிளவியும், பலவும் மிகாதி யல்பாம்.

(வ - று.) வாழிய கொற்ரு, ஐய போகேல், பால்போல் சொல், செய்த சாத்தன், செய்யிய போனுன் அம்ம கொற்ரு, பல குதிரை. (அக)

உரையசைச்சொல் நீண்டு வருதல்

உசஉ. அம்ம விறுதி நீட்டமும் வரையார்.

(இ - ள்.) அம்மவென்னு முரையசைக் கிளவியிறுதி நீட்ட மும் வரையாது கொள்வார்.

(வ - று.) அம்மா கொற்ரு.

(வி - ரை.)

"உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார்" (உயிர்ம - க0)

என்பது தொல்காப்பியம். (அங)

வாழிய என்பதின் இறுதி உயிர்மெய் கெடுதல்

உசங. வாழிய விறுதி கெடுதலு முரித்தே.

(இ - ள்.) வாழியவென்னும் வியங்கோளீ று கெடுதலு மாம்.

(வ - று) வாழியகொற்ரு, வாழிகொற்ரு எனவரும். (அச)

பலசில என்பன தம்முன் தாம் வருதல்

உசச. பலசில வெனுமிவை தம்முன் ரும்வரின்
இயல்பு மிகலும் அகர மேக
லகரம் றகர மாகலும் பிறவரின்
அகரம் விகற்ப மாகலு முளபிற.[1]

1. நன் - எழுத் - உயிரீற் - உ0.

(இ - ள்.) பலசிலவென்னும் பலவின்பெயர் தமக்குமுன்னர்த் தாம்வரின் இயல்பாதலும், மிகுதலும், அகரங்கெட லகரமெய் றகரமெய்யாதலும், பிறசொற்கள்வரின் அகரம் விகற்பமாதலுமுளவாம்.

(வ - று.) பலபல-பலப்பல, சிலசில-சிலச்சில, பற்பல-சிற்சில, பலமணி-பன்மணி, சிலமணி-சின்மணி. (அடு)

எய்திய தன்மேற் சிறப்பு விதி

உசடு. அவைதாம் பாவினுள் நீட்டமும் வரையார்.

(இ - ள்.) அப்பலவுஞ் சிலவுஞ் செய்யுளினீட்டமு நீக்காது கொள்வார் புலவர்.

(வ - று.) பலாம், சிலாம்.

(வி - ரை.)

"பலவற் றிறுதி நீடுமொழி யுளவே
செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான" (உயிர்ம - கக)

என்ற தொல்காப்பிய விதியைத் தழுவியது இந் நூற்பா. நீட்சியோடு அகரப் பேறும் கொள்க எனக் கூறி பலாஅம் சிலாஅம் என எடுத்துக் காட்டுவர் இளம்பூரணர். (அசு)

மரப்பெயர்

உசசு. வலிவரின் மரப்பெயர் மெலிமிகு மென்ப.

(இ - ள்.) மரப்பெயருக்கு முன்னர்க் க, ச, த, ப க்கள் வரின் தமக்கினமாகிய மெல்லெழுத்து மிக்குமுடியும்.

(வ - று.) விளங்கோடு. (அஎ)

மக என்னும் பெயர்

உசஎ. இன்சாரி யைமக வேற்கு மென்ப.

(இ - ள்.) மகவென்னுஞ்சொல் இன்சாரியை பெறும்.

(வ - று.) மகவின்கை. (அஅ)

உ. ஆகார ஈறு

உம்மை தொக்க இருபெயர்த் தொகைச்சொல்

உசஅ. எச்ச வும்மை யிருபெயர்த் தொகைச்சொற்
ககரச் சாரியை யுரித்தா கும்மே.

(இ - ள்.) உம்மை தொக்குநின்ற விருபெயர்த் தொகைச் சொற்கு அகரச்சாரியை யுரித்தாகும்.

(வ - று.) இராஅப் பகல்.

(வி - ரை.)

''உம்மை யெஞ்சிய இருபெயர்த் தொகைச்சொல்
மெய்ம்மை யாக அகரம் மிகுமே'' (உயிர்ம - உக)

என்ற தொல்காப்பியத்தைத் தழுவியது இந் நூற்பா வாகும். (அக)

ஆகார ஈற்றுச் சொற்கள்

உசகூ. ஆவு மாவு மழைப்பும் விளவு
மியாவும் பலவு மிகாதியல் பாகும்.

(இ - ள்.) ஆவென்னும் பசுப்பெயரும், மாவென்னும் பல பொருளொரு சொல்லும், விளிப்பெயரும், விளப்பெயரும், மியா வென்னு முன்னிலை யுரையசைக்கிளவியும், பலவையுணர்த்தும் பலவுமிகாதியல்பாகும்.

(வ - று.) ஆகுறிது, மாகுறிது, ஊராகொள், கேண்மியா கொற்ரு, உண்ணு குதிரைகள் எனவரும்.

(வி - ரை.) பலவும் என்பது அஃறிணைப் பன்மைப் பொருளை யுணர்த்தும் ஆகார ஈற்று முற்றுவினைச் சொல்லைக் குறிக்கும். (கூ0)

இதுவுமது

உஙo. ஓரெழுத்து மொழியுங் குறிற்கீ ழாவும்
அகரச் சாரியை பெறுமென மொழிப.

(இ - ள்.) ஓரெழுத் தொருமொழியும், ஒற்றிரண்டெழுத்தின் முன்னின்ற ஆவும் அகரச்சாரியை பெறும்.

(வ - று.) கா அக்கோடு, பலா அக்கோடு எனவரும்.

(வி - ரை.)

''குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்
அறியத் தோன்றும் அகரக் கிளவி'' (உயிர்ம - உச)

என்பது தொல்காப்பியம். (கக)

குறியதன் கீழ்வரும் ஆகார ஈற்றுச்சொல்

உருக. குறியதன் கீழாக் குறுகலு மதனே
கோ மேற்றலு மியல்புமாந் தூக்கின்[1].

(இ - ள்.) குற்றெழுத்துக்கு முன்னின்ற ஆ, அ ஆதலும் அவ்வகரத்தோடு உகரம் பெறுதலு மியல்பாதலுஞ் செய்யுட் கணும்.

(வ - று.) நிலா, நில, நிலவு எனவரும். (கூஉ)

நிலா என்னும் பெயர்

உருஉ. நிலாப்பெய ரின்னெடு நிலவுதல் வரையார்.

(இ - ள்.) நிலாவென்னும்பெயர் இன்சாரியை பெறுமென்க.

(வ - று.) நிலாவின் காந்தி எனவரும். (கூங)

இரா வென்னும் பெயர்

உருங. இராப்பெய ருக்கில வாமென மொழிப.

(இ - ள்.) இராவென்னும் பெயர்ச்சொல் இன்சாரியை பெறுவா மென்க.

(வ - று.) இராக்கொண்டான். (கூச)

மரப் பெயர்கள்

உருச. யாவும் பிடாவுந் தளாவு மெலிமிகும்.

(இ - ள்.) மரப்பெயராகிய யாவும், பிடாவும், தளாவும் மெல்லெழுத்து மிக்குமுடியுமென வறிக.

(வ - று.) யா அங்கோடு, பிடா அங்கோடு, தளா அங்கோடு.

(வி - ரை.)

"யாமரக் கிளவியும் பிடாவும் தளாவும்
ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே" (உயிர்ம - உஎ)

என்பது தொல்காப்பியம். (கூடு)

---

1. தன் - எழுத் - உயிரீற் - ஒஉ.

மேலதற்கோர் சிறப்பு விதி

உரு ரி. வல்லெழுத்து மிகினு மான மில்லை.[1]

(இ - ள்.) மேற்கூறிப்போந்த மரப்பெயர்கள் வல்லெழுத்து மிக்குமுடியினும் குற்றமில்லையா மென்க.

(வ - று.) யா அக்கோடு, பிடா அக்கோடு, தளா அக்கோடு. (கசு)

ஆ, மா என்னும் பெயர்கள்

உரு சு. ஆமா னகரமெய் யடையப் பெறுமே.

(இ - ள்.) ஆவென்னும் பெயரும், மாவென்னும் பெயரும், னகரச்சாரியை பெறும்.

(வ - று.) ஆன் கோடு, மான் கோடு. (கள)

ஆ என்பதற்குச் சிறப்பு விதி

உரு எ. [2]ஆவெற் றகரமொடு நிலையிட னுடைய.

(இ - ள்.) ஆமுன்னின்ற னகரமெய், அகரச்சாரியையோடு நிலைபெறுமிடனுடையனவாம்.

(வ - று.) ஆனெய் தெளித்து. (கஅ)

ஆமுன் பகர ஈ

உரு அ. ஆமுன் பகரவீ யினைத்தும்வரக் குறுகும்.

(இ - ள்.) ஆவென்னும் மொழிக்கு முன்னின்ற ஈகார பகரம், நாற்கணமும் வரின் ஈ, இய்யாம்.

(வ - று.) ஆப்பீகுறிது = ஆப்பிகுறிது; ஆப்பிநன்மை, ஆப்பிவலிது, ஆப்பியரிது.

(வி - ரை.)

"ஆன்முன் வரூஉம் ஈகார பகரம்
தான்மிகத் தோன்றிக் குறுகலு மூரித்தே" (உயிர்ம - நூக)

என்னும் தொல்காப்பிய விதியைத் தழுவியது இந் நூற்பா. (கக)

---

1. தொல் · எழுத்து - உயிரீற் - உஅ,
2. ,, ,, ,, நூO.

கூ. இகர ஈறு

இனி, அணி என்னும் பெயர்கள்

உடுக. இனியணி யிகரச் சுட்டுமொற் றிடைமிகும்.

(இ - ள்.) இனியென்னும் பெயரும், அணியென்னும் பெயரும், இகரச்சுட்டுப் பெயரும் ஒற்றிடைமிக்கு முடியும்.

(வ - று.) இனிக்கொண்டான், அணிக்கொண்டான், இக்கொற்றன். (கoo)

இன்றி, அன்றி என்னும் சொற்கள்

உசுo. யாப்பினு ளின்றியு மன்றியு முகரம்
ஆய்வரின் மிகாதியல் பாமென மொழிப.

(இ - ள்.) செய்யுட்கண் இன்றி, அன்றியென்னுங் குறிப்பு வினையெச்சமொழிகள் உகரமாகத் திரிந்துவரின் மிகாதியல்பா மென்க.

(வ - று.) 'நாளன்றுபோகி' (புறம் - கசச) உப்பின்று புற்கையுண்கமா கொற்கையோனே.

(வி - ரை.)

"அன்றி யின்றியென் வினையெஞ் சிகரம்
தொடர்பினுள் உகர மாய்வரின் இயல்பே" (உயிரீற் - உகூ)

என்பது நன்னூல். (கoக)

தூணி என்னும் பெயர்

உசுக. பதக்கு வரின்மிகுந் தூணிக் கிளவி.

(இ - ள்.) தூணியென்னு முகத்தலளவைப் பெயருக்குமுன் பதக்கென்னு முகத்தலளவைப் பெயர்வரி னொற்றிடை மிக்குமுடியு மென்க.

(வ - று.) தூணிப்பதக்கு. (கoஉ)

நாழி என்னும் பெயர்

உசுஉ. உரிவரி ஞழியி னீற்றுயிர் மெய்கெட
மருவும் டகரமாம் வல்லினப் புள்ளி.

(இ - ள்.) நாழியென்னு முகத்தலளவைப் பெயருக்கு முன் பதக்கென்னு முகத்தலளவைப் பெயர் வரின், நாழியீற்றுயிர் மெய்கெட வல்லொற்றுகிய டகர மெய் தோன்றும்.

(வ - று.) நாழி + உரி = நாடுரி எனவரும்.

(வி - ரை.)

"உரிவரு காலை நாழிக் கிளவி
இறுதி இகர மெய்யொடுங் கெடுமே
டகார ஒற்றும் ஆவயி னுண" (உயிர்ம - கூ அ)

என்பது தொல்காப்பியம். (கo ங)

பனி என்னும் பெயர்

உசுஙூ. இன்னு மத்தும் பனியோடு சிவணும்.

(இ - ள்.) பனியென்னுங் காலப்பெயர் இன்சாரியையும் அத்துச்சாரியையும் பெறுமென்க.

(வ - று.) பனியிற்கொண்டான், பனியத்துக்கொண்டான். (கo ச)

வளி என்னும் பெயர்

உசுசு. வளிப்பெயர்க் கிளவியு மவற்றே ரற்றே.

(இ - ள்.) வளியென்னும் பூதப்பெயர்க்கிளவியும் இன்சாரியையும் அத்துச்சாரியையும் பெறுமெனவறிக.

(வ - று.) வளியிற்கொண்டான், வளியத்துக்கொண்டான். (கo ஞ)

உதிமரக்கிளவி

உசுடு. உதியெனு மரமெலி மிகுமென மொழிப.

(இ - ள்.) உதியென்னு மரப்பெயர்க்கிளவி மெல்லெழுத்து மிக்கு முடியும்.

(வ - று.) உதி + கோடு = உதிங்கோடு. (கo சு)

புளிமரக்கிளவி

உசுசு. அம்முச் சாரியை யடையு மரப்புளி.

(இ-ள்.) புளியென்னும் மரப்பெயர்க்கிளவி யம்முச்சாரியை பெறுமென்க.

(வ - று.) புளி + கோடு = புளியங்கோடு. (சுoன)

சுவைப்புளி

உசுஎ. சுவைப்புளி முன்னின மென்மையுந் தோன்றும்.[1]

(இ - ள்.) சுவையையுணர்த்தும் புளியென்னும் பெயர் முன் றமக்கினமாகிய மெல்லெழுத்துந் தோன்றுமென்க.

(வ - று.) புளிக்கறி = புளிங்கறி எனவரும். (சுoஅ)

நாள்முன் வரும் தொழிற்பெயர்

உசுஅ. தொழிற்பெயர் வரின்நாள் ஆனெடு சிவணும்.

(இ - ள்.) நாளென்னுஞ்சொற்கு முன்றொழிற்பெயர்வரின் ஆன்சாரியை பெறும்.

(வ - று.) பரணியாற்கொண்டான். (சுoக)

ஈ. ஈகார ஈறு

இடக்கர்ப்பெயரும் முன்னிலைப்பெயரும்

உசுக. ஈகார பகரமூ நீயு மியல்பே.

(இ - ள்.) ஈகாரபகரமாகிய இடக்கர்ப்பெயரும், நீயென்னு முன்னிலையொருமைப்பெயரு மிகாதியல்பாம்.

(வ -று.) பீகுறிது, நீகுறியை. (சகo)

இடக்கர்ப்பெயர் இன்னது என்பது

உஎo. ஈகார பகர மிடக்கராய் வழங்கும்.

(இ - ள்.) ஈகார பகரமென்பது பீ யென்னுந் தகாத மொழியாம். (சகக)

மீயெனும் இடப்பெயர்

உஎக. மீயியல் பாதலு மெலிவலி மிகுதலும்
ஆகு மென்மலு ரறிந்திசி னோரே.

---

1. நன் · எழுத்து · உயிரீற் · உஇ.

(இ - ள்.) மீயென்னு மேலிடப்பெய ரியல்பா தலு மொரு கால் மெல்லெழுத்து மிகுதலும் ஒருகால் வல்லெழுத்து மிகு தலுமாம் என்று சொல்லுவ ரறிவுடையோர்.

(வ - று.) மீகண், மீந்தோல், மீத்தோல் எனவரும். (ககஉ)

ரு. உகர ஈறு

அதுமுன் அன்று வருதல்

உஎஉ. அன்றது முன்வரி னுவா கலும்ஐ
வரினுக ரங்கெடு தலுமாந் தூக்கின்.

(இ - ள்.) செய்யுளில் அதுவென்னுஞ் சுட்டுப்பெயருக்கு முன் அன்றென்னும் குறிப்பெச்சவினைவரின் ஆவாதலும், ஐ வரின் உகரங் கெடுதலுமாம்.

(வ - று.) அது + அன்று = அதான்று ; அது + ஐ = அதை எனவரும்.

(வி - ரை.)

''அன்றுவரு காலை ஆவா குதலும்
ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்
செய்யுள் மருங்கின் உரித்தென மொழிப'' (உயிர்ம - நிசு)

என்பது தொல்காப்பியம். (ககஙூ)

செரு, எரு என்னும் பெயர்கள்

உஎஙூ. செருவு மெருவு மம்மோடு சிவணும்.

(இ - ள்.) செருவென்னும் பெயரும், எருவென்னும் பெயரும், அம்முச்சாரியை பெறும்.

(வ - று.) செருவங்களம், எருவங்குழி. (ககச)

செரு என்பதற்குச் சிறப்பு விதி

உஎச. அம்மிறு மகரஞ் செருவயி னழியும்.

(இ - ள்.) முற்கூறியவற்றுள் அம்முச்சாரியை இறுதி மகரமெய் செருவிற் கெடும்.

(வ - று.) செருவக்களம். (ககஞ)

ஒடுமரக் கிளவி

உஎடு. ஒடுமரப் பெயர்உதி மரவிய னிலையும்.

(இ - ள்.) ஒடுவென்னு மரப்பெயர்க்கிளவி, உதியென்னு மரப் பெயரியல்பிற்றாய் மெல்லெழுத்து மிக்குமுடியும்.

(வ - று.) ஒடு + கோடு = ஒடுவங்கோடு. (ககசு)

ழகர வுகரம்

உஎசு. உகர ழகார நீடிட னுடைத்தே.

(இ - ள்.) ழகரமெய்யோடு கூடிய உகரம் நீடுமிடனுடைத்தாகும்.

(வ - று.) எழு + கள் = எழூஉக்கள் எனவரும்.

(வி - ரை.)

"ழகர உகரம் நீடிடன் உடைத்தே
உகரம் வருதல் ஆவயி னை" (உயிர்ம - கூக)

என்பது தொல்காப்பியம். (ககள)

சு. ஊகார இறுதி

உஎஎ. ஊகரா விறுதி முன்னிலை மொழியும்
வினையெஞ்சு கிளவியு மிகுமென மொழிப.

(இ - ள்.) ஊகாரவீற்று முன்னிலை வினைச்சொற்கு முன்னும் வினையெச்சச் சொற்கு முன்னுங் க, ச, த, பக்கள் வரின் மிக்குமுடியும்.

(வ - று.) உண்ணூக் கொண்டான், கைதூக் கொற்று. (ககஅ)

பூப்பெயர்

உஎஅ. பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்.[1]

(இ - ள்.) பூவென்னு மலர்ப்பெயர்க்கிளவி தமக்கின மாகிய மெல்லெழுத்தோடுந் தோன்றுமென்க.

(வ - று.) பூ + கொடி = பூக்கொடி; பூங்கொடி எனவரும். (ககக)

---

1. நன் - எழுத்து - உயிரீற் - கூ0.

ஊன் என்னும் பெயர்

உஎக. ஊனக ரத்தோடு மொழுகு மென்ப.

(இ - ள்.) ஊவென்னு மிறைச்சிப் பெயர்க்கிளவி, னகரச் சாரியையோடு நடக்கும்.

(வ - று.) ஊ + குறை = ஊன்குறை. (கூ0)

எய்தியதன்மேற் சிறப்பு விதி

உஅ0. அக்கொடு வருதலு மதனியல் பாகும்.

(இ - ள்.) அவ்வூவென்னும் பெயர்க்கிளவி அக்குச்சாரியை பெறுதலு மதனியல்பாகும்.

(வ - று.) ஊனக்குறை. (கூஉ)

ஆடூஉ, மகடூஉ என்னும் பெயர்கள்

உஅக. ஆடூஉ மகடூஉ வின்னெடு நிலையும்.

(இ - ள்.) ஆடூஉவென்னு மாண்பாற் படர்க்கைப்பெயரும், மகடூஉவென்னும் பெண்பாற் படர்க்கைப்பெயரும், இன்சாரியை பெறும்.

(வ - று.) ஆடூஉவின்கை, மகடூஉவின்கை. (கூஉ)

எ. ஏகார ஈறு

தேற்றேகாரம்

உஅஉ. ஏகாரத் தேற்ற மியல்பா கும்மே.

(இ - ள்.) தேற்றவேகாரத்துக்கு முன்வருகிற வல்லின மியல்பா மெனவறிக.

(வ - று.) அவனே கொண்டான். (கூஊ)

ஏ யென்னும் ஆயுதப் பெயர்

உஅங. எகரச் சாரியை யேயேற் கும்மே.

(இ - ள்.) ஏயென்னும் ஆயுதப்பெயர்க்கிளவி எகரச் சாரியை பெறுமென்க.

(வ - று.) ஏஎக் கொட்டில். (கூஎ)

சேயென் மரப்பெயர்

உஅச. சேமரம் ஒடுமரச் செய்கையி னியலும்.

(இ - ள்.) சேவென்னு மரப்பெயர், ஒடுவென்னு மரப்பெயரைப்போல மெல்லினமிகும்.

(வ - று.) சேங்கோடு. (கூடு)

சேவின் பசுப்பெயர்

உஅடு. ஆன்பெய ராயின்இன் னடையப் பெறுமே.

(இ - ள்.) சேவென்பது பசுவின் பெயராயின் இன்சாரியையடையப் பெறுமென்க.

(வ - று.) சேவின்கோடு. (கூசு)

அ. ஐகார ஈறு

விசை, ஞெமை, நமையென்னும் மரப்பெயர்கள்

உஅசு. விசைஞெமை நமையோடு விருக்கத் தியல்பே.

(இ - ள்.) மரப்பெயராகிய விசையும், ஞெமையும், நமையும் ஒடுவென்னும் மரப்பெயரைப்போல் மெல்லெழுத்து மிக்கு முடியும்.

(வ - று.) விசை+கோடு—விசையங்கோடு. ஞெமைங்கோடு; நமைங்கோடு. (கூஎ)

ஆவிரை, பனை, அரை யென்னும் மரப்பெயர்கள்

உஅஎ. ஆவிரை பனையரை யம்மோடு சிவணும்.

(இ - ள்.) ஆவிரையும் பனையும் அரையும் அம்முச்சாரியையைப் பெறுமென்க.

(வ - று.) ஆவிரங்கோடு, பனங்கோடு, அரையங்கோடு. (கூஅ)

மேலனவற்றிற்குச் சிறப்புவிதி

உஅஅ. அவற்றுள்,
ஆவிரை பனையிறு வையுயி ரழியும்.

(இ - ள்.) மேற்கூறிப் போந்தவற்றுள், ஆவிரை, பனையிறுதியாகிய ஐகார வுயிர் கெடும்.

(வ - று.) ஆவிரங்காய், பனங்காய். (கஉக)

பனைமுன் கொடி வருதல்

உஅகூ. பனைமுன் கொடிவரின் மிகுமென மொழிப.

(இ - ள்.) பனையென்னு மரப்பெயர்க்குமுன், கொடியென்னுஞ் சொல்வரின் மிக்குமுடியும்.

(வ - று.) பனைக்கொடி. (கஙo)

பனைமுன் அட்டு வருதல்

உகo. அட்டு வரினு வாகு மென்ப.

(இ - ள்.) பனையென்னும் பெயருக்குமுன் அட்டென்னுஞ் சொல்வரின் ஆகாரமாகத் திரியும்.

(வ - று.) பனாட்டு. (கஙக)

மழை யென்னும் பெயர்

உகக. இன்னெடு மழையெதிர்ந் தியலு மென்ப.

(இ - ள்.) மழையென்னுங் காற்காலப்பெயர் இன்சாரியை பெறும்.

(வ - று.) மழையிற்கொண்டான்.

(வி - ரை.) மழையென்னுஞ் சொல் அத்துச் சாரியையும் பெறும் என்பர் தொல்காப்பியர். (உயிர் - அடி) (கஙஉ)

கo. ஓகார ஈறு

ஐயப் பொருளில் வரும் ஓகாரம்

உகஉ. ஐயவோ வினவலி மிகாதியல் பாகும்.

(இ - ள்.) ஐயப்பொருண்மையையுடைய ஓகாரவினு மிகாது இயல்பாகுமென்க.

(வ - று.) யானேகொன்டேன். (கஙங)

வேட்கைமுன் அவா வருதல்

உகங. அவாவரின் வேட்கையீ றுவியு மெய்யும்
அழிந்து டகரமெய் ணகரவோற் றுகும்.

(இ - ள்.) ஆசைப்பெருக்கத்தை யுணர்த்து மவாவென்னுஞ் சொல்வரின் வேட்கையென்னு மொழியிறுதி ஐகார வுயிரும், ககர வொற்றுங்கெட்டு நடுநின்ற டகரமெய் ணகரவொற்றுமாகத் திரியும்.

(வ - று.) வேட்கை + அவா = வேணவா.

(வி - ரை.) வேட்கை - பொருள்கள் மேல் தோன்றும் பற்றுள்ளம். அவா - அவற்றைப் பெறவேண்டுமென மேன்மேல் நிகழும் ஆசை.

(தொல் - எழுத்து - உஅஅ - நச்சர் உரை.) (கஉச)

ஒழியிசை ஓகாரமும் மாறுகொள் எச்சமும்

உகூச. ஒழியிசை யோவு மாறுகொ ளெச்சமு
மிகாதியல் பாகு மென்மனோர் புலவர்.

(இ - ள்.) ஒழியிசையைத் தரும் ஓகாரமும், மாறுகொ ளெச்சமும் மிகாதியல்பாகும்.

(வ - று.) புற்றோ புதலோ. (கஉஎ)

கோ என்பதன் முன் இல் வருதல்

உகூடு. இல்லொடு கிளப்பி னியல்பா கும்மே.

(இ - ள்.) ஓ, இல்லென்னும் பெயரோடு புணரின் இயல்பாகும்.

(வ - று.) கோவில்.

(வி - ரை.)

''இல்லொடு கிளப்பின் இயற்கை யாகும்' (உயிர் - சுக)

என்பது தொல்காப்பியம். (கஉசு)

கo. ஔகார ஈறு

ஔகார ஈற்றுச்சொல்

உகூசு. ஔகார விறுதி மிகுதலும் உகரச்
சாரியை பெறுதலுந் தனக்குரித் தாகும்.

(இ - ள்.) ஔகார வீற்றுச்சொன் மிகுதலும், உகரச் சாரியை பெறுதலுமாம்.

(வ - று.) கௌவுக்கடிது. (கஉஅ)

உ. புள்ளியீறு

க. ஞகர ஈறு

ஞகர ஈற்றுத் தொழிற்பெயர்

உகூள. ஞகா னிறுதித் தொழிற்பெய ருகரம்
பெறுதலு மிகுதலும் பெற்றித் தாகும்.

(இ - ள்.) ஞகரமெய் யிறுதியாகிய தொழிற் பெயர்க்கு மூன் க, ச, த, ப க்கள்வரின் அல்வழி வேற்றுமையினும் உகரச் சாரியை பெறுதலும் மிகுதலும் தனக் குரித்தாமென்க.

(வ - று.) உரிஞ் + கடிது = உரிஞுக்கடிது. (கஉஅ)

மேலதற்கொரு சிறப்புவிதி

உகூஅ. ஞ, ந, ம, வ வரினும் உகரமொடு நிலையும்.

(இ - ள்.) ஞ, ந, ம, வ க்கள் வரினும், உகரச்சாரியை பெறுமென்க.

(வ - று.) உரிஞுஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது. (கஉக)

உ. நகர ஈறு

உகூக. உகரச் சாரியை யொடுவரு நகாரம்.

(இ - ள்.) நகரமெய் யிறுதியாகிய மொழி, உகரச்சாரியை பெறுமென வறிக.

(வ - று.) பொருநுக்கடிது. (கசஐ)

இதுவுமது

நூஐ. வேற்றுமைக் கண்ணக ரத்தோடு சிவணும்.

(இ – ள்.) வேற்றுமையாயின் அகரச்சாரியை பெறும்.

(வ - று.) பொருநக்கடுமை எனவரும். (கசக)

வெரிந் என்னும் சொல்

கூஐக. வெரிந் ஈறழிந்துமெல் லினமிகு மென்ப.

(இ - ள்.) வெரிந் என்னுஞ் சொல்லிறுதி கெட்டு மெல் லெழுத்து மிக்குமுடியும்.

(வ - று.) வெரிங்குறை.

(வி - ரை.) வெரிந் - முதுகு. (கசஉ)

சிறப்பு விதி

கூ0உ. வல்லின மிகுதலு மற்றத னியல்பே.

(இ - ள்.) முற்கூறிய வெரிந் என்னுஞ்சொல் வல்லெழுத்து மிக்கு முடிதலுமாம்.

(வ - று.) வெரிக்குறை. (கசகூ)

கூ. ணகர ஈறு

ணகரம் டகர மாதல்

கூ0ஙூ. ணகரமெய் டகரவோற் றுகத் திரியும்.

(இ - ள்.) க, ச, த, ப க்கள் வரின், ணகரமெய் டகரமெய் யாகத் திரியுமென்க.

(வ - று.) மண் + குடம் = மட்குடம். (கசச)

பொதுப் பெயர்

கூ0ச. ஆணும் பெண்ணு மிகாதியல் பாகும்.

(இ - ள்.) ஆணும்பெண்ணுமாகிய பொதுப்பெயரியல்பாம்.

(வ - று.) ஆண்கை, பெண்கை எனவரும். (கசஞ)

முரண் என்னும் சொல்

கூ0ஞ. இயல்பா தலுந்திரி தலுமுர ணியல்பே.

(இ - ள்.) முரணென்னுஞ்சொல் இயல்பாதலுந் திரிதலும் இயல்பாகுமென்க.

(வ - று.) முரண்கடுமை, முரட்கடுமை. (கசகூ)

ஆணென் மரப்பெயர்

கூ0கூ. ஆண்மர மாயி னம்மோடு சிவணும்.

(இ - ள்.) ஆணென்னுஞ்சொல் மரப்பெயராயின் அம்முச் சாரியையைபெறுமென்க.

(வ - று.) ஆணங்கோடு. (கசஎ)

விண் என்பதன் முன் தொழிற் பெயர்

கூ०எ. தொழிற்பெயர் வரின்விண் ணத்தோடு சிவணும்.

(இ - ள்.) விண்ணென்னும் இடப்பெயர்க்குமுன் தொழிற் பெயர் வரின் அத்துச்சாரியை பெறும்.

(வ - று.) விண்ணத்துக் கொட்கும். (கசஅ)

ணகர ஈற்றுத் தொழிற் பெயர்

கூ०அ. [1]தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல.

(இ - ள்.) தொழிற்பெயரெல்லாம் உகரச்சாரியை பெறும்.

(வ - று.) பண்ணுக்கடிது, உண்ணுக்கடிது. (கசக)

ணகர ஈற்றுக் கிளைப் பெயர்

கூ०க. இயல்பாங் கிளைப்பெய ரெல்லா மென்ப.

(இ - ள்.) கிளைப்பெயரெல்லாம் மிகாதியல் பாகும்.

(வ - று.) அமண்குடி, உமண்குடி. (கஙo)

உணவைக் குறிக்கும் எண்

கூ.கo. அல்வழி யுணவெண் டகர மாகும்.

(இ - ள்.) அல்வழிக்கண், உணவாகிய எண்ணென்னும் பெயர்ச்சொல் டகர மெய்யாகும்.

(வ - று.) எட்கோல்.

(வி - ரை.) எண் - எள். (கஙக)

ச. மகர ஈறு

கூ.கக. மகர விறுபெயர் மிகலுமீ றழிதலும்
ஆகும் வேற்றுமைக் கண்ணென மொழிப.

---

1. தொல் - எழுத் - புள்ளிமயங் - கக.

(இ - ள்.) மகரமெய்யிறுதியாகிய மொழிகள் வேற்றுமைக்கண் மிகுதலும் ஈறு கெடுதலுமாமெனவறிக.

(வ - று.) மரக்கோடு, மரநூல், மரவேர். (கஞிஉ)

இதுவுமது

நூகஉ. அ, ஆ வரினீற் றயனீ ளலுமாம்.

(இ - ள்.) அகர ஆகாரங்கள் வரின் ஈற்றயல் நீளலுமாமென்க.

(வ - று.) மரம் + அடி = மராடி, குளம் + ஆம்பல் = குளாம்பல்.

(வி - ரை.)

'அகர ஆகாரம் வரூஉங் காலை
ஈற்றுமிசை அகரம் நீடலு முரித்தே' (புள்ளி - கசு)

என்பது தொல்காப்பியம். (கஞிஊ)

மெல்லெழுத்துறழ்தல்

நூகஊ. மெல்லின முறழ்சில மொழிகளு முளவே.

(இ - ள்.) மெல்லெழுத்து உறழ்ந்து முடியுஞ்சொற்களும் சிலவுளவாம்.

(வ - று.) குளம் + கரை = குளங்கரை, குளக்கரை. (கஞிச)

இல்லாம் என்னும் மரப்பெயர்

நூகச. இல்லா மரமெனின் மெல்லெழுத்து மிகுமே.

(இ - ள்.) இல்லாம் என்னுஞ் சொல் மரப்பெயராயின் மெல்லெழுத்து மிக்குமுடியும்.

(வ - று.) இல்லாங்கோடு.

(வி - ரை.) இல்ல மரப்பெயர் என ஒதுவர் தொல்காப்பியர். (கஞிஎ)

மரம்

நூகடு. வேற்றுமை யல்வழி மெல்லெழுத் தாகும்.

(இ - ள்.) வேற்றுமையல்லாத அல்வழிக்கண் மெல்லெழுத் தாகுமென்க.

(வ - று.) மரம் + குறிது = மரங்குறிது. (கஞ்சு)

அகம் முனர்ச் செவி கை வருதல்

நூகசூ. அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடும்.[1]

(இ - ள்.) அகமென்னுஞ் சொற்குமுன், செவி, கை, என்னுஞ் சினைப் பெயர் வரின், நடுநின்ற ககரவொற்றும், அகர வுயிருங் கெடும்.

(வ - று.) அகம் + செவி = அஞ்செவி. அகம் + கை = அங்கை. என வரும். (கஞ்எ)

இலம் முன் படு வருதல்

நூகஎ. இலமுன் படுவரி னியல்பா கும்மே.

(இ - ள்.) இலமென்னுஞ் சொற்குமுன்னர்ப் படுவென்னுஞ் சொல்வரி னியல்பாம்.

(வ - று.) 'இலம்படு புலவர்.' (மலைபடு - நிஎசு) (கஞ்அ)

எண்ணுப் பெயர்

நூகஅ. எண்வரின் ஆயிரம் அத்தொடு சிவணும்.

(இ - ள்.) ஆயிரமென்னும் எண்முன், எண்ணுப்பெயர்கள் வரின் அத்துச்சாரியை பெறும்.

(வ - று.) ஆயிரத்தொன்று, ஆயிரத்திரண்டு, ஆயிரத்தைந்து. (கஞ்கூ)

இதுவுமது

நூகக. அளபொடு நிறையும் வரின்மிகு மென்ப.

(இ - ள்.) ஆயிரமென்னும் எண்முன், அளவுப்பெயரும் நிறைப்பெயரும் வரின் மிக்குமுடியும்.

(வ - று.) ஆயிரக்கலம், ஆயிரக்கழஞ்சு. (கசுஒ)

ஈம், கம், உரும்

நூஉ0. ஈம், கம், உரும் உக ரத்தொடு நிலையும்.

---

1. நன் - எழுத் - மெய்யீற். கக.

(இ - ள்.) ஈமும், கம்மும், உருமும் உகரச்சாரியை பெறு மென்க.

(வ - று.) ஈமுக்கடிது, கம்முக்கடிது, உருமுக்கடிது. (கசூக)

(வி - ரை.) ஈம் - சுடுகாடு. கம் - தொழில். உரும் - இடி.

மேலனவற்றிற்குச் சிறப்புவிதி

நூஉக. அவற்றுள்,
ஈம் கம் அக்கையு மேற்கு மென்ப.

(இ - ள்.) முற்கூறியவற்றுள், ஈமும், கம்மும் அக்குச்சாரி யையும் பெறும்.

(வ - று.) ஈமக்குடம், கம்மக்குடம். (கசூஉ)

நாட்பெயர்

நூஉஉ. அத்து மானு நாளோடு சிவணும்.

(இ - ள்.) நாளென்னுஞ்சொல், அத்துச்சாரியையும் ஆன் சாரியையும் பெறும்.

(வ - று.) மகத்தாற்கொண்டான். (கசூஊ)

ரு. னகர ஈறு

நூஉஎ. னகரம்வேற் றுமைக்கண் றகர மாகும்.

(இ - ள்.) வேற்றுமைக்கண், னகரமெய் க, ச, த, ப க்கள் வரின் றகரவொற்றாகத் திரியும்.

(வ - று.) பொற்குடம். (கசூச)

மன், சின், ஆன், ஈன்

நூஉச. மன்னுஞ் சின்னு மானு மீனும்
அன்ன வியல்பின வாமென மொழிப.

(இ - ள்.) மன், சின், ஆன், ஈன் ஆகிய நான்குபெயரும் முற்கூறியவாறே றகரமாகத் திரியுமென்க.

(வ - று.) அதுமற்கொண்கன் தேரே, காப்பும் பூண்டிசிற் கடையும் போகலி (அகம் - எ) ஆறகொண்டான், ஈற்கொண்டான் எனவரும்.

(வி - ரை.) ஆன் - அவ்விடம். ஈன் - இவ்விடம். ஊன் - உவ்விடம். (கசுஇ)

அவ்வயின் முதலியன

நூஉடு. சுட்டுமுதல் வயினும் வினாமுதல் வயினும்
அப்பண் பினவா மாயுங் காலே.

(இ - ள்.) சுட்டெழுத்தை முதலாகவுடைய வயினென்னு மொழியும், வினாவெழுத்தை முதலாகவுடைய வயினென்னு மொழியும் றகரமாகத் திரியும்.

(வ - றை.) அவ்வயிற்கொண்டான், இவ்வயிற்கொண்டான், உவ்வயிற்கொண்டான், எவ்வயிற்கொண்டான், யாவயிற்கொண்டான். (கசுஈ)

எகின் மரம்

நூஉசு. எகின்மர மாயின் அம்மோடு சிவணும்.

(இ - ள்.) எகினென்னுஞ் சொல் மரப்பெயராயின் அம் மூச்சாரியை பெறும்.

(வ - றை.) எகினங்கோடு. (கசுஎ)

குயின்

நூஉஎ. இருவழி யினுங்குயி னியல்பா கும்மே.

(இ - ள்.) அல்வழிவேற்றுமை இரண்டிடத்துங் குயி னென்னுஞ் சொல் மிகாதியல்பாகும்.

(வ - றை.) குயின்கால்.

(வி - ரை.) குயின் - மேகம். குயினுதல் - துளித்தல். குயின் என்பது பெயராகவும் வரும்; வினையாகவும் வரும். (கசுஅ)

மரம் அல் எகின்

நூஉஅ. மரமல் லெகின்மொழி வலிமெலி மிகுதலும்
அகரச் சாரியை யடையவும் பெறுமே.

(இ - ள்.) மரப்பெயரல்லாத எகினென்னுஞ் சொல் ஒருகால் வல்லினமும் ஒருகால் மெல்லினமும் மிகுதலும் அதனோ டகரச்சாரியை பெறுதலுமாம்.

(வ - று.) எகின்கால், எகினக்கால், எகினங்கால் எனவரும். (கசுக)

கிளாப்பெயர்

நூஉக. கிளாப்பெய ரேல்லா மிகாதியல் பாகும்.

(இ - ள்.) கிளாப்பெயர்க்கிளவிகளெல்லா மியல்பாகும்.

(வ - று.) எயின்குடி, எயின்சேரி எனவரும். (கஎ0)

மீன்

நூநூ0. மீன்வல் லெழுத்துறழ் வும்பெறு மென்ப.

(இ - ள்.) மீனென்னுஞ்சொல் வல்லெழுத்துறழ்ந்து முடியு மெனவறிக.

(வ - று.) மீன்கண் - மீற்கண். (கஎக)

தேன்

நூநூக. தேன்மொழி மெய்வரி னியல்பு மென்மை
மேவி னிறுதி யழிவும் வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலுமா மிருவழி.[1]

(இ - ள்.) அல்வழி வேற்றுமை இரண்டிடத்துந் தேன்னென்னுஞ் சொன்முன் மெய்யெழுத்துக்கள் வரின் இயல்பாதலும் மெல்லெழுத்துக்கள் வரின் ஈறுகெடுதலும் வல்லெழுத்துக்கள் வரின் ஈறுகெட்டு வலியுமெலியும் மிகலுமாம்.

(வ - று.) தேன்குடம், தேமலர், தேக்குடம், தேங்குடம். (கஎஉ)

தேன் முன் இருல்

நூநூஉ. இருல்வரி னியல்பா தலுமின் னடைதலும்
ஈறழிந் தீரண்டு தகரமெய் யோற்றலும்
மற்றத னியற்கையாம் வழுத்துங் காலே.

(இ - ள்.) தேனென்னுஞ்சொன்மு னிருலென்னுஞ் சொல் வரி னியல்பாதலும் இன்சாரியை பெறுதலு மிறுதிகெட்டு இரண்டு தகரவொற்றடைதலுமாமென்க.

(வ - று.) தேனிருல் ; தேனினிருல், தேத்திருல்.

---

1. தன் - எழுத் - மெய்யீற் - கக.

(வி - ரை.) தேன் + இருல் = தேத்திருல். ஈறு அழிந்து இரண்டு தகரவொற்றுப்பெற்றுத் தேத்திருல் என ஆயிற்று. தகரஒற்று இரட்டுதலைத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் மிகையினால் கொள்வர். (தொல் - புள்ளி - சக) (களக)

மின் பின் பன் கன்

கூகூகூ. மின்பின் பன்கன் ரூழிற் பெயரினைய
கன்னவ் வேற்று மென்மையோ டுறழும்.[1]

(இ - ள்.) மின்னும் பின்னும் பன்னும் கன்னும் உகரச் சாரியை பெறும், அவற்றுட் கன் அகரச்சாரியை பெற்று மெல் லெழுத் துறழ்ந்து முடியும்.

(வ - று.) மின்னுக்கடிது, பின்னுக்கடிது, பன்னுக்கடிது, கன்னுக் கடிது, கன்னத்தட்டு, கன்னந்தட்டு எனவரும்.

(வி - ரை.) மின் என்பது மின்னுதல் தொழிலையும், பின் என்பது பின்னுதல் தொழிலையும், பின்னிய கூந்தலையும், பன் என்பது சொல்லுதலையும், சொல்லையும், கன் என்பது கன்னர் தொழிலையும், கன்னரையும் குறிக்கும். (தொல் - எழுத் - புள்ளி - இ0. விளக்கவுரை.) (களச)

பொதுப்பெயர் முன் தந்தை வருதல்

கூகூச. தந்தை வரிற்பொதுப் பெயர்மொழி யிறுதியும்
வருமொழி யாதியு மடியு மென்ப.

(இ - ள்.) தந்தையென்னு முறைப்பெயர் வரின், பொதுப் பெயர் ஈறும் வருமொழி முதலுங்கெடும்.

(வ - று.) சாத்தன் + தந்தை = சாத்தந்தை எனவரும்.

(வி - ரை.)

'இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்
முதற்கண் மெய்கெட அகரம் நிலையும்
மெய்யொழித் தன்கெடும் அவ்வியற் பெயரே'

என்பது தொல்காப்பியம். இதனினும் இவ்வாசிரியர் கூறியுள்ள விதி எளிமையாயுள்ளது. (களஎ)

ஆதன், பூதன் என்பவற்றின் முன் தந்தை வருதல்

கூகூடு. ஆதனும் பூதனு மவ்வியல் பாதலும்
அவற்ரோடு தகர மாவியுங் கெடுதலும்
எனவிரு விதிகளு மேற்கு மென்ப.

---

1. நன் - எழுத் - மெய்யீற் - கச.

(இ - ள்.) ஆதனென்னும் பெயரும், பூதனென்னும் பெயரும், பொதுப் பெயரைப்போல கிலமொழியிறுதியும் வரு மொழி முதலுங்கெட்டு அவற்றோடிடை கின்ற தகரவொற்றும் உயிருங் கெடும்.

(வ - று.) ஆதன் + தந்தை = ஆந்தை; பூதன் + தந்தை = பூந்தை. (கஎசு)

இயற்பெயரும் சிறப்புப் பெயரும்

நூநூசு. அவ்வியற் பெயர்சிறப் படுக்குங் காலை
இவ்விரு விதிகளு மேலா தம்முறும்.

(இ - ள்.) அவ்வியற்பெயர் சிறப்புப் பெயரோடு புணருங் கால் இவ்விரண்டு விதிகளையும் பெறாது அம்முச்சாரியை பெறும்.

(வ - று.) கொற்று + கொற்றன் = கொற்றங்கொற்றன். (கஎஎ)

அழன்

நூநூஎ. அழனிறு கெடவலி யாயிடை மிகுமே.

(இ - ள்.) அழனென்னும் பெயரிறுதிகெட வல்லெழுத்து மிகும்.

(வ - று.) அழன் + குடம் = அழக்குடம்.

(வி - ரை.) அழக்குடம் · பிணக்குடம். (கஎஅ)

கோன், பேன், தான்

நூநூஅ. கோனும் பேனுந் தானு மியல்பே.

(இ - ள்.) கோனென்னும் பெயரும் பேனென்னும் பெயரும் தானென்னும் பெயரு மிகாதியல்பாம்.

(வ - று.) கோன்றந்தை, பேன்றந்தை, தான்றந்தை. (கஎக)

தான், யான்

நூநூக. தான்முதல் குறுகலும் யானென் னகலும்
ஆகு மல்வழி யல்லாக் காலை.

(இ - ள்.) தானென்னும் படர்க்கை யொருமைப் பெயர் நெடுமுதல் குறுகலும், யானென்னுந் தன்மை யொருமைப் பெயர் சென்னகத் திரிதலுமாமெனவறிக.

(வ - று.) தான் + கை = தன்கை; யான் + கை = என்கை எனவரும். (கஅ0)

இதுவுமது

நூசo. குறுகலுந் திரிதலும் அல்வழிக் கிலவே.

(இ - ள்.) அல்வழிக்கண் மேற்கூறிய விரண்டு பெயரும் நெடுமுதல் குறுகலும் என்னுகத் திரிதலுமிலவாம்.

(வ - று.) யான்குறியேன், தான்பெரியன். (கஅக)

முன்றில்

நூசக. முன்னெடு சிவணின் முதலிலோர் றவ்வுறும்.

(இ - ள்.) முன்னெடுபுணரின், இன்முதலிலொரு றரக வொற்றுத் தோன்றும்.

(வ - று.) முன் + இல் = முன்றில். (கஅஉ)

பொன்

நூசஉ. பொருளெனப் பெயர்பெறும் பொன்னிறு கெடவோரு லகார மகாரமுந் தோன்று மென்ப.

(இ - ள்.) பொருளென்று பெயர்பெற்ற பொன்னிறுதி கெட ஒரு லகரவொற்றும் மகரமெய்யுந் தோன்றும்.

(வ - று.) பொன் + படை = பொலம்படைப் பொலிந்த. (மலைபடு - இளச)

(வி - ரை.) லகாரம் மகாரம் எனப் பொது வகையாற் கூறினு ரேனும் லகாரத்தை உயிர் மெய்யாகவும், மகாரத்தை ஒற்றாகவும் கொள்க. உரையில் லகரவொற்று எனக் குறித்திருப்பது பொருத்தம் இல்லை. (கஅஊ)

சு. யகர ஈறு

நூசஙு. வேற்றுமை யல்வழி யகரவீ றியல்பே.

(இ - ள்.) அல்வழிக்கண் யகரமெய்யிறுதியாகிய சொற் களுக்கு முன் வருகிற க, ச, த, ப க்கள் மிகாதியல்பாகும்.

(வ - று.) நாய்குறிது, நாய்சிறிது, நாய்தீது, நாய்பெரிது. (கஅச)

தாய்

நூசச. இயல்பாங் தாய்வேற் றுமைவழி யேண்ப.

(இ - ள்.) வேற்றுமைக்கண் தாயென்னு முறைப்பெயர் மீகாது இயல்பாகுமென்க.

(வ - று.) தாய்கை.

(வி - ரை.)

'தாயென் கிளவி இயற்கை யாகும்' (புள்ளி - சுகூ)

என்பது தொல்காப்பியம். (கஅஙி)

மகன்முன் தாய் வருதல்

நூசஞ. மிகுமகன் முய்ப்பினர் மேவுங் காலை.

(இ - ள்.) தாயென்னு மொழிக்குப்பின் மகனென்னுஞ் சொல்வரின் மிக்குமுடியும்.

(வ - று.) மகன்முய்க்கலாம்.

(வி - ரை)

'மகன்வினை கிளப்பின் முதனிலை யியற்றே' (புள்ளி - சுச)

என்பது தொல்காப்பியம். (கஅசு)

யகரத்தின்முன் மெல்லினம் உறழ்தல்

நூசசு. மெல்லினம் உறழ்தரும் மொழிகளு முளவே.

(இ - ள்.) மெல்லெழுத்துக்கள் உறழ்ந்து முடியுஞ் சொற்களு முளவாமென்க.

(வ - று.) வேய்க்குறை - வேய்ங்குறை. (கஅள)

வெதிர் முதலிய மரப்பெயர்கள்

நூசள. வெதிரார் பீர்சார் மெல்லெழுத்து மிகுமே.

(இ - ள்.) வெதிரும், ஆரும், பீரும், சாரும் மெல்லெழுத்து மிக்குமுடியும்.

(வ - று.) வெதிர்ங்கோடு, ஆர்ங்கோடு, பீர்ங்கோடு, சார்ங்கோடு எனவரும்.

(வி - ரை)

'ஆரும் வெதிருஞ சாரும் பீரும்
மெல்லெழுத்து மிகுதல் மெய்பெறத் தோன்றும்'
(புள்ளி - கூஅ)

என்பது தொல்காப்பியம் (கஅஅ)

பீர்

கூசஅ. அவற்றுள்,
பீரங் கிளவி யம்மொடுஞ் சிவணும்.

(இ - ள்.) மேற்கூறியவற்றுள் பீரென்னுஞ் சொல் அம்முச் சாரியையும் பெறும்.

(வ - று.) பீரங்கோடு.

(வி - ரை.)

'பீரென் கிளவி அம்மொடு சிவணும்' (புள்ளி - எக)

என்பது தொல்காப்பியம். (கஅகூ)

சார்

கூசகூ. காழ்வரிற் சார்மிகுங் கருதுங் காலே.

(இ - ள்.) சாரென்னுஞ்சொல் காழென்னுஞ் சொல்லொடு புணரின் மிக்குமுடியும்.

(வ - று.) சார்க்காழ்.

(வி - ரை.)

'சாரென் கிளவி காழ்வயின் வலிக்கும்' (புள்ளி - சுகூ)

என்பது தொல்காப்பியம்.

சார்க்காழ் - சார் மரத்தினது விதை. (ககo)

எ. லகர ஈறு

கூடுo. லகாரம்வேற் றுமைக்கண் றகர மாகும்.

(இ - ள்.) வேற்றுமைக்கண், லகரமெய் றகரமொற்றுகத் திரியுமென்க.

(வ - று.) கல் + குறிது = கற்குறிது. (ககக)

லகர ஈற்றின்முன் மென்கணம் வருதல்

நூறுக. [1]மெல்லெழுத் தியையி னகர மாகும்.

(இ - ள்.) மெல்லெழுத்துக்களோடு புணரின், னகர மெய் யாகத் திரியுமென்க.

(வ - று.) கன்ஞெரி, கன்முரி. (ககூஉ)

நெட்டெழுத்தின் முன்வரும் லகரம்

நூறுஉ. நெட்டெழுத் திம்ப ரியல்பா கும்மே.

(இ - ள்.) நெட்டெழுத்துக்கு முன்னின்ற லகரமெய் மிகா இயல்பாகுமென்க.

(வ - று.) பால்கடிது. (ககஙூ)

லகரத்தின்முன் தகரம்

நூறுங. தகரம் வரும்வழி தனிநிலை யாகும்.

(இ - ள்.) அல்வழிக்கண், தகரமெய் முதன்மொழியாக வரின் றகரமாதலே யன்றி ஆய்தமாகவும் திரியுமென்க.

(வ - று.) கற்றீது - கஃறீது. (ககஙு)

அல்வழி முடிபு

நூறுச. அல்வழி யெல்லாம் உறழு மென்ப.

(இ - ள்.) அல்வழிக்க ணெல்லாத்திரிபும் வல்லெழுத்துக் களோ டுறழ்ந்து முடியும்.

(வ - று.) கல் + குறிது = கற்குறிது, வில் + குறிது = விற்குறிது. (ககஙி)

நெல், செல், கொல், சொல்

நூறுடு. நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லும்
அல்வழி யானும் றகர மாகும்.[2]

---

1. தொல் - புள்ளி - எஉ.
2. நன் - எழுத் - மெய்யீற் - உகூ.

(இ - ள்.) நெல், செல், கொல், சொல் நான்கு மொழியும் அல்வழிக்கண்ணும் றகரமாகத் திரியும்.

(வ - று.) நெற்காய்ந்தது, செற்கடிது, கொற்கடிது, சொற்கடிய. (ககக)

இல் என்னும் சொல்

கூருசு. இன்மை யுணர்த்து மில்லென் கிளவிக்
கைகாரம் வரும்வழி யியல்பொடு மிகலும்
ஆகாரம் வரும்வழி மிகலுமாம் வேற்றுமை.

(இ - ள்.) வேற்றுமைக்க ணில்லாமையை யுணர்த்தும் இல்லென்னுஞ்சொல ஐகாரச்சாரியை பெறுங்கால் இயல்பாதலு மிகுதலு மாகாரச்சாரியை பெறுங்கால் மிகுதலுமாமென்க.

(வ - று.) இல்லைபொருள் ; இல்லைப்பொருள்; இல்லாப்பொருள். (ககள)

வல்

கூருள. வல்லுக ரத்தோடு வருமென மொழிப.

(இ - ள்.) வல்லென்னுஞ் சூதாடு கருவிப்பெயர் உகரச் சாரியை பெறுமென்க.

(வ - று.) வல்லுக்கடிது. (ககஅ)

வல் என்பதன் முன் பலகையும் நாயும்

கூருஅ. பலகையு நாயும் வரூஉங் காலை
அகரச் சாரியை யடையு மென்ப.

(இ - ள்.) வல்லென்னும் மொழிக்குமுன், பலகையென்னும் பெயரும், நாயென்னும் பெயரும் வந்துபுணரின் அகரச் சாரியை பெறும்.

(வ - று.) வல்லப்பலகை ; வல்லநாய். (ககக)

ஆலும் வேலும்

கூருக. ஆலும் வேலு மம்மொடு சிவணும்.

(இ - ள்.) மரப்பெயராகிய ஆலென்னு மொழியும் வேலென்னு மொழியும் அம்முச் சாரியை பெறும்.

(வ - று.) ஆலங்கோடு, வேலங்கோடு. (உ00)

பூல்

நூசூ0. பூலு மம்மொடு போதுவ தியல்பே.

(இ - ள்.) பூல் என்னுஞ் சொல்லும் அம்முச்சாரியை பெறு மென்க.

(வ - று.) பூலங்கோடு. (உ0க)

தொழிற் பெயர்

நூசூக. தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல.[1]

(இ - ள்.) தொழிற்பெய ரெல்லாம் உகரச்சாரியை பெறு மெனவறிக.

(வ - று.) புல் + கடிது = புல்லுக்கடிது. (உ0உ)

வெயில்

நூசூஉ. அத்து மின்னு மடையும் வெயிலே.

(இ - ள்.) ஒளியை யுணர்த்தும் வெயில் என்னும் பெயர் அத்துச்சாரியையும் இன்சாரியையும் பெறும்.

(வ - று.) வெயிலத்துக்கொண்டான், வெயிலிற்கொண்டான் (உ0ங)

அ. வகர ஈறு

அவ், இவ், உவ்

நூசூங. வவ்விறு சுட்டிற் கற்றறல் வழியே.[2]

(இ - ள்.) வகரமெய்யீறாகிய சுட்டுப்பெயர்கள் அற்றுச் சாரியை பெறுமென்க.

(வ - று.) அவற்றை, இவற்றை, உவற்றை எனவரும் (உ0ச)

இதுவுமது

நூசூச. ஆய்த மாகு மல்வழி யான.

---

1. தொல் - எழுத் - புள்ளி - அக.
2. நன் - எழுத்து - உருபு - கக.

(இ - ள்.) அல்வழிக்க ணுய்தமாகத் திரியும்.

(வ - று.) அவ்கடிய = அஃகடிய, இஃகடிய, உஃகடிய.

(வி - ரை.)

'வேற்றுமை யல்வழி ஆய்த மாகும்' (புள்ளி - அச)

என்பது தொல்காப்பியம். (உoஇ)

இதுவுமது

நூசுடு. மேல்லெழுத் தியையின் மெல்லெழுத் தாகும்.

(இ - ள்.) மெல்லெழுத்துக்கள் வந்துபுணரின் அவ்வெழுத் தாகத் திரியும்.

(வ - று.) அவ் + ஞாண் = அஞ்ஞாண், இஞ்ஞாண், உஞ்ஞாண், அம்மணி, அந்நூல்.

(வி - ரை.)

'மெல்லெழுத் தியையின் அவ்வெழுத் தாகும்' (புள்ளி - அடு)

என்பது தொல்காப்பியம். (உoசு)

இதுவுமது

நூசுசு. இடையு முயிரும் வரினியல் பாகும்.

(இ - ள்.) இடையெழுத்தும் உயிரெழுத்தும் வந்து புணரின் இயல்பாம் என்க.

(வ - று.) அவ்யாழ், இவ்யாழ், உவ்யாழ், அவ்வடை, இவ்வாடை. (உoஎ)

தெவ்

நூசுஎ. தேவ்வேன் மொழியே தொழிற்பெய ரற்றே
மவ்வரின் வஃகான் மவ்வு மாகும்.[1]

(இ - ள்.) தெவ்வென்னுஞ்சொல் உகரச்சாரியை பெறும். மகரமெய்வரின் வகரமெய் மகரமெய்யாகும்.

(வ - று.) தெவ்வுக்கடிது, தெம்மன்னர். (உoஅ)

---

1. நன் - எழுத்து - மெய்யீற் - கூக.

கூ. முகர ஈறு

சிறப்பு முகரம்

கூகூ.அ. சிறப்பு முகரமெய் யிருவழி யினுமிகும்.

(இ - ள்.) சிறப்பாகிய முகரவொற்று அல்வழிவேற்றுமை யினுமிகும்.

(வ - று.) கீழ்ச்சாதி, பூழ்க்கால் எனவரும். (உ0க)

கீழ்

கூகூக. டகார மாகும் வேற்றுமைப் பொருட்கே.

(இ – ள்.) வேற்றுமைக்கண் டகரமெய்யாகத் திரியு மென்க.

(வ - று.) கீழ் + திசை = கீட்டிசை எனவரும். (உக0)

திகழ், சோழ என்பன

கூஎ0. தநவரின் டணவா மென்மனூர் புலவர்.

(இ - ள்.) தகரம்வரின் டகரமாகவும், நகரம்வரின் ணகர மாகவுந் திரியும்.

(வ - று.) திகழ் + தசக்கரம் = திகடசக்கரம்; சோழ + நாடு = சோணாடு.

(வி - ரை.) திகழ் + தசக்கரம் = திகட சக்கரம், பத்துத் திருக் கரங்கள் என்பது பொருள். இவ்விதி தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இரு நூல்களிலும் இல்லை எனினும் கந்தபுராணத்தில் இதற்கேற்ற எடுத்துக்காட்டு உளது. அது வருமாறு :

"திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்"

(கந்தபு - விநாயகர் காப்பு) (உகக)

தாழும் கோலும்

கூஎக. தாழ்முன் கோல்வரி னக்கோடு சிவணும்.

(இ - ள்.) தாழென்னுஞ் சொற்குமுன், கோலென்னுஞ் சொல்வரின் அக்குச் சாரியை பெறும்.

(வ - று.) தாழ் + கோல் = தாழக்கோல். (உகஉ)

தமிழ்

கூஎஉ. தமிழு மவற்றே ரற்று கும்மே.

(இ - ள்.) தமிழென்னு மொழியும் அக்குச் சாரியை பெறும்.

(வ - று.) தமிழ் + கூற்று = தமிழக்கூற்று.

(வி - ரை.) தமிழ் என்பது அக்குச் சாரியை பெறும் என்பர் தொல் காப்பியர். (தொல் எழுத் - கஅஎ). அகரச் சாரியை பெறும் என்பர் நன்னூலார். (நன் - உஉஇ). இவர் தொல்காப்பியத்தைத் தழுவி யுள்ளார். (உகக)

குமிழ்

கூஎஊ. குமிழென் கிளவி யம்மொடு சிவணும்.

(இ - ள்.) குமிழென்னுஞ்சொல் அம்முச் சாரியை பெறும்.

(வ - று.) குமிழ் + கோடு = குமிழங்கோடு. (உகச)

பாழ்

கூஎச. பாழென் கிளவி மெல்லெழுத் தறழும்.

(இ - ள்.) பாழென்னுஞ் சொல் மெல்லெழுத் துறழ்ந்து முடியும்.

(வ - று.) பாழ் + கிணறு = பாழ்ங்கிணறு. (உகஇ)

ஏழ்

கூஎடு. ஏழென் கிளவி யன்னொடு சிவணும்.

(இ - ள்.) ஏழென்னும் எண்ணுப்பெயர் அன்சாரியை பெறும்.

(வ - று.) ஏழ் + காயம் = ஏழன்காயம். (உகசு)

ஏழின்முன் அளவு, நிறை முதலியன

கூஎசு. எண்ணிறை யளவும் வரூஉங் காலை
குறுகலு முகரம் வருதலு முரிய.

(இ - ள்.) ஏழென்னு மெண்ணுப் பெயர்க்குமுன் எண்ணுப் பெயரும், நிறைப் பெயரும், அளவுப் பெயரும் வரின் நெடுமுதல் குறுகலும் உகரச்சாரியை வருதலுமாம்.

(வ - று.) ஏழ் + மூன்று. = ஏழுமூன்று ; ஏழுகழஞ்சு ; ஏழுகலன் என வரும். (உகஎ)

ஏழின்முன் ஆயிரம்

நூஎஎ. ஆயிரம் வரிற்கெடு முகரச் சாரியை.

(இ - ள்.) ஆயிரமென்னு மெண்ணுப்பெயர் வரின் உகரச் சாரியை கெடும்.

(வ - று.) ஏழாயிரம். (உகஅ)

கீழின்முன் வல்லினம்

நூஎஅ. கீழின்முன் வன்மை விகற்பமு மாகும்.[1]

(இ - ள்.) கீழென்னுந் திசைப்பெயர்முன் வருகிற வல் லெழுத்து விகற்பமுமாகும்.

(வ - று.) கீழ் + குலம் = கீழ்க்குலம். (உகக)

கஅ. ளகர ஈறு

ளகரத்தின்முன் வல்லினம்

நூஎகூ. ளகரம் டகரமாம் வேற்றுமைப் பொருட்கே.

(இ - ள்.) வேற்றுமைக்கண், க, ச, த, ப க்கள் வரின் ளகர மெய் டகரவொற்றாகத் திரியும்.

(வ - று.) முள் + குறை = முட்குறை. (உஉ0)

ளகரத்தின் முன் மெல்லினம்

நூஅ0. மெல்லெழுத் தியையின் ணகர மாகும்.[2]

(இ - ள்.) மெல்லெழுத்து வந்து புணரின் ணகாரமாகும்.

(வ - று) முள் + மரம் = முண்மரம். (உஉக)

---

1. நன். எழுத் - மெய்யீற் - உகூ.
2. தொல் - எழுத் - புள்ளி - கஅஉ.

ளகரத்திற்கு அல்வழி முடிபு

ஈஅக. அல்வழி யெல்லா முறழ்வா கும்மே.

(இ - ள்.) அல்வழிக்கண் உறழ்ந்து முடியும்.

(வ - று.) முள் + கடிது = முட்கடிது. (உஉஉ)

ளகரத்தின் முன் தகரம்

ஈஅஉ. தகரம் வரும்வழி தனிநிலை யாகும்.

(இ - ள்.) தகரவொற்று வரின் ஆய்தமாகத் திரியுமென்க.

(வ - று.) முள் + தீது, முஃடீது எனவரும்.

(வி - ரை.)

'ஆய்த நிலையலும் வரைநிலை யின்றே
தகரம் வரூஉங் காலை யான' (புள்ளி - க0ச)

என்பது தொல்காப்பியம். (உஉஈ)

நெடில் முன் ளகரம்

ஈஅஊ. இயல்பா நெடுமைமுன் னேன்மனூர் புலவர்.

(இ - ள்.) நெடுமைக்கு முன்னின்ற ளகரமெய் யியல்பாம்.

(வ - று.) கோள்கடிது எனவரும். (உஉச)

தொழிற் பெயர்

ஈஅச. தொழிற்பெய ரெல்லாந் தொழிற் பெயரில.[1]

(இ - ள்.) தொழிற்பெய ரெல்லாம் உகரச்சாரியை பெறும்.

(வ - று.) துள் + கடிது = துள்ளுக்கடிது. (உஉஎ)

இருள்

ஈஅரு. இன்னு மத்து மிருளோடு சிவணும்.

(இ - ள்.) இருளென்னுங் காலப்பெயர், இன்சாரியையும் அத்துச்சாரியையும் பெறுமெனவறிக.

---

1. தொல் · எழுத் · புள்ளி · க0சு.

(வ - று.) இருளிற் கொண்டான், இருளத்துக் கொண்டான்.
(உஉசு)

வள்ளும் புள்ளும்

நூ.அசு. வள்ளும் புள்ளு முகரமொடு சிவணும்.

(இ - ள்.) வள்ளென்னும் பெயரும், புள்ளென்னும் பெயரும் உகரச்சாரியை பெறும்.

(வ - று.) வள்ளுக்கடிது, புள்ளுக்கடிது எனவரும்.

(வி - ரை.)

'புள்ளும் வள்ளும் தொழிற்பெய ரியல' (புள்ளி - கஅ)

என்பது தொல்காப்பியம். (உஉஎ)

குற்றியலுகரம் வரும் இடம்

நூ.அஎ. ஈரெழுத் தொருமொழி யிடைத்தொட ருயிர்த்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்ரெடர் மென்ரெடர்
ஆயிரு மூன்றே யுகரங் குறுகிடன்.

(இ - ள்.) இரண்டெழுத்தொரு மொழியும், இடைத் தொடர் மொழியும், உயிர்த்தொடர் மொழியும், ஆய்தத்தொடர் மொழியும், வன்ரெடர்மொழியும், மென்ரெடர் மொழியுமாகிய ஆறுமே உகரம் தன்மாத்திரையிற் குறுகுமிடமாம்.

(வி - ரை.)

'ஈரெழுத் தொருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்ரெடர் மென்ரெடர்
ஆயிரு மூன்றே உகரம் குறுகிடன்' (குற்றிய - க)

என்பது தொல்காப்பியம். (உஉஅ)

நெடிற்ரெடர்க் குற்றியலுகரம்

[1]நூ.அஅ. அவற்றுள்,
ஈரெழுத் தொருமொழி யிடைத்தொட ராகா.

(இ - ள்.) மேற்கூறிப் போந்தவற்றுள் இரண்டுமெய்கள் தொடர்ந்த மொழியிடைத்தொடர்க் குற்றியலுகரம் ஆகாவாம்.

---

1. தொல் - எழுத் - குற்றிய - உ.

(ல · மு.) பார்க்கு.

(வி - ரை) இத்தொல்காப்பிய நூற்பாவிற்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் வெவ்வேறுக உரைகாண்பர். அது வருமாறு :

தொடர் மொழிக் குற்றுகரங்களுள் ஈரொற்றுக்கள் இடையே தொடர்ந்து வருங்கால், அவற்றுள் முன்னையது இடையெழுத்தாக இருப்பின் அதுகொண்டே இடைத்தொடர்க் குற்றுகரம் என்றல் கூடாது ; அதன்பின் வரும் வல்லெழுத்துக்களையோ அன்றி மெல்லெழுத்துக்களையோ கொண்டுதான் வன்றொடர்க் குற்றுகரம் என்றும், மென்றொடர்க் குற்றுகரம் என்றும் பெயர் பெறும் என்பது இளம்பூரணர் கருத்தாகும்.

தொடர்மொழிக் குற்றுகரங்களுள் ஈரொற்றுக்கள் இடையே தொடர்ந்துவரின், அவற்றுள் முதலொற்று இடையின ஒற்றுக இருப்பின், அதற்குப் பின்வரும் ஒற்று இடையினமாக இராது ; வல்லினமாகவோ அல்லது மெல்லினமாகவோ தான் இருக்கும் என்பர் நச்சினார்க்கினியர்.

ஆர்க்கு, ஈர்க்கு என்பனவற்றில், இடையில் வந்த ஈரொற்றுக்களில் முன்னையன இடையினமாக இருக்கப் பின்னையன வல்லினமாதலையும், நொய்ம்பு, மொய்ம்பு என்பனவற்றில், இடையில் வந்த ஈரொற்றுக்களில் முன்னையன இடையினமாக இருக்கப் பின்னையன மெல்லினமாதலையும் காண்க.

ஆயினும் இக்கருத்து ' யரழ என்னும் மூன்றும் முன் ஒற்றக் கசதப ங ஞ ந ம ஈரொற் றுகும் ' என்னும் நூற்பாவிலேயே பெறப்படுதலின் இது பொருந்தாது: ஆதலின் இளம்பூரணர் கருத்தே இந் நூற்பாவிற்குப் பொருத்தம் உடைத்தாகும்.

(தொல் - எழுத்து - இளம் - ச0அ விளக்கவுரை) (உஉசு)

குற்றியலுகரம் தன்மாத்திரையிற் குறுகாமை

சுஉசுக. இருவழி மருங்கினுங் குற்றிய லுகரம்
எல்லாங் குறுகா தென்மனார் புலவர்.

(இ - ள்.) அல்வழி வேற்றுமையினும் அறுவகைக் குற்றிய லுகரமும் தன்மாத்திரையிற் குறுகாவாம்.

(வி - ரை.)

' அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா இறுதியும் உகரம் நிறையும்' (குற்றிய - கூ)

என்ற தொல்காப்பியத்தைத் தழுவியது இந்நூற்பாவாகும். இதற்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் வெவ்வேறுக உரைகாண்பர். அது வருமாறு :

அறுவகைக் குற்றுகரங்களும் தனிமொழிக்கண் வருங்கால் குறுகி அரைமாத்திரையும், அவை புணர்மொழிக்கண் வருங்கால் குறுகாது

ஒரு மாத்திரையும் பெற்று நிற்கும் என்பது இளம்பூரணர் கூறும் பொருளாகும். நச்சினார்க்கினியர் 'உகரம் நிலையும்' எனப் பாடம் ஒதி அறுவகைக் குற்றுகரங்களும் தனிமொழியில் நிற்குங்கால் அரை மாத்திரை பெற்றது போலவே, புணர்மொழிக்கண் வரினும் அவ்வரை மாத்திரை பெற்றே நிற்கும் எனப் பொருள் கூறி இளம்பூரணர் கருத்தை மறுப்பர்.

எனவே 'நாகு' என்ற விடத்தும், 'நாகு கடிது' என்றவிடத்தும் உகரம் அரை மாத்திரையே பெறும் என்பது நச்சினார்க்கினியர் கருத்தாகின்றது. 'நாகு' என்ற விடத்து உகரம் அரை மாத்திரையும், 'நாகு கடிது' என்ற விடத்து ஒரு மாத்திரையும் பெறும் என்பது இளம்பூரணர் கருத்தாகின்றது. இளம்பூரணர் கருத்தின்படி நாகு கடிது என்றவிடத்து உகரம் முற்றுகரமாக ஆகின்றது.

நச்சினார்க்கினியர் இளம்பூரணர் கருத்தை மறுப்பது பொருத்தமில்லை யெனினும், 'நாகு கடிது' என்ற விடத்து உள்ள உகரத்தை முற்றுகரமாகக் கொள்வது பொருத்தமாகுமா? என்பதும் ஆராயத் தக்கதே யாகும். (தொல் - எழுத்து - இளம் - சoக விளக்கவுரை)
(உகo)

குற்றியலுகரம் தன்மாத்திரையிற் குறைதல்

நூகo. இடைப்படிற் குறுகு மிடனுமா ருண்டே.

(இ - ள்.) இடைப்படிற் கூறிய அரைமாத்திரையிற் குறுகு மிடனுமுண்டாம்.

(வ - று.) சுக்குக்கோடு.

(வி - ரை.) வன்றொடர் மொழிக் குற்றுகரங்கள் வல்லெழுத்து வரு மொழியாய் வருமிடத்துத் தன் அரை மாத்திரையினின்றும் குறுகும் என்பது இதன் கருத்தாகும். 'வல்லொற்றுத் தொடர் மொழி வல்லெழுத்து வருவழித் தொல்லை யியற்கை நிலையலும் உரித்தே' (குற்றிய - ச) என்பது தொல்காப்பியம். (உநக)

குற்றியலிகரம் வரும் இடம்

நூகக. யகரம் வரும்வழி யிகரம் குறுகும்.

(இ - ள்.) யகரமுதன்மொழியாய் வரின் உகரங்கெட்டு இகரந் தன்மாத்தியிரையிற் குறுகும்.

(வ - று.) நாகியாது. (உநஉ)

ட, ற வொற்றிரட்டும் குற்றியலுகரங்கள்

நூகஉ. நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுட்
டறவொற் றிரட்டும் வேற்றுமைப் பொருட்கே.

(இ - ள்.) வேற்றுமைக்கண், நெடிற்றொடர்க் குற்றிய லுகரமும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரமும் டகர றகரங்கள் இசட்டிக்கும்.

(வ - று.) ஆட்டுக்கால், முயிற்றுக்கால். (உகக)

ஒற்று இடைமிகாக் குற்றுகரம்

நகஙந. ஒற்றிடை மிகாக்குற் றுகரமு முளவே
வல்லின மிகலத் திறத்தினு ளிலவே.

(இ - ள்.) முற்கூறிய இரண்டனுள் மெய்யெழுத் திடையின் மிக்குமுடியாத மொழிகளும் உளவாம் அக்கூற்றினில் வல்லின மிகாதியல்பாகும்.

(வ - று.) நாகுகால் ; வரகுகதிர் எனவரும்.

(வி - ரை.)

'ஒற்றிடை யினமிகா மொழியுமா ருளவே
அத்திறத் தில்லே வல்லெழுத்து மிகலே' (குற்றிய - எ)

என்பது தொல்காப்பியம். (உகச)

இயல்பாகும் இடைத்தொடர் ஆய்தத்தொடர்கள்

நகக்ச. இடைத்தொட ராய்தத் தொடரியல் பாகும்.

(இ - ள்.) இடைத்தொடர்மொழிக் குற்றியலுகரமும் ஆய்தத் தொடர்மொழிக் குற்றியலுகரமும் மிகாதியல்பாம்.

(வ - று.) தெள்குகால் ; எஃகுகால். (உகடு)

வன்றொடர், மென்றொடர்க் குற்றுகரம்

நகஙடு. வன்றொடர் மென்றொட ரிற்சில வலிக்கும்.

(இ - ள்.) வன்றொடர்மொழிக் குற்றியலுகரம் மென் றொடர் மொழிக் குற்றியலுகரங்களிற் சிலமிகும்.

(வ - று.) கொக்குக்கால், பாம்புக்கால். (உகசு)

மென்றொடர்க் குற்றுகரம்

நகஙசு. அவற்றுள்,
மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையிற்
றம்மினம் வன்றொட ராகா மன்னே.

(இ - ள்.) முற்கூறியவற்றுள் மென்றொடர் மொழிக் குற்றியலுகரங்களுட் சிலவேற்றுமைக்கண் தமக்கினமாகிய வன் கணமாகி மிக்குமுடியும்.

(வ - று.) குரங்கு + கால் = குரக்குக்கால். (உகஎ)

மரப்பெயர்

நூகூஎ. மரப்பெயர்க் கிளவி யம்மொடு சிவணும்.

(இ - ள்.) குற்றியலுகர மரப்பெயர்மொழி அம்முச்சாரியையை யேறும்.

(வ - று.) அரசு + காய் = அரசங்காய். (உகூஅ)

தேங்காய்

நூகூஅ. தெங்குநீண் மூற்றுயிர் மெய்கெடுங் காய்வரின்.[1]

(இ - ள்.) மென்றொடர்மொழிக் குற்றுகரமாகிய தெங் கென்னும் மரப்பெயருக்குமுன் காயென்னுஞ் சொல்வரின் முதல் நீண்டு சற்றுயிர் மெய்கெடும்.

(வ - று) தெங்கு + காய் = தேங்காய் எனவரும். (உகூக)

மரப்பெயர்

நூகூக. மெல்லொற்று வலியா மரப்பெய ருளவே.[2]

(இ - ள்.) மெல்லொற்று வல்லொற்றுகத் திரியாத மரப் பெயர்களுஞ் சிலவுளவாம்.

(வ - று.) புன்கங்கோடு. (உசூ0)

நெடிற்றொடர், வன்றொடர்க் குற்றுகரம்

சூ00. நெடிற்றொடர் வன்றொட ரிற்சில அம்மிடை
வரற்கு முரியன வாகு மென்ப.

(இ - ள்.) நெடிற்றொடர்க் குற்றியலுகரம் வன்றொடர் மொழிக் குற்றிய லுகரங்களிற் சில அம்முச்சாரியை நடுவில் வருதற்கு முரியனவாம்.

---

1. நன் - எழுத் - உயிரீற் - நூஎ.
2. தொல் - குற்றிய - நூக.

(வ - று.) ஏறு+கோடு = ஏறங்கோடு; புற்று+சோறு = புற்றஞ் சோறு. (உசக)

அக்குச் சாரியை பெறும் குற்றுகரம்

சoக. அக்கொடு வரூஉ மொழியுமா ருளவே.

(இ - ள்.) அக்குச்சாரியை பெற்றுவரும் குற்றியலுகர மொழிகளுமுளவாம்.

(வ - று.) குன்றக்கூகை. (உசஉ)

எண்ணுப் பெயர்

சoஉ. எண்ணுப் பெயரெலா மன்னொடு சிவணும்.

(இ - ள்.) குற்றியலுகர எண்ணுப்பெயரெல்லாம் அன் சாரியை பெறும்.

(வ - று.) ஒன்றன்கூட்டம்

பிறவுமன்ன. (உசக)

வண்டும் பெண்டும்

சoங. [1]வண்டும் பெண்டு மின்னொடு சிவணும்.

(இ - ள்.) வண்டென்னும் பெயரும் பெண்டென்னும் பெயரும் இன்சாரியை பெறும்.

(வ - று.) வண்டின்கால். பெண்டின்கை. (உசச)

பெண்டென் கிளவி

சoச. அவற்றுள்,
பெண்டன் னொடுவரூஉம் பெற்றித் தாகும்.

(இ - ள்.) மேற்கூறிப் போந்தவற்றுள், பெண்டென்னு மொரு பெயர் அன்சாரியையும் பெறுமென்க.

(வ - று.) பெண்டன்கால் எனவரும்.

(வி - ரை.)

'பெண்டென் கிளவிக்கு அன்னும் வரையார்' (குற்றிய - கசு)

என்பது தொல்காப்பியம். (உசஞ)

---

1. தொல் - எழுத் - குற்றிய - கஞ.

யாதும் ஆய்தப் பெயரும்

சூ0டு. யாது மாய்தச் சுட்டு மன்பெறும்
ஆவயி னாய்த மழியுஞ் சுட்டே.

(இ - ள்.) யாதென்னும் வினப்பெயரும் ஆய்தச் சுட்டுப் பெயரும் அன்சாரியை பெறும், ஆயிடைச் சுட்டின் முன்னாகிய ஆய்தங் கெடும்.

(வ - று.) யாது + கோடு = யாதன்கோடு ; அஃது + கோடு = அதன்கோடு, இஃது + கோடு = இதன்கோடு, உஃது + கோடு = உதன்கோடு. (உசசு)

ஆய்தப்புள்ளி நிற்கும் இடம்

சூ0சு. ஆவிவரி னிலையும் ஆய்தப் புள்ளி.

(இ - ள்.) உயிர்முதன் மொழிவரின் ஆய்தம் நிலைபெறு மென்க.

(வ - று.) அஃதடை, இஃதடை, உஃதடை.

(வி - ரை.)

'முன்உயிர் வருமிடத் தாய்தப் புள்ளி
மன்னல் வேண்டும் அல்வழி யான' (குற்றிய - கஅ)

என்பது தொல்காப்பியம். (உசள)

சூ0எ. ஏனைய கணம்வரின் இலவா கும்மே.

(இ - ள்.) உயிர்க்கணமல்லாத வன்கண மென்கணம் இடைக்கணங்களுக்குமுன் ஆய்தங்கள் பெருவாம்.

(வ - று.) அஃது + கடிது = அஃதுகடிது, அதுமெலிது, அதுவலிது. (உசஅ)

சூ0அ. அல்வழிக் கண்ணெலா மிகாதியல் பாகும்.

(இ - ள்.) அல்வழிக்கண் ஆறீற்றுக் குற்றுகரமும் மிகாது இயல்பாகும்.

(வ - று.) நாகுகடிது, எஃகுகடிது, வரகுகடிது, தெள்குகடிது, சூரங்குகடிது. (உசக)

சூ0ஙு. வல்லெழுத் தியையின் வன்றொடர் மிகுமே.

(இ - ள்.) வன்ரெடர்மொழிக் குற்றியலுகரத்துக்குமுன் வல்லெழுத்துவரின் மிகும்.

(வ - று.) கொக்குக்கடிது.

(வி - ரை.)

'வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து மிகுமே'
(குற்றிய - உக)

என்பது தொல்காப்பியம். (உ0)

மென்ரெடர்க் குற்றுகரம் மிகும் இடம்

சகo. சுட்டுமுத னீடிய மென்ரெடர் மொழியும்
யாகார விஞமுதன் மென்ரெடர் மொழியும்
அவ்விய னிலேபெறு மாயுங் காலே.

(இ - ள்.) சுட்டுமுதல் நீண்ட மென்ரெடர் மொழிக் குற்றியலுகரமும், யாகாரவிஞ முதலாகிய மென்ரெடர்மொழிக் குற்றியலுகரமும் மிக்குமுடியும்.

(வ - று.) ஆங்குக் கொண்டான், ஈங்குக் கொண்டான், ஊங்குக் கொண்டான், யாங்குக் கொண்டான். (உஙக)

மேலனவற்றுள் ஒன்றற்குச் சிறப்பு விதி

சகக. அவற்றுள்,
யாகார விஞவியல் பாதலு முளவே.

(இ - ள்.) முற்கூறியவற்றுள் யாகாரவிஞ முதலாகிய மென்ரெடர்மொழிக் குற்றியலுகர மொழி யியல்பாதலு முளவாம்.

(வ - று.) யாங்கு கொண்டான்.

(வி - ரை.)

'யாவிஞ மொழியே இயல்பு மாகும்' (குற்றிய - உக)

என்பது தொல்காப்பியம். (உஙஉ)

மேலனவற்றிற்குச் சிறப்புவிதி

சகஉ. அங்ஙான்கு மொழியுந் தங்நிலை திரியா.

(இ - ள்.) மூன்றுசுட்டும் யாவிஞ முதலுமாகிய ஙான்கு பெயரும் மெல்லொற்றுந் தன்மை திரிந்து வல்லொற்றுகாவாம்.

(வ - று.) அங்குக் கொண்டான்.

பிறவுமன்ன.

(வி - ரை.)

'அந்நான் மொழியும் தந்நிலே திரியா' (குற்றிய - உசு)

என்பது தொல்காப்பியம். (உகிஙூ)

உண்டு

சகஙூ. உண்டென் பெயரே யுண்மை செப்பின்
இயல்பா தலுமீ றழிதலும் ணகாரம்
ளகார மாதலு மூரியன வாகும்.

(இ - ள்.) உண்டென்னும் பெயருண்மைப் பொருளைக் கூறின் இயல்பாதலு மீறுகெடுதலும், ணகரமெய் ளகரமெய்யாகத் திரிதலுமுரியவாம்.

(வ - று.) உண்டுபொருள், உள்பொருள் எனவரும். (உகிசு)

இருதிசை புணர்தல்

சகசு. இருதிசை புணரி னேயிடை வருமே.[1]

(இ - ள்.) இரண்டுபெருந் திசைகளுந் தம்மிற் புணரின் ஏகாரச் சாரியை இடையில் வருமெனவறிக.

(வ - று.) வடக்கே தெற்கு ; கிழக்கே மேற்கு. (உகிடி)

திசைப் பெயர்முன் திசையும் பிறவும்

சகடு. திசையொடு திசையும் பிறவுஞ் சேரின்
நிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாத் திரிதலு மாம்பிற.[2]

(இ - ள்.) திசையொடு திசையும் பிறபெயரும் புணரின் நிலைமொழியிறுதி யுயிர்மெய்யுங் ககரவொற்றுங் கெடுதலும், றகரமெய் னகரமெய் யாகவேனும் லகரமெய் யாகவேனுந் திரிதலுமாம்.

(வ - று.) வடகிழக்கு, தென்மேல், மேல்பால். (உகிசு)

---

1. தொல் - எழுத் - குற்றிய - உசு.
2. தன் - எழுத் - உயிரீற் - சுசு.

எண்ணின்முன் எண்

சகசு. இரண்டொழித் தேனைய விருநான் கெண்களும்
பத்தின் முன்வருங் காலை யான
குற்றிய லுகரம் முற்றக் கெடுமே
ஒன்பா னெழியவின் னெடுவரு மென்ப.

(இ - ள்.) இரண்டென்னு மெண்ணெழிய மற்றைய வெட்டெண்களும் பத்தென்னு மெண்முன் வருங்காற் குற்றியலுகரம் மெய்யொடுங் கெடும், ஒன்பதென்னு மெண்ணெழிய மற்றைய வெண்க ளெல்லாம் இன்சாரியை பெறுமென வறிக.

(வ - று.) பதினென்று, பதின்மூன்று, பதினான்கு. (உடுஎ)

பத்தின்முன் இரண்டு

சகள. இரண்டு முன்வரிற் பத்தினீற் றுயிர்மெய்
கரந்திட வோற்று னவ்வாகு மென்ப.[1]

(இ - ள்.) பத்தென்னுமெண்முன் இரண்டென்னு மெண் வரிற் பத்தினீற்றுயிர் மெய்கெடத் தகரவொற்று னகரவொற் றாகத் திரியும்.

(வ - று.) பன்னிரண்டு. (உடுஅ)

பத்தின்முன் ஆயிரம்

சகஅ. ஆயிரம் வரினு மின்னெடு நிலையும்.

(இ - ள்.) ஆயிரமென்னும் எண்வரினு மின்சாரியை பெறு மென்க.

(வ - று) பதினாயிரம் எனவரும். (உடுக)

பத்தின்முன் நிறையும் அளவும்

சகக. நிறையு மளவு நேருங் காலைக்
குறையா தாகு மின்னேன் சாரியை.

(இ - ள்.) நிறைப்பெயரு மளவுப் பெயரும் வந்து புணரின் இன்சாரியை பெறும்.

(வ - று.) பதின்கழஞ்சு, பதின்கலம். (உகo)

---

1. நன் - எழுத். உயிரீற் - சஅ.

ஒன்றுமுதல் ஒன்பதன்முன் பத்து

சூஉ0. ஒன்று முதலோன் பான்முற் பத்திடை
மெய்கெட வாய்த மாறல்லா வழியே.

(இ - ள்.) ஒன்றுமுதல் ஒன்பதீருகக் கிடந்த எண்ணுப் பெயர்களின் முன்னின்ற பத்தினிடை யொற்றுக்கெட ஆய்தம் பெறும் ஆறென்னு மெண்ணெழிய.

(வ - று.) ஒருபஃது, இருபஃது, முப்பஃது பிறவுமன்ன. (உசுக)

எண்ணுப் பெயர்களுள் நீண்டும் குறுகியும் வருவன

சூஉக. ஒன்று முதலெட் டீரு மெண்ணுள்
முதலீ ரேண்முத னீளுமூன் ருறேழ்
குறுகு மாறே ழல்ல வற்றின்
ஈற்றுயிர் மெய்யு மேழ னுயிரும்
ஏகு மேற்புழி யேன்மனூர் புலவர்.[1]

(இ - ள்.) ஒன்றுமுத லெட்டீருகிய வெண்களுள் ஒன்றும் இரண்டும் முதனீளும், ஆறும் ஏழும் முதல் குறுகும், ஆறும் ஏழுமல்லாத எண்களின் இறுதி யுயிர்மெய்யும் ஏழனுயிருங் கெடு மெனவறிக.

(வ - று.) ஒன்=ஒன்; இரண்=ஈரண்; மூன்=முன்; ஆறு=அறு; ஏழ்=எழ். (உசுஉ)

ஒன்றும் இரண்டும்

சூஉஉ. ஒன்ற னெற்றே ரகார மாகும்
இரண்ட னெற்றுயி ரேகவுவ் வருமே.

(இ - ள்.) ஒன்றென்னும் எண்ணின் மெய் ரகரமெய்யாகும், இரண்டென்னும் எண்ணின் மெய்யும் உயிருங்கெட உகரச்சாரியை வரும்.

(வ - று.) ஒருபது, இருபது. (உசுஉ)

மூன்று

சூஉங. மூன்றன் மெய்யே பகார மாகும்.

---

1. நன் - எழுத் - உயிரீற் - கூஅ.

(இ - ள்.) மூன்றென்னும் எண்ணின்கணின்ற னகரமெய் டகரமெய்யாகத் திரியும்.

(வ - று.) முப்பது. (உசுச)

நான்கு

சூஉசு. நான்கன் மெய்யே றகார மாகும்.

(இ - ள்.) நான்கென்னும் எண்ணின்கணின்ற னகரமெய் றகரமெய்யாகத் திரியும்.

(வ - று.) நாற்பது. (உசுஞ)

ஐந்து

சூஉஞ. ஐந்த ஞெற்றே மகார மாகும்.[1]

(இ - ள்.) ஐந்தென்னும் எண்ணின்கணின்ற நகரமெய் மகர மெய்யாகத் திரியும்.

(வ - று.) ஐம்பது. (உசுசு)

எட்டு

சூஉசு. எட்ட னுடம்புணவ் வாகு மென்ப.[2]

(இ - ள்.) எட்டென்னும் எண்ணின்கணின்ற, டகரமெய் ணகர மெய்யாகத் திரியும்.

(வ - று.) எண்பது. (உசுஎ)

வருமொழி வரையறை

சூஉஎ. பத்து முன்வருங் காலை யான.

(இ - ள்.) பத்தென்னும் எண்ணுப்பெயர் வருங்கா லென்க.

(வி - ரை.) சூஉஉ முதல் சூஉசு வரையுள்ள நூற்பாக்களுக்கு வரு மொழி கூறுவது இந்நூற்பாவாகும். (உசுஅ)

---

1. தொல் - எழுத்து - குற்றிய - கூஎ.

2. நன் : எழுத் - உயிரீற் - சகூ.

எண்ணுப்பெயர்முன் அளவும் நிறையும்

சஉஅ. அளவு நிறையும் வரினியல் பாகும்.

(இ - ள்.) அளவுப்பெயரு நிறைப்பெயரும் வரின் இயல் பாம்.

(வ - று.) ஒருகலம், ஒருகழஞ்சு, இருகலம். (உசுக)

மூன்றன்புள்ளி

சஉக. மூன்றன் புள்ளி வந்தது மாகும்.

(இ - ள்.) மூன்றென்னும் எண்ணின்கண் நின்ற னகரமெய் வந்த மெய்யாகத் திரியும்.

(வ - று.) முக்கலம், முக்கழஞ்சு எனவரும். (உஎ0)

ஐந்தனெற்று

சஙo. ஐந்த னெற்றே மெல்லெழுத் தாகும்.[1]

(இ - ள்.) ஐந்தென்னும் எண்ணின்கண் நின்ற நகரமெய் வருமொழி வல்லெழுத்துக் கேற்ற மெல்லெழுத்தாகத் திரியும்.

(வ - று.) ஐங்கலம், ஐங்கழஞ்சு. (உஎக)

இதுவுமது

சஙக. வல்லெழுத்து வரூஉங் காலை யான.

(இ - ள்.) க, ச, த, ப க்கள் வருங்கால் எனவறிக. (உஎஉ)

ஐந்தும் மூன்றும்

சஙஉ. ஐந்தும் மூன்றும் நமவரு காலை
ஒற்றிய னிலைகெட வந்தது மாகும்.

(இ - ள்.) ஐந்தென்னும் எண்ணும் மூன்றென்னும் எண்ணும், நகர மகரங்கள் வருங்கால் வந்த மெய்யாகத் திரியும்.

(வ - று.) ஐந்நாழி = ஐம்மண்டை; முந்நாழி = மும்மண்டை. (உஎக)

---

1. தொல் - எழுத் - குற்றிய - சஉ.

மூன்றனெற்று

சஙஙு. மூன்ற னெற்றே வகரம் வரும்வழி
தோன்றிய வகரத் தருவா கும்மே.[1]

(இ - ள்.) மூன்றென்னும் எண்ணின்கணின்ற னகரமெய் வகரம் வருங்கால் வந்த வகரவடிவா மென்க.

(வ - று.) மூவட்டில். (உஎச)

நான்கன்மெய்

சஙச. நான்கன் மெய்யே லகார மாகும்.

(இ - ள்.) நான்கென்னும் எண்ணின்கண் நின்ற னகர மெய் லகரமெய்யாகத் திரியும்.

(வ - று.) நால்வட்டில். (உஎஞ)

ஐந்தனெற்று

சஙஞ. ஐந்த னெற்றே யடியோடு கெடுமே.

(இ - ள்.) ஐந்தென்னும் எண்ணின்கண் நின்ற ஙகரமெய் மூன்வடிவு கெடும்.

(வ - று.) ஐவட்டில். (உஎசு)

ஒன்று, இரண்டின்முன் உயிர்

சஙசு. ஒன்று மிரண்டு முயிர்வரு காலை
உகரங் கெடுத லாவயி னான.

(இ - ள்.) ஒரு இரு வென முடிந்துநின்ற இரண்டெண்களின் முன் உயிர்வரி னுகரங்கெடும்.

(வ - று.) ஓரகல், ஈரகல் எனவரும். (உஎஎ)

மூன்று நான்கு ஐந்து

சஙஎ. மூன்று நான்கு மைந்துந் தோன்றிய
வகரத் தருவாய் வழங்கு மென்ப.

(இ - ள்.) மூன்றென்னும் எண்ணும், நான்கென்னும் எண்ணும், ஐந்தென்னும் எண்ணும் முற்றேன்றி நின்ற வகரம்

1. தொல் - எழுத் - குற்றிய சூ.

வருமொழிக்குக் கூறிய வியல்பாக மூன்றுக்கு வகரமும், நான்குக்கு லகரமும் ஐந்து கெடுதலுமாம்.

(வ - று.) முவ்வகல், நாலகல், ஐயகல் எனவரும். (உஎஅ)

மூன்றன்முன் உழக்கு

சஙஅ. உழக்கு வரின்முத னீளுமூன் றெண்ணே.

(இ - ள்.) உழக்கென்னுஞ் சொல்வரின் மூன்றென்னு மெண் முதனீளும்.

(வ - று.) மூவுழக்கு எனவரும். (உஎக)

ஆறு

சஙக. ஆறுமவ் வியல்பிற் ருகும்.

(இ - ள்.) ஆறென்னும் எண்ணும் முதனீளும்.

(வ - று.) ஆறகல். (உஅ0)

ஒன்பது

சசo. ஒன்பா னின்னெடும் ஒழுகு மென்ப.

(இ - ள்.) ஒன்பதென்னும் எண்ணுப் பெயர் இன் சாரியை பெறுமென்க.

(வ - று.) ஒன்பதின்கலம். (உஅக)

எண்ணுப் பெயர்முன் நூறு

சசக. நூறென் கிளவி வினையல் பாகும்.

(இ - ள்.) நூறென்னும் எண்ணுப்பெயர் வரின் இயல் பாகும்.

(வ - று.) ஒருநூறு, இருநூறு. (உஅஉ)

மூன்றன் மெய்

சசஉ. மூன்றன் மெய்யே நகார மாகும்.

(இ - ள்.) மூன்றென்னும் எண்ணின்கண் நின்ற னகரமெய் நகரவொற்ருகத் திரியும்.

(வ - று.) முந்நூறு. (உஅக)

நான்கும் ஐந்தும்

சசஙூ. நான்கு மைந்து மூதனிலை திரியா.

(இ - ள்.) நான்கென்னும் எண்ணும் ஐந்தென்னும் எண்ணுந் தம் மொற்றுக்கள் நிலைதிரியாவா மென்க.

(வ - று.) நானூறு, ஐந்நூறு எனவரும். (உஅச)

தொண்ணூறும் தொள்ளாயிரமும்

சசச. ஒன்பா னெடுபத்து நூறு மொன்றின்
முன்னதி னேனைய முரணி யொவ்வோடு
தகர நிறீஇப்பஃ தகற்றி னவ்வை
நிரலே ணளவாய்த் திரிப்பது நெறியே.[1]

(இ - ள்.) ஒன்பதென்னும் எண்ணெடு பத்தென்னும் எண்ணும் நூறென்னும் எண்ணும் வந்து புணரின் பத்தென்னும் எண்ணை நூருகவும், நூறென்னும் எண்ணை ஆயிரமாகவுந் திரித்து, ஒகரத்தொடு தகரமெய்யை நிறுத்திப் பத்தை நீக்கி னகரமெய்யை முறையே ணகரமெய்யாகவும், ளகரமெய்யாகவுந் திரிப்பது நெறியாமென்க.

(வ - று.) தொண்ணூறு, தொள்ளாயிரம்.

(வி - ரை.) ஒன்பது + பத்து = தொண்ணூறு. இப்புணர்ச்சியில் நிலை மொழியும் வருமொழியும் புணருங்கால் ஒகரம் நீங்கலாக ஏனையவெல் லாம் மாறிவிடுகின்றது. தொல்காப்பியரும், இலக்கண விளக்க நூலாரும், நேமிநாதரும் இச்சொற்களுக்கு ஒவ்வொரு விதமாகப் புணர்ச்சி விதி கூறுவர். எனினும் இவையெல்லாம் பொருந்துவதன்று என்றும், தொண்டு + நூறு = தொண்ணூறு; தொண்டு + ஆயிரம் = தொள்ளாயிரம் என ஆயிற்று எனக் கொள்வதே சிறப்புடைத்து என்றும் கூறுவர் திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள். 9—தொண்டு; 90—தொண்பது; 900—தொண்ணூறு; 9000—தொள்ளாயிரம் என வழங்குவதே முறையென்றும் தொண்டு என்னும் வழக்கு அற்றுப்போக, தொன்பது 9-ஐயும், தொண்ணூறு 90-ஐயும், தொள்ளாயிரம் 900-ஐயும் வழங்கத் தொடங்கிவிட்டன என்றும் அவர் கூறுவர். ஒன்பது என்ப தைத் தொண்டு என வழங்கினர் என்பதற்குத் 'தொண்டு தலையிட்ட' (தொல் - கருஉஅ) என்பதையும், 'தொண்டு படுதிவவு' (மலைபடு - உக) என்பதையும் மேற்கோளாகக் காட்டுவர். (தொல் - எழுத்து - இளம் - சசஅ - விளக்கவுரை.) (உஅஅ)

---

1. நன் - எழுத் - உயிரீற் - சச.

ஒன்று இரண்டின்முன் ஆயிரம்

சசடு. உகரங் கெடுமுத லோடு மிரண்டு
மாயிர முன்வருங் காலை யான.

(இ - ள்.) ஆயிரமென்னும் எண்வரின் ஒன்றென்னும் எண்ணின் உகரமும் இரண்டென்னும் எண்ணின் உகரமுங் கெடும்.

(வ - று.) ஓராயிரம், ஈராயிரம். (உஅசு)

மூன்றன் மெய்

சசசு. மூன்றன் மெய்யே வகார மாகும்.

(இ - ள்.) மூன்றென்னும் எண்ணின் னகரமெய் வகரமெய் யாகத் திரியுமென்க.

(வ - று.) மூவாயிரம். (உஅஎ)

நான்கன் மெய்

சசஎ. நான்கன் மெய்யே லகார மாகும்.

(இ - ள்.) நான்கென்னும் எண்ணினகரம் லகரமெய்யாகத் திரியுமென்க.

(வ - று) நாலாயிரம். (உஅஅ)

ஐந்தன் மெய்

சசஅ. ஐந்தன் மெய்யே யகார மாகும்.

(இ - ள்.) ஐந்தென்னும் எண்ணின் நகரம் யகரமெய்யாகத் திரியுமென்க.

(வ - று.) ஐயாயிரம். (உஅக)

ஆறு என்பதன் முன் ஆயிரம்

சசக. ஆறென் கிளவி யதனீலை திரியா.

(இ - ள்.) ஆறென்னும் எண் அதனிலை கெடாவாம்.

(வ - று.) ஆறுயிரம். (உக0)

ஒன்பதின்முன் ஆயிரம்

சரு0. ஒன்பா னின்னெடு வருமென மொழிப.

(இ - ள்.) ஒன்பதென்னும் எண் இன்சாரியை பெறு மென்க.

(வ - று.) ஒன்பதினாயிரம். (உகக)

ஒன்று, இரண்டன்முன் நூறுயிரம்

சருக. நூறு யிரம்வரி னியல்பா கும்மே.

(இ - ள்.) நூறுயிரமென்னும் எண்வரின் இயல்பாமென வறிக.

(வ - று.) ஒருநூறுயிரம், இருநூறுயிரம். (உகஉ)

நூறு என்பதன் முன் ஒன்று முதல் ஒன்பான்

சருஉ. நூறென் கிளவி யொன்றுமுத லொன்பாற்
றீறுசினை யொழிய வினவொற்று மிகுமே.[1]

(இ - ள்.) நூறென்னும் எண்ணுப்பெயர் ஒன்றுமுதல் ஒன்பான்களோடு புணருங்கா லீறுகெ்ய குற்றியலுகரங் கெடாது அதற்கினமாகிய றகரமெய் மிக்குமுடியும்.

(வ - று.) நூற்றொன்று, நூற்றிரண்டு. (உகஉ)

நூறு என்பதன் முன் ஒருபஃதும் இருபஃதும்

சருங. அவையூர் பத்தினு மத்தொழிற் றாகும்.[2]

(இ - ள்.) அந்நூறென்பது நின்று முற்கூறிய ஒன்று முதலொன்பானெண்களோ டூர்ந்துவந்த பத்தென்பதனோடு புணருங்கால் ஈறுசினையொழிய இனவொற்றுமிகும்.

(வ - று.) நூற்றொருபஃது, நூற்றிருபஃது. (உகச)

நூறு என்பதன் முன் அளவும் நிறையும்

சருச. அளவோடு நிறைவரி னவ்விய னிலையும்.

---

1. தொல் - எழுத் - குற்றிய - கக.
2. தொல் - எழுத் - குற்றிய - கள.

(இ - ள்.) நூறென்னும் எண்ணினோடு அளவுப் பெயரும் நிறைப் பெயரும் வந்து புணரின் மிக்குமுடியும்.

(வ - று.) நூற்றுக்கலம், நூற்றுக்கழஞ்சு. (உகஇ)

ஒருபஃது முதலாகிய பெயர்களின் முன் ஒன்று முதலியன

சருரு. ஒன்றுமுத லாகிய பத்தூர் கிளவி
ஒன்றுமுத லொன்பாற் கொற்றிடை மிகுமே.

(இ - ள்.) ஒன்றுமுதல் எட்டிருகப் பத்தேறியொரு சொல்லாய் நின்ற வொருபது முதலாகிய எண்கள் ஒன்றுமுதல் ஒன்பான்கள் வரின் மிகும்.

(வ - று.) இருபத்தொன்று, இருபத்திரண்டு, இருபத்து மூன்று (உகஉ)

சருசு. ஆயிரம் வரினே யின்னே சாரியை
ஆவயி னொற்றிடை மிகாதியல் பாகும்.

(இ - ள்.) அவ்வொன்று முதலாகிய பத்தூர்கிளவி ஆயிரத்தினோடு புணரி னின்சாரியை பெறும், ஆயிடைத் தகர மெய் மிகாதியல்பாம்.

(வ - று.) பதினாயிரம், இருபதினாயிரம். (உகஎ)

சருஎ. அளவு நிறையு மாயிய றிரியா.[1]

(இ - ள்.) அளவுப்பெயரு நிறைப்பெயரும் புணரின் மிகும்.

(வ - று.) நூற்றுக்கலம், நூற்றுக்கழஞ்சு. (உகஅ)

புணரியன் முற்றும்.

எழுத்ததிகாரம் முற்றும்.

---

1. தொல் - எழுத் - குற்றிய - எக.

உ. சொல்லதிகாரம்

பெயரியல்

சொல்லதிகாரமென்பது சொல்லினது அதிகாரத்தையுடைய தெனப் படலத்திற்குக் காரணக்குறி யாயிற்று. சொல்லென்றது எழுத்தினலாக்கப்பட்டு இருதிணைப் பொருடன்மையும் ஒருவன் உணர்தற்குக் கருவியாம் ஓசையாகிய பெயர்வினையிடையுரியென நால்வகைச் சொல்லும் பிறவுமாம்.

தற்சிறப்புப்பாயிரம்

சஙுஅ. உருபமும் அருபமும் உருபரு பமுமுளன்
இலனெவ னவற்ரெழு தியம்புவன் சொல்லே.

(இ - ள்.) வடிவமும் வடிவமின்மையும் வடிவுவடிவின்மையு முளன் இலனெவன் அவனை வணங்கி யான் சொல்லிலக் கணத்தைக் கூறுவேனென வறிக. ஏகாரம் ஈற்றசை. (க)

சொற்கள் பொருள் குறித்து வருதல்

சஙுக. எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே.[1]

(இ - ள்.) மேற்கூறிப்போந்த சொற்களெல்லாம் பொருளைக் குறித்தனவேயாம்; பொருளைக் குறியாது நில்லாவாமென் றுணர்க. (உ)

சொல் தன்னையும் பொருளையும் உணர்த்துதல்

சஙுஉ. சொல்லையும் பொருளையுஞ் சொல்லா னுணர்தல்.

(இ - ள்.) சொற்ரனை யறியப்படுதலுந் தன்னின் வேரூகிய பொருளா லறியப்படுதலுமாகிய இருமையுஞ் சொல்லாம். (ங)

அதன் வகை

சஙுக. பெயர்வினை யிடையுரி யெனச்சொன் ஞன்கே.

---

1. தொல் - சொல் - பெயர் - க.

(இ - ள்.) அச்சொல் பெயர்ச்சொல்லெனவும், வினைச் சொல்லெனவும், இடைச்சொல் லெனவும், உரிச்சொல் லெனவும் கான்குவகைப்படுமென்றுணர்க. (சு)

பெயர்

சசுஉ. அவற்றுள்,
பெயரெனப் படுபவை தெரியுங் காலை
உயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்கு மோரன்ன வுரிமையும்
ஆகு மென்மனு ரறிந்திசி னோரே.

(இ - ள்.) மேற்கூறிப்போந்த பெயர்வினை யிடையுரியாகிய கான்கனுட் பெயரென்று கூறப்படுவது – உயர்திணைக்குரியவாய் வருவனவும், அஃறிணைக்குரியவாய் வருவனவும், இருதிணைக்கும் ஒத்த வுரிமையாய் வருவனவுமாகிய மூன்று வேறுபாட்டனவாம். (நி)

சொல்லாவது யாது

சசுஊ. ஒருசை தொடர்போது வுரைபடு மிருதிணை
ஐம்பான் மூவிட மறுவகை வழக்கு
வெளிப்படை குறிப்பின் விளக்குவ துரையே.

(இ - ள்.) ஒருமொழியும், தொடர்மொழியும், பொது மொழியும், இருதிணையாகிய ஐம்பாலும், மூவிடனும், அறுவகை வழக்கும் வெளிப்படையானும் குறிப்பானும் விளக்குவது சொல் லாம். (சூ)

ஒருமொழி

சசுசு. ஒருபொருள் பயப்ப தோருரை யாகும்.

(இ - ள்.) ஒருபொருளைத்தருவது ஒருமொழியாம் என்க.

(வ - று.) நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம். (எ)

தொடர் மொழி

சசுரு. பலபொருள் பயப்பது தொடர்சொற் கிளவி.

(இ - ள்.) பலபொருளைத் தருவது தொடர்மொழியாகும்.

(வ - று.) நிலங்கடந்தான், நிலத்தைக்கடந்தமால். (அ)

பொது மொழி

சசுசு. இருமையும் பயப்பது பொதுவென மொழிப.

(இ - ள்.) ஒருபொருளையும், பலபொருளையும் தருவது பொது மொழியாகும்.

(வ - று.) நங்கை, தங்கை.

(வி - ரை.)

'ஒருமொழி ஒருபொரு ளனவாம் தொடர்மொழி
பலபொருளன பொது இருமையும் ஏற்பன' (பெயரி-உ)

என்ற நன்னூலின் கருத்தே சசுஉ முதல் இந்நூற்பா வரை கூறப் பட்டுள்ளது. (கூ)

இருதிணை

சசுள. மக்க டேவர் நரக ருயர்திணை
மற்றுயி ருள்ளவு மில்லவு மஃறிணை.[1]

(இ - ள்.) மக்களும் தேவரும் நரகரும் உயர்திணையாம், இவரல்லாத பிறவெல்லாம் அஃறிணையாம்.

(வ - று.) ஆடூஉ, மகடூஉ, தேவன், நரகன், மரம், மிருகம், பறவை, நிலம், நீர்.

(வி - ரை.) தொல்காப்பியர் நரகரை உயர்திணையாகக் குறித்திலர். இளம்பூரணரும் நச்சினர்க்கினியரும் நரகரை உயர்திணையில் அடக்கினர். நன்னூலாரும் இவர்களைத் தழுவியுரைப்பர். இவ்வாசிரியரும் அதனை யேற்றனர். எனினும் நரகரை உயர்திணையில் அடக்குதல் தவறென்பர் தெய்வச்சிலையார். அவர் கருத்து வருமாறு :

தேவரும் மக்களும் விலங்குமாகிய கதிப் பொருண்மை கூறி நரக கதிப் பொருண்மை கூறுதலென்னை யெனின், அக்கதிமேனிகழ்வதோர் வழக்கின்மையிற் கூறுராயினர். நரகன் வந்தான், நரகி வந்தாள், நரகர் வந்தார் என வழங்குபவாலெனின், அக்கதியுட் டோன்றுவர் ஆணும் பெண்ணுமாகிப் போகம் நுகர்வரென்னும் இலக்கண மின்மை யான், மக்களிற் றூய்மை யில்லாதாரை யுலகத்தார் வழங்குமாறவை யென்க. நாகர் துயருழப்பர் என அக்கதிமேற் றோற்றுவார் மேலும் வருமாலெனின், அவ்வாறு வருவன பால் கூறப்படுதலின்றி ஆணும் பெண்ணும் வரையறுக்கப்படாத பொருளை உயிர்த்தன்மையைக் குறித்து உயர்திணைப் பன்மையான் வழங்கினரென்க. (தொல் - சொல் - தெய்வ—ச) (கo)

---

1. நன் - சொல் - பெயரி - ச.

OFFICE OF THE DIRECTOR OF ... RAEOLOGY
21 JAN 1975

உயர்திணை

சசுஅ. ஆண்பெண் பலரென முப்பாற் றுயர்திணை.[1]

(இ - ள்.) ஆண்பாலும் பெண்பாலும் பலர்பாலும் என உயர்திணை மூன்றுபாலினை யுடைத்தாம்.

(வ - று.) அவன், அவள், அவர். (கக)

அஃறிணை

சசுக. ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை.[2]

(இ - ள்.) ஒன்றன்பாலும் பலவின்பாலுமென அஃறிணை இரண்டு பாலினையுடைத்தாம்.

(வ - று.) அது, அவை. (கஉ)

பெயர் வினைகள் இடவகையால் பொருள் உணருமாறு

சஎ0. படர்க்கைப் பெயர்வினை முற்றிரு திணைபால்
அனைத்தும் பெறப்படு மல்லன விரண்டும்
ஒருமையும் பன்மையும் பெறுமென மொழிப.

(இ - ள்.) படர்க்கைப் பெயர்ச்சொல்லும் படர்க்கைவினை முற்றுச்சொல்லும் இருதிணையைம்பாலும் பெறும்; தன்மையும் முன்னிலையும் ஒருமையும் பன்மையும் பெறும்.

(வ - று.) அவன், அவள், அவர், அது, அவை, படர்க்கைப் பெயர். நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, படர்க்கைவினைமுற்று. நீ, நீர், முன்னிலைப்பெயர். யான், யாம், தன்மைப்பெயர். நடந்தாய், நடந்தீர், முன்னிலை வினைமுற்று. நடந்தேன், நடந்தேம், தன்மை வினைமுற்று.

(வி - ரை.)

'படர்க்கை வினைமுற்று நாமங் குறிப்பிற்
பெறப்படுந் திணைபா லினைத்து மேனை
இடத்தவற் றெருமைப் பன்மைப் பாலே' (நன் - பெயரி - அ)

என்ற நன்னூலைத் தழுவியது இது. (கஊ)

மூவிடம்

சஎக. முன்னிலை தன்மை படர்க்கைமூ விடனே.

---

1. நன் - சொல் - பெயரி - இ.
2. நன் - சொல் - பெயரி - உ.

(இ - ள்.) முன்னிலையும் தன்மையும் படர்க்கையுமென இடம் மூன்றும்.

(வ - றை.) நீ நடந்தாய், முன்னிலை; நான் நடந்தேன், தன்மை; அவன் நடந்தான், படர்க்கை. (கச)

வழக்கின் வகை

சூஎஉ. இயல்புந் தகுதியு மெனவழக் கிருமை.

(இ - ள்.) வழக்கு - இயல்புவழக் கெனவும், தகுதிவழக் கெனவும் இரண்டுபிரிவினை யுடையவாம்.

(வி - ரை.) எப்பொருட்கு எச்சொல் அமைந்ததோ அப்பொருளை அச்சொல்லாற் கூறுதல் இயல்பு வழக்காம். இப்பொருளை யறிதற்கு அமைந்து கிடந்த இச்சொல்லாற் கூறுதல் தகுதி யன்று வேறொரு சொல்லாற் கூறல் தகுதி யெனக் கூறுதல் தகுதி வழக்காம். (கஙி)

இயல்பு வழக்கு

சூஎஊ. அவற்றுள்,

இயல்பு மரூஉவிலக் கணமுடை யனவிலக்
கணப்போலி யென்மனோர் கற்றுணர்ந் தோரே.

(இ - ள்.) மேற்கூறிய விரண்டனுள், இயல்புவழக்கு மரீஇயதும், இலக்கணவழியால் வருவதும், இலக்கணமுடையது போல வருவதும் என மூவகையாம்.

(வ - றை.) அருமந்தபிள்ளை, சோணாடு, மராடி.

(வி - ரை.) இலக்கண நெறியால் வருவதனை இலக்கணமுடைய தென்றும், இலக்கணமுடையவன்றிப் படைப்புக்காலத்து இலக்கண முடையதோடு ஒருங்கு படைக்கப்பட்டதுபோல வருவதனை இலக்கணப் போலியென்றும், தொன்று தொட்டதன்றி இடையே இலக்கணம் சிதைந்து மரீஇயதனை மரூஉவென்றும் கூறுவர். (நன் - உரூ - சங்கர நமச்சிவாயர் உரை) (கசு)

தகுதி வழக்கு

சூஎசு. தகுதி குழூஉக்குறி மங்கல மிடக்கர்
அடக்க லென்மனோர் நிரிந்திசி னோரே.

(இ - ள்.) தகுதிவழக்கு, குழூஉக்குறி, மங்கலம், இடக்கரடக்கல் ஆம்.

(வ - று.) பொன் - பறி, ஆடை - காரை = குழூஉக்குறி; ஓலை - திருமுகம் - மங்கலம்; ஈகாரபகரம், ஆமுன்பகரவீ = இடக்கரடக்கல்.

(வி - ரை.) இடக்கர் தோன்றுது அதனை மறைத்ததை இடக்கரடக்கல் என்றும், இடக்கர்போற் கூறத்தகாததன்றேனும் மங்கலமில்லதையொழித்து மங்கலமாகக் கூறுவதை மங்கலமென்றும், ஒவ்வொரு குழுவினுள்ளோர் யாதானும் ஒரு காரணத்தான் ஒரு பொருளினது சொற்குறியை யொழித்து வேறொரு சொற்குறியாற் கூறுவதைக் குழூஉக்குறியென்றும் கூறுவர். (நன் - உசுஎ - சங்கரநமச்சிவாயர் உரை) (கஎ)

செய்யுள் இன்னதென்பது

சூஎநூ. கற்றணர் வல்லோர் கற்பித் துரைப்பது
செய்யு ளென்மனார் தெளிந்திசி னோரே.

(இ - ள்.) பலநூல்களையும் ஓதி அவற்றின் பொருள் நன்குணர்ந்த பெரியோர் கற்பித்துப் பாடுவது செய்யுளாம்.

(வ - று.) ''இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து''.
(திருக்குறள்-காமம்) (கஅ)

குறிப்பிற் றருமொழிகள்

சூஎசூ. தொகையோன் றெழிபோதுச் சொல்லே முதனிலை
தகுதி வினைக்குறிப் பன்மொழி யாகு
பெயரே குறிப்புரை யல்லன வெளிப்படை.

(இ - ள்.) தொகைக் குறிப்புச்சொல்லும், இருதிணை ஆண் பெணு ளொன்றனை யொழிக்கும் பொதுச்சொல்லும், முதற் குறிப்புச் சொல்லும், மூவகைத்தகுதி வழக்குச்சொற்களும், வினைக் குறிப்புச் சொல்லும், அன்மொழித் தொகைச்சொல்லும், ஆகுபெயரும், குறிப்பினிலிருதிணை யைம்பாற் பொருள்களையும் தருகிற சொற்களாம். இவையல்லன வெல்லாம் வெளிப்படையாக அப்பொருளைத் தருகிற சொற்களாம்.

(வ - று.) அலங்குளைப்புரவி யைவரொடு சினைஇ (புறம்-உ) தொகைக் குறிப்பு; ஆயிரமக்கள் பொருதார்-ஒன்றெழி பொதுச்சொல்; அறத்தாறிதுவென (திருக்குறள் - அறம் - கூ) முதற்குறிப்பு; ஈகார பகரம்-தகுதி; பொன்னன் - வினைக்குறிப்பு; பொற்றெடி-அன்மொழித் தொகை; உலகு = ஆகுபெயர். (கசூ)

உயர்திணை ஆண்பாற் பெயர்கள்

சஎஎ. னகார விறுதி குடிநிலங் குழுஉவினை
திணைநிலை சினைநிலை பண்புகோள் பெயரே
யெண்ணுப் பெயரோடு சுட்டுவினுப் பெயர்
உயர்திணை யாண்பாற் படர்க்கைப் பெயரே.

(இ - ள்.) னகரமெய்யீறாகிய குடிப்பெயரும் நிலப்பெயரும் குழுவின் பெயரும் வினைப்பெயரும் திணைநிலைப்பெயரும் சினை நிலைப்பெயரும் குணப்பெயரும் எண்ணுப் பெயரும் சுட்டுப் பெயரும் வினுப்பெயரும் உயர்திணை யாண்பாற் படர்க்கைப் பெயராம்.

(வ - று.) மலயமான், சேரமான், குடி; அருவாளன், சோழியன் நிலம்; அவையத்தான், அத்திகோசத்தான் குழு; வருவான், போவான், வினை; வெற்பன், சேர்ப்பன், திணை; பெருங்காலன், திணிதோளன், சினை, கரியன், செய்யன், பண்பு; ஒருவன், எண்; அவன், இவன், உவன், சுட்டு; எவன்? யாவன்? வினு. (உ0)

இதுவுமது

சஎஅ. கோவேள் விடலை குருசி லேன்றல்
ஆவே நம்பியு மதன்பால வேன்மனுர்.

(இ - ள்.) கோ, வேள், விடலை, குருசில், தோன்றல், ஆவே, நம்பி உயர்திணையாண்பாற் படர்க்கையாம்.

(வி - ரை.)

'அவற்றுள்,
கிளையெண் குழுஉமுதற் பல்பொரு டிணைதேம்
ஊர்வா னகம்புற முதல நிலன்யாண்
டிருது மதிநா ளாதிக் காலம்
தோள்குழன் மார்புகண் காது முதலுறுப்
பளவறி வொப்பு வடிவு நிறங்கதி
சாதி குடிசிறப் பாதிப் பல்குணம்
ஓத லீத லாதிப் பல்வினை
இவையடை சுட்டு வினுப்பிற மற்றே
டுற்றனவ் வீறு நம்பி யாடூஉ
விடலை கோவேள் குரிசி லேன்றல்
இன்னன வாண்பெய ராகு மென்ப' (நன் · பெயரியல் · கக)

என்று நன்னூற் கருத்துக்கள் மேலைய நூற்பாவிலும் இந்நூற்பாவிலும் இடம் பெற்றுள்ளன. (உக)

உயர்திணைப் பெண்பாற் பெயர்கள்

சூஎக. உரைத்த குடிமுத லுற்ற ளகார
ஈற்றவு மிகர விறுதிக் கிளவியும்
அத்திணைப் பெண்பாற் படர்க்கை யாகும்.

(இ - ள்.) மேற்கூறிப்போந்த குடிப்பெயர் முதலிய பத்துப் பெயர்களினிறுதி, ளகரவொற்றுப் பெயரும், இகரவிறுதிப் பெயரும் உயர்திணைப் பெண்பாற் படர்க்கைப் பெயராம்.

(வ - று.) சோழியள், சேரமாள், அவையத்தாள், வருவாள், வெற்பள், நிணிதோளாள், கறுப்பி, ஒருத்தி, அவள், இவள், உவள், எவள், யாவள் எனவரும். (உஉ)

இதுவுமது

சூ௩ஏ. தையன் மகடூ நங்கை செவிலி
தோழியு மதன்பால வென்மனார் புலவர்.

(இ - ள்.) தையல், மகடூஉ, நங்கை, செவிலி, தோழி உயர்திணைப் பெண்பாற் படர்க்கைப் பெயராம்.

(வி - ரை.)

'கிளைமுத லாகக் கிளந்த பொருள்களுள்
ளவ்வொற் றிகரக் கேற்ற வீற்றவும்
தோழி செவிலி மகடூஉ நங்கை
தையலோ டின்னன பெண்பாற் பெயரே'

(நன் - பெயரியல் - உ0)

என்று நன்னூற் கருத்துக்கள் மேலைய நூற்பாவிலும் இந்நூற்பாவிலும் இடம் பெற்றுள்ளன. (உக)

உயர்திணைப் பலர்பாற் பெயர்கள்

சூ௩க. குடிமுத லாகக் குறித்தவற் றிறுதி
ரகாரைப் பேயரு மாரைக் கிளவியும்
உயர்திணைப் பலர்பாற் படர்க்கைப் பெயரே.

(இ - ள்.) குடிமுதலாகக் கருதிய பெயர்களினிறுதி ரகரவொற்றுப் பெயரும் மார்விகுதிப் பெயரும் உயர்திணைப் பலர்பாற் படர்க்கைப் பெயராம்.

(வ - று.) சோழியர், சேரலர், அவையத்தார், வருவார், வெற்பர், திணிதோளர், கரியர், இருவர், அவர், இவர், உவர், எவர், யாவர், கொண்மார். (உசு)

அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கைப் பெயர்கள்

சஅஉ. துவ்விறு சுட்டோடு சுட்டணை யாய்தமும்
யாது மொன்று மஃறிணை யொன்றன்
பாற்படர்க் கைப்பெய ரென்மனர் புலவர்.

(இ - ள்.) துவ்விகுதிச் சுட்டுப்பெயரும், சுட்டணை யாய்தப் பெயரும், யாதென்னும் வினாப்பெயரும், ஒன்றென்னு மெண்ணுப் பெயரும், அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கைப் பெயராமென்க.

(வ - று.) அது, இது, உது, அஃது, இஃது, உஃது, ஒன்று, யாது எனவரும்.

(வி - ரை.)

"வினாச்சுட் டுடனும் வேறு மாம்பொருள்
ஆதி யுறுதுச் சுட்டணை யாய்தம்
ஒன்றனெண் ணின்னன வொன்றன் பெயரே" (பெயரி - ஊஉ)

என்பது நன்னூல். (உஇ)

அஃறிணைப் பலவின்பாற் பெயர்கள்

சஅஊ. வகார விறுதியும் வையிறு மொழியுங்
கள்ளெ னிறுதியுங் கணக்கும் பிறவும்
அத்திணைப் பலவின் படர்க்கைப் பெயரே.

(இ - ள்.) வகரவொற் றிறுதியாகிய பெயரும், வையிகுதிப் பெயரும், கள்ளிறுதிப் பெயரும, எண்ணுப் பெயரும், இவை போல்வன வாகிய பிறபெயரும் அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைப் பெயராம்.

(வ - று.) அவ் - இவ் - உவ், அவை - இவை - உவை, நரிகள் - புலிகள், இரண்டு - மூன்று - நான்கு - ஐந்து - ஆறு - ஏழு. (உசு)

இதுவுமது

சஅஎ. பல்ல பலசில வென்னும் பெயரும்
உள்ள வில்ல வுளவில வென்னும்
பெயரு மத்திணைப் பலவின் மேன.

சொல்லதிகாரம் ஙஙங

(இ - ள்.) ஆண்மைச் சினைப்பெயர், பெண்மைச் சினைப் பெயர், ஒருமைச் சினைப்பெயர், பன்மைச் சினைப்பெயரெனச் சினைப்பெயர் நான்காமென்க.

(வ - று.) முடவன் - ஆண்மைச் சினைப்பெயர், முடத்தின் பெண்மைச் சினைப்பெயர், செவியிலி - ஒருமைச் சினைப்பெயர், செவியிலிகள் - பன்மைச் சினைப்பெயர். (கூ0)

இயற்பெயர்

சூஅஅ. ஆண்மை யியற்பெயர் பெண்மை யியற்பெயர்
ஒருமை யியற்பெயர் பன்மை யியற்பெயர்
அந்நான் காகு மியற்பெயர் மொழியே.

(இ - ள்.) ஆண்மை யியற்பெயர், பெண்மை யியற்பெயர், ஒருமை யியற்பெயர், பன்மை யியற்பெயர் என இயற்பெய ரொரு நான்காமென்க.

(வ - று.) சாத்தன் - ஆண்மை யியற்பெயர், சாத்தி - பெண்மை யியற்பெயர், கோதை - ஒருமை யியற்பெயர், கோதைகள் - பன்மை யியற்பெயர். (கூக)

சினை முதற்பெயர்

சூஅகூ. ஆண்மைச் சினைமுதல் பெண்மைச் சினைமுதல்
ஒருமைச் சினைமுதல் பன்மைச் சினைமுதல்
எனநான் காகுஞ் சினைமுதற் கிளவி.

(இ - ள்.) ஆண்மைச் சினைமுதல், பெண்மைச் சினைமுதல், ஒருமைச் சினைமுதல், பன்மைச் சினைமுதலெனச் சினைமுதற்பெயர் நான்காகும்.

(வ - று.) முடக்கொற்றன் - ஆண்மைச் சினை முதல், முடக்கொற்றி - பெண்மைச் சினைமுதல், கொடும்புறமருதி - ஒருமைச்சினை முதல், கொடும்புற மருதிகள் - பன்மைச்சினைமுதல். (கூஉ)

முறைப் பெயர்

சூகூ0. ஆண்மை முறைப்பெயர் பெண்மை முறைப்பெயர்
எனவிரு திறத்தவா முறைப்பெயர்க் கிளவி.

(இ - ள்.) ஆண்மை முறைப்பெயர் பெண்மை முறைப் பெயர் என முறைப்பெயர் இரண்டாகும்.

(வ - று.) தந்தை - ஆண்மை முறைப்பெயர், தாய் - பெண்மை முறைப்பெயர். (கூகூ)

அவை இருதிணையிலும் தத்தம் பால் ஏற்றல்

சகூக. ஒன்றே யிருதிணைத் தன்பா லேற்கும்.

(இ - ள்.) முதற்பெயர் முதலாகக் கூறப்படு மிருபத் தாறும் பிறவுமாகிய பொதுப்பெயர்களுள் ஒவ்வொன்றே இரு திணையிலுந் தன்றன்பாலை யேற்றுவரும்.

(வ - று.) சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது, தாயிவள், தாயிப் பசு, பிறவுமன்ன.

(வி - ரை.) நன்னூலில் அவற்றுள் என்ற தனிச்சொல்லுடன் இந் நூற்பா காணப்படும். (கூச)

பெண்மைப் பெயர்

சகூஉ. மகடூஉக் குறித்த வெல்லாப் பெயரும்
ஒன்றற்கு மொருத்திக்கு மொன்றிய நிலையே.

(இ - ள்.) பெண்மையைப்பற்றி வருகிற நான்கு பெயரும், அஃறிணை யொன்றற்கும், உயர்திணை யொருத்திக்கு முரியவாம்.

(வ - று.) சாத்தி வந்தது - சாத்தி வந்தாள், முடத்தி வந்தது - முடத்தி வந்தாள் பிறவுமன்ன. (கூடி)

ஆண்மைப் பெயர்

சகூங. ஆஉக் குறித்த வெல்லாப் பெயரும்
ஒன்றற்கு மொருவற்கு மொன்றிய நிலையே.

(இ - ள்.) ஆண்மையைப்பற்றி வருகிற நான்கு பெயரும் அஃறிணை யொன்றற்கும், உயர்திணை யொருவனுக்கு முரியவாம்.

(வ - று.) சாத்தன்வந்தது - சாத்தன்வந்தான், முடவன் வந்தது - முடவன் வந்தான். (கூசு)

பன்மைப் பெயர்

சகூச. பன்மையைக் குறித்த பெயரெல் லாமும்
ஒன்று பலவொரு மைக்கு முரிய.

(இ - ள்.) பன்மையைப்பற்றி வருகிற மூன்று பெயரும், அஃறிணை யொருமைக்கும் அத்திணைப் பன்மைக்கும் உயர்திணை

யொருமைக்கு முரியவாமென்க. மூன்றுவன : பன்மை யியற்பெயரும், பன்மைச்சிணைப் பெயரும், பன்மைச்சிணை முதற்பெயருமாம்.

(வ - று.) **யானைவந்தது, யானைவந்தன, யானை வந்தான்.**

(வி - ரை.) மேல் (சகக) முதற்பெயர் முதலாகக் கூறப்பட்ட பொதுப் பெயர்கள் அனைத்தும் ஒவ்வொன்றும் தத்தம் பால்களைக் குறிக்கும் என்றவர், ஈண்டுப் பன்மைப் பெயர் மட்டும் பன்மையையே யன்றி ஒருமையையுங் குறிக்கும் என்றல் பொருந்தாதாம். சகக ஆம் நூற்பாவில் கூறப்பட்ட கருத்து நன்னூலாருடையது. இந்நூற்பாவில் கூறப்படுவது தொல்காப்பியர் கருத்தாகும். இவ்விரண்டையும் ஒருங்கு ஏற்றது பொருத்தமின்று.

பன்மைப் பெயர் பன்மையேயன்றி ஒருமையையும் குறிப்பதற்குச் சேனவரையர் ஓராற்றான் அமைதி கூறுவர். அது வருமாறு :

பன்மைக்கேயன்றி ஒருமைக்குமுரியவாய் வருவனவற்றைப் பன்மைப் பெயரென்ற தென்னையெனின் : நன்று சொன்னாய்; பெண்மைப் பெயர் முதலாயினவும் பிற பெயராலுணர்த்தப்படாத பெண்மை முதலாயினவற்றையும் உணர்த்தலானன்றே அப்பெயரவாயின. என்னை? பெண்மை முதலாயின பிற பெயராலுணர்த்தப்படுமாயின், அப் பெண்மை முதலாயினவற்றுள் அப்பெயர் வரைந்து சுட்டலாகாமையின். பன்மைப் பெயர் ஒருமை யுணர்த்துமாயினும், பிறவாற்றாலுணர்த்தப் படாத பன்மையை ஒருகாலுணர்த்தலின் அப்பன்மையான் அவை வரைந்து சுட்டப்படுதலின் அப்பெயரவாயின. அற்றேனும், பன்மை சுட்டிய பெயரென்றமையாற் பன்மையே யுணர்த்தல் வேண்டு மெனின் : அற்றன்று; இயைபின்மை நீக்கலும் பிறிதினியைபு நீக்கலு மென விசேடித்தல் இருவகைத்து. வெண்குடைப் பெருவிறல் என்ற வழிச் செங்குடை முதலியவற்றோடு இயைபு நீக்காது வெண்குடையோடு இயைபின்மை மாத்திரை நீக்கி வெண்குடையானென்பதுபட நிற்றலின் அஃதியைபின்மை நீக்கலாம். கருங்குவளை என்றவழிச் செம்மை முதலா யினவற்றோடு இயைபு நீக்கலின், இது பிறிதினியைபு நீக்கலாம். பன்மை சுட்டிய பெயரென்பது, வெண்குடைப் பெருவிறல் என்பது போல, ஒருமையியைபு நீக்காது பன்மை சுட்டுதலோடு இயைபின்மை மாத்திரை நீக்கிப் பன்மை சுட்டுமென்பதுபட நின்றது. அதனான் விசேடிக்குங்கால் பிறிதினியைபு நீக்கல் ஒருதலை யன்றென்க.

அஃறிணை யொருமையும் அத்திணைப் பன்மையும் உயர்திணை யொருமையுமாகிய பலவற்றையும் உணர்த்தலாற் பன்மை சுட்டிய பெயர் என்பாருமுளர். (தொல் - சொல் - சேனா - கஅஉ) (கூஎ)

ஒருமைப் பெயர்

சகூடு. ஒருமையைக் குறித்த வோருமுப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவர்க்கும் உரிய வாகும்.

(இ - ள்.) ஒருமையைப்பற்றி வருகிற மூன்றுபெயரும், அஃறிணை யொருமைக்கும், உயர்திணை யொருமைக்கு முரியவாம்.

(வ - று.) கோதை வந்தது, கோதை வந்தான், கோதை வந்தாள். (கூஅ)

தாம்

சகூசு. தாமெனு மொருபெயர் பன்மைக் குரிய.

(இ - ள்.) தாமென்னும் பெயர் இருதிணைக்கண்ணும் பன்மைப்பாற்குரியவாம்.

(வ - று.) தாம் வந்தார், தாம் வந்தன. (கூகூ)

தான்

சகூஎ. தானெனு மொருபெய ரொருமைக் குரிய.

(இ - ள்.) தானென்னும் பெயர் இருதிணைக்கண்ணும் ஒருமைப்பாற் குரியவாம்.

(வ - று.) தான் வந்தான், தான் வந்தது. (சஂ0)

எல்லாம்

சகூஅ. எல்லா மென்ப திருதிணைப் பன்மைப்
பெயரோடு நிலையும் பெற்றித் தாகும்.

(இ - ள்.) எல்லாமென்னும் பெயர் இருதிணைக்கண்ணும் பன்மையைக் குறித்துவரும்.

(வ - று) எல்லாம் வந்தேம், எல்லாம் வந்தீர், எல்லாம் வந்தன. (சக)

நீயிர், நீ

சகூக. நீயிர்நீ பாறெளி விலவா மென்ப.

(இ - ள்.) நீயிர் - நீயென்னு மிரண்டு பெயரும், திணைப் பகுதி தெரிய நில்லாவாம்; இருதிணையும் உடன்றோன்றும் பொருளவாம்.

(வ - று.) நீயிர் வந்தீர், நீ வந்தாய் என இருதிணைக்கும் பொது வாய் நின்றமை காண்க. (சஉ)

நீ

இ00. அவற்றுள்,
நீயென் கிளவி யொருமைக் குரிய.

(இ - ள்.) மேற்கூறிப்போந்த இரண்டனுள், நீயென்னும் ஒருபெயர் ஒருமைக்குரியவாம்.

(வ - று.) நீ வந்தாய் எனவரும். (சஙூ)

நீயிர்

நூ0க. நீயி ரெனும்பெயர் பன்மையொடு நிலையும்.

(இ - ள்.) நீயிரென்னும் ஒருபெயர் பன்மைக்குரியவாம்.

(வ - று.) நீயிர் வந்திர் எனவரும். (சஙூ)

ஒருவர்

நூ0உ. [1]ஒருவ ரென்ப துயரிரு பாற்றுய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப.

(இ - ள்.) ஒருவரென்னும் பெயர் உயர்திணை முப்பாலுள் ஒருபால் விளக்காது ஒருவனொருத்தியென்னும் இருபாற்கும் பொதுவாய் நிற்கும்.

(வ - று.) ஒருவர் வந்தார். (சஙூ)

நீயிர், நீ, ஒருவர் என்பன பாலுணருமாறு

நூ0ங. இன்ன பெயரே யிவையெனல் வேண்டின்
[2]முன்னஞ் சேர்த்தி முறையா னுணர்க.

(இ - ள்.) நீயிர், நீ, ஒருவர் என்பனவற்றை இன்னபாற் பெயர் என்றறியலுறிற் சொல்லுவான் குறிப்பொடு கூட்டி முறையானறிக.

(வ - று.) ஒரு சாத்தன் ஒருவனுனும், ஒருத்தியானும், பலரானும், ஒன்றானும் பலவானும் தன்னுழைச் சென்ற வழி, நீ வந்தாய், நீயிர் வந்திரென்னுமன்றே ஆண்டு அது கேட்டான் இவன் இன்னபால் கருதிக் கூறினன் என்பது உணரும். (சஙூ)

பெண்மகள்

நூ0ச. பெண்மக ளென்னும் பெயர்வினை கொள்ளுங்
காலத்திற் குரிய வினையொடு சிவணும்.

---

1. நன் - சொல் - பெயரி - ஙூஉ.

2. முன்னஞ் சேர்த்தி முறையின் உணர்தல் என்பது தொல்காப்பியம்.

(இ - ள்.) பெண்மக ளென்னும்பெயர் வினைகொள்ளுங்கால் பெண்மைக்குரிய வினைகொள்ளும்.

(வ - று.) பெண்மகள் வந்தாள் எனவரும். (சஎ)

செய்யுட்கண் ஆகாரம் ஓகாரமாதல்

நூ0டு. யாப்பினுள் ஆ, ஓ வாகலு மூளவே.

(இ - ள்.) செய்யுளுள் ஆகாரம் ஓகாரமாய்த் திரிதலு மூளவா மென்க.

(வ - று.) வில்லான், வில்லோன், தொடியான், தொடியோன், நல்லார், நல்லோர்.

(வி - ரை.)

'பெயர்வினை யிடத்து னளரய ஈற்றயல்
ஆஓ ஆகலும் செய்யுளுள் உரித்தே' (பொது - உ)

என்ற நன்னூல் நூற்பாவைக் கொண்டு இதன் கருத்தை நன்கறியலாம். எடுத்துக்காட்டில் னளர ஈற்றயல் ஆகாரம் ஓகாரம் ஆதற்கு மட்டுமே உள்ளன. 'வந்தோய் மன்ற தண்கடற் சேர்ப்ப' (அகம் - அ0) என்பதால் யகர ஈற்றயலும் ஆ ஓவாகும் என அறியலாம். (சஅ)

பெயர்ச்சொல் வேற்றுமை ஏற்றல்

நூ0கூ. எல்லாப் பெயரும் வேற்றுமை யேற்கும்.

(இ - ள்.) பெயர்ச்சொல்லெல்லாம் வேற்றுமை பெறும். (சகூ)

வேற்றுமை எட்டு

நூ0எ. வேற்றுமை தானே விளியோ டெட்டே.

(இ - ள்.) விளிவேற்றுமையோடு வேற்றுமை யெட்டாகும். (நூ0)

வேற்றுமை யுருபுகள்

நூ0ஐ. பெயரை யொடுகுவ் வின்னது கண்விளி.

(இ - ள்.) எட்டினைக்கூறிய வேற்றுமையாவன பெயரும், ஐயும், ஒடுவும், குவ்வும், இன்னும், அதுவும், கண்ணும் விளியுமா மென்க. (நூக)

எழுவாய் ஏனை வேற்றுமை ஏற்றல்

நிoக. ஆற னுருபு மேற்குமவ் வுருபே.

(இ - ள்.) பெயராய் நிற்கின்ற எழுவாயுருபே ஐம்முதலாகிய ஆறு வேற்றுமை யுருபுகளையும் ஏற்கும்.

(வ - று.) மரம், மரத்தை, மரத்தொடு, மரத்துக்கு, மரத்தின் மரத்தது, மரத்துக்கண்.

(வி - ரை.) அவ்வுருபு என்னும் சுட்டு எழுவாய் வேற்றுமையைக் குறிக்கும். இனி அவ்வுருபு என்பதை ஆறும் வேற்றுமை யுருபாக்கி ஆறும் வேற்றுமை யுருபும் ஆறனுருபுகளையும் ஏற்கும் எனக்கூறி சாத்தனது, சாத்தனதை, சாத்தனதால், சாத்தனதற்கு, சாத்தனதனின், சாத்தனதனது, சாத்தனதன்கண், சாத்தனதே என எடுத்துக்காட்டுவர் சங்கர நமச்சிவாயர். (நிஉ)

நீயிர், நீவிர், நான் என்பன பிறவுருபு ஏலாமை

நிகo. நீயிர் நீவிர்நா னெழுவா யலபெறு.

(இ - ள்.) நீயிர், நீவிர், நான், எழுவாயல்லாத வேற்றுமை யுருபுகளைப் பெறுவாம்.

(வ - று.) நீயிர் வந்தீர், நீவிர் வந்தீர், நான் வந்தேன். (நிக)

எழுவாயுருபு

நிகக. எழுவா யுருபு பெயர்தோன்று நிலையே.

(இ - ள்.) மேறகூறிப்போந்த வேற்றுமை யுருபுகளுள் முதற்கட் பெயரென்று கூறப்பட்ட வேற்றுமை யுருபாவது பெயர் தோன்றிய துணையாய் நிற்குநிலைமையா மெனவறிக.

(வி - ரை) பெயர் தோன்றிய துணையாய் நிற்கும் நிலைமையாவது உருபும் விளியும் ஏலாது பிறிதொன்றனோடு தொகாது நிற்கும் நிலைமையாம். (நிச)

அதன் பொருள்

நிகஉ. வியங்கோள் வினைநிலை வினைவே பெயர்பண்(பு)
அதன்பொரு ளென்மனு ரழிந்திசி னோரே.

(இ - ள்.) வியங்கோளும், வினைநிலையும், வினைவும் பெயரும், பண்பும் அதன் பொருளாம்.

(வ - று.) ஆ வாழ்க, ஆ வந்தது, ஆ யாது, ஆ கன்று, ஆ கரிது. (நிஙி)

இரண்டாம் வேற்றுமை

நிகஙூ. ஐயே யிரண்டா வதனுரு பாகும்.

(இ - ள்.) இரண்டாம் வேற்றுமை யுருபு ஐயொன்றேயாம். (நிசு)

அதன் பொருள் நிலை

நிகச. காப்பி னெப்பி னாக்கலி னழித்தலின்
அடைதலி னீத்தலி னஞ்சலி னுடைமையின்
அன்ன பிறவு மதன்பய னிலையே.

(இ - ள்.) காப்பும், ஒப்பும், ஆக்கலும், அழித்தலும், அடைதலும், நீத்தலும், அஞ்சலும், உடைமையும் இவை போல்வன பிறவும் இரண்டாம் வேற்றுமைப் பொருணிலையா மென்க.

(வ - று.) ஊரைப்புரக்கும், வேலியொக்கும், மரத்தை வளர்க்கும், வேலியைப் பிரிக்கும், பதியையடையும். மாயையை நீக்கும், பேயையஞ்சும், பொருளுடையன் பிறவுமன்ன. (நிஎ)

மூன்றும் வேற்றுமை

நிகடு. ஆலா னெடொடு மூன்றன துருபே.

(இ - ள்.) மூன்றும் வேற்றுமை யுருபாவது ஆல், ஆன், ஓடு, ஒடு ஆம். (நிஅ)

அதன் பொருள் நிலை

நிகசூ. கருவி யுடனிகழ்வு கருத்தா வதன்பொருள்.

(இ - ள்.) கருவியும், உடனிகழ்ச்சியும், கருத்தாவும் மூன்றும் வேற்றுமைப் பொருணிலையா மென்க.

(வ - று.) வாளால் வெட்டினான், மகனெடு தந்தை வந்தான், அகத்தியனற் றமிழுரைக்கப்பட்டது எனவரும்.

(வி - ரை.) மேலைய நூற்பாவும், இந்நூற்பாவும்,

'மூன்று வதனுரு பாலா னெடொடு
கருவி கருத்தா வுடனிகழ் வதன்பொருள்' (பெயரியல் - சஂ)

என்னும் நன்னூற் கருத்தைத் தழுவியனவாகும். (நிக)

நான்காம் வேற்றுமை

நிகள. குவ்வே நான்கன தருபா கும்மே.

(இ - ள்.) நான்காம் வேற்றுமை யுருபாவது குவ்வொன் றேயாமென்க. (சுo)

அதன் பொருள் நிலை

நிகஅ. கொடைபகை சிறப்புக் காத றகுதி
அதுவாதன் முறைபொருட் டதன்பய னிலையே.

(இ - ள்.) கொடையும், பகையும், சிறப்பும், காதலும், தகுதியும், அதுவாதலும், முறையும், பொருட்டும் நான்காம் வேற் றுமைப் பொருணிலையாமென்க.

(வ - று.) இரவலர்க்குப் பொன்கொடுத்தான், பாம்புக்குக் கருடன் பகை, கற்பார்க்குச் சிறந்தன செவி, நட்டார்க்குக் காதலன், அருகிகல னரசர்க்குரித்து, குண்டலத்திற்குப்பொன், சாத்தனுக்கு மகனிவன், கூலிக்குக் குற்றேவல்.

(வி - ரை.) மேலிய நூற்பாவும் இந்நூற்பாவும்,

'நான்கா வதற்குரு பாகுங் குவ்வே
கொடைபகை நேர்ச்சி தகவது வாதல்
பொருட்டுமுறை யாதியின் இதற்கிதெனல் பொருளே'
(பெயர் - சக)

என்னும் நன்னூற் கருதீதைத் தழுவியனவாகும். (சுக)

ஐந்தாம் வேற்றுமை

நிகக. இல்லு மின்னுமைந் தாவத னுருபே.

(இ - ள்.) ஐந்தாம் வேற்றுமை யுருபாவது இல், இன் ஆம். (சுஉ)

அதன் பொருள் நிலை

நிஉo. அச்ச மாக்க மதலைடு தீர்தல்
பற்றுவிட னீங்க லொப்பில்லி யேது
பிறவு மதன்போ ணிலையா கும்மே.

(இ - ள்.) அச்சமும், ஆக்கமும், தீர்தலும், பற்றுவிடலும், நீங்கலும், ஒப்பும், எல்லையும், ஏதுவும், ஐந்தாம் வேற்றுமைப் பொருணிலையாம்.

(வ - று.) கள்ளரினஞ்சும், வாணிகத்தினுயிரினன், ஊரிற்றீர்ந்தான், காமத்திற் பற்றுவிட்டான், மலியின் வீழருவி, காக்கையிற்கரிது களம் பழம், மதுரையின் வடக்குச் சிதம்பரம், கல்வியிற் பெரியன் கம்பன் என வரும். (சுஈ)

ஆரும் வேற்றுமை

இஉக. ஒருமைக் கதுவு மாதுவும் பன்மைக்
கவ்வு மாரு வதற்குரு பாகும்.

(இ - ள்.) ஆரும் வேற்றுமை யுருபாவது ஒருமைக்கு அதுவும் ஆதுவும், பன்மைக்கு அகரமும் ஆகுமென்க. (சுசு)

அதன் பொருள் நிலை

இஉஉ. அதன்பொருள் குணமுறுப் பொன்றன் கூட்டங்
திரிபி னுக்கமொடு பலவி னீட்டம்
ஆந்தற் கிழமையும் பிறிதின் கிழமையும்
ஆகு மென்மனு ரறிந்திசி னோரே.

(இ - ள்.) பண்பும், அவயவமும், ஒருபொருட் கூட்டமும், ஒன்றுதிரிந் தொன்றுகலும், பலபொருட் கூட்டமும் ஆகிய வைந்து தற்கிழமைப் பொருள்களையு மவையல்லாத பிறிதின் கிழமைப் பொருள்களையு முடையனவாக அவ்வுருபுகளை யேற்ற பெயர்ப்பொருள்கள் வேறுபட்ட இவ்விருவகைச் சம்பந்தப் பொருள்களுமா மென்க.

(வ - று.) சாத்தனது கருமை, நெல்லது குப்பை, நெல்லினது பொரி, பறவைகளது கூட்டம், தற்கிழமை; சாத்தனது பசு, பொருள்; சாத்தனது வீடு, இடம்; சாத்தனது நாள், காலம்; மூவகைப் பிறிதின்கிழமை, ஏனைய தனகைகள்.

(வி - ரை.) மேலிய நூற்பாவும் இந் நூற்பாவும்,

'ஆற னெருமைக் கதுவு மாதுவும்
பன்மைக் கவ்வு முருபாம் பண்புறுப்
பொன்றன் கூட்டம் பலவி னீட்டம்
திரிபி னுக்க மாந்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே' (பெயர் - சஈ)

என்னும் நன்னூற் கருத்தைத் தழுவியனவாகும். (சுஇ)

ஏழாம் வேற்றுமை

இஉஊ. கண்முத லியனவே ழனதுரு பாகும்.

(இ - ள்.) ஏழாம் வேற்றுமை யுருபாவது கண் முதலியன வாம். (சுசு)

அதன் பொருள் நிலை

நூஉச. அதன்போருள் பொருண்முத லாறிரு கிழமையின்
இடனுய் நிற்ப தென்மனர் புலவர்.

(இ - ள்.) பொருளும், இடமும், காலமும், சினையும், குண மும், தொழிலும் ஆறும் தற்கிழமைப் பொருள் பிறிதின் கிழமைப் பொருள்களுக்கும் இடமாய் நிற்கின்ற வுருபேற்ற பெயர்ப்பொருள் வேறுபட்ட அவ்விடப் பொருணிலையாம்.

(வ - று.) மணியின்க ணிருக்கின்றதொனி - தற்கிழமை. பனையின் கண் வாழ்கின்ற தன்றில் - பிறிதின் கிழமை; பொருள். ஊரின்கணிருக்கு மில்லம் - தற்கிழமை. ஆகாயத்தின்கட் பறக்கின்றது பருந்து - பிறிதின் கிழமை; இடம். நாளின்க ணுழிகையுள்ளது - தற்கிழமை. வேனிற்கட் பாதிரிபூக்கும் - பிறிதின்கிழமை; காலம். கையின்கணுள்ளது விரல் - தற்கிழமை; கையின்கண் விளங்குகின்றது கடகம் - பிறிதின்கிழமை. சினை. கறுப்பின் மிக்கதழகு - தற்கிழமை. இளமையின்கண் வாய்த்தது செல்வம் - பிறிதின்கிழமை; பண்பு. ஆடற்கணுள்ளது சதி - தற் கிழமை. ஆடற்கட் பாடப்பட்டது பாட்டு; பிறிதின் கிழமை. தொழில்.

(வி - ரை.) மேலைய நூற்பாவும் இந்நூற்பாவும்,

'ஏழ னுருபுகண் ணுதி யாகும்
பொருண்முத லாறு மோரிரு கிழமையின்
இடனுய் நிற்ற லிதன்பொரு ளென்ப' (பெயர் - சச)

என்னும் நன்னூற் கருத்தைத் தழுவியனவாகும். (சுஎ)

இதுவுமது

நூஉடு. கண்கால் புறமக முள்ளுழை கீழ்மேல்
பின்சார யல்புடை தேவகை யெனுஅ
முன்னூ லிடைகடை வலமிட மெனுஅ
அன்ன பிறவு மதன்பால வேன்மனர்.

(இ - ள்.) கண் முதல் இடம் ஈருகக் கூறிய பத்தினான் பதும் அவை போல்வன பிறவும் ஏழாவதன் றிறத்தனவாம்.

(வ - று.) கண்ணகல், ஊர்க்கால், ஊர்ப்புறம், எயிலகம், சில்லுள், அரசனுழை, ஆலின்கீழ், மரத்தின்மேல், ஏர்ப்பின், காட்டுச்சார், உறை யூர்க்கயல், எயிற்புடை, வடபால், புவிமுன், நூலினிடை, நூலின்கடை,

நூலின்றலை, கைவலம், தன்னிடம், அவ்விடப் பொருள்பற்றி ஏழாம் வேற்றுமை வந்தவாறு காண்க.

(வி - ரை.) இவற்றை உருபென்பர் இளம்பூரணர், நன்னூலார் முதலியோர், சேனவரையர் இதனை மறுத்து உருபின் பொருள்பட வந்த பிற சொற்கள் என்பர். (சுஅ)

வேற்றுமைத் தொகையும் அன்மொழித் தொகையும் விரிந்து பொருள்படுதல்

நூஉசு. [1]வேற்றுமைப் பொருளா விரிக்குங் காலை
ஈற்றினின் றியலுந் தொகைவயிற் பிரிந்து
பல்லா றுகப் பொருள்புணர்ந் திசைக்கும்
எல்லாச் சொல்லு மூரிய வென்ப.

(இ - ள்.) வேற்றுமைத் தொகைப் பொருளா விரிக்கு மிடத்து வேற்றுமையேயன்றி அன்மொழித் தொகையும் விரிப் புழிப் பல்லாற்று னன்மொழிப் பொருளோடு புணர்ந்துவரும் எல்லாச் சொல்லும் விரிக்கப்படும்.

(வ - று.) தாழ்குழல் - தாழ்குழலையுடையாள், கருங்குழல் - கருங் குழலையுடைய பேதை; பிறவுமன்ன.

(வி - ரை.) வேற்றுமைத் தொகையை விரிப்புழி இடையில் சில சொற்கள் விரிந்து நின்று பொருள்படுதல்போல அன்மொழித் தொகையை விரிப்புழியும் இறுதியில் சில சொற்கள் விரிந்து நின்று பொருள் உணர்த்தும் என்பது இதன் கருத்து. (சுக)

சினைச் சொல்லிற்கு இரண்டும் ஏழும் உரித்தாதல்

நூஉஎ. சினைநிலைக் கிளவிக் கிரண்டு மேழும்
வினைநிலை யொக்கு மென்மனூர் புலவர்.

(இ - ள்.) சினைமேல் நிற்குஞ் சொல்லிற்கு இரண்டாவதும் ஏழாவதும் வினைநிலைக்கணைக்கும்.

(வ - று.) கோட்டைக் குறைத்தான், கோட்டின்கட் குறைத்தான். (எ0)

கன்றலும் செலவும்

நூஉஅ. கன்றலிற் செலவி னென்றுமார் வினையே.

---

1. தொல் - சொல் - வேற்றுமை - உஉ.

(இ - ள்.) கன்றற் பொருண்மேல் வருஞ்சொல்லும், செல வுப் பொருண்மேல் வருஞ்சொல்லும் இரண்டாவதற்கும் ஏழாவ தற்கும் தொழிலாம்.

(வ - று.) சூதினைக் கன்றினான், சூதின்கட் கன்றினான், நெறியைச் சென்றான், நெறிக்கட் சென்றான். (எக)

முதலும் சினையும்

நிஉக. முதற்கா ருயிற் சினைக்கிரண் டாகும்.

(இ - ள்.) முதலுக்கு ஆரும் வேற்றுமை வருமாயிற் சினைக் கிரண்டாம் வேற்றுமை வரும்.

(வ - று.) யானையது கோட்டைக் குறைத்தான். (எஉ)

இதுவுமது

நிஉ0. முதலிவை சினையிவை யெனவே றுளவில
உரைப்போர் குறிப்பின் அற்றே பிண்டமும்.[1]

(இ - ள்.) முதற் பொருள்கள் இவை சினைப் பொருள்கள் இவை யென்கிறதற் கிரண்டாகப் பிரித்துச் சொல்வோரது குறிப்பின் மாத்திரையனவேயாம், பிண்டப் பொருளும் அத் தன்மைத்தாம்.

(வ - று.) யானையைக் குறித்தபோது யானையுண்டாக அதனது கை கால் முதலியவை வேறில்லையாம்; அவயவத்தைக் குறித்தபோது யானை வேறில்லையா மாதலால் இவ்வாறு கூறப்பட்டன. இனிப் பிண்டப் பொருள் நெல்லைப் பொலியின்கண் வாரினான் என்பது பிண்டப் பொரு ளாகிய பொலிக் குப்பையும் பிண்டித்த பொருளாகிய நெல்லும் வேறுகா மையால் அவ்விரண்டிடத்தும் ஐயுருபு வருவது சிறப்பன்றும். (எங)

ஒருவினை யொடுச்சொல்

நிஉக. மூன்றிற் கோதிய வொருவினை யொடுச்சொல்
உயர்திணை யுணர்த்தும் பெயர்வழித் தோன்றும்.

(இ - ள்.) மூன்றுவதற்குக் கூறிய ஒருவினையொடு மொழி உயர்திணைப்பொருளைத் தெரிவிக்கும் பெயர்வழித் தோன்றும்.

(வ - று.) ஆசிரியனோடு மாணாக்கர் வந்தார். (எச)

---

[1] நன் - பெயரியல் - (உகசு)

ஆக்கமொடு புணர்ந்த ஏது

நூஉ. ஐந்தினு மூன்றினு மறையு மாக்கம்
ஒடுபுண ரேதுப் பெயர்ச்சொற் கிளவி
நோக்கு நோக்கொரு தன்மைய வாகும்.

(இ - ள்.) ஐந்தாம் வேற்றுமைக் கண்ணும் மூன்றும் வேற்றுமைக் கண்ணுங் கூறிய ஆக்கத்தோடு கூடிய ஏதுச்சொல் அவ்வேதுப் பொருண்மையை நோக்கும் நோக்கு ஒருதன்மைய வாம்.

(வ - று.) வாணிகத்தி ஞயினன் - வாணிகத்தி ஞயபொருள்; வாணிகத்தா ஞயினன் - வாணிகத்தா ஞயபொருள். (எஇ)

இரண்டன் நோக்கம்

நூஉ. இரண்ட னோக்கமு மவற்றோ டியலும்.

(இ - ள்.) இரண்டாவதற்குக் கூறிய நோக்கப் பொருண்மை நோக்கிய நோக்கமும் ஐந்தாவதற்கும் மூன்றுவதற்குமுரிய ஏதுப் பொருண்மையுமாம்.

(வ - று.) 'வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி'

வானை நோக்கி வாழும், வானுனோக்கி வாழும், வானினோக்கி வாழும்.

(வி - ரை.) நோக்கம் இருவகைப்படும். ஒன்று நோக்கிய நோக்கு. பிறிதொன்று நோக்கல் நோக்கம் என்பது. முன்னையது கண்ணுல் நோக்குதலைப் பொருளாக வுடையது. பின்னையது மனத்தால் நோக்குதலைப் பொருளாக வுடையது.

ஈண்டு, வானோக்குதலும், கோல் நோக்குதலும் மனத்தாலாயது ஆதலின் இதுவே நோக்கல் நோக்கம் எனப்படும். (எசு)

உயர்திணைக்கண் வரும் நான்கனுருபும் ஆறனுருபும்

நூஉ. உயர்திணை மருங்கினு லாறுமொத் தியலும்.

(இ - ள்.) உயர்திணைக்கண் நான்காம் வேற்றுமையுருபும் ஆறும் வேற்றுமையுருபும் ஒரு தன்மையவாம்.

(வ - று.) நம்பிக்கு மகன், நம்பியது மகன்.

(வி - ரை.) ஆறும் வேற்றுமை யுருபு அஃறிணைக்குரியது ஆதலின் "அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகையின், அதுவென் உருபு கெடக் குகரம் வருமே" [வேற்றுமை மயங் - கச] என்பர் தொல்

காப்பியர். இவ்வாசிரியர் அம்மரபு மாற்றி ஆனும் நான்கும் ஒத்துவரும் என்கிறார். (எஎ)

தடுமாறு தொழிற்பெயர்

நூகூ. இரண்டு மூன்றுந் தடுமாறு தொழில்வயிற்
கடிநிலை யின்றே போருள்வயி னான.

(இ - ள்.) இரண்டாம் வேற்றுமையும் மூன்றும் வேற்றுமையும் தனக்கே யுரித்தாய் நில்லாது ஒருகாலீற்றுப் பெயரொடுஞ் சென்றும் தடுமாறுந் தொழிலொடு தொடர்ந்த பெயர்க்குக் கடியப் படாவாம், அவ்வேற்றுமை தொக்க அவற்றின் பொருள் நிற்குந் தொகைக்கண்.

(வ - று.) புலி கொன்றயானை, புலியைக் கொன்றயானை, புலியாற் கொன்றயானை.

(வி - ரை.) 'புலிகொல் யானை' என்ற தொடரில், கொல் என்பது வினையாம்; அஃதாவது தொழிலாம். இச்சொல் முன்னர் இருக்கும் புலி என்னும் பெயர்க்கே யுரியதாகாது, பின்னர் இருக்கும் யானை என்னும் பெயர்க்கும் உரியதாயிருத்தலின் அது தடுமாறு தொழிலாயிற்று. அச் சொல்லொடு பெயர்களும் தொடர்ந்திருத்தலின் தடுமாறு தொழிற் பெயராயிற்று.

இத்தொடரில் 'புலியைக் கொன்ற யானை' என்று இரண்டனுருபு வைத்து விரிப்பின், யானை வினைமுதலாகிப் புலி செயப்படு பொருளாகும். 'புலியால் கொல்லப்பட்ட யானை' என்று மூன்றனுருபு வைத்து விரிப்பின், புலி வினைமுதலாகி யானை செயப்படு பொருளாகும்.

(தொல் - சேனா - விளக்கவுரை - கூசு) (எஅ)

வாழ்ச்சிப் பொருள்

நூகூ. ஆறு மேழும் வாழ்ச்சியொடு சிவணும்.

(இ - ள்.) ஆறும் வேற்றுமையும், ஏழாம் வேற்றுமையும் வாழ்ச்சிக்கு ஒக்குமென்க.

(வ - று.) காட்டதியானை, காட்டின்கண் யானை. (எகூ)

ஓம்படைப் பொருண்மை

நூஎ. இரண்டு மூன்றும் ஓம்படைக் கோக்கும்.

(இ - ள்.) ஓம்படைப் பொருண்மைக்கு இரண்டாம் வேற்றுமையும் மூன்றும் வேற்றுமையுமொத்த வரிமையவாமென வறிக.

(வ - று.) புலியைப் போற்றிவா, புலியாற் போற்றிவா. (அ0)

கொடையெதிர் கிளவி

ருகூ. நான்கும் ஆறுங் கொடையெதிர்க் கோக்கும்.

(இ - ள்.) கொடையெதிர்ப் பொருண்மைக்கு நான்காம் வேற்றுமையும் ஆறும் வேற்றுமையும் ஒக்கும்.

(வ - று.) நாகர்க்குப்பலி, நாகரதுபலி எனவரும்.

(வி - ரை.) நாகர் பலி என்பதை 'நாகர்க்குப் பலி' என விரித்தலே யன்றி நாகரது பலி என விரிப்பினும் அமையும் என்பதாம். நாகர்க்குக் கொடுத்தலே விரும்பி மேற்கொண்டவழித் திரிபின்றி அஃது அவர்க்கு உடைமையாதலின் கிழமைப் பொருட்கு உரிய உருபால் கூறினும் அமையும் எனச் சேனவரையர் விளக்கம் காண்பர்.

(தொல் - இளம் - விளக்கவுரை - கஙி) (அக)

அச்சப் பொருள்

ருகூக. அச்சப் பொருண்மைக் கைந்து மிரண்டும்
எச்ச மிலவே பொருள்வயி னான.

(இ - ள்.) அச்சப் பொருண்மைக்கு ஐந்தாம் வேற்றுமையும் இரண்டாம் வேற்றுமையும் வரும்.

(வ - று.) பழியினஞ்சும், பழியையஞ்சும். (அஉ)

உருபுகள் ஈற்றினும் நிற்றல்

ருசo. வேற்றுமை யீற்றினு நிற்பினும் வரையார்.

(இ - ள்.) வேற்றுமைத் தொடரிறுதிக்கண்ணும் நிற்றலே கோக்கார்.

(வ - று.) கடந்தானிலத்தை, வந்தான்சாத்தனொடு, கொடுத்தான் சாத்தற்கு, வலியன் சாத்தனின், ஆடைசாத்தனது, கூகைகுன்றக்கண். (அக)

பொருள் செல் மருங்கில் உருபு திரிதல்

ருசக. [1]யாத னுருபிற் கூறிற் ருயினும்
பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்.

---

1. தொல் - சொல் - கoசு.

(இ - ள்.) எவ்வுருபிற் கூறிற்றாயினும் பொருள்போன்ம் வழியே வேற்றுமை பொருந்துமென்க.

(வ - று.) மணற்கீன்ற நாணற்கிழங்கின்முளை, மணற்கணீன்ற நாணற்கிழங்கின்முளை. (அசை)

உருபுகள் இணைந்தும் தொக்கும் வருதல்

நூசஉ. ஒருரு பேனைய வுருபொடு சிவணலும்
தொக்குநின் றுழுகலும் வழுவா காவே.

(இ - ள்.) ஒரு வேற்றுமையுருபு வேறொரு வேற்றுமை யுருபோடு பொருந்தலும் தொக்குநின்று நடத்தலும் குற்றமில்லை யாம்.

(வ - று.) சாத்தனதனை, சாத்தனதனெடு, சாத்தனதற்கு, சாத்தனதனின், சாத்தனதுவது, சாத்தனதன்கண், நிலங்கடந்தான், தாய் மூவர், கருப்புவேலி, வரைவீழருவி, சாத்தன்கை, குன்றக்கூகை.

(வி - ரை.) ஒருருபு பிறிதோருருபை யேற்றல் எனப் பொதுவகையாற் கூறினரேனும், ஈண்டுப் பிறவுருபை ஏற்றற்கு ஆறனுருபே ஏற்றதாகக் கொண்டனர் உரையாசிரியர். இளம்பூரணரும் சேனவரையரும் 'பிறிது பிறிதேற்றல்' (தொல் - சொல் - கஅச) என்னும் நூற்பாவில் இங்ஙனமே உரை கண்டனர். எனினும் தெய்வச் சிலையாரும், சிவஞான முனிவரும் இதனை வன்மையாக மறுப்பர். அத்திறமெல்லாம் அவரவர் உரை நோக்கி யறிக.

'பிறிது பிறிதேற்றலும் உருபுதொக வருதலும்
நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப'

(தொல் - சொல் - கஅச) என்ற தொல்காப்பியக் கருத்தை இந்நூற்பா தழுவியதாகும், (அடி)

உருபுகள் எதிர்மறுத்துரைப்பினும் பொருள் திரியாது வருதல்

நூசஙூ. எதிர்மறுத் துரைப்பினும் பொருணிலை திரியா.

(இ - ள்.) விதிமுகத்தாற் கூறுது எதிர்மறுத்துக் கூறினும் தத்தம் இலக்கணத்தான் வரும் பொருணிலைதிரியா வேற்றுமை யுருபுகள்.

(வ - று.) மரத்தைக் குறையான், வேலானெறியான், குறையான், எறியான், என்றவழி வினை நிகழாமையின், மரமும், வேலும், செயப்படு பொருளும், கருவியு மெனப்படாவாயினும் எதிர்மறைவினையும் விதி வினையோ டொக்குமென்பது நூன்முடிபாகலால் ஆண்டுவந்த வுருபும், செயப்படுபொருண் முதலாயினவற்று மேல்வந்தனவெனப் படுமென வழுவமைதியாம்.

(வி - ரை.)

'எதிர்மறுத்து மொழியினும் தத்தம் மரபின்
பொருள்நிலை திரியா வேற்றுமைச் சொல்லே'

(வேற்றுமை மயங் - உசு) என்னும் தொல்காப்பிய நூற்பாவைத் தழுவிய தாகும். (அசு)

ஐ, கு, ஆன் என்பன அகரம் பெறுதல்

நூசக. ஐ, கு, ஆ னென வரூஉ மிறுதி
அ வோடு சிவணும் யாப்பின் மருங்கே.

(இ - ள்.) ஐ, கு, ஆன் எனவரு மூன்றுருபும் தொட ரிறுதிக்கணின்றவழி அகரத்தோடு பொருந்தி நிற்றலு முடையன வாஞ் செய்யுட்கணென்க.

(வ - று.) காவலோனைக் களிறஞ்சும்மே, காவலோனக் களி றஞ்சும்மே, கடிநிலையின்றேயாசிரியற்கு, கடிநிலையின்றேயாசிரியற்க (தொல் - புள்ளி - கூச) புரைதீர்கேள்விப் புலவரான், புரைதீர்கேள்விப் புலவரான எனவரும். (அஎ)

அஃறிணைக்கண் ஆன் அகரமாகத் திரிதல்

நூசஞ. அஃறிணை மருங்கி னென்அ வாகும்.

(இ - ள்.) அஃறிணைக்கண் ஆன்உருபொன்றுமே அகரத் தோடு பொருந்துமென்க.

(வ - று.) புள்ளினன், புள்ளினன எனவரும்.

(வி - ரை.)

'ஐயான்குச் செய்யுட் கவ்வு மாகும்
ஆகா அஃறிணைக் கானல் லாதன'

(நன் - பெயரி - சுக) என்பர் நன்னூலாரும். (அஅ)

நான்க னுருபு பிறவுருபுகளோடு கூடிவருதல்

நூசசு. குச்சில வுருபொடு கூடிநின் றேழுகும்.

(இ - ள்.) நான்காம் வேற்றுமை யுருபு சிலவுருபுகளோடு கூடி நடக்கும். (அசு)

ஆறனுருபொடு நான்க னுருபு வருதல்

நிசஎ. இதன தீதுவித் தன்மைத் தென்னும்
ஆருவ தன்பொருண் மையினு மாகும்.

(இ - ள்.) இதனது இஃது இத்தன்மைத்து என்னும் ஆருவதன் பொருண்மையோடும் வரும்.

(வ - று.) யானையது கோடுகூரிது, யானைக்குக் கோடுகூரிது. (கo)

இரண்ட னுருபொடு நான்கனுருபு வருதல்

நிசஅ. ஒன்றனை யொன்றுகொள் ளிரண்டினும் வருமே.

(இ - ள்.) ஒன்றனையொன்று கொள்ளும் என்னும் இரண்டாவதன் பொருண்மையோடும் வரும்.

(வ - று.) இவளைக்கொள்ளு மிவ்வணி, இவட்குக்கொள்ளு மிவ்வணி. (கக)

மூன்ற னுருபொடு நான்கனுருபு வருதல்

நிசக. ஒன்றினை லொன்று தொழிற்படற் கொத்த
மூன்று வதனெடு முடிந்துநின் றுழுகும்.

(இ - ள்.) ஒன்றினைலொன்று தொழிற்படற்கு ஒக்கும் என்னும் மூன்றுவதன் பொருண்மையோடும் வரும்.

(வ - று.) அவராற்செய்யத் தகுமக்காரியம், அவர்க்குச்செய்யத் தகுமக்காரியம். (கஉ)

ஐந்தனுருபொடு நான்கனுருபு வருதல்

நிநo. நிலம்வரைக் கிளவி யைந்தொடு நிலையும்.

(இ - ள்.) நிலத்தை வரைந்து கூறும் ஐந்தாவதன் பொருண்மையோடும் வரும்.

(வ - று.) கருவூரின்கிழக்கு, கருவூர்க்குக்கிழக்கு. (கங)

ஆறனுருபொடு நான்கனுருபு வருதல்

நிநக. முறைப்பெய ராறினு முறைக்கு மென்ப.

(இ - ள்.) முறைப் பொருண்மையைத் தரும் ஆறுவதன் பொருண்மையோடும் வரும்.

(வ - று.) சாத்தனது மைந்தன், சாத்தனுக்கு மைந்தன். (கூச)

ஐந்தனுருபொடு நான்கனுருபு வருதல்

நூறுஉ. பண்பி னுக்கத் தைந்தோடுஞ் சிவணும்.

(இ - ள்.) பண்பி னுக்கத்து ஐந்தாவ தன் பொருண்மை யோடும் வரும்.

(வ - று.) சாத்தனினெடியன், சாத்தற்குநெடியன் எனவரும். (கூடி)

ஏழனுருபொடு நான்கனுருபு வருதல்

நூறுஊ. கால முணர்த்து மேழோடு நிலையும்.

(இ - ள்.) காலத்தின்கண் அறியப்படும் ஏழாம் வேற்று மைப் பொருண்மையினும் வருமென்க.

(வ - று.) காலைக்கண்வரும், காலைக்குவரும். (கூசு)

ஐந்தனுருபொடு நான்கனுருபு வருதல்

நூறுச. பற்று விடுபெய ரைந்தோடுஞ் சிவணும்.

(இ- ள்.) பற்றுவிடு பொருண்மைப் பெயராகிய ஐந்தாம் வேற்றுமைப் பொருண்மையோடும் வரும்.

(வ - று.) மனைவாழ்க்கையின் பற்றுவிட்டான், மனைவாழ்க்கைக்குப் பற்றுவிட்டான்.

(வி - ரை.) இசை முதல் இந்நூற்பா வரையுள்ள கருத்துக்கள்,

‘இதன திதுவிற் றென்னுங் கிளவியும்
அதனைக் கொள்ளும் பொருள்வயி னனும்
அதனற் செயற்படற் கொத்த கிளவியும்
முறைக்கொண் டெழுந்த பெயர்ச்சொற் கிளவியும்
பால்வரை கிளவியும் பண்பி னுக்கமும்
காலத்தி னறியும் வேற்றுமைக் கிளவியும்
பற்றுவிடு கிளவியும் தீர்ந்துமொழிக் கிளவியும்
அன்ன பிறவும் நான்க னுருபில்
தொன்னெறி மரபின தோன்ற லாறே’

(வேற்றுமை மயங் - உஎ)

என்னும் தொல்காப்பியக் கருத்தைத் தழுவியனவாகும். (கூள)

ஒரு உருபு பிற வுருபோடும் வரும்

நிருநு. மற்றைய வுருபும் அவற்றே ரற்றே.

(இ - ள்.) நான்கனுருபல்லாத பிறவுருபுகளும் தொகையல்லாத தொடர்மொழிக்கண் ஒன்றன் பொருள் சிதையாமல் ஒன்று மயங்குதற்கும் குற்றமிலவாமென்க.

(வ - று.) நூலதுகுற்றங் கூறினுனென்னுந் தொடர்மொழிக்கண் நூலுக் குற்றங்கூறினுனெனவும், அவட்குக் குற்றேவல்செய்யுமென்னுந் தொடர்மொழிக்கண் அவளது குற்றேவல்செய்யுமெனவும் வரும்.

(வி - ரை.)

'ஏனை யுருபும் அன்ன மரபின
மான மிலவே சொன்முறை யான'

(வேற்றுமை மயங் - உசு)

என்னும் தொல்காப்பியக் கருத்தைத் தழுவியதாகும். (கூசு)

விளியுருபு

நிருசு. விளியேனப் படுப ஏற்கும் பெயரோடு
விளங்கத் தோன்று மியற்கைய வென்ப.

(இ - ள்.) விளியென்று கூறப்படுவன தம்மை யேற்கும் பெயரொடு விளங்கத் தோன்றும் இயல்புடையனவா மென்க.

(கூகூ)

விளிகொள்ளும் பெயரும் கொள்ளாப் பெயரும்

நிருள. அதுவே,
விளிகொளும் பெயரும் விளிகொளாப் பெயரும்
எனவிரு திறத்தவா மென்மனுர் புலவர்.

(இ - ள்.) அதுவே விளிகொளும் பெயரும், விளிகொளாப் பெயருமென விரண்டு திறத்தனவாம். (கஂஂ)

உயர்திணைக்கண் விளியேற்கும் உயிர் ஈறுகள்

நிருரு. அவைதாம்,
இ, உ, ஐ, ஓ விறுதிக் கிளவி
உயர்திணை மருங்கின் விளியேற் கும்மே.

(இ - ள்.) மேற்கூறப்படுவன வாகிய பெயர்தாம் இ, உ, ஐ, ஓ, கௌயிறுதியாகிய நான்கு பெயரும் உயர்திணைக்கண் விளியேற்குமென வறிக. (கபக)

இ, ஐ விளியேற்குமாறு

நூநூக. அவற்றுள்,
இ, ஈ யாகும் ஐ, ஆ வாகும்.

(இ - ள்.) முற்கூறிய நான்கீற்றினுள் இ, ஈ யாயும் ஐ, ஆ வாயும் விளிக்குமென்க.

(வ - று.) நம்பி, நம்பீ; நங்கை, நங்காய். (கஉ)

உ, ஓ விளியேற்குமாறு

நூசுஉ. உகரம் ஓகாரம் ஏயோடு சிவணும்.

(இ - ள்.) உ, ஓ, ஏ பெற்றுவிளிக்கும்.

(வ - று.) வேந்து, வேந்தே; கோ, கோவே. (கஊ)

முற்கூறிய உகரம் குற்றியலுகரம் எனல்

நூசுக. உகரந் தானே குற்றிய லுகரம்.[1]

(இ - ள்.) முற்கூறிய வுகரமானது குற்றியலுகரமாம். (கஎ)

உயர்திணைக்கண் பிற ஈறுகள் விளியேலாமை

நூசுஉ. உயர்திணை மருங்கினே னையவுயிர் விளியா.

(இ - ள்.) உயர்திணைக்கண் முற்கூறிய நான்கு ஈறு மல்லாத வுயிர் விளியேலாவா மெனவறிக. (கஅ)

அளபெடை மிகூஉம் இகரஇறு பெயர்

நூசுங. அளபெடை மிகூ மிகர விறுபெயர்
இயற்கைய வாகு மென்மனோர் புலவர்.

(இ - ள்.) அளபெடை தன்மாத்திரையின் மிக்கும் இகர விறுதிப் பெயரியல்பாய் விளிக்குமென்க.

---

1. தொல் - சொல் - கஉங.

(வ - று.) தோழீ இஇஇஇ. (கஅசு)

ஐகாரம் விளியேற்குமாறு

ருசுச. ஐகா னிறுதி முறைப்பெயர் மருங்கின்
ஆவோடு வருதற்கு முரிய வாகும்.

(இ - ள்.) ஐகாரவிறுதி முறைப்பெயர்க்கண் ஆவோடு விளியேற்று வருதற்குரியவாம்.

(வ - று.) அன்னே, அன்ஞ. உம்மையால், அன்ஞய். (கஅன)

அண்மைக்கண் விளியேற்குமாறு

ருசுஞ. அண்மைப் பெயரியல் பாக விளிக்கும்.

(இ - ள்.) சமீபப்பெய ரியல்பாய் விளிக்கும்

(வ - று.) நம்பி வாழி, வேந்து வாழி, நங்கை வாழி, கோ வாழி. (கஅஅ)

உயர்திணைக்கண் விளியேற்கும் புள்ளியிறுகள்

ருசுசு. உயர்திணை மருங்கின் னரலள விறுதி
விளிக்கு மென்மனுர் மெய்யுணர்ந் தோரே.

(இ - ள்.) உயர்திணைக்கண் ன, ர, ல, ள க்களிறுதிப் பெயர்கள் விளியேற்குமென்க. (கஅசு)

ஏனைய ஈறுகள் ஏலாவெனல்

ருசுஎ. ஏனைய புள்ளிகள் விளியே லாவே.

(இ - ள்.) அங்ஙான்கு மல்லாத மெய்களை யிறுதியாகிய பெயர்கள் விளியேலாவா மென்க.

(வி - ரை.) விளியேற்பன இவையெனவே, ஏலாதன பிற என்பது அறியப்படும். அங்ஙனமாக இந்நூற்பா வேண்டாத தொன்றெனின், அன்று, கூறப்பட்ட புள்ளியிறு பிறவாற்றுன் விளிகொள்வனவும் உள என்பது உணர்த்துதற்கும், கூறப்படாத புள்ளியும் சிறுபான்மை விளி யேற்றலும் இதற்குப் பயனுகக் கொள்க.

எ - டு: பெண்டிர், பெண்டிரோ; தம்முன், தம்முனு; விளங்கு மணிக் கொடும்பூணுஅய் (புறம் - கஉ0) என வருவனவும் இதனுற் கொள்க. (கக0)

னகரம் விளியேற்குமாறு

நூசூ. அன்னே னிறுதி யாவா கும்மே.

(இ - ள்.) மூற்கூறியவற்றுள் அன்னென்னும் னகரவிறுதி ஆவாக விளிக்கும்.

(வ - று.) சோழன், சோழா.

(வி - ரை.) தொல்காப்பியத்துள் அவற்றுள் என்ற தனிச் சொல் லுடன் இந்நூற்பா இடம்பெற்றுள்ளது. (ககக)

னகரம் அண்மைக்கண் விளியேற்குமாறு

நூசூக. அண்மைக் கிளவிக் ககர மாகும்.

(இ - ள்.) அண்மை விளிக்கண் அகரமாய் விளிக்கும்.

(வ - று.) துறைவன், துறைவ; ஊரன், ஊர. (ககஉ)

ஆன் என்பது விளியேற்குமாறு

நூஎ ஏ. [1]ஆனென் னிறுதி யியற்கை யாகும்.

(இ - ள்.) ஆனென்னும் னகரவிறுதிப்பெயர் இயல்பாய் விளிக்கும்.

(வ - று.) மலயமான், சேரமான். (ககங)

பண்புகொள் பெயர் விளியேற்குமாறு

நூஎக. பண்புகொள் பெயரா லுயா கும்மே.

(இ - ள்.) ஆனிறுதி னகரவீற்றுப் பண்புப்பெயர் ஆயாக விளிக்கும்.

(வ - று.) கரியான், கரியாய். (ககச)

தொழிற் பெயர் விளியேற்குமாறு

நூஎஉ. தொழிற்பெயர்க் கிளவி யவற்றே ரற்றே.

(இ - ள்.) ஆனிறுதித் தொழிற்பெயர் னகரவீற்றுப் பண்புப பெயரைப்போல ஆயாக விளிக்கும்.

1- தொல் - சொல் - ககஉ.

(வ - று.) வந்தான், வந்தாய்; சென்றான், சென்றாய். (சகஇ)

அளபெடைப் பெயர் விளியேற்குமாறு

நூஎங. [1]அளபெடைப் பெயரே யளபெடை யியல.

(இ - ள்.) ஆனீற்றளபெடைப் பெயர் இகரவீற்றள பெடையைப் போல மூன்று மாத்திரையின் நீண்டு இயல்பாய் விளிக்கும்.

(வ - று.) உம்பர்கிழாஅ அஅன். (சகசு)

முறைப் பெயர் விளியேற்குமாறு

நூஎச. முறைப்பெயர்க் கிளவி யேயோடு சிவணும்.

(இ - ள்.) னகரமெய்யீற்று முறைப்பெயர்ச்சொல் ஏகாரம் பெற்று விளிக்கும்.

(வ - று.) மகனே. (சகஎ)

விளியேலாப் பெயர்கள்

நூஎடு. யானவ னிவனுவன் விளியே லாவே.

(இ - ள்.) யான், அவன், இவன், உவன் விளியேலாவாம். (சதஅ)

இதுவுமது

நூஎசு. யாவனு மவ்வியல் பிற்று கும்மே.

(இ - ள்.) யாவனென்னும் வினப் பெயரும் விளியேலாவாம். (சகக)

ஆர், அர், என்பன விளியேற்குமாறு

நூஎஎ. [2]ஆரு மருவு மீரோடு சிவணும்.

(இ - ள்.) ரகர மெய்யிறுதியாகிய ஆர், அர், ஈராக விளிக்கும்.

(வ - று.) பார்ப்பார், பார்ப்பீர், கூத்தர், கூத்தீர். (கஉ0)

---

1. தொல் - சொல் - கஉஇ.
2. தொல் - சொல் - கஉஅ.

தொழிற்பெயர் விளியேற்குமாறு

இஅ. தொழிற்பெயர்க் கிளவி யேயொடு சிவணும்.

(இ - ள்.) தொழிற் பெயர்க்கு ஈரோடு ஏகாரமும் வந்து விளிக்கும்.

(வ - று) வந்தார், வந்தீரே. (கஉக)

பண்புப்பெயர் விளியேற்குமாறு

இஎக. பண்புப் பெயரு மவ்வியல் பாகும்.

(இ - ள்.) பண்புப் பெயரும் ஏயொடு விளிக்குமென்க.

(வ - று.) கரியார், கரியீரே, இளையீரே. (கஉஉ)

அளபெடைப் பெயர் விளியேற்குமாறு

இஅஏ. [1]அளபெடைப் பெயரே யளபெடை யியல.

(இ - ள்.) ரகரவீற்று அளபெடைப்பெய ரியல்பாய் விளிக்கும்.

(வ - று.) சிறுஅஅர், மகாஅஅர். (கஉங)

விளியேலாப் பெயர்கள்

இஅக. அவரிவ ருவர்விளி யடையா வாகும்.

(இ - ள்.) அவர், இவர், உவர், விளியேலா வாகும். (கஉச)

இதுவுமது

இஅஉ. யாவரு நீயிரு மவற்றே ரற்றே.

(இ - ள்.) யாவர், நீயிர், விளியே லாவா மென்க. (கஉரு)

ல, ள என்பன விளியேற்குமாறு

இஅங. லளக்களி னீற்றய னீண்டு விளிக்கும்.

(இ - ள்.) ல, ள க்களீயீருகிய பெயரீற்றய லெழுத்து நீண்டு விளிக்கும்.

---

1. தொல் - சொல் - கசஙு.

(வ - று.) குருசில், மக்காள். (கஉசு)

இதுவுமது

ருஅச. அயனெடி தாயி னியல்பா கும்மே.

(இ - ள்.) *ஈற்றயலெழுத்து நெட்டெழுத்தாயின் இயல்பாய்* விளிக்கும்.

(வ - று.) பெண்பால், கோமாள். (கஉஎ)

ஆள் என்பது விளியேற்குமாறு

ருஅரு. ஆளே னிறுதிப் பண்புப் பெயரும்
வினைப்பெயர்க் கிளவியு மாயொடு விளிக்தும்.

(இ - ள்.) *ஆளீற்றுப் பண்புப் பெயரும் வினைப்பெயரும்* ஆயாக விளிக்கும்.

(வ - று.) *கரியாள், கரியாய்; நின்ருள், நின்ருய் எனவரும்.* (கஉஅ)

முறைப்பெயர் விளியேற்குமாறு

ருஅசு. [1]முறைப்பெயர்க் கிளவி முறைப்பெய ரியல.

(இ - ள்.) *ளகாரவீற்று முறைப்பெயர் னகாரவீற்று* முறைப் பெயரைப்போல ஏகாரம்பெற்று விளிக்கும்.

(வ - று.) மகள், மகளே எனவரும். (கஉக)

விளியேலாப் பெயர்கள்

ருஅள. யாவ ளவளிவ ளுவள்விளி யாவே.

(இ - ள்.) *யாவள், அவள், இவள், உவள், விளியேலாவாம்.* (கஉo)

அளபெடைப் பெயர் விளியேற்குமாறு

ருஅஅ. அளபெடைப் பெயரே யளபெடை யியல.

(இ - ள்.) *ல ள க்களீருகிய வளபெடைப் பெயர் நீண்டு* விளிக்கும்.

---

1. தொல் - சொல் - கசுள.

(வ - று.) உழாஅஅல், கோஒஒள். (கஉக)

பொதுப் பெயர் விளியேற்குமாறு

நூஅகூ. மெய்யுயி ரிறுதி விரவுப் பெயர்ச்சொல்
உயர்திணைப் பெயரோடு மொத்து நடக்கும்.

(இ - ள்.) மெய்யையும் உயிரையும் ஈறுகிய பொதுப்பெயர் முற் கூறிய வுயர்திணை நெறியான் விளியேற்கும்.

(வ - று.) சாத்தீ, பூண்டே, தந்தாய், எ-ம்; சாத்தா, கூந்தால், மக்காள், எ-ம்; சாத்தி, பூண்டு, தந்தை, சாத்த, பிறவுமன்ன. (கஉஉ)

அஃறிணைப் பெயர் விளியேற்குமாறு

நூகூ○. ஆவியு மொற்று மந்த மாகிய
அஃறிணைப் பெயரெலா மேயோடு சிவணும்.

(இ - ள்.) உயிரையும் மெய்யையும் ஈறுகிய அஃறிணைப் பெயரெல்லாம் ஏகாரம் பெற்று விளிக்குமென்க.

(வ - று.) மரமே, நரியே, புலியே, பிறவுமன்ன. (கஉஊ)

அம்ம என்பது விளியேற்குமாறு

நூகூக. அம்ம வசைச்சொ னீட்டமும் விளிக்கும்.

(இ - ள்.) அம்ம வென்னும் அசைச்சொல் நீட்டமும் விளிக்கும்.

(வ - று) அம்மாகொற்று. (கஉச)

சேய்மைக்கண் விளிக்குமாறு

நூகூஉ. இருதிணை மருங்கினு மெல்லாச் சொற்களுஞ்
சேய்மையி னளவைக் கடந்துசென் றிசைக்கும்.

(இ - ள்.) இருதிணைக்கண்ணும் விளிக்குங்காற் சேய்மையில் தத்தமளவைக் கடந்துசென்றெழிக்கும்.

(வ - று.) நம்பீ இ இ, நங்கா அய் பிறவுமன்ன. (கஉஎ)

விளியேலாப் பெயர்கள்

நூகூஎ. தமர்நுமர் தமனுமன் றமணம ணுமள்விளி
ஏலா நமர்நம ளென்பது மற்றே.

(இ - ள்.) தமர், நுமர், தமன், நுமன், தமள், நமள், நுமள், நமர் விளியே லாவாமெனவறிக. (கஙஊ)

பெயரியல் முற்றும்.

உ. வினையியல்

வினையின் இலக்கணம்

நூகூச. [1]வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலக் காலமொடு தோன்றும்.

(இ - ள்.) வினையென்று கூறப்படுவது வேற்றுமையோடு பொருந்தாது, ஆராயுங்காலை முக்காலத்தோடும் புலப்படும். ஈண்டு வேற்றுமை யென்றது உருபை.

(வ - று.) உண்டான், உண்ணு நின்றான், உண்பான், கரியன் வேற்றுமை கொள்ளாது காலமோடு தோன்றியவாறு காண்க. (சு)

காலம் மூன்று

நூகூடு. [2]காலந் தாமே மூன்றென மொழிப.

(இ - ள்.) மேற் சொற்றுவாய் செய்யப்பட்ட காலம் மூன்றென்று கூறுவர் புலவரென வறிக. (உ)

தெரிநிலை வினையும் குறிப்பு வினையும்

நூகூசு. இறப்பு நிகழ்வு மெதிர்வு மென்று
சொலப்படு மூன்று காலமுங் குறிப்பு
வினையொடு பொருந்து மெய்ந்நிலை யுடைய
வினைமொழி பிறக்கும் விழுமிய நெறிக்கே.

(இ - ள்.) இறந்தகாலமும், நிகழ்காலமும், எதிர்காலமு மென்று கூறப்படு மூன்றுகாலமும் குறிப்புவினையோடும் பொருந்து மெய்ந் நிலைமையையுடைய வினைச்சொல்லானவை தோன்று நெறிக்கண். எனவே காலமூன்றுவன இறப்பு, நிகழ்வு, எதிர்வு

---

1. தொல். சொல் - கஙஅ.
2. தொல். சொல் - கஙக.

என்பதூஉம் வெளிப்படக் காலம் விளக்காதன குறிப்பு வினை யென்பதூஉம் பெற்றும்.

(வ - று.) தெரிநிலைவினை - உண்டான், உண்ணுநின்றான். உண்பான்; குறிப்புவினை கரியன். காலமொடு தோன்றுங்கால், பண்டுகரியன், இப்பொழுதுகரியன், நாளைக்கரியன் என மூன்றுகாலமும் வருதலுமறிக. (கூ)

வினை முத்திணைக்கும் வருமாறு

நூகூஎ. குறிப்பினும் வினையினுந் தோன்றிக் காலமொடு
வரும்வினைச் சொல்லெலா முயர்திணைக் குரிமையும்
அஃறிணைக் குரிமையு மாமிரு திணைக்கும்
ஒப்ப வுரிமையு மெனமுக் கூற்றன.

(இ - ள்.) குறிப்புப் பொருண்மைக்கண்ணும், தொழிற் பொருண்மைக்கண்ணும் தோன்றிக் காலத்தோடு வரும் எல்லா வினைச்சொல்லும் உயர்திணைக் குரியனவும், அஃறிணைக் குரியனவும், இரண்டுதிணைக்கும் ஒப்ப வுரியனவும் என மூன்று கூற்றனவாந் தோன்று நெறிக்கண்.

(வ - று.) கரியன், செய்யன் என்புழி, தொழின்மை தெற்றென விளங்காது குறித்துக் கொள்ளப்படுதலிற் குறிப்பென்றார். உண்டான், கரியன்; சென்றது; செய்யது; வந்தனை வெளியை. (சு)

தன்மைப்பன்மை வினைமுற்று

நூகூஏ. அம்மா மென்பன விறுதிக் கிளவியும்
கும்டும் துற்றும் மிறுதிக் கிளவியும்
பன்மை யுணர்த்துந் தன்மைப் பெயரே.

(இ - ள்.) மேல் மூவகையவெனப்பட்ட வினைச்சொற்கள் தாம் அம், ஆம், எம், ஏம் என்னுமீற்றவாகிய மொழியும், கும், டும், தும், றும் என்னுமீற்றவாகிய மொழியுமாகிய எட்டும் பன்மையுணர்த்துந் தன்மைச்சொல்லா மென்க.

(வ - று.) உண்டனம், உண்டாம், உண்டனெம், உண்டேம், உண்கும், வந்தும், சென்றும், வருதும் யாம். (ஙி)

அம், ஆம்

நூகூக. அவற்றுள்,
அம்மா மென்பன முன்னிலை யொடுமேவரும்.

(இ - ள்.) முற்கூறிய எட்டனுள் அம், ஆம் என்கிற இரண்டிறுந் தன்னிலையில் நிற்கையன்றி முன்னிலையையும் உடன் படுக்கும்.

(வ - று.) உண்டனம், உண்டாம், யாம், யானும்; நீயும். (சு)

எம், ஏம்

சூ00. எம்மேம் படர்க்கை யிடத்தையு மேற்கும்.

(இ - ள்.) எம், ஏம் என்கிற இரண்டிறும், தன்னிலையில் நிற்கையன்றிப் படர்க்கையையும் உடன்படுக்கும்.

(வ - று.) உண்டனெம், உண்டேம், யாம்; யானும் அவனும். (எ)

கும், டும், தும், றும்

சூ0க. கும்டும் தும்றும் மாகிய நான்கும்
படர்க்கைமுன் னிலையோடும் படரு மென்ப.

(இ - ள்.) கும், டும், தும், றும் ஆகிய நான்கிறும் தன்னிலையில் நிற்கையன்றி, முன்னிலையும் படர்க்கையும் உடன் படுக்கும்.

(வ - று.) உண்கும், உண்டும், வருதும், சேறும், யாம்; யானும், நீயும் அவனும். (அ)

தன்மை ஒருமை வினைமுற்று

சூ0உ. குடுதுறு வென்னுங் குன்றிய லுகர
இறுதியு மென்னே னல்லிறு கிளவியுந்
தன்வினை யுரைக்குந் தன்மைச் சொல்லே.

(இ - ள்.) கு, டு, து, று என்னுங் குற்றியலுகரத்தை யிறுதியாகிய மொழியும், என், ஏன், அல் என்னும் ஈற்றவாகிய மொழியும் ஒருமையைத் தெரிவிக்குந் தன்மைக்கிளவியாம்.

(வ - று.) உண்கு, உண்டு, வருது, சேறு, உண்டனென், உண்டேன், உண்பல். (கூ)

செய்கு

சூ0ஙூ. செய்கேன் கிளவி வினையோடு முடியினும்
விளம்பிய முற்று மென்மனோர் புலவர்.

(இ - ள்.) முற்கூறிய ஒருமைத்தன்மை யேழனுள் செய்கெனுஞ் சொல் வினையோடு முடியுமாயினும் முற்றுச்சொல் லாதலிற்றிரியாவாம்.

(வ - று.) காண்கு வந்தேன்.

(வி - ரை) வினை முற்றுக்கள் எல்லாம் பெயர்கொண்டு முடிதலே இயல்பு. வினைமுற்றுக்கள் பெயர்கொண்டு முடியும்பொழுது முற் றென்று பெயர்பெறும்; அவை வினைகொண்டு முடிகின்றபொழுது எச்சம் என்று பெயர் பெறும். இவற்றிற்கு விதிவிலக்காக இருப்பன மூன்று. (1) செய்கு, (2) செய்கும், (3) மார். இவை வினைகொண்டு முடியினும் முற்றென்றே பெயர் பெறும்.

ஏனைய முற்றுக்கள் எல்லாம் பெயர்கொண்டு முடியுங்கால் முற் றென்றும், வினைகொண்டு முடியுங்கால் எச்சம் என்றும் பெயர்பெற, இவை மட்டும் வினைகொண்டு முடியினும் முற்றே யாதற்குக் காரணம் என்ன என்பதைச் சேனாவரையர் விளங்க வுரைப்பர். அது வருமாறு:

(க) காண்கு வந்தேன் என்பதில் காண்கு என்பது செய்கென் எச்சமாகும். இது காண வந்தேன் என எதிர்காலப் பொருளை யுணர்த்தும். இது வினை முதல் வினையே கொண்டுமுடியும். இது வந்தேன் என்னும் வினைகொண்டு முடிந்தமையின் எச்சமாயிற்றெனின், காணவந்தேன் எனச் செயவெனெச்சமாகவே திரிக்கவேண்டும். காண்கு என்பதைக் காண எனத் திரிப்பதில் காலவழு இல்லையேனும் காண்கு என்பது தன் வினைமுதல் வினையேகொண்டு முடியக் 'காண' என்பது தன்வினை முதல் வினையையும் பிற வினையையும் கொண்டு முடிதலின் வழுவாம். இதனை வேறு வகையாகத் திரித்தற்கும் இயலாது. ஆதலின் இது முற்றென்றே பெயர் பெறும்.

(உ) ஏனைய முற்றுக்களெல்லாம் பெயர்கொண்டு முடிதல் பெரும் பான்மை யாதலின், வினைகொண்டு முடியின் எச்சமாயிற்றென்றனர். ஆனால், செய்கென் கிளவி முதலியனவோ வினைகொண்டு முடிதலே பெரும் பான்மை யாதலின் அதனையே இலக்கணமாகக்கொண்டு முற்றென்று கருதினர்.

(ஊ) அகத்தியனாரும்,

> "முற்றுச் சொற்றும் வினையொடு முடியினும்
> முற்றுச்சொ லென்னு முறைமையிற் றிரியா"

என நூற்பா யாத்ததும் இக்கருத்தினையே வலியுறுத்தும். (தொல் - சொல் - இளம் - விளக்கவுரை—உ0க). (க0)

உயர்திணைப் படர்க்கை ஒருமை வினைமுற்று

கூ0ச. அன்ஆன் அள்ஆ ளிறுதிக் கிளவி
உயர்திணை யொருமைப் படர்க்கைச் சொல்லே.

(இ - ள்.) அன், ஆன், அள், ஆள் என்னும் ஈற்றவாகிய நான்கு சொல்லும் உயர்திணை ஒருமையுணர்த்தும் படர்க்கைச் சொல்லாம்.

(வ - று.) உண்டனன், உண்டான், உண்டனள், உண்டாள் எனவரும். (கக)

உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று

சூ०ரு. அர்ஆர் பகர விறுதிக் கிளவி
அத்திணை மருங்கிற் பல்லோர் படர்க்கை.

(இ - ள்.) அர், ஆர், ப என்னும் ஈற்றையுடையவாய் வரும் மூன்று சொல்லும் உயர்திணைக்கட் பல்லோரை யுணர்த்தும் படர்க்கைச் சொல்லாம்.

(வ - று.) உண்டனர், உண்பார், உண்ப. (கஉ)

இதுவு மது

சூ०சு. மாரைக் கிளவியு மவற்றே ரற்றே.

(இ - ள்.) முன்னையனவேயன்றி மாறிற்றுமொழியும் பல்லோர் படர்க்கையை யுணர்த்தும்.

(வ - று.) கொண்மார் வந்தார். (கஉ)

யார்

சூ०எ. ஆண்பெண் பலரோடும் யாரெனு மொழிவரும்.

(இ - ள்.) யாரென்னும் வினப்பொருளை யுணர்த்துஞ் சொல் உயர்திணைக்கண் ஆண்பெண் பலரோடும் வரும்.

(வ - று.) அவன்யார், அவள்யார், அவர்யார் எனவரும். (கச)

ன, ள, ர ஈற்றயல் ஆ, ஓ ஆதல்

சூ०ஏ. ஆன்ஆள் ஆர்முத லாவோ வாகும்.

(இ - ள்.) பால்விளக்க வரும் இயல்பையுடைய ஆன், ஆள், ஆர் முதலாகாரம் ஓகாரமாமென்க.

(வ - று.) 'வினவி நிற்றந்தோனே' (அகம் - சஅ), 'நல்லமன் னெனை நகூப்பெயர்ந் தோளே' (அகம் - உசஅ) ''பாசிலை வாடாவள்ளியங் காடிறந் தோரே' (குறுந் - உகச). (கஙி)

யகர ஈற்றயல் ஆ, ஒ ஆதல்

சூ೧கூ. ஆயென் கிளவியு மவற்றே ரற்றே.

(இ - ள்.) முன்னிலையீற்றுள், ஆயென்னும் ஈறு முற் கூறப்பட்டனபோல ஆ, ஓவாகுமென்க.

(வ - று.) 'வந்தோய் மன்ற தெண்கடற் சேர்ப்ப.' (அகம் - அ೦). (கசு)

குறிப்பாற் காலந் தோன்றுவன

சூ೧೦. உண்மையி னின்மையின் வன்மையி னன்மையின்
வருவன காலங் குறிப்பாற் றோன்றும்.

(இ - ள்.) உண்மை, இன்மை, வன்மை, அன்மை யென்னும் பொருள்பற்றி வருவன காலங் குறிப்பானறியப்படும்.

(வ - று.) உளன், இலன், வலன், அலன். (கஎ)

குறிப்பு வினை

சூ೧೧. பன்மையு மொருமையும் பாலறி வந்த
குறிப்புப் பொருண்மையைக் கொடுவரு வினைச்சொல்
மேல்வரு முயர்திணை மருங்கிற் கூறிய
தெரிநிலை வினையோடு சிவணு மென்ப.

(இ - ள்.) பன்மையும் ஒருமையுமாகிய பால்விளக்கிக் குறிப்புப் பொருண்மையை யுடையவாய்வரும் வினைச்சொல் மேல்வரும் உயர்திணைக்கட் கூறிய தெரிநிலை வினையோடொக்கும்.

(வ - று.) கரியன், கரியான், கரியள், கரியாள், கரியர், கரியார், கரியம், கரியாம், கரியெம், கரியேம், கரியென், கரியேன். (கஅ)

அஃறிணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று

சூ೧உ. அ ஆ வகர விறுதிக் கிளவி
அஃறிணைப் பன்மைப் படர்க்கைச் சொல்லே.

(இ - ள்.) அகர, ஆகார, வகர மெய்யீறாகிய மொழிகள் அஃறிணைப் பன்மைப் படர்க்கைச் சொல்லாம்.

(வ - று.) உண்டன, உண்ணா, வரு. (கக)

அஃறிணைப் படர்க்கை ஒருமை வினைமுற்று

சூகசுடு. துடுறுக் குற்றிய லுகர வீற்ற
அத்திணை யொன்றன் படர்க்கைச் சொல்லே.

(இ - ள்.) து, டு, றுக் குற்றியலுகரத்தை யீறாகிய மொழி யஃறிணை யொன்றன்பாற் படர்க்கைச் சொல்லாம்.

(வ - று.) உண்டது, குறுந்தாட்டு, கூயிற்று எனவரும். (உ0)

எவன்

சூகசஅ. எவனென் வினாவே யிருபாற்கு முரிய.

(இ - ள்.) எவனென்னும் வினாச்சொல் மேற்கூறிய அஃறிணை யிருபாற்கு முரியவாமென்க.

(வ - று.) அஃதெவன் அவையெவன். (உக)

குறிப்புவினைச் சொற்கள்

சூகசூ. இன்றில வுடைய வன்றுடைத் தல்ல
என்பவும் பிறவும் வினைக்குறிப் பாகும்.

(இ - ள்.) இன்று, இல, உடைய, அன்று, உடைத்து, அல்ல என்பவும் இவைபோல்வன பிறவுங் குறிப்புவினைச் சொல்லாமென்க.

(வ - று.) கோடின்று, செவியில, தோடுடைய, அதுவன்று, கோடுடைத்து அவையல்ல. (உஉ)

இருதிணைப் பொதுவினை

சூகசூ. வியங்கோள் முன்னிலை வினையெஞ்சு கிளவி
செய்ம்மன வேறு செய்த செய்யும்
ஒருகா லுயர்திணை யுணர்த்தி யொருகால்
அஃறிணை யுணர்த்தியு மாயிரு திணைக்கும்
ஒத்த வுரிமைய வாகு மென்ப.

(இ - ள்.) வியங்கோள், முன்னிலை, வினையெச்சம், செய்ம்மன, செய்த, செய்யும், வேறு ஆகிய வேழுசொல்லும், ஒருகாலுயர்திணை யுணர்த்தியும், ஒருகாலஃறிணையுணர்த்தியும், இருதிணைக்கு மொத்த வுரிமையவாம்.

வியங்கோள் ஏவற்பொருட்டாய் வருவது; முன்னிலை எதிர் நின்ருன் ருெழிலுணர்த்துவது; வினையெச்சம், வினையையொழி பாகவுடையவினை; செய்மன, மனவீற்றுமுற்ருய் எதிர்கால முணர்த்துவது; வேறு, தன்னை யுணர்த்திநின்றது; செய்த அகரவீற்று எச்சமாய் இறந்தகால முணர்த்தியது. (உங)

முன்னிலை ஒருமைவினை

௫௬ ஐயா யிறுதி முன்னிலைக் கிளவி
ஒருவ ஞெருத்தி யொன்றற்கு முரிய.

(இ - ள்.) முற்கூறியவற்றுள் ஐயும், ஆயும், இறுதி யாகிய முன்னிலை வினைச்சொல், ஒருவற்கும், ஒருத்திக்கும், ஒன்றற்கு முரியவாம்.

(வ - று.) உண்டனை, உண்டாய் (உச)

இதுவுமது

௫௭. இகர விறுதியு மவற்ரே ரற்றே.

(இ - ள்.) இகரவீற்று முன்னிலைப்பெயரும், ஒருவற்கும், ஒருத்திக்கும், ஒன்றற்கு முரியவாம்.

(வ - று.) உரைத்தி. (உ)

முன்னிலைப்பன்மை வினை

௫௮. இர் ஈர் மின்னீ ரும்பெயர்க் கிளவி
பல்லோர் மருங்கினும் பலவோடுஞ் சிவணும்.

(இ - ள்.) இர், ஈர், மின், ஈருகிய மொழி பல்லோர் கண்ணும் பலவற்றின் கண்ணும் பொருந்தும்.

(வ - று.) உண்டனிர், உண்டீர், உண்மின். (உசு)

ஐம்பால், மூவிடத்திற் குரியன

௫௯. முன்னிலை யொழியமற் ரேனைய வெல்லாம்
ஐம்பான் மூவிடத் தொடுநிலை பெறுமே.

(இ - ள்.) முன்னிலை வினையொழிய மற்றையவாறும் மூன்றிடம் ஐம்பாற்கு முரியவாம்.

(வ - று.) அவன்செல்க, அவள்செல்க, அவர்செல்க, அதுசெல்க, அவைசெல்க, நான்செல்க, நீசெல்க, அவன்செல்க.

(வி - ரை.) எடுத்துக்காட்டு வியங்கோளுக்கு மட்டுமேயுள்ளது. எஞ்சியவற்றிற்கு வருமாறு :

உழுது வந்தேன், உழுது வந்தேம், உழுது வந்தாய் உழுது வந்தீர், உழுது வந்தான், உழுது வந்தாள், உழுது வந்தார், உழுது வந்தது, உழுது வந்தன எனவும்; யானில்லே, யாமில்லே, நீயில்லே, நீயிரில்லே, அவனில்லே, அவளில்லே, அவரில்லே, அதுவில்லே, அவையில்லே எனவும்; யான் வேறு, யாம் வேறு, நீவேறு, நீயிர்வேறு, அவன்வேறு, அவள்வேறு, அவர்வேறு, அதுவேறு, அவை வேறு, எனவும், யானுண்மன, யாமுண்மன, நீயுண்மன, நீயிருண்மன அவனுண்மன, அவளுண்மன, அவருண்மன, அதுவுண்மன, அவையுண்மன எனவும்; யானுண்ணுமூண், யாமுண்ணுமூண், நீயுண்ணுமூண், நீயிருண்ணுமூண், அவனுண்ணுமூண், அவளுண்ணுமூண், அவருண்ணுமூண், அதுவுண்ணுமூண், அவையுண்ணுமூண் எனவும்; அவன் வரும், அவள் வரும், அது வரும், அவை வரும் எனவும்; யானுண்ட வுண், யாமுண்ட வுண், நீயுண்ட வுண், நீயிருண்ட வுண், அவனுண்ட வுண், அவளுண்ட வுண், அவருண்ட வுண், அதுவுண்ட வுண்; அவையுண்ட வுண் எனவும் வரும். (உஎ)

வியங்கோள் வாராத விடம்

சூஉக. அவற்றுள்,
தன்மைமுன் னிலையோடு சாரா வியங்கோள்.

(இ - ள்.) வியங்கோள் தன்மையினும், முன்னிலையினும் நிகழ்பெறுவாமென வறிக.

(வி - ரை.) இளம்பூரணர் சிறுபான்மை வியங்கோள் தன்மை முன்னிலையிலும் வருமென்பர். நன்னூலாரும் இவரைத் தழுவி 'வியங்கோள் இயலும் இடம்பால் எங்கும் என்ப' என்பர். எனினும் தெய்வச்சிலையார் மட்டும் தன்மை முன்னிலைக்கண் வாராதென்பதை உறுதியாகக் கடைப்பிடிப்பர். இதுபற்றி அவர் உரைக்குமாறு :

நீவாழ்க, உண்க எனவும் வருமாலெனின், அவை அக்ககரம் பெறுக் காலும் பொருள் இனிது விளங்குதலின் அவ்வாறு வருவன மரூஉ வழக்கென்று கொள்க. கடாவுக பாகநின் கால்வல் நெடுந்தேர் எனச் செய்யுளகத்தும் வந்ததாலெனின், நீ கடாவுக என வாராது, பாக கடாவுக என வருதலின் அது படர்க்கைப் பெயர் விளியேற்றவழி வந்ததென்க. 'என் முதற் பிழைத்தது கெடுகவென் ஞுயுள்' (சிலப் - வழக் - எஎ) எனத் தன்மைக்கண் வந்ததாலெனின், ஆண்டுக் கெடுக எனப்பட்டது ஆயுளாதலின் அதன்மேல் வந்த தென்க. (தொல் - சொல் - தெய்வ - 220). (உஅ)

செய்யும் என்பது வாராத விடம்

சூஉஉ. [1]பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்
செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே.

(இ - ள்.) பல்லோர் படர்க்கையினும், முன்னிலையினும் தன்மையினும், செய்யுமென் முற்று நிலை பெறுவா மென்க.

(வ - று.) அவன் செய்யும், அவள் செய்யும், அது செய்யும், அவை செய்யும். (உக)

வினையெச்சச் சொற்கள்

சூஉஊ. [2]செய்து செய்யூ செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செய செயற்கென
அவ்வகை யொன்பதும் வினையெஞ்சு கிளவி.

(இ - ள்.) செய்து, செய்யூ, செய்பு, செய்தென, செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு ஒன்பதும் வினையெச்சச் சொல்லாம்.

(வ - று.) செய்து வந்தான், உண்ணூ வந்தான், நகுபு வந்தான்; சோலைபுக்கென வெப்பம் நீங்கிற்று, உண்ணியர் வருவார், உண்ணிய தந்தான், மழைபெய்யிற் குளநிறையும், உண்ணவந்தான், உணற்கு வந்தான் எனவரும். (கூ0)

இதுவுமது

சூஉச. பின்முன் கால்கடை யோடுவான் பானிடம்
அன்ன கிளவியு மவற்றியல் பினவே.

(இ - ள்.) பின், முன், கால், கடை, வான், பான் ஈற்ற வாய் வருவனவும் வினையெச்சமா மென்க.

(வ - று.) கூதிர்போய்ப் பின்வந்தார், வருமுன் போயினர், நாடுங் கால் வருவார், வருங்கடை செல்வார், வருவான் போவான், உண்பான் வந்தான் எனவரும். (கூக)

தம் வினை முதல் வினையால் முடிவன

சூஉடு. செய்து செய்யூ செய்பு வினைமுதல்
முடிபின வாகு மொழியுங் காலே.

---

1. நன்-சொல்-வினை - உசு. 2. தொல்-சொல்-வினை-நூக.

(இ - ள்.) மேற்கூறியவற்றுள் செய்து, செய்யூ, செய்பு, தம்வினை முதல்வினையான் முடியும்.

(வ - று.) உண்டு வந்தான், உண்ணுவந்தான், உண்குபு வந்தான். (கூஉ)

சினைவினை சினையொடும் முதலொடும் வருதல்

கூஉசு. அம்மூப் பெயருஞ் சினைவினை நின்று
சினைவினை யொடுமுடி யாது முதலொடு
முடியினும் வினையா லெருதன் மையவே.

(இ - ள்.) வினைமுதன் முடிபினவா யம்மூன்று மொழியுஞ் சினையென நின்று சினைவினையோடு முடியாது முதல்வினையோடு முடியினும் வினையா லெருதன்மையவாம்.

((வ - று.) கையிற்று வீழ்ந்தான், கையிறுவீழ்ந்தான், கையிறுபு வீழ்ந்தான்.

(வி - ரை.) கையிற்று வீழ்ந்தான் என்புழிக் கையென்பது சினையாகும். அதனது எச்சம் இற்று என்பதாகும். அஃது இறந்த காலத்தை யுணர்த்தும் செய்து என்னும் எச்சத்தினை ஏற்றதாகிய கை என்னும் சினைச்சொல் தனக்குரிய வினையால் முடிந்தால் வீழ்ந்தது என்று முடியும். அங்ஙனமின்றிச் தனக்குரிய முதல் வினையால் முடிந்தால் வீழ்ந்தான் என்று முடியும். தன் வினையையே கொண்டு முடியவேண்டிய செய்தெனெச்சம் சினைச்சொல்லில் வருங்கால் அதன் முதல் வினையொடு முடியினும் சினையொடு முதற்கு ஒற்றுமை யுண்மையால் இழுக்கில்லை என்பது இவ்வுரையின் தெளிந்த கருத்தாகும்.

'சினைவினை சினையொடும் முதலொடும் செறியும்'

என நன்னூலாரும் இதனை அழகாக விளக்குமாறு காண்க.
(தொல் - சொல் - இளம் - விளக்கவுரை - உஉசு) (கூஉ)

பிறவினை, முதல் வினையால் முடிவன

கூஉஎ. செய்தெனச் செய்யியர் செய்யிய செயிற்செய
செயற்குப் பிறவினை முதலொடுஞ் சிவணும்.

(இ - ள்.) செய்தென, செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு, இவை பிறவினையோடும் முதல்வினையோடும் பொருந்தும்.

(வ - று.) மழை பெய்தெனப் புகழ்பெற்றது, மழை பெய்தென மரங்குழைத்தது; மழைபெய்யியர் பயிரெழுந்தது, மழைபெய்யியர் பலிகொடுத்தார்; மழை பெய்யிய முழங்கும், மழை பெய்யிய வானம் பழிச்சுதும்; மழை பெய்யிற் குளநிறையும், மழை பெய்யின் வள

மோங்கும்; மழை பெய்யப் புகழ்பெற்றது, மழை பெய்ய மரங்குழைத்தது; மழை பெயற்கு முழங்கும், மழை பெயற்குக் கடவுள் வாழ்த்துதும். (கூசு)

பெயரெச்சம்

கூஉஅ. [1]செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி யறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே.

(இ - ள்.) செய்த, செய்கின்ற செய்யும் என்னு மூவகை மொழிகளிலே முக்காலமும் தொழிலும் தோன்றிச் செய்பவன் முதலியவைகளொழிய நிற்பன பெயரெச்சவினைக் குறிப்புகளாம்.

(வ - று.) உண்டசாத்தன், உண்கின்றசாத்தன், உண்ணுஞ்சாத்தன். (கூஙி)

பெயரெச்சத்திற்குரிய பொருண்மை

கூஉக. காலம் பொருணிலங் கருவி வினைமுதல்
வினையோ டறுவகைப் பொருட்கு முரிய.

(இ - ள்.) அப்பெயரெச்சம் காலமும், பொருளும், நிலமும், கருவியும், வினைமுதலும், வினையும் ஆகிய வாறு பொருட்கு மொத்த வுரிமையவாம்.

(வ - று.) துயிலுங்காலம், காலம்; ஓதும் பார்ப்பான், பொருள். பிறவுமன்ன. (கூசு)

இடைப் பிறவரல்

கூஉ○. தத்தங் குறைவா மிருவகைப் பெயருடன்
இயையுங் குறிப்புடை யெச்சோ லாயினும்
இடைநிலை வரையா ரென்மனார் புலவர்.

(இ - ள்.) தத்தமெச்சமாகிய பெயரொடும் வினையொடு மியையும் குறிப்பையுடைய வெச்சொலாயினும் தமக்கு நடுநிற்றலை நீக்காது கொள்வார் புலவர்.

(வ - று.) உழுது வந்தான், கொன்ற காட்டுள் யானை.

---

1. நன் - சொல். வினை - உக.

(வி - ரை.) பெயரெச்சமும் வினையெச்சமும் தாம்தாம் கொண்டு முடியும் பெயர் வினைகளையே ஈண்டு எச்சம் என்கின்றார் ஆசிரியர். எச்சச் சொற்களுக்கும் அவற்றைக் கொண்டு முடியும் பெயர் வினைகளுக்கு மிடையே பொருந்தும் பிறசொற்கள் வருதலும் உள என்பது இந்நூற்பாவின் கருத்தாம். இதனை நன்னூலார் இடைப் பிறவரல் என்பர். இங்ஙனமே, உருபுகளும் முற்றுக்களும் தாம்தாம் கொண்டு முடியும் சொற்களுக்கிடையே பொருந்துவனவாய பிறசொற்கள் இடையே வருதலுமுள ; அவற்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாம். நன்னூலாரும் இவற்றைத் தொகுத்தே,

> ''உருபு முற்றுஈ ரெச்சம் கொள்ளும்
> பெயர்வினை இடைப்பிற வரலுமாம் ஏற்பன'' (பொது - ஙி)

என அழகாகக் கூறுதல் காண்க.

(தொல் - சொல் - இளம் - விளக்கவுரை உகஉ) (கூஎ)

எச்சங்கள் எதிர்மறுத்துரைப்பினும் பொருள்நிலை திரியாமை

கூகக. பெயரும் வினையும் எதிர்மறுத் துரைப்பினும்
பொருணிலை திரியா தெச்சக் கிளவி.

(இ - ள்.) பெயரெச்சமும் வினையெச்சமும் எதிர்மறுத்துக் கூறினும், அவ்வெச்சப் பொருண்மையிற் றிரியாவாம்.

(வ - று.) உண்ணாவில்லம் ; உண்ணாச்சோறு, உண்ணாக்காலம், வாளாயாக்கோல், ஓதாப்பார்ப்பான், உண்ணாவூண் எ - ம் உண்ணாது வந்தான், உண்ணா என்பது உண்ணும் எனவரும். (கூஅ)

செய்யுமென்பதற்குச் சிறப்பு விதி

கூகஉ. [1]செய்யுமென் னெச்சவீற் றுயிர்மெய் சேறலுஞ்
செய்யுளு ளும்முந் தாதலு முற்றேல்
உயிரு முயிர்மெய்யு மேகலு முளவே.

(இ - ள்.) செய்யுமென்னும் பெயரெச்சத் திறுதி யுயிர்மெய் கெடுதலும், பாவினுள், உம் உந்தாகலும், அதுமுற்றாயின், உயிராயினும் உயிர்மெய்யாயினும் கெடுதலுமுளவாம்.

(வ - று.) வாவும்புரவி, வாம்புரவி, கூப்பெயர்க்கு 'நீர்க்கோழி கூப்பெயர்க்குந்து' (புறம் - கூகஙி) கலுமும், கலும்ம் ; மொழியுமே, மொழிமே. (குறுந் - ஙிக) (கூக)

செய்தெனெச்சம்

கூகக. செய்தெனு மெச்சத் திறந்த காலம்
எய்தவும் பெறாஉ மெதிர்பொழு தென்ப.

---

1. நன் - சொல் - வினை - உஉ.

(இ - ள்.) செய்தென்னும் வினையெச்சத்தின் இறந்த காலம் எதிர்காலத்தைப் பொருந்தும்.

(வ - று.) நீ யுண்டுவருவாய், உழுதுவருவாய். (சஅ)

மூக்காலத்தினும் ஒத்தியல் பொருள்

சூஉச. [1]மூக்கா லத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலத் தானே.

(இ - ள்.) மூன்றுகாலத்தும் உளதாம் இயல்பையுடைய எல்லாப் பொருண்மையும் நிகழுங்காலத்துப் பொருண்மையையுடைய செய்யுமென்னுஞ் சொல்லாற் கூறப்படும்.

(வ - று.) மலைநிற்கும், ஞாயிறியங்கும், திங்களியங்கும். (சக)

காலமயக்கம்

சூஉடு. நிகழ்வினு மெதிர்வினும் வரும்வினைக் கிளவி
இறப்பினு முரைப்பர் விரைவிற் பொருள.

(இ - ள்.) நிகழ்காலத்தும் எதிர்காலத்தும் வரும் வினைச்சொற் பொருண்மையை இறந்தகாலத்தினுங் கூறுவர், விரைவிற் பொருண்மையின்கண்.

(வ - று.) உண்டிலை, உண்டே னுண்டேன், எதிர்வு இறப்பாயிற்று, அவனெறுபகைக்கிற் செத்தாய், எதிர்வு இறப்பாயிற்று. (சஉ)

இதுவுமது

சூஉசு. குறித்துப் போதரும் வினைமுத லில்லாக்
காலை வினைமுத னிகழ்வினிற் செல்லும்.

(இ - ள்.) குறித்துவரும் வினைச்சொலில்லாதவிடத்து நிகழ்காலத்திற்செல்லும்.

(வ - று.) அவன் சுவர்க்கம்புகும், நிரயம்புகும். (சஙு)

இது செயல்வேண்டும் என்னும் கிளவி

சூஉஎ. இதுசெயல் வேண்டு மென்னுங் கிளவி
இருவயி னிலையும் பொருட்டா கும்மே.

---

1. நன் · பொது · கூஉ.

(இ - ள்.) இது செயல்வேண்டும் என்பதுபட வருமொழி தன்பாலானும், பிறன்பாலானும் என ஈரிடத்தும் நிலைபெறும் பொருண்மையை யுடையனவாம்.

(வ - று.) ஓ ஓதல்வேண்டும், ஓதற்கு வினைமுதலாயினுற்கும், அவன் ஓதலிலிரும்புந் தந்தைக்கு மேற்றவாறு காண்க. (சசு)

(வி - ரை.) 'தன்பாலானும் பிறன்பாலானும்' என்ற இறுதி வரியுடன் இந்நூற்பா தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது,

வன்புற வரும் வினைவுடை வினைச்சொல்

சுஙூ.அ. வன்மைப் பொருள்வயின் வரும்வினை வினையை
எதிர்மறுத் துரைப்பினு மிழுக்கா வாகும்.

(இ - ள்.) கடினப் பொருட்கண்வரும் வினைவையுடைய வினைச்சொல்லை எதிர்மறுத்துரைப்பினுங் குற்றமிலவாம்.

(வ - று.) வைதாய், வைதேனெனவென வினைவொடுவந்த வினைச் சொல், வைதிலேனென்னும் எதிர்மறைப்பொருள்பட வந்தமை காண்க. (சஙி)

காலமயக்கம்

சுஙூ.கூ. எதிர்விற் குரிய வினைச்சொற் கிளவி
தெளிவு மியற்கையுஞ் செப்புங் காலை
இறப்பினு நிகழ்வினு மியம்பப் படுமே.

(இ - ள்.) எதிர்காலத்துக்குரிய வினைச்சொல்லைத் தெளிவுமியற்கையுங் கூறுங்கால் இறந்தகாலச் சொல்லானும் நிகழ்காலச் சொல்லானுங்கூறுப.

(வ - று.) இக்காட்டிற் போகிற் கூறைகோட்பட்டான், கூறை கோட்படும், இயற்கை; எறும்பு முட்டைகொண்டு திட்டையேறின், மழைபெய்தனூலாற் றெளிந்தான், அவை முட்டைகொண்டு ஏறியவழி மழை பெய்யாமுன்னு மழை பெய்தது, மழைபெய்யும், தெளிவு. (சசு)

செயப்படுபொருள்

சுஙூ.ங. செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்த றொல்லியன் மரபே.

(இ - ள்.) செயப்படு பொருளைச் செய்த வினைமுதலைப் போலத் தொழிற்படக்கூறல் வழக்கினுள்ளதாம்.

(வ - று.) திண்ணெமெழுகிற்று. (சஎ)

காலமயக்கம்

சூசக. இறப்பு மெதிர்வு மயங்கியு மியலும்.

(இ - ள்.) இறந்தகாலமும் எதிர்காலமு மயங்கு மொழிப் பொருளனவாம்.

(வ - று.) இவர் பண்டு இப்பொழிற்கண் விளையாடுவார், நாளையவன் வாளோடு வெகுண்டுவந்தான், பின் நீ யென்செய்குவை என வரும். (சஅ)

இதுவுமது

சூசஉ. நிகழ்வு மவற்றொடு நிலவுதல் வரையார்.

(இ - ள்.) நிகழ்காலமு மவற்றொடு மயங்கும்.

(வ - று.) இவள் பண்டு இப்பொழிற்கண் விளையாடும், நாளை வரும். (சக)

வினையியல் முற்றும்.

ங. ஒழிபியல்

இடைச்சொல் பிறக்கும் இடம்

சூசஙு. பெயர்வினை யிடத்துப் பிறப்ப திடைச்சொல்.

(இ - ள்.) பெயரிடத்தும் வினையிடத்துந் தோன்றுவது இடைச்சொல்லாமென்க. (க)

அதன் வகை

சூசச. வேற்றுமை வினைசா ரியையோப் புருபுகள்
இசைநிறை யசைநிலை யிருமூன்று திறத்தன.

(இ - ள்.) ஐ முதலிய வாறுருபுகளும், அன் முதலிய சாரியை யுருபுகளும், போலமுதலிய வுவமையுருபுகளும், செய்யு ளிசைநிறைத்து வருவனவும், அசைத்தலே பொருளாக நிற் பனவும், அன், ஆன் முதலிய வினையுருபுகளும் ஆகிய ஆறு இறத்தனவாம் அச்சொலென வறிக.

(வ - று.) நம்பியை : பெயரின் புறத்துறுப்பாய் ஐயுருபும், முடியினன் : அகத்துறுப்பாய் விகுதியும் இடைநிலையும், உண்ணுன் : வினையினகத்துறுப்பாய் விகுதியுருபும் வந்தன. (உ)

மன்

சூசநி. ஆக்கம் ஒழியிசை கழிவையுந் தருமன்.

(இ - ள்.) மன்னென்னும் இடைச்சொல், ஆக்கங்குறித்து நிற்பதும், ஒழியிசைப் பொருண்மையைக் குறித்து நிற்பதும், கழிவைக் குறித்து நிற்பதும் ஆகிய மூன்றையுந் தருமென வறிக.

(வ - று.) பண்டு காடுமன், ஆக்கம்; கூரியதோர் வாண்மன், ஒழியிசை; சிறியகட்பெறினே யெமக்கீயுமன்னே (புறம் - உகடு) கழிவு. (கூ)

தில்

சூசசூ. [1]விழைவே கால மொழியிசை தில்லே.

(இ - ள்.) தில்லென்னு மிடைச்சொல், விழைவைக் குறித்து நிற்பதும் காலத்தைக் குறித்து நிற்பதும், ஒழியிசையைக் குறித்து நிற்பதும் ஆகிய மூன்றையுந் தரும்.

(வ - று.) 'அரிவையைப் பெறுக தில்லம்ம யானே' (குறுந் - கசை) விழைவு; 'பெற்ருங்கறிக தில்லம்ம' (குறுந் - கஅ) காலம்; 'வருக தில்லம்ம' (அகம் - உஎசு) ஒழியிசை. (சு)

கொன்

சூசஎ. அச்சம் பயமிலி காலம் பெருமையேன்
றப்பா ஞன்கே கொன்னைக் கிளவி.

(இ - ள்.) கொன்னென்னும் இடைச்சொல், அச்சப் பொருளதும், பயமின்மைப் பொருளதும், காலப்பொருளதும், பெருமைப்பொருளதுமாகிய, நான்கையும் தரும்.

(வ - று.) 'கொன்முனை யிரவூர்போல' (குறுந் - கூக) அச்சம்; 'கொன்னே கழிந்தன்று,' (நாலடி - கூடு) பயமின்மை; 'கொன்வரல் வாடை,' காலம்; 'கொன்னூர் துஞ் சினும்' (குறுந் - கஙஅ) பெருமை. (கூ)

---

1. நன் - இடை - கஉ.

உம்

சூசஅ. எதிர்மறை யெச்சமுற் றெண்ணே தெரிநிலை
ஐயஞ்சிறப் பாக்கமு மளிக்கு மும்மை.

(இ - ள்.) உம்மென்னு மிடைச்சொல், எதிர்மறையும் எச்சமும் முற்றும், எண்ணும், தெரிநிலையும், ஐயமும், சிறப்பும், ஆக்கமும் ஆகிய எட்டுப்பொருளையுந் தரும்.

(வ - று.) சாத்தன் வருதற்கு முரியன் - எதிர்மறை; சாத்தனும் வந்தான் - எச்சம்; தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார் - முற்று; நிலனு நீருந்தீயும் - எண்; திருமகளுமல்லள் - 'தெரிநிலை; இளிவந்துஞ் சொல்லும்' (கலி - சஎ) ஐயம்; குறவருமருளுங் குன்று, (மலைபடு-உஎடு) சிறப்பு; ஆக்கம், வந்துழிக் காண்க. (சூ)

ஓகாரம்

சூசகூ. தெரிநிலை யெதிர்மறை சிறப்புப் பிரிநிலை
ஒழியிசை வினாவா மோகா ரம்மே.

(இ - ள்.) தெரிநிலையும், எதிர்மறையும், சிறப்பும், பிரிநிலையும், ஒழியிசையும், வினாவுமாகிய ஆறுபொருளையும் ஓ வென்னும் இடைச்சொல் தரும்.

(வ - று.) திருமகளோவல்லள் - தெரிநிலை; சாத்தனுண்டானோ - எதிர்மறை; ஓ ஓ பெரியன் - சிறப்பு; யானோ தேறேனவர் பொய் (குறுந் - உக) பிரிநிலை; கொளலோ கொண்டான் - ஒழியிசை; சாத்தனுண்டானோ - வினா. (எ)

ஏகாரம்

சூரo. எண்ணே பிரிநிலை ஈற்றசை தேற்றம்
வினாவோ டைந்தும் விளக்கு மேகாரம்.

(இ - ள்.) ஏ யென்னும் இடைச்சொல்லும் எண்ணும், பிரிநிலையும், ஈற்றசையும், தேற்றமும், வினாவுமாகிய ஐந்து பொருளையுந் தருமென்க.

(வ - று.) நிலனே நீரே தீயே, எண்; அவருளிவனே கள்வன், பிரிநிலை; 'காடிறந்தோரே' (அகம் - க) ஈற்றசை; உண்டே மறுமை, தேற்றம்; நீயே கொண்டாய், வினா எனவரும். (அ)

என, என்று

சூ.க. எண்ணே குறிப்பே இசையே பண்பே
வினையே பெயரே எனவோ ராறினும்
எனவெனு மொழிவரும் என்று மற்றே.

(இ - ள்.) எனவென்னும் இடைச் சொல்லும், என்றென்னும் இடைச்சொல்லும், எண்ணும், குறிப்பும், இசையும், பண்பும், வினையும், பெயருமாகிய ஆறு பொருளையுந் தரும்.

(வ - று.) நிலனென நீரெனத் தீயென, எண்; துண்ணெனத் துடித்தது, குறிப்பு; ஒல்லென வொலித்தது, இசை; வெள்ளென விளர்த்தது, பண்பு; 'மலிவான் கொள்கென, (புறம் - கசஙூ) வினை; 'அழுக்கா றெனவொருபாவி, (குறள் - கசுஅ) பெயர்; என்றும் இவ்வாறே ஒட்டிக் காண்க. (கூ)

மற்றையது

சூ.உ. மற்றைய தென்பது சுட்டிய தற்கினம்.

(இ - ள்.) மற்றையதெனப் பெயர்க்கு முதனிலையாய் வரும் மற்றையென்னும் ஐகார ஈற்றிடைச்சொல், சுட்டப்பட்டதனை ஒழித்து, அதனினங் குறித்து நிற்கும்.

(வ - று.) ஆடை கொணர்ந்தவழி யவ்வாடை வேண்டாதான் மற்றையது கொணுவெனும். அஃது அச்சுட்டிய வாடை யொழித்து அதற்கு இனமாகிய பிறவாடை குறித்தது. (கo)

மற்று

சூ.ஙூ. மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை.

(இ - ள்.) மற்றென்னும் இடைச்சொல், வினைமாற்றும், அசைநிலையுமாகிய இரண்டு பொருளையுந் தரும்.

(வ - று.) 'மற்றறிவா நல்வினை' (நாலடி-கக) வினைமாற்று; அது மற்றவலம், (குறுந் - கஉ) அசைநிலை. (கக)

எற்று

சூ.ச. [1]எற்றென் கிளவி யிறந்த பொருட்டே.

---

1. தொல் - சொல்: இடை - கஙி.

(இ-ள்.) எற்றென்னும் இடைச்சொல் இறந்த பொருளைத் தரும்.

(வ - று.) எற்றெனுடம்பி னெழில் எனவரும். (கஉ)

மன்ற

கூடுடூ. மன்றக் கிளவி தெளிவை விளக்கும்.

(இ - ள்.) மன்றவென்னும் இடைச்சொல் தெளிவுப் பொருண்மையைத் தரும்.

(வ - று.) 'கடவுளாயினு'மாக மடவை மன்றவாழிய முருகே (நற் - கூசை) எனவரும். (கங)

தஞ்சம்

கூடுசு. [1]தஞ்சக் கிளவி யெண்மைப் பொருட்டே.

(இ - ள்.) தஞ்சமென்னுஞ் சொல் எளிமைப் பொருளைத் தரும்.

(வ - று.) 'முரசுகெழு தாயத்தரசோ தஞ்சம்' (புறம்-எஙூ). (கச)

அந்தில்

கூடுஎ. அந்திலாங் கசைநிலை இடப்பொரு ளவ்வே.

(இ - ள்.) அந்திலென்னும் இடைச்சொல்லும், ஆங்கென் பதும், அசைநிலைப் பொருளையும் இடப்பொருளையும், தருவன வாம்.

(வ - று.) 'அந்திற் கச்சினன் கழலினன் (அகம் - எசு) அசைநிலை; 'சேயிழை யந்திற் கொழுநற் காணிய (குறுந் - உகூங) இடம். (கடி)

கொல், எல்

கூடுஅ. கொல்லே யைய மெல்லே விளக்கம்.

(இ - ள்.) கொல்லென்னும் இடைச்சொல் ஐயப்பொருளை யும், எல்லென்னும் இடைச்சொல் விளக்கப் பொருளையுந் தரும்.

(வ - று.) குற்றிகொல், ஐயம்; எல்வளைத்தோளி, விளக்கம். (கசு)

---

1. தொல் - சொல், இடை - கஅ

இயற்பெயர் முன்வரும் ஆர்

சூருகூ. [1]இயற்பெயர் முன்ன ராரைக் கிளவி
பலர்க்குரி யெழுத்தின் வினையோடு முடியும்.

(இ - ள்.) இயற்பெயர் முன்வரும் ஆரென்னும் இடைச் சொல் பலரறிசொல்லான் முடியும்.

(வ - று.) பெருஞ்சேந்தனார் வந்தார். (கள)

மேலதற்கோர் சிறப்புவிதி

சூசுo. அசைநிலைப் பொருண்மை யாகும்வழி யறிதல்.

(இ - ள்.) ஆரையென்னுஞ் சொல், அசைநிலையாய் நிற்கு மறிக.

(வ - று.) 'எல்லாவுயிரொடு சொல்லுமார் முதலே.'
(தொல் - எழுத் - சக) (கஅ)

ஏ, குரை

சூசுக. ஏவுங் குரையு மிசைநிறை யசைநிலை.

(இ - ள்.) ஏயென்னும் இடைச்சொல்லும், குரை என்னும் இடைச்சொல்லும், இசை நிறையும் அசை நிலையுந் தரும்.

(வ - று.) 'ஏ ஏ யிஃதொத்தன்', (கலி-சுஉ) இசை நிறை; ஏ ஏ யெனக் கூறுக. அசை நிலை; 'பெறலருங் குரைத்தே', (புறம்-நி) இசை நிறை; 'பல்குரைத் துன்பங்கள்', (குறள்-கoசடி) அசைநிலை. (கக)

மா

சூசுஉ. [2]மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல்.

(இ - ள்.) மாவென்னு மிடைச்சொல் வியங்கோ ளசை நிலையாம்.

(வ - று.) உண்கமா கொற்கையோனே. (உo)

முன்னிலை யசைச் சொற்கள்

சூசுங. இகுமியா யிகமதி மோசின் முன்னிலை
அசைச்சொல் லென்மனு றிந்திசி னோரே.

---

1. தொல் - சொல் - இடை - உஉ.
2. ,, ,, ,, உடி.

(இ - ள்.) இகு, மியா, இக, மதி, மோ, சில் ஆகிய வாறிடைச் சொல்லும், முன்னிலை யசைச்சொல்லாம்.

(வ - று.) 'புலம்பணைக் கண்டிகும்' (ஐங் - கூஉக) கேண்மியா, கண்பனியான்றிக, கேண்மதி, கண்டது மொழிமோ, காப்பும் பூண்டிசின். (உக)

ஆங்க, அம்ம

சூசூசு. ஆங்க வுரையசை யம்ம கேட்பிக்கும்.

(இ - ள்.) ஆங்கவென்னும் இடைச்சொல் உரையசையும், அம்மவென்னுமிடைச்சொற் கேட்பிக்குந் தரும்.

(வ - று.) ஆங்கக் குயிலும், 'அம்மவாழி தோழி'. (ஐங்குறு - ஙக) (உட)

இகும், சின்

சூசூடு. இகுஞ்சினு மேனை யிடத்தோடுஞ் சிவணும்.

(இ - ள்.) இகும், சினும், படர்க்கைத் தன்மைச் சொல்லோடும் பொருந்தும்.

(வ - று.) புகழ்ந்திகுமல்லரோபெரிதே, 'யாரஃதறிந்திசினேரே' (குறுந் - கஅ). (உங)

ஒப்பில் போலி

சூசூசு. ஒப்பில் போலியு முரையசை யாகும்.

(இ - ள்.) ஒப்புமையுணர்த்தாத போலியு முரையசையாம்.

(வ - று) மங்கலமென்பதோ ருருண்டுபோலும். (உச)

அசைநிலை

சூசூள. யாகா பிறபிறக் கரோபோ மாதென
வருமொரு வேழ மசைநிலை மொழியே.

(இ - ள்.) யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது ஏழும் அசை நிலை மொழியாம்.

(வ - று.) யாபன்னிருவர், 'இவட் காண்டிகா', (கலி - கூக) 'தான் பிறவரிசை' (புறம் - கசo) அது பிறக்கு, 'குயிலாலுமரோ' (கலி-கூஙூ)

வாழாதென்போ தெய்ய, 'விளிந்தன்று மாதவர்த்தெளிந்த வெள் னெஞ்சே' (நற் - களஅ) எனவரும். (உடு)

பிரிவில் அசைநிலை

சுசுஅ. ஆக ஆகல் பிரிவி லசைநிலை.

(இ - ள்.) ஆக, ஆகல், இரண்டிடைச்சொல்லும் பிரிவி லசை நிலையாமென்க.

(வ - று.) ஆக ஆக, ஆகல்ஆகல் - எனவரும். (உசு)

உரிச் சொல்லின் இலக்கணம்

சுசுக. [1]உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
யிசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப்
பெயரினும் வினையினு மெய்தடு மாறி
யொருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் லொருபொருட் குரிமை தோன்றினும்
பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்த மருங்கிற் சென்றுநிலை மருங்கின்
எச்சோ லாயினும் பொருள்வேறு கிளத்தல்.

(இ - ள்.) உரிச்சொல்லை விரிக்குங்கால், இசை, குறிப்பு, பண் பென்னும் பொருண்மேற்றோன்றி, பெயரினும் வினையினும் தம் உருபு தடுமாறி, ஒருசொற் பலபொருட் குரித்தாய்வரினும், பல சொல் லொருபொருட் குரித்தாய்வரினும், பயிலப்படாத சொல்லைப் பயின்றவற்றோடுசார்த்திப் பெயரும் வினையுமாகிய தத்தமக் குரிய நிலைக்களத்தின்கண் யாதாயினுமொரு சொல்லாயினும், வேறு பொருளுணர்த்தப்படு மென்க. (உள)

மிகுதிப் பொருள் உணர்த்துவன

சுஎ0. உறுதவ நனிமிகு திப்பொரு ளுணர்த்தும்.

(இ - ள்.) உறுவென்பதும், தவவென்பதும், நனியென்பதும் மிகுதிப்பொருளைத்தரும்.

(வ - று.) 'உறுபுனல்தந்து' (நாலடி - கஅடு) 'சுயாது வாழும் உயிர்தவப் பலவே' (புறம் - உசுசு) 'வந்துநனி வருந்தினை வாழி', (அகம் - கக) (ஙஅ)

---

1. தொல் - சொல் - உரி - இ.

புரை, உரு

சூஎக. புரையுயர் பாம்உரு வுட்கா கும்மே.

(இ - ள்.) புரை, உயர்பாகும், உருவு, உட்காகுமென்க.

(வ - று.) 'புரைய மன்ற புரையோர் கேண்மை' (நற்-க). (உக)

செல்லல், இன்னல்

சூஎஉ. செல்லலு மின்னலு மின்ன மையே.

(இ - ள்.) செல்லலும், இன்னலும், இன்னமையின்னுங் குறிப்பை யுணர்த்தும்.

(வ - று.) 'மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல்' (அகம்-உஉ) 'வெயில்புறந் தழூஉ மின்ன லியக்கத்து' (மலைபடு - சுஎசு). (கூ0)

மல்லல், ஏ

சூஎசு. மல்லல் வளனே ஏபெற் றாகும்.

(இ - ள்.) மல்லலென்பது வளமும், ஏ யென்பது பெற்றும் ஆகிய குறிப்பைத் தெரிவிக்கும்.

(வ - று) 'மல்லன்மால்வரை' (அகம் - ஙஉ) 'ஏகலடுக்கம்' (நற்-கசசு). (கூக)

உகப்பு, உவப்பு

சூஎச. [1]உகப்பே யுயர்த லுவப்பே யுவகை.

(இ - ள்.) உகப்பென்பது-உயர்தலும், உவப்பென்பது - உவகையும் தரும்.

(வ - று.) விசும்புதைந்தாடாது, 'உவந்துவந்து' (அகம் - கூ) எனவரும். (கூஉ)

பசப்பு, பயப்பு

சூஎடு. பசப்பே நிறம்பயப் பேபய னாகும்.

(இ - ள்.) பசப்பென்பது - நிற வேறுபாடும், பயப் பென்பது-பயனும் தரும்.

---

1. தொல் - சொல் - உரி - கூ.

(வ . று.) 'பசப்பூரும்மே' (கலி - எ) 'பயவாக் களரனையர் கல்லாதவர்' (குறள் - சoசு). (கூகூ)

இசைப்பு, இயைபு

சூஎசு. இசைப்பிசை யியைபே புணர்ச்சியா கும்மே.

(இ - ள்.) இசைப்பென்பது - இசையும், இயையென்பது- புணர்ச்சியும் தரும்.

(வ - று.) யாழிசையூப்புக்கு, இயைந்தொழுகும். (கூச)

அலமரல், தெருமரல்

சூஎஎ. அலமரல் தெருமர லாகுஞ் சுழற்சி.

(இ - ள்.) அலமரலென்பதும், தெருமரலென்பதும் சுழற்சி யாகிய குறிப்பைத் தெரிவிக்கும்.

(வ - று.) 'அலமரலாயம்' (ஐங் - சுசு) 'தெருமரலுள்ளம்'. (கூடி)

மழ, குழ

சூஎஅ. [1]மழவுங் குழவு மிளமைப் பொருள.

(இ - ள்.) மழவென்பதும், குழவென்பதும், இளமைக் குறிப்பை யுணர்த்தும்.

(வ - று.) 'மழகளிறு', (புறம் - கூஅ) 'குழகிகன்று' (நாலடி - கoக). (கூசு)

சீர்த்தி, மாலை

சூஎகூ. சீர்த்தி மிகுபுகழ் மாலை யியல்பே.

(இ - ள்.) சீர்த்தியென்பது, மிகுந்த புகழையும், மாலை யியல்பையுந் தரும்.

(வ - று) 'வயக்கஞ்சால்சீர்த்தி', 'இரவரன்மாலையம்'. (குறிஞ்சிப் - உகூக) (கூஎ)

கூர்ப்பு, கழிவு

சூஅo. [2]கூர்ப்புங் கழிவு முள்ளது சிறக்கும்.

---

1. தொல் - சொல் - உரி - கடு.
2. ,, ,, ,, கஅ.

(இ - ள்.) கூர்ப்பென்பதும், கழிவென்பதும் ஒன்றனது மிகுதலாலாகிய குறிப்பை யுணர்த்தும்.

(வ - று.) 'துனிகூ ரெவ்வமொடு' (சிறுபாண் - நகூ) 'கழிகண் ணோட்டம்' (பதிற் - உஉ). (நஅ)

அதிர்வு, விதிர்ப்பு

சூஅக. அதிர்வும் விதிர்ப்பு நடுக்கப் பொருள.

(இ - ள்.) அதிர்வென்பதும், விதிர்ப்பென்பதும், நடுக்க மாகிய குறிப்பைத் தெரிவிக்கும்.

(வ - று.) 'அதிர வருவதோர் நோய்' (குறள்-சஉக) 'விதிர்ப்புற வறியா வேமக்காப்பின்' (புறம் - உ0) எனவரும். (நக)

தீர்தல், தீர்த்தல்

சூஅஉ. தீர்த நீர்த்தல் விடற்பெயர்க் கிளவி.

(இ - ள்.) தீர்தலென்பதும், தீர்த்தலென்பதும் ஆகிய இரண்டும், விடுதலாகிய குறிப்பைத் தெரிவிக்குமென வறிக.

(வ - று.) 'துணையிற்றீர்ந்த கடுங்கண் யானை.' (நற்-க0அ)

(வி - ரை.) தீர்தல் தன் விணையாகவும், தீர்த்தல் பிறவிணையாகவும் வரும் என்பர் இளம்பூரணர். இதனைச் சேனவரையர் மறுப்பர். பின்னர் வந்த நச்சினர்க்கினியர் இவரை மறுத்து இளம்பூரணர் கருத்தே வலி யுடையது என்பர். 'கங்கையைச் செற்ற தீங்கு தீர்த்து நீர் கொண் மின்' (சிந்தாமணி - கூஎடு) என்ற விடத்துத் தீர்த்தல் என்பது விடற்பொருட்டாய் வந்தது எனக் காட்டுவர் நச்சினர்க்கினியர். (ச0)

பெருமைப் பொருளில் வருவன

சூஅங. தடவோடு கயநளி பெருமைப் பொருள.

(இ - ள்.) தடவும், கயவும், நளியும், பெருமையென்னும் பண்பைத் தெரிவிக்கும்.

(வ - று.) 'வலிதுஞ்சு தடக்கை' (புறம் - நகூச) 'கயவாய்ப் பெருங் கண்யானை' (அகம் - கசஅ) 'நளிமலைநாடன்' (புறம் - கஅ0). (சக)

பிணை, பேண்

சூஅச. பிணையும் பேணும் பெட்பா கும்மே.

(இ - ள்.) பிணையும், பேணும் பெட்பின் பொருளாகிய புறந்தருதல் என்னுங் குறிப்பைத் தெரிவிக்கும்.

(வ - மு.) 'அரும்பிணை யகற்றி' 'அமர்ப்பேணியும்' (புறம் - கக). (சஉ)

தா

சூஅடு. தாவே வலியும் வருத்த முந்தரும்.

(இ - ள்.) தாவென்பது - வலியும், வருத்தமுமாகிய குறிப்பை யுணர்த்தும்.

(வ - மு.) 'தாவினன்பொன் றைஇய பாவை' (அகம் - உகஉ). 'கருங்கட்டாக்கலை' (குறுந் - சுக). (சஙூ)

அரவப் பொருளன

சூஅசு. [1]கம்பலை சும்மை கலியே யழுங்க
லென்றிவை நான்கு மரவப் பொருள.

(இ - ள்.) கம்பலை, சும்மை, கலி, அழுங்கல் நான்கு மரவமாகிய இசைப்பொருண்மையை யுணர்த்தும்.

(வ - மு.) 'கம்பலைமூதூர்' (புறம் - நிச). ஒருபெருஞ் சும்மையொடு, 'கலிகொளாயம்' (அகம் - கக) 'அழுங்கலூரே' (நற் - உ0ங) எனவரும். (சச)

வெகுளிப் பொருளன

சூஅள. [2]கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள.

(இ - ள்.) கறுப்பும், சிவப்பும், வெகுளியாகிய குறிப்பை யுணர்த்தும்.

(வ - மு.) 'நிற்கறுப்பதோ ரங்கடிமுனையள்', 'நீ சிவந்திறுத்த நீரழி பாக்கம்' (பதிற் - கஙூ). (சடி)

வழுத்தற் பொருளன

சூஅஅ பரவும் பழிச்சும் வழுத்தன் மேன.

(இ - ள்.) பரவும், பழிச்சும், வழுத்தலாகிய குறிப்பை யுணர்த்தும்.

---

1. தொல் - சொல் - உரி - நிங.
2. தொல் - சொல் - உரி - எச.

(வ. மு.) 'நெல்லுகுத்துப் பரவுங் கடவுளு மிலவே'(புறம்.கூகூஙி). 'கைதொழூஉப் பழிச்சி' (மதுரைக் காஞ்சி - சுசுஙி). (சசு)

மிகுதிப் பொருளன

சுஅகூ. கடியென் கிளவி காப்பே கூர்மை
விரைவே விளக்க மிகுதிப் பொருள.

(இ - ள்.) கடியென்பது, காவல், கூர்மை, விரைவு, விளக்கம், மிகுதியாகிய குறிப்பை யுணர்த்தும்.

(வ - மு.) கடிநகர், கடிநுணைப்பகழி, 'கடிவிடுதும்' (புறம் - கூ) கடிமார்பன், கடிசெழுங்குரல். (சள)

சொல்என்னும் ஒருபொருள் உணர்த்தும் பலசொற்கள்

சுகூ0. இயம்ப னுவற்சி யிசைகூற்று விளம்பறை
பாட்டுக் கரைநொடி பகர்ச்சி சொல்லே.

(இ - ள்.) இயம்பல், நுவற்சி, இசை, கூற்று, விளம்பு, அறை, பாட்டு, கரை, நொடி, பகர்ச்சி, சொல்லென்னு மொரு குணத்தை யுணர்த்தும்.

(வ - மு.) இயம்பலுற்றேன், நுவலலாமே, இசைத் தனர்புலவர், கூறலாமே, விளம்பப்படுமே, அறைந்தனர்மாதோ, பாடலாமே, கரையப்படுமே, நொடிக்கலாமே, பகரலாமே. (சஅ)

செய்யுட்குரிய சொற்கள்

சுகூக. [1]இயற்சொற் றிரிசொற் றிசைச்சொல் வடசொல்என்
றிணைத்தே செய்யு ளீட்டச் சொல்லே.

(இ - ள்.) இயற்சொல்லும், திரிசொல்லும், திசைச் சொல்லும், வடசொல்லுமென அத்துணையே செய்யுளீட்டுதற் குரிய சொல்லாவனவாம். (சக)

இயற்சொல்

சுகூஉ. அவற்றுள்,
சேந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் விளக்குந் தன்மைய வியற்சொல்.

(இ - ள்.) மேற்கூறிப்போந்த நான்கனுள் இயற்சொல்லாவன செந்தமிழ்நிலத்து வழக்காதற்குப் பொருந்திக்

1. தொல் - சொல் - எச் - க.

கொடுந்தமிழ்நிலத்துந் தம்பொருள் வழுவாம லுணர்த்துஞ் சொல்லாமென்க.

(வ - று.) நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், (கo)

திரிசொல்

சுகூஙூ. ஒருபொருள் குறித்த பலசொல் லாயும்
பலபொருள் குறித்த வொருசொல் லாயும்
எனவிரு பாற்றே திரிசொற் கிளவி.

(இ – ள்.) ஒருபொருளைக் குறித்துவரும் பலசொல்லும், பலபொருளைக்குறித்துவரு மொருசொல்லு மென விருவகைப்படுந் திரிசொல்லென்க.

(வ - று.) கிள்ளை, சுகம், தத்தை இவை கிளியென்னுமொரு பொருள்குறித்த பலசொல். காப்பு, கூர்மை, விரைவு, அச்சம், வாசம் இவை பலபொருள் குறித்த வொருசொல், வந்தமை காண்க. (கூக)

வடசொல்

சுகூச. [1]பொதுவெழுத்தானுஞ் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானும் இயைவன வடசொல்.

(இ - ள்.) ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத் தானும், சிறப்பெழுத்தானும், ஈரெழுத்தானும், இயைவன வட சொல்லாமென்க.

(வ - று.) அமலம், கமலம், பொதுவெழுத்து; சுகி, போகி, சிறப் பெழுத்து; அரன், ஈரெழுத்து. (கூஉ)

திசைச்சொல்

சுகூசு. செந்தமிழ் நிலனைச் சேர்ந்த ஈராறு
நிலத்தினுந் தங்குறிப் பினதிசைக் கிளவி.

(இ - ள்.) செந்தமிழ் நிலனைச் சேர்ந்த பன்னிரண்டு நிலத் துந் தாங்குறித்தபொருளை விளக்குவன திசைச்சொல்லா மென்க.

பன்னிரண்டு நிலமாவன பொங்கர் நாடு, ஒளிநாடு, தென் பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, அருவாநாடு, அருவாவடதலைநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு.

---

1. நன் · சொல் · பெய · கள.

தென்பாண்டி நாட்டார் ஆவைப் பெற்றமென்பார், குட்ட நாட்டார் - தாயைத் தள்ளையென்பார், குடநாட்டார் - தந்தையை அச்சனென்பார், கற்காநாட்டார்-வஞ்சகரை கையரென்பார், பிறவுமன்ன. (நிகூ)

செய்யுள் விகாரம்

சூகூசு. அந்நாற் சொல்லுந் தோடுக்குங் காலை
வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்
விரித்த லுகுத்தலும் வருஞ்செயுள் வேண்டுழி.

(இ - ள்.) இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வட சொல் ஆகிய நான்குசொல்லையும் செய்யுளாகத் தொடுக்குங்கால், மெலியை வலிக்கவேண்டும்வழி வலித்தலும், வலியைமெலிக்க வேண்டும்வழி மெலித்தலும்' குறைவை விரிக்கவேண்டும்வழி விரித்தலும், மிகுவதைத் தொகுக்கவேண்டும்வழித் தொகுத்த லும், குறிலை நீட்டவேண்டும்வழி நீட்டலும், நெடுமையைக் குறுக்க வேண்டும் வழிக் குறுக்கலுமாகிய அறுவகை விகாரமும் செய் யுளின்பம்பெறச் செய்வான் நாட்டுதலை வலியாக வுடையனவாம்.

(வ - று.) குறுங்கை - குறுக்கை, வலித்தல் ; குற்றியலுகரம் - குன்றியலுகரம், மெலித்தல் ; தணந்துறைவன் - தண்ணந்துறைவன் விரித்தல் ; மழவரொட்டியர், தொகுத்தல் ; விடுமின் - வீடுமின், நீட்டல், தியேன் - தியேன், குறுக்கல். (நிசி)

பக்கச்சொல்

சூகூஎ. தகுதியும் வழக்கையுந் தக்கோர் வரையார்.

(இ - ள்.) தகுதியைப் பற்றியும் வழக்கைப் பற்றியும் நடக்கும் இலக்கணத்திற்குப் பக்கச்சொல்லைக் கடியார் பெரியோர்.

(வ - று.) செத்தாரைத் துஞ்சினரென்றலும், சுடுகாட்டை நன் காடென்றலும், ஓலையைத் திருமுக மென்றலுமாம்.

(வி - ரை.) பக்கச் சொல் - சார்பாக வுணர்த்தும் சொல். ஒரு பொருளைக் குறித்ததற்கு ஒருசொல் இருக்க, தகுதி காரணமாகவோ, வழக்கியல் காரணமாகவோ அச்சொல்லை விடுத்து, அதன் சார்பாகப் பிறிதொரு சொல்லை வழங்குதல் உண்டு. அதுவே பக்கச் சொல்லாகும்.

இறந்தவரைக் குறிக்கச் செத்தார் என்ற சொல் இருக்கத் தகுதி காரணமாக அச்சொல்லை விடுத்துத் துஞ்சினர் என்றலின் அது பக்கச் சொல்லாயிற்று. பிறவும் அன்ன.

இதுபற்றி சளகூ; சளச ஆம் நூற்பாக்களில் முன்னரும் விளக்கியுள்ளனர் ஆசிரியர். ஆண்டும் காண்க. (இஇ)

இயற்கைப் பொருள்

சுகூஅ. [1]இயற்கைப் பொருளா யிற்றெனக் கிளத்தல்.

(இ - ள்.) தன்னியல்பில் திரியாதுநின்ற பொருளா அதனினியல்பு கூறுங்கால் ஆக்கமுங் காரணமுங் கொடாது இற்றெனக் கூறுக.

(வ - று.) நிலம்வலிது, நீர்தண்ணிது, பிறவுமன்ன. (இக)

செயற்கைப் பொருள்

சுகூக. [2]செயற்கைப் பொருளா யாக்கமொடு செப்பல்.

(இ - ள்.) காரணத்தால் தன்மைதிரிந்த பொருளா அத்திரிபு கூறுங்கால் ஆக்கங்கொடுத்துக் கூறுக. (இஎ)

ஆக்கப் பொருள்

எஅ. [3]ஆக்கந் தானே காரண முதற்றே.

(இ - ள்.) செயற்கைப் பொருளா ஆக்கமொடு கூறுங்காற் காரணத்தை முற்கூறி யதன்வழி ஆக்கங் கூறுக.

(வ - று.) மயிர் நல்லவாயின, எருப்பெய்து களைகட்டு நீர் கால்யாத்தமையாற் பைங்கூழ் நல்லவாயின. (இஅ)

மேலதற்கோர் சிறப்புவிதி

எக. வழக்கினு ளாக்கங் காரண மின்றியும்
வருமா ராயுங் காலத் தானே.

(இ - ள்.) வழக்கினுள் காரண முதற்று எனப்பட்ட ஆக்கச்சொல் காரணமின்றியும் வரும்.

(வ - று.) பயிர் நல்லவாயின, மயிர் நல்லவாயின. (இக)

---

1. தொல் - சொல் - கிளவி - கக.
உ. ,, ,, ,, உ0.
கூ. ,, ,, ,, உக.

ஐயக்கிளவிக்கண் பொருளுணருமாறு

எ0உ. திணைதுணிந் ததன்பா றுணியப் படாத
ஐயக் கிளவி யவ்வப் பொருள்வயிற்
பன்மை கூற லென்மனார் புலவர்.

(இ - ள்.) திணை துணிந்து அதன் பால் துணியப்படாத ஐயப்பொருளை அவ்வத்திணைப் பன்மையாற் கூறுக.

(வ - று.) ஆண்மகன் கொல்லோ, பெண்மகள் கொல்லோ, இஃதோ தோன்றுவார்; ஒன்றே பலவோ செய்புக்கன எனவரும். (சூ0)

உருபு என்னும் சொல் வரும் இடம்

எ0ஊ. ஐயமா மிருதிணை யகத்து முருபைச்
செப்பினு மென்மனார் தெளிந்திசி னோரே.

(இ - ள்) உருபெனக் கூறுமிடத்தும் ஒருமையும் பன்மையுமாகப்படும் அஃறிணைப் பொதுச்சொற்ஙண்ணும் இவ்விருகூற்றினும் ஐயப்புலப் பொதுச்சொல்லாதலும் உரித்தாம்.

(வ - று.) ஆண்மகன் கொல்லோ, பெண்மகள் கொல்லோ, இஃதோ தோன்றுமுருபு; ஒன்றே பலவோ செய்புக்கவுருபு.

(வி - ரை.) இது,

'உருபென மொழியினும் அஃறிணைப் பிரிப்பினும்,
'இருவிற்றும் உரித்தேசுட்டுங் காலை'

என்னும் தொல்காப்பியத்தைத் தழுவியதாகும்.

உருபுஎனில் வேற்றுமை யுருபு, உவம வுருபு முதலியவற்றைக் குறிக்கும். உருவு என்ற சொல்லே வடிவைக் குறிக்கும். ஆதலின் உருவு எனப் பாடம் ஓதுதலே சண்டுச் சிறப்பதாகும். (சுக)

அன்மைச் சொல் வரும் இடம்

எ0எ. ஐயுற் றுத்துணி தரும்வழி அன்மைத்
தன்மையைச் சுட்டலு முரிய வாகும்.

(இ - ள்.) ஐயுற்றுத் துணியும்வழி அன்மைக்கிளவி அன்மைத்தன்மையைச் சுட்டி நிற்றலும் உரியவாம்.

(வ - று.) குற்றி கொல்லோ மகன் கொல்லோ வென்றனும், ஒன்று கொல்லோ பல கொல்லோ வென்றனும், ஒருவன் கொல்லோ

வொருத்தி கொல்லோ வென்றனும், ஐயம் நிகழ்ந்தவழித் துணிதலு முண்டுபிற ; நடையுள்துணிந்தவழி மறுக்கப்படும் பொருண்மேல் அன்மைத் தன்மை யேற்றினு மமையும், மகனென்று துணிந்தவழி குற்றியன்று மகனெனவும், குற்றியென்று துணிந்தவழி மகனல்லன் குற்றியெனவும், ஆண்மகனெனத் துணிந்தவழி பெண்மக ளல்லள் ஆண்மகனெனவும், பெண்மகளென்று துணிந்தவழி ஆண்மக னல்லன் பெண்மக ளெனவும், ஒன்றெனத் துணிந்தவழி பலவல்ல ஒன்றெனவும், பலவெனத் துணிந்தவழி ஒன்றன்று பலவெனவும் மறுக்கப்படும் பொருண்மேல் அன்மைக்கிளவி அன்மைத் தன்மையைச் சுட்டி நின்றமை காண்க. (கூஉ)

வண்ணச்சினைச் சொல்

எ0நி. பண்புஞ் சினையு முதலு முறையே
மயங்கா தியலும் வண்ணச் சினைச்சொல்.

(இ - ள்.) பண்புச்சொல்லும், சினைச்சொல்லும், முதற் சொல்லும் ஆகிய மூன்றுங் கூறப்பட்ட முறை மயங்காமல் வழக்கைப் பொருந்தி நடக்கும் வண்ணச் சொல்லோடு தொடர்ந்த சினைச்சொல்லையுடைய முதற்சொல்லென வறிக.

(வ - று.) செங்காஞரை, பெருந்தலைச்சாத்தன்.

(வி - ரை.) வண்ணம்—நிறம். இது பண்புச் சொல்லாகும். வண்ணச்சினைச் சொல் என்பதால் இம்மூன்றும் ஒருங்கு கூறப்பெறும் பொழுதே இம்முறை மயங்காது கூறவேண்டும் என்று கருதிதாகிறது.

செங்கால் நாரை என்பதில் வண்ணம், சினை, முதல் மூன்றும் ஒருங்கு வந்து இம்முறை மயங்காது நிற்றல் காண்க. (கூஉ)

பன்மைக் கிளவிகள்

எ0சு. ஒருவரை யுரைக்கும் பன்மைக் கிளவியும்
ஒன்றனை யுரைக்கும் பன்மைக் கிளவியும்
வழக்கினு ளுயர்த்தல் வழுவா காவே.

(இ - ள்.) ஒருவனையும், ஒருத்தியையுங் கூறும் பன்மைச் சொல்லும், ஒன்றனைக் கூறும் பன்மைச் சொல்லும், வழக்கின் கண் உயர்த்திக் கூறுஞ் சொல்லாம்.

(வ - று.) நீயிர் வந்தீர், யாம் வந்தேம், இவர் வந்தார். (கூச)

இடம் உணர்த்தும் முதனிலைகள்

எ0எ. [1]தரல்வரல் கொடைசெலல் சாரும் படர்க்கை
எழுவா யிரண்டு மெஞ்சிய வேற்கும்.

1. நன் · பொது - கூ0.

(இ - ள்.) தரலும், வரலும், கொடையும், செலலும் படர்க்கைபைப் பொருந்தும், இவற்றுள் முதலிற் கூறிய தரலும் வரலும் தன்மை முன்னிலைகளைப் பொருந்தும்.

(வ - று.) அவனுக்குத் தந்தான், அவனிடத்து வந்தான், அவனுக்குக் கொடுத்தான், அவனிடத்துச் சென்றான் எனவும்; எனக்குத் தந்தான், என்னிடத்து வந்தான், உனக்குத் தந்தான், உன்னிடத்து வந்தான் எனவும் வரும். (கூஞ)

யாது, எவன்

எ0ஆ. யாதேவ னறியாப் பொருளோடு சிவணும்.

(இ - ள்.) யாதும், எவனும், அறியாப்பொருட்கண் விஞவாக நிலையுமென்க.

(வ - று.) இச்சொற்குப் பொருள் யாது ; இச்சொற்குப் பொருளெவன். (சுசு)

யாது என்பதற்குச் சிறப்பு விதி

எ0க. அவற்றுள்,
யாதுஐய நீக்கற் பொருளோடு நிலையும்.

(இ - ள்.) முற்கூறிய இரண்டனுள் யாது ஐயநீக்கற் பொருளொடு நிலைபெறும்.

(வ - று.) இம்மரங்களுட் கருங்காலியாது, எனவரும். (சுஎ)

இனைத்தென அறிந்த சினை முதற் கிளவி

எக0. இனைத்தென வறிந்த சினைக்கு முதற்கும்
வினைப்படு தொகுதியி னும்மை வேண்டும்.

(இ - ள்.) கேட்போரான் இத்துணையென்று அறியப்பட்ட சினைப்பெயர்க்கும், முதற்பெயர்க்கும், வினைப்படு தொகுதிக்கண் உம்மை கொடுத்தியம்புக.

(வ - று.) 'பன்னிரு கையும் பாற்பட வியற்றி'; (திருமுருகா - ககஅ) மூசு முழங்கு தாணுமூவேந்தரும் வந்தார். (சுஅ)

இல்லாப் பொருள்

எகக. இல்லாப் பொருளு மன்ன வியற்றே.

(இ - ள்.) இல்லாப்பொருட்கும் இடமுங் காலமும் பொருளு முதலாயினவற்றோடு படுத்து இன்மை கூறுதற்கண் உம்மைகொடுத்துக் கூறுக.

(வ - று.) பவளக்கோட்டு நீலயானை சாதவாகனன் கோயிலுள்ளு மில்லை; குருடு காண்டல் பகலு மில்லை.

(வி - ரை.) 'மன்னுப் பொருளும் அன்ன வியற்றே' (கிளவி - கூச) என்னும் தொல்காப்பியத்தைத் தழுவியது இந்நூற்பா ஆகும். அதற்கு இல்லாத பொருள் என இளம்பூரணர், கல்லாடர், சேனவரையர், பழைய வுரையாசிரியர் ஆகிய அனைவரும் பொருள் உரைத்தனர். நச்சினார்க்கினியர் நிலையாத பொருள் என உரை கண்டனர். இவ்வாசிரியர் இளம்பூரணர் முதலாயினோரின் உரையைத் தழுவி யுரைத்துள்ளார். தன்னூலார், இவ்விரு பொருளும் அமைய 'உலகினிலாப் பொருள்' என்றுரைத்தனர். (சுக)

வழக்கில் வரும் மரபு

எகஉ. யாதேனு மொருபொரு ளில்லதில் லென்பான்
அஃதல பிறபொரு ளறைவது வழக்கே.

(இ - ள்.) யாதானும் ஒரு பொருள் தம்பாலில்லாத பொருளை இல்லையென்பவன் அஃதல்லாத பிறபொருளைக் கூறுவது வழக்காம்.

(வ - று.) பயறுளவோ வணிகீரென்று விளையவழி அஃதில்லை யென்பான் உழுந்துண்டெனக் கூறல்.

(வி - ரை.) பிறபொருள் என்றாரேனும் அதற்கு இனப்பொருள் என்றே பொருள் காண வேண்டும். தம்பால் ஒரு பொருள் இல்லையாயின், அதற்கு இனப்பொருள் கூறி இதுவல்லது இல்லை என்று கூறலே வழக்கு. நன்னூலாரும், 'தம்பாலில்லது இவ்வெனின் இனனுய் உள்ளது கூறியும்' (நன் - பொது - கூஎ) என்றுரைப்பர். (எ0)

இயற்பெயரும் சுட்டுப்பெயரும்

எகஊ. இயற்பெயர்ச் சுட்டுப் பெயரு மிரண்டும்
வினைகொளற் கொருங்கியல் காலத் தானே
சுட்டுப் பெயரை முற்படக் கிளவார்.

(இ - ள்.) இயற்பெயரும், சுட்டுப் பெயருமாகிய இரண்டு பெயரும வினைகோடற்கு ஒருங்கு நிகழுங்காலம், சுட்டுப்பெயரை முற்கூறார்.

(வ - று.) சாத்தனவன் வந்தான், சாத்தன் வந்தானவன் போயினன். (எக)

அவை செய்யுட்கண் வரும் மரபு

எகச. முற்படக் கூறல் யாப்பினு ளுரித்தே.

(இ - ள்.) இயற்பெயரும், சுட்டுப்பெயரும், வினைகோடற் கொருங்கு நிகழுங்காலம், சுட்டுப்பெயரை முற்படக் கூறல் செய்யுட்கணுரித்தாம்.

(வ - று.)

"அவனணங்கு நோய்செய்தான் ஆயிழாய் வேலன்
விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி—முகனமர்ந்து
அன்னே அலர்கடப்பந் தாரணியில் என்னைகொல்
பின்னே அதன்கண் விளைவு"

(வி - ரை.) இதன்கண் சேந்தன் என்ற இயற்பெயர் பின்னரும், அவன் என்னும் சுட்டுப்பெயர் முன்னரும் வந்தமை காண்க. (எஉ)

சுட்டுமுதலாகிய காரணப் பெயர்

எகடு. சுட்டுமுத லாகிய காரணப் பெயரும்
முற்படக் கிளத்தன் முறையன் றாகும்.

(இ - ள்.) சுட்டுமுதலாகிய காரணப்பெயரும், சுட்டுப் பெயரைப்போலப் பின்னுரைக்கப்படும்.

(வ - று.) சாத்தன் கையெழுதுமாறு வல்லன் அதனுல் தந்தை யுவக்கும்; சாத்தி சாந்தரைக்குமாறு வல்லள் அதனுற் கொண்டா னுவக்கும். (எக)

இயற்பெயரும் சிறப்புப்பெயரும்

எகசு. வினைக்கொருங் கியலும் விழுமிய பொருட்கும்
இயற்பெயர் முற்பட வியம்பினும் வழுவே.

(இ - ள்.) வினைகோடற்கு ஒருங்கியலும்வழி சிறப் பாகிய பெயர்க்கும் இயற்பெயரை முற்படக்கூறல் வழுவாம்.

(வ - று.) ஏனுதி நல்லுதடன்; காவிதி கண்ணந்தை; முனிவன் அகத்தியன்; தெய்வப்புலவன் திருவள்ளுவன் எனவரும். (எச)

ஒரு பொருள் குறித்த பல பெயர்

எகள. ஒருபொருள் குறித்த பலபெயர்க் கிளவி
ஒருவினை முடிபறை யாதப் பெயர்தொறும்
வேறுரு வினைதந் துரைப்பது விதியே.

(இ - ள்.) ஒருபொருளைக் குறித்துவந்த பல பெயர்ச் சொற்கள் ஒருதொழிலே முடிபாகக் கூறுது பெயர் தொறும் வேறுகிய தொழில்களைக் கொடுத்துரைப்பின் ஒருபொருளனவாம்.

(வ - று.) ஆசிரியன் பேரூர்க்கிழான் வந்தான். (எடு)

தன்மைப் பெயரும் அஃறிணைப் பெயரும்

எகஅ. உயர்திணைத் தன்மையும் அஃறிணைப் பெயரும்
தொகைவயின் விரவி வரப்பெறு மென்ப.

(இ - ள்.) உயர்திணைத் தன்மைப்பெயர்க் கிளவியும், அஃறிணைப் பெயர்க்கிளவியும், எண்ணுதற்கண் விரவி வரு மென்க.

(வ - று.) யானுமென் எஃகமுஞ் சாறும். (எசு)

ஒருமைப்பெயர்கள் வரும் மரபு

எகக. ஒருமையெண் ணேருமைக் கண்ணல தியலா.

(இ - ள்.) ஒருவன் ஒருத்தி யென்னும் ஒருமை யெண்ணை யுணர்த்துமொழிகள் ஒருமைக்கணல்லது இருமை முதலாகிய எண்முறைக்கண் நில்லாவாம்.

(வ - று) ஒருவன், ஒருத்தி எனவரும்.

(வி - ரை.)

'ஒருவன் ஒருத்திப் பெயர்மேல் எண்ணில' (பெயர் - கூக)

என்பர் நன்னூலாரும். (எஎ)

வியங்கோள் எண்ணுப் பெயர்

எஉ0. வியங்கோ ளோடுதொட ரெண்ணுக் கிளவி
திணைவிர வியும்வருஞ் செப்புங் காலே.

(இ - ள்.) வியங்கோளோடு தொடரும் எண்ணுப் பெயர் திணை விரவியும் வரும்.

(வ - று.) ஆவுமாயனுஞ் செல்க (எஅ)

வேறு வினைப் பலபொருள்

எஉக. வேறு வினைப்பல் பொருட்குப் பொதுப்பெயர்
பொதுவினை கொடுத்துப் புகல்வது நெறியே.

(இ - ள்.) வேறுபட்ட வினையையுடைய பல பொருட்குப் பொதுவாகிய சொல்லைப் பொதுவினையைக் கொடுத்துக் கூறுவது நெறியாகுமென வறிக.

(வ - று.) அடிசில், அணி, இயம், படை என்னுந் தொடக்கத்தன. அடிசிலென்பது - உண்பன, தின்பன, பருகுவன, நக்குவன வென்னும் நால்வகைக்கும், அணியென்பது - கட்டுவன, கவிப்பன, செறிப்பன, பூண்பன வென்னுந் தொடக்கத்தனவற்றிற்கும், படையென்பது - எய்வன, எறிவன, வெட்டுவன, குத்துவன வென்னுந் தொடக்கத்தனவற்றிற்கும், இயமென்பது - கொட்டுவன, ஊதுவன, எழுவன வென்னுந் தொடக்கத்தனவற்றிற்கும் பொதுவாகலின், அடிசிலயின்றூர், அணியணிந்தார், இயமியம்பினர், படை வழங்கினர். (எக)

இதுவுமது

எஉ. எண்ணுழி யும்பொது வினையா னியலும்.

(இ - ள்.) வேறு வினைப்பொருள்களைப் பொதுமொழியால் கூறுது பிரித்தெண்ணுங்காலும் அதனதிலக்கணம் ஒருவினையாற் கூறுது பொதுவினையால் வரும்.

(வ - று.) சோறுங்கறியுமயின்றூர்; யாழுங்குழலுமியம்பினர். (அ0)

இரட்டைக் கிளவி

எஉக. [1]இரட்டைக் கிளவி யிரட்டிற்பிரிந் திசையா.

(இ - ள்.) இரட்டித்து நின்று பொருணுணர்த்துஞ் சொற்கள் இரட்டித்து நிற்றலிற் பிரிந்து நில்லாவாம்.

(வ - று.) மொடு மொடுத்தது; துடி துடித்தது. (அக)

பல்பொருட் சிறப்புப் பெயர்

எஉச. அஃறிணை யுயர்திணை யாமிரு மருங்கினும்
ஒருபொரு ளாய்ப்பல பெயர்க்குப் போதுமொழி
பொதுமைவே றியம்பல் புலவோர் நெறியே.

(இ - ள்.) அஃறிணைக்கண்ணும் உயர்திணைக்கண்ணும், ஒரு பெயராய்ப் பல பொருட்குப் பொதுவாகிய சொல்லைப் பொதுமையின் வேறாகக் கூறுவரென்க.

---

1. தொல் - சொல் - கிளவி - சூஅ.

(வ - ரை) பிறரும் வாழ்வாருளரேனும் பார்ப்பனச் சேரி, உயர் திணை : பிறபுல்லும் மரனுமுளவேனும், கழுகந்தோட்டம் : அஃறிணை. (அஉ)

பொதுப் பிரிபாற் சொல்

எஉடு. பெயரினும் வினையினும் பிரிபவை யெல்லாம்
வழுவில வாமிரு திணைமருங் கினுமே.

(இ - ள்.) உயர்திணைக்கண்ணும், அஃறிணைக்கண்ணும், பெயரினனும் வினையினனும் பொதுமையிற்பிரிந்து ஆண்மைக்கும் பெண்மைக்கும் உரியவாய் வருவனவெல்லாம் வழுவாகாவாம்.

(வ - ரை.) தொடியோர் - கொய்குழையரும்பிய குமரி ஞாழல் - உயர் திணைக்கட்பெயரிற் பிரிந்த ஆணெழிமிகு சொல்; வடுகரசராயிரவர் மக்களையுடையர், பெயரிற்பிரிந்த பெண்ணெழி மிகுசொல்; இவர் வாழ்க்கைப்பட்டார், தொழிலிற் பிரிந்த ஆணெழிமிகுசொல்; நம்பி நூறெருமையுடையன், அஃறிணைக்கட்பெயரிற் பிரிந்த ஆணெழிமிகு சொல்; நம்மரசன் ஆயிரம் யானையுடையன், பெயரிற் பிரிந்த பெண் ணெழி மிகுசொல்.

(வி - ரை.) உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் ஆண் பெண் இருபாற்குமுரிய பொதுச் சொற்கள், தத்தம் பால் பொதுமை யினின்றும் நீங்கிச் சிறப்பாக ஒவ்வொரு பாலுக்கே உரியதாய் வருதலு முண்டு. இந்நிலை சிலவற்றிற்குப் பெயரினனும், சிலவற்றிற்கு வினையினனும் வரும். இதனையே 'ஒன்றெழி பொதுச்சொல்' என நன்னூலாரும் கூறுவர். [தொல் - சொல் - இளம் - விளக்கவுரை - ஐ0] (அக)

திணை விரவுப்பெயர் அஃறிணை முடிபின

எஉசு. திணைவிர வுப்பெயர் செய்யுண் மருங்கே
அஃறிணை முடிபின வாகு மென்ப.

(இ - ள்.) திணைவிரவி எண்ணப்பட்டபெயர் செய்யுட்கண் பெரும்பான்மையும் அஃறிணைப் பெயரைக்கொண்டு முடியும்.

(வ - ரை.)

'வடுக ரருவாளர் வான்கரு நாடர்
சுடுகாடு பேயெருமை யென்றிவை யாறுங்
குறுகா ரறிவுடை யார்'.

'கடுஞ்சினத்த கொல்களிறுங் கதழ்பரிய கலிமாவும்,
நெடுஞ்கொடிய நிமிர்தேரு நெஞ்சுடைய (புகன்) மறவரு மென
நான்குடன் மாண்ட தாயினும்' (புறம் - ஐஐ)

(வி - ரை.) எடுத்துக்காட்டு இரண்டினுள் முன்னையதில் 'இவை ாறு' என்றும், பின்னையதில் 'நான்குடன் மாண்டது' என்றும் அஃறிணை முடிவு கொண்டவாறு காண்க. (அச)

பலபொருள் ஒருசொல்

எ௨எ. வினைவேறு படுஉம்பல பொருளொரு மொழியும்
வினைவேறு படாப்பல பொருளொரு மொழியும்
எனவிரு திறத்தவாம் பலபொரு ளொருமொழி.

(இ - ள்.) வினைவேறுபடும் பலபொரு ளொருசொல்லும் வினைவேறுபடாப் பலபொரு ளொருசொல்லுமெனப் பல பொருளொரு மொழி இருவகைப்படு மென்க. (அந)

வினை வேறுபடும் பல பொருளொருசொல்

எ௨அ. அவற்றுள்,
வினைவேறு படுஉம் பலபொரு ளொருமொழி
வேறுபடு வினையினு மினத்தினுஞ் சார்பினுந்
தேரத் தோன்றும் பொருடெரி நிலையே.

(இ - ள்.) மேற்கூறிப்போந்த அவ்விரண்டனுள் வினை வேறுபடும் பலபொருளொருசொல் ஒரு பொருட்கே சிறந்த வினை யானும் இனத்தானுஞ் சார்பானும் பொருள்தெரி நிலைக்கட் பொதுமை நீங்கித் தெளியத் தோன்றும்.

(வ - று.) மாவென்பதொருசார் விலங்கிற்கும், மரத்திற்கும், வண் டிற்கும், பிறபொருட்கும் பொது; மாப்பூத்தது, மாவுமருது மோங்கின வென வேறுபடுவினையானும் இனத்தானும் மாமரமென்பது விளங் கிற்று. பிறவுமன்ன.

(வி. ரை.) இனம் என்பது, ஒரு பொருளுக்கும் பிறிதொரு பொரு ளுக்கும் உள்ள இயைபு நோக்கி வரும்; சார்பு என்பது ஒரு பொரு ளுக்கும் பிறிதொரு பொருளுக்கும் எவ்வித இயைபுமின்றி, சந்தர்ப் பத்தால் இயைபுடையதாகி வரும். (அசு)

வினை வேறுபடாப் பல பொருளொருசொல்

எ௨க. வினைவேறு படாஅப் பலபொரு ளொருமொழி
ஆயுங் காலைக் கிளந்தாங் கியலும்.

(இ - ள்.) வினைவேறுபடாப் பலபொருள் ஒருசொல் ஆராயுங்காலைக் கிளந்து கூறப்படு மென்க.

(வ - று.) மாமரம்வீழ்ந்தது, விலங்குமாவீழ்ந்தது. (அள)

விளங்க வுணர்த்தல்

எகூ0. ஒருபொருள் வேறுபா டுணருங் காலை
விளங்கா தாயின் விளங்க விளம்புப.

(இ - ள்.) ஒருபொருள் வேறுபாடறியுங்காலை அஃதாற்றல் முதலியவற்றுன் விளங்காதாயின் அதனை விளங்கக் கூறுவர் புலவரென்க.

(வ - று.)

அரிதாரச் சாந்தங் கலந்தது போல
வருகெழுத் தோன்றி வருமே—முருகுறழும்
அன்பன் மலிபெய்த நீர்
பிறவு மன்ன. (அஅ)

அஃறிணை முடிபிற் குரியன

எகூக. ஆண்மை குடிமை யடிமை மூப்பே
விருந்தே யிளமை வெண்மை யுறுப்பே
குழுவே வன்மை குருடே மகவே
அரசே காத லஃறிணை முடிபின.

(இ - ள்.) ஆண்மை முதலாகக் காதல் ஈருகக் கூறிய பதினன்கு பெயரும் அஃறிணை முடிபினவாம்.

(வ - று.) ஆண்மைநன்று, குடிமைநன்று, அடிமைநன்று, மூப்பு நன்று, விருந்துநன்று, இளமைநன்று, வெண்மைநன்று. (அக)

இதுவுமது

எகூஉ. உயிரே கால முலகே யுடம்பே
தெய்வம் பூதந் திங்கள் வினையே
ஞாயிறு பிறவு மவற்றே ரற்றே.

(இ - ள்.) உயிர்முதலாக ஞாயிறு இறுதியாகக் கூறிய ஒன்பது பெயரும், முற்கூறியவை போலவே யுயர்திணைப் பெயராயினும் அறிஃணை முடிபினவாம்.

(வ - று.) உயிர்போயிற்று, காலமாயிற்று, உலகம் பசித்தது, உடம்பு நுணுகிற்று, தெய்வஞ் செய்தது, பூதம்புடைத்தது, திங்களெழுந்தது, வினைவிளைந்தது, ஞாயிறுபட்டது எனவரும். (கூ0)

மேலதற்குச் சிறப்பு விதி

எஙக. உயர்திணை முடிபா தலுமுரித் தாகும்.

(இ - ள்.) காலமுதலாகியசொல் லுயர்திணை முடிபாதலும் உரித்தாம்.

(வ - று.) காலன்கொண்டான், உலகர்பசித்தார், உடம்பிழந்தான்.

(வி ரை.) உயர்திணை முடிபாதலும் உரித்து என ஆசிரியர் பொதுவாகக் கூறினரேனும், இக்காலம் முதலிய சொற்கள் ஈறுதிரிந்து வாய்பாடு வேறுபட்டவிடத்தே அங்ஙனம் உயர்திணையாகும் என்று கொள்க. எண்ணே? 'இசைத்தலும் உரிய வேறிடத் தான' (சொல் - கிளவி - ஙூ) என்பது தொல்காப்பியமாதலின், காலம் என்பது காலன் என்றும், உலகம் என்பது உலகர் என்றும் திரிந்து உயர்திணை முடிவு கொண்டமை காண்க. உடம்பு இழந்தான் என்ற காட்டுப் பொருத்தமில்லை. (கூக)

அடைமொழி இனம் செப்பல்

எஙச. எடுத்த மொழியினம் இயம்பலு மூரிய.

(இ - ள்.) இனமாகிய பலபொருட்க ணொன்றினை வாங்கிக் கூறிய வழி அச்சொல் தன்பொருட் கினமாகிய பிறபொருளைக் குறிப்பால் உணர்த்தலும் உரியவாம்.

(வ - று.) அறஞ்செய்தான் துறக்கம்புகும், 'இழிவறிந்துண்பான்கணின்பமெய்தும்'. (குறள் - கூஅசு)

(வி - ரை.) இவை முறையே மறம் செய்தான் துறக்கம் புகான், கழிபேரிரையன் இன்பம் எய்தான் என இனம் செப்புவனவாகும். (கூஉ)

பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி

எஙடு. கண்ணும் முலையுங் கையும் பிறவும்
பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி
பன்மை யுரைக்குங் கடப்பா டிலவே.

(இ - ள்.) கண்முதலாகிய பிறவும் பன்மையைக் குறித்து நின்ற சினைநிலைச்சொல் பன்மையாற் கூறப்படும் யாப்புற வுடைய வல்ல, முதலொன்றுயின் ஒருமையானும் பலவாயிற் பன்மையானுங் கூறப்படும்.

(வ - று.) கண்ணல்லள், கைந்நல்லள், முலைநல்லள்; கண்ணல்லர், கைத்தல்லர், முலைநல்லர்.

(வி - ரை.) 'தம்மினைக் கியலும் எழுத்தலங் கடையெ' என்ற சூத்திரத்தோடு இந்நூற்பா தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது. (கூக)

அடுக்கு

எஙூசு. அசைநிலை யிசைநிறை யடுக்கிரு திறத்தன.

(இ - ள்.) அசைநிலையும், இசைநிறையும் என அடுக்கு இரண்டு திறத்தனவாம்.

(வ - றை.) மற்றே மற்றே, அன்றே வன்றே, அசைநிலை; ஏஏஏஏ யம்பன் மொழிந்தனளே, இசைநிறை. (கூச)

அறுவகைத் தொகைச் சொற்கள்

எஙூஎ. வேற்றுமை வினைபண் புவமை யும்மை
யன்மொழி யெனத்தொகை யறுவகைப் படுமே. (கூஞ)

வேற்றுமைத் தொகை

எஙூஅ. [1]இரண்டு முதலா மிடையா றுருபும்
வேளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே.

(இ - ள்.) எழுவாய்க்கும் விளிக்கும் இரண்டு முதல் ஆறுருபுகளுந் தொக்க தொடர்மொழி வேற்றுமைத் தொகையாம்.

(வ - றை.) நிலங்கடந்தான், ஐ; தாய்மூவர், ஓடு; கருப்புவேலி, கு: வரைபாய்தல், இன்; சாத்தன் புத்தகம், அது; மன்றப்பெண்ணை, கண்; எனவரும். (கூசு)

வினைத் தொகை

எஙூக. [2]காலங் கரந்த பெயரேச்சம் வினைத்தொகை.

(இ - ள்.) இறப்பெதிர்வு நிகழ்வாகிய முக்காலங்களும் தொக்க பெயரெச்சவினை வினைத்தொகையாம்.

(வ - றை.) கொல்யானை :—கொன்ற யானை, கொல்லும் யானை, கொல்கின்ற யானை.

---

1. நன் - பொது - கூ
2. நன் - பொது - கக

(வீ - ரை.) கொன்ற, கொல்லும், கொல்கின்ற என்ற எச்சங்களுள் காலம் காட்டும் ஈறுகள் தொகின் கொல் என்றாகும். ஆதலின் 'காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை' என்றனர். (கூஎ)

பண்புத் தொகை

எசஂ. வண்ணஞ் சுவையே வடிவே யளவே
என்பவும் பிறவு மிதன்குண நுதலி
வரூஉ மியற்கை பண்பின் றொகையே.

(இ - ள்.) வண்ணம், சுவை, வடிவு, அளவு முதலியனவும் இவைபோல்வன பிறவும் இதனது குணத்தைக் கூறிவருவன பண்புத் தொகையாம்.

(வ - றை.) கருங்குதிரை வண்ணம்; தீங்கரும்பு சுவை; வட்டப்பலகை வடிவு; நெடுங்கோல் அளவு. (கூஅ)

உவமைத் தொகை

எசக. [1]உவம வுருபில துவமைத் தொகையே.

(இ - ள்.) வினைபயன்மெய் உருபென்பனவற்றைப பற்றி வரும் உவமையுருபு தொக்க தொடர்மொழி யுவமைத்தொகை யாம்.

(வ - றை.) புலிக்கொற்றன், வினை; கற்பகவள்ளல், பயன்; குரும்பை முலை, மெய்; பவளவாய், உருபு. (கூக)

உம்மைத் தொகை

எசஉ. எண்ண லெடுத்த னீட்டன் முகத்தல்
அளவையு ளும்மில தத்தொகை யாகும்.

(இ - ள்.) எண்ணலளவை, எடுத்தலளவை, நீட்டலளவை, முகத்தலளவைகளுள், உம்மைதொக்க தொடர்மொழி, உம்மைத்தொகையாம்.

(வ - றை.) ஒன்றேகால், எண்ணல்; தொடியே கஃசு, எடுத்தல்; சாணரை, நீட்டல்; கலனே தூணி - முகத்தல். (க00)

அன்மொழித் தொகை

எசஙூ. [2]ஐந்தொகை மொழிமேற் பிறதொக லன்மொழி.

---

1. நன் - பொது - கஞ.
2. நன் - பொது - கஅ.

(இ - ள்.) வேற்றுமைத் தொகை முதலிய ஐவகைத் தொகை நிலைத்தொடர் மொழிகளுக்குப் புறத்து அவையல்லாத பிறமொழியுருபு தொக்குவருவன அன்மொழித் தொகையாகும்.

(வ - று.) மலர்க்குழல், ஐ; பொற்றொடி, ஆல்; கவியிலக்கணம், கு; பொற்றூலி, இன்; கிள்ளிகுடி, அது; கீழ்வயிற்றுக்கழலை, கண்; வேற்றுமைத்தொகை யுருபுகளின் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; பிறவுமன்ன.

(வி - ரை) தாழ்குழல், கருங்குழல், துடியிடை, தகர ஞாழல் என்பன வினை, பண்பு, உவமை, உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைகளாகும். (கo க)

தொகை மொழிக்கண் பொருள் சிறக்குமாறு

எசஅ. முன்மொழி பின்மொழி இருமொழி பிறமொழி
நிலைபெற லத்தொகை மரபுநான் காகும்.

(இ - ள்.) முன்மொழிமேல் நிற்றலும், பின்மொழிமேல் நிற்றலும், இருமொழிமேல் நிற்றலும், பிறமொழிமேல் நிற்றலும் அத்தொகையும் அவற்றதுபொருளும் நான்காகும்.

(வ - று.) வேங்கைப்பூ - என்புழி, பூவென்னு முன்மொழிக்கண் பொருணின்றது, அது நறிதென்னும் வினையோடியையுமாற்றான், மேற்பட்டுத் தோன்றியவாறு காண்க. மேல்வருவனவற்றிற்கும் இஃதொக்கும், இடவகையான் முன்மொழி யாயிற்று, அடைகடல் என்புழி அடையென்னும் பின்மொழிக்கட் பொருள்நின்றது, இடவகையாற் பின்மொழியாயிற்று. முன்பினென்பன காலவகையால் தடுமாறி நிற்கும். வேங்கைப்பூ, முன்மொழி; கண்ணிமை, பின்மொழி; புலிக்கெண்டை, இருமொழி; கருங்குழல், பிறமொழிகளிற் பொருள்சிறந்து நின்றனவாமெனவறிக.

(வி - ரை.) 'வேங்கைப்பூ' என்புழி வேங்கை முற்படச் சொல்லப்படுவது; பூ பிற்படச் சொல்லப்படுவது. கால வகையால் வேங்கை முன்மொழியாகும்; பூ பின்மொழியாரும். ஆனால் இதுவே இடவகையான் நோக்கும்பொழுது, பூ என்பது முன்மொழியாகும். வேங்கை என்பது பின்மொழியாகும். வலது புறமிருந்து இடது புறமாகக் கால வரையறையையும், இடது புறமிருந்து வலது புறமாக இட வரையறையையும் கொள்க. (தொல் - சொல் - சேனா - விளக் - சகக). (கo உ)

தொகைச் சொற்கள் ஒருசொல் நடைய

எசஙி. [1]எல்லாத் தொகையு மொருசொன் னடைய.

---

1. தொல் - சொல் - எச்சவியல் - உசு.

(இ - ள்.) அறுவகைத் தொகைச் சொற்களும் ஒரு சொல்லாய் நடத்தலே உடையவாமென்க.

(வ - று.) யானைக்கோடு, கொல்யானை, நிலங்கடந்தான், குன்றத் திருந்தான். (கஉஉ)

இடத்தொகையும் பெயர்த்தொகையும்

எசசு. [1]வல்லொற்று வரினே யிடத்தொகை யாகும்
மெல்லொற்று வரினே பெயர்த்தொகை யாகும்.

(இ - ள்.) வல்லொற்றுவரின் இடத்தொகையாம் மெல்லொற்றுவரிற் பெயர்த்தொகையா மென்க.

(வ - று.) வடுகக்கண்ணன் - இடம்; வடுகங்கண்ணன் - பெயர்.

(வி - ரை.) வடுகக்கண்ணன் - வடுகநாட்டிற் பிறந்த கண்ணன் என விரிதலின் இடத்தொகையாயிற்று. வடுகங்கண்ணன் - வடுகனுகிய கண்ணன் என விரிதலின் பெயர்த்தொகையாயிற்று. (கஉச)

உயர்திணை உம்மைத்தொகை

எசஎ. [2]உயர்திணை யும்மைத் தொகைபல நீறே.

(இ - ள்.) உயர்திணைக்கண் வரும் உம்மைத் தொகை பலச்சுரிய ஈற்றுனடக்கும்.

(வ - று.) பரணர், நக்கீரர், மாமூலர், கபிலர்.

(வி - ரை.) எடுத்துக்காட்டில் தனித்தனியே பலர்பால் ஈறுகக் காட்டப்பட்டுள்ளது. அது பொருத்தமின்று. கபிலபரணர், கல்லாட மாமூலர் எனக் காட்டுவதே பொருத்தமாகும். உயர்திணைப் பெயராக இருந்து அதுவும் உம்மைத்தொகை படநின்று பலர்பாலுக்குரிய ஈற்றுன் நடத்தல்வேண்டும் என்பதே நூற்பாவின் கருத்தாகும். (கஉஇ)

எசஅ. வாரா மரபின வரவியம் புதலும்
என்னு மரபின வெனவியம் புதலும்
அன்னவை யெல்லாம் அவற்றவற் றியல்பான்
இன்ன வென்னுங் குறிப்புரை யாகும்.

(இ - ள்.) வாரா இயல்பினவற்றை வருவனவாகக் கூறலும், என்னு இயல்பினவற்றை என்பனவாகக் கூறலும்,

---

1. நன் - பொது - உ0.
2. ,, ,, உக.

அத்தன்மையன வெல்லாம் அவ்வப்பொருளியல்பான் இத் தன்மையவென் றுரைக்கும் குறிப்புச் சொல்லாம்.

(வ - று.) அந்நெறியீண்டு வந்துகிடந்தது; அம்மலியதனோடு வந்து பொருந்திற்று; அவலவலென்கின்றன நெல்; மழை மழையென்கின்றன பைங்கூழ்.

(வி - ரை.) அவல் அவல் என்கின்றன நெல் - நெல் பள்ளம் (தாழ்ந்த பகுதி) வேண்டும், பள்ளம் வேண்டும் என்று கூறுகின்றது. அவல் பள்ளமாதல், 'அவலா கொன்றே மிசையா கொன்றே' (புறம் - கஅஎ) என்பதனானும் அறிக. 'வெள்ளமே யானாலும் பள்ளமே பயிர் செய்' என்ற பழமொழியும் ஈண்டு அறியத்தக்கது. (தொல் - சொல் - சேனா - விளக்க - சஉஉ). (க0ஈ)

ஒருசொல் அடுக்கிற்கு வரையறை

எசக. விரைவு மூன்றிசை நிறைநான் கடுக்கே.

(இ - ள்.) மேற்கூறிப்போந்த (எகூடு) ஒருசொலடுக் கினுள். விரைவுப்பொருள்பட அடுக்குவது மூன்று வரம்பை யுடைத்து, இசை நிறையடுக்கு நான்காகிய வரம்பையுடைத் தாம்.

(வ - று.) தீத்தீத்தீ, விரைவு; பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ நாமகள், இசைநிறை. (க0எ)

பத்துவகை எச்சங்கள்

எரு0. [1]பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை
எதிர்மறை யும்மை எனவே சொல்லே
குறிப்பே யிசையே யாயீ ரைந்தும்
நெறிப்படத் தோன்று மெச்சச் சொல்லே.

(இ - ள்.) பிரிநிலையெச்சம், வினையெச்சம், பெயரெச்சம், ஒழியிசையெச்சம், எதிர்மறையெச்சம், உம்மையெச்சம் என வெச்சம், சொல்லெச்சம், குறிப்பெச்சம், இசையெச்சம் ஆகிய பத்தும் எச்சப் பொருண்மையைத் தருமொழியாம். (க0அ)

இதுவுமது

எருக. தத்தமெச் சத்தோடு சார்ந்துநின் றியலும்.

---

1. தொல் - சொல் - எச்ச - சூ.

(இ - ள்.) மேற்கூறிப்போந்த பத்தெச்சங்களும் தத்தமெச் சங்களோடு கூடிநடக்கும்.

(வ - று.) தானேகொண்டான் - பிரிநிலை; உழுதுவந்தான் - வினையெச்சம்; உண்ட சாத்தன் - பெயரெச்சம்; கூரியதோர்வாண்மன் - ஒழியிசையெச்சம்; யானே கள்வன் - எதிர்மறை யெச்சம்; சாத்தனும் வந்தான் - உம்மை யெச்சம்; ஒல்லென வொலித்தது - எனவெச்சம்; 'கற்றதனு லாய பயனென்கொல்' (குறள்-உ) சொல்லெச்சம்; 'இளதாக முண்மரங்கொல்க' (குறள்-அஎக) குறிப்பெச்சம். (கஅக)

இரப்புரை

எருஉ. ஈதா கோடுவிரப் புரையா கும்மே.

(இ - ள்.) ஈயென்பதும், தாவென்பதும், கொடுவென்பதும் ஆகிய மூன்றுசொல்லும் ஒருவன் ஒன்றை இரத்தற்கண் வரும் மொழியாம். (கஉப)

ஈயென் கிளவி

எருங. அவற்றுள்,
ஈயென் கிளவி யிழிந்தோ னிரப்புரை.

(இ - ள்.) முற்கூறியவற்றுள், ஈயென்னுஞ்சொல் இழிந்தவனிரப்புரையாகும்.

(வ - று.) சோறு ஈ எனவரும். (கஉக)

தாவென் கிளவி

எருச. தாவென் கிளவி சமானன் மேற்றே.

(இ - ள்.) தாவென்னுஞ் சொல் ஒப்போன் இரப்புரையாம்.

(வ - று.) ஆடைதா - எனவரும். (கஉஉ)

கொடுவென் கிளவி

எருரு. கொடுவென் கிளவி யுயர்ந்தோன் கூற்றே.

(இ - ள்.) கொடுவென்னுஞ் சொல் உயர்ந்தோன் இரப்புரையாகும்.

(வ - று.) சாந்துகொடு எனவரும். (கஉங)

ஆகுபெயர்

எருசு. ஒன்றன் பெயரா னதற்கியை பிறிதை
அறைகுவ வாகு பெயரா கும்மே.

(இ - ள்.) ஒன்றனது பெயரால் அதற்கியை பிறிதொன் றினைக் கூறல் ஆகுபெயராம்.

(வ - று.) உலகு - உயிர்; தாமரை - தாமரைப்பூ. (ககச)

எருள. கேட்குந போலவுங் கிளக்குந போலவும்
[1]இயற்றுந போலவு மியங்குந போலவும்
அஃறிணை மருங்கினு மறையப் படுமே.

(இ - ள்.) கேளாதனவற்றைக் கேட்பனபோலும், மொழியாதனவற்றை மொழிந்தனபோலும், செய்யாதனவற்றைச் செய்தனபோலும், இயங்காதனவற்றை இயங்குவனபோலும் அஃறிணைகண்ணுங் கூறப்படும்.

(வ - று.) 'நன்னீரை வாழி யனிச்சமே' (குறள் - கககக) 'பகை மையுங் கேண்மையுங் கண்ணுரைக்கும்' (குறள் - எ0க) 'தன்னெஞ்சே தன்னைச்சுடும்' (குறள் - உகஉ) இவ்வழியெங்கேபோம். (கககஇ)

ஒருசார் சொற்கவின் வழுவமைதி

எருஅ. ஒருதிணைப் பெயரொரு திணைக்காய் வருஉவும்
திசைச்சொல் வாய்பாடு திரிந்து வருஉவும்
இயைபில் லனவியைந் தனவாய் வருஉவும்
திணைமுத லாயின திரிந்து வருஉவும்
அன்றி யனைத்துங் கடப்பா டிலவே.

(இ - ள்.) ஒருதிணைப்பெயர் ஒருதிணைக்காய் வருவன - ஓரெருதை நம்பி - ஒரு கிளியை நங்கையெனல்.

திசைச்சொல் வாய்பாடு திரிந்துவருவன - புலியான், பூசையானெனல்.

தொனனெறிக்கண் இயைபில்லன இயைந்தனவாய் வருவன - ஆற்றுட்செத்த வெருமையீர்த்தல் ஊர்க்குயவர்க்குக் கடன்.

---

1. இயங்குந போலவும் இயற்றுந போலவும் என்பது நன்னூல் (பொது - ஙஅ).

செய்யுட்கண் திணைமுதலாயின திரிந்துவருவன:-

எழுதுவரிக் கோலத்தா ரீவார்க் குரியார்
தொழுதிமைக் கண்ணமைந்த தோட்டார்—முழுதகலா
நாணிற் செறிந்தார் நலங்கிள்ளி கூடோறும்
பேணற் கமைந்தார் பெரிது.

(வி - ரை.) ஆற்றுட் செத்த எருமை ஈர்த்தால் ஊர்க்குயவர்க்குக் கடன் என்ற தொடர்பற்றி எழுந்த கதை ஒன்றுண்டு. அது வருமாறு :

"வாணிகச் சாத்தொடு சென்றுழலுருவன், அச்சத்தினின்றும் பிரிந்து ஒரு பட்டினத்துட் சென்று பல எருமைகளைப் பொருள் கொடுத்தேற்றுத் தந்நாடு சேறற்கு ஒருப்பட்டுப் பலப்பல காவதங் கடந்து ஒரு கான் யாற்றடைகரையை யண்மி அவ்வெருமைகளை நீரருந்தச் செய்து அயர்வுயிர்த்துப் பின்னர் அவ்வாற்றைக் கடக்கும் அமையத்துக் காலமல்லாத காலத்துச் சேய்மைக்கண் பெய்த மழையான் பொருக்கென வெள்ளந்தோன்றி அவ்வெருமைகளை அடித்துக்கொண்டு ஓர் ஊர்ப்புறத் தொதுக்கிவிட்டது. அதனை யுணர்ந்த அவ்வூரவர் அவைகளை ஈர்த்துக் கொணர்ந்து கரை சேர்த்தற்குப் பலரை வேண்டியும் நாற்றம் மிகுதியாக விருந்தமையின். ஒருவரும் உடன்பட்டிலர். இதனை யுணர்ந்த பெரியாரொருவர் 'இங்ஙனமாய செயல் நேரிடின், இச்செயலை இன்னவாறு செய்து முடித்தல் வேண்டுமென நம்மூர் அடங்கலிலிருக்கும்; அதனைக் கணக்கனை யழைத்துக் கேட்பின் உண்மை வெளியாம்' என உரைத்தனர். அவ்வாறே கணக்கனை யழைத்துக் கேட்க அவன் அடங்கலை எடுத்துவந்து 'கண்ணுறீஇக் கழறுகின்றேன்' எனக் கூறித் தம்மில்லிற் சென்று தனக்கு ஆண்டுதோறும் நன்கொடையாகக் கொடுக்கும் பொருளை அவ்வாண்டிற் கொடாத அவ்வூர்க் குயவரை யொறுத்தற்குத் தக்க அமையமிதுவே யெனக் கருதிக்,

'காட்டெரு முட்டை பொறுக்கி
மட்கலஞ் சுட்ட புகையான்
மேற்கே மேகந் தோன்றி
மின்னி யிடித்து மழைபொழிந்து
யாற்றில் நீத்தம் பெருகி
அடித்துக் கொல்லும் எருமைகளை
ஈர்த்துக் கொணர்ந்து கரையேற்றல்
இவ்வூர்க் குயவர்க் கென்றுங் கடனே'

என்று ஒரு பழைய ஓலையில் வரைந்து அவ்வடங்கலோடு சேர்த்துக் கட்டி அவ்வூரவர் முன் கொணர்ந்து கட்டையவிழ்த்துப் பல ஏடுகளைத் தள்ளிப் படித்துக்காட்டினன். அதனைக் கேட்ட பெரியார் பலரும் குயவன் சுள்ளியெழுந்த புகையாலுய மேகந்தந்த நீரான் எருமை சாதலின், இவ்வூர்க் குயவரே இவைகளைக் கரையேற்றல் முறையென முடிவு செய்தனர்" என்பதாம். (தொல் - சொல் - இளம் - வினைக்க - சசஉ).

'எழுதுவரிக் கோலத்தார்' என்னும் பாடல் பெண்ணிற்கும் நூலிற்கும் பொருந்துவதாகும். வரிக்கோலம் - செவ்வரி, கருவரியழகு; வரிவடிவம். தொகுதி - கூட்டம். தோடு - இதழ். (ககக)

செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்

எருக. [1]செய்யா யென்னும் முன்னிலை வினைச்சொல்
செய்யேன் கிளவி யாகிட னுடைத்தே.

(இ - ள்.) செய்யாயென்னும் வாய்பாட்டதாகிய முன்னிலை வினைச்சொல், ஆயென்னுமீறுகெடச் செய்யென்னுஞ் சொல்லாய் நிற்றலுமுடைத்தாம்.

(வ - று.) நடவாய், வாராய், உண்ணாய், தின்னாய் என்பன ஈறு கெட்டு - நட, வா, உண், தின், எனச் செய்யென் கிளவியாயினவாறு காண்க. (ககஎ)

முன்னிலை வினைக்கண் வரும் ஈகாரமும் ஏகாரமும்

எசுo. [2]மூன்னிலை முன்ன ரீயு மேயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே.

(இ - ள்.) முன்னிலைவினைச் சொல்முன் வரும் ஈகாரமும் ஏகாரமும் அம்முன்னிலைச் சொற்கேற்ற மெய்யை ஏறிவரும்.

(வ - று.) 'சென்றீபெரும நிற்றகைக்குநர் யாரே' (அகம் - சசு); 'அட்டி லோலை தொட்டகை நின்மே' (நற்; கூoo) எனவரும். (ககஅ)

முதல் இடைகடைக் குறை

எசுக. ஒருமொழி மூவழிக் குறைதலும் வரையார்.

(இ - ள்.) ஒரு சொல் முதலினும் இடையினும் கடையினும் குறைதலை நீக்கார்.

(வ - று.) மரை - ஓதி - நீல். (ககக)

மேலதற்கோர் சிறப்புவிதி

எசுஉ. குறைந்தன வாயினு நிறைந்தன வாகும்.

(இ - ள்.) அம்மூன்றுமொழியுங் குறைந்தனவாயினும் நிறைந்தனவேயாம்.

---

1. தொல் - எச்ச - நிசு.
2. ,, நிடு.

(ஆ - மு.) மரை - தாமரை; ஒதி - ஒந்தி; நீல் - நீலம். (கூ௮)

வேறுபடுக்கும் சொல்

எசுஙூ. [1]இடைச்சொல் லெல்லாம் வேற்றுமைச் சொல்லே.

(இ - ள்.) பிறிதோர் சொல்லை வேறுபடுப்பனவும், பிறிதோர் சொல்லான் வேறுபடுக்கப் படுவனவும் எனச் சொல் இரு வகைப்படும். பிறிதோர் சொல்லை வேறுபடுத்தலாவது விசேடித்தல்; பிறிதோர்சொல்லான் வேறுபடுக்கப்படுதலாவது விசெடிக்கப் படுதல்; இடைச்சொல் லெல்லாம் பிறிதோர்சொல்லை விசேடிக்கும் மொழியாமென்க. (கூ௬)

இதுவுமது

எசுச. [2]உரிச்சொன் மருங்கினு முரியவை யுரிய.

(இ - ள்.) உரிச்சொற்கண்ணும் வேறுபடுக்குஞ் சொல்லாதற்கு முரியனவுரியவாம். எல்லாம் ஆகாவாமெனவே உரிச்சொல்லுள் வேறுபடுத்தும் வேறுபடுக்கப்பட்டும் இருநிலைமையும் உடையவாய் வருவனவே பெரும்பான்மை யென்பதாம்.

வேறுபடுக்குஞ் சொல்லேயாவன - உறு, தவ, நனி; இருநிலைமையு முடையன - குரு, கெழு, செல்லல், இன்னல் என்னுந் தொடக்கத்தன; உறுபொருள், தவப்பல, நனிசெய்த்து என இவையொனறனை விசேடித்தல்லது வாராமையும், குருமணி விளங்கு, குருகேழ்கிள ரகலம், செங்கேழ், செல்லனெய், அருஞ் செல்லல், இன்னற்குறிப்பு. பேரின்னல் என இவை ஒன்றை விசேடித்தும் விசேடிக்கப் பட்டும் இருநிலைமையு முடையவாய் வருமாறும் காண்க. (கூ௭)

வினையெச்சம்

எசுஞ. [3]வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய.

(இ - ள்.) மேற்கூறிய வினையெச்சமும் வேறுபட்ட பல இலக்கணத்தையுடையவாம்.

(வ - று.) ஞாயிறுபட்டுவந்தான்; ஓடிவந்தான்.

---

1. தொல் - எச்ச - நிசு
2. ,, ,, கூ0.
3. ,, ,, கூக.

(வி - ஏ.) ஞாயிறு பட வந்தான் என்பது பட்டு வந்தான் எனத் திரிந்தது. ஓடிவந்தான் என்பதில் வந்தான் என்னும் வினையை ஓடி என்பது விசேடித்து நின்றது. எனவே வினையெச்சங்களுள் சில ஈறு திரிந்தும், முடிக்கும் சொல்லை விசேடித்தும் வரும் இலக்கணமுடையது என்பது இதனாலறியலாம். இதன் விரிவைச் சேனாவரையர் உரையான் அறிக. (கஉஉ)

குறிப்பால் பொருளுணர்த்துஞ் சொற்கள்

எசுசு. முன்னத்தி னுணருங் கிளவியு முளவே.

(இ - ள்.) குறிப்பாற் பொருள் அறியப்படும் சொற்களும் உளவாம்.

(வ - று.) குழைகொண்டு கோழியெறியும் வாழ்க்கையர்,

(வி - ரை.) குழை கொண்டு கோழி எறியும் வாழ்க்கையர் எனவே அன்னபெருஞ் செல்வத்தர் எனக் குறிப்பானறியலாம். (கஉச)

ஒருபொருள் இருசொல்

எசுஎ. [1]ஒருபொரு ளிருசொல் பிரிவில வரையார்.

(இ - ள்.) ஒருபொருள் மேல்வரும் இரண்டுசொல் பிரிவின்றித் தொடர்ந்தவற்றை நீக்காரென்க.

(வ - று.) நிவந்தோங்குபெருமலை.

(வி - ரை.) நிலைத்தல் ஓங்கல் என்பன இரண்டும் ஒரு பொருளன. மிகவுயர்ந்த மலை என்பது கருத்து. (கஉஇ)

ஒருமை சுட்டிய பெயர்ச் சொற்கள்

எசுஅ. [2]ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி
பன்மைக் காகு மிடனுமா ருண்டே.

(இ - ள்.) ஒருமைக்குரியசொல் பன்மைக்காகும் இடனு முண்டு.

(வ - று.) 'ஏவலிளையர் தாய்வயிறு கறிப்ப' (அகம் - சுசு) எனவரும்.

(வி - ரை.) ஒருமையைக் குறித்து வருஞ் சொற்கள் பன்மைப் பொருள்பட நிற்பதும் உண்டு என்பது இதன் கருத்தாகும்.

தாய் என்னும் ஒருமை சுட்டிய பெயர் இளையர் என்ற பன்மைக் கேற்பத் தாயர் எனப் பன்மையுணர்த்தியவாறு காண்க. (கஉசு)

ஒழிபியல் முற்றும்.

---

1. தொல் - சொல் - எச்ச - சுசு.
2. ,, ,, ,, - சுஙி.

கூ. பொருளதிகாரம்

அகவொழுக்கவியல்

தற்சிறப்புப்பாயிரம்

எசுகூ. மெய்ப்பொருள் பகாப்பொருள் வேத முதற்பொருள்
அப்பொரு ளகத்தணிந் தறைகுவன் பொருளே.

என்பது, மெய்யாகிய பொருளும் பகுக்கப்படாத பொருளும் வேதமுதற் பொருளுமான அப்பொருளை இதயக்கண் ணிருத்திப் பொருளிலக்கணத்தை யானியம்புவன். (க)

எழுதிணை

எஎ. அகப்பொருள் கைக்கிளை யைந்திணை பெருந்திணை
எனவேழ வகைப்படு மென்மனர் புலவர்.

என்பது, அகப்பொருள் - கைக்கிளையும், குறிஞ்சி - முல்லை - பாலை – மருதம் - நெய்தலாகிய ஐந்திணையும், பெருந்திணையும் என ஏழுவகைப்படும்.

என்னை?

கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவா
முற்படக் கிளந்த வெழுதிணை யென்ப. (தொல் - அகத் - க)

என்பதனாலின். (உ)

கைக்கிளை

எஎக. அவற்றுள் கைக்கிளை யொருதலைக் காமம்.

என்பது, முற்கூறியவற்றுள் கைக்கிளையென்பது - தலைவன், தலைவி இருவருள் ஒருதலை நிகழும் காமம்.

(வி - ரை.) 'கைக்கிளை என்ற பொருண்மை யாதோ எனின், கை என்பது சிறுமைபற்றி வரும்; அது தத்தம் குறிப்பிற் பொருள் செய்வதோர் இடைச்சொல்; கிளை என்பது உறவு; பெருமையில்லாத தலைமக்கள் உறவு என்றவாறு; கைக்குடை, கையேடு, கைவாள், கை ஓலியல், கைவாய்க்கால் எனப் பெருமையில்லாதவற்றை வழங்கு பவாதலின்' என்பர் இளம்பூரணர். (ங)

ஐந்திணை

எஎஉ. அன்புடைக் காமமைந் திணைவயிற் படுமே.

என்பது, குறிஞ்சியும் முல்லையும் பாலையும் மருதமும் நெய்தலும் ஆகிய ஐந்திணையும் அன்புடைக்காமம். (ச)

பெருந்திணை

எஎஙு. பொருந்தாக் காமம் பெருந்திணைப் பொருட்டே.

என்பது, பெருந்திணை பொருந்தாக்காமம்.

(வி - ரை.) பெருந்திணை நடுவண் ஐந்திணையாகிய ஒத்த காமத்தின் மிக்கும் குறைந்தும் வருதலானும், எண்வகை மணத்தினும் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்பன அத்திணைப்பாற் படுதலானும், இந்நான்கு மணமும் மேன்மக்கள்மாட்டு நிகழ்தலானும், இவை உலகினுள் பெருவழக்கு எனப் பயின்று வருதலானும், அது பெருந்திணை எனக் கூறப்பட்டது என்பர் இளம்பூரணர். (இ)

உரிப்பொருள்

எஎச. முதல்கரு வுரிப்பொருண் மூன்று மும்மே.

என்பது, பொருள் - முதற்பொருளும், கருப்பொருளும், உரிப்பொருளும் என மூன்று வகைப்படும். (சு)

முதற்பொருள்

எஎடு. அவற்றுள்,
முதல்நிலம் பொழுதிரு வகைப்படு மெனலே.

என்பது, முற்கூறியவற்றுள் முதற்பொருள் - நிலமும் பொழுதும் என இரண்டு பொருள்களையுடையன. (எ)

ஐந்திணையின் பெயர்கள்

எஎசு. முல்லை குறிஞ்சி பாலை மருதம்
நெய்த லைந்திணைக் கெய்திய பெயரே.

என்பது, முல்லையெனவும் குறிஞ்சியெனவும் பாலையெனவும் மருதமெனவும் நெய்தலெனவும் ஐந்திணைக்குப் பொருந்திய பெயராம். (அ)

ஐந்திலத்திற்குரிய இடம்

எஎஎ. வரையே வனமே சுரமே மருதந்
திரையே யவையவை சேர்தரு மிடனே.

என்பது, மலையும் மலைநெச்சார்ந்த இடமும் குறிஞ்சியாம்; காடும் காட்டைச்சார்ந்த இடமும் முல்லையாம்; பாலையும் பாலை யைச் சார்ந்த இடமும் சுரமாம்; வயலும் வயலைச்சார்ந்த இடமும் மருதமாம்; கடலும் கடலைச்சார்ந்த இடமும் நெய்தலாம்.

என்னை?

மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே. (தொல்-அகம்-இ)

என்னுராகலின். (கூ)

பொழுது

எஎஅ. காலம் பருவம் பொழுதிரு வகைப்படும்.

என்பது, பொழுது - காலமும் பருவமும் என இரண்டு வகைப்படும், அவற்றைப் பெரும்பொழுது சிறுபொழுது என்ப. (கo)

பெரும்பொழுது

எஎகூ. அவற்றுள்,
பருவங் காரே கூதிர் முன்பனி
பின்பனி யிளவேனின் முதுவேனி லாறே.

என்பது, முற்கூறியவற்றுள், பருவம் - கார் கூதிர் முன் பனி பின்பனி இளவேனில் முதுவேனில் என்றவாறு. (கக)

அதற்குரிய திங்கள்

எ அo. அவைதாம்,
ஆவணி முதலா ஆடி யீறாக
இரண்டிரண் டாக வேற்கு மென்ப.

என்பது, முற்கூறியவை, ஆவணி புரட்டாசி கார்காலம்; ஐப்பசி கார்த்திகை கூதிர்க்காலம்; மார்கழி தை முன்பனிக்காலம்; மாசி பங்குனி பின்பனிக்காலம்; சித்திரை வைகாசி இளவேனிற் காலம்; ஆனி ஆடி முதுவேனிற்காலம்; இளவேனி லெனினும் வசந்த மெனினும் ஒக்கும். (கஉ)

சிறுபொழுது

எஅக. மாலை யாமம் வைகறை யேற்பாடு
நண்பகற் சிறுபொழு தைவகைத் தாகும்.

என்பது, சிறுபொழுது - மாலை யாமம் வைகறை எற்பாடு நண்பகல் என ஐந்து வகைப்படும், எற்பாடெனினும் விடிய லெனினு மொக்கும்.

(வி - ரை.) அவற்றுள் மாலையாவது, நிசியின் முன்னும் எற் பாட்டின் பின்னும் உண்டாகிய காலம். யாமமாவது இடையிரவு வைகறையாவது, விடியற்காலம். எற்படுகாலையாவது, ஆதித்தன் படுகிற பொழுது. நண்பகலாவது உச்சிப்பொழுது (கக)

முல்லைக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும்

எஅஉ. காரு மாலையுங் காட்டிற் குரிய.

என்பது, கார்காலமும் மாலைப்பொழுதும் முல்லை நிலத்துக் குரியன. (கச)

குறிஞ்சிக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும்

எஅங. கூதிரும் யாமமுங் குறிஞ்சிக் குரித்தே.

என்பது, கூதிர்க்காலமும் யாமப்பொழுதும் குறிஞ்சி நிலத் துக்குரியன. (கஞ)

அதற்குரிய பெரும்பொழுது

எஅச. பனியெதிர் பருவமு முரிய வாகும்.

என்பது, முன்பனிக்காலமும் அக்குறிஞ்சிக்குரியன.

(வி - ரை.) எதிர்தல் - முன்னுதல். எனவே முன்பனியாயிற்று. (கசு)

மருதத்திற்குரிய சிறு பொழுதுகள்

எ அடு. வைகுறு விடியன் மருதக் குரிய.

என்பது, வைகறையும் விடியற்பொழுதும் மருதநிலத்துக்குரியன. (கஎ)

நெய்தற்குரிய சிறுபொழுது

எஅசு. எற்பாடு நெய்தற் குரிய வாகும்.

என்பது, விடியற்பொழுது நெய்தல் நிலனுக்குரியன.

(வி - ரை.) படுதல் - தோன்றுதல், மறைதல் என இரு பொருள் படும். ஈண்டுத் தோன்றுதல் என உரைகண்டு கதிரவன் தோன்றும் பொழுதாகிய விடிற் பொழுது எனக் கூறினர். எனினும் தொல்காப்பிய உரையாசிரியர்கள் கதிரவன் மறைகின்ற பொழுது என்றே உரை காண்பர். கற்பொடு புணர்ந்து கணவன் சொற்பிழையாது இல்லறம் நடத்தும் மகளிர் விடியற்காலத்து இரங்குதல் மரபன்றுதலானும், காம நோய் காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை யலரும் இயல்பினது ஆதலின் கதிரவன் மறைகின்ற பொழுது பிரிவுகண்டு இரங்குவதே பொருந்துவதாதலானும் தொல்காப்பிய உரையாசிரியர்கள் கூற்றே பொருந்துவதாகும். (கஅ)

பாலைக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும்

எஅஎ. நண்பகல் வேனி னடுத்தி ணைக் குரிய.

என்பது, நண்பகற்பொழுதும் வேனிற்காலமும் பாலை நிலனுக்குரியன.

(வி - ரை.) நடுத்திணை - பாலைத்திணை. நடுவுநிலைத்திணையென ஆள்வர் தொல்காப்பியர். இப்பெயர் பெறுதற்குரிய காரணத்தை நச்சினார்க்கினியர் விளங்க வுரைப்பர். அது வருமாறு: பாலைக்கு நடு வணதென்னும் பெயர் ஆட்சியுங் குணனுங் காரணமாகப் பெற்ற பெயர். 'நடுவுநிலைத்திணையே நண்பகல் வேனில்' (கூ) என ஆள்ப. புணர்தல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பவற்றிற்கு இடையே பிரிவு நிகழ்தலானும், நால்வகை யுலகத்திற்கிடையிடையே.

> ''முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து
> நல்லியல் பழிந்து நடுங்குதுய ருறுத்துப்
> பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்''

(சிலப் - காடு - சுஉ - சுசு) என முதற்பொருள் பற்றிப் பாலை நிகழ்தலானும், நடுவணதாகிய நண்பகற்காலந் தனக்குக் காலமாகலானும், புணர்தற்கும் இருத்தற்கும் இடையே பிரிவு வைத்தலானும். உலகியற் பொருளாகிய அறம்பொரு ளின்பங்களுள் நடுவணதாய பொருட்குத் தான் காரணமாகலானும் நடுவணதெனக் குணங்காரணமாயிற்று. (தொல் - பொருள் - அகத் - நச் - உ) (கக)

அதற்குரிய பெரும்பொழுது

எஅஅ. பின்பனி தானு முரித்தெனப் படுமே.

என்பது, பின்பனிக்காலமும் அந்நிலத்துக்குரியன. (உ0)

மருதம், நெய்தற்குரிய பெரும்பொழுதுகள்

எஅக. மருத நெய்த லென்றிவை யிரண்டிற்கும்
உரிய பெரும்பொழு திருமூன் றும்மே.

என்பது, மருதம் நெய்தல் ஆகிய விரண்டு நிலனுக்கும் பெரும்பொழுதாகிய காரும் கூதிரும் முன்பனியும் பின்பனியும் இளவேனிலும் வேனிலு முரியன. (உக)

கார்காலத்திற்குரிய நிகழ்ச்சிகள்

எகo. வாடை யடித்தன் மயில்கே கயப்புள்
இந்திர கோப மெழுந்தக மகிழ்தல்
அன்னங் கிளிமயி லகன்று வருதல்
காந்தள் கொன்றை காயா மலர்தல்
கமல மேங்கல் கார்காலக் குரித்தே.

என்பது, வாடையடித்தல்; மயில் கேகயம் இந்திரகோபம் தோன்றிமகிழ்தல்; அன்னம் கிளி மயில் அகன்றுவருதல்; காந்தள் கொன்றை காயா மலர்தல்; தாமரையேங்கல் கார்காலத்துக்குரியன.

(வி - ரை.) இந்நூற்பா முதல் அoo ஆம் நூற்பா வரை, பெரும் பொழுது, சிறுபொழுதிற்குரிய இயற்கை நிகழ்ச்சிகள் குறிக்கப்பெறுகின்றன. ஆசிரியரின் புலமை நலம் பாராட்டுதற்குரியதாகும். (உ)

கூதிர்க்காலத்திற்குரிய நிகழ்ச்சிகள்

எகக. கூதி ருலவை வீசல்கொக் கொடுவால்
அன்னஞ் சங்கு மகிழ்வுற வுதகந்
தெளிதன் மீனினஞ் செனித்தன் முகிற்குழாஞ்
சூற்கொளல் சிறுசண் பகமபாரி சாத
மலர்தன் மானவர் வருந்துதல் கூதிர்க்
காலக் குரிமையாங் காணுங் காலே.

என்பது, கூதிர்க்காற் றடித்தல்; கொக்கு அன்னம் சங்கு மகிழ்தல்; நீர்தெளிதல்; மீனினஞ்சனித்தல்; மேகங்கள் சூழ் கொளல்; சிறுசண்பகம் பாரிசாதம் மலர்தல்; மானிடர் வருந்தல் கூதிர்க்காலக்குரியன. (உக)

முன்பனிக்குரிய நிகழ்ச்சிகள்

எகூஉ. கோடை வீசல் கூகையு மாந்தையும்
மகிழ்தல் செவ்வந்தி மாமர மலர்தல்
இலந்தை பழுத்த லிக்குநென் முதிர்தன்
முன்பனிக் குரியவா மொழியுங் காலே.

என்பது, கோடைக்காற் றடித்தல்; கோட்டான் ஆந்தை மகிழ்தல்; செவ்வந்திமரம் மாமரம் மலர்தல்; இலந்தை பழுத்தல்; கரும்பு நெல் முதிர்தல் முன்பனிக் காலக்குரியன. (உசு)

பின்பனிக்குரிய நிகழ்ச்சிகள்

எகூக. வீங்குல வைக்கால் வீசல்கான் கோழி
புறவ மசிழ்தல் போங்கருங் கோங்கு
மலர்தல் பேரீந்து மடற்பூ பழுத்தல்
பின்பனிக் குரியவாம் பேசுங் காலே.

என்பது, உலவைக்காற் றடித்தல்; காட்டுக்கோழி புறவு மகிழ்தல்; இலவுகோங்கு மலர்தல்; பேரீந்து பூ பழுத்தல் பின் பனிக்காலக் குரியன. (உடு)

இளவேனிற்குரிய நிகழ்ச்சிகள்

எகூசு. தென்ற லடித்த றேன்குயி லோடே
அன்றிலு மகிழ்தன் மாங்கனி யுதிர்தல்
மயின்மகிழ்ந் தாடன் மலர்தல் புனலின்
தாழை வசந்தந் தனக்குரித் தாகும்.

என்பது, தென்றற்காற் றடித்தல்; வண்டு குயில் அன்றில் மகிழ்தல்; மாங்கனி யுதிர்தல்; மயில்மகிழ்ந்தாடல்; புன்னை தாழை மலர்தல் இளவேனிறகாலக்குரியன. (உசு)

முதிர்வேனிற்குரிய நிகழ்ச்சிகள்

எகூஙி. கான மேறன்றல் காற்கோடை வீசல்
வலியான் காடை வான்பாடி மகிழ்தன்
மல்லிகை பாதிரி மலர்தலும் பிறவு
முதிர்வேனிற் குரியவா மொழியுங் காலே.

என்பது, பேய்த்தேரோடல்; கோடைக்காற் றடித்தல்; வலியான் காடை வானம்பாடி மகிழ்தல்; மல்லிகை பாதிரி மலர்தல் ஆறுகாலங்களுக்கும் முதிர்வேனிற்கும் உரியன. (உஎ)

மாலைப்பொழுதிற்குரிய நிகழ்ச்சிகள்

எகூக. குவளை மலர்தல் குருகின மொலித்தல்
கன்றை யுள்ளிக் கறவை போதரல்
வனசங் கூம்பன் மாலைக் குரிய.

என்பது, குவளைமலர்தல்; பறவைகள் சத்தித்தல்; கன்றை நினைத்துக் கறவைப்பசுப்போதல்; தாமரைகூம்பல் மாலைப் பொழுதிற்குரியன. (உஅ)

யாமப் பொழுதிற்குரிய நிகழ்ச்சிகள்

எகூள. கூகை சகோரங் குழுமியுண் மகிழ்தல்
கடனீர் பொங்கல் களவுமேம் படுதல்
யாமக் குரிமைய வாகு மென்ப.

என்பது, கோட்டான் சகோரம் மகிழ்தல் கடல்மேதிகப்படல் களவதிகமாதல் யாமப்பொழுதிற்குரியன. (உகூ)

வைகறைப் பொழுதிற்குரிய நிகழ்ச்சிகள்

எகூஎ. வைகறைக் குரியவான் மீளெளி மழுங்கல்
வெள்ளி முளைத்தல்வா ரணங்கூ வுதலே.

என்பது, வான்மீனெளிகெடல் வெள்ளிமுளைத்தல் கோழி கூவல் வைகறைப்பொழுதிற் குரியன. (கூ0)

விடியற் பொழுதிற்குரிய நிகழ்ச்சிகள்

எகூஅ. விடியற் குரிய விலங்கு புள்ளினமுதல்
மகிழ்தல் தாமரை மலர்தலு மாகும்.

என்பது, மிருகங்கள் பறவைகள் முதலியன மகிழ்தல் தாமரைமலர்தல் விடியற்பொழுதிற்குரியன. (கூக)

நண்பகற் பொழுதிற்குரிய நிகழ்ச்சிகள்

அ০০. கானல் நீரோடல் களிப்புறச் சக்கர
வாகம் எருமை மாடுநீர்க் கிடத்தல்
உச்சிக் குரியவாம் உணருங் காலே.

பேய்த்தேரோடல் சக்கரவாகமகிழ்தல் எருமைநீரிற் கிடத்தல் நண்பகற்பொழுதிற்குரியன. (கூஉ)

கருப் பொருள்கள்

அ০க. கருப் பொருள்,
தெய்வஞ் செல்வர் சேர்குடி புள்விலங்
கூர்நீர் பூமர முணப்பறை யாழ்பண்
தொழிலெனக் கருவீ ரேழவகைத் தாகும்.

கருப்பொருள், தெய்வம் தலைவன் தலைவி குடி பறவை மிருகம் ஊர் பூ மரம் உணு பறை யாழ் இசைப்பாட்டு தொழில் ஆகப் பதினன்கு வகைப்படும். (கூகூ)

குறிஞ்சிக்குரிய கருப்பொருள்கள்

அ০உ. வேற்கர முருகன் வெற்பன் சிலம்பன்
குறத்தி கொடிச்சி குறவர் கானவர்
குறத்தியர் கிளிமயில் கொல்சினக் களிறு
அரிமாச் சிறுகுடி யருவி யகன்சுனை
ஆரந் தேக்ககி லசோக மைவனம்
உணத்தொண்ட கந்தினை யோம்பல் குறிஞ்சியாழ்
குறிஞ்சிக் கருப்பொரு ளாங்குறித் திடினே.

என்பது, குறிஞ்சித்திணைக் கருப்பொருள் தெய்வம் முருகன்; வெற்பன் சிலமபன குறத்தி கொடிச்சி தலைவர்; குறவர் கானவர் குறத்தியர் குடி; கிளி, மயில் பறவை; யானை, சிங்கம் விலங்கு;

சிறுகுடி, ஊர்; அருவி, சுனைநீர்; சந்தனம் தேக்கு அசோகுமரம் பூ; மலைநெல் உணவு; தொண்டகம், பறை; தினைகாத்தல் தொழில்; குறிஞ்சியாழ், யாழ் இசை. (கச)

பாலைக்குரிய கருப்பொருள்கள்

அ०கூ. விமலை காளை விடலை மீளி
எயின ரெயிற்றியர் மறவர் மறத்தியர்
எருவை பருந்துசெந் நாய்தும் புழிஞை
இருப்பை கூவ லிரும்பதி கவர்தல்
பகைத்துடி பாலையாழ் பஞ்சுரம் வெஞ்சமம்
பகற்சூறை யாடல் பாலைக் கருப்பொருளே.

பாலைத்திணைக் கருப்பொருள், காளி; காளை விடலை மீளி எயினர் எயிற்றியர் மறவர் மறத்தியர்; கழுகு, பருந்து; செந்நாய் சிறுபூனை; இருப்பை கிணறு; பிறர் பெரும்பதியில் திருடல் பகைத்துடி பாலையாழ் பஞ்சுரம் வெஞ்சமம் பகற்சூறையாடல். (கஅ)

முல்லைக்குரிய கருப்பொருள்கள்

அ०ச. திருமால் குறும்பொறை நாடன் செம்மல்
இல்லாள் கிழத்தி யிடைய ரிடைச்சியர்
ஆய ராய்ச்சிய ரடவி வாரண
மான்முயல் பாடி வருமா றகன்சுனை
கொன்றை காயா குருந்த முல்லை
சாமை வரகு தரமுடன் விதைத்தல்
ஏற்றுப்பறை முல்லை யாழ்சா தாரி
முல்லைக் கருப்பொரு ளாமென மொழிப.

என்பது, முல்லைத் திணைக்கருப்பொருள், திருமால்; குறும்பொறை நாடன் தோன்றல் மனைவி கிழத்தி இடையர் இடைச்சியர் ஆயர் ஆய்ச்சியர்; காட்டுக்கோழி, மான், முயல், பாடி; ஆறு, சுனை; கொன்றை, காயா குருந்து, முல்லை; சாமை வரகு விதைத்தல்; ஏற்றுப்பறை, முல்லையாழ் சாதாரி. (கசு)

மருதத்திற்குரிய கருப்பொருள்கள்

அ०டு. இந்திர னூர் னெழின்மிகு கிழவன்
மனைவி கிழத்தி யுழவ ருழத்தியர்

கடையர் கடைச்சியர் கம்புள்வெண் குருகு
எருமை நீர்நா யெழிற்பெரு மூதூர்
ஆறு மனைக்கிண றிலஞ்சி தாமரை
மன்றன் மூழவ மருதயாழ் மருதஞ்
சேந்நெல் வெண்ணை றிருவிழா வயர்தல்
மருதக் கருப்பொரு ளாம்வழுத் திடினே.

என்பது, மருதத்திணைக் கருப்பொருள், இந்திரன் ஊரன் இழவன் மனைவி கிழத்தி உழவர் உழத்தியர் பறவை கொக்கு எருமை நீர்நாய் பேரூர் மூதூர் ஆறு மனைக்கிணறு மகிழ் தாமரை மணப்பறை மருதயாழ் மருதவிசைப்பாட்டு செந்நெல் வெண்ணெல் திருவிழவயர்தல். (கூஎ)

நெய்தற்குரிய கருப்பொருள்கள்

அ0சு. திரைநீர் வருணன் சேர்ப்பன் புலம்பன்
பரத்தி நுளைச்சி பரதர் பரத்தியர்
நுளையர் நுளைச்சிய ரளவ ரளத்தியர்
பாக்கம் பட்டினம் வாயசஞ் சுறவம்
உவர்நீர்க் கேணி கவர்நீர் நெய்தல்
கண்டகங் கைதை முண்டக மடம்பு
மீனுப்புப் படுத்தல் விளரியாழ் செவ்வழி
நளிமீன் கோட்பறை நாவாய்ப் பம்பை
நெடுநீர் நெய்தற் கருப்பொரு ளாகும்.

நெய்தற்றிணைக் கருப்பொருள், வருணன் சேர்ப்பன் புலம்பன் பரத்தி நுளைச்சி பரதர் பரத்தியர் நுளையர் நுளைச்சியர் அளவர் அளத்தியர் பாக்கம் பட்டினம் காக்கை சுறவு உவர்நீர்க்கேணி நெய்தல் தாழை முட்செடி அடம்பு மீன் உப்புப்படுத்தல் விளரியாழ் செவ்வழியிசை கோட்பறை பம்பை. (கூஅ)

திணைமயக்கம்

அ0எ. திணைமயக் குறுதலுங் கடிநிலை யின்றே.

என்பது, குறிஞ்சிமுதலிய ஐந்திணைகளும் ஒன்றொடொன்று மயங்கினும் நீக்கலிலவாம். (கூசூ)

உரிப்பொருள்

அ0அ. [1]புணர்தலும் பிரிதலு மிருத்தலு மிரங்கலும்
ஊடலு மிவற்றி னிமித்தமு மென்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே.

என்பது, புணர்தல் புணர்தனிமித்தம்; பிரிதல் பிரிதனிமித்தம்; இருத்தல் இருத்தனிமித்தம்; இரங்கல் இரங்கனிமித்தம; ஊடல் ஊடனிமித்தம் இவை திணைக்குரிய பொருள். (சஅ)

களவிற்குரிய திணைகள்

அ0கூ. குடவரைக் குறிஞ்சியுங் குணகட னெய்தலுங்
கடவ தாகுங் களவினீர் மைக்கே.

என்பது, மேலமலைக் குறிஞ்சித்திணையும் கீழைக்கடல் நெய்தறறிணையுங் களவிற்புணர்ச்சிக்குரியன. (சக)

கற்பிற்குரிய திணைகள்

அ0க0. நன்னில மருதமுந் தென்னில முல்லையுங்
துன்னிரு கறபொடு தோன்று மென்ப.

என்பது, நல்ல நிலமாகிய மருதத்திணையும் அழகிய நிலமாகிய முல்லைத்திணையும் கற்பிற்புணர்ச்சிக்குரியன. (சஉ)

வேதம் ஓதுதற்குரியோர்

அ0கக. மறையோர் மன்னர் வணிகர் வேளாளருள்
ஓதற் றொழிலுரித் துயர்ந்தோர் மேன.

என்பது, அந்தணர் அரசர் வைசியர் வேளாளர் நான்கு வருணத்தாருள் வேதமோதுந்தொழில் பின்னவரொழிய முன்னுயர்ந்தாராகிய மறையோர் மன்னர் வணிகர் இம்மூவருக்கும் உரியன. (சகூ)

வேதம் அல்லாத பிற கல்வி ஓதுதற்குரியோர்

அ0கஉ. எல்லார்க்கு முரியன விவையல பிறவே.

---

1. தொல் - அகத் - கசு.

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
21 JAN 1975

என்பது, வேதநூல் அல்லாத பிறவாகிய நூல்களெல்லாம் மூற்கூறிய அந்தணர் முதலிய நான்கு வருணத்தார்க்கு முரியன. (சச)

அரசர், வணிகர், வேளாளர்க்குரிய தொழில்கள்

அகஙூ. அயில்வே லத்திர மவாவோடு பயிறல்
கலினவாம் புரவி கரிதே ரூர்தல்
உடைத்தொழி லவாக்கென வுரைத்திசி னோரே.

என்பது, அத்திர சத்திர வித்தைத் தொழிலைக் கற்றலும் யானையேற்றம் குதிரையேறறம் தேரேறிச் செலுத்தல் நாவினறி கற்குந்தொழில் அல்லாத தொழில்கள் அந்தண ரொழித் தொழிந்த மூவர்க்கு முரியன. (சடு)

காவற்பிரிவின் வகை

அகச. காவ லறப்புறங் காவலு நாடு
காவலு மெனவிரு வகைப்படு மெனலே.

என்பது, காவல் அறப்புறங்காவல் நாடுகாவல் என இரண்டு வகைப்படும். (சசு)

அறப்புறங் காவற்குரியார்

அகடு. [1]அவற்றுள்,
அறப்புறங் காவ லனைவர்க்கு முரித்தே.

என்பது, முற்கூறியவற்றுள் அறப்புறங் காவல் அந்தணர் முதலிய நால்வர்க்கு முரியன. (சள)

நாடுகாவற்குரியார்

அகசூ. ஏனைய காவ லிறைவர்க் குரிய.

என்பது, நாடுகாவல் அரையருக்குரியன. (சஅ)

தூதிற்குரியார்

அகள. இருபிறப் பாள ரிறைவரென் றிருவர்க்குந்
தூது போதற் றொழிலுரித் தாகும்.

1. நம்பியகப்பொருள் ஈ அகம் - எகூ.

என்பது, வேற்றரசர்க்குத் தூதுபோய்க் கூறல் அந்தணர் அரசர்க்கு முரியன. (சுகூ)

இதுவுமது

அகஉ. பெருமா ணுற்சிறப் புப்பெயர் பெறினே
ஒழிந்தோ ரிருவர்க்கு முரிய வாகும்.

என்பது, நாடுகாவல் தூதுபோதல் அரையனுற் சிறப்புப் பெயர் பெற்றவராயின் வணிகர் சூத்திரர்க்கும உரியன. (சுo)

புறத்திணை

அகக. புறத்திணை யகத்திணைப் புறமா கும்மே.

என்பது, அகத்திணைப்புறன் புறத்திணை.

(வி · ரை.) வெட்சி குறிஞ்சிக்கும், வஞ்சி முல்லைக்கும், உழிஞை மருதத்திற்கும், தும்பை நெய்தற்கும், வாகை பாலைக்கும், பாடாண் கைக்கிளைக்கும், காஞ்சி பெருந்திணைக்கும் புறனுகும். இது தொல்காப்பியத்தைத் தழுவியதாகும்.

எனினும் காஞ்சித் திணைக்கு இவர் வகுக்கும் இலக்கணம் புறப்பொருள் வெண்பாமாலையைத் தழுவியதாகும். நிலையாமை பொருளாகக் காஞ்சி வருமென்பர் தொல்காப்பியர். நொச்சியைத் தனித் திணையாகக் கூறுவதும் ஐயனரிதனர் நெறியேயன்றித் தொல்காப்பியர் நெறியன்று. (இ)

புறத்திணையின் வகை

அஉo. அதுதான்,
வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
நொச்சி யுழிஞை தும்பை வாகை
எச்சப் படலமோ டிவையென மொழிப.

என்பது, அதுதான் வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி நொச்சி உழிஞை தும்பை வாகையாம். (சுஉ)

வெட்சி

அஉக. போகிப் பகைவரூர்ப் புக்கவர் நிரையைக்
கவர்தல் வெட்சியாங் காணுங் காலே.

என்பது, பகைவர் நாட்டிற் போய்ப்புக்கு அவர் நிரையை ஓட்டிக்கொண்டுவரல் வெட்சிமாலை. (சுக)

கரந்தை

அ௨௨. பகைவர் கவர்ந்ததன் பசுக்களை மீட்டல்
கரந்தை யென்மனார் கற்றுணர்ந் தோரே.

என்பது, பகைவ ரோட்டிக் கொண்டுபோன தனது நிரையை மீட்டல் கரந்தை. (நிச)

வஞ்சி

அ௨௩. மாற்றூர் மேற்செலல் வஞ்சியா கும்மே.

என்பது, பகைவர்மேற்செலல் வஞ்சி. (நிந)

காஞ்சி

அ௨௪. இரைந்து பகைவரோ டெதிர்ப்பது காஞ்சி.

என்பது, ஆரவாரித்துப் பகைவரோ டெதிர்த்தல் காஞ்சி. (நிக)

நொச்சி

அ௨௫. காமரு தன்னரண் காப்பது நொச்சி.

என்பது, தனது கோட்டையைக் காத்தல் நொச்சி. (நிஎ)

உழிஞை

அ௨௬. பகைஞ ரரணைப் பற்றுத லுழிஞை.

என்பது, பகைவர் கோட்டையைப் பிடித்துக்கொள்ளல் உழிஞை. (நிஅ)

தும்பை

அ௨எ. அதிரப் பொருவது தும்பை யாகும்.

என்பது, பகைவர் நடுங்க யுத்தஞ்செய்தல் தும்பை. (நிக)

வாகை

அ௨அ. மாற்று ரோட வருத்தி வெல்வது
வாகை யெனப்பெயர் வைக்கப் படுமே.

என்பது, வருத்தமெய்தி பகைவர் பின்னிட்டோட வெற்றி கொளல் வாகை.

(வி - ரை.) அகக முதல் இந்நூற்பா வரையுள்ள கருத்துக்கள்

"வெட்சி நிரைகவர்தன் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்லுதல் வஞ்சியா—முட்கா
தெதிருன்றல் காஞ்சி யெயில்காத்த னெஞ்சி
யதுவளைத்த லாகு முழிஞை—யதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்தி லொன்னார்
செருவென் றதுவாகை யாம்"

என்னும் நூற்பாலில் சுருங்க உரைக்கப்பட்டுள்ளமை காண்க. (சு0)

அகவொழுக்கவியன் முற்றும்.

உ. களவொழுக்கவியல்

க. கைகோள் இரண்டு

அகக. அளவி லின்பத் தைந்திணை மருங்கிற்
களவுகற் பெனவிரு கைகோள் வழங்கும்.

என்பது, அளவில்லாத இன்பத்தையுடைய குறிஞ்சி முதலிய ஐந்திணைக்கண் களவு கற்பு எனவிரண்டு கைகோள் வழங்கும்.

(வி - ரை.) கைகோள்—கொள்ளப்படும் ஒழுக்கம். (க)

உ. மன்றல் எட்டு

அஙo. அவற்றுள் களவுந் தணர்மறை மன்றல்
எட்டனுள் யாழோ ரியல்பின தாகும்.

என்பது, முற்கூறிய இரண்டனுள் களவாவது பூசுரர்வேதம் ஓரிடத்துக்கூறிய கலியாணம், பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம் காந்தருவம் ஆசுரம் இராக்கதம் பைசாசம் எட்டனுள் யாழினையுடைய பிரிவின்மையோரது தன்மையாம்.

என்னை?

"இன்பமும் பொருளு மறனு மென்றுங்
கன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கிற்
காமக் கூட்டங் காணுங் காலை

மறையோர் தேவத்து மன்ற லெட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோ ரியல்பே''
(தொல் - களவு - க)

என்சூராகலின்.

(வி - ரை.) யாணம் - அன்பு; கலி - பெருக்கம். தலைவன் தலைவி யரின் அன்பு பெருகுதற்குரிய விழாவினைக் கலியாணம் என்றனர். 'கலி மகிழ் சுற்றம்போற்றக் கலியாணம் செய்தார்கள்' என்ற சேக்கிழார் வாக்கும் நினைக.

பிரமமாவது : ஒத்த கோத்திரத்தானும் நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியங் காத்தவனுக்குப் பன்னீராட்டைப் பருவத்தாளாய்ப் பூப்பு எய்தியவளைப் பெயர்த்து இரண்டாம் பூப்பு எய்தாமை அணிகலன் அணிந்து தானமாகக் கொடுப்பது.

பிராசாபத்தியமாவது : மகட்கோடற்கு உரிய கோத்திரத்தார் கொடுத்த பரிசத்து இரட்டித் தம்மகட்கு ஈந்து கொடுப்பது.

ஆரிடமாவது : தக்கான் ஒருவற்கு ஆவும் ஆனேறும் பொற் கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து அவற்றிடை நிறீஇப் பொன் அணிந்து நீரும் இலைபோற் பொலிந்து வாழ்வீரென நீரிற் கொடுப்பது.

தெய்வமாவது : பெருவேள்வி வேட்பிக்கின்றூர் பலருள் ஒத்த ஒருவற்கு அவ்வேள்வித் தீ முன்னர்த் தக்கிணையாகக் கொடுப்பது.

ஆசுராவது : கொல்லேறு கோடல் திரிபன்றி யெய்தல் வில்லேந் துதல் முதலியன செய்துகொடல்.

இராக்கதமாவது : தலைமகள் தன்னினுந் தமரினும் பெறுது வலிதிற் கொள்வது.

பைசாசமாவது : மூத்தோர் களித்தோர் துயின்றூர் புணர்ச்சியும் இழிந்தோரை மணஞ்செய்தலும் ஆடைமாறுதலும் பிறவுமாம்.

இனிக் கந்தருவமாவது : கந்தருவ குமாரரும் கன்னியரும் தம்முள் எதிர்ப்பட்டுக் கண்டு இயைந்தது போலத் தலைவனுந் தலைவியும் எதிர்ப் பட்டுப் புணர்வது. (உ)

ஊ. தலைமகனுக்குரிய குணம்

உஙக. [1]பெருமையு முரனு மாடூஉ மேன.

என்பது, அறிவும் ஆற்றலும் புகழும் கொடையும் ஆராய் தலும் பண்பும் நண்பும் பழிபாவக் கஞ்சல் முதலியனவாய மொழி மேற்படும பெருமைப்பகுதியும் கடைப்பிடியும் நிறையும் கலங்காது துணிதலும் முதலிய வலியினது பகுதியுந் தலைவ னிடத்ததாம். (ஊ)

1. தொல் - பொருள் - களவி - எ.

ச. தலைமகளுக்குரிய குணம்

அகூ. [1]அச்சமு நாணு மடனுமுந் துறுத்த
நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப.

என்பது, அன்புகாரணத்திற் றோன்றிய அச்சமும், காமக் குறிப்பு நிகழ்ந்தவழிப் படுவதாருள்ள வொடுக்கமும், செவிலியர் கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமையும் இம்மூன்று முதலியன நிச்சமும் பெண்பாற் குரியன.

(வி - ரை.) நிச்சமும் - நாளும்: எஞ்ஞான்றும். (சு)

ரு. களவொழுக்கம் நிகழுமாறு

அகூக. [2]வேட்கை யொருதலை யுள்ளுதன் மெலிதல்
ஆக்கஞ் செப்ப லுணுவரை யிறத்தல்
நோக்குவ வெல்லா மவையே போறன்
மறத்தன் மயக்கஞ் சாக்கா டென்றச்
சிறப்புடை மரபினவை களவாமென மொழிப.

என்பது, புணராத முன்னும் புணர்ந்த பின்னும் இரு வருக்கும் நிகழ்ந்து ஒரு தன்மைத்தாகிய நிலைபெறும் வேட்கையும், ஒருவ ரொருவரை இடைவிடாது சிந்தியாநிற்றலும், அங்ஙனம் உள்ளுதல் காரணத்தான் உடம்புவாடுதலும், யாதானு மோரிடையீறு கேட்டவழி அதனை ஆக்கமாக நெஞ்சிற்கூறிக் கோடலும், ஆற்றுந்துணையு நாணி அல்லாத வழி அதன்வரை யிறத்தலும், பிறர்தம்மை நோக்கிய நோக்கெல்லாந் தம்மனத்துக் கரந்தொழுகுகின்றவற்றை யறிந்து நோக்குகின்றாரெனத் திரியக் கோடலும், விளையாட்டு முதலியவற்றான் மறத்தலும், செய் றினறியாது கையற்றுப் புள்ளும் மாவும் முதலியவற்றொடு கூறலும், மடலேறுதலும் வரைபாய்தலும் போல்வன கூறலும் என்று கூறப்பட்ட அந்தச் சிறப்புடைத்தான முறைமையினை யுடைய ஒன்பதும் களவொழுக்கமாம்.

என்னை ?

இயற்கைப் புணர்ச்சி யிடந்தலைப் பாடு
பாங்கற் கூட்டம் பாங்கியிற் கூட்டமென்
றுணர்த்திய களவிற் புணர்ச்சிநால் வகைத்தே. —நம்பி. 17.

எண்ணுராகலின்

---

1. தொல் - பொருள் - களவி - அ.
2. ,, ,, ,, கூ.

இயற்கைப் புணர்ச்சி தெய்வத்தி னெய்துழி
முயற்சி யின்றி முடிவ தாகும். நம்பி. 83

காட்சி யையந் துணிவுகுறிப் பறிவென
மாட்சி நான்கு வகைத்தே கைக்கிளை. நம்பி. 118

கலந்துழி மகிழ்தலு நலம்பா ராட்டலு
மேற்புற வணிதலு மென்னுமிம் மூன்றும்
போற்றிய தெய்வப் புணர்ச்சியின் விரியே. நம்பி. 125

நாட்ட மிரண்டு மறிவுடன் படுத்தற்குக்
கூட்டி யுரைக்குங் குறிப்புரை யாகும்.
(தொல் - களவி - இ)

என்னுராகலின்.

(வி - ரை.) அகத முதல் இந்நூற்பாவரையுள்ள உரைகள் நச்சினார்க்கினியர் உரையை முழுதும் தழுவியுள்ளன. (இ)

ஈ. அகத்திணை நிகழ்ச்சி

அஆச. [1]இயற்கை பாங்க னிடந்தலை மதியுடன்
இருவரு முள்வழி யவன்வர வுணர்தன்
முன்னுற வுணர்தல் குறையுற வுணர்தல்
நன்னிலை நாண நடுங்க நாடல்
மடல்குறை நயப்பு வழிச்சேட் படுத்தல்
இடம்கு பகற்குறி யிரவுக் குறியோ
டொருவழித் தணத்த லுடன்கொண் டேகல்
வரைவு முடுக்கம் வரைபொருட் பிரிதன்
மணஞ்சிறப் போதல் வார்புவி காவல்
இணங்கலர்ப் பொருத்தல் வேந்தற் குற்றுழிப்
பொருள்வயிற் பிரிதல் பரத்தையிற் பிரிதலென்
றருள்வயிற் சிறந்த வகத்திணை மருங்கின்
இருளறு நிகழ்ச்சி யிவையென மொழிப.

என்பது, இயற்கைப் புணர்ச்சி, பாங்கற்கூட்டம், இடந்தலைப்பாடு, மதியுடன்படுத்தல், இருவருமுள்வழி யவன்வர வுணர்தல், முன்னுறவுணர்தல் குறையுறவுணர்தல், நாண நாட்டம், நடுங்கநாட்டம், மடல், குறை நயப்பித்தல், சேட்படை, பகற்குறி, இரவுக்குறி, ஒருவழித்தணத்தல், உடன்போக்கு, வரைவுமுடுக்கம், வரைபொருட்பிரிதல், மணஞ் சிறப்புரைத்தல், ஓதற்பிரிதல், காவற்பிரிதல், பகைதணிவினைப்பிரிதல், வேந்தற்

1. திருக்கோவையார் -

குற்றுழிப் பிரிதல், பொருள்வயிற்பிரிதல், பரத்தையிற்பிரிதல் ஆகிய விருபத்தைந்தும் அகத்திணை ஒழுக்கியாம்.

மூற்கூறியவற்றுள் இயற்கைப் புணர்ச்சியென்பது, தலை மகனும் தலைமகளும் பொழிலிடத்து எதிர்ப்பட்டுத் தெய்வம் இடைஇற்பப் பான்மைவழியாடி ஓராவிற விருகொம்பு தோன் றினற்போலத் தம்முள் ஒத்த அன்பினராய் அவ்விருவரொத்தார் தம்முட்டாமே கூடுங்கூட்டம். (சு)

எ. கைக்கிளையின் வகை

அகூஞ. காட்சி யையங் தெளித னயப்பே
உட்கோ டெய்வந் துணிதல் கைக்கிளை.

என்பது, காட்சி ஐயம் தெளிதல் நயப்பு உட்கோள் தெய் வத்தை மகிழ்தல் புணர்ச்சி துணிதல் ஆகிய ஏழுங் கைக்கிளை.

காட்சி

என்பது, தலைமகளைத் தலைமகன் கண்ணுற்றது.

(வ - ரு.)

திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்நில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியி னெல்கி யனநடைவாய்ந்
துருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றெழிர்கின்றதே.
(திருக்கோவையார் க)

(சு - ரை.) திரு - கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம். வல்லியின் - ஒரு வல்லிக் கொடியைப் போல. உருவளர் காமன் - வடி வழகுமிக்க மன்மதன்.

ஐயம்

என்பது, கண்ணுற்றபின்றை இங்ஙனந்தோன்றிய இம்மாது யாரர் கொல்லென ஐயுற்றது.

(வ - ரு.)

போதோ விசும்போ புனலோ பணிக ளதுபதியோ
யாதோ அறிகுவ தேது மரிதி யமன்விடுத்த

தூதோ அனங்கன் றுணையோ விணையிலி தொல்கீர்த்தில்லை
மாதோ மடமயி லோவென நின்றவர் வாழ்பதியே.

(திருக். உ)

(சூ - ரை) பணிகளது பதி - நாகருலகம்.

தெளிதல்

என்பது, ஐயுற்றபின் அவயவமியங்க ணோக்கித் தெய்வ மல்லலெனத் தெளிதல்,

(வ - று.)

பாயும் விடையரன் தில்லையன் னுள்படைக் கண்ணிமைக்கும்
தோயும் நிலத்தடி தூமலர் வாடும் துயரமெய்தி
ஆயும் மனனே யணங்கல்லள் அம்மா முலைசுமந்து
தேயும் மருங்குற் பெரும்பணைத் தோளிச் சிறுநுதலே.

(திருக் கூ)

நயப்பு

என்பது, தெய்வ மல்லலெனத் தெளிந்தபின்றை மக்க ளுள்ளா லென்று நயந்துசென்று எய்த நினையாநிற்றல்.

(வ - று.)

அகல்கின்ற வல்குற் றடமது கொங்கை யவையவநீ
புகல்கின்ற தென்னைநெஞ் சுண்டே யிடையடை யார்புரங்கள்
இகல்குன்ற வில்லிற்செற் றேன்றில்லை யீசனெம் மானெதிர்ந்த
பகல்குன்றப் பல்லுகுத் தோன்பழ னம்மன்ன பல்வளைக்கே.

(திருக். ஈ)

(சூ - ரை.) எதிர்ந்த பகல்-மாறுபட்ட கதிரவன்.

உட்கோள்

என்பது, மக்களுள்ளா லென்று நயந்துசென்றெய்த நினையா நின்றவன், தன்னிடத்து அவளுக்குண்டாகிய காதல் அவள் கண்ணிற்கண்டு தன்னுட்கொள்ளாநிற்றல்.

(வ - று.)

அணியும் அமிழ்துமென் ஆவியும் ஆயவன் தில்லைச்சிந்தா
மணியும்ப ராரறி யாமறை யோனடி வாழ்த்தலரின்

பிணியும் அதற்கு மருந்தும் பிறழப் பிறழுமின்னும்
பணியும் புரைமருங் குற்பெருந் தோளி படைக்கண்களே.
(திருக். ஙி)

(கு - ரை.) கண்கள் பிறழப் பிறழப் பிணியும் மருந்தும் ஆயின என்பது கருத்து. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதலால் பிணியும், களவு கொள்ளும் சிறுநோக்கால் மருந்தும் ஆயின. 'பிணிக்கு மருந்து 'பிறமன், அணியிழை தன்னெய்க்குத் தானே மருந்து' என்னும் திருக்குறளை யுட்கொண்டது.

தெய்வத்தை மகிழ்தல்

என்பது, உட்கொண்டு நின்று, என்பால் விருப்பமுடைய இவளைத் தந்த தெய்வத்தையல்லது வேறொரு தெய்வத்தை விரும்பேனெனத் தெய்வத்தை மகிழ்ந்துகூறல்.

(வ - ரு.)

வகிளபயில் கீழ்கட னின்றிட மேல்கடல் வானுகத்தின்
துகிளவழி நேர்கழி கோத்தெனத் தில்லைத் தொல் லோன்கயிலைக்
கிகிளவயி னீக்கியிக் கெண்டையங் கண்ணியைக் கொண்டுதந்த
விகிளவையல் லால்விய வேனய வேன்றெய்வ மிக்கனவே.
(திருக். சு)

(கு - ரை.) 'வடகடலிட்ட ஒருநுகத்தொரு துளை தெண்கடலிட்ட ஒருகழிசென்று கோத்தாற் போலவும் வெங்கதிர்க்கனலியும் தண்கதிர் மதியமும் தம்கதி வழுவித் தலைப்பெய்தாற் போலவும் தலைவனும் தலைவியும் தலைப்பெய்தனர்' என்னும் இறையனார் களவியலுரை.

புணர்ச்சிதுணிதல்

என்பது, தெய்வத்தை மகிழாநின்றவன், இது நமக்குத் தெய்வப்புணர்ச்சியெனத் தன்னகக்கண்கூறி அவளொடு புணரத் துணியா நிற்றல்.

(வ - ரு.)

ஏழுடை யான்பொழில் எட்டுடை யான்புயம் என்னைமுன்னுள்
ஊழுடை யான்புவி யூரன்ன பொன்னிவ் வுயர்பொழில்வாய்ச்
சூழுடை யாயத்தை நீக்கும் விதிதுணை யாமனனே
யாழுடை யார்மணங் காணணங் காய்வந் தகப்பட்டதே.
(திருக். எ)

(கு - ரை.) ஏழுடையான் பொழில் - ஏழுலகங்களையும் தனக்கு உடைமையாகவும் அடிமையாகவும் உடையவன், புயம் எட்டுடையான் -

எட்டுத்திக்கையும் தன் திருக்கரங்களாக உடையவன். ஆள் ஊழுடையான் - ஆளும் முறைமையுடையவன். யாழுடையார் மணம் - கந்தருவ மணம். (எ)

ஆ. இயற்கைப்புணர்ச்சி

அகூசு. கலவி யுரைத்தலு மிருவயி னெைத்தலுங்
கிளவி வேட்டலு நலம்புனைந் துரைத்தலும்
பிரிவுணர்த் தல்லோடு பருவர லறிதலும்
அருட்குண முரைத்தலு மணிமை கூறலும்
ஆடிடத் துய்த்தலு மருமை யறிதலும்
பாங்கியை யறிதலும் பகருங் காலை
நீங்கா வியற்கை நெறியென மொழிப.

என்பது, கலவியுரைத்தல், இருவயினெைத்தல், கிளவி வேட்டல், நலம் புனைந்துரைத்தல், பிரிவுணர்த்தல், பருவரலறிதல், அருட்குணமுரைத்தல், இடமணித்தென்றல், ஆடிடத்துய்த்தல், அருமையறிதல், பாங்கியையறிதல், ஆகிய பதினொன்றும், இயற்கைப் புணர்ச்சியாம்.

கலவியுரைத்தல்

என்பது, தெய்வப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன், புணர்ச்சியின்பத்தினியல்பு கூறுகின்றல்.

(வ - று)

சொற்பா லமுதிவள் யான்சுவை யென்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வந் தந்தின்று நானிவ ளாம்பகுதிப்
பொற்பா றிவார் புலியூர்ப் புனிதன் பொதியில்வெற்பில்
கற்பா வியவரை வாய்க்கடி தோட்ட களவகத்தே.

(திருக். அ)

(சு - ரை.) கல்பாவியவரை - கற்கள் பரந்த மலை (பொதியமலை) கடிதோட்ட - காவலினின்றும் நீங்கிய.

இருவயினெைத்தல்

என்பது, புணராதமுன்னின்ற வேட்கையன்பு, புணர்ந்த பின்னும், அப்பெற்றியேகின்று, வளர்ந்துசேறலால், தலைமகனை மகிழ்ந்து கூறல்.

(வ - று.)

உணர்ந்தார்க் குணர்வரி யோன்றில்லைச் சிற்றம் பலத்தொருத்தன்
குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச்செவ் வாயிக் கொடியிடைதோள்
புணர்ந்தாற் புணருந் தொறும்பெரும் போகம்பின் னும்புதிதாய்
மணந்தாழ் புரிகுழ லாளல்குல் போல வளர்கின்றதே.

(திருக். க)

கிளவிவேட்டல்

என்பது, இருவயினெத்து இன்புற்ற தலைமகன் உறுதல் முதலிய நான்கு புணர்ச்சியும் பெற்றுச் செவிப்புணர்ச்சி பெருமையின் ஒருசொல் விரும்பிவருந்தல்.

(வ - று.)

அளவியை யார்க்கும் அறிவரி யோன்றில்லை யம்பலம்போல்
வளவிய வான்கொங்கை வாட்டடங் கண்ணுதல் மாமயிலின்
பிளவியன் மின்னிடை பேரமை தோளிது பெற்றியென்றும்
கிளவியை யென்னே இனிக்கிள்ளை யார்வாயிற் கேட்கின்றதே.

(திருக். கo)

(சு - ரை) அளவியை யார்க்கும் அறிவறியான் - இறைவனின் குணம் ஆறறல் முதலியவற்றை அளவிட்டு யாரும் அறியமுடியாதவனு யிருப்பவன், துறவி துறவு என்றுற்போல அளவு அளவி என்றுயிற்று, ஏனைய உறுப்புக்களின் நலம் இதுவானல் கிளவியும் அதற்கேற்பவே இருக்கும் என்றவாறு.

நலம்புனைந்துரைத்தல்

என்பது, கிளவி விரும்பி வருந்தக்கண்ட தலைமகள் முறுவல் செய்யத், தலைமகன் அது பெற்றுச், சொல்லாடாமையான் உண் டாகிய வருத்த நீங்கி, இவள்வாய்போல் நாறும் ஆம்பற்பூக்களும் உளவோவென வண்டொடு வினவல்.

(வ - று.)

கூம்பலங் கைத்தலத் தன்பரென் பூடுரு கக்குனிக்கும்
பாம்பலங் காரப் பரன்றில்லை யம்பலம் பாடலரின்
தேம்பலஞ் சிற்றிடை யீங்கிவள் தீங்கனி வாய்கமழும்
ஆம்பலம் போதுள வோவளி காணும் அகன்பணையே.

(திருக். கக)

பிரிவுணர்த்தல்

என்பது, ஐவகைப் புணர்ச்சியும் பெற்று ஒத்தவன்பினனாய் நின்ற தலைமகன், தனதாகரவினால் நலம்பாராட்டக் கேட்டுத், தலைமகள் நாணி வருந்தாநிற்பக் கண்டு, அவட்குப் பிரிவினமை கூறல்.

(வ - று.)

சிந்தா மணிதென் கடலமிர் தந்தில்லை யானருளால்
வந்தா விகழப் படுமே மடமான் விழிமயிலே
அந்தா மரையன்ன மேனிஞ்னை யானகன் ருற்றுவனே
சிந்தா குலமுற்றென் னேவென்னை வாட்டந் திருத்துவதே.

(திருக். கூ)

(சூ - ரை.) சிந்தாகுலம் - மனவருத்தம் வாட்டந் திருத்துவது - வாட்டுவது; ஒருசொன்னீர்மைத்து.

பருவரலறிதல்

என்பது, பிரிவின்மை கூறக்கேட்ட தலைமகள், பிரிவென்பதும் ஒன்றுண்டுபோலுமென வுட்கொண்டு, முன்னாணினுற் சென்றெய்திய வருத்தநீங்கிப் பெரியதோர் வருத்தமெய்த, அது கண்டிவள் மேலும்மேலும் வருந்துகின்றது பிரிந்தாற்கூடுதல் அரிதென்றே? அறிகிலேனென அவள் வருத்த மறியாநிற்றல்.

(வ - று.)

கோங்கிற் பொலியரும் பேய்கொங்கை பங்கன் குறுகலரூர்
தீங்கிற் புகச்செற்ற கொற்றவன் சிற்றம் பலமனையாள்
நீங்கிற் புனர்வரி தென்றே நெடிதிங்ங னேயிருந்தால்
ஆங்கிற் பழியா மெனவோ அறியேன் அயர்கின்றதே.

(திருக். கூ)

அருட்குணமுரைத்தல்

என்பது, இற்பழியாமென்று நினைந்தோ என்று கூறக் கேட்ட தலைமகள், இது நந்தோழியறியின் என்னுங்கொலெனப் பிரிவுட்கொண்டு பிரிவாற்றுதுவருந்த, அக்குறிப்பறிந்து, அவள் பிரிவுடம்படுவது காரணமாகத் தலைமகன் யாம பிரிந்தேமாயினும் பிரிவில்லையெனத் தெய்வவருள் கூறல்.

(வ - று.)

தேவரிற் பெற்றநம் செல்வக் கடிவடி வார்திருவே
யாவரிற் பெற்றினி யார்சிதைப் பாரிமை யாதமுக்கண்
மூவரிற் பெற்றவர் சிற்றம் பலமணி மொய்பொழில்வாய்ப்
பூவரிற் பெற்ற குழலியென் வாடிப் புலம்புவதே.

(திருக். கசு)

(சூ - ரை.) தேவரிற் பெற்றகடி - தெய்வத்தால் பெற்ற அழகிய மணம். முக்கண் மூவரிற் பெற்றவர் - கதிரவன், மதி, தீ ஆகிய மூன்றையும் மூன்று கண்களாகப் பெற்றவர். குழலி - விளிப் பொருட்டு.

இடமணித்தென்றல்

என்பது, அருட்குணங்கூறி வற்புறுத்தவும் ஆற்றுமை நீங்காத தலைமகட்கு நும்மூரிடத்திற் கெம்மூரிடமித் தன்மைத் தெனத் தன்னூரினணிமை கூறி வற்புறுத்தல்,

(வ - று.)

வருங்குன்ற மொன்றுரித் தோன்றில்லை யம்பல வன்மலயத்
திருங்குன்ற வாண ரிளங்கொடி யேயிட ரெய்தலெம்மூர்ப்
பருங்குன்ற மாளிகை நுண்கள பத்தொளி பாயநும்மூர்க்
கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுக மேய்க்குங் கனங்குழையே.

(திருக். கஅ)

(சூ - ரை) வரும் குன்றம் - யானை. வெண்ணிறக் கஞ்சுகம் - வெண்மை நிறமான சட்டை.

ஆடிடத்துய்த்தல்

என்பது, அணிமைகூறி நீங்கினேன், இனி நீ முற்பட்டு விளையாடு, யானிங்ஙனம்போய் அங்ஙனம் வருகிறேனென அவளை யாடிடத் துய்த்தல்.

(வ - று.)

தெளிவளர் வான்சிலை செங்கனி வெண்முத்தந் திங்களின்வாய்ந்
தளிவளர் வல்லியன் னுய்முன்னி யாடுபின் யானளவா
ஒளிவளர் தில்லை யொருவன் கயிலை யுகுபெருந்தேன்
துளிவளர் சாரற் கரந்துங்ங னேவந்து தோன்றுவனே.

(திருக். கசு)

அருமையறிதல்

என்பது, ஆடிடத்துய்த்து அகன்றவன், ஆயவெள்ளத்தையும் அவ்விடத்தையும் நோக்கி, இவளையா னெய்தினேன் என்பது இன்னதென்றறியேன், இனியிவள் நமக்கெய்தற் கரியவளென, அவளருமை யறிந்து வருந்தல்.

(வ - று.)

புணர்ப்போன் நிலனும் விசும்பும் பொருப்புந்தன் பூங்கழலின்
துணர்ப்போ தெனக்கணி யாக்குந்தொல் லோன்றில்லைச்
[சூழ்பொழில்வாய்
இணர்ப்போ தணிகுழ லேழைதன் நீர்மையிந் நீர்மையென்றுற்
புணர்ப்போ கனவோ பிறிதோ அறியேன் புகுந்ததுவே.

(திருக். கஎ)

பாங்கியையறிதல்

என்பது, அருமையறிந்து வருந்திய தலைமகன், ஆயத்தோடு செல்லும் தலைமகளைநோக்க, அங்கிலைமைக்கண் அவளுமிப் புணர்ச்சி இவளுக்கு வெளிப்படுமோவென வுட்கொண்டு, எல்லாரையும்போலன்றித் தன் காதற்றோழியைப் பலகாற் கடைக்கண்ணாலைக்க நோக்கி, இவள்போலும் இவட்குச் சிறந்தாள்; இதுவுமெனக்கோர் சார்பாமென வுட்கொண்டு, அவள் காதற் றோழியை யறியாகிற்றல்.

(வ - று.)

உயிரொன் றுளமுமொன் றென்றே சிறப்பிவட் கென்னைடென்னப்
பயில்கின்ற சென்று செவியுற நீள்படைக் கண்கள்விண்வாய்ச்
செயிரொன்று முப்புரஞ் செற்றவன் றில்லைச்சிற் றம்பலத்துப்
பயில்கின்ற கூத்த னருளென லாகும் பணீமொழிக்கே.

(திருக். கஅ)

(கு - ரை.) ஒன்றே சிறப்பு - தாய் தந்தையர்களால் செய்யப்படும் சிறப்புக்களும் இவட்கும் எனக்கும் ஒன்றுகும். (அ)

இயற்கைப்புணர்ச்சி முற்றும்

கூ. பாங்கற்கூட்டம்

புணர்ச்சி புணர்ந்த தலைமகன் தெருண்டு வரைதலைத் தெருளானாயின், தன் பாங்கனைதல், இடந்தலைப் பாட்டானைதல், இரண்டனுளொன்றுற் சென்றெய்தன் முறை.

பாங்கற் கூட்டத்தின்வகை

அஙசு. நினைதலும் வினுதலு முற்ற துரைத்தலும்
கழறன் மறுத்தலுங் கவன் றுரைத்தலும்
வலியழி வுரைத்தலும் விதியொடு வெறுத்தலும்
நொந்து கூறலு நோத னீங்கி
இயலிடங் கேட்டலு மியலிடங் கூறலும்
வற்புறுத் தலுங்குறி வழிச்சேறல் காண்டலும்
வியந்து ரைத்தலு மெல்லிய றன்னைக்
கண்டமை கூறலுங் கருத்துக் கேற்பச்
செவ்வி செப்பலு மவ்விடத் தேகலும்
ஈங்கிவை நிற்ப விடந்தலை தனக்கும்
ஆங்கவண் மெலிதலும் பொழில்கண்டு மகிழ்தலும்
நீங்கா மகிழ்வொடு நிலைகண்டு வியத்தலுந்
தளர்வகன் றுரைத்தலு மொழிபெற வருந்தலுங்
கண்புதைக்க வருந்தலு நாண்விட வருந்தலும்
நண்பொடு சென்றுபோய் நன்மருங் கணைதலும்
இன்றியமை யாமை யியம்பலு மாய்த்
துய்த்தலு நின்று வருந்தலும் பிறவுந்
துன்று பாங்கற் றுறையென மொழிப.

(திருக்கோவையார்·உரைச் சூத்திரம்)

என்பது, பாங்கனைநினைதல், பாங்கன்வினுதல், உற்ற துரைத்தல், கழறியுரைத்தல், கழற்றெதிர்மறுத்தல், கவன் றுரைத்தல், வலியழிவுரைத்தல், விதியொடு வெறுத்தல், பாங்க னொந்துரைத்தல், இயலிடங் கேட்டல், இயலிடங் கூறல், வற் புறுத்தல், குறிவழிச்சேறல், குறிவழிக்காண்டல், தலைவனை வியந் துரைத்தல், கண்டமைகூறல், செவ்விசெப்பல், அவ்விடத்தேகல் இப்பதினெட்டுக்கிளவியும் நிற்க, இடந்தலைதனக்கும், மின்னிடை மெலிதல் பொழில்கண்டுமகிழ்தல், உயிரெனவியத்தல், தளர் வகன் றுரைத்தல், மொழிபெறவருந்தல், நாணிக்கண் புதைத்தல், கண்புதைக்க வருந்தல், நாண்விடவருந்தல், மருங்கணைதல், இனறியமையாமை கூறல், ஆயத்துய்த்தல், நின்றுவருந்தல், ஆகிய முப்பதும் பாங்கற் கூட்டமாம்.

பாங்கனை நினைதல்

என்பது, தெய்வப்புணர்ச்சியி னிறுதிக்கட்சென்றெய்துதற் கருமைநினைந்து வருந்திய தலைமகன், அவள் கண்ணுலறியப்பட்ட

காதற்றோழியை நயந்து, இவளவட்குச் சிறந்த துணையன்றே, அத்துணை எனக்குச் சிறந்தாளல்லள், எனக்குச் சிறந்தானைக் கண்டு கூறின், பின்னிவளைச் சென்றெய்தக் குறையில்லையெனத் தன் காதற்பாங்கனை நினைதல்.

(வ - று.)

பூங்கனை யார்புனற் றென்புலி யூர்புரிந் தம்பலத்துள்
ஆங்கனை யாண்டுகொண் டாடும்பி ரானடித் தாமரைக்கே
பாங்கனை யானன்ன பண்பனைக் கண்டிப் பரிசுரைத்தால்
ஈங்கனை யார்தடுப் பார்மடப் பாவையை யெய்துதற்கே.

(திருக். கக)

(சு - ரை.) பூகனை ஆர் புனல் - பூக்களையுடைய ஒலிபொருந்திய நீர், புரிந்து - விரும்பி. யான் அன்ன பண்பு - என்னை ஒக்கும் பண்பு.

பாங்கன்வினுதல்

என்பது, தன்னை நினைந்து வாராநின்ற தலைமகனைத் தானெதிர்ப்பட்டு, அடிமுடிகாறுங்கோக்கி, நின்னுடைய தோள்கள் மெலிந்து நீ இவ்வாறுதற்குக் காரணமென்னெனவென்று பாங்கன் முற்பட்டு வினவல்.

(வ - று.)

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்ப லத்துமென் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலி னுய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்கொ லாம்புகுந் தெய்தியதே.

(திருக். உ0)

(சு - ரை.) தீந்தமிழின் துறை – அகப்புறத் துறைகள், ஏழிசை - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. சூழல்- அவற்றுள் இயன்ற பண்ணும் பாடலும் முதலாயின.

உற்றதுரைத்தல்

என்பது, எதிர்ப்பட்டு வினவிய பாங்கனுக்கு, நெருநல் கைலைப்பொழிற்கட் சென்றேன், அவ்விடத்தொரு சிற்றிடைச் சிறுமான் விழிக்குறத்தியால் இவ்வாறுயினேனெனத் தனக்குற்றது கூறல்.

(வ - று.)

கோம்பிக் கொதுங்கிமே யாமஞ்ஞை குஞ்சரங் கோளிழைக்கும்
பாம்பைப் பிடித்துப் படங்கிழித் தாங்கப் பணைமுலைக்கே

தேம்பற் றுடியிடை மான்மட நோக்கிதில் லீச்சிவன்ருள்
ஆம்பொற் றடமலர் சூடுமென் ஆற்றல் அகற்றியதே.

(திருக். உக)

(கு - ரை.) கோம்பி · ஒந்தி, மயில் இயல்பிலேயே மென்மை யானது. அதுவும் ஒந்திக்குப் பயந்து மேயாத மயில் எனவே இன்னும் அதனது மென்மை தெரியவந்தது. பாம்பு என்ருல் படையும் நடுங்கும் ஆதலின் பாம்பே வன்மையானது. அதுவும் யானையையும் ஊறு இழைத் தற்குரிய பாம்பு எனவே அதனது வன்மை தெரியவந்தது. எத்துணை மென்மையுடையது எத்துணை வன்மையுடையதை ஆற்றலற்றதாகி அழியச் செய்தது எனக் கூறிய முகத்தான் தலைவியது மென்மை யையும், தன்னுடைய வன்மையையும் குறித்துச் செல்லும் பாங்கு தெரியவருகிறது. 'ஒண்ணுதற்கு ஒஒ உடைந்ததே' (குறள் - கoஅஅ) என்பதும் இப்பொருட்டு.

கழறியுரைத்தல்

என்பது, உற்றதுரைப்பக் கேட்டபாங்கன், இவன் தலைமைப் பாட்டிற்குப் போதாதென வுட்கொண்டு, நீயொரு சிறுமான் விழிக்கு யானிவ்வாருயினேனென்றல் நின் கற்பனைக்குப் போதா தெனக் கழறியுரைத்தல்.

(வ ரு.)

உளமாம் வகைநம்மை யுய்யவந் தாண்டுசென் றும்பருய்யக்
களமாம் விடமமிர் தாக்கிய தில்லைத்தொல் லோன்கயிலை
வளமாம் பொதும்பரின் வஞ்சித்து நின்ருர்வஞ் சிம்மருங்குல்
இளமான் விழித்ததென் ருவின்றெம் மண்ணல் இரங்கியதே.

(திருக். உஉ)

கழற்றெதிர்மறுத்தல்

என்பது, காதற்பாங்கன் கழறவுங் கேளானுயிப் பின்னும் வேட்கைவயத்தனுய் நின்று, என்னுற், காணப்படாவடிவை நீ கண்டிலை கண்டனையாயிற் கழருயென்று, அவனுெடு மறுத் துரைத்து வருந்தல்.

(வ - ரு.)

சேணிற் பொலிசெம்பொன் மாளிகைத் தில்லைச்சிற் றம்பலத்து
மாணிக்கக் கூத்தன் வடவான் கயிலை மயிலைமன்னும்
பூணிற் பொலிகொங்கை ஆவியை ஓவியப் பொற்கொழுந்தைக்
காணிற் கழறலை கண்டிலை மென்ருேட் கரும்பினையே.

(திருக். உக)

கவன்றுரைத்தல்

என்பது, மறுத்துரைத்து வருந்தாநிற்பக் கண்ட பாங்கன், ஒருகாலத்துங் கலங்காத உள்ளமிவ்வாறு கலங்குதற்குக் காரண மென்னெனவெனத் தலைவனெடு கூறல்.

(வ - று.)

விலங்கலைக் கால்விண்டு மேன்மே லிடவிண்ணு மண்ணுமுந்நீர்க்
கலங்கலைச் சென்றவன் றுங்கலங் காய்கமழ் கொன்றைதுன்றும்
அலங்கலைச் சூழ்ந்தசிற் றம்பலத் தானரு ளில்லவர்போல்
துலங்கலைச் சென்றிதென் னெவள்ள வுள்ளந் துயர்கின்றதே.

(திருக். உச)

(கு - ரை.) விலங்கல் - மலை. கால்விண்டு - காற்றுப்பிரிந்து.

வலியழிவுரைத்தல்

என்பது, பாங்கன் கவன்றுரையாநிற்ப, முன்பு இத் தன்மையே னுகிய யானின்றெரு சிறுமான்விழிக்கு இவ்வாறு யினேனெனத், தலைமகன்றன் வலியழிந்தமை கூறிவருந்தல்.

(வ - று)

தலைப்படு சால்பினுக் குந்தள ரேன்சித்தம் பித்தனென்று
மலைத்தறி வாரில்லை யாரையுந் தேற்றுவன் எத்துணையும்
கலைச்சிறு நிங்கள் மிலைத்தசிற் றம்பல வன்கயிலை
மலைச்சிறு மான்விழி யாலழி வுற்று மயங்கினனே.

(திருக். உஇ)

(கு - ரை.) சித்தம் பித்தன் என்று மலைத்தறிவாரில்லை - பிறழ வுணர்ந்தாய் என்று மாறுபட்டு என்னைக் குறைகூறற்கும் இல்லை.

விதியொடுவெறுத்தல்

என்பது, வலியழிந்தமை கூறிவருந்திய தலைமகன், பாங்க னெடு புலந்துவெள்கி, யான்செய்த நல்வினையும் வந்து பயன்றந்த தில்லையென விதியொடு வெறுத்துக் கூறல்.

(வ - று.)

நல்வினை யுந்நயம் தந்தின்று வந்து நடுங்குமின்மேல்
கொல்வினை வல்லன கோங்கரும் பாமென்று பாங்கன்சொல்ல
வில்வினை மேருவில் வைத்தவன் தில்லை தொழாரின்வெள்கித்
தொல்வினை யாற்றிய தும்மென தாருயிர் துப்புறவே.

(திருக். உஈ)

(கு - ரை.) மின்மேல் - மின்னல்போன்ற இடைமேல். துப்பு - வலிமை. எனது ஆருயிர் வலிமைபெற நல்வினையும் பயன் தந்திலது என்றான்.

பாங்கனெந்துரைத்தல்

என்பது, விதியொடு வெறுத்து வருந்தி நிற்பக்கண்ட பாங்கன், அமுதமும் மழையும் தங்குணங்கெடினும் நின்குணங் கெடாதது, ஒருத்திகாரணமாக நின் சிலத்தை நினையாதவாறு இவ் வாறுகியது, எனது தீவினையின் பயனு மித்தனையன்றுவெனத், தானுமவனொடு கூடவருந்தா நிற்றல்.

(வ - று.)

ஆலத்தி னுலமீர் தாக்கிய கோன்றில்லை யம்பலம்போல்
கோலத்தி னுள்பொருட் டாக வமிர்தங் குணங்கெடினும்
காலத்தி னன்மழை மாறினும் மாறுக் கவிகைநின்பொற்
சிலத்தை நீயும் நினையா தொழிவதென் தீவினையே.

(திருக். உஎ)

(கு - ரை.) அமிர்தம் குணம் கெடினும், மழைகாலம் மாறினும் நின் கொடை தப்பாது எனப் பாங்கன் கூறுகின்றான். பொற்சிலம் - பொன் போன்ற மேம்பாடு.

இயலிடங்கேட்டல்

என்பது, தலைமகனொடு கூடவருந்தும் பாங்கன், நானும் இவனொடு வருந்தினலிவனை ஆற்றுவிப்பாரில்லையென, அது பற்றுக் கோடாகத்தானுற்றி நின்று, நின்னுற் காணப்பட்ட வடிவுக்கியல் யாது இடம்யாது, கூறுகவென, அவனுடைய இயலும் இடமும் கேளாநிற்றல்.

(வ - று.)

நின்னுடை நீர்மையும் நீயுமிவ் வாறு நினைத்தெருட்டும்
என்னுடை நீர்மையி தென்னென்ப தேதில்லை யேர்கொண்முக்கண்
மன்னுடை மால்வரை யோமல ரோவிசும் போசிலம்பா
என்னிடம் யாதியல் நின்னையின் னேசெய்த ஈர்ங்கொடிக்கே.

(திருக். உஅ)

இயலிடங்கூறல்

என்பது, இயலிடங் கேட்ட பாங்கனுக்குத், தானவனை யெய்தினுற்போலப் பெரியதோர் ஆற்றுதலை யுடையனுய், என்னுற்

காணப்பட்ட வடிவுக்கு இயலிவை, இடமிது என்று இயலும் இடமும் கூறல்.

(வ - று.)

விழியாற் பிணையாம் விளங்கிய லான்மயி லாமிழற்றும்
மொழியாற் கிளியாம் முதுவா னவர்தம் முடித்தொகைகள்
கழியாக் கழற்றில்லைக் கூத்தன் கயிலைமுத் தம்மலைத்தேன்
கொழியாத் திகழும் பொழிற்கெழி லாமெங் குலதெய்வமே.

(திருக். உக)

வற்புறுத்தல்

என்பது, இயலிடங்கூறக் கேட்டபாங்கன், நீ சொன்ன கைலையிற் சென்று இப்பெற்றியாளைக் கண்டு இப்பொழுதே வருவன், அவ்வளவும் நீ யாற்ற வேண்டுமெனத் தலைமகனை வற்புறுத்தல்.

(வ - று.)

குயிலைச் சிலம்படிக் கொம்பினைத் தில்லையெங் கூத்தப்பிரான்
கயிலைச் சிலம்பிற்பைம் பூம்புனங் காக்குங் கருங்கட்செவ்வாய்
மயிலைச் சிலம்பகண் டியான்போய் வருவன்வண் பூங்கொடிகள்
பயிலச் சிலம்பெதிர் கூய்ப்பண்ணை நண்ணும் பளிக்கறையே.

(திருக். கூ0)

குறிவழிச்சேறல்

என்பது, தலைமகனை வற்புறுத்தி, அவன் குறிவழிச் செல்லாநின்ற பாங்கன், இத்தன்மையாளை யான் அவ்விடத்துக் காணலாங்கொல் என, அங்ஙனமோடு செல்லாநிற்றல்.

(வ - று.)

கொடுங்கால் குலவரை யேழேழ் பொழிலெழில் குன்றுமன்றும்
நடுங்கா தவனை நடுங்க நுடங்கு நடுவுடைய
விடங்கா லயிற்கண்ணி மேவுங்கொ லாந்தில்லை யீசன்வெற்பில்
தடங்கார் தருபெரு வான்பொழி லீழலந் தண்புனத்தே.

(திருக். கூக)

குறிவழிக்காண்டல்

என்பது, குறிவழிச் சென்றபாங்கன், தன்னை யவள் காணுமல் தானவளைக் காண்பதோர் அணிமைக்கண் நின்று, அவன்

சொன்னவிடமும் இதுவே, இயலும் இவையே, இவளுமவளே என்று ஐயமறத் தெளியக் காணு நிற்றல்.

(வ - று.)

வடிக்கண் இவைவஞ்சி யஞ்சு மிடையிது வாய்பவளம்
துடிக்கின்ற வாவெற்பன் சொற்பரி சேயான் தொடர்ந்துவிடா
அடிச்சந்த மாமல ரண்ணல்விண் ணோர்வணங் கம்பலம்போல்
படிச்சந் தமுமிது வேயிவ ளேயப் பணிமொழியே.

(திருக். கூஉ)

(சு - ரை.) அம்பலம்போல் படிச் சந்தமும் இதுவே - (தில்லைப் பிரானின்) அம்பலம் போன்ற ஒப்புமையுடைய இடமும் இதுவே. வெற்பன் சொற் பரிசே - தலைவன் கூறிய வண்ணம் இருந்தது.

தலைவனை வியந்துரைத்தல்

என்பது, குறிவழிக்கண்ட பாங்கன், இவ்வுறுப்புகளையுடைய இவளைக் கண்டுபிரிந்து இங்குநின்று அங்குவந்து, யான்கழறவும் ஆற்றி, அத்தனையுந் தப்பாமல் சொன்ன அண்ணலே திண்ணி யான் எனத், தலைமகனை வியந்துகூறல்.

(வ - று.)

குவளைக் களத்தம் பலவன் குரைகழல் போற்கமலத்
தவளைப் பயங்கர மாகநின் ருண்ட அவயவத்தின்
இவளைக்கண் டிங்குநின் றங்குவந் தத்துணை யும்பகர்ந்த
கவளக் களிற்றண்ண லேதிண்ணி யானிக் கடலிடத்தே.

(திருக். கூகூ)

(சு - ரை.) குவளைக் களத்து அம்பலவன் - நீலமலர் போன்ற மிடற்றையுடைய அம்பலவன். குரைகழல் போல் கமலத் தவளை - ஒலிக்கும் கழலையுடைய திருவடிபோலும் தாமரைப் பூவில் வீற்றிருக்கும் திருமகளனைய தலைவியை.

கண்டமைகூறல்

என்பது, தலைமகனை வியந்துரைத்த பாங்கன், விரைந்து சென்று, தானவளைக் கண்டமை தலைமகனுக்குப் பிடிமிசை வைத்துக் கூறுநிற்றல்.

(வ - று.)

பணந்தா முரவரைச் சிற்றம் பலவர்பைம் பொற்கயிலைப்
புணர்ந்தாங் ககன்ற பொருகரி யுன்னிப் புனத்தயலே

மணத்தாழ் பொழிற்கண் வடிக்கண் பரப்பி மடப்பிடிவாய்
நிணத்தாழ் சுடரிலை வேலகண் டேனென்று நின்றதுவே.

(திருக். கூச)

(கு - ரை.) பணம் - படம். பிடிகரி உன்னிப் புனத்தயலே நின்றது கண்டேன் எனப் பிடிமேல் வைத்துத் தலைவியது நிலை கூறியவாறு.

செவ்விசெப்பல்

என்பது, பிடிமிசை வைத்துக் கூறக்கேட்ட தலைமகன், தனக்குச் செவ்வி போதாமையிற் பின்னும் ஆற்றுமை நீங்காது யினன், அது கண்டு அவனை யாற்றுவிப்பது காரணமாக அவனுக்கு அவயவம் கூறுநிற்றல்.

(வ - று.)

கயலுள வேகம லத்தலர் மீது கனிபவளத்
தயலுள வேமுத்த மொத்த நிரையர னம்பலத்தின்
இயலுள வேயிணைச் செப்புவெற் பாநின தீர்ங்கொடிமேற்
புயலுள வேமலர் சூழ்ந்திருள் தூங்கிப் புரள்வனவே.

(திருக். கூடு)

அவ்விடத்தேகல்

என்பது, செவ்வி செப்பக்கேட்ட தலைமகன், இவ்வாறு காணப்பட்டது உண்டாயின், அஃது என்னுயிரெனத் தான் அவ்விட நோக்கிப்போதல்.

(வ - று.)

எயிற்குல மூன்றிருந் தீயெய்த வெய்தவன் தில்லையொத்துக்
குயிற்குலங் கொண்டுதொண் டைக்கனி வாய்க்குளிர் முத்தநிரைத்
தயிற்குல வேல்கம லத்திற் கிடத்தி அனநடக்கும்
மயிற்குலங் கண்டதுண் டேலது வென்னுடை மன்னுயிரே.

(திருக். கூசு)

மின்னிடைமெலிதல்

என்பது, நெருநல் தலையளிசெய்து, நின்னிற்பிரியேன், பிரியினும் ஆற்றேன் என்று கூறிப் பிரிந்தவர், வேட்கை மிகுதியால் இடமறியாது ஆயத்திடை வருவார் கொல்லோ என்னும் பெருநாணினனும், ஆற்றுமையான் இறந்து பட்டார் கொல்லோ வென்னும் பேரச்சத்தினனும், யாருமில்லோரு

சிறைத்தனியே நின்று, தலைமகனை நினைந்து, தலைமகன் மெலியா நிற்றல்.

(வ - று.)

ஆவியன் னுய்கவ லேலக லேமென் றளித்தொளித்த
ஆவியன் னர்மிக்க வாவின ராய்க்கெழு மற்கழிவுற்
ருவியன் னர்மன்னி யாடிடஞ் சேர்வர்கொல் அம்பலத்தெம்
ஆவியன் னன்பயி ளுங்கயி லாயத் தருவரையே.

(திருக், கூஎ)

பொழில்கண்டுமகிழ்தல்

என்பது, தலைமகளை நோக்கிச் செல்லாநின்ற தலைமகன், முன்னைநா ளவளைக் கண்ணுற்ற பொழிலைச் சென்றணைந்து, பொழிலிடை யவளுறுப்புக்களைக் கண்டு, இப்பொழிலென் சிந்தனைக்கவள் தானே யெனத் தோன்றுநின்றதென்று, அள விலலாத இன்பமடைந்து நிற்றல்.

(வ - று)

காம்பினை யாற்களி மாமயி லாற்கதிர் மாமணியால்
வாம்பினை யால்வல்லி யொல்குத லான்மன்னு மம்பலவன்
பாம்பினை யாக்குழை கொண்டோன் கயிலைப் பயில்புனமும்
தேம்பினை வார்குழ லாளெனத் தோன்றுமென் சிந்தனைக்கே.

(திருக். கூஅ)

உயிரென வியத்தல்

என்பது, பொழில்கண்டு மகிழ்ந்து, அப்பொழிலிடைச் சென்று புக்கு, அவளைக்கண்ட துணையான், என்னுயி ரிவ்வா றுசெய்தோ நிற்பதென வியந்து கூறுநிற்றல்.

(வ - று.)

நேயத்த தாய்நென்ன லென்னைப் புணர்ந்துநெஞ் சந்நெகப்போய்
ஆயத்த தாயமிழ் தாயணங் காயரன் அம்பலம்போல்
தேயத்த தாயென்றன் சிந்தைய தாய்த்தெரி யிற்பெரிதும்
மாயத்த தாகி யிதோவந்து நின்றதென் மன்னுயிரே.

(திருக். கூசு)

தளர்வகன்றுரைத்தல்

என்பது, உயிரென வியந்து சென்று, பூக்கொய்தன் முதலிய விளையாட்டை யொழிந்து, யாருமில்லொரு சிறைத் தனியே

கின்று, இவர் செய்யாகின்ற பெரிய தவம் யாதோவென, அவளைப் பெரும்பான்மை கூறித் தளர்வு நீங்காகிற்றல்.

(வ - ம்.)

தாதிவர் போதுகொய் யார்தைய லாரங்கை கூப்பநின்று
சோதி வரிப்பந் தடியார் சுணைப்புன லாடல்செய்யார்
போதிவர் கற்பக நாடுபுல் லென்னத்தம் பொன்னடிப்பாய்
யாதிவர் மாதவம் அம்பலத் தான்மலை யெய்துதற்கே.

(திருக். ச0)

(கு - ரை.) தம் பொன்னடிப்பாய் அம்பலத்தான் மலை எய்துதற்கு யாது இவர் மாதவம் எனக் கூட்டுக.

மொழிபெற வருந்தல்

என்பது, தளர்வுநீங்கிய பின்னர்ச் சார்தலுருகின்றவனெடு, சொற்பெறும் முறையாற் சென்று சாரவேண்டிப், பின்னும் அவளைப் பெரும்பான்மை கூறி, ஒரு சொல் வேண்டி வருந்தாகிற்றல்.

(வ - ம்.)

காவிநின் றேர்தரு கண்டர்வண் டில்லைக்கண் ணுர்கமலத்
தேவியென் றேயையஞ் சென்றதன் றேயறி யச்சிறிது
மாவியன் றன்னமென் னெக்கிநின் வாய்ஙிற வாவிடினென்
ஆவியன் றேயமிழ் தேயணங் கேயின் றழிகின்றதே.

(திருக். சக)

(கு - ரை.) மா இயன்றன்ன - மான் நோக்கத்தால் இயன்றுற் போன்ற.

நாணிக்கண்புதைத்தல்

என்பது, தலைமகன் தன்முன்னின்று பெரும்பான்மை கூறக் கேட்ட தலைமகள் பெருநாணின ளாதலின், அவன் முன்னிற்க லாகாது நாணி, ஒரு கொடியினெதுங்கித், தன்கண் புதைத்து வருந்தாகிற்றல்.

(வ - ம்.)

அகலிடந் தாவிய வானென் அறிந்திறைஞ் சம்பலத்தின்
இகலிடந் தாவிடை யீசற் றெழாரினின் னற்கிடமாய்
உகலிடந் தான்சென் றெனதுயிர் நையா வகையொதுங்கப்
புகலிடந் தாபொழில் வாயெழில் வாய்தரு பூங்கொடியே.

(திருக். சஉ)

(கு - ரை.) உகல் இடம் - அழிதற்குரிய இடம்.

கண்புதைக்க வருந்தல்

என்பது, தலைமகள் நாணிக் கண்புதைக்க, இவள் கண் புதைக்கின்றது தன்னுடைய கண்க ளென்னை வருத்தத்தைச் செய்யுமென்றுகாதே என வுட்கொண்டு, யான் வருந்தாதொழிய வேண்டுவையாயின், நின் மேனி முழுதும் புதைப்பாயெனத் தலைமகன் வருத்தமிகுதி கூறல்.

(வ - று.)

தாழச்செய் தார்முடி தன்னடிக் கீழ்வைத் தவரைவிண்ணோர்
சூழச்செய் தானம் பலங்கை தொழாரினுள் ளந்துளங்கப் [னேநீ
போழச்செய் யாமல்வை வேற்கண் புதைத்துப்பொன் னேயென்
வாழச்செய் தாய்சுற்று முற்றும் புதைநின்னை வாணுதலே.

(திருக். சஉ)

(கு - ரை.) கண் புதைத்து என்னை வாழச் செய்தாய்; அது போதுவ தன்று. நின் உடல் முழுதும் மறைத்து என் துயரகற்றுவாயாக எனத் தலைவன் கூறினன்.

நாண்விட வருந்தல்

என்பது, தலைமகன் தனதாற்றுமை மிகுதிகூறக் கேட்டு, ஒருநாளுந் தன்னைவிட்டு நீங்காத நாண் அழலைச்சேர்ந்த மெழுகு போலத் தன்னை விட்டு நீங்கா நிற்பத், தலைமகளதற்குப் பிரிவாற்றாது வருந்தல்.

(வ - று.)

குருநாண் மலர்ப்பொழில் சூழ்நில்லைக் கூத்தனை யேத்தலர்போல்
வருநாள் பிறவற்க வாழிய ரோமற்றென் கண்மணிபோன்
றொருநாள் பிரியா துயிரிற் பழகி யுடன்வளர்ந்த
அருநா ணளிய அழல்சேர் மெழுகொத் தழிகின்றதே.

(திருக். சச)

மருங்கணைதல்

என்பது, தலைமகள் நாணிழந்து வருந்தச் சென்று கூட லாகாமையின், தலைமகன் தன் ஆதரவினால் வருத்தந் தணிப்பான் போன்று, முலையொடு முனிந்து, ஒரு கையால் இறுமருங்குல் தாங்கியும், ஒருகையால் அளிக்குலம் விலக்கி அளகந் தொட்டும் சென்றணையா நிற்றல்.

(வ - று.)

கோலத் தனிக்கொம்ப ரும்பர்புக் கஃதே குறைப்பவர்தம்
சீலத் தனகொங்கை தேற்றகி லேஞ்சிவன் தில்லியன்னுள்
நூலொத்த நேரிடை நொய்ம்மையெண் ணுதுநுண் டேனசையால்
சாலத் தகாதுகண் டீர்வண்டு காள்கொண்டை சார்வதுவே.

(திருக். சஙி)

(கு - ரை.) நுனிக் கொம்பிலிருந்து அடிக் கொம்பை வெட்டுவார் செயல் போலக் கொங்கைகளின் நிலையுள்ளன. ஆதலின் அவற்றிற்கு இடையின் நுண்மை தெரிவித்தல் பயனில்லை. அங்ஙனமிருக்க வண்டுகளே, நீரும் தேன் நசையால் கொண்டை சாருவது தக்கதன்று என்று கூறித் தலைவியின் இடையின் நுண்மை விளக்கினன் தலைவன்.

இன்றியமையாமைகூறல்

என்பது, புணர்ச்சி யிறுதிக்கண், விசும்பும் நிலனும் ஒருங்கு பெறவரினும், இம் முலைகளை மறந்து அதன்கண் முயலேனெனப், பிரிவுதோன்றத் தலைமகன் இன்றியமையாமை கூறல்.

(வ - று.)

நீங்கரும் பொற்கழற் சிற்றம் பலவர் நெடுவிசும்பும்
வாங்கிருந் தெண்கடல் வையமும் எய்தினும் யான்மறவேன்
தீங்கரும் பும்மமிழ் துஞ்செழுந் தேனும் பொதிந்துசெப்பும்
கோங்கரும் புந்தொலைத் தென்னையும் ஆட்கொண்ட கொங்கைகளே.

(திருக். சசு)

ஆயத்துய்த்தல்

என்பது, இன்றியமையாமை கூறிப் பிரியலுற்றுன், இனிப் பல சொல்லி யென்னை, என்னுயிர் நினக்கடிமையாயிற்று, இனிச் சென்று நின் னயத்திடைச் சேர்வாயாக வெனத், தன் பிரிவின்மை கூறித் தலைமகளை ஆயத் துய்த்தல்.

(வ - று.)

சூளா மணியும்பர்க் காயவன் சூழ்பொழிற் றில்லையன்னுய்க்
காளா யொழிந்தநென் னருயி ராரமிழ் தேயணங்கே
தோளா மணியே பிணையே பலசொல்லி யென்னைதுன் னும்
நாளார் மலர்ப்பொழில் வாயெழி லாயம் நணுகுகவே.

(திருக். சஎ)

நின்று வருந்தல்

என்பது, தலைமகனை ஆயத் துய்த்துத், தான் அவ்விடத்தி னின்று, அப்புனத்தியல்பு கூறித் தலைமகன் பிரிவாற்றாது வருந்தா நிற்றல்.

(வ - று)

பொய்யுடை யார்க்கரன் போலக லும்மகன் ருற்புணரின்
மெய்யுடை யார்க்கவன் அம்பலம் போல மிகநணுகும்
மையுடை வாட்கண் மணியுடைப் பூண்முலை வாணுதல்வான்
பையுடை வாளர வத்தல்குல் காக்கும்பைம் பூம்புனமே.

(திருக். சஅ) (கூ)

பாங்கற்கூட்ட முற்றும்.

கo. இடந்தலைப்பாடு

யாகூஎ. பொழிலிடைச் சேற லிடந்தலை சொன்ன
வழியோடு கூட்டி வகுத்திசி னோரே.

(திருக்கோவையார் உரை.)

என்பது, பொழிலிடைச் சேறலொன்றும் இடந் தலைப் பாட்டிற்கே யுரியது. இதனையுமேலைப் பாங்கற் கூட்ட முணர்த்திய சூத்திரத்தில், ஈங்கிவை நிற்ப இடந்தலை தனக்கு மெனக் கூறிய வாறே, மின்னிடை மெலிதன் முதல் நின்று வருந்தல் ஈருகக் கூறிய கிளவிகளோடு கூட்டி, இடந்தலைப்பாடா மென்றியம்புக.

அவை பாங்கற் கூட்டத்திற்கும் இடந்தலைப்பாட்டிற்கும் உரியவாமா றென்னை யெனின்; பாங்கற் கூட்ட நிகழாதாயின் இடந்தலைப்பாடு நிகழும், இடந்தலைப்பாடு நிகழாதாயின் பாங்கற் கூட்ட நிகழுமென்றுணர்க.

பொழிலிடைச்சேறல்

என்பது, இயற்கைப் புணர்ச்சி யிறுதிக்கட்சென்று ஏய்துதற்கருமை நினைந்து வருந்தாநின்ற தலைமகன், இப் புணர்ச்சி நெருநலும் என்னறிவோடுகூடிய முயற்சியான் வந்த தன்று, தெய்வந்தர வந்தது, இன்னும் அத்தெய்வந்தானே தரும், யாம் பொழிலிடைச் செல்வேமெனத், தன்னெஞ்சொடு கூறுநிற்றல்.

(வ - று.)

என்னறி வால்வந்த தன்றிது முன்னுமின் னும்முயன்ருன்
மன்னெறி தந்த திருந்தன்று தெய்வம் வருந்தல்நெஞ்சே
மின்னெறி செஞ்சடைக் கூத்தப் பிரான்வியன் தில்லைமுந்நீர்
பொன்னெறி வார்துறை வாய்ச்சென்று மின்ருேய் பொழிலிடத்தே.
(திருக். சக) (கo)

இடந்தலைப்பாடு முற்றும்.

கக. மதியுடம்படுத்தல்

இரண்டனுள் ஒன்ருற் சென்றெய்திய பின்னர்த் தெருண்டு வரை தலை, தெருளாமையின், அவள் கண்ணுற் காட்டப்பட்ட காதற்ருேழியை வழிபட்டுச் சென்றெய்துதன் முறைமையென்ப. வழிபடுமாறு - தெறறெனத் தன்குறை கூருதிரந்து வைத்துக், கரந்த மொழியாற் றன் கருத்தறிவித்து, அவளை ஐயவுணர்வினளாக்கி, அதுவழியாக நின்று தன் குறைகூறல்.

அதன் வகை

அஉக. சேறல் துணிதலுஞ் சிந்துரம் வினுதலும்
பெருமான் வழிபதி பெயர்பிற வினுதலும்
மொழிபெரு தியம்பலுங் கருத்தறி வித்தலும்
இடைவி னுதலு மிவையிரு நான்கிரண்டு
மடவரல் தோழிக்கு மதியுடம் படுத்தல்
(திருக்கோவையார் உரை)

என்பது, பாங்கியிடைச்சேறல், குறையுறத் துணிதல், வேழம் வினுதல், கலைமான் வினுதல், வழிவினுதல், பதிவினுதல், பெயர் வினுதல், மொழி பெருதியம்பல், கருத்தறிவித்தல், இடை வினுதல் ஆகிய பத்தும் மதியுடம்படுத்தல்.

பாங்கியிடைச் சேறல்

என்பது, இரண்டனுள் ஒன்ருற் சென்றெய்திப் புணர்ந்து நீங்கிய தலைமகன், இனியிவளைச் சென்றெய்துதலன்றி, யாமவள் கண்ணுற் காட்டபபட்ட காதற்ருேழிக்கு நங்குறையுள்ளது சொல்வேமென்று அவளை நோக்கிச் செல்லல்.

(வ - று.)

எளிதன் றினிக்கணி வாய்வல்லி புல்லல் எழின்மதிக்கீற்
றெளிசென்ற செஞ்சடைக் கூத்தப்பி ராணையுன் ஞரினென்கண்
தெளிசென்ற வேற்கண் வருவித்த செல்லலெல் லாந்தெளிவித்
தளிசென்ற பூங்குழற் றேழிக்கு வாழி யறிவிப்பனே.

(திருக். ஐ0)

(கு - ரை.) செல்லல் வருத்தம்: 'செல்லல் இன்னல் இன்னாமையே' என்பது தொல்காப்பியம்.

குறையுறத்துணிதல்

என்பது, பாங்கியை நீங்கி செல்பவன் தெய்வத்தினருளால் அவ்விருவரும் ஓரிடத்து எதிர்நிற்பக் கண்டு, இவள் இவட்குச் சிறந்தாள், இனியென் குறையுள்ளது சொல்லே னெனத் தன்குறை கூறத்துணியா நிற்றல்.

(வ - று.)

குவளைக் கருங்கட் கொடியே ரிடையிக் கொடிகடைக்கண்
உவளைத் தனதுயி ரென்றது தன்னே டுவமையில்லா
துவளைத்தன் பால்வைத்த சிற்றம் பலத்தான் அருளிலர்போல்
துவளத் தலைவந்த இன்னலின் னேயினிச் சொல்லுவனே.

(திருக். ஙக)

(கு-ரை.) உவளை - அருகிலிருப்பவளை. துவளத் தலைவந்த இன்னல் - யான் வருந்துமாறு வந்த துன்பம்.

வேழம் வினுதல்

என்பது, குறையுறத் துணியா நின்றவன் என்குறை இன்ன தென்று இவளுக்கு வெளிப்படக் கூறுவேனையின், இவள் மறுக்கவும் கூடுமென வுட்கொண்டு, என்குறை யின்னதென்று இவள் தானே யறியுமளவும் கரந்தமொழியாற் சில சொல்லிப் பின் குறையுறுவதே காரியமென, வேட்டை கருதிச் சென்றதைக, அவ்விருவ ருழைச்சென்று தன் காதல் தோன்ற, இவ்விடத்து ஒரு யானை வரக் கண்டீரோவென வினவல்.

(வ - று)

இருங்களி யாயின் றியானிறு மாப்பவின் பம்பணிவோர்
மருங்களி யாவன லாடவல் லோன்றில்லை யான்மலையீங்
கொருங்களி யார்ப்ப வுமிழ்மும் மதத்திரு கோட்டொருநீள்
கருங்களி யார்மத யானையுண் டோவரக் கண்டதுவே.

(திருக். ஙஉ)

(கு - ரை.) பணிவோர் மருங்கு இருங்களியாய் யான் இன்று இறுமாப்ப இன்பம் அளியா அனல் ஆடவல்லோன் எனக் கூட்டுக. பணியும் அடியவர்களுக்குப் பெருங் களிப்பையும் இன்பத்தையும் அளிக்க வல்லவன் இறைவன்; அதனால் அவ்வடியவர்கள் இறுமாந்திருப்பர் என்பது கருத்து. 'இறுமாந்திருப்பன் கொலோ' என்ற அருள் வாக்கும் உன்னுக.

கலிமான் விழுதல்

என்பது, வேழம் விழுவி உள்புகுந்த பின்னர், தான் கண்ணால் இடர்ப்பட்டமை தோன்ற, நும்முடைய கண்கள் போலும் கணிபொருதலான் உண்டாகிய புண்ணெடு, இப்புனத்தின்கண் ஒரு கலிமான் வரக்கண்டீரோவெனக் கலிமான் விழுவாகிற்றல்.

(வ - று.)

கருங்கண் ணனையறி யாமைநின் றேன்றில்லைக் கார்ப்பொழில்வாய்
வருங்கண் ணனையவண் டாடும் வளாிள வல்லியன்னீர்
இருங்கண் ணனைய கணிபொரு புண்புண ரிப்புனத்தின்
மருங்கண் ணனையதுண் டோவந்த தீங்கொரு வான்கலையே.

(திருக். கெ)

வழி விழுதல்

என்பது, கலிமான் விழுவியவன் கருத்து வேறெனத் தோழியறிய, அதனெடு மாறுபடநின்று அதுகூறீராயின், நும்மூர்க்குப் போகும் நெறி கூறுமினென்று வழிவிழுவாகிற்றல்.

(வ - று.)

சிலம்பணி கொண்டசெஞ் சீறடி பங்கன்றன் சீரடியார்
குலம்பணி கொள்ள எணிக்கொடுத் தோள்கொண்டு தானணியும்
கலம்பணி கொண்டிடம் அம்பலங் கொண்டவன் கார்க்கயிலைச்
சிலம்பணி கொண்டநுஞ் சீறூர்க் குரைமின்கள் சென்னெறியே.

(திருக். கெ)

பதி விழுதல்

என்பது, மாறுபட நின்று வழி விழுவவும் அதற்கு மறுமொழி கொடாதாரை எதிர்முகமாக நின்று, வழிகூறீராயின், நும் பதிகூறல் பழியன்றே அது கூறுவீராமினென்று அவர்பதி விழுவல்.

(வ - று)

ஒருங்கட மூவெயி லொற்றைக் கணைகொள்சிற் றம்பலவன்
கருங்கட மூன்றுகு நால்வாய்க் கரியுரித் தோன்கயிலை
இருங்கட மூடும் பொழிலெழிற் கொம்பரன் னீர்களின்னே
வருங்கடம் மூர்பகர்ந் தாற்பழி யோவிங்கு வாழ்பவர்க்கே.

(திருக். ருருு)

(கு - ரை.) இரும் கடம் மூடும் - பெரிய காட்டினுல் சூழப்பட்ட.

பெயர் வினுதல்

என்பது, பதிவினுவவும் அதற்கொன்றுங் கூருதாரை, நும் பதிகூறுதல் பழியாயின், அதனை யொழிமின், நும் பெயர் கூறுதல் பழியன்ரற அது கூறுவீராமினென்று அவர் பெயர் வினுவல்.

(வ - று.)

தாரென்ன வோங்குஞ் சடைமுடி மேற்றனித் திங்கள்வைத்த
காரென்ன ஆருங் கறைமிடற் றம்பல வன்கயிலை
ஊரென்ன் என்னவும் வாய்திற வீரொழி வீர்பழியேல்
பேரென்ன வோவுரை யிர்விரை யிர்ங்குழற் பேதையரே.

(திருக். ருசு)

மொழிபெருது கூறல்

என்பது, பெயர் வினுவவும் வாய்திறவாமையின், இப்புனத் தார் எதிர் கொள்ளத்தக்க விருந்தினரோடு வாய்திறவாமை விரதமாக வுடையார், அதுவன்றி வாய்திறக்கின் மணிசிந்து மென்பதனைச் சரதமாக வுடையார், ஆதலின் இவ்விரண்டனு ளொன்று தப்பாதெனக் கூறி மொழிபெருது கூறல்.

(வ - று.)

இரத முடைய நடமாட் டுடையவர் எம்முடையர்
வரத முடைய அணிதில்லை யன்னவர் இப்புனத்தார்
விரத முடையர் விருந்தொடு பேச்சின்மை மீட்டதன்றேல்
சரத முடையர் மணிவாய் திறக்கிற் சலக்கென்பவே.

(திருக். ருஎ)

(கு - ரை.) இரத முடைய நடம் - கட்கு இனிமையான நடனம். சரதம் உடையர் - (வாய் திறப்பின் சலக்கென மணி விழும்) மெய்மை யுடையவர்.

கருத்தறிவித்தல்

என்பது, கீயிர் வாய் திறவாமைக்குக் காரணமுடையீர், அது கிடக்க, இத்தழை நும் அல்குற்குத் தகுமாயின் அணிவீரெனத் தழைகாட்டி நின்று தன் கருத்தை யறிவியாநிற்றல்.

(வ - று.)

வின்னிற வாணுதல் வேனிறக் கண்மெல் லியலேமல்லல்
தன்னிற மொன்றி லிருத்திநின் ரேன்றன தம்பலம்போல்
மின்னிற நுண்ணிடைப் பேரெழில் வெண்ணகைப் பைந்தொடியீர்
பொன்னிற அல்குலுக் காமோ மணிநிறப் பூந்தழையே.

(திருக். இஅ)

(சு - ரை.) மல்லல் - வளமை. தன்நிறம் - தன்னுடைய திருமேனியில்.

இடைவிறுதல்

என்பது, தழைகாட்டித் தன்கருத்து அறிவித்து, அது வழியாக நின்று, நும்மல்குலும் முலையும் அதிபாரமா யிரா நின்றன, இவையிவ்வாறு நிற்றற்குக் காரணம் யாதோவென்று அவரிடை வினவா நிற்றல்.

(வ - று.)

கலிக்கீ முகலல்குற் பாரம தாரங்கண் ணுர்ந்நிலங்கு
முலைக்கிழ்ச் சிறிநின்றி நிற்றன்முற் ருதன் றிலங்கையர்கோன்
மலைக்கீழ் விழச்செற்ற சிற்றம் பலவர்வண் பூங்கயிலைச்
சிலைக்கீழ்க் கணையன்ன கண்ணீர் எதுநுங்கள் சிற்றிடையே.

(திருக். இகூ) (கக)

மதியுடம்படுத்தன் முற்றிற்று.

கஉ. இருவருமுள்வழி யவன்வரவுணர்தல்

என்பது, தலைமகளும் தோழியுமுள்வழிச் சென்று, தலைமகன் கரந்த மொழியால் தன் கருத்தறிவிக்கத், தோழி யவனிணை வறியா நிற்றல்.

அதன் வகை

அசக. ஐய மழிதலு மறிவு நாடலு
மையறு தோழி யவன்வர வுணர்தல்.

(திருக்கோவையார் உரை

என்பது, ஐயுறுதல் அறிவுநாடல் இரண்டும் இருவருமுள்வழி யவன்வர வுணர்தலாம்.

ஐயுறுதல்

என்பது, தலைமகன் தழைகொண்டு நின்று, கரந்தமொழியால் தன் கருத்தறிவிக்க, மேனியொளியிலனுய், இப்புனத்தினின்றும் போகாது, யானையோடு ஏனம் வினவி, இவ்வாறு பொய் கூறிய இவன் யாவனே வெனத், தோழி அவனை ஐயுற்றுக் கூறல்.

(வ - று)

பல்லிலன் ஆகப் பகலிவென் ரேன்றில்லை பாடலர்போல்
எல்லிலன் நாகத்தொ டேனம் வினவிவன் யாவன்கொலாம்
வில்லிலன் நாகத் தழைகையில் வேட்டைகொண் டாட்டமெய்யோர்
சொல்லிலன் ஆகற்ற வாகட வானிச் சுனைப்புனமே.

(திருக். சு0)

(சு - ரை) பல் இலனுகப் பகலி வென்ரேன் - பற்கள் இல்லையாம்படி கதிரவனை வென்ரேன்.

அறிவுநாடல்

என்பது, இவன் யாவனேவென்று ஐயப்படுகின்ற தோழி, பேரராய்ச்சியளாதலின், அவள் கூறிய வழியே நாடாது வந்து தங்களிடைக்கே முடிதலின் இவர் சொல்லிருந்த வாற்ருன் ஆழமுடைத்தாய் இருந்ததென்று அவன் நினைவறிதல்.

(வ - று)

ஆழமன் னேவுடைத் திவ்வையர் வார்த்தை அலங்கனைந்து
வீழமுன் னேக்கிய அம்பலத் தான்வெற்பி னிப்புனத்தே
வேழமுன் னுய்க்கலை யாய்ப்பிற வாய்ப்பின்னு மென்றழையாய்
மாழைமென் னேக்கி யிடையாய்க் கழிந்தது வந்துவந்தே.

(திருக். சுக) (கூ)

இருவருமுள்வழி யவன்வரவுணர்தல் முற்றும்.

கஉ. முன்னுறவுணர்தல்

அசக. வாட்டம் வினுதல் முன்னுற வுணர்தல்
கூட்டி யுரைக்குங் குறிப்புரை யாகும்.

(திருக்கோவையார் உரை)

என்பது, வாட்டம் விளைதலொன்றும் முன்னுறவுணர்தல். அஃது தலைமகன் இங்ஙனம் விளையுதற் கெல்லாந் தோழி மறுமொழி கொடாளாகத் தலைமகன் வாடினான், வாடவே தலைமகளும் அதுகண்டு வாடினளாதலால், இருவர் வாட்டமும் விளைவப்படுதல். அன்றியும், முன்னர்த் தலைமகன் வாட்டத்தைப் பாங்கன் விளையுழிபோலத் தலைவி வாட்டத்தையும் பாங்கிவிளைதல், முன்னுற்றதனை யுணர்தலானே இதற்கு முன்னுற வுணர்தலெனப் பெயராயிற்று.

வாட்டம் விளைதல்

என்பது, தலைமகன் மதியுடம்படுத்து வருந்தா நிற்பக்கண்டு எம்பெருமான் என் பொருட்டால் இவ்வாறு இடர்ப்படுகிறானெனத், தலைமகள் தன்னுள்ளே கவன்று வருந்த, அதுகண்டு, சுனையாடிச் சிலம்பெதிர் அழைத்தோ; பிறிதொன்றினளே; நீவாடியதென்னெனத், தோழி தலைமகள் வாட்டம் விளைவல்.

(வ - ரை.)

நிருத்தம் பயின்றவன் சிற்றம் பலத்துநெற் றித்தனிக்கண்
ஒருத்தன் பயிலுங் கயிலை மலையின் உயர்குடுமித்
திருத்தம் பயிலுஞ் சுனைகுடைந் தாடிச் சிலம்பெதிர்கூய்
வருத்தம் பயின்றுகொல் லோவல்லி மெல்லியல் வாடியதே.
(திருக். சுஉ) (கூ)

முன்னுறவுணர்தல் முற்றும்.

கச. குறையுறவுணர்தல்

என்பது, தலைமகன் குறையுறத், தோழி அதனைத் துணிந்துணராநிற்றல்.

அதன் வகை

அசஉ. குறையுற்று நிற்றலும் அவன்குறிப் பறிதலும்
அவள்குறிப் பறிதலு மவர்நினை வேண்ணலுங்
கூறிய நான்குங் குறையுற வுணர்வே.

என்பது, குறையுற்று நிற்றல், அவன் குறிப்பறிதல், அவன் குறிப்பறிதல், இருவர்நினைவு மொருவழியுணர்தல் ஆகிய நான்குங் குறையுறவுணர்தலாம்.

குறையுற்று நிற்றல்

என்பது, தலைமகள் வாட்டங்கண்டு ஐயுருநின்ற தோழி யிடைச் சென்று, யான் உங்களுக்கெல்லாத் தொழிலுக்கும் வல்லேன், நீயிர் வேண்டுவ தொன்று கூறுமின், அது செய்யக் குறையில்லையெனத், தாழ்ந்த சொல்லால் தலைமகன் தன்னினைவு தோன்ற ஐயுறக்கூறல்.

(வ - று)

மடுக்கோ கடலின் விடுதிமில் அன்றி மறிதிரைமீன்
படுக்கோ பணிலம் பலகுளிக் கோபரன் தில்லைமுன்றில்
கொடுக்கோ வளைமற்று நும்மையர்க் காயகுற் றேவல்செய்கோ
தொடுக்கோ பணியிர் அணியிர் மலர்நுஞ் சுரிகுழற்கே.

(திருக். கூக)

அவன் குறிப்பறிதல்

என்பது, குறையுரு நின்றவன் முகத்தேத தலைமகளது செயல் புலப்படக் கண்டு, இவ்வண்ணல் குறிப்பு இவளிடத்த தெனத், தோழி தலைமகன் நினைவு துணிந்துணரா நிற்றல்.

(வ - று.)

அளியமன் னும்மொன் றுடைத்தண் ணலெண்ணரன் தில்லையன் [ளுள்
ளியையமன் னுங்கடி யச்செல்ல நிற்பிற் பிளரளகத்
தளியமர்ந் நேறின் வறிதே யிருப்பிற் பளிங்கடுத்த
ஒளியமர்ந் தாங்கொன்று போன்றொன் றுதோன்றும் ஒளிமுகத்தே.

(திருக். கூச)

அவள் குறிப்பறிதல்

என்பது, தலைமகன் எண்ண மறிந்த தோழி, இவளிடத்து இவன் நினைவேயன்றி இவனிடத்தில் இவளெண்ணமும் உண்டோ வெனத் தலைமகளை நோக்க, அவள் முகத்தேயும் அவன்செயல் புலப்படக் கண்டு, இவ்வொண்ணுதல் குறிப்பும் ஒன்றுடைத் தென, அவளுடைய எண்ணமுந் துணிந்துணரா நிற்றல்.

(வ - று.)

பிழைகொண் டொருவிக் கெடாதன்பு செய்யிற் பிறவியென்னும்
மூழைகொண் டொருவன்செல் லாமைநின் றம்பலத் தாடுமுன்னே
உழைகொண் டொருங்கிரு நோக்கம் பயின்றவெம் மொண்ணுதன்மாந்
தழைகொண் டொருவனென் னுமுன்ன முள்ளந் தழைத்திடுமே.

(திருக். கூஇ)

இருவர் நினைவு மொருவழி யுணர்தல்

என்பது, இருவர் நினைவுங் கண்டு இன்புறுதோழி, இவ்விடத்து இருவரும் வந்த காரியம் இவன் முகமாகிய தாமரைக்கண் இவள் கண்ணுகிய வண்டு இன்பத்தேனைப் பருகி யெழில் பெற வந்த இத் தன்மையல்லது பிறிதில்லையென, அவ்விருவர் நினைவுந் துணிந்துணரா நிற்றல்.

(வ - று.)

மெய்யே யிவற்கில்லை வேட்டையின் மேன்மனம் மீட்டிவளும்
பொய்யே புனத்தினை காப்ப திறைபுலி யூரனையாள்
மையேர் குவளைக்கண் வண்டினம் வாழுஞ் செந் தாமரைவாய்
எய்யே மெனினுங் குடைந்தின்பத் தேனுண் டெழிறருமே.

(திருக். சுசு) (கச)

குறையுறவுணர்தல் முற்றும்.

கடி. நாண நாட்டம்

இனி முன்னர், நன்னிலை நாணமென்று கூறிய நாண நாட்ட மென்பது-இருவர் நினைவும் ஐயமறத் துணிந்த தோழி, அவர்கூட்டமுண்மை யறிவது காரணமாகத் தலைமகளை நாண நாடா நிற்றலாம்.

அதன் வகை

அசஙூ. பிறைதொழு கென்றலும் பின்னு மவளை
உறவென வேறு படுத்தி யுரைத்தலும்
சுனையாடல் கூறி நகைத்தலும் ஆங்குப்
புணர்ச்சி யியம்பலும் பொதுவெனக் கூறி
மதியுடம் படுதலு மாகிய வைந்தும்
நாண நாட்டம் நடுங்க நாட்டம்
புலிமிசை வைத்துப் புகற லென்ப.

என்பது, பிறைதொழுகென்றல், வேறுபடுத்திக் கூறல், சுனையாடல்கூறி நகைத்தல், புணர்ச்சியுரைத்தல், மதியுடம் படுதல் ஐந்தும் நாண நாட்டமாம்; புலிமிசை வைத்துக் கூற லொன்றும் நடுங்க நாட்டமாம்.

பிறைதொழு கென்றல்

என்பது, பிறையைக் காட்டித் தான் தொழுது கின்று, நீயுமதனைத் தொழுவாயாக வெனத், தோழி தலைமகள் புணர்ச்சி கினைவறியாகிற்றல்.

(வ - று.)

மைவார் கருங்கண்ணி செங்கரங் கூப்பு மறந்துமற்றப்
பொய்வா னவரிற் புகாதுதன் பொற்கழற் கேயடியேன்
உய்வான் புகவொளிர் திங்கணின் றேன்சடை மேலதொத்துச்
செவ்வா னடைந்த பசுங்கதிர் வெள்ளைச் சிறுபிறைக்கே.

(திருக். சுஎ)

வேறுபடுத்திக் கூறல்

என்பது, பிறைதொழாது தலைசாய்த்து நாணி நிலங்கினையா கிற்பக்கண்டு, பின்னுமிவள் வழியே யொழுகி யிதனையறிவோ மென வுட்கொண்டு, நீபோய்ச் சுனையாடி வாவென்ன, அவளும் அதற்கியைந்து போய் அவனெடு தலைப்பெய்துவர, அக்குறிப் பறிந்து, அவளை வரையணங்காகப் புனைந்து வேறுபடுத்திக் கூறல்.

(வ - று.)

அக்கின்ற வாமணி சேர்கண்டன் அம்பல வன்மலையத்
திக்குன்ற வாணர் கொழுந்திச் செழுந்தண் புனமுடையாள்
அக்கன்ற ஆறமர்ந் தாடச்சென் றூளங்கம் அவ்வவையே
ஒக்கின்ற வாரணங் கேயிணங் காகும் உனக்கவளே.

(திருக். சுஅ)

(சு - ரை.) அக்கு தவாமணி சேர்கண்டன் - உருத்திராக்க மணி நீங்காத அழகிய திருமிடற்றை யுடையவன். இன் - சாரியை.

சுனையாடல் கூறிநகைத்தல்

என்பது, வேறுபடுத்திக்கூற நாணல்கண்டு, சுனையாடினால் இவ்வா றழிந்தழியாத குங்குமமும் அளகத்தப்பிய தாதும் இங் கிறமுந் தருமாயின், யானுஞ் சுனையாடிக் காண்பேன் எனத், தோழி தலைமகளோடு நகையாடல்.

(வ - று)

செந்நிற மேனிவெண் ணீறணி வோன்றில்லை யம்பலம்போல்
அந்நிற மேனிநின் கொங்கையி லங்கழி குங்குமமும்

ஈமத்நீற வார்குழன் மாலையும் தாதும் வளாய்மதஞ்சேர்
இந்நிற மும்பெறின் யானுங் குடைவன் இருஞ்சுனையே.

(திருக். சுசு)

புணர்ச்சியுரைத்தல்

என்பது, சுனையாடல் கூறி நகையாடிய தோழி அதுகிடக்க, நீயாடிய அப்பெரிய சுனைதான், கண் சிவப்ப, வாய்விளர்ப்ப, அளி தொடரும் வரைமலரைச் சூட்டவற்றே; சொல்வாயாக வெனப், புணர்ச்சியுரையா கிற்றல்.

(வ - று.)

பருங்கண் கவர்கொலை வேழப் படையோன் படப்படர்தீத்
தருங்கண் ணுதற்றில்லை யம்பலத் தோன்றட மால்வரைவாய்க்
கருங்கண் சிவப்பக் கனிவாய் விளர்ப்பக்கண் ணுரளிபின்
வருங்கண் மலைமலர் சூட்டவற் றேமற்றவ் வான்சுனையே.

(திருக். எ0)

(சு - ரை.) வேழப் படையோன் - கரும்பாகிய சிலையை யுடைய மன்மதன். பட - அழியுமாறு.

மதியுடம்படுதல்

என்பது, பலபடியும் நாணநாடிக் கூட்டமுண்மை யுணர்ந்த தோழி இம்மலையிடத்து, இருவர்க்கும் இன்பதுன்பங்கள் பொதுவாய் வாராகின்றன, அதனால் இவ்விருவர்க்கு மூயி ரொன்றே யென வியந்து கூறல்.

(வ - று.)

காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர்
ஆகத்து ளோருயிர் கண்டனம் யாமின்றி யாவையுமாம்
ஏகத் தொருவ னிரும்பொழி லம்பல வன்மலையில்
தோகைக்குந் தோன்றற்கும் ஒன்றுய் வருமின்பத் துன்பங்களே.

(திருக். எக) (கஇ)

நாணநாட்டம் முற்றும்.

கசு. நடுங்கநாட்டம்

என்பது, கூட்டமுண்மை யுணர்ந்தனளாயினும், தலைமகன் பெருநாணினளாகலானும், தான் சொல்லாடாது அவள் தன்னைக்

கொண்டே கேட்பது காரணமாக நெருங்கிநின்று, ஒரு புலி ஒருவனை யெதிர்ப்பட்டதெனத் தோழியவளை நடுங்க நாடல்.

(வ - று.)

ஆவா இருவர் அறியா அடிதில்லை யம்பலத்து
மூவா யிரவர் வணங்கநின் றேனையுன் னிரின்முன்னித்
தீவா யுழுவை கிழித்ததந் தோசிறி தேபிழைப்பித்
தாவா மணிவேல் பணிகொண்ட வாறின்று ராண்டகையே.

(திருக்.எஉ) (கசு)

நடுங்கநாட்டம் முற்றிற்று.

கள. மடற்றிறம்

என்பது, நடுங்கநாடவும், பெருநாணினளாதலின், தலைமகள் தன்குறை கூறமாட்டாது நிற்ப, இனி இவள் இறந்து படவுங் கூடுமென வுட்கொண்டு, தலைமகனுடன் சொல்லாடத் தொடங்கிய தோழி, தானும் பெருநாணினளாதலின் பின்னும் தலைமகன் குறையுற வேண்டிநிற்ப, அங்ஙனமைக்கண் தலைமகன் சென்று, இந்நாளெல்லாம் என் குறை நின்னுல் முடியுமென்று நின்னை வந்திரந்தேன், இது நின்னுல் முடியாமையின், யான் மடலூர்ந் தாயினும் இக்குறை முடித்துக் கொள்வேனெனத் தோழிக்குக் கூறல்.

என்னை ?

முன்னுற வுணரினும் அவன்குறை யுற்ற
பின்ன ரல்லது கிளவி தோன்றுது. (இறையனார் களவியல்)

என்றாகலின்,

மடற்றிறம்

அசசு. ஆற்று துரைத்தலும் உலகின்மேல் வைத்தலும்
தன்றுணி புரைத்த லோடுவகை யுரைத்தலும்
அருளா லரிதென னடையா லரிதெனல்
அவயவ மெழுத லரிதென விலக்கலும்
உடம்படாது விலக்கலும் உடம்பட்டு விலக்கலும்
திடம்பட வோன்பதுஞ் சேப்புங் காலை
வடம்படு மூலமேன் மடலா கும்மே.

(திருக்கோவையார் உரை)

என்பது, ஆற்றுதுரைத்தல், உலகின்மேல் வைத்துரைத்தல், தன்றுணிபுரைத்தல், மடலேறும் வகையுரைத்தல்,

அருளா லரிதென விலக்கல், மொழிநடை யெழுதலரிதென விலக்கல், அவயவமெழுதலரிதென விலக்கல், உடம்படாது விலக்கல், உடம்பட்டு விலக்கல், இவை யொன்பதும் மடற்றிறமாம்.

ஆற்றுதுரைத்தல்

என்பது, தலைமகள்மேல் மடற்றிறங் கூறுகின்றுழிகலின், அதற்கியைவுபட அவ்விருவருழைச் சென்று, நீயிரருளாமையின் என்னுயிரழிகின்றது. இதனை அறிமினெனத், தலைமகன் தனதாற்றுமை மிகுதியைக் கூறல்.

(வ - று.)

பொருளா எனைப்புகுந் தாண்டு புரந்தரன் மாலயன்பால்
இருளா யிருக்கும் ஒளிநின்ற சிற்றம் பலமெனலாம்
சுருளார் கருங்குழல் வெண்ணகைச் செவ்வாய்த் துடியிடையீர்
அருளா தொழியின் ஒழியா தழியுமென் ஆருயிரே.

(திருக். எக)

உலகின்மேல் வைத்துரைத்தல்

என்பது, ஆற்றுமைகூறி, அது வழியாகின்று, ஆடவர் தம் உள்ளமாகிய மீன் மகளிர்கண்வலைப் பட்டால், அதனைப் பெறுதற்கு வேறு உபாயமில்லாதவிடத்து, மடலூர்ந்தும் அதனைப் பெறுவரென, உலகின்மேல் வைத்துக் கூருநிற்றல்.

(வ - று.)

காய்சின வேலன்ன மின்னியல் கண்ணின் வலைகலந்து
வீசின போதுள்ள மீனிழந் தார்வியன் றென்புலியூர்
ஈசன சாந்தும் எருக்கும் அணிந்தோர் கிழிபிடித்துப்
பாய்சின மாவென ஏறுவர் சீறூர்ப் பனைமடலே.

(திருக். எச)

தன்றுணிபுரைத்தல்

என்பது, முன் உலகின்மேல் வைத்துணர்த்தி, அது வழியாக நின்று, என்னையும் ஒரு பெண்கொடி பிறரிகழ மடலேறப் பண்ணுகின்ற தினை, முன்னிலைப் புறமொழியாகத் தன்றுணிபு கூருநிற்றல்.

(வ - று.)

விண்ணை மடங்க விரிநீர் பரந்துவெம் புக்கரப்ப
மண்ணை மடங்க வருமொரு காலத்து மன்னிநிற்கும்

அண்ணல் மடங்க லதளம் பலவன் அருளிலர்போல்
பெண்ணை மடன்மிசை யான்வரப் பண்ணிற்றிரூர் பெண்கொடியே.

(திருக். எஇ)

(சூ - ரை.) மடங்கல் அதள் - புலியின் தோல். சிங்கத்தின் தோல் எனவும் வுரைப்பர். அவ்வழக்கு உளதேல் கொள்க.

மடலேறும் வகையுரைத்தல்

என்பது, தன்துணிபு கூறவும் பெருநாணின எாதலிற் சொல்லாடாத தோழிக்கு, வெளிப்படத், தான் நாணிழந்தமை தோன்ற நின்று, யான் நாளை நின்னூர்த்தெருவே மடலுங் கொண்டு வருவேன், பின்வருவது காணெனத், தலைமகன் தான் மடலேறும் வகை கூறுநிற்றல்.

(வ - று.)

கழிகின்ற என்னையும் நின்றநின் கார்மயில் தன்னையும்யான்
பிழியொன்ற நாடி யெழுதிக்கைக் கொண்டென் பிறவிகெட்டின்
றழிகின்ற தாக்கிய தாளம் பலவன் கயிலையந்தேன்
பொழிகின்ற சாரலுஞ் சிறூர்த் தெருவிடைப் போதுவனே.

(திருக். எசு)

அருளா லரிதெனவிலக்கல்

என்பது, தலைமகன் வெளிப்பட நின்று மடலேறுவேன் என்று கூறக் கேட்ட தோழி இனியிவன் மடலேறவுங் கூடுமென வுட்கொண்டு, தன்னிடத்து நாணைவிட்டு வந்ததிற்கின்று, நீர் மடலேறினுல் உம்முடைய அருள் யாரிடத்ததாமென்று, அவன தருளை எடுத்துக்கூறி விலக்கா நிற்றல்.

(வ - று.)

தடனும் வணங்குந்தொல் லோனெல்லை நான்முகன் மாலறியாக்
கடனும் உருவத் தரன்றில்லை மல்லற்கண் ணார்ந்த பெண்ணை
உடனும் பெடையொடொன் சேவலும் முட்டையுங் கட்டழித்து
மடனும் புனைதரின் யார்கண்ணை தோமன்ன இன்னருளே.

(திருக். எஎ)

மொழிநடையெழுத லரிதெனவிலக்கல்

என்பது, அருளெடுத்து விலக்கவும் தன்வழி நில்லாமை கண்டு, அவன் வழியொழுகி விலக்குவாளாக, நுமதருள் கிடக்க, மடலேறுவார் மடலேறுதல் மடலேறப்படுவார் உரு வெழுதிக்

கொண்டன்றே; நுமக்கவள் மொழிகடையெழுத முடியாதாகலின் நீயிர் மடலேறுமாறு என்னெனவெனை விலக்கல்.

(வ - று.)

அடிச்சந்த மால்கண் டிலாதன காட்டிவந் தாண்டுகொண்டென்
முடிச்சந்த மாமல ராக்குமுன் னேன்புலி யூர்புரையும்
கடிச்சந்த யாழ்கற்ற மென்மொழிக் கன்னி யனநடைக்குப்
படிச்சந்த மாக்கும் படமுள வோநும் பரிசகத்தே.

(திருக். எஅ)

(கு - ரை.) சந்தம் மால் கண்டிலாதன அடி - மறையும் மாலும் காண இயலாதனவாகிய திருவடி, படிச்சந்தம் - ஒன்றன் வடிவையுடைத்தாய் அது வென்றே கருதப்படும் இயல்புடையது.

அவயவமெழுத லரிதெனவிலக்கல்

என்பது, அவள் சொன்னடை கிடக்க, இவை தாமெழுத முடியுமோ; முடியுமாயின் யான் சொன்னபடியே தப்பாமல் எழுதிக்கொண்டு வந்தேதறுமென்று அவளவயவங் கூறுகிற்றல்.

(வ - று.)

யாழு மெழுதி யெழின்முத் தெழுதி யிருளின்மென் பூச்
சூழு மெழுதியொர் தொண்டையுந் தீட்டியென் தொல்பிறவி
ஏழு மெழுதா வகைசிதைத் தோன்புலி யூரிளமாம்
போழு மெழுதிற்றொர் கொம்பருண் டேற்கொண்டு போதுகவே.

(திருக். எக)

உடம்படாது விலக்கல்

என்பது, எழுதலாகாமை கூறிக்காட்டி, அது கிடக்க, நும்மை யாம் விலக்குகின்றேமல்லேம், யான் சென்று அவள் கிணைவை யறிந்துவந்தாற் பின்னர் நீயிர் வேண்டிற்றைச் செய்யும், அவ்வளவும் நீவிர் வருந்தா தொழியுமெனத், தானுடம்படாது விலக்காநிற்றல்.

(வ - று.)

ஊர்வா யொழிவா யுயர்பெண்ணைத் திண்மடல் நின்குறிப்புச்
சீர்வாய் சிலம்ப திருத்த இருந்திலம் ஈசர்தில்லைக்
கார்வாய் குழலிக்குன் னுதர வோதிக்கற் பித்துக்கண்டால்
ஆர்வாய் தரினறி வார்பின்னைச் செய்க அறிந்தனவே.

(திருக். ஆ0)

(கு - ரை.) கற்பித்துக் கண்டால் வாய்தரின் ஆர் அறிவார் எனக் கூட்டுக.

உடம்பட்டு விலக்கல்

என்பது, உடம்படாது முன் பொதுப்பட விலக்கி, முகங் கொண்டு, பின்னர்த் தன்னைடைவளிடை வேற்றுமையின்மை கூறி, யான் குறைமுடித்துத் தருவேன், நீவருந்த வேண்டா வெனத் தோழி தானுடம்பட்டு விலக்கல்.

(வ - று.)

பைந்நா ணரவன் படுகடல் வாய்ப்படு நஞ்சமுதாம்
மைந்நாண் மணிகண்டன் மன்னும் புலியூர் மணந்த பொன்னிம்
மொய்ந்நாண் முதுதிரை வாயா னழுந்தினும் என்னின்முன்னும்
இந்நா ளிதுமது வார்குழ லாட்கென்கண் இன்னருளே.

(திருக். அக) (கள)

மடற்றிற முற்றும்.

கஅ. குறைநயப்புக் கூறல்

என்பது, தலைமகனை மடல் விலக்கிக் குறைநேர்ந்த தோழி, தலைமகளைக் குறைநயப்பிக்க அவன் குறை கூருநிற்றல்.

குறை நயப்பித்தலின் வகை

அசஞ. குறிப்பறித லோடு மென்மொழி கூறலும்
விரவிக் கூறலு மறியாள் போறலும்
வஞ்சித் துரைத்தலும் புலந்து கூறலும்
வன்மொழி கூறலும் மனத்தோடு நேர்தலும்
சொன்ன விருநான்குந் துறைகுறை நயப்பென
மன்னிய பொருளில் வகுத்திசி னோரே.

(திருக்கோவையார் உரை)

என்பது, குறிப்பறிதல், மென்மொழியாற் கூறல், விரவிக் கூறல், அறியாள் போறல், வஞ்சித் துரைத்தல், புலந்துகூறல், வன்மொழியாற் கூறல், மனத்தொடு நேர்தல் ஆகிய எட்டும் குறைநயப்பித்தலாம்.

குறிப்பறிதல்

என்பது, தலைமகனது குறைகூறத் துணியாநின்ற தோழி, தெற்றெனக் கூறுவேனுயின், இவள் இதனை மறுக்கவும் கூடு

மென வுட்கொண்டு, நம்புனத்தின்கட் சேயினது வடிவையுடைய ராய்ச் சினவேலேந்தி, ஒருவர் பலகாலும் வாராநின்றார், வந்து நின்று ஒன்றுரைப்பதுஞ் செய்யார், அவரிடத்து யாஞ் செய்யத் தக்கது யாதெனத், தானறியாதாள் போலத், தலைமகளோடு சாவி, அவள் நினைவறியா நிற்றல்.

(வ - று.)

தாதேய் மலர்க்குஞ்சி யஞ்சிறை வண்டுதண் டேன்பருகித்
தேதே யெனுந்நில்லை யோன்சே யெனச்சின வேலொருவர்
மாதே புனத்தினிடை வாளா வருவர்வந் தியாதுஞ்சொல்லார்
யாதே செயத்தக் கதுமது வார்குழல் ஏந்திழையே.

(திருக். அஉ)

மென்மொழியாற் கூறல்

என்பது, நினைவறிந்து முகங்கொண்டு, அது வழியாக நின்று, ஒரு பெரியோன் வாடிய மேனியனும் வாடாத தழையனுமாய், நம் புனத்தை விட்டுப் போவதுஞ் செய்கின்றிலன், தன் குறையின்னதென்று வெளிப்படச் சொல்வதுஞ் செய்கின்றிலன், இஃதென்ன மாயமோ வறிகின்றிலேனெனத், தோழி தானதற்கு நொந்து கூறல்.

(வ - று.)

வரிசேர் தடங்கண்ணி மம்மர்கைம் மிக்கென்ன மாயங்கொலோ
எரிசேர் தளிரன்ன மேனியன் ஈர்ந்தழை யன்புலியூர்ப்
புரிசேர் சடையோன் புதல்வன்கொல் பூங்கணை வேள்கொலென்னத்
தெரியேம் உரையான் பிரியா னொருவனித் தேம்புனமே.

(திருக் அக)

விரவிக்கூறல்

என்பது, வன்மொழியாற் கூறின் மனமெலியுமென்றஞ்சி, ஓரலவன் தன் பெடைக்கு நாவற்கனியை நல்கக்கண்டு, ஒரு பெருந்தகை, பேய்கண்டாற்போல நின்றான், அந்நிலைமையை நீ கண்டாயாயின்; உயிர்வாழமாட்டாய்; யான் வன்கண்மையே ஞதலி றற்றியுளேனைப்போந்தெனென, மென்மொழியோடு சிறிது வன்மொழிபடக் கூறுநிற்றல்.

(வ . று.)

நீகண்ட னீயெனின் வாழலே நேரிழை யம்பலத்தான்
சேய்கண் டனையன்சென் றுங்கோ ரலவன்றன் சீர்ப்பெடையின்

வாய்வண் டணியதொர் நாவற் கனிநனி நல்கக்கண்டு
பேய்கண் டணியதொன் றுகிரின் ருனப் பெருந்தகையே.

(திருக். அசு)

அறியாள்போறல்

என்பது, பேய்கண்டாற்போல நின்ருனெனத், தலைமகன் நிலைமை கேட்ட தலைமகள் பெருநாணின ளாதலி னிதனை அறியாதாளைப்போல, இஃதொரு கடல் வடிவிருந்தவாறு காணு மெனத், தானென்று கூறு நிற்றல்.

(வ · று.)

சங்கந் தருமுத்தி யாம்பெற வான்கழி தான்கெழுமிப்
பொங்கும் புனற்கங்கை தாங்கிப் பொலிகலிப் பாறுலவு
துங்க மலிதலை யேந்தலி னேந்திழை தொல்லைப்பன்மா
வங்க மலிகலி நீர்நில்லை வானவ னேர்வருமே.

(திருக். அடு)

வஞ்சித்துரைத்தல்

என்பது, நாணினுற் குறை நேரமாட்டாது வருந்தாநின்ற தலைமகள், இவளும் பெருநாணினளாதலி னென்னைக் கொண்டே கூறுவித்துப் பின் முடிப்பாளாய் இராநின்ருள், இதற்கு யானென்றுஞ் சொல்லாதொழிந்தா லெம்பெருமா னிறந்து படுவ னென உட்கொண்டு, தன்னிடத்து நாணினைவிட்டுப், பாங்கற் கூட்டம் பெற்றுத் தோழியிற் கூட்டத்திற்குத் துவளாகின்ரு னென்பது தோன்றப், பின்னும் வெளிப்படக் கூறமாட்டாது, மாயவனமேல் வைத்து வஞ்சித்துக் கூறுநிற்றல்.

(வ · று.)

புரங்கடந் தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா
திரங்கிடந் தாயென் நிரப்பத்தன் னீரடிக் கென்னிரண்டு
கரங்கடந் தானென்று காட்டமற் ருங்கதுங் காட்டிடென்று
வரங்கிடந் தான்நில்லை யம்பல முன்றிலம் மாயவனே.

(திருக். அசு)

புலந்துகூறல்

என்பது, வெளிப்படக்கூறுது வஞ்சித்துக் கூறுதலான், என்னோடு இதனை வெளிப்படக் கூறுயாயின், நின் காதற்ருழி யார்க்கு வெளிப்படக்கூறி, அவரோடு சூழ்ந்து, நினக்கு உற்றது

செய்வாய், யான் சொன்ன அறியாமையை நின்னுள்ளத்துக் கொள்ளாது மறப்பாயாக, யான் வேண்டுவது இதுவேயெனத் தோழி தலைமகளோடு புலந்து கூறுகிற்றல்.

(வ - று.)

உள்ளப் படுவன வுள்ளி யுரைத்தக் கவர்க்குரைத்து
மெள்ளப் படிறு துணீதுணி யேலிது வேண்டுவல்யான்
கள்ளப் படிறர்க் கருளா அரன்றில்லை காணலர்போல்
கொள்ளப் படாது மறப்ப தறிவிலென் கூற்றுக்களே.

(திருக். அஎ)

வன்மொழியாற் கூறல்

என்பது, புலந்து கூறுகின்ற தோழி, அக்கொடியோன் அருஞ்சுருமையான், மெய்யிற் பொடியுங் கையிற் கிழியுமாய் மட லேறத் துணியா நின்றான், அக்கிழிதா னின்னுடைய வடிவென் றுரையு முளதாயிருந்தது, இனி நீயு நினக்குற்றது செய்வாயாக, யானறியேனென, வன்மொழியாற் கூறுகிற்றல்.

(வ - று.)

மேவியந் தோலுடுக் குந்தில்லை யான்பொடி மெய்யிற்கையில்
ஓவியந் தோன்றுங் கிழிநின் எழிலென் றுரையுளதால்
தூவியந் தோகையன் னுயென்ன பாவஞ்சொல் லாடல்செய்யான்
பாவியந் தோபனை மாமட லேறக்கொல் பாவித்ததே.

(திருக். அஅ)

மனத்தொடு நேர்தல்

என்பது, ஆற்றுமையான் மடலேறத் துணிகின்றனெனத் தோழியால் வன்மொழி கூறக்கேட்ட தலைமகள், அதற்குத் தானுற்றுளாய்த், தலைமகனைக் காணவேண்டித், தன் மனத் தோடு கூறி நேராகிற்றல்.

(வ - று.)

பொன்னார் சடையோன் புலியூர் புகழா ரெனப்புரிநோய்
என்னை யறிவில்லை யாரென் றுரைக்கிலென் வந்தயலார்
சொன்ன ரெனுமித் துரிசுதன் னைமைத் துணைமனனே
என்னுந் துயர்வல்லை யேற்சொல்லு நீர்மை யினியவர்க்கே.

(திருக். அக) (ஙஅ)

குறைநயப்பித்தல் முற்றும்.

ககூ. சேட்படை

என்பது, தலைமகளைக் குறைநயப்பித்துத் தன்னிலைய கூட்டங் கூட்டலுறுந் தோழி, தலைமகனது பெருமையும் தன் முயற்சி யருமையும் தோன்றல் காரணமாகவும், இத்துணையருமை யுடையாள் இனிநமக் கெய்துதற்கு அருமையுடையளென இதுவே புணர்ச்சியாக நீட்டியாது விரைய வரைந்து கோடல் காரணமாகவும், தலைமகனுக்கியைய மறுத்துக் கூறல்.

அதன் வகை

உசகூ. தழைகொண்டு சேறலும் தகாதென மறுத்தலும்
நிலத்தின்மை கூறலும் நினைவறிவு கூறலும்
படைத்து மொழிதலும் பனிமதி நுதலியை
எடுத்துநா ணுரைத்தலும் இசையாமை கூறலும்
செவ்வியில ளென்றலும் சேட்பட நிறுத்தலும்
அவ்வினிய மொழிநீ யவட்குரை யென்றலும்
குலமுறை கிளத்தலுங் கோதண் டத்தொழில்
வலிசொல்லி மறுத்தலும் மற்றவற் கிரங்கலும்
சிறப்பின்மை கூறலும் சிறியளென் றுரைத்தலும்
மறைத்தமை கூறி நகைத்துரை செய்தலும்
நகைகண்டு மகிழ்தலும் நானவள் தன்னை
அறியே னென்றலும் அவயவங் கூறலும்
கண்ணையங் துரைத்தலும் கையுறை யெதிர்தலும்
முகம்புக வுரைத்தலும் முகங்கண்டு கூறலும்
வகுத்துரைத் தல்லோடு வண்டழை யவட்கு
மிகுத்துரை செய்து விரும்பிக் கொடுத்தலும்
தழைவிருப் புரைத்தலும் தானிரு பத்தா
றிழைவளர் முலையா யிவைசேட் படையே.

என்பது, தழைகொண்டு சேறல்-சந்தனத்தழை தகாதென்று மறுத்தல், நிலத்தின்மை கூறிமறுத்தல், நினைவறிவு கூறி மறுத்தல், படைத்துமொழியான் மறுத்தல், நாணுரைத்து மறுத்தல், இசையாமைகூறி மறுத்தல், செவ்வியிலளென்று மறுத்தல், காப்புடைத்தென்று மறுத்தல், நீயேகூறென்று மறுத்தல், குலமுறைகூறி மறுத்தல், நகையாடி மறுத்தல், இரக்கத்தொடு மறுத்தல், சிறப்பின்மைகூறி மறுத்தல், இளமை கூறி மறுத்தல், மறைத்தமைகூறி நகைத்துரைத்தல், நகைகண்டு

மகிழ்தல், அறியாள்போன்று கினவுகேட்டல், அவயவங்கூறல், கண்ணயந்துரைத்தல், தழையெதிர்தல், குறிப்பறிதல், குறிப்பறிந்துகூறல், வகுத்துரைத்தல், தழையேற்பித்தல், தழை விருப்புரைத்தல் ஆகிய விருபத்தாறுஞ் சேட்படையாம்.

தழைகொண்டுசேறல்

என்பது, மேற் சேட்படை கூறத்துணிந்த தோழியிடைச் சென்று, அவள் குறிப்பறிந்து, பின்னும் குறையுறவு தோன்ற நின்று, நும்மால் அருளத்தக்காரை யலையாதே இத்தழை வாங்கிக் கொண்டு என்குறை முடித்தருளுவீராமென்று, மறுத்தற்கிடமறச், சந்தனத்தழைகொண்டு தலைமகன்செல்லா நிற்றல்.

(வ - று.)

தேமென் கிளவிதன் பங்கத் திறையுறை தில்லையன்னீர்
பூமென் றழையுமம் போதுங்கொள் ளீர்தமி யேன்புலம்ப
ஆமென் றருங்கொடும் பாடுகள் செய்துநுங் கண்மலராம்
காமன் கணைகொண் டலைகொள்ள வோமுற்றக் கற்றதுவே.

(திருக். கூ0)

சந்தனத்தழை தகாதென்று மறுத்தல்

என்பது, தலைமகன் சந்தனத்தழைகொண்டு செல்ல, அது வழியாக நின்று, சந்தனத்தழை யிவர்க்கு வந்தவாறென்னை வென்று ஆராயப்படுதலான், இத்தழை எமக் காகாதெனத், தோழி மறுத்துக் கூறல்.

(வ - று.)

ஆரத் தழையராப் பூண்டம் பலத்தன லாடியன்பர்க்
காரத் தழையன் பருளிநின் ரேன்சென்ற மாமலயத்
தாரத் தழையண்ணல் தந்தால் இவையவள் அல்குற்கண்டால்
ஆரத் தழைகொடு வந்தா ரெனவரும் ஐயுறவே.

(திருக். கூக)

நிலத்தின்மைகூறி மறுத்தல்

என்பது, சந்தனத்தழை தகாதென்றதல்லது மறுத்துக் கூறியவாறன்றென மற்றொருதழை கொண்டுசெல்ல, அது கண்டு இக்குன்றிலில்லாத தழையை யெமக்கு நீர்தந்தால், எங்குடிக்கு இப்பொழுதே பழியாம், ஆதலான் அத்தழை எமக் காகாதென மறுத்துக்கூறல்.

(ஐ - ஐ.)

மூன்றகர்த் தெல்லா இமையோ ரையும்பின்னைத் தக்கன்முத்தீச்
சென்றகத் தில்லா வகைசிதைத் தோன்றிருந் தம்பலவன்
ஞன்றகத் தில்லாத் தழையண்ணல் தந்தாற் கொடிச்சியருக்
கின்றகத் தில்லாப் பழிவந்து மூடுமென் றெள்குதுமே.

(திருக். கூஉ)

நினைவறிவுகூறி மறுத்தல்

என்பது, இத்தழை தங்நிலத்துக்கு உரித்தன்று என்ற தல்லது மறுத்துக் கூறியவாறன்றென உட்கொண்டு, அந் நிலத்திற்குரிய தழைகொண்டு செல்ல, அதுகண்டு தானுடன் பட்டாளாய், யான்சென்று அவள் நினைவறிந்தால் நின்னெதிர் வந்து கொள்வேன், அஃதல்லது கொள்ளப் பயப்படுவேனென மறுத்துரைத்தல்.

(ஐ - ஐ.)

யாழார் மொழிமங்கை பங்கத் திறைவன் எறிதிரைநீர்
ஏழா யெழுபொழி லாயிருந் தோனின்ற தில்லையன்ன
சூழார் குழலெழிற் ரெண்டைச்செவ் வாய்நவ்வி சொல்லறிந்தால்
தாழா தெதிர்வந்து கோடுஞ் சிலம்ப தருந்தழையே.

(திருக். கூக)

படைத்து மொழியான் மறுத்தல்

என்பது, நினைவறிந்தல்லது ஏலே மென்றது, மறுத்துக் கூறிய வாறன்று, நினைவறிந்தால் ஏற்பேமென்ற வாரூமென வுட் கொண்டு நிற்பச் சிறிது புடைபெயர்ந்து, அவள் நினைவறிந் தாளாகச் சென்று, இத்தழை யானேயன்றி அவளும் விரும்புமா யினும், இது குற்ரூலத்துத் தழையாதலான், இத்தழை யிவர்க்கு வந்தவாறென்னேவென ஆராயப்படு மாதலான், இத்தழை யெமக் காகாதென்று மறுத்துக் கூரூநிற்றல்.

(ஐ - ஐ.)

எழில்வா யிளவஞ்சி யும்விரும் பும்மற் றிறைகுறையுண்
டழல்வா யவிரொளி யம்பலத் தாடுமஞ் சோதியந்தீங்
குழல்வாய் மொழிமங்கை பங்கன்குற் ரூலத்துக் கோலப்பிண்டிப்
பொழில்வாய் தடவரை வாயல்ல தில்லையிப் பூந்தழையே.

(திருக். கூசு)

நாணுரைத்து மறுத்தல்

என்பது, பலபடியுங் தழைகொண்டுசெல்ல, மறுத்துக்கூறிய வழி, இனித் தழையொழிந்து, கண்ணியைக் கையுறையாகக் கொண்டு சென்றுல், அவள் மறுக்கும் வகையில்லையெனக் கழுநீர் மலரைக் கண்ணியாகப் புனைந்துகொண்டுசெல்ல, அதுகண்டு, செவிலியர் சூட்டிய கண்ணியின்மேல் யாஞென்று சூட்டினும் நாணுகிற்பள், நீர் கொணர்ந்த இக்கண்ணியை, யாங்ஙனஞ் சூடுமெனத் தலைமகள் நாணுரைத்து மறுத்துக் கூருகிற்றல்.

(வ - று.)

உறுங்கண்ணி வந்த கூணுபுர வோன்பொடி யாயொடுங்கத்
தெறுங்கண்ணி வந்தசிற் றம்பல வன்மலைச் சிற்றிலின்வாய்
நறுங்கண்ணி சூட்டினும் நாணுமென் வாணுதல் நாகத்தொண்பூங்
குறுங்கண்ணி வேய்ந்தில மந்திகள் நாணுமிக் குன்றிடத்தே.

(திருக். கஉ)

இசையாமைகூறி மறுத்தல்

என்பது, தலைமகள் நாணுரைத்து மறுத்த தோழி, அவள் நாணங்கிடக்க, யாங்கள் வேங்கைமலரல்லது தெய்வத்திற்குரிய வெறிமலர் சூட அஞ்சுது மாதலான், இக்கண்ணி யெங்குலத்திற்கு இசையாதென மறுத்துக்கூறல்.

(வ - று.)

நறமகீ வேங்கையின் பூப்பயில் பாறையை நாகநண்ணி
மறமகீ வேங்கை யெனநனி யஞ்சுமஞ் சார்சிலம்பா
குறமகீ வேங்கைச் சுணங்கொ டணங்கலர் கூட்டுபவோ
நிறமகீ வேங்கை யதளம் பலவன் நெடுவரையே.

(திருக். கக)

செவ்வியிலனென்று மறுத்தல்

என்பது, அணங்கு அலர் தங்குலத்திற்கு இசையாதென்று தல்லது மறுத்துக் கூறியவாறன்றென மாந்தழையோடு மலர் கொண்டு செல்ல, அவை கண்டுடன்படாளாய், அன்னம், பிணை, கிள்ளை, தங்தொழில்பயில, இன்று செவ்வி பெற்றன வில்லை, அது கிடக்க, என்னுழை நீர் வந்தவாறும் யான் உமக்குக் குறை நேர்ந்தவாறும் இன்னு மறிந்திலள், அதனற் செவ்விபெற்றுழ் கொணருமென மறுத்துக் கூருகிற்றல்.

(வ - று.)

கற்றில கண்டன்ன மென்னடை கண்மலர் நோக்கருளப்
பெற்றில மென்பிணை பேச்சுப் பெருகில்லை பிள்ளையின்றென்
றுற்றிலள் உற்ற துறிந்திலள் ஆகத் தொளிமிளிரும்
புற்றில வாளர வன்புலி யூரன்ன பூங்கொடியே.

(திருக். கஎ)

காப்புடைத்தென்று மறுத்தல்

என்பது, செவ்வியிலளென்றது, செவ்விபெற்றுற் குறையில்லை யென்றுளாமென உட்கொண்டு நிற்பக், கதிரவன் மறைந்தான், இவ்விடங் காவலுடைத்து, நும்மிடனுஞ் சேய்த்து, எம்மையன்மாருங் கடியர், யாம் தாழ்ப்பின், அன்னையு முனியும், நீரும் போய் நாளை வாருமென இசைய மறுத்துக் கூறல்.

(வ - று)

முனிதரும் அன்னையும் என்னையர் சாலவும் மூர்க்கரின்னே
தனிதரும் இந்நிலத் தன்றைய குன்றமுந் தாழ்சடைமேல்
மனிதரு திங்க ளணியம் பலவர் பகைசெகுக்குங்
குனிதரு திண்சிலைக் கோடுசென் றுன்சுடர்க் கொற்றவனே.

(திருக். கஅ)

நீயே கூறென்று மறுத்தல்

என்பது, இவள் இவ்விடத்து நிலைமையை மறையாது எனக் குரைப்பாளாயது என்கட்கிடந்த பரிவினனன்றே, இத்துணைப் பரிவுடையாள் எனக்கிது முடியாமை யில்லையெனத் தலைவனுட் கொண்டுபோய்ப் பிற்றைஞான்று செல்லத், தோழி யான் குற்றேவல் மகளாகலிற் றுணிந்து சொல்லமாட்டுகின்றிலேன், இனி நீயே சென்று நின் குறையுள்ளது கூறெனத் தான் உடன் படாது மறுத்துக் கூறல்.

(வ - று)

அந்தியின் வாயெழி லம்பலத் தெம்பரன் அம்பொன்வெற்பில்
பந்தியின் வாய்ப்பல வின்சுளை பைந்தே னெடுங்கடுவன்
மந்தியின் வாய்க்கொடுத் தோம்புஞ் சிலம்ப மனங்கனிய
மூந்தியின் வாய்மொழி நீயே மொழிசென்றம் மொய்குழற்கே.

(திருக். கக)

குலமுறைகூறி மறுத்தல்

என்பது, நீயே கூறெனச் சொல்லக்கேட்டு, உலகத்து ஒருவர்கண் ஒருவ ரொருகுறை வேண்டிச் சென்றால், அக்குறை நீயே முடித்துக்கொள் ளென்பாரில்லை, அவ்வாறன்றி, இவள் இந் நாளெல்லாம் என்குறை முடித்துத் தருவேனென் றென்னை யவமே யுழற்றி, இன்று நின்குறை நீயே முடித்துக்கொள்ளென்ன நின்ற னெனத் தலைமகன் ஆற்றாது நிற்ப, அவனை யாற்றுவிப்பது காரணமாக, நீர் பெரியீர், யாஞ்சிறியே மாதலான் எம்மோடு நுமக்குச் சொல்லாடுதல் தகாதெனக் குலமுறை கூறி மறுத் துரைத்தல்.

(வ - று.)

தெங்கம் பழங்கமு கின்குலை சாடிக் கதலிசெற்றுக்
கொங்கம் பழனத் தொளிர்குளிர் நாட்டினை நீயுமைகூர்
பங்கம் பலவன் பரங்குன்றிற் குன்றன்ன மாபதைப்பச்
சிங்கத் திரிதரு சீறூர்ச் சிறுமியெந் தேமொழியே.

(திருக். க00)

நகையாடி மறுத்தல்

என்பது, இவள் குலமுறை கிளத்தலான் மறுத்துக் கூறிய வாறன்றென மனமகிழ்ந்து நிற்ப, இனி இவளுற்றுவானென உட்கொண்டு, பின்னுந் தழை யெதிரா தெம்மையன்மாரேவுங் கண் டறிவேம், இவ்வையர் கையில் ஏப்போலக் கொலையால் திண்ணியது கண்டறியே மென, அவனேவாடல் கூறி, நகையாடி மறுத்துக் கூறல்.

(வ - று.)

சிலையொன்று வாணுதல் பங்கன்சிற் றம்பல வன்கயிலை
மலையொன்று மாமுகத் தெம்மையர் எய்கணை மண்குளிக்கும்
கலையொன்று வெங்கணை யோடு கடுகிட்ட தென்னிற்கெட்டேன்
கொலையொன்று திண்ணிய வாறையர் கையிற் கொடுஞ்சிலையே.

(திருக். க0க)

இரக்கத்தொடு மறுத்தல்

என்பது, இவளென்னுடனே நகையாடுகின்றது தழை வாங்குதற் பொருட்டென உட்கொண்டு நிற்பப், பின்னையுந் தழை யேலாது இவ்வையர் இவ்வாறு மயங்கிப் பித்தழையா நிற்றற்குக் காரணமென்னேவென்று, அதற்கிரங்கி மறுத்துக் கூறல்.

(வ · ரு.)

மைத்தழை யாநின்ற மாமிடற் றம்பல வன்கழற்கே
மெய்த்தழை யாநின்ற அன்பினர் போல விதிர்விதிர்த்துக்
கைத்தழை யேந்திக் கடமா வினுய்க்கையில் வில்லின்றியே
பித்தழை யாநிற்ப ராலென்ன பாவம் பெரியவரே.

(திருக். க0உ)

சிறப்பின்மைகூறி மறுத்தல்

என்பது, என் வருத்தத்திற்குக் கவலாகின்றன ளிவளா தலின், எனக்கிது முடியாமை யில்லையென உட்கொண்டு கிற்பத், தோழி இக்குன்றிடத்து மாவுஞ்சுனையு மிவள்வடிவுக்கஞ்சி மலர்ந் தறியா வாதலான், ஈண்டில்லா தனவற்றை யாம் அணியிற் கண்டார் ஐயுறுவரென மறுத்துக் கூறல்.

(வ · ரு.)

அக்கும் அரவும் அணிமணிக் கூத்தன்சிற் றம்பலமே
ஒக்கும் மிவளை தொளிருரு அஞ்சிமஞ் சார்சிலம்பா
கொக்கும் சுனையும் குளிர்தளி ருங்கொழும் போதுகளும்
இக்குன்றில் என்றும் மலர்ந்தறி யாத இயல்பினவே.

(திருக். க0க)

இளமைகூறி மறுத்தல்

என்பது, இவள்வடிவிற்கஞ்சி மலர்ந்தறியா வென்றதல்லது, மறுத்துக்கூறியவாறன்று, சிறப்பின்மை கூறியவாறென உட் கொண்டு சிறப்புடைத் தழைகொண்டுசெல்ல, அதுகண்டு, குழலு முலையுங் குவியாத குதலைச் சொல்லிக்கு நீ கூறிய காரியஞ் சிறிது மியைபுடைத்தன்றென அவளிளமை கூறி மறுத் துரைத்தல்.

(வ · ரு.)

உருகு தலைச்சென்ற வுள்ளத்தும் அம்பலத் தும்மொளியே
பெருகு தலைச்சென்று நின்றேன் பெருந்துறைப் பிள்ளைகள்ளார்
முருகு தலைச்சென்ற கூழை முடியா முலைபொடியா
ஒருகு தலைச்சின் மழலைக்கென் னேவைய வொதுவதே.

(திருக். க0ச)

மறைத்தமைகூறி நகைத்துரைத்தல்

என்பது, இவளிளமை கூறுகின்றது தழைவாங்குதற் பொருட்டன்றுக வேண்டும், அதுவன்றி, இந்நாளெல்லாமியைய

மறுத்திப்பொழுதிவள் இசையளென் றியையாமை கூறி மறுக்க வேண்டியதென்னை, இனியிவ்வொழுக்க மிவளையொழிய ஒழுகக் கடவேனென வுட்கொண்டு நிற்ப, நீ யென்னை மறைத்த காரிய மினி நினக்கு முடியாதென, அவளோடு நகைத்துக் கூறல்.

(வ - று.)

பண்டா லியலும் இலைவளர் பாலகன் பார்கிழித்துத்
தொண்டா லியலுஞ் சுடர்க்கழ லோன்றெல்லைத் தில்லையின்வாய்
வண்டா லியலும் வளர்பூந் துறைவ மறைக்கினென்னைக்
கண்டா லியலுங் கடனில்லை கொல்லோ கருதியதே.

(திருக். கஅஞ)

நகைகண்டு மகிழ்தல்

என்பது, இவடன்னை மறைத்தால் முடியாதென்றது மறையா தொழிந்தாவ் முடியுமென்றுளாமெனத் தலைமக னுட்கொண்டு நின்று, உன்னுடைய சதுரப்பாட்டைச் சேர்ந்த மெல்லென்ற நோக்கமன்றே வெனக்குச் சிறந்ததுணை, அல்லது வேறுதுணை யுண்டோவென, அவளுடைய நகைகண்டு மகிழாநிற்றல்.

(வ - று.)

மத்தகஞ் சேர்தனி நோக்கினன் வாக்கிறந் தூறமுதே
ஒத்தகஞ் சேர்ந்தென்னை யுய்யநின் றேன்றில்லை யொத்திலங்கு
முத்தகஞ் சேர்மென் னகைப்பெருந் தோளி முகமதியின்
வித்தகஞ் சேர்மெல்லை நேக்கமன் றேவென் விழுத்துணையே.

(திருக். கஅசு)

அறியாள் போன்று நினைவு கேட்டல்

என்பது, தலைமகன் மகிழ்ச்சிகண்டு, இவன் வாடாமல் தழை வாங்குவேனென வுட்கொண்டு, என்னுடைய தோழியர் எண்ணி றந்தாருளர், அவருள், நின்னுடைய நினைவு யார் கண்ணதோ வெனத், தானறியாதாள் போன்று அவனினைவு கேளாநிற்றல்.

(வ - று.)

விண்ணிறந் தார்நிலம் விண்டவர் என்றுமீக் காரிருவர்
கண்ணிறந் தார்தில்லை யம்பலத் தார்கழுக் குன்றினின்று
தண்ணறுந் தாதிவர் சந்தனச் சோலைப்பந் தாடுகின்றூர்
எண்ணிறந் தாரவர் யார்கண்ண தோமன்ன நின்னருளே.

(திருக். கஅஎ)

அவயவங் கூறல்

என்பது, இன்னுமவளி யிவளறிந்திலள், அறிந்தாளாயிற் றழைவாங்குவாளென உட்கொண்டுநின்று, என்னுற் கருதப் பட்டாளுக்கு, அவயவமிவையெனத் தோழிக்குத் தலைமகன் அவளுடைய அவயவங் கூறல்.

(வ . று.)

குவளின கொங்கை குரும்பை குழல்கொன்றை கொவ்வைசெவ்வாய்
கவளின வாணகை வெண்முத்தம் கண்மலர் செங்கழுநீர்
தவளினை தீர்ப்பவன் தாழ்பொழிற் சிற்றம் பலமகீயாட்
குவளின நாண்மதி போன்றெளிர் கின்ற தொளிமுகமே.

(திருக். கஅ)

கண்ணயந் துரைத்தல்

என்பது, அவயவங் கூறியவழிக் கூறியும் அமையாது, தனக்கன்று தோழியைக் காட்டினமை நினைந்து, பின்னும் கண்ணயந்து கூறல்.

(வ . று.)

ஈசற்கி யான்வைத்த அன்பின் அகன்றவன் வாங்கியவென்
பாசத்திற் காரென் றவன்றில்லை யின்னெளி போன்றவன்றேர்
பூசத் திருநீ றெனவெளுத் தாங்கவன் பூங்கழல்யாம்
பேசத் திருவார்த் தையிற்பெரு நீளம் பெருங்கண்களே.

(திருக். கஅ)

தழையெதிர்தல்

என்பது, கண்ணயந் துரைப்பக் கேட்ட தோழி, இவ்வாறு ஏற்றலெங்குடிக் கேலாவாயினும் நீ செய்தவுதவிக்கும் நின் பேரன்புக்கு மேலாகின்றே னெனக்கூறி, தலைமகன்மாட்டுத் தழை யெதிர்தல்.

(வ . று.)

தோலாக் கரிவென்ற தற்கும் துவள்விற்கும் இல்லின்றொண்மைக்
கேலாப் பரிசுள வேயன்றி யேலேம் இருஞ்சிலம்ப
மாலார்க் கரிய மலர்க்கழ லம்பல வன்மகீயில்
கோலாப் பிரசமன் னுட்கைய நீதந்த கொய்தழையே.

(திருக். கக)

(கு - ரை.) கோலாப் பிரசம் - ஈ முதலானவற்றைக் கொன்று எடுக்கப் படாத தேன்.

குறிப்பறிதல்

என்பது, தலைமகன்மாட்டுத் தழையெதிர்ந்த தோழி, இவளுக்குத் தெற்றெனக் கூறுவேனுயின் இவள் மறுக்கவுங் கூடுமென உட்கொண்டு, இந்நாள்காறுந் தழையேலாமைக் குத் தக்கபொய்சொல்லி மறுத்தேன், இன்றவனேக்கங் கண்டபின் பொய்சொல்லும் நெறியறிந்திலேன், இனியவனுக்குக் கூறுமா றென்னுவெனத் தழையேற் பித்தற்குத் தலைமகள் குறிப்பறிதல்.

(வ - று.)

கழைகாண் டலுஞ்சுளி யுங்களி யானையன் னுன்கரத்தில்
தழைகாண் டலும்பொய் தழைப்பமுன் காண்பனின் றம்பலத்தான்
உழைகாண் டலுநினைப் பாகுமென் னுக்கிமன் னுக்கங்கண்டால்
இழைகாண் பரிதுலை யாயறி யேன்சொல்லும் சடவற்கே.

(திருக். ககக)

குறிப்பறிந்து கூறல்

என்பது, குறிப்பறிந்து முகங்கண்டு, அது வழியாகநின்று, யானைகடிந்த பேருதவியார் கையிற்றழையும் துவளத்தகுமோ, அது துவளாமல், யாம் அவர் குறைமுடிக்க வேண்டாவோ வெனத் தோழி நயப்பக்கூறு நிற்றல்.

(வ - று.)

துவளத்த நீறணி யுந்தடந் தோளண்ணல் தன்னெருபால்
அவளத்த னுமக னுந்நில்லை யானன் றுரித்ததன்ன
கவளத்த யானை கடிந்தார் கரத்தகண் ணார்தழையும்
துவளத் தகுவன வோசுரும் பார்குழல் தூமொழியே.

(திருக். ககஉ)

(கு - ரை.) தன் கூற்றில் இருக்கும் உமைக்குத் தந்தையாயும், மகனுயும் இறைவன் விளங்குபவன் என்றது சிவ தத்துவத்தினின்றும் சத்தி தத்துவம் தோன்றுதலையும், சத்தி தத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவம் தோன்றுதலையும் உட்கொண்டதாகும்.

வருத்துரைத்தல்

என்பது, உதவி கூறவும் பெருநாணினளாதலின், தழை வாங்கமாட்டாது நிற்ப, அக்குறிப்பறிந்து, இருவகையானும்

நமக்குப் பழியேறும், அது கிடக்க, நமக்குதவி செய்தாற்கு நாமு முதவி செய்யுமா றென்னேவெனத் தலைமகள் தழையேற்குமா றுவகுத்துக்கூறல்.

(வ - று.)

ஏறும் பழிதழை யேற்பின்மற் றேலா விடின்மடன்மா
ஏறும் அவனிட பங்கொடி யேற்றிவந் தம்பலத்துள்
ஏறும் அரன்மன்னும் ஈங்கோய் மலைநம் இரும்புனங்காய்ந்
தேறும் மலைதொலைத் தாற்கென்னை யாஞ்செய்வ தேந்திழையே.

(திருக். ககக)

தழையேற்பித்தல்

என்பது, தழையேலா தொழியினும் பழியேறுமாயிற் றழை யேற்பதே காரியமென உட்கொண்டு நிற்ப, அக்குறிப்பறிந்து, இத்தழை நமக்கெளிய தொன்றன்று, இதனை யேற்றுக்கொள் வாயாக வெனத் தோழி தலைமகளைத் தழையேற்பியா நிற்றல்.

(வ - று.)

தெவ்வரை மெய்யெரி காய்சிலை யாண்டென்னை யாண்டுகொண்ட
செவ்வரை மேனியன் நிற்றம் பலவன் செழுங்கயிலை
அவ்வரை மேலன்றி யில்லைகண் டாயுள்ள வாறருளான்
இவ்வரை மேற்சிலம் பன்னெளி நிற்றந்த ஈர்ந்தழையே.

(திருக். ககச)

தழைவிருப்புரைத்தல்

என்பது, தலைமகளைத் தழையேற்பித்துத் தலைமகனுழைச் சென்று, நீ தந்த தழையை யான்சென்று கொடுத்தேன் அது கொண்டவள் செய்தது சொல்லிற் பெருகுமெனத் தலைமகள் விருப்பங் கூறல்.

(வ - று.)

பாசத் தலையறுத் தாண்டுகொண் டோன்றில்லை யம்பலஞ்சூழ்
தேசத் தனசெம்மல் நீதந் தனசென்றி யான்கொடுத்தேன்
பேசிற் பெருகும் சுருங்கு மருங்குல் பெயர்ந்தரைத்துப்
பூசிற் றிளலன்றிச் செய்யா தனவில்லை பூந்தழையே.

(திருக். ககஇ) (ககக)

சேட்படை முற்றும்.

உ0. பகற்குறி

பகற்குறியென்பது, தலைமகளைத் தழையேற்பித்த தோழி தலைமகனுடன் அவளைப் பகற்குறிக்கண் தலைப்பெய்வியா நிற்றல்.

அதன் வகை

அசை. குறியிடங் கூறலு மாடிடம் படர்தலும்
குறியிடைச் சேறலு மிடத்துய்த்து நீங்கலும்
உவந்து கூறலு மொளிர்மருங் கணைதலும்
அறிவழி வித்தலு மவனுண் மகிழ்தலும்
ஆயத் துய்த்தலுந் தோழிவந்து கூடலும்
ஆடிடம் புகுதலுந் தனிகண் டுரைத்தலும்
தடமென் மூலையாள் பருவங் கூறி
வரவு விலக்கலும் வரைவுடம் படாது
மிகுத்து ரைத்தலு மெய்ம்மை யுரைத்தலும்
வருத்தங் கூறலும் தாயச்சங் கூறலும்
இறசெறி வுணர்த்தலுந் தமர்நினை வியம்பலும்
எதிர்கோள் கூறலு மேறுகோ ளியம்பலும்
ஏதிலார் தம்முரை கூறலு மவளோடு
கூறுவாள் போன்று தினைமுதிர்வு கூறலும்
பகல்வரல் விலக்கலும் பையுளெய்த்தி
தினையோடு வெறுத்தலுஞ் சிறைப்புற மாக
வேங்கையோடு வெறுத்தலும் வேற்பமர் நாடற்குக்
கழுமலுற் றிரங்கலுங் கடிப்புனங் கையறக்
கொய்தமை கூறலும் பிரிவருமை கூறலும்
மயிலோடு கூறலும் வறும்புனங் காண்டலும்
பயில்பதி நோக்கிப் பதிமிக வாடலும்
சொன்னகா லெட்டுந் தோன்று மியற்கை
மன்னிய பகற்குறி வகையா கும்மே.

என்பது, குறியிடங் கூறல், ஆடிடம் படர்தல், குறியிடத்துக் கொண்டு சேறல், இடத்துய்த்து நீங்கல், உவந்துரைத்தல், மருங்கணைதல், பாங்கி யறிவுகூறல், உண்மகிழ்ந் துரைத்தல், ஆயத்துய்த்தல், தோழிவந்து கூடல், ஆடிடம் புகுதல், தனி கண்டுரைத்தல், பருவங்கூறி வரவு விலக்கல், வரைவுடம்படாது மிகுத்துக் கூறல், உண்மைகூறி வரைவுகடாதல், வருத்தங்கூறி

வரைவுகடாதல், தாயச்சங்கூறி வரைவுகடாதல், இற்செறிவறி வித்து வரைவுகடாதல், தமர் நீனைவுரைத்து வரைவுகடாதல், எதிர்கோள்கூறி வரைவுகடாதல், ஏறுகோள்கூறி வரைவு கடாதல், அயலுரை யுரைத்து வரைவுகடாதல், நீனைமுதிர் வுரைத்து வரைவுகடாதல், பகல்வரல் விலக்கி வரைவுகடாதல், நீனையொடு வெறுத்து வரைவுகடாதல், வேங்கையொடு வெறுத்து வரைவுகடாதல், இரக்கமுற்று வரைவுகடாதல், கொய்தமைகூறி வரைவுகடாதல், பிரிவருமைகூறி வரைவு கடாதல், மயிலொடுகூறி வரைவுகடாதல், வறும் புனங்கண்டு வருந்தல், பதிநோக்கி வருந்தல் ஆகிய முப்பத்திரண்டும் பகற் குறியாம்.

குறியிடங்கூறல்

என்பது, தழை விருப்புரைத்த தோழி, யாங்கள் விளையாடு மிடத்தொரு கரிய பொழிலிரவி நுழையா விருளாய், நடுவணேர் பளிக்குப்பாறையை யுடைத்தாயிருக்கும், அவ்விடத்து வருவா யாக வெனத் தலைமகனுக்குக் குறியிடங் கூறல்.

(வ - று.)

வானுழை வாளம் பலத்தரன் குன்றென்று வட்கிவெய்யோன்
தானுழை யாவிரு ளாய்ப்புறம் நாப்பண்வண் டாரகைபோல்
தேனுழை நாக மலர்ந்து திகழ்பளிங் கான்மதியோன்
கானுழை வாழ்வுபெற் றுங்கெழில் காட்டுமொர் கார்ப்பொழிலே.

(திருக். ககசு)

ஆடிடம்படர்தல்

என்பது, தலைமகனுக்குக் குறியிடங் கூறின தோழி, யாம் புனத்தின்கட்போ யூசலாடி, அருவியேற்று விளையாடுவேம், போது வாயாக வெனத் தலைமகளை யாயத்தோடுங் கொண்டுசென்று ஆடிடம் படராநிற்றல்.

(வ - று.)

புயல்வளர் ஊசன்முன் னுடிப்பொன் னேபின்னைப் போய்ப்பொலியும்
அயல்வளர் குன்றினின் றேற்றும் அருவி திருவுருவின்
கயல்வளர் வாட்கண்ணி போதரு காதரந் தீர்த்தருளும்
தயல்வளர் மேனியன் அம்பலத் தான்வரைத் தண்புனத்தே.

(திருக். ககன)

குறியிடத்துக் கொண்டுசேறல்

என்பது, ஆடிடம் படர்ந்த தோழி, தலைமகனுக்குத் தான் சொன்ன குறியிடத்திவளைக் கொண்டு சென்றுய்க்கும் பொழுது, ஆயத்தாரைத் தம்மிடத்தினின்று நீக்க வேண்டுதலின், தினை காத்தல் முதலாகிய விளையாட்டுக்களைத் தான் கூறவே, அவ்வவ் விளையாட்டிற் குரியார் தலைமகள் அவ்வவ் விடங்களிலே வருவ ளெனக் கருதித் தோழி சொன்னவகையே, அவ்வவ் விளையாட்டு விருப்பினு லெல்லாரும் பிரிவர், அவ்வகை, ஆய வெள்ளத்தைப் பிரிவித்துத், தமியளாய் நின்ற தலைமகளையுங் கொண்டு, யாமும் போய் மயிலாடல் காண்பேமென அக்குறியிடத்துச் சேறல்.

(வ - று.)

தினைவளங் காத்துச் சிலம்பெதிர் கூஉய்ச்சிற்றின் முற்றிழைத்துச்
சுனைவளம் பாய்ந்து துணைமலர் கொய்து தொழுதெழுவார்
வினைவளம் நீறெழ நீறணி யம்பல வன்றன்வெற் பில்
புனைவளர் கொம்பரன் னுயன்ன காண்டும் புனமயிலே.

(திருக். ககஅ)

(கு - ரை.) பாலுண் குழவி பசுங்குடர் பொருதென நோயுண் மருந்து தாயுண்டாங்குத் தொழுது எழுவார்க்கு வினை நீருகத்தான் நீறணிபவன் எனவே இறைவனது பெருங் கருணை புலப்படும். இறைவன் நீறணிவன் என்பதை 'உருவவிர் பவள மேனி ஒளி நீறணிந்து' 'பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்' என்றற் றொடக்கத்துத் திரு வாக்குகளான் அறியலாம்.

இடத்துய்த்து நீங்கல்

என்பது, குறியிடைக்கொண்டு சென்ற தோழி, யான் அவ்விடத்துச் சென்று நின்குழற்குப் பூக்கொய்து வருவேன், அவ்விடம், மூங்கின் முத்துதிர்தலால் நினது மெல்லடிக்குத் தகா தாதலால் நீ யென்னொடு வாராதிங்கே நின்று பூக்கொய்வாயாக வெனத், தலைமகளைக் குறியிடத்து நிறுத்தித் தானீங்கு நிற்றல்.

(வ - று.)

நரல்வே யினநின தோட்குடைந் துக்கநன் முத்தஞ்சிந்திப்
பரல்வே யறையுறைக் கும்பஞ் சடிப்பரன் றில்லையன்னுய்
வரல்வேய் தருவனிங் கேநிலுங் கேசென்றுன் வார்குழற்கீர்ங்
குரல்வே யளிமுரல் கொங்கார் தடமலர் கொண்டுவந்தே.

(திருக். ககக)

உவந்துரைத்தல்

என்பது, தோழி தலைமகளைக் குறியிடை நிறுத்தி நீங்கா நிற்பத் தலைமகன் சென்றெதிர்ப்பட்டு, இக்குவட்டை மாசுணப் பள்ளியாகவும் என்னைத் திருமாலாகவும் நினைந்தோ, நீ இப் பொழிற்கண் வந்து நின்றதெனத், தலைமகளை யுவந்து கூறல்.

(வ - று.)

படமா சுணைப்பள்ளி யிக்குவ டாக்கியப் பங்கயக்கண்
நெடுமா லெனவென்னை நீநினைந் தோநெஞ்சத் தாமரையே
இடமா விருக்கலுற் றேதில்லை நின்றவன் ஈர்ங்கயிலை
வடமார் முலைமட வாய்வந்து வைகிற்றிவ் வார்பொழிற்கே.

(திருக். கஉ0)

மருங்கணைதல்

என்பது, உவந்துரைப்பக் கேட்ட தலைமகள், பெருநாணினளாதலிற் கண்புதைத்தொரு கொடியினைதுங்கி வருந்தாநிற்பச், சென்று சார்தலாகாமையின், தலைமகன் அவ்வருத்தந் தணிப்பான் போன்று, முலையொடு முனிந்து, அவளிறுமருங்குல் தாங்கியணையா நிற்றல்.

(வ - று.)

தொத்தின் மலர்ப்பொழிற் றில்லைத்தொல் லோனரு ளென்னமுன்னி
முத்தின் குவலைமென் காந்தளின் மூடித்த னேரளப்பாள்
ஒத்தீர்ங் கொடியி னெதுங்குகின் றுள்மருங் குல்நெருங்கப்
பித்தீர் பணைமுலை காளென்னுக் கின்னும் பெருக்கின்றதே.

(திருக். கஉக)

பாங்கியறிவுரைத்தல்

என்பது, மருங்கணைவு இறுதிக்கட் டலைமக ளாயந்தீர், அவளைக் கோலஞ் செய்து, இது நின்றோழி செய்த கோலமே, நீ கலங்காதொழிகெனத், தலைமகன் றன் தோழியோடு தலைப்பெய்தமை தோன்றக்கூறல்.

(வ - று.)

அளிநீ டளகத்தின் அட்டிய தாது மணியணியும்
**ஒளிநீள் சுரிகுழற் சூழ்ந்தவொண் மாலையும் கண்ணறவுண்

கணிநீ யெனச்செய்த வன்கடற் றில்லையன் னுய்கலங்கல்
தெனிநீ யணியபொன் னேபன்னு கோலம் திருநுதலே.

(திருக். கஉஉ)

உண்மகிழ்ந்துரைத்தல்

என்பது, பாங்கியறிவுரைப்பக் கேட்ட தலைமகள் இனி நமக்கொரு குறையில்லையென வுட்கொண்டு முகமலர, அம் முகமலர்ச்சி கண்டு, அவளைக் கழுநீர்மலராகவும் தான் அதன் நறவைப் பருகும் வண்டாகவும் புனைந்து, தலைமகன் தன்னுள் மகிழ்ந்து கூறு நிற்றல்.

(வ - று.)

செழுநீர் மதிக்கண்ணிச் சிற்றம் பலவன் திருக்கழலே
கெழுநீர் மையிற்சென் றுகிண்கிணி வாய்க்கொள்ளும் கள்ளகத்த
கழுநீர் மலரிவள் யானதன் கண்மரு விப்பிரியாக்
கொழுநீர் நறப்பரு கும்பெரு நீர்மை யளிகுலமே.

(திருக். கஉக)

ஆயத்துய்த்தல்

என்பது, மலரளிமேல் வைத்து மகிழ்வுற்றுப் பிரிகின்ற தலைமகன், யாம் இத்தன்மையேமாதலின் நமக்குப் பிரிவில்லை, இனிப் பொழிலிடத்து விளையாடுமாயம் பொலிவு பெறப்போய், அவரோடு சேர்ந்து விளையாடுவாயெனத், தலைமகளை ஆயத்துச் செலுத்தல்.

(வ - று.)

கொழுந்தா ரகைமுகை கொண்டலம் பாசடை விண்மடுவில்
எழுந்தார் மதிக்கம லம்மெழில் தந்தென விப்பிறப்பில்
அழுந்தா வகையெனை யாண்டவன் சிற்றம் பலமனையாய்
செழுந்தா தவிழ்பொழில் ஆயத்துச் சேர்க திருத்தகவே.

(திருக். கஉச)

தோழிவந்து கூடல்

என்பது, தலைமகனைப் பிரிந்த தலைமகள், தானும் பூக் கொய்யா நின்றுளாக, பிரிவாற்றுமையானும், பெருநாணினானும், தடுமாறி அரும்புகளைப் பறிப்ப, யான்நின் குழற்காம் பூக்கொண் டுவந்தேன், நீ விரல் வருந்த அரும்புகளைப் பறிக்க வேண்டா வெனத் தோழிவந்து கூடல்.

(வ - று.)

பொன்னனை யான்றில்லைப் பொங்கர வம்புன் சடைமிடைந்த
மின்னனை யானருள் மேவலர் போன்மெல் விரல்வருந்த
மென்னனை யாய்மறி யேபறி யேல்வெறி யார்மலர்கள்
இன்னனை யான்கொணர்ந் தேன்மணந் தாழ்குழற் கேய்வனவே.

(திருக். கஉஅ)

ஆடிடம்புகுதல்

என்பது, கொய்துவந்த மலருங் குழற்கணிந்து, இனிநின் சிறுமருங்குல் வருந்தாமல் மெல்லச்செல்வாயெனத், தோழி தலைமகளையுங்கொண்டு ஆடிடம்புகா நிற்றல்.

(வ - று.)

அறுகால் நிறைமல ரைம்பால் நிறையணிந் தேனணியார்
துறுகல் மலர்த்தொத்துத் தோகைதொல் லாயமெல் லப்புகுக
சிறுகால் மருங்குல் வருந்தா வகைமிக வெஞ்சிரத்நின்
உறுகால் பிழர்க்கரி யோன்புலி யூரன்ன ஒண்ணுதலே.

(திருக். கஉக)

தனிகண்டுரைத்தல்

என்பது, தலைமகள் ஆயத்தோடுத் தலைமகன்பாற் சென்று, ஈதெம்மூர், இதன்கண் யாம் அருந்தும் தேனும், கிழங்கும் பருகி, இன்று எம்மொடு தங்கி, நாளை நின்னூருக்குப் போவாயென, உலகியல் கூறுவாள்போன்று வரைவுபயப்பக் கூறல்.

(வ - று)

தழங்கும் அருவியெஞ் சீறூர் பெருமை இதுமதுவும்
கிழங்கு அருந்தி யிருந்தெம்மொ டின்று கிளர்ந்துகுன்றர்
முழங்குங் குரலைவ யிரமிற்கண் டேகுக முத்தன்முத்தி
வழங்கும் பிரானெரி யாடிதென் றில்லை மணிநகாக்கே.

(திருக். கஉஎ)

பருவங்கூறிவரவு விலக்கல்

என்பது, உலகியல் கூறுவாள்போன்று குறிப்பால் வரைவு கடாவி, இனி இவ்வாறு ழகாது வரைவொடு வருவாயெனத், தலைமகள் பருவங்கூறித் தலைமகனைத் தோழி வரவுவிலக்கல்.

(வ - று.)

தள்ளி மணிசந்த முந்திக் கறுகட் கரிமருப்புத்
தெள்ளி நறவம் திசைதிசை பாயும் மலைச்சிலம்பா
வெள்ளி மலையன்ன மல்விடை யோன்புரி பூர்விளங்கும்
வள்ளி மருங்குல் வருத்துவ போன்ற வனமுலையே.

(திருக். கஉஅ)

வரைவுடம்படாது மிகுத்துக் கூறல்

என்பது, பருவங்கூறி வரைவுகடாய தோழிக்கு, அமராவதி யினும் இம்மாதர்க்கு ஒப்பில்லையென நான்முகன் பயந்த பிள்ளையை யான் வரையுந்துணை எளிபளாக, நீ கூறுகின்றது என்னெனவெனத், தலைமகன் வரைவுடம்படாது தலைமகளை மிகுத்துக் கூறல்.

(வ - று.)

மாடஞ்செய் பொன்னக ருந்நிக ரில்லையிம் மாதர்க்கென்னப்
பீடஞ்செய் தமரை போற்பெற்ற பிள்ளையை உள்ளவரைக்
கூடஞ்செய் தென்பிறப் புக்கெடத் தில்லநின் தேர்க்கயிலைக்
கூடஞ்செய் சாரற் கொடிச்சியென் றேநின்று கூறுவதே.

(திருக். கஉக)

(கு - ரை.) கூடம் - புழை.

உண்மை கூறி வரைவுநடாதல்

என்பது, வரைவுடம்படாது மிகுத்துக் கூறிய தலைமகனுக்கு, எங்களுக்குத் தாயுந் தந்தையுங் கானவர், யாங்கள் புன்காப்போர் சிலர், நீர் வரைவு வேண்டாமையி னெம்மைப் புணர்ந்து கூறல் வேண்டுவதில்லையெனத், தோழி தங்களுண்மை கூறி வரைவுகடாதல்.

(வ - று.)

வேய்தந்த வெண்முத்தம் சிந்துபைங் கார்வரை மீன்பரப்பிச்
சேய்தந்த வானகம் மானுந் சிலம்பதன் சேவடிக்கே
ஆய்தந்த அன்புதந் தாட்கொண்ட அற்பல வன்மலையிற்
தாய்தந்தை கானவ ரேனலெங் காவலித் தாழ்வரையே.

(திருக். கஉ0)

வருந்தங்கூறி வரைவுநடாதல்

என்பது, உண்மை கூறி வரைவுகடாய தோழி, வரையாமை நினைந்து அவள் வருந்தா நின்றாள், வரைவென்று கருதுகியிற்

வருந்தா நின்றீர், இவ்வாறு நும் முள்ளம் மாறுபட நிகழ்தலின், இருவர்க்குமிடையே யான் வருந்தா நின்றேனெனத், தலைமகனுக்கு வருத்தங் கூறி வரைவுகடாதல்.

(வ - று)

மன்னுந் திருவருந் தும்வரை யாவிடின் நீர்வரைவென்
றுன்னு மதற்குத் தளர்ந்தொளி வாடுதிர் உம்பரெலாம்
பன்னும் புகழ்ப்பர மன்பரஞ் சோதிசிற் றம்பலத்தான்
பொன்னங் கழல்வழுத் தார்புல னென்னப் புலம்புவனே.

(திருக். கஉக)

தாயச்சங்கூறி வரைவுகடாதல்

என்பது, வருத்தங்கூறி வரைவுகடாய தோழி, எம்முடைய வன்னை அவள் மூலமுதிர்வுகண்டு, இவள் சிற்றிடைக்கொரு பற்றுக் கண்டிலேமென் றஞ்சா நின்றாள், இனி மகட் பேசுவார்க்கு மறுத்து கொடுக்கவுங் கூடுமெனத், தாயச்சங்கூறி வரைவுகடாதல்.

(வ - று.)

பனித்துண்டஞ் சூடும் படர்சடை யம்பல வன்னுலகம்
தனித்துண் டவன்றெழுந் தாளோன் கயிலைப் பயில்சிலம்பா
கனித்தொண்டை வாய்ச்சி கதிர்முலைப் பாரிப்புக் கண்டழிவுற்
றினிக்கண் டிலம்பற்றுச் சிற்றிடைக் கென்றஞ்சும் எம்மனையே.

(திருக். கஉஉ)

இற்செறிவறிவித்து வரைவுகடாதல்

என்பது, தாய் அச்சங்கூறி வரைவுகடாய தோழி, எம்மன்னை அவளை யுற்றுநோக்கித் திருமலைக்கட் புறம்போய் விளையாட வேண்டாவெனக் கூறினாள், இனி யிற்செறிப்பாள் போலுமென, இற்செறிவறிவித்து வரைவுகடாதல்.

(வ - று)

கவிளையாட நறவிளை வோர்ந்தெமர் மால்பியற்றும்
வெய்விளை யாடும்வெற் பாவுற்று நோக்கியெம் மெல்லியகிள்ப்
பேய்விளை யாடலென் றுளன்னை அம்பலத் தான்புரத்தில்
நீவிளை யாடநின் றேவிளை யாடி திருமலைக்கே.

(திருக். கஉக)

தமர்நினைவுரைத்து வரைவுகடாதல்

என்பது, இற்செறிவறிவித்து வரைவுகடாய தோழி, அவண் மூலை தாங்கமாட்டாது இடைவருந்துவதனைக் கண்டு, எமரிற்

செறிப்பாராக நினையா நின்றார், அயலவரு மகட்பேச நினைக்கின்ற ரெனத், தமர் நினைவுரைத்து வரைவுகடாதல்.

(வ - று.)

சுற்றுஞ் சடைக்கற்றைச் சிற்றம் பலவற் குருமாதுதொல்சீர்
கற்றும் அறியல ரிற்சிலம் பாவிடை நைவதுகண்
டெற்றுந் திரையின் னமிர்தை யினித்தமர் இற்செறிப்பார்
மற்றுஞ் சிலபல சீறூர் பகர்பெரு வார்த்தைகளே.

(திருக். கூச)

எதிர்கோள் கூறி வரைவுகடாதல்

என்பது, தமர் நினைவுரைத்து வரைவுகடாய தோழி, **நீ வரைவொடு** வரின், அன்னையும் ஐயன்மாரும் அயலவரும் **நின்வரவெதிர்** கொள்வார், இனிப் பல நினையாது, பலருமறிய வரைவொடு **வருவ**யாகவென, எதிர்கோள் கூறி வரைவுகடாதல்.

(வ - று.)

வழியும் அதுவன்னி யென்னின் மகிழும்வந் தெந்தையுநின்
மொழியின் வழிநிற்கும் சுற்றமுன் னேவயம் அம்பலத்துக்
குழியும்ப ரேத்துமெங் கூத்தன்குற் றாலமுற் றும்மறியக்
கெழியும்ம வேபணைத் தோள்பல என்னை கிளக்கின்றதே.

(திருக். கூ இ)

ஏறுகோள் கூறி வரைவுகடாதல்

என்பது, எதிர்கோள் கூறி வரைவுகடாய தோழி, எம் முடைய ஐயன்மார், அவளுடைய முலையின் பெருமையும் இடையின் சிறுமையும் கண்டு, எம்மூர்க்கண், விடையின் மருப்பைத் திருத்தி விட்டார், இனி யடுப்பன வறியேமென, ஏறுகோள் கூறி வரைவுகடாவா நிற்றல்.

(வ - று.)

படையார் கருங்கண்ணி வண்ணப் பயோதரப் பாரமுநுண்
இடையார் மெலிவுங்கண் டண்டர்கள் ஈர்முல்லை வேலியெம்மூர்
விடையார் மருப்புத் திருத்திவிட் டார்வியன் றென்புலியூர்
உடையார் கடவி வருவது போலும் உருவினதே.

(திருக். கஉ க)

அயலுரையுரைத்து வரைவுகடாதல்

என்பது, ஏறுகோள் கூறி வரைவுகடாய தோழி, அயலவர் நாணப் பொன் பூணப் புகுதாநின்றார், இதற்குத் தீவினையேன்

கூறுவதென்னே வெனத், தான் முன்னிகிலப் புறமொழியாக அயலுரை யுரைத்து வரைவுகடாவா நிற்றல்.

(வ - று.)

உருப்பணி யன்னகைக் குன்றென் றுரித்துர வுரெரித்த
நெருப்பணி அம்பலத் தாதியை உம்பர்சென் றேத்திநிற்குந்
திருப்பணி யூரனை யாகிப்பொன் நாகிப் புனைதல்செப்பிப்
பொருப்பணி முன்னிவ்றென் னுவிணை யேன்யான் புகல்வதுவே.

(திருக். கூஎ)

தினைமுதிர்வுரைத்து வரைவுகடாதல்

என்பது, அயலுரையுரைத்து வரைவுகடாய தோழி, இவ் வேங்கை தினைப்புனங் கொய்கவென்று சோதிடஞ் சொல்லகிலப் பொருந்தி, எம்மைக் கெடுவித்தது, இனி நமக் கேனல் விளையாட்டில்லை யெனச், சிறைப்புறமாகத் தலைமகளோடு கூறுவாள் போன்று தினை முதிர்வுரைத்து வரைவுகடாதல்.

(வ - று.)

மாதிடங் கொண்டம் பலத்துநின் றேன்வட வான்கயிகிலப்
போதிடங் கொண்டபொன் வேங்கை தினைப்புனங் கொய்கவென்று
தாதிடங் கொண்டுபொன் வீசித்தன் கள்வாய் சொரியநின்று
சோதிடங் கொண்டிதெம் மைக்கெடு வித்தது தூமொழி யே.

(திருக். கூஅ)

பகல்வரல்விலக்கி வரைவுகடாதல்

என்பது, சிறைப்புறமாகத் தினைமுதிர்வுரைத்து வரைவு கடாய தோழி, எதிர்ப்பட்டு கினறு, இப்பெருங்கணியார் நமக்கு நேரவுதகப் பருவஞ் சொல்லுவாராயிருந்தார், எம்மையன்மாரிவர் சொற்கேட்டுத் தினையைத் தடிவாராயிருந்தார், எமக்கு மினித் தினைப் புனங்காவலில்லை, நீரினிப் பகல்வரல் வேண்டாவெனப், பகல் வரல் விலக்கி வரைவுகடாதல்.

(வ - று.)

அடிவார் வயற்றில்லை யோன்மல யத்துநின் றும்வருதேன்
கடிவார் களிவண்டு நின்றலர் தூற்றப் பெருங்கணியார்
நொடிவார் நமக்கினி நேரதக யானுமக் கென்னுரைக்கேன்
அடிவார் தினையெமர் காவேம் பெருமவித் தண்புனமே.

(திருக். கூகூ)

தினையொடுவெறுத்து வரைவுகடாதல்

என்பது, பகல்வரல் விலக்கி வரைவுகடாய தோழி, இத்தினைக் காவல் தலைக்கீடாக நாமவினை யெதிர்ப்படலா மென்று நினைந்து தினையை வித்திக் காத்தோம்.. அதுபோய்த் தீவினையை வித்திக் காத்ததன் விளைவையு முண்டதாகி முடிந்ததெனச், சிறைப்புற மாகத் தினையொடு வெறுத்து வரைவுகடாதல்.

(வ - று.)

நினைவித்துத் தன்னையென் னெஞ்சத் திருந்தம் பலத்துநின்று
புனைவித்த ஈசன் பொதியின் மலைப்பொருப் பன்விருப்பின்
தினைவித்திக் காத்துச் சிறந்துநின் றேமுக்குச் சென்றுசென்று
வினைவித்திக் காத்து விளைவுண்ட தாகி விளைந்ததுவே.

(திருக். கசo)

வேங்கையொடு வெறுத்து வரைவுகடாதல்

எனபது, தினையொடு வெறுத்து வரைவுகடாய தோழி, இவ் வேங்கை யரும்பியஞான்றே யரும்பறக் கொய்தே மாயி னிவரின்று நம்மைக் கெடுப்பான் வேண்டி இத்தினை கெடமுயலு மாறு முண்டோ, யாமது செய்யப்பெற்றிலே மென, வேங்கை யொடு வெறுத்து வரைவுகடாதல்.

(வ - று)

கனைகடற் செய்தநஞ் சுண்டுகண் டார்க்கம் பலத்தமிழ்தாய்
வினைகெடச் செய்தவன் விண்டே ய்கயிலை மயிலனையாய்
நினைகெடச் செய்தன மாயின் நமைக்கெடச் செய்திடுவான்.
தினைகெடச் செய்திடு மாறுமுண் டோவித் திருக்கணியே.

(திருக் கசக)

இரக்கமுற்று வரைவுகடாதல்

என்பது, வேங்கையொடு வெறுத்து வரைவுகடாய தோழி, யாமவினை யெதிர்ப்படலா மென்றின்புற்றுவளர்த்த தினைத் திரளிப் புனத்தின்க ணில்லாவாயிருந்தன, இனி நாமவினை யெதிர்ப்படுமா றென்னெனவெனச், சிறைப்புறமாகத் தலைமகனுக் கிரக்க முற்று வரைவுகடாதல்.

(வ - று.)

வழுவா இயலெம் மலையர் விதைப்பமற் றியாம்வளர்த்த
கொழுவார் தினையின் குழாங்களெல் லாமெங் குழாம்வணங்குஞ்

செழுவார் கழற்றில்லைச் சிற்றம் பலவரைச் சென்றுநின்று
தொழுவார் விடைநிற்கி லேநிற்ப தாவதுத் தொல்புனத்தே.

(திருக். கசஉ)

(கு - ரை.) அம்பலவரைச் சென்று தொழுவாரிடத்து விடை நிற்கில், ஈண்டும் திடை நிற்கும் என்றது அவரிடத்தும் விடை நில்லா; இவ்விடத்தும் திடை நில்லா என்னும் கருத்துப் புலப்பட நின்றது.

கொய்தமைகூறி வரைவுகடாதல்

என்பது, இரக்கமுற்று வரைவுகடாய தோழி, எதிர்ப்பட்டு நின்று, இப்புனத்துத் தினையுள்ளதின்று தொடர்பறக் கொய்தற்றது, எமக்கும் இனிப்புனங்காவலில்லை, யாமுமக்கறிவுரைக்கின்றே மல்லேம், நீரே யறிவீரெனத் தினைகொய்தமை கூறி வரைவுகடாதல்.

(வ - று)

பொருப்பர்க்கி யாமொன்று மாட்டேம் புகலப் புகலெமக்காம்
விருப்பர்க் கியாவர்க்கும் மேலர்க்கு மேல்வரும் ஊரெரித்த
நெருப்பர்க்கு நீடம் பலவடக் கன்பர் குலநிலத்துக்
கருப்பற்று விட்டெனக் கொய்தற்ற தினைக் கடிப்புனமே.

(திருக். கசகூ)

பிரிவருமைகூறி வரைவுகடாதல்

என்பது, கொய்தமை கூறி வரைவுகடாய தோழி, இப்புனத்துப் பயின்ற கிளிகள் தமக்குத் துப்பாகாதகாலத்தும் தினைத்தாளை விடாதிரா நின்றன, நாம் போலுல் நங்காதலர் இவ்விடத்தே வந்து நம்மைத் தேடுவாரோ வெனச், சிறைப்புறமாகப் பிரிவருமை கூறி வரைவுகடாதல்.

(வ - று.)

பரிவுசெய் தாண்டம் பலத்துப் பயில்வோன் பரங்குன்றின்வாய்
அருவி செய் தாழ்புனத் தைவனங் கொய்யவும் இவ்வனத்தே
பிரிவுசெய் தாலரி தேகொள்க பேயொடும் என்னும்பெற்றி
இருவிசெய் தாளின் இருந்தின்று காட்டும் இளங்கிளியே.

(திருக். கசச)

(கு - ரை.) பேயொடு செய்தால் பிரிவு அரிது எனக் கூட்டுக. 'பேயோடாயினும் பிரிவின்னுதே' என்னும் வழக்கையுட் கொண்டது. 'பேயோடேனும் பிரிவொன்று இன்னு தென்பர் பிறரெல்லாம்' என்பது ஏழாம் திருமுறை.

மயிலொடுகூறி வரைவுகடாதல்

என்பது, பிரிவருமை கூறி வரைவுகடாய தோழி, பிரி வாற்றுமையோடு தலைமகளையுங் கொண்டு புனங்காவலேறிப் போகாகின்றுள், கணியார் நினைவின்று முடிந்தது, யாங்கள் போகின்றேம், இப்புனத்தொருவர் வந்தா லிங்குநின்றும் போன வர்கள், துணியாதன துணிந்து போனரென்று, அவர்க் குரைமின் என, மயிலொடு கூறி வரைவுகடாதல்.

(வ - து.)

கணியார் கருத்தின்று முற்றிற் றியாஞ்சென்றும் கார்ப்புனமே
மணியார் பொழில்காள் மறத்திர்கண் டீர்மன்னும் அம்பலத்தோன்
அணியார் கயிலை மயில்காள் அயில்வேல் ஒருவர்வந்தால்
துணியா தனதுணிந் தாரென்னும் நீர்மைகள் சொல்லுமினே.

(திருக். கசஇ)

வரும்புனங்கண்டு வருந்தல்

என்பது, தலைமகளுந் தோழியும் புனங்காவலேறிப் போகத், தலைமகன் புனத்திடைச்சென்று நின்று, இப்புனம் யாமுன் பயின்றதன்றே, இஃதிருக்கின்றவா றென்னேவென்று, ஆதன் பொலிவழிவு கூறித் தலைமகளைத் தேடி வருந்தல்.

(வ - து.)

பொதுவினிற் றீர்த்தென்னை யாண்டோன் புலியூ ரரன்பொருப்பே
இதுவெனில் என்னின் றிருக்கின்ற வாறெம் இரும்பொழிலே
எதுநுமக் கெய்திய தென்னுற் றனிரறை யீண்டருவி
மதுவினிற் கைப்புவைத் தாலொத்த வாமற்றிவ் வான்புனமே.

(திருக். கசசு)

பதிநோக்கி வருந்தல்

என்பது, வரும் புனத்திடை வருந்திய தலைமகன், இவ்வா றணித்தாயினும், நம்மாற் செய்யலாவ தொன்றில்லை யென்று, அவளிருந்த பதியை நோக்கித் தன்னெஞ்சோ டுசாவி வருந்தல்.

(வ - து.)

ஆனந்த மாக்கடல் ஆடுசிற் றம்பலம் அன்னபொன்னின்
றேனுந்து மாமலைச் சீறூ ரிதுசெய்ய லாவதில்லை
வானுந்து மாமதி வேண்டி யழுமழப் போலுமன்னெஞ்
நானுந் தளர்ந்தனன் நீயுந் தளர்ந்தனை நன்னெஞ்சமே.

(திருக். கசள)

(கு - ரை.) வான் உந்து மாமதி வேண்டி அழும் மழப் போலும் - வானின்கண் செலும் பெரிய மதியை வேண்டி அழும் குழவியைப் போல. நெஞ்சம் தலைவியின் பதியை நோக்கி விழைந்ததற்கு இஃது உவமை யாயிற்று. (உ0)

பகற்குறி முற்றும்.

உக. இரவுக்குறி

என்பது, பகற்குறி புணர்ந்து விலக்கப்பட்ட தலைமகன் நிதருண்டு வரை தலைத் தெளியாளுயின், பின்னையும், தோழியைத் தலைப்பட் டிரவுக்குறி வேண்டிச் சென்றெய்தல்.

என்ன, 'களவினுட் டவிர்ச்சி கிழவோற் கில்லை'

என்ருராகலின்,

அதன் வகை

அஅ. இரவுக்குறி வேண்டலு மாற்றருமை கூறலும்
நின்றுநெஞ் சுடைதலு நிலைகண்டு நோதலும்
உட்கோள் விளைதலு முட்கொண்டு விளைதலும்
குறியிடங் கூறலுங் குறியேற் பித்தலும்
இரவர வுரைத்தலு மேதங் கூறலும்
குறைதனை நேர்தலுங் குறைநயப் புரைத்தலும்
மயின்மே லிசைத்து வரவுணர்ந் துரைத்தலும்
தாய்துயி லறிதலுந் தலைவிதுயி லெடுத்தலும்
இடத்துய்த்து நீங்கலும் தளர்வகன் றுரைத்தலும்
மருங்கணை தலோடு முகங்கண்டு மகிழ்தலும்
பள்ளியிடத் துய்த்தலும் பள்ளியிடத் துய்த்து
வரைவு கடாவி வரவு விலக்கலும்
வரைவுடம் படாதாற்ரு துரைத்தலும்
அதரிடைச் செலவிற கிரக்கங் கூறலும்
இருளற நிலவு வெளிப்பட வருந்தலும்
வேறறக்குறி கூறலுங் கடலிடை வைத்துத்
துயரறி வித்தலும் தோழியு மின்றித்
தானே கிடந்து தனிமையுற் ருற்றும்
காம மிக்க கழிபடர் கிளவியும்
காப்புச்சிறை மிக்க கையறு கிளவியும்

ஆறுபார்த் துற்ற வச்சக் கிளவியும்
தன்னுட் கையா றெய்திடு கிளவியும்
நீலகண் டுரைத்தலு நெடுங்கடற் சேர்த்தலும்
அலரறி வித்தலு மாறைந் தோடு
மூன்று மிரவுக் குறியென மொழிப.

என்பது, இரவுக்குறி வேண்டல், வழியருமைகூறி மறுத்தல், இன்று நெஞ்சுடைதல், இரவுக்குறி நேர்தல், உட்கோள்வினைதல், உட்கொண்டு வினைதல், குறியிடங்கூறல், இரவுக்குறியேற்பித்தல், இரவரவுரைத்தல், ஏதங்கூறிமறுத்தல், குறைநேர்தல், குறை நேர்ந்தமைகூறல், வரவுணர்ந்துரைத்தல், தாய்துயிலறிதல், துயிலெடுத்துச்சேறல், இடத்துய்த்து நீங்கல், தளர்வகன் றுரைத்தல், மருங்கணைதல், முகங்கண்டுமகிழ்தல், பள்ளியிடத் துய்த்தல், வரவுவிலக்கல், ஆற்றுதுரைத்தல், இரக்கங்கூறி வரைவுகடாதல், நிலவு வெளிப்படவருந்தல், அல்லகுறியறிவித்தல், கடலிடைவைத்துத் துயரறிவித்தல், காமமிக்க கழிபடர் கிளவி, காப்புச்சிறைமிக்க கையறு கிளவி, ஆறுபாத்துற்றவச்சக் கிளவி, தன்னுட்கையாறெய்திடு கிளவி, நீலகண்டுரைத்தல், இரவுறு துயரங்கடலொடு சேர்த்தல், அலரறிவுறுத்தல், ஆகிய மூபபத்து மூன்று மிரவுக்குறியாம்.

இரவுக்குறிவேண்டல்

எனபது, பதிநோக்கி வருந்திய தலைமகன், இற்றை யிரவிற்கு யானுங்கள் சீறூர்க்கு விருந்து; என்னை யேற்றுக்கொள்வாயாக வென்று, தோழியை இரவுக்குறி வேண்டல்.

(வ · ரு.)

மருந்துநம் அல்லற் பிறவிப் பிணிக்கம் பலத்தமிர்தாய்
இருந்தனர் தன்றினின் றேங்கும் அருவிசென் றேர்திகழப்
பொருந்தின மேகம் புதைந்திருள் தூங்கும் புனையிறும்பின்
விருந்தினன் யானுங்கள் சீறூ ரதனுக்கு வெள்வளையே.

(திருக். கசை)

வழியருமைகூறி மறுத்தல்

என்பது, தலைமகனிரவுக்குறிவேண்ட, யாங்கள் வாழும் பதி ஏற்றிழிவுடைத்தாகலின், அவ்விடத்து நினக்குச் சென்றதக்கு மேற்றற்கரிதெனத், தோழி வழியருமைகூறி மறுத்தல்.

(வ - து.)

விசும்பினுக் கேணி நெறியன்ன சின்னெறி மேன்மழைதூங்
கசும்பினிற் றுன்னி அகநுழைந் தாலொக்கும் ஐயமெய்யே
இசும்பினிற் கிந்தைக்கும் ஏறற் கரிதெழில் அம்பலத்துப்
பசும்பனிக் கோடு மிகுந்தான் மலயத்தெம் வாழ்பதியே.

(திருக். கசகூ)

(சு - ரை.) இசும்பினில் - வழுக்கினால்.

நின்று நெஞ்சுடைதல்

என்பது, வழியருமை கூறக்கேட்ட தலைமகன், எய்தற்கரியாளை விரும்பி நீ மெலிகின்ற இதற்கு யானுற்றேனெனக் கூறி, தன திறந்துபாடு தோன்ற நின்று, தன்னெஞ்சுடைந்து வருந்தல்.

(வ - து.)

மாற்றேன் எனவந்த காலனை ஓல மிடவடர்த்த
கோற்றேன் குளிர்நில்லைக் கூத்தன் கொடுங்குன்றின் நீள்குடுமி
மேற்றேன் விரும்பும் முடவனைப் போல மெலியுநெஞ்சே
ஆற்றேன் அரிய அரிவைக்கு நீவைத்த அன்பினுக்கே.

(திருக். கஅ0)

இரவுக்குறி நேர்தல்

என்பது, தலைமக னெஞ்சுடைந்து வருந்தக்கண்டு, இவளிறந்துபடவும் கூடுமெனவுட்கொண்டு, நீயாளிகணிரைத்து நின்று யானைகளைத் தேடுமிரவின்கண் வந்து மீள்வேனென்ன நின்றாய், இதற்குத் தீவினையேன் இயம்புவதெவனென்று, மறுத்த வாய்பாட்டால் தோழி இரவுக்குறி நேர்தல்.

(வ - து)

கூளி நிரைக்கநின் றம்பலத் தாடி குரைகழற்கீழ்த்
தூளி நிரைத்த சுடர்முடி யோயிவள் தோணசையால்
ஆளி நிரைத்தடல் ஆனைகள் தேரும் இரவில்வந்து
மீளி யுரைத்தி வினையேன் உரைப்பதென் மெல்லியற்கே.

(திருக். கஅக)

உட்கோள் விலக்கல்

என்பது, இரவுக்குறி நேர்ந்த தோழி, தங்கள் நிலத்துமக்கள் கோலத்தினைப் வருதற்கவனுட்கொள்வது காரணமாக, இன்னும்

பிடத்தார் எம்மலர்குடி, எச்சாந்தணிந்து, எம்மரநிழலின்கீழ் விளையாடுபவெனத் தலைமகனை வினுதல்.

(ம - று.)

வரையன் றெருகால் இருகால் வளைய நிமிர்த்துவட்கார்
நிரையன் றழலெழ எய்துநின் றேன்றில்லை யன்ன நின்னூர்
விரையென்ன மென்னிழ லென்ன வெறியுறு தாதிவர்போ
துரையென்ன வோசிலம் பாநலம் பாவி யொளிர்வனவே.

(திருக். கஉஉ)

(சூ - ரை.) வரை - மேருமலை, வட்கார் - பகைவர்.

உட்கொண்டு வினுதல்

என்பது, கேட்டவினுவை யுட்கொண்டு, அந்நிலத்து மக்கள் கோலத்தனுய்ச் செல்வானுக, நின்னூரிடத்து இராப்பொழுது, நுமரெம்மலரைச் சூடி, எச்சாந்தை யணிந்து, என்ன மரநிழலின் கீழ்விளையாடுப வெனத், தலைமகன் தோழியை வினுதல்.

(ம - று)

செப்மல ராயிரந் தூய்க்கரு மால்திருக் கண்ணணியும்
மொய்ம்மலர் சார்ங்கழ லம்பலத் தோன்மன்னு தென்மலயத்
தெப்மலர் சூடிநின் றெச்சாந் தணிந்தென்ன நன்னிழல்வாய்
அம்மலர் வாட்கணல் லாயெல்லி வாய்நுமர் ஆடுவதே.

(திருக். கஉக)

குறியிடங் கூறல்

என்பது, உட்கொண்டு வினுவிய தலைமகனுக்கு, யாங்கள் சந்தனச் சாந்தணிந்து, சுணைக்காவிகள் சூடித், தோகைகள் துயிலும் வேங்கைப் பொழிற்கண் விளையாடுவேம், அவ்விடத்து நின்வர வறிய மயிலெழுப்புவாயாகவெனத், தோழி குறியிடங் கூறல்.

(ம - று.)

பணிவளர் கைம்மாப் படாத்தம் பலத்தரன் பாதம்விண்ணோர்
புணிவளர் சாரற் பொதியின் மலைப்பொலி சந்தணிந்து
சுணைவளர் காவிகள் சூடிப்பைந் தோகை துயில்பயிலுஞ்
சினைவளர் வேங்கைகள் யாங்கள்நின் சூடுஞ் செழும்பொழிலே.

(திருக். கஉச)

இரவுக்குறியேற் பித்தல்

என்பது, தலைமகனுக்குக் குறியிடங்கூறித் தலைமகளைழைச் சென்று, அந்திக் காலத்தோ ரலவன் றன் பெடையொடு பயிலக் கண்டு, ஒரு பெரியோன் வருத்தமிக்குச் சென்றான், அதற்குப்பின் அவன் சேர்துயிலறிந்திலேனெனத், தோழி அவனற்றுமை கூறித் தலைமகளை யிரவுக்குறி யேற்பித்தல்.

(வ - ரு)

மலவன் குரம்பையை மாற்றியம் மான்முதல் வானர்க்கப்பாற்
செலவன்பர்க் கோக்குஞ் சிவனறிலைக் கானலிற் சீர்ப்பெடையோ
டலவன் பயில்வது கண்டனர் கூர்ந்தயில் வேலுரவோன்
செலவந்தி வாய்க்கண் டனனென்ன தாங்கொன்மன் சேர்துயிலே.

(திருக. கஞ்சு)

(சூ - ரை.) மால் முதலானவர்களுக்குரிய நிலை, பதமுத்தி. அதற்கு அப்பாலுள்ள நிலை அந்தமில் இன்பத்து அழிவில் வீடு.

இரவரவுரைத்தல்

என்பது, அலவன்மேல் வைத்து, இரவுக்குறி யேற்பித்து முகங்கொண்டு, அது வழியாக நின்று, வேட்கை மிகவால், யானைகள் நடுங்கச் சிங்கந் திரியு மலைச்சாரியிடத்து வரவேண்டிச் சொன்னன், இதற்கியாஞ் செய்வதென்னை யெனத், தோழி தலைமகளுக்குத் தலைமகனிரவரவு உரைத்தல்.

(வ ரு.)

மோட்டங் கதிர்முலைப் பங்குடைத் தில்லைமுன் னேங்கழற்கே
கோட்டந் தருநங் குருமுடி வெற்பன் மழைகுழுமி
நாட்டம் புதைத்தன்ன நள்ளிரு ளாக நடுங்கச்சிங்கம்
வேட்டந் திரிசரி வாய்வரு வான்சொல்லு மெல்லியலே.

(திருக். கஞ்சு)

(சூ - ரை.) 'முன்னேன் கழற்கே கோட்டம் தரும் வெற்பன்' என்றது பொது நீக்கித் தன்னையும் தன்னையைக் குறித்தது. கோட்டம் - வணக்கம் குரு - நிறம். 'குருவும் கொழுவும் நிறனு மாமே' என்பது தொல்காப்பியம்.

ஏதங்கூறி மறுத்தல்

என்பது, தலைமக னிரவரவுகேட்ட தலைமகள், தனக்கவன் செய்த தலையளியும், உதவியும் நினைக்கின்ற உள்ளத்தளாய், அரிதிரண்டு நின்று யானை வேட்டனு செய்யும் வல்லிருட்கண், வள்ளலை வாவென்று கூறத் தகுமோவென, ஏதங்கூறி மறுத்தல்.

(வ - து.)

செழுங்கார் முழவதிர் சிற்றம் பலத்துப் பெருந்திருமால்
கொழுங்கான் மலரிடக் கூத்தயர் வோன்கழ லேத்தலர்போல்
முழுங்கா ரரிமுரண் வாரண வேட்டைசெய் மொய்யிருள்வாய்
வழுங்கா வதரின் வழுங்கென்று மோவின்மெம் வள்ளலையே.

(திருக். கஇள)

குறைநேர்தல்

என்பது, ஏதங்கூறி மறுத்த தலைமகள், அவளைற்றுணுகிய கிழமைகேட்டு, யான் புனலிடை வீழ்ந்து கெடப்புக, என்னுயிர் தந்த பெரியோர்க்குச் சிறியேன் சொல்லுவதறியேனென வுடம் பட்டு நேர்தல்.

(வ - து.)

ஓங்கு மொருவிட முண்டம் பலத்தும்பர் உய்யவன்று
தாங்கு மொருவன் தடவரை வாய்த்தழங் கும்மருவி
வீங்குஞ் சுனைப்புனல் வீழ்ந்தன் றழுங்கப் பிடித்தெடுத்து
வாங்கு மவர்க்கறி யேன்சிறி யேன்சொல்லும் வாசகமே.

(திருக். கஇஅ)

குறைநேர்ந்தமை கூறல்

என்பது, தலைமகளைக் குறைநயப்பித்துத் தலைமகனுழைச் சென்று, இற்றையாமத் தெல்லா நின்னருண்மேல் நிற்கவேண்டித் துன்பமுற்றேன், நீ கருதியதும் முடிந்ததெனத், தோழி தலைமகனுக்கவள் குறைநேர்ந்தமை கூறல்.

(வ - து.)

ஏனற் பசுங்கதி ரென்றூழ்க் கழிய எழிலியுன்னிக்
கானக் குறவர்கள் கம்பலை செய்யுமவ் வாரிலம்பா
யானிற்றை யாமத்து நின்னருண் மேனிற்க லுற்றுச்சென்றேன்
தேனக்க கொன்றையன் திலலையு ரூர்செல்லுஞ் செல்லல்களே.

(திருக். கஇக)

(கு - ரை.) என்றூழ் - கோடை. கம்பலை - (வெப்பம் நீங்கக் குறவாகள் செய்யும் மதய்வ வழிபாட்டு) ஆரவாரம். செல்லல் - துன்பம். 'செல்லல் இனனல இன்ன மைய' எனபது தொல்காப்பியம். யான் செல்லல் உறுமதால நின் குறை முடிந்தது எனறுள் தோழி.

வரவுணர்ந் துரைத்தல்

என்பது, தலைமகனுக்குக் குறைநயப்புக் கூறிய தோழி, யாம் விளையாடிய பொழிலிடத்து வேங்கை மேலுண்டாகிய மயிலினம் பின்புற்றுத் துயில்பெயரா நின்றன, இதற்குக் காரண மென்னை யென, அவன் வரவறிந்து கூறல்.

(வ - று.)

முன்னு மொருவ ரிரும்பொழின் மூன்றற்கு முற்றுமிற்றும்
பின்னு மொருவர்சிற் றம்பலத் தார்தரும் பேரருள்போல்
துன்னுமொ ரின்பமென் றேருகைதந் தோகைக்குச் சொல்லுவபோல்
மன்னு மரவத்த வாய்த்துயில் பேரு மயிலினமே.

(திருக். ஙஙo)

(கு - ரை.) உலகம் தோன்றுதற்கு முன்னும், கழிந்த பின்னும் ஒருவராக இருக்கும் பெருமான் எனவே 'ஈறிலாதவன் ஈசன் ஒருவனே' என்னும் கருத்துப் பெறப்பட்டது

தாய் துயிலறிதல்

என்பது, தலைமகன் வரவுணர்ந்து, தலைவியைக் கொண்டு செல்லக் கருதிய தோழி, யாம்விளையாடிய பொழிலிடத்தோர் யாணர் நின்றூசலுத் தள்ளியது, அதற்கியாஞ் செய்வதென்னெனவெனத் தாய் துயிலறிதல்.

(வ - று.)

கூடா ரரணெரி கூடக் கொடுஞ்சிலை கொண்டவண்டன்
சேடார் மதின்மல்லற் றில்லையன் ஞாயிறு கட்பெருவெண்
கோடார் கரிகுரு மாமணி யூசலிற் கோப்பழித்துத்
தோடார் மதுமலர் நாகத்தை நூக்குநஞ் சூழ்பொழிற்கே.

(திருக். ஙஙங)

துயிலெடுத்துச் சேறல்

என்பது, தாய் துயிலறிந்த தோழி, குவளைப் பூக்கண் மலர்கின்றன, அவை நின் கண்ணை யொக்குமாயிற் காண்பாயெனத் துயிலெடுத்துச் சேறல்.

(வ - று)

விண்ணுக்கு மேல்வியன் பாதலக் கீழ்விரி நீருடுத்த
மண்ணுக்கு நாப்ப ணையந்துதென் றில்லைநின் ரேன்மிடற்றின்

வண்ணக் குவளை மலர்கின் றனசின வாண்மிளிர் நின்
கண்ணெக்கு மேற்கண்டு காண்வண்டு வாழுங் கருங்குழலே.

(திருக். கசுஉ)

இடத்துய்த்து நீங்கல்

என்பது, துயிலெடுத்துக் கொண்டு சென்று, அக்குறியிடத்து நிறுத்தி, இவை நின் கண்கள் வென்ற குவளைமலர், இவற்றைக் காண்பாயாக, யான் நின் குழற்குச் சந்தனத்தழை கொய்யாநின்றே னெனத், தான் சிறிதகலல்.

(வ - று.)

நந்தி வரமென்னு நாரண னுண்மலர்க் கண்ணீற்கெழுகந்
தந்தி வரன்புலி யூரனை யாய்தடங் கண்கடந்த
இந்தி வரமிவை காணின் னிருள்சேர் குழற்கெழில்சேர்
சந்தி வரமுறி யும்வெறி வீயுந் தருகுவனே.

(திருக். கசுஙு)

(கு - ரை.) நந்தி : விளி, இறைவனின் திருப்பெயர்களுள் ஒன்று. இந்திவரம் - குவளை. சந்து - சந்தனமரம்.

தளர்வகன் றுரைத்தல்

என்பது, தோழி குறியிடை நிறுத்தி நீங்கத் தலைமகனெதிர்ப்பட்டு, நும்முடைய கமலக்கோயில், கதிரவன் வருவதன்முன், நீரே திறந்து கொண்டோ போந்தது, இப்பொழிலிடை வந்து நயந்தனென்னே வெனத், தலைமகளைப் பெரும்பான்மை கூறித் தன்றளர்வு நீங்கல்.

(வ - று.)

காமரை வென்றகண் ணேன்றில்லைப் பல்கதி ரோனடைத்த
தாமரை யில்லின் இதழ்க்கத வந்திறந் தோதமியே
பாமரை மேகலை பற்றிச் சிலம்பொதுக் கிப்பையவே
நாமரை யாமத்தென் னேவந்து வைகி நயந்ததுவே.

(திருக். கசுச)

மருங்கணைதல்

என்பது, பெரும்பான்மை கூறக் கேட்ட தலைமகள் பெருநாணினளாதலிற் றன்முன்னிற்கலாகாது நாணித் தலையிறைஞ்சிவருந்தச், சென்று சார்தலாகாமையின், தனதாதரவு மிகவாலவ்

வருத்தந் தணிப்பான் போன்று, முலையொடு முனிந்து, அவளிறு மருங்குல் தாங்கிச் சென்றணைதல்.

(வ - று.)

அகிலின் புகைவிம்மி யாய்மலர் வேய்ந்தஞ் சனமெழுநத்
தகிலுந் தனிவடம் பூட்டத் தகாள்சங் கரன்புலியூர்
இகலு மவரிற் றளருமித் தேம்ப லிடைஞெமியப்
புகிலு மிகவிங்ங னேயிறு மாக்கும் புணர்முலையே.

(திருக். கசுஙி)

முகங்கண்டு மகிழ்தல்

என்பது, மருங்கணை விறுதிக்கண் தலைமகள் முகமகிழ்ச்சி கண்டு, இவளும் யானும், மலரு மதியுமெனத், தலைமகன்றன் நயப்புணர்த்தி மகிழ்தல்.

(வ - று.)

அழுந்தே னரகத் தியானென் றிருப்பவந் தாண்டுகொண்ட
செழுந்தேன் றிகழ்பொழிற் றில்லைப் புறவிற் செறுவகத்த
கொழுந்தேன் மலர்வாய்க் குமுத மிவள்யான் குரூஉச்சுடர்கொண்
டெழுந்தாங் கதுமலர்த் தும்முயர் வானத் திளமதியே.

(திருக். கசுசு)

பள்ளியிடத் துய்த்தல்

என்பது, மலர்மதிமேல் வைத்துக் கூறி மகிழ்வுற்றுப் பிரிகின்றவன், இப்பொழிலிடை இனித் தனியேகின்று நீலப் பூக்களைக் கொய்யாது, நின்னரிய தோழியோடு உன்னுயத்திடைச் சென்று துயில் பயில்வா யெனத் தலைமகளைப் பள்ளியிடத்துச் செலுத்தல்.

(வ - று.)

சுரும்புறு நீலங்கொய் யற்றமி நின்று துயில்பயின்மோ
வரும்பெறற் றோழியொ டாயத்து நாப்பண் அமரரொன்னூர்
இரும்புறு மாமதில் பொன்னிஞ்சி வெள்ளிப் புரிசையன்றேர்
துரும்புறச் செற்றகொற் றத்தெம்பி ரான்றில்லைச் சூழ்பொழிற்கே.

(திருக். கசுஎ)

வரவு விலக்கல்

என்பது, தோழி தலைமகளைப் பள்ளியிடத்திற் சேர்த்திச் சென்று, இக்கல்லதர் இவள் காரணமாக, நினக்கெளிதாயிற்

ருயினும், இலை இவ் வாருழுகற்பாலையல்லை யென, வரைவு பயப்பக் கூறித் தலைமகனை வரவுவிலக்கல்.

(வ - று.)

நற்பகற் சோம னெரிதரு நாட்டத்தன் றில்லையன்ன
விற்பகைத் தோங்கும் புருவத் திவளின்மெய் யேயெளிதே
வெற்பகச் சோலையின் வேய்வளர் தீச்சென்று விண்ணினின்ற
கற்பகச் சோலை கதுவுங்கன் னுடலிக் கல்லதரே.

(திருக். கசுஅ)

ஆற்றுதுரைத்தல்

என்பது, வரைவுகடாவி வரவுவிலக்கின தோழிக்கு வரைவுடம் படாது, பின்னும் களவொழுக்கம் வேண்டி, யான்முன் செய்த தவப்பயனு லெனக் கெய்தலாம் வண்ணம், திருமகளிவ்வாறு கொடிச்சியா யிருந்தாளெனக் கருதியேயென தின்னுயிர் நிற்பது, இத்தன்மையாளை யான் வரையும் துணை யெளியளாக நீ கூறுகின்ற தென்னெனத், தலைமகன்றன தாற்றுமை தோன்றக் கூறல்.

(வ - று.)

பைவா யரவரை யம்பலத் தெம்பரன் பைங்கயிலைச்
செவ்வாய்க் கருங்கட் பெரும்பணைத் தோட்சிற் றிடைக்கொடியை
மொய்வார் கமலத்து முற்றிழை யின்றென்முன் னேத்தவத்தால்
இவ்வா றிருக்குமென் றேநிற்ப தென்று மென்னுயிரே.

(திருக். கஉக)

இரக்கங்கூறி வரைவுகடாதல்

என்பது, களவுவிரும்பி வரைவுடம்படாத தலைமகனுக்கு, நீ செல்லு நெறிக்க ணினக்கிடையூறுண்டா மென்னு மச்சத்தால், அவளழுதிரங்கா நின்றுளென்று, நீ சென்றமையறிய நின்குறி காட்டுவாயெனத், தலைமகள் இரக்கங் கூறி வரைவுகடாதல்.

(வ - று.)

பைவா யரவு மறியு மழுவும் பயின்மலர்க்கை
மொய்வார் சடைமுடி முன்னவன் றில்லையின் முன்னினைக்கால்
செவ்வாய் கருவயிர்ச் சேர்த்திச் சிறியாள் பெருமலர்க்கண்
மைவார் குவளை விடுமன்ன நீண்முத்த மாலைகளே.

(திருக். கஎ0)

நிலவு வெளிப்பட வருந்தல்

என்பது, இரக்கங்கூறி வரைவுகடாய தோழி, பிற்றை ஞான்று அவனிரவுக்குறியிடை வந்து நிற்ப, நிலவு வெளிப்பாட்டாற் சென்றெதிர்ப்பட மாட்டாமல் தாங்கள் வருந்தா நின்றமை சிறைப் புறமாக மதியொடு புலந்து கூறல்.

(வ - று.)

நாகந் தொழுவெழி லம்பல நண்ணி நடநவில்வோன்
நாக மிதுமதி யேமதி யேநவில் வேற்கையெங்கள்
நாகம் வரவெதிர் நாங்கொள்ளு நள்ளிருள் வாய்நறவார்
நாக மலிபொழில் வாயெழில் வாய்த்தநின் ஞயகமே.

(திருக். கஎக)

(கு - ரை.) நாகம் தொழ-பாம்புக் காலியுடைய பதஞ்சலி முனிவர் தொழ. நாகம் - மலை. மதியே : விளி. மதியே - (இங்ஙனம் வெளிப் படுதல்) நினக்கு அறிவாகுமோ? எங்கள் நாகம் - எங்கள் தலைவர். நறவுஆர் நாகம் - தேன் பொருந்திய நாக மலர்.

அல்லகுறி யறிவித்தல்

என்பது, குறியல்லாத குறியெதிர்ப்பட்டு மீண்டமை பிற்றை ஞான்று தலைமகன் சிறைப்புறம் வந்து நிற்பத், தோழி தலைமகளுக் குரைப்பாள் போன்று, அன்னத்தினமேல் வைத்தறிவித்தல்.

(வ - று)

மின்னங் கலருஞ் சடைமுடி. யோன்வியன் தில்லையன்னு
யென்னங் கலமர லெய்திய தோவெழின் முத்தந்தொத்திப்
பொன்னங் கலர்புனைச் சேக்கையின் வாய்ப்புலம் புற்றுமுற்று
மன்னம் புலரு மளவுந் துயிலா தழுங்கினவே.

(திருக். கஎஉ)

கடலிடைவைத்துத் துயரறிவித்தல்

என்பது, தலைமகளிரவுறு துயரம், தலைமகன் சிறைப்புறமாக, இவள் வாட நீ இரைகின்றாய், இது நினக்கு ஈன்றோவெனத் தோழி கடலொடு புலந்து கூறல்.

(வ - று.)

சோத்துன் னடியமென் றேரைக் குழுமித்தொல் வானவர்சூழ்ந்
தேத்தும் படிநிற்ப வன்றில்லை யன்னு ளிவடுவள

ஆர்த்துன் னமிழ்துந் திருவு மதியு மிழந்தவநீ
பேர்த்து மிரைப்பொழி யாய்பழி நோக்காய் பெருங்கடலே.

(திருக். களக)

(கு - ரை.) சோத்தம் - இழிந்தார் செய்யும் வழிபாடு.

இறைவனுக்கு அடிமை செய்வாரை வானவர் சூழ்ந்து ஏத்துவர். 'அமரர்கள் சூழ்ந்திருப்ப அளித்துப் பெருஞ் செல்வ மாக்கும் ஐயாறன் அடித்தலமே' என்பதும் காண்க.

காமமிக்க கழிபடர்கிளவி

என்பது, தலைமகனைக் காணலுற்று வருந்துகின்ற தலைமகள், தனது வேட்கை மிகவாற் கேளாதனவற்றைக் கேட்பனவாக விளித்து, நீங்களென்னை ஏதுற்று அழிகின்றீரென்று, ஒருகால் வினவுகின்றிலீர், இதுவோ நுங் காதன்மையென அவற்றொடு புலந்து கூறல்.

(வ - று.)

மாதுற்ற மேனி வரையுற்ற வில்லிதில் லைநகர்சூழ்
போதுற்ற பூம்பொழில் காள்கழி காளைழிற் புள்ளினங்காள்
ஏதுற்றழிகி யென் னீர்மன்னு மீர்ந்துறை வர்க்கிவளோ
தீதுற்ற தென்னுக்கென் னீரிது வோநன்மை செப்புமினே.

(திருக். களச)

காப்புச்சிறைமிக்க நையறுகிளவி

என்பது, காமமிக்கெதிர்ப்பட விரும்பிய தலைமகள், இவ் விடையீடெல்லா நீங்கி யொருவழியான் வந்தாராயினும், இஞ்ஞாளி குரைக்கின்றமையின், யாமிவரை யெதிர்ப்படுதலரிதெனக், காப்புச் சிறைமிக்கு வருந்தல்.

(வ - று.)

இன்னற வார்பொழிற் றில்லை நகரிறை சீர்விழவிற்
பன்னிற மாலைத் தொகைபக லம்பல் விளக்கிருளின்
துன்னற வுய்க்குமில் லோருந் துயிலிற் றுறைவர்மிக்க
கொன்னிற வேலொடு வந்திடின் ஞாளி குரைதருமே.

(திருக். களஎ)

ஆறுபார்த்துற்ற வச்சக்கிளவி

என்பது, சிறைப்புறமாகத் தலைமகளாற்றுமை கூறக்கேட்ட தலைமகன் குறியிடைச் சென்று நிற்பத், தோழி யெதிர்ப்பட்டு, நீ

கான்யாறு பலவு நீந்திக், கைவேல் துணையாக அஞ்சாது வந்தால், யாங்களிச் சோலையிடத்துண்டாகிய தெய்வத்துக் கஞ்சுவேம், அதனலிவ்விருளிடை வரற்பாலை யல்லையெனத், தங்கள் அச்சங் கூறிவரவுவிலக்கல்.

(வ - று.)

தாருறு கொன்றையன் றில்லைச் சடைமுடி யோன்கயிலை
நீருறு கான்யா றளவில நீந்திவந் தானினது
போருறு வேல்வயப் பொங்குரு மஞ்சுக மஞ்சிவருஞ்
சூருறு சோலையின் வாய்வரம் பாற்றன்று தூங்கிருளே.

(திருக். களசு)

தன்னுட்கையா றெய்திடுகிளவி

என்பது, தலைமகனைக் காணலுற்று வருந்திய தலைமகள், இக்கண்டல் சான்றுகக் கொண்டிப் புன்னையிடத்துக் கலந்த கள்வரை யிவ்விடத்து வரக்கண்டிலையோ; துணையில்லாதேற் கொரு சொல்லருளாயென்று, தன்னுட்கையாற்றை மதியொடு கூறி விளைதல்.

(வ - று.)

விண்டலை யாவர்க்கும் வேந்தர்வண் டில்லைமெல் லங்கழிசூழ்
கண்டலை யேகரி யாக்கன்னிப் புன்னைக் கலந்தகள்வர்
கண்டிலை யேவரக் கங்குலெல் லாமங்குல் வாய்விளக்கு
மண்டல மேபணி யாய்தமி யேற்கொரு வாசகமே.

(திருக். களஎ)

நிலைகண்டுரைத்தல்

என்பது, தலைமகள் தன்னுட் கையாற்றை மதியொடு கூறி வருந்துகின்றமை சிறைப்புறமாகக் கேட்ட தலைமகன், ஆற்றுமை யானில்வரைப்பின்கட் புகுந்து நிற்ப, தோழி யெதிர்ப்பட்டு, நீ யிவ்வாறு இல்வரைப்பின்கட் புகுந்து நின்றால், கண்டவர் நின்னைப் பெரும்பான்மை நினையாது மற்றொன்று நினைப்பாராயின், அவஞ்யிர் வாழுவல்லளோ, இனியிவ்வா றெழுகற்பாலை யல்லை யென, வரைவு தோன்றக் கூறல்.

(வ - று.)

பற்றொன்றி லார்பற்றுந் தில்லைப் பரன்பரங் குன்றினின்ற
புற்றொன் றரவன் புதல்வ னெனநீ புகுந்துநின்றால்

மற்றுன்று மாமல ரிட்டுன்னை வாழ்த்திவந் தித்தலன்றி
மற்றொன்று சிந்திப்ப ரேல்வல்ல ரோமங்கை வாழ்வகையே.

(திருக். களஅ)

(கு - ரை.) புற்று ஒன்று அரவன்—புற்றிலே பொருந்தி வாழுகின்ற பாம்பினை யணியாக வுடைய சிவபெருமான். புற்றொன்று என்பது சாதி பற்றி வந்தது.

இரவுறுதுயரங் கடலொடு சேர்த்தல்

என்பது, தலைமகனை யெதிர்ப்படமாட்டாது வருந்தின தலைமகள், இற்றை யிரவெல்லா மென்னைப்போல நீயுந் துன்ப முற்றுக் கலங்கித் தெளிகின்றிலை, இவ்விடத்து நின்னையுமகன்று சென்றருளரோவெனத், தானுறு துயரங் கடலொடு சேர்த்திக் கூறல்.

(வ - ரு.)

பூங்கணை வேளைப் பொடியாய் விழவிழித் தோன்புலியூர்
ஓங்கணை மேவிப் புரண்டு விழுந்தெழுந் தோலமிட்டுத்
தீங்கணைந் தோரல்லுந் தேரும் கலங்கிச் செறிகடலே
ஆங்கணைந் தார்நின்னை யும்முள ரோசென் றகன்றவரே.

(திருக். களக)

அலரறிவுறுத்தல்

என்பது, தலைமகளிரவுறு துயரங் கடலொடு சேர்த்தி வருந்து கின்றமை சிறைப்புறமாகக் கேட்ட தலைமகன், குறியிடைச்சென்று நிற்பத் தோழி யெதிர்ப்பட்டு, நின்னருளாய் நின்றவிது எங்களுக் கலராகாநின்றது, இனி யிவ்வாரெழுகாதொழிய வேண்டுமென, அலரறிவுறுத்தி வரவுவிலக்கல்.

(வ - ரு.)

அலரா யிரந்தந்து வந்தித்து மாலா யிரங்கரத்தால்
அலரார் கழல்வழி பாடுசெய் தாற்கள வில்லொளிகள்
அலரா விருக்கும் படைகொடுத் தோன்றில்லை யானருள்போன்
றலராய் விளைகின்ற தம்பல்கைம் மிக்கைய மெய்யருளே.

(திருக். களஅ0)

இரவுக்குறி முற்றும்.

உஉ. ஒருவழித்தணத்தல்

என்பது, இவ்வாறிரவுக்குறி புணர்ந்து அலரெழுந்ததென்று விலக்கப்பட்ட பின்னர்த் தெருண்டு வரைதலைத் தெளியாளுயின், அவ்வயரடங்கச், சிலநாளொருவழித்தணந்துறைதல், உடன் கொண்டுபோதல், தோழியான் வரைவு முடுக்கப்பட்டு அருங்கலம் விடுத்துவரைந்துகோடல் இம்மூன்றனு ளொன்று முறைமையாம்.

அவற்றுள், ஒருவழித் தணத்தல் வருமாறு

அதன் வகை

அசக. அகன்றணைவு கூறலும் மாழியோடு கேட்டலும்
ஆழியொடு புலத்தலும் மன்னமோ டாய்தலும்
ஆழிக் குரைத்தலும் கூட லிழைத்தலும்
சுடரோடு புலம்பலும் பொழுதுகண்டு மயங்கலும்
பையு ளெய்தலும் பரிவற் றுரைத்தலும்
அன்னமோ டழிதலும் வரவுணர்ந் துரைத்தலும்
வருத்தங் கூறலும் வருபதின் மூன்றும்
திருத்திய வொருவழித் திறனு குமே.

என்பது, அகன்றணைவு கூறல், கடலொடு வரவுகேட்டல், கடலொடு புலத்தல், அன்னமோடாய்தல், தேர்வழி நோக்கிக் கடலொடு கூறல், கூடலிழைத்தல், சுடரொடு புலம்பல், பொழுது கண்டு மயங்கல், பறவையொடு வருந்தல், பங்கயத்தோடு பரிவற் றுரைத்தல், அன்னமோடழிதல், வரவுணர்ந்துரைத்தல், வருத்த மிகுதி கூறல் ஆகிய பதின்மூன்றும் ஒருவழித் தணத்தலாம்.

அகன்றணைவு கூறல்

என்பது, அலரறி வுறுத்ததோழி, இத்தன்மையை நீனைந்து நீ சிலநாள் அகன்றணைவையாயின், அம்பலுமலரு மடங்கி, இப் பொழுதே யவளுக்குப் பழியில்லையா மெனத், தலைமகனுக்கிசைய அகன்றணைவு கூறல்.

(வ - று)

புகழும் பழியும் பெருக்கிற் பெருகும் பெருகிநின்று
நிகழும் நிகழா நிகழ்த்தினல் லாலிது நீநினைப்பின்
அகழும் மதிலும் அணிநில்லை யோவடிப் போதுசென்னித்
திகழு மவர்செல்லல் போலில்லை யாம்பழி சின்மொழிக்கே.

(திருக். கஅக)

கடலொடு வரவுகேட்டல்

என்பது, ஒருவழித்தணத்தற் காற்றாது வருந்திய தலைமகள், நம்மை விட்டுப் போனவர் மீண்டுவரும் பரிசுனக் குரைத்தாரோ வெனக், கடலொடு தலைமகன் வரவுகேட்டல்.

(வ - று.)

ஆரம் பரந்து திரைபொரு நீர்முகில் மீன்பரப்பிச்
சீரம் பரத்திற் றிகழ்ந்தொளி தோன்றுந் துறைவர்சென்றூர்
போரும் பரிசு புகன்றன ரோபுலி யூர்ப்புனிதன்
சீரம்பர் சூற்றியெற் றிச்சிறந் தார்க்குஞ் செறிகடலே.

(திருக். கஅஉ)

கடலொடு புலத்தல்

என்பது, கடலொடு வரவுகேட்ட தலைமகள், தனக்கு வாய் திறவாமையின், என் வளை கொண்டு போனர் திறம் யான் கேட்க, நீ கூறு தொழிகின்ற தென்னெனப், பின்னுமக் கடலொடு புலந்து கூறல்.

(வ - று.)

பாணிகர் வண்டினம் பாடப்பைம் பொன்றரு வெண்கிழிதம்
சேணிகர் காவின் வழங்கும்புன் னைத்துறைச் சேர்ப்பரிங்கள்
வாணிகர் வெள்வளை கொண்டகன் றார்திறம் வாய்திறவாய்
பூணிகர் வாளர வன்புலி யூர்சூற்றும் போர்க்கடலே.

(திருக். கஅங)

அன்னமோடாய்தல்

என்பது, கடலொடு புலந்து கூறிய தலைமகள், புன்னையொடு புலந்து அகன்றவர் அகன்றே யொழிவரோ, யானறிகிலேன், நீயா யினும் சொல்லுவாயாகவென, அன்னமோடாய்ந்து வரவு கேட்டல்.

(வ - று)

பகன்ற மரைக்கண் கெடக்கடந் தோன்புலி யூர்ப்பழனத்
தகன்ற மரையன்ன மேவண்டு நீல மணியணிந்து
முகன்றழ் குழைச்செம்பொன் முத்தணி புன்னையின் னும்முரையா
தகன்றூர் அகன்றே யொழிவர்கொல் லோநம் அகன்றுறையே.

(திருக். கஅச)

தேர்வழி நோக்கிக் கடலொடு கூறல்

என்பது, அன்னமொடு வரவுகேட்ட தலைமகள், அதுவும் வாய்திறவாமையின், இனி அவர் வருகின்றாரல்லர், எம்முயிர்க்குப் பற்றுக்கோடு இனியிதுவே, இதனை நீ யழியா தொழிவாயென, அவன் சென்ற தேர்வழி நோக்கிக் கடலொடு கூறல்.

(வ - று.)

உள்ளும் உருகி யுரோமஞ் சிலிர்ப்ப வுடையவனுட்
கொள்ளு மவரிலொர் கூட்டந்தந் தான்குனிக் கும்புலியூர்
வில்லும் பரிசுசென் றூர்வியன் றேர்வழி தூரல்கண்டாய்
புள்ளும் திரையும் பொரச்சங்கம் ஆர்க்கும் பொருகடலே.

(திருக். கஅஇ)

கூடலிழைத்தல்

என்பது, தேர்வழி நோக்கிக் கடலொடு கூறிய தலைமகள், இம்மணற் குன்றின்கண் நீத்தகன்ற வள்ளலே, உள்ளத்தை நெகிழ்த்து இவ்விடத்தே தரவல்லையோ வெனக், கூடற்றெய்வத்தை வாழ்த்திக் கூடலிழைத்து வருந்தல்.

(வ - று.)

ஆழி திருத்தும் புலியூ நடையான் அருளினளித்
தாழி திருத்தும் மணற்குன்றின் நீத்தகன் றூர்வருகென்
றூழி திருத்திச் சுழிக்கணக் கோதிநை யாமலைய
வாழி திருத்தித் தரக்கிற்றி யோவள்ளம் வள்ளலையே.

(திருக். கஅசு)

(கு - று.) ஆழி திருத்தும் - கடல் சூழ்ந்த உலகைத் திருத்தும். ஆழி திருத்தும் - கடல் திருத்துகின்ற. ஆழி திருத்தி - கூடல் இழைத்து.

சுடரொடு புலம்பல்

என்பது, கூடலிழைத்து வருந்துகின்ற தலைமகள், துறைவர் போக்கு மவர் சூளரவு மென்னை வருத்துகின்றன, அதன் மேல்யீயும் போகாகின்றாய், யானினி யுய்யுமா றென்னெனச் செல்லாகின்ற சுடரொடு புலம்பல்.

(வ - று.)

கரர்த்தரங் கந்திரை தோணி சுருக்கடன் மீனெறிவோர்
போர்த்தரங் கந்துறை மானுந் துறைவர்தம் போக்குமிக்க

தீர்த்தரங் கன்றில்லைப் பல்பூம் பொழிற்செப்பும் வஞ்சினமு
மார்த்தரங் கஞ்செய்யு மாலுய்யு மாறென்கொ லாழ்சுடரே.

(திருக். கஅஎ)

பொழுதுகண்டு மயங்கல்

என்பது, சுடரொடு புலம்பா நின்றவள், கதிரவன் மறைந் தான், காப்பவர் சேயர், அதன்மே லிவ்விடத்து மீனுண்ட அன்னங் களும் போய்த் தஞ் சேக்கைகளே யடைந்தன, இனி யாறற்றுமா றென்னே வென, மாலைப்பொழுது கண்டு மயங்கல்.

(வ - று.)

பகலோன் கரந்தனன் காப்பவர் சேயர்பற் றற்றவர்க்குப்
புகலோன் புகுநர்க்குப் போக்கரி யோனெவ ரும்புகலத்
தகலோன் பயிறில்லைப் பைம்பொழிற் சேக்கைகள் நோக்கினவா
லகலோங் கிருங்கழி வாய்க்கொழு மீனுண்ட வன்னங்களே.

(திருக். கஅஅ)

பறவையொடு வருந்தல்

என்பது, பொழுதுகண்டு வருந்துகின்ற தலைமகள், இங்ஙனே மைக் கண்ணும் என் உள்நோயறியாது கண்ணேட்டமின்றித் தம் வயிறேம்புகின்றன, இஃதென்னே பாவமென, வண்டானப் பறவையொடு வருந்திக் கூறல்.

(வ - று.)

பொன்னும் மணியும் பவளமும் போன்று பொலிந்திலங்கி
மின்னுஞ் சடையோன் புலியூர் விரவா தவரினுண்ணெய்
இன்னும் அறிகில வாலென்னே பாவம் இருங்கழிவாய்
மன்னும் பகலே மகிழ்ந்திரை தேரும்வண் டானங்களே.

(திருக். கஅக)

பங்கயத்தோடு பரிவுற்றுரைத்தல்

என்பது, பறவையொடு வருந்துகின்றவள், இவை என் வருத்தங் கண்டிவள் வருந்தாமல் விரையவர வேண்டுமென்று ஞாயிற்றை நோக்கித் தங் கைகுவியா நின்றன, ஆதலா லென் மாட் டன்புடையன போலுமெனப், பங்கயத்தோடு பரிவுற்றுக் கூறல்.

(வ - று.)

கருங்கழி காதற்பைங் கானலின் தில்லையெங் கண்டர்விண்டார்
ஒருங்கழி காதர மூவெயில் செற்றவொற் றைச்சிலைசூழ்ந்
தருங்கழி காதம் அகலுமென் றுழென் றலந்துகண்ணீர்
வருங்கழி காதல் வளைசங்கள் கூப்பும் மலர்க்கைகளே.

(திருக். ககo)

அன்னமோ டழிதல்

என்பது, பங்கயத்தை நோக்கிப் பரிவுறு கின்றவள், உலக மெல்லாந் துயிலாகின்ற இங்கிலைமைக் கண்ணும், யான்றுயி லாமைக்குக் காரணமாகிய என்வருத்தத்தைச் சென்று அவர்க்குச் சொல்லாது, தான்றன் சேவலைப் பொருந்திக் கவற்சியின்றித் துயில்கின்றதென, அன்னத்தோ டழிந்து கூறல்.

(வ - று.)

மூவல் தழீஇய அருண்முத லோன்றில்லைச் செல்வன்முந்நீர்
நாவல் தழீஇயவிந் நானிலந் துஞ்சும் நயந்தவின்பச்
சேவல் தழீஇச்சென்று தான்றுஞ்சும் யான்றுயி லாச்செயிரெம்
காவல் தழீஇயவர்க் கோதா தளிய களியன்னமே.

(திருக். ககக)

வரவுணர்ந் துரைத்தல்

என்பது, தலைமக ளன்னத்தோ டழிந்து வருந்தாநிற்பத், தலைமக ளொருவழித் தணர்ந்து வந்தமை சிறைப்புறமாக வுணர்ந்த தோழி, வளைகள்நிறுத்த நிற்கின்றன வில்லை, நெஞ்சம் நெகிழ்ந் துருகா நின்றது, கண்கள் துயிலின்றிக் கலுழா நின்றன, இவை யெல்லாம் யான் சொல்ல வேண்டுவதில்லை, நீயே கண்டாய், இதனைச் சென்று அவர்க்குக் கூறுவாயென, மதியொடு கூறல்.

(வ - று.)

நில்லா வளைநெஞ்சம் நெக்குரு குந்நெடுங் கண்டுயிலக்
கல்லா கதிர்முத்தங் காற்று மெனக்கட் டுரைக்கதில்லைத்
தொல்லோன் அருள்களில் லாரிற்சென் றூர்சென்ற செல்லல்கண்டாய்
எல்லார் மதியே யிதுநின்னை யானின் றிரக்கின்றதே.

(திருக். ககஉ)

வருத்தமிகுதி கூறல்

என்பது, சிறைப்புறமாக மதியொடு வருத்தங் கூறிச் சென்றெதிர்ப்பட்டு, வலஞ்செய்துநின்று, நீ போய் அவள்படுகின்ற

வருத்த மென்னுற் கூறுமளவல்லவென, வரைவுதோன்றத் தலைமகள் வருத்தமிகுதி தோழி கூருநிற்றல்.

(வ - று.)

வளருங் கறியறி யாமந்தி நின்றுமம் மர்க்கிடமாய்த்
தளருந் தடவரைத் தண்சிலம் பாதன தங்கமெங்கும்
விளரும் விழுமெழும் விம்மும் மெலியும்வெண் மாமதிநின்
ருளிருஞ் சடைமுடி யோன்புலி யூரன்ன ஒண்ணுதலே.

(திருக். ககக)

ஒருவழித்தணத்தல் முற்றும்.

உங. உடன் போக்கு

என்பது, இவ்வாறு ஒருவழித் தணத்தல் நிகழாதாயின் உடன்போக்கு நிகழும்.

அதன்விரி

அரி ம. பருவங் கூறலும் படைத்து மொழிதலும்
மருவமர் கோதையை மகட்பேச் சுரைத்தலும்
பொன்னணி வுரைத்தலும் பொருள்வில கூறலும்
அன்னமென் னடையா ளருமைகேட் டழிதலும்
தளர்வறிந் துரைத்தலுந் தாழ்குழ லாடன்
உளனினை வுரைத்தலு முடன்கொண்டு சேறலுக்
கருமை யுரைத்தலு மாதரங் கூறலும்
மருவிய தடங்கயல் வாழா ளென்றலும்
பொருவரு கற்பின் புனைநல னுரைத்தலும்
துணிந்தமை கூறலுந் துணிவு கேட்டலும்
துணிவறி வித்தலுந் தோல்லைநாண் விடலும்
துணிவெடுத் துரைத்தல்கொண் டகலென வுரைத்தலும்
அடிவழி நினைந்துநின் றவனுளம் வாடலும்
கொடியிடை யாளைக் கொண்டுசென் றுய்த்தலும்
ஓம்படுத் துரைத்தலும் வழிப்படுத் துரைத்தலும்
தேம்படு கோதையைத் திறலடு வேலோன்
பையக்கொண் டேகலும் பயங்கெட வுரைத்தலும்
மையமர் கண்ணியை வழியயர் வகற்றலும்

நெறிநனி விலக்கலும் நெறியிடைக் கண்டவர்
செழிவெடுத் துரைத்தலுஞ் சேயிழை யாளுடன்
வழிவிலை யாடலும் வழியெதிர் வருவோர்
எழினக ரணிமை யிதுவென வுரைத்தலும்
நகரங் காட்டலு நகரிடைப் புக்குப்
பதிபரி சுரைத்தலும் பாங்கியைக் கிட்டி
மதிநுத லாளை வளர்த்தவள் கேட்டலும்
அறத்தொடு நிற்றலு மதுகேட் டழுங்கலும்
திறப்பா டுன்னிச் செவிலிகவன் றுரைத்தலும்
அடிநினைந் திரங்கலு மதுதாய்க் குரைத்தலும்
மடவரல் போகவா டியுரைத்தலும்
கிளிமொழிக் கிரங்கலுங் கிளர்சுடர்ப் பராய்தலும்
அளிபெறு பருவத்திற் கவள்கவன் றுரைத்தலும்
நாடத் துணிதலு நற்றுய் நயந்தவர்
கூடக் கரையெனக் கொடிக்குறி பார்த்தலும்
சோதிடங் கேட்டலுஞ் சுவடுகண் டறிதலும்
ஏதமுற் றவைகண் டிரங்கி யுரைத்தலும்
வேட்ட மாதரைக் கண்டு விளவலும்
புறவொடு புலத்தலுங் குரவொடு வருந்தலும்
திறலருந் தவத்தொடு செல்லா நின்ற
மாவிர தியரை வழியிடை விளவலும்
வேதியர் தம்மை விரும்பி விளதலும்
புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி விளவலும்
மணந்தரு குழலாள் மன்னிய நிலையொடு
வேங்கை பட்டது கண்டு வியத்தலும்
ஆங்கவ ரியைபணி யவட்கெடுத் துரைத்தலும்
மீள வுரைத்தலு மீளா தவளுக்
கூழ்முறை யிதுவென வுலகியல் புரைத்தலும்
அழுங்குதாய்க் குரைத்தலு மாகிய வெல்லாம்
உழுங்கோலே வேலோ னுடன்போக்கு விரியே.

என்பது, பருவங்கூறல், மகட்பேச்சுரைத்தல், பொன்னணி வுரைத்தல், அருவிலையுரைத்தல், அருமை கேட்டழிதல், தளர்வறிந் துரைத்தல், குறிப்புரைத்தல், அருமையுரைத்தல், ஆதரங்கூறல், இறந்துபாடுரைத்தல், கற்புநலனுரைத்தல், துணிந்தமைகூறல்,

துணிவொடு விளவல், போக்கறிவித்தல், நாணிழந்து வருந்தல், துணிவெடுத்துரைத்தல், குறியிடங்கூறல், அடியொடு வழிநினைந்தவனுளம்வாடல், கொண்டுசென்றுய்த்தல், ஓம்படுத்துரைத்தல், வழிப்படுத்துரைத்தல், மெல்லக்கொண்டேகல், அடலெடுத்துரைத்தல், அயர்வகற்றல், நெறிவிலக்கிக்கூறல், கண்டவர் மகிழ்தல், வழிவிளையாடல், நகரணிமை கூறல், நகர்காட்டல், பதி பரிசுரைத்தல், செவிலிதேடல், அறத்தொடு நிற்றல், கற்புநிலைக் கிரங்கல், கவன்றுரைத்தல், அடிநினைந்திரங்கல், நற்றாய்க் குரைத்தல், நற்றாய் வருந்தல், கிளிமொழிக்கிரங்கல், சுடரோடிரத்தல், பருவநினைந்து கவறல், நாடத்துணிதல், கொடிக்குறி பார்த்தல், சோதிடங் கேட்டல், சுவடு கண்டறிதல், சுவடுகண்டிரங்கல், வேட்டமாதரைக் கேட்டல், புறவொடு புலத்தல், குரவொடு வருந்தல், விரதியரை விளவல், வேதியரை விளைதல், புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி விளவல், வியந்துரைத்தல், இயைபெடுத்துரைத்தல், மீளவுரைத்தல், உலகியல்புரைத்தல், அழுங்கு தாய்க்குரைத்தல் ஆகிய ஐம்பத்தாறு முடன்போக்காம்.

பருவங்கூறல்

என்பது, அலரறிவுறுத்த தோழி, இவள்முலை முதிர்வு கண்டமையால் மகட்பேசுவார்க்கு எமர் மாறுது கொடுக்கவுங்கூடும், அதுபடாமனிற்ப, நீ முற்பட்டு வரைவாயாகவெனத், தலைமகனுக்குத் தலைமகள் பருவங் கூறல்.

(வ · று.)

ஓராகம் மிரண்டெழி லாயொளிர் வோன்றில்லை யொண்ணுதலங்
கராகம் பயின்றமிழ் தம்பொதிந் தீர்ஞ்சுணங் காடகத்தின்
பராகம் சிதர்ந்த பயோதரம் இப்பரி சேபணைத்த
இராகங்கண் டால்வள்ள லேயில்லை யேயெமர் எண்ணுவதே.

(திருக். ககச)

மகட்பேச்சுரைத்தல்

என்பது, பருவங்கூறிய தோழி, படைத்துமொழியான் அயலவர் பலரும் மேன்மேலும் பொன்னணியக் கருதாநின்றார், நீ விரைய வரைவொடு வருவாயாதல், அன்றி யுடன்கொண்டு போவாயாதல், இரண்டினுளொன்று துணிந்து செய்யக் கருதுவாய், அதனை யின்றே செய்வாயாகவெனத், தலைமகனுக்கு அயலவர் வந்து மகட்பேசல் கூறல்.

(வ - று)

மணியக் கணியும் அரனஞ்சம் அஞ்சி மறுகிவிண் ணேர்
பணியக் கருணை தரும்பரன் றில்லையன் னுடிறத்துத்
துணியக் கருதுவ தின்றே துணிதுறை வாநிறைபொன்
அணியக் கருதுகின் றூர்பலர் மேன்மேல் அயலவரே.

(திருக். ககஙி)

பொன்னணிவுரைத்தல்

என்பது, படைத்துமொழியான் மகட்பேசல் கூறின தோழி, அறுதியாக முன்றிற்கணின்று, முரசொடு பணில முழங்கக் காப்பணிந்து பொன்னணியப் புகுதாநின்றூர் இனி நின்கருத் தென்னெனவெனத் தலைமகனுக் கயலவர் பொன்னணிவுரைத்தல்.

(வ - று.)

பாப்பணி யோன்றில்லைப் பல்பூ மருவுசில் லோதியைநற்
காப்பணிந் தார்பொன் னணிவார் இனிக்கமழ் பூந்துறைவ
கோப்பணி வான்றேர்ய் கொடிமுன்றில் நின்றவை யேர்குழுமி
மாப்பணி லங்கள் முழங்கத் தழங்கும் மணமுரசே.

(திருக். ககஙு)

அருவிலையுரைத்தல்

என்பது, பொன்னணிவுரைப்பக் கேட்ட தலைமகன், யான் வரைவொடு வருதற்கு நீ முலைப்பரிசங் கூறுவாயாகவென, எல்லா வுலகமு நல்கினும், எமர் அவளுடைய சிறிய விடைக்கு விலையாகச் செப்பலொட்டார் இனிப் பெரிய முலைக்கு நீ விலை கூறுவதென்னே வெனத், தோழி விலையருமை கூறல்.

(வ - று.)

எலும்பால் அணியிறை யம்பலத் தோனெல்லை செல்குறுவோர்
நலம்பா வியமுற்றும் நல்கினும் கல்வரை நாடரம்ம
சிலம்பா வடிக்கண்ணி சிற்றிடைக் கேவிலை செப்பலொட்டார்
கலம்பா வியமுலை யின்விலை யென்னீ கருதுவதே.

(திருக். ககள)

அருமைகேட்டழிதல்

என்பது, அருவிலை கேட்ட தலைமகன், நீ யவளதருமை கருதாது அவளதவயவங்களி லுண்டாகிய நயத்தைப்பற்றி விடாது நடுங்காநின்றாய், இனி மதியைப்பிடித்துத் தரவேண்டி யழுமறியாக்

குழவியைப்போலக் கிடந்தரற்றுவாயாகவெனத், தன்னெஞ்சோடு அழிந்து கூறல்.

(வ - று.)

விசும்புற்ற திங்கட் கழுமமப் போன்றினி விம்மிவிம்மி
யசும்புற்ற கண்ணே டலருய் கிடந்தரன் றில்லையன்னாள்
குயம்புற் றரவிடை கூரெயிற் றாறல் குழன்மொழியின்
னயம்பற்றி நின்று நடுங்கித் தளர்கின்ற நன்னெஞ்சமே.

(திருக். ககஅ)

தளர்வறிந்துரைத்தல்

என்பது, வரைவு மாட்சிமைப்படாதாயின், நீ யவளை யுடன் கொண்டுபோ வென்பது பயப்பக், கடலையுங் கானலையு நோக்கிக் கண்ணீர் கொண்டு, தன்னுயத்தாரை யெல்லாம் புல்லிக்கொண் டாள், அவள் கருதிய தின்னதென்று தெரியாதெனத் தோழி தலைமகள் வருத்தங் கூறல்.

(வ - று.)

மைதயங் குந்திரை வாரியை நோக்கி மடலவிழ்பூங்
கைதையங் கானலை நோக்கிக்கண் ணீர்கொண் டெங் கண்டர்தில்லைப்
பொய்தயங் குந்துண் மருங்குனல் லாரையெல் லாம்புல்லினாள்
பைதயங் கும்மர வம்புரை யும்மல்குற் பைந்தொடியே.

(திருக். ககக)

குறிப்புரைத்தல்

என்பது, வருத்தங் கூறிப் போக்குணர்த்தி, அது வழியாக நின்று, என்னைப் புல்லிக்கொண்டு தன்னுடைய பூவையையும் பந்தையும் பாவையையுங் கிளியையும், இன்றென்கைத் தந்தாள், அது நின்னை டுடன்போதலைக் கருதிப்போலு மெனத், தலை மகனுக்குத் தலைமகள் குறிப்புரைத்தல்.

(வ - று.)

மாவைவந் தாண்டமென் னோக்கிதன் பங்கர்வண் டில்லைமல்லல்
கோவைவந் தாண்டசெவ் வாய்க்கருங் கண்ணி குறிப்பறியேன்
பூவைதந் தாள்பொன்னம் பந்துதந் தாளென்னைப் புல்லிக்கொண்டு
பாவைதந் தாள்பைங் கிளியளித் தாளின்றென் பைந்தொடியே.

(திருக். உ00)

அருமையுரைத்தல்

என்பது, குறிப்புரைத்துப் போக்குடம்படுத்திய தோழிக்குக், கொங்கை பொருது நடுங்குமிடையை யுடையாளது மெல்லிய அடிக்கு, யான் செல்லும் வெஞ்சுரந் தகாது, அதன்மேலு மெம்பதி யுஞ் சேய்த்து, அதனுல் நீ கருதுகின்ற காரியமிகவு மருமையுடைத் தெனத், தலைமகன் போக்கருமை கூருநிற்றல்.

(வ - று.)

மெல்லியல் கொங்கை பெரியமின் னேரிடை மெல்லடிபூக்
கல்லியல் வெம்மைக் கடங்கடுந் தீக்கற்று வானமெல்லாம்
சொல்லிய சீர்ச்சுடர்த் திங்களங் கண்ணித்தொல் லோன்புலியூர்
அல்லியங் கோதைநல் லாயெல்லை சேய்த்தெம் அகனகரே.

(திருக். உ0க)

ஆதரங்கூறல்

என்பது, போக்கருமை கூறிய தலைமகனுக்கு, நின்னோடு போகப்பெறின், அவளுக்கு வெஞ்சுரமும் தண்சுரமாம், நீ யருமை கூறுது அவளைக் கொண்டு போவெனத், தோழி தலைமகளது ஆதரங் கூறல்.

(வ - று.)

பிணையும் கலையுர்வன் பேய்த்தே ரினைப்பெரு நீர்நசையால்
அணையும் முரம்பு நிரம்பிய அத்தமும் ஐயமெய்யே
இணையும் அளவுமில் லாவிறை யோனுறை தில்லைத்தண் பூம்
பணையும் தடமுமன் றேநின்னெ டேகினெம் பைந்தொடிக்கே.

(திருக். உ0உ)

இறந்துபாடுரைத்தல்

என்பது: ஆதரங் கூறிய தோழி, நீ யுடன்கொண்டு போகா யாகில், அலராணும் காவல் மிகுதியாணும் நின்னை எதிர்ப்படுதல் அரிதாதலின், தடந்துறந்த கயல்போல இறந்துபடுமெனத், தலை மகள் இறந்துபாடுரைத்தல்.

(வ - று.)

இங்கய லென்னீ பணிக்கின்ற தேந்தல் இணைப்பதில்லாக்
கங்கையஞ் செஞ்சடைக் கண்ணுத லண்ணல் கடிகொடில்லைப்
பங்கயப் பாசடைப் பாய்தடம் நீயப் படர்தடத்துச்
செங்கய லன்றே கருங்கயற் கண்ணித் திருநுதலே.

(திருக். உ0ஊ)

கற்புநலனுரைத்தல்

என்பது, தலைமகனைப் போக்குடம்படுத்திய தோழி, தலைமகளுழைச் சென்று, மகளிர்க்குப் பாதுகாக்கப்படுவனவற்றுள் நாண்போலச் சிறந்தது பிறிதில்லை. அத்தன்மைத்தாகிய நாணுங் கற்புப்போலச் சீரிய தன்றென உலகியல் கூறுவாள் போன்று, அவளுடன்போக்குத் துணியக் கற்புநலங் கூறல்.

(வ - று.)

தாயிற் சிறந்தன்று நாண்டையு லாருக்குந் நாண்டகைசால்
வேயிற் சிறந்த மென் ரோளிதிண் கற்பின் விழுமிதன்றீங்
கோயிற் சிறந்துசிற் றம்பலத் தாடுமெங் கூத்தப்பிரான்
வாயிற் சிறந்த மதியிற் சிறந்த மதிநுதலே.

(திருக். உ0ச)

துணிந்தமை கூறல்

என்பது, உலகியல் கூறுவாள் போன்று கற்புவழி நிறுத்தி, எம்பெருமான் நின்னை நீரில்லாத வெய்யசுரத்தே உடன்கொண்டு போவானுக நினையா நின்றான். இதற்கு நின்கருத் தென்னே வெனத், தோழி தலைமகளுக்குத் தலைமகனினைவு கூறல்.

(வ - று)

குயப்பாவை நின்குழல் வேங்கையம் போதொடு கோங்கம்விராய்
நறப்பா டலம்புனை வார்நினை வார்தம்பி ரான்புலியூர்
மறப்பான் அடுப்பதொர் தீவினை வந்திடிற் சென்றுசென்று
பிறப்பான் அடுப்பினும் பின்னுந்துன் னத்தகும் பெற்றியரே.

(திருக். உ0இ)

துணிவொடு விளுவல்

என்பது, தலைமகனினைவு கேட்ட தலைமகள், அவனினைவின் படியே துணிந்துநின்று, இந்நீரில்லாத வெய்யசுரத்தே இப் பொழுதிவர் நம்மை யுடன்கொண்டு போகைக்குக் காரண மென்னை வெனத், தோழியை விளுவல்.

(வ - று.)

நிழற்றலை நீநெறி நீரில்லை கானகம் ஓரிகத்தும்
அழற்றலை வெம்பரற் றென்பரென் னேதில்லை யம்பலத்தான்
கழற்றலை வைத்துக்கைப் போதுகள் கூப்பக்கல் லாதவர்போற்
குழற்றலைச் சொல்லிசெல் லக்குறிப் பாகுநங் கொற்றவர்க்கே.

(திருக். உ0ஈ)

போக்கறிவித்தல்

என்பது, இப்பொழுதவர் போகைக்குக் காரணமென்னை வென்று கேட்ட தலைமகளுக்கு, நீங்கள் உடலுமுயிரும் போல வொருவரை யொருவ ரின்றியமையீராயினீர், இத்தன்மைத்தாகிய நுங் காதலையறிந்துவைத்தும் அவற்கு வருமேதம் நினதென்றஞ்சி, யானவனை வரவு விலக்குவேன், அவனுமவ்வாறு வருதலை யொழிந்து வரைவொடுவின், பொன் முதலாகிய வெல்லா வற்றையு நினக்கு முலைப்பரிசம் பெறினும் நமர் நின்னைக் கொடார், கூறுமிடத்து, இதுவன்றே நீரருஞ்சுரம் போகைக்குக் காரண மென்று தோழி தலைமகனது போக்கறிவியா நிற்றல்.

(வ - ரு)

காயமும் ஆவியும் நீங்கள்சிற் றம்பல வன்கயிலைச்
சேயமும் மாவும் வெரீஇவரல் என்பல் செறிதிரைநீர்த்
தேயமும் யாவும் பெறினுங் கொடார்நமர் இன்னசெப்பின்
தோயமும் நாடுமில் லாச்சுரம் போக்குத் துணிவித்தவே.

(திருக் உ0எ)

நாணிழந்து வருந்தல்

என்பது, உடன்கொண்டு போகைக்குக் காரணங் கேட்ட தலைமகள், ஒருநாளு மென்னைவிட்டு நீங்காதென்னுடனே வளர்ந்த காண், கற்பி னெதிர்நிற்கமாட்டாது தன்னை விட்டு நீங்காத வென்னைக் கழிவதாக, மகளிர் பெழுபிறப்பின்கண்ணுங் குடியிற் பிறவா தொழிகவெனத், தானதற்குப் பிரிவாற்றுமையான் வருந்தல்.

(வ - ரு.)

மற்பாய் விடையோன் மகிழ்புலி யூரென்னை டும்வளர்ந்த
பொற்பார் திருநாண் பொருப்பர் விருப்புப் புகுந்துநுந்தக்
கற்பார் கடுங்கால் கலக்கிப் பறித்தெறி யக்கழிக
இற்பால் பிறவற்க ஏழையர் வாழி எழுமையுமே.

(திருக். உ0அ)

துணிவெடுத்துரைத்தல்

என்பது, தலைமகளைக் கற்புவழி நிறுத்திச் சென்று, நின்னெடு போதுமிடத்து, நீசெல்லுங் கற்சுரம் அவள் சிற்றடிக்கு கற்றளிராம் போலுமெனத், தோழி தலைமகனுக்கு, அவள் துணி வெடுத்துக் கூறல்.

(வ - ரு.)

கும்பஞ் சிவந்த சலந்தரன் ஆகங் கறுத்ததில்லை
தம்பன் சிவநகர் நற்றளிர் கற்சுர மாகுநம்பா
அம்பஞ்சி யாவம் புகமிக நீண்டரி சிந்துகண்ணுள்
செம்பஞ்சி யின்மிதிக் கிற்பதைக் கும்மலர்ச் சீறடிக்கே.

(திருக். உ0க)

குறியிடங்கூறல்

என்பது, துணிவெடுத்துரைத்த தோழி, தாழாது இவ் விருட்காலத்துக் கொண்டுபோவாயாக, யானவளைக் கொண்டு வருகிறேன், நீ முன்பு வந்ததிர்ப்பட்ட அக்குறியிடத்து வந்து நில்லெனத், தலைமகனுக்குக் குறியிடங் கூறல்.

(வ - ரு.)

முன்னேன் மணிகண்டம் ஒத்தவன் அம்பலந் தம்முடிதாழ்த்
துன்னு தவர்வினை போற்பரந் தோங்கும் எனதுயிரே
அன்னுள் அரும்பெற லாவியன் னயரு ளாசையினுற்
பொன்னுர் மணிமகிழ்ப் பூவிழ யாம்விழை பொங்கிருளே.

(திருக். உக0)

அடியொடு வழிநினைந் தவனுளம்வாடல்

என்பது, தோழி குறியிடை நிறுத்திப் போக, தலைமக னவ்விடத்தே நின்று, அனிச்சப்பூப்போலும் அழகிய அடிகள் அழற்கடம் போதுமென்றல், இதற்கென்ன துன்பம் வந் தெய்துமோவெனத், தலைமகளடியொடு தான் போகின்ற வழி நினைந்து தன்னுள்ளம் வாடல்.

(வ ரு.)

பனிச்சந் திரனெடு பாய்புனல் சூடும் பரன்புலியூர்
அனிச்சந் திகழுமஞ் சீறடி யாவ அழல்பழுத்த
கனிச்செந் திரளன்ன கற்கடம் போந்து கடக்குமென்றல்
இனிச்சந்த மேகலை யாட்கென்கொ லாம்புகுந் தெய்துவதே.

(திருக். உகக)

கொண்டுசென்றுய்த்தல்

என்பது, தலைமகன் குறியிடை நின்று, அடியொடு வழி நினைந்து தன்னுள்ளம் வாட, அக்கிலேமைக்கண், நின்னுள்ளத்துக்

கருதியதனை யிப்பொழுது நினக்குத் தெய்வந் தருகின்றது, என் தோழியையுங் கொண்டுவந்தேன், நீ யிவளைக் கைக்கொள்ளெனத், தோழி தலைமகளைக் கொண்டு சென்று அவனொடு கூட்டல்.

(வ - று.)

வைவந்த வேலவர் சூழ்வரத் தேர்வரும் வள்ளலுள்ளந்
தெய்வந் தருமிருள் தூங்கும் முழுதும் செழுமிடற்றின்
மைவந்த கோன்றில்லை வாழ்த்தார் மனத்தின் வழுத்துநர்போல்
மொய்வந்த வாவி தெளியும் துயிலுமிம் மூதெயிலே.

(திருக். உகஉ)

ஓம்படுத்துரைத்தல்

என்பது, கொண்டுசென்றுய்த்து, இருவரையும் வலஞ்செய்து நின்று, மறைநிலை திரியினும், கடன் முழுதும் வற்றினும், இவ்விடத்து நின்னருள் திரியாமற் பாதுகாப்பாயெனத், தோழி தலைமகளைத் தலைமகனுக் கோம்படுத்துரைத்தல்.

(வ - று.)

பறந்திருந் தும்பர் பதைப்பப் படரும் புரங்கரப்பச்
சிறந்தெரி யாடிதென் றில்லையன் னுடிறத் துச்சிலம்பா
லறந்திருந் துன்னரு ளும்பிறி தாயின் அருமறையின்
நிறந்திரிந் தார்கலி யும்முற்றும் வற்றுமிச் சேணிலத்தே.

(திருக். உகஉ)

வழிப்படுத்துரைத்தல்

என்பது, ஓம்படுத்துரைத்த தோழி, ஆயமு மன்னையும் பின் வாராம லிவ்விடத்தே நிறுத்தி, இவ்வூரிடத்துள்ள அலரையு மொருவாற்று மீக்கி, யானும் வந்து நுங்களைக் காண்பேனுக, நீயிருந் திருவொடு சென்று நும்பதியிடைச் சேர்வீரென, இரு வரையும் வழிப்படுத்துரைத்தல்.

(வ - று.)

சண்டொல்லை யாயமு மெளவையு நீங்கவிவ் வூர்க்கவ்வைதீர்த்
தாண்டொல்லை கண்டிடக் கூடுக நும்மையெம் மைப்பிடித்தின்
னூண்டெல்லை தீரின்பந் தந்தவன் சிற்றம் பலநிலவு
சேண்டில்லை மாநகர் வாய்ச்சென்று சேர்க திருத்தகவே.

(திருக். உகச)

மெல்லக்கொண்டேகல்

என்பது, தோழியை விட்டுடன் கொண்டுபோகின்ற தலைமகன், நின்னெடு சேறலான், இன்று இக்காடு திருந்தச் செய்யப்பட்டாற்போலக் குளிர்ச்சியை யுடைத்தாயிருந்தது, இனி நின் சிறடி வருந்தாமற் பையச் செல்லெனத், தன்னுய வெள்ளத் தோடும் விளையாடுமாறுபோலத் தலைமகளை மெல்லக் கொண்டு செல்லா நிற்றல்.

(வ - று.)

பேணத் திருத்திய சிறடி மெல்லச்செல் பேரரவம்
பூணத் திருத்திய பொங்கொளி யோன்புலி யூர்புரையும்
மாணத் திருத்திய வான்பதி சேரும் இருமருங்கும்
காணத் திருத்திய போலுமூன் னைமன்னு கானங்களே.

(திருக். உகஅ)

அடலெடுத்துரைத்தல்

என்பது, மெல்லக் கொண்டுபோகின்றவன், சேய்த்தாகச் சிலரை வரக்கண்டு, தலைமகள் பயப்பட, நின் ஐயன்மாராயின் அஞ்சுவேனல்லது, நால்வகைத்தானையுந் திரண்டுவரினும், என் கையில் வடித்திலங்கா நின்ற எஃகின் வாய்க்கு இரை போதாது, இதனை யிவ்விடத்தே காண்பாயாக வென்று, அவள் பயந்தீரத் தன்னடலெடுத்துரைத்தல்.

(வ - று.)

கொடித்தேர் மறவர் குழாம்வெங் கரிநிரை கூடினென்கை
வடித்தே ரிலங்கெஃகின் வாய்க்குத வாமன்னும் அம்பலத்தோன்
வடித்தே ரலரென்ன அஞ்சுவன் நின்னைய ரென்னின்மன்னும்
கடித்தேர் குழன்மங்கை கண்டிடிவ் விண்டோய் கனவரையே.

(திருக். உகசு)

(கு - ரை.) **'அமர்வரின் பெயர்க்குவன் அஞ்சேன். நுமர்வரின் மறைகுவன் மாஅயோளே' என்னும் சங்கப் பாடலின் கருத்தைத் தழுவி நிற்கிறது.**

அயர்வகற்றல்

என்பது, அடலெடுத்துரைத்துப் பயந்தீர்த்துக்கொண்டு போகிறவன், இத்துன்பக் கடறுகடந்து சென்று, இப்பொழுதே நாம் நம்பதிகாணப் புகாநின்றேம், இனி நமக்கொரு குறைவில்லை யெனத் தலைமகள் வழிவருத்தந் தீரக்கூறு நிற்றல்

(வ - று.)

முன்னோன் அருண்முன்னும் முன்னு விணையின் முனகர்துன்னும்
இன்னாக் கடறிதிப் போழ்தே கடந்தின்று காண்டுஞ்சென்று
பொன்னார் அணிமணி மாளிகைத் தென்புலி யூர்ப்புகழ்வார்
தென்னு எனவுடை யானட மாடுசிற் றம்பலமே.

(திருக். உகள)

(சு - ரை.) முன்னும் உன்னு - முற்பிறவியின் கண்ணும் நினையாத. விணையின் முனகர் - தீவிணையையுடைய இழிந்தார்.

நெறிவிலக்கிக் கூறல்

என்பது, அயர் வகற்றிக்கொண்டு போகின்ற தலைமகனை, இனிச் செல்லு நெறிக்கண், நன்மக்களில்லை, நீதனியை, இவள் வாடினுள், பொழுதுஞ் சென்றது, ஈண்டுத் தங்கிப் போவாயாக வென, அவ்விடத்துள்ளோர் வழிவிலக்கிக் கூறல்.

(வ - று.)

விடலையுற் றூரில்லை வெம்முனை வேடர் தமியைமென்பூ
மடலையுற் றுர்குழல் வாடினள் மன்னுசிற் றம்பலவர்க்
கடலையுற் றுரின் எறிப்பொழிந் தாங்கருக் கன்சுருக்கிக்
கடலையுற் றுன்கடப் பாரில்லை யின்றிக் கடுஞ்சுரமே.

(திருக். உகஅ)

(சு - ரை.) விடலை - விளி. உற்றூர் - நன்மக்கள். அடலையுற்றூர் - ஆட்படுந் தன்மையர்.

கண்டவர் மகிழ்தல்

என்பது, நெறிவிலக்குற்று வழிவருத்தந் தீர்ந்து, ஒருவரை யொருவர் காணலுற் றின்புற்றுச் செல்லாநின்ற விருவரையுங் கண்டு, இவர்கள் செயலிருந்தவாற்றூ னிப்பெருஞ்சுரஞ் செல்வ தன்று போலும், அது கிடக்க, இது தானின்புறவுடைத்தாகிய தோர் நாடகச் சுவையுடைத்தா யிருந்ததென, எதிர்வருவா ரின்புற்று மகிழ்ந்து கூருநிற்றல்.

(வ - று.)

அன்பணைத் தஞ்சொல்வி பின்செல்லும் ஆடவன் நீடவன்றன்
பின்பணைத் தோளி வருமிப் பெருஞ்சுரஞ் செல்வதன்று
பொன்பணைத் தன்ன இறையுறை இல்லைப் பொலிமலர்மேல்
நன்பணைத் தண்ணறு வண்ணளி போன்றூளிர் நாடகமே.

(திருக். உகக)

வழிவிலோயாடல்

என்பது, கண்டவர் மகிழக்கொண்டுசெல்லா நின்றவன், நெறிசெல் வருத்தத்தி னெகிழ்ந்த மேனியையுடைய நின்னைக் கண்டு, கண்கள் தம்மாற் கொள்ளும் பயன்கொண்டனம், இனிச் சிறிதிருந்து, இக்கடுங் கானகந் தண்ணென்னு மளவுஞ் செவி நிறைய நின்மொழிபருக வருவாயாக வெனத், தலைமகளுடன் விலோ யாடல்.

(வ - ரு.)

கண்கடம் மாற்பயன் கொண்டனம் கண்டினிக் காரிகைநின்
பண்கட மென்மொழி யாரப் பருக வருகவின்னே
விண்கட நாயகன் றில்லையின் மெல்லியல் பங்கெனங்கோன்
தண்கடம் பைத்தடம் போற்கடுங் கானகம் தண்ணெனவே.

(திருக். உஉ0)

நகரணிமை கூறல்

என்பது, இருவருந் தம்மு ளின்புற்றுச் செல்கின்றமை கண்டு, இனிச் சிறிது நெறிசென்று, அக்குன்றைக் கடந்தால், நும்பதியாகிய நகர்விளங்கித் தோன்றும், அத்துணையுங் கடிது சென்மினென, எதிர்வருவார் அவர் நகரணிமை கூறல்.

(வ . ரு.)

மின்றங் கிடையொடு நீலியன் றில்லைச்சிற் றம்பலவர்
குன்றங் கடந்துசென் றுனின்று தோன்றும் குரூஉக்கமலம்
துன்றங் கிடங்கும் துறைதுறை வள்ளோவெள் ளோநகையார்
சென்றங் கடைதட மும்புடை சூழ்தரு சேணகரே.

(திருக். உஉக)

நகர்காட்டல்

என்பது, நகரணிமை கூறக்கேட்டின் புறக்கொண்டு போகுந் தலைமகன், அன்னந் துன்னிப், பிறையணிந்து, சூலத்தை யுடைத் தாகிய மாளிகைமேற் கொடிநுடங்க, மதிரேருன்றுநின்ற அப்பெரிய நகர்காண் நம்முடைய நகராவதெனத், தலைமகளுக்குத் துன்னகர் காட்டல்.

(வ - ரு)

மின்போல் கொடிநெடு வானக் கடலுள் திரைவிரிப்பப்
பொன்போல் புரிசை வடவரை காட்டப் பொலிபுலியூர்

மன்போல் பிறையணி மாளிகை சூலத்த வாய்மடவாய்
நின்போல் நடையன்னம் துன்னிமுன் ரேன்றுநன் னீணகரே.

(திருக். உஉட)

பதிபரி சுரைத்தல்

என்பது, ஈகர்காட்டிக்கொண்டு சென்று, அந்நகரிடைப்புக்கு, அவ்விடத்துள்ள குன்றுகள், வாவிகள், பொழில்கள், மாளி கைகள், தெய்வப்பதி இவையெல்லாந் தனித்தனி காட்டி, இது காண் நம்பதியாவதெனத், தலைமகளுக்குத் தலைமகன் பதிபரி சுரைத்தல்.

(வ - று.)

செய்குன் றுவையிவை சீர்மலர் வாவி விசும்பியங்கி
நைகின்ற திங்களெய்ப் பாறும் பொழிலவை ஞாங்கரெங்கும்
பொய்குன்ற வேதிய ரோதிடம் உந்திடம் இந்திடமும்
எய்குன்ற வார்சிலை யம்பல வற்கிடம் ஏந்திழையே.

(திருக். உஉஈ)

செவிலி தேடல்

என்பது, இருவரையும் வழிப்படுத்தி வந்து பிரிவாற்றாது கவலாநின்ற தோழியை, எம்பிள்ளை யெங்குற்றது, நீ கவலா நின்றாய், இதற்குக் காரண மென்னெனவென்று வினவிச், செவிலி தலைமகளைத் தேடல்.

(வ - று.)

மயிலெனப் பேர்ந்தெள வல்லியின் ஒல்கிமென் மான்விழித்துக்
குயிலெனப் பேசுமெங் குட்டனெங் குற்றதென் நெஞ்சகத்தே
பயிலெனப் பேர்ந்தறி யாதவன் றில்லைப்பல் பூங்குழலாய்
அயிலெனப் பேருங்கண் ணுயென்கொ லாமின் றயர்கின்றதே.

(திருக். உஉச)

(து - ரை) குட்டன் - பிள்ளை; ஈண்டுப் பெண் மகவைக் குறித்து நின்றது.

அறத்தொடு நிற்றல்

என்பது, தேடிய செவிலிக்கு, நீ போய் விளையாடச் சொல்ல, யாங்கள் போய்த் தெய்வக்குன்றிடத்தே யெல்லாரு மொருங்கு விளையாடா நின்றேமாக, அவ்விடத்தொரு பெரியோன், வழியே தார் சூடிப்போயினன், அதனைக் கண்டு, நின்மகள் அத்தாரை

OFFICE OF THE DIRECTOR OF PUBLICITY
21 JAN 1975

யென்பாவைக்குத் தாரு மென்றாள், அவனும் வேண்டியது மருது கொடுப்பானுதலிற் பிறிதொன்று கிந்தியாது கொடுத்து நீங்கினன், அன்றறியாப்பருவத்து நிகழ்ந்ததனை, உற்றார்க்குரியர் பொற்றொடி மகளிர், கொண்டார்க்குரியர் கொடுத்தா ரென்பதனை யின்று உட்கொண்டாள் போலும், யாளித்துணையு மறவேனென்று உடன்போக்குத் தோன்றக் கூறித், தோழி அறத்தொடு நிற்றல்.

(வ - று.)

**ஆளரிக் கும்மரி தாய்த்தில்லை யாவருக் கும்மெளி தாந்
தாளரிக் குன்றிற்றன் பாவைக்கு மேவித் தழறிகழ்வேற்
போளரிக் குந்நிக ரன்னு ரொருவர் குரூஉமலர்த்தார்
வாளரிக் கண்ணிகொண் டாள்வண்ட லாயத்தெம் வாணுதலே.**

(திருக். உஉஇ)

கற்புநிலைக்கிரங்கல்

என்பது, தோழி அறத்தொடு நிற்பக் கேட்ட செவிலி, இஃதறமாயினும், இவள் பருவத்திற்குத் தகாது, அது கிடக்க, இனி அவளுக்கு நன்மையாவது அவனை வழிபடுவதல்லது பிறிதில்லை யெனக் கற்புநிலைக் கிரங்கல்.

(வ - று.)

**வடுத்தான் வகிர்மலர் கண்ணிக்குத் தக்கின்று தக்கன்முத்தீக்
கெடுத்தான் கெடலிருெல் லோன்றில்லைப் பன்மலர் கேழ்கிளர
மடுத்தான் குடைந்தன் றழுங்க அழுங்கித் தழீஇமகிழ்வுற்
றெடுத்தாற் கினியன வேயினி யாவன எம்மனைக்கே.**

(திருக். உஉசு)

கவன்றுரைத்தல்

என்பது, கற்புநிலைக்கிரங்கிய செவிலி, நெருநலாள் முறுவலித்தந்து, முலைமுழுவித்தழுவி, நீ சிறிய விரகுகள் செய்த வெல்லாம், இன்று அவ்வலிய காட்டைச் செல்லவேண்டிப் போலும், இதனை அப்பொழுதே யறியப் பெற்றிலேன் என்று, அவள் நிலை நினைந்து கவலாகின்றல்.

(வ - று.)

**முறுவலக் காறந்து வந்தென் முலைமுழு வித்தழுவிச்
சிறுவலக் காரங்கள் செய்தவெல் லாமுழு துஞ்சிதையத்**

தெறுவலக் காலனைச் செற்றவன் சிற்றம் பலஞ்சிந்தியார்
உறுவலக் கானகந் தான்படர் வானும் ஒளியிழையே.

(திருக். உஉஎ)

அடிநினைந்திரங்கல்

என்பது, நிலைமை நினைந்து கவலாநின்ற செவிலி, நுண்ணிய வடிகள் பரலியுடைய காட்டின்கட் பாவியவாறென்னெனவென, அவள் அடி நினைந்திரங்கல்.

(வ - று.)

தாமே தமக்கொப்பு மற்றில் லவர்தில்லைத் தண்ணனிச்சப்
பூமேல் மிதிக்கிற் பதைத்தடி பொங்குநங் காயெரியுந்
தீமே லயில்போற் செறிபரற் கானிற் சிலம்படிபாய்
ஆமே நடக்க அருவினை யேன்பெற்ற அம்மனைக்கே.

(திருக். உஉஅ)

நற்றாய்க்குரைத்தல்

என்பது, அடிநினைந்திரங்கிய செவிலி, கற்புமுதிர்வு தோன்ற நின்று, நின்னை, இடைவிடாமல் தேடியழாநின்ற பேதை யறிவு, இன்று என்னைத் தேய்வியா நின்ற தென்று, அவளுடன் போனமை ஆற்றாது நற்றாய்க்கு உரைத்தல்.

(வ - று.)

தழுவின கையிறை சோரின் தமியமென் றேதளர்வும்
முழுவினை செய்யுநை யாவஞ்சொற் பேதை யறிவுவிண்ணோர்
குழுவினை யுய்யநஞ் சுண்டம் பலத்துக் குனிக்கும்பிரான்
செழுவின தாள்பணி யார்பிணி யாலுற்றுத் தேய்வித்ததே.

(திருக். உஉக)

நற்றாய் வருந்தல்

என்பது, உடன் போனமை கேட்டு உண்மகிழ்வோடு நின்று, ஓரேதிலன் பின்னே தன்றோழியை விட்டு, என்னையு முன்னே துறந்து, சேராதார்முன்னே ஊர் அலர்தூற்ற அருஞ்சுரம் போயினள், இனியான் எங்ஙன மாற்றுவேனென, நற்றாய் பிரிவாற்றாது வருந்தல்.

(வ - று.)

யாழியன் மென்மொழி வன்மனப் பேதையார் ஏதிலன்பின்
தோழியை நீத்தென்னை முன்னே துறந்துதுன் னுர்கண்முன்னே

வாழியீம் மூதூர் மறுகச்சென் ருளன்று மால்வணங்க
ஆழிதந் தானம் பலம்பணி யாரின் அருஞ்சுரமே.

(திருக். உகூ0)

கிளிமொழிக்கிரங்கல்

என்பது, பிரிவாற்றாது வருந்துகின்றவள், அவள் போன போக்கன்றி, இக்கிள்ளை யென்னெஞ்சை யீராகின்றதெனத், தன்ருய் செலவுணர்ந்து வருந்தாகின்ற கிளிமொழி கேட்டிரங்கல்.

(வ - று.)

கொன்னுகீ வேலம் பலவற் ருழாரிற்குன் றங்கொடியோள்
என்னணஞ் சென்றனள் என்னணஞ் சேரும் எனவயரா
என்னகீ போயினள் யாண்டையள் என்கீப் பருந்தடுமென்
றென்னகீ போக்கன்றிக் கிள்ளையென் னுள்ளத்தை யீர்கின்றதே.

(திருக். உகூக)

சுடரோடிரத்தல்

என்பது, கிளிமொழி கேட்டிரங்கா கின்றவள், பெற்ற வென்னேடு தன் கிளியிருந்து வருந்த, இதனீயுந் துறந்து, அறிவு முதிர்ந்து, அழற்கடனு சென்ருள் முகத்தை கின்கதிர்களான் வாட்டாது, தாமரை மலர்போல மலர்த்துவாயாக வெனச், சுடரோடிரந்து கூறல்.

(வ - று.)

பெற்றே னெடுங்கிள்கீ வாட முதுக்குறை பெற்றிமிக்கு
நற்றேன் மொழியழற் காடைந் தாண்முகம் நானனுகப்
பெற்றேன் பிறவி பெருமற்செய் தோன்றில்லைத் தேன்பிறங்கு
மற்றேன் மலரின் மலர்த்திரந் தேன்சுடர் வானவனே.

(திருக். உகூஉ)

பருவநினைந்து கவறல்

என்பது, சுடரோடிரந்து வருந்துகின்றவள், கற்பிக்கு முது பெண்டிருமின்றித், தானவனுக்குச் செய்யத்தகுங் குற்றேவல் செய்யவல்லளோ வென்று, அவள் பருவநினைந்து கவலா கின்றல்.

(வ - று.)

வைம்மலர் வாட்படை யூரற்குச் செய்யுங்குற் றேவன்மற்றென்
மைம்மலர் வாட்கண்ணி வல்லள்கொல் லாந்தில்லீ யான்மலிவாய்

மொய்ம்மலர்க் காந்தளைப் பாந்தளென் றெண்ணித்துண் ணென்றெழு
[ளித்துக்
கைம்மல ராற்கண் புதைத்துப் பதைக்குமெங் கார்மயிலே.

(திருக். உகூக)

நாடத்துணிதல்

என்பது, பருவமினைந்து கவலா நின்ற தாய்க்கு, நீ கவன்று மெலியவேண்டா, யானவள் புக்க விடம்புக்குத் தேடுவேனெனக் கூறிச், செவிலி அவள நாடத்துணிதல்.

(வ - று.)

வேயின தோளி மெலியல்விண் ணேர்தக்கன் வேள்வியின்வாய்ப்
பாயின சீர்த்தியன் அம்பலத் தானைப் பழித்துமும்மைத்
தீயின தாற்றல் சிரங்கண் ணிழந்து திசைதிசைதாம்
போயின எல்லையெல் லாம்புக்கு நாடுவன் பொன்னினையே.

(திருக். உகூச)

கொடிக்குறி பார்த்தல்

என்பது, செவிலி நாடத்துணிய, அவ்விருவரையு மிப் பொழுதே வரும் வண்ணம், நீ கரைந்தால், நினக்குணங்கலை யஞ்சா திருந்துண்ணலாம், அதுவன்றித் தெய்வத்திற்கு வைத்த நினத்தையுடைய பலியையும் நினக்கே வரைந்து வைப்பேன், அவ்வாறு சரைவாயாகவென, நற்றாய் கொடிக்குறி பார்த்தல்.

(வ - று.)

பணங்களஞ் சாலும் பருவர வார்த்தவன் றில்லையன்ன
மணங்கொளஞ் சாயலும் மன்னனும் இன்னே வரக்கரைந்தால்
உணங்கலஞ் சாதுண்ண லாமொண் ணிணப்பலி ஓக்குவன்மாக்
குணங்களஞ் சாற்பொலி யுந்நல சேட்டைக் குலக்கொடியே.

(திருக். உகூஎ)

(சு - ரை.) பணங்கள் அஞ்சு ஆலும் பரு அரவு - படங்கள் ஐந்து ஆடும்படியான பருத்த ஐந்தலை நாகம். குணங்கள் ஐந்து - மறைந்த புணர்ச்சித்தாதல், கலங்காமை, பொழுது இறவாது இடம்புகுதல், நெடுகக் காண்டல், மடியின்மை என்பன. கொடி - காக்கை.

சோதிடங்கேட்டல்

என்பது, நொடி நிமித்தம் பெற்று, இக்காவல் மனையின் கண்ணே யாங்கள் மணஞ்செய்ய, அவ்விருவரையு மின்னும்

பெறுமாறுண்டாயி னாராய்ந்து கூறுமினென, அறிவாளரைக் கிட்டிச், செவிலி சோதிடங் கேட்டல்.

(வ - று.)

முன்னுங் கடுவிடம் உண்டதென் றில்லைமுன் னேனருளாள்
இன்னுங் கடியிக் கடிமனைக் கேமற் றியாமயர
மன்னுங் கடிமலர்க் கூந்தலைத் தான்பெறு மாறுமுண்டேல்
உன்னுங்கள் நீதின்றி ஒதுங்கள் நான்மறை உத்தமரே.

(திருக். உஈசு)

சுவடுகண்டறிதல்

என்பது, சோதிடம் பெற்றுச் செல்கின்றவள், இம்முரம் பின்கட்கிடந்த விவை தீவினையே னெடுத்து வளர்த்த மாணிழை சீறடி, உவை அக்கள்வனடியாமெனச் சுவடு கண்டறியா நிற்றல்.

(வ - று.)

தெள்வன் புனற்சென்னி யோனம்ப லஞ்சிந்தி யாரினஞ்சேர்
முள்வன் பரன்முரம் பத்தினமுன் செய்வினை யேனெடுத்த
வெள்வன் படைக்கண்ணி சீறடி யிங்கிவை உங்குவையக்
கள்வன் பகட்டுர வோனடி யென்று கருதுவனே.

(திருக். உஈஎ)

சுவடுகண்டிரங்கல்

என்பது, சுவடு கண்டறிந் தவ்விடத்தே நின்று, தவிசின் மேன் மிதிப்பினும் பதைத்துக் கொப்புட்கொள்ளும் இக்கால் மலர், இன்றெருரு விடலை பின்னே போதற்குத் தகுங்காலை யெவ்வா றொத்தனவென, அடிச்சுவடு கண்டிரங்கல்.

(வ - று.)

பாலொத்த நீற்றம் பலவன் கழல்பணி யார்பிணிவாய்க்
கோலத் தவிசின் மிதிக்கிற் பதைத்தடி கொப்புள்கொள்ளும்
வேலொத்த வெம்பரற் கானத்தில இன்றெரூர் விடலைபின்போங்
காலொத் தனவினை யேன்பெற்ற மாணிழை கான்மலரே.

(திருக். உஈஅ)

வேட்ட மாதரைக் கேட்டல்

என்பது, சுவடு கண்டிரங்கி அது வழியாகச் செல்கின்றவள், இவ்வாறறியாப் பருவத்தளாய்த், தனக்கியையில்லாத சுரத்

தின்கண் அயலாளொருவனுடன் போந்தாள், அவளை நீ கண்டாயோவென, வேட்டமாதரைக் கேளா நிற்றல்.

(வ - று.)

பேதைப் பருவம்பின் சென்றது முன்றில் எனைப்பிரிந்தால்
ஊதைக் கலமரும் வல்லியைப் பாண்முத்தன் றில்லையன்னாள்
ஏதிற் சுரத்தய லானெடின் றேகினள் கண்டனையே
போதிற் பொலியுந் தொழிற்புலிப் பற்குரற் பொற்றொடியே.

(திருக். உகூ)

புறவொடு புலத்தல்

என்பது, வேட்டமாதரைக் கேட்டு அது வழியாகச் செல்கின்றவள், ஏதிலனுமாய்த் தமியனுமாய வன்சொற்றுணையாகவெய்ய சுரத்தே மாதர் சென்றுல், தில்லைப்புறவே, இது நினக்குத் தகுதியன்றெனக் கூறிற்றிலை, நீ வாழ்வாயாகவென்று புறவொடு புலத்தல்.

(வ - று.)

புயலன் றலர்சடை யேற்றவன் தில்லைப் பொருப்பரசி
பயலன் றனைப்பணி யாதவர் போன்மிகு பாவஞ்செய்தேற்
கயலன் றமியனஞ் சொற்றுணை வெஞ்சுர மாதர்சென்றுல்
இயலன் றெனக்கிற் றிலைமற்று வாழி எழிற்புறவே.

(திருக். உசo)

(கு. ரை) புயலன் - துணையாக வுள்ளவன்.

குரவொடு வருந்தல்

என்பது, புறவொடு புலந்து போகின்றவள், என்னுடைய பாவை நினக்கு முன்னே யிக்கொதிக்குங் கடத்தைக் கடப்பக் கண்டு நின்றும், இன்னவாறு போனளென் றெனக்கு வாய் திறக்கின்றிலை, இது நினக்கு நன்றேவெனக் குரவொடு வாடிக் கூறல்.

(வ - று.)

பாயும் விடையோன் புலியூ ரனையவென் பாவைமுன்னே
காயுங் கடந்திடை யாடிக் கடப்பவுங் கண்டுநின்று
வாயுந் திறவாய் குழையெழில் விசவண் டோலுறுத்த
நீயுன்ன பாவையும் நின்று நிலாவிடு நீள்குரவே.

(திருக். உசச)

வீரதியரை வினவல்

என்பது, குரவொடு வருந்திச் செல்லா நின்றவள், பத்தியர் போல வொருபித்தி தன்பின்னே வர ஒரு பெருந்தகை முன்னே செல்லக் கண்டீரோவென, வீரதியரை வினவா நிற்றல்.

(வ - று.)

சுத்திய பொக்கணத் தென்பணி கட்டங்கஞ் சூழ்சடைவெண்
பொத்திய கோலத்தி னீர்புலி யூரம் பலவர்க்குற்ற
பத்தியர் போலப் பணைத்திறு மாந்த பயோதரத்தோர்
பித்திதற் பின்வர முன்வரு மோவொர் பெருந்தகையே.

(திருக். உசஉ)

(கு - ரை.) சுத்திய பொக்கணம் - பிறர்க்குத் திருநீறு கொடுத்தற்கு இப்படி வடிவாகத் தலையோட்டான் அமைக்கப் படுவதொன்று. கடங்கம் - மழு. அது கட்டங்கம் என நின்றது.

வேதியரை வினவல்

என்பது, வீரதியரை வினவி அதுவழியாகப் போகின்றவள், மான்போலக் கண்ணு மயில்போலுஞ் சாயலுமுடைய மான் ஓரேந்தலோடு நும்மெதிரே வரக் கண்டீரோவென வேதியரை வினவல்.

(வ - று.)

வெதிரேய் கரத்துமென் றேலேய் சுவல்வெள்கீ நூலிற்கொண்மூ
அதிரேய் மறையினிவ் வாறுசெல் வீர்தில்லை யம்பலத்துக்
கதிரேய் சடையோன் கரமா னெனவொரு மான்மயில்போல்
எதிரே வருமே சுரமே வெறுப்பவொர் ஏந்திலொடே.

(திருக். உசஊ)

(கு - ரை.) வெதிர் - மூங்கில். சுவல் - கழுத்து. கொண்மூ அதிர் ஏறு - மேகத்தின் ஒலி போன்று.

புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினவல்

என்பது, வேதியரை வினவி அதுவழியாகப் போகின்றவள், நும்மைக் கண்டு, என்னைத் றேடப்படுகின்றார் மீண்டார்களென்று கருதி, மகிழ்ந்தேன், அதுகிடக்க, இவ்வாறு நும்மோடொத்த வொழுக்கத்தினராய் முன்னே யிருவரைப் போகக் கண்டீரோவெனப் புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினவல்.

(வ - று.)

மீண்டா ரெனவுவந் தேன்கண்டு தும்மையீம் மேதகவே
பூண்டா ரிருவர்முன் போயின ரேபுலி யூரெனநின்
ரூண்டான் அருவரை யாளியன் ஞகைக்கண் டேனயலே
தூண்டா விளக்கீன யாயென்னை யோவன்னை சொல்லியதே.

(திருக். உசச)

வியந்துரைத்தல்

என்பது, புணர்ந்துடன் வருவோரை வினவி அதுவழியாகப் போகா நின்றவள், தன் மகள் நின்ற நிலையையும் அவன் கைவேலினுல் வேங்கை பட்டுக் கிடந்த கிடையையுங் கண்டு, வியந்து கூருநிற்றல்.

(வ - று.)

பூங்கயி லாயப் பொருப்பன் றிருப்புலி யூரதென்னத்
தீங்கையி லாச்சிறி யாணின்ற தெவ்விடம் சென்றெதிர்ந்த
வேங்கையின் வாயின் வியன்வகம் மடுத்துக் கிடந்தலற
ஆங்கயி லாற்பணி கொண்டது திண்டிறல் ஆண்டகையே.

(திருக். உசஎ)

இயைபெடுத் துரைத்தல்

என்பது, வேங்கை பட்டது கண்டு வியந்து அது வழியாகப் போகின்றவள், எதிர் வருவோரை வினவ, அவர் நீ கூறுகின்ற வரைக் குன்றத்திடைக் கண்டோம், அவ்விருவரும் தம்முளிபைந்து செல்லாநின்றமை கண்டு, எல்லாவற்றையு முடையளாகிய தன் காதலியோ டொருவடிவாய் விளையாடும் புலியூரனென்றே கருதி, யாங்களெல்லா மொத்து மிகவு மவ்வெழிலைத் தொழ நினைந்தோம், அந்நன்மை சொல்லலாவதொன்றன்றென, எதிர்வருவோ ரவரியை பெடுத்துக் கூறல்.

(வ - று.)

மின்னெழுத் திடுகழல் நூபுரம் வெள்ளிசெம் பட்டுமின்ன
ஒன்னெழுத் திடவுடை யாளொடொன் றும்புலி யூரனென்றே
நன்னெழுத் தெழிலைத் தொழவுற் றனமென்ன தோர்நன்மைதான்
குன்றத் திடைக்கண் டனமன்னை நீசொன்ன கொள்கையரே.

(திருக். உசஅ)

மீளவுரைத்தல்

என்பது, இயைபெடுத் துரைத்தவர், அவ்விருவருமே ரீடுக்கணின்றிப் போய்த் தில்லையினெல்லையைச் சென்றணைவர், இனி ஈ செல்வதன்று, மீள்வதே காரியமெனத், தேடச்செல்ல கின்ற செவிலியை மீளக் கூறல்.

(வ - று.)

மீள்வது செல்வதன் றன்னையிவ் வெங்கடத் தக்கடமாக்
கீள்வது செய்த கிழவோ னெடுங்கிளர் கெண்டையன்ன
நீள்வது செய்தகண் ணுளிந் நெடுஞ்சுரம் நீந்தியெம்மை
ஆள்வது செய்தவன் றில்லையின் எல்லை அணுகுவரே.

(திருக். உசஎ)

உலகியல் புரைத்தல்

என்பது, மீளக் கூறவு மீளாது கவலாநின்ற செவிலிக்குச், சந்தனமும் முத்தும் சங்கும் தாம் பிறந்த விடங்கட்கு யாதும் பயன்படாது தம்மை விரும்பி யணிவாரிடத்தே சென்று பயன் படும், அதுபோல, மகளிரும் தாம் பிறந்த விடத்துப் பயன்படார், ஈ கவலவேண்டாவென உலகியல்பு கூறல்.

(வ - று.)

சுரும்பிவர் சந்தும் தொடுகடன் முத்தும்வெண் சங்குமெங்கும்
விரும்பினர் பாற்சென்று மெய்க்கணி யாம்வியன் கங்கையென்னும்
பெரும்புனல் சூடும் பிரான்சிவன் சிற்றம் பலமனைய
கரும்பன மென்மொழி யாருமந் நீர்மையர் காணுநர்க்கே.

(திருக். உசஅ)

அழுங்குதாய்க்குரைத்தல்

என்பது, உலகியல்பு கூறவு மீளாது நின்று, தானெடுத்து வளர்த்தமை சொல்லிக் கவலாநின்ற செவிலியை, முன்னிலைப் புறமொழியாக, இவர் தாமில்லின்க ணெடுத்து வளர்த்தவர் போலும், அவர் போய்த் தம்மை யிருவரையும் கூட்டுவித்த தெய்வபபதிபாகிய தில்லையிடத்துப் பழனங்களைச் சென்றணைவ ரெனத், தம்முட் கூறுவார் போன்று கூறி மீட்டுக்கொண்டு போகல்.

(ஙு - று.)

ஆண்டில் எடுத்தவ ராமிவர் தாமவர் அல்குவர்போய்த்
தீண்டில் எடுத்தவர் தீவினை தீர்ப்பவன் தில்லையின்வாய்த்
தூண்டில் எடுத்த வராறெங்கொ டெற்றப் பழம்விழுந்து
பாண்டில் எடுத்தபஃ றுமரை கீழும் பழனங்களே.

(திருக். உசக) (உஉ)

உடன்போக்கு முற்றும்.

உசு. வரைவு முடுக்கம்

என்பது, இவ்வா றுடன்போக்கு நிகழாதாயின் வரைந்து கோடனிகழும், அது நிகழுமிடத்துத் தோழி யான் வரைவு முடுக்கப்பட்டும் வரை பொருட் பிரிந்து வந்தும் நிகழும்.

அடுக. அவற்றுள்,
வருத்தங் கூறலு மவன்மறுத் துரைத்தலும்
உள்ளது கூறலு மேதங் கூறலும்
பகல்வர லென்றலுந் தோழிதந் துரைத்தலுஞ்
சிறைப்புறங் கூறலு மந்திமேல் வைத்தலுங்
கண்டுயி லாமை கண்டா ருரைத்தலும்
பகலுடம் பட்டாள்போன் றிரவர லென்றலும்
இரவுடம் பட்டாள்போன்று பகல்வர லென்றலும்
இரவும் பகலும் வரவோழி கென்றலுங்
காலங் கூறலுங் கூறுவிக குறறலுஞ்
செலவு கூறலும் போலிவழி வுரைத்தலு
மீரேண் கிளவியு மியம்புங் காலை
வாரணி முலையாம் வரைவு முடுக்கம்.

என்பது, வருத்த மிகுதி கூறி வரைவு கடாதல், பெரும் பான்மைகூறி மறுத்தல், உள்ளது கூறி வரைவு கடாதல், ஏதங் கூறியிரவர விலக்கல், பழிவரவுரைத்துப் பகல்வரவு விலக்கல், தோழுதிரந்து கூறல். தாயறிவு கூறல், மந்திமேல் வைத்து வரைவு கடாதல், காவன்மேல் வைத்துக் கண்டுயிலாமை கூறல், பகலுடம் பட்டாள்போன் றிரவரவு விலக்கல், இரவுடம்பட்டாள் போன்று பகல்வரவு விலக்கல், இரவும் பகலும் வரவு விலக்கல், காலங் கூறி வரைவு கடாதல், கூறுவிக்குற்றல், செலவு நினைந்துரைத்தல்

இபாலிவழி வுரைத்து வரைவு கடாதல் ஆகிய பதினறும் வரைவு முடுக்கமாம்.

வருத்தமிகுதி கூறி வரைவுகடாதல்

என்பது, அலரறிவுறுத்த தோழி, அலரானும் காவல் மிகுதியானும் நின்னை யெதிர்ப்பட மாட்டாதழுது வருந்துவாளிடத்து நின்னருளிருக்கின்றவா றென்னெனவெனத், தலைமகள் வருத்தங் கூறித், தலைமகனை வரைவுகடாதல்.

(வ · று)

எழுங்குலை வாழையி னின்கனி தின்றிள மந்தியந்தண்
செழுங்குலை வாழை நிழலிற் றுயில்சிலம் பாமுனைமேல்
உழுங்கொலை வேற்றிருச் சிற்றம்பலவரை யுன்னலர்போல்
அழுங்குலை வேலன்ன கண்ணிக்கென் னேநின் அருள்வகையே.

(திருக். உஇ0)

பெரும்பான்மை கூறி மறுத்தல்

என்பது, வரைவுகடாவிய தோழிக்கு, யானவனைத் தெய்வ மானுடமென் றறிந்து வரைந்துகோடற்கு, இக்குன்றிடத்துத் தோன்று நின்றவிடம் தெய்வ மகளிரிடமோ, அன்றிக் குறத்தியரிடமோ கூறுவாயாக வெனத், தலைமகன் தலைமகளைப் பெரும்பான்மை கூறி மறுத்தல்.

(வ · று.)

பரம்பயன் தன்னடி யேனுக்குப் பார்விசும் பூடுருவி
வரம்பயன் மாலறி யாத்தில்லை வானவன் வானகஞ்சேர்
அரம்பையர் தம்மிட மோவன்றி வேழத்தின் என்புநட்ட
குரம்பையர் தம்மிட மோவிடந் தோன்றுமிக் குன்றிடத்தே.

(திருக். உஇச)

உள்ளது கூறிவரைவு கடாதல்

என்பது, பெரும்பான்மை கூறி மறுத்த தலைமகனுக்கு, இவ்விடம் எந்தையது முற்றூட்டு, எமக்கீற்றூர் குறவரே, எம்மைப் பெற்றூரூங் கொடிச்சியே, யாங்களும் புனங்காப்போம் சிலர், நீ வரைவு வேண்டாமையின் எம்மைப் புணர்ந்துரைக்க வேண்டுவ தில்லை யெனப், பின்னும் வரைவு தோன்றத் தோழி தங்க ளுண்மை கூறல்.

(வ - று.)

திருர்கவண் வாய்த்த மணியிற் சிதைபெருந் தேனிழுமென்
றிருல்கழி வுற்றெஞ் சிறுகுடி ஞந்தும் இடமிதெந்தை
உருவரை யுற்ருர் குறவர்பெற் ருளுங் கொடிச்சியும்பர்
பெருவருள் அம்பல வன்மலைக் காத்தும் பெரும்புனமே.

(திருக். உஙூ)

ஏதங்கூறி யிரவரவு விலக்கல்

என்பது, உண்மையுரைத்து வரைவு கடாய தோழி, **நீ வரைவொடு வாராயாயின்,** சிங்கந் திரண்டு, தன்க்கு யானையாகிய வுணவுகளைத் தேடு மிருளின்கண், நினது கைவேல் துணையாக வேந்தருளா நின்ற விஃதே யெங்களுக்குத் துன்பமாகத் தோன்ரு நின்றது, இனி யிவ்விருளிடை வாராதொழிவாயென, ஏதங் கூறித் தலைமகனை இரவரவு விலக்கல்.

(வ - று.)

கடந்தொறும் வாரண வல்சியின் நாடிப்பல் சீயங்கங்குல்
இடந்தொறும் பார்க்கும் இவ்வொரு நீயெழில் வேலின்வந்தால்
படந்தொறுந் தீயர வன்னம் பலம்பணி யாரினம்மைத்
தொடர்ந்தொறுந் துன்பென்ப தேயன்ப நின்னருள் தோன்றுவதே.

(திருக். உஙூக)

பழிவரவுரைத்துப் பகல்வரவு விலக்கல்

என்பது, இவ்விருளிடை வாராதொழி கென்றது பகல்வரச் சொன்னவாருமென வுட்கொண்டு, பகற்குறிச் சென்று நிற்பத், தோழி யெதிர்ப்பட்டுப், பகல்வந் தெமக்குச் செய்யாநின்ற மெய் யாகிய வருள் புறத்தாரறிந்து வெளிப்பட்டுப் பழியாகப் புகுதா நின்றது, இனிப் பகல் வரவொழிவாயாக வெனப், பழிவருதல் கூறிப் பகல் வரவுவிலக்கல்.

(வ - று.)

களிறுற்ற செல்லல் கலாவயிற் பெண்மரங் கைஞ்ஞெமிர்த்தும்
பிளிறுற்ற வானப் பெருவரை நாட பெடைநடையோ
டொளிறுற்ற மேனியன் சிற்றம் பலநெஞ் சுருகுதவர்போல்
வெளிறுற்ற வான்பழி யாம்பகல் நீசெய்யும் மெய்யருளே.

(திருக். உஙூச)

தொழுதிரந்து கூறல்

என்பது, பகல் வரவு விலக்கின தோழி, இவன் இரவு வரவுங் கூடுமென வுட்கொண்டு, நின்னை யெதிர்ப்பட வேண்டி அழுது வருந்தாநின்ற இவள் காரணமாக, அரிக்கும் யாளிக்கும் வெருவி யானைகள் திரண்டு, புடைபெயராத மிக்க இருளின்கண் வாரா தொழி வாயாக வென்று நின்கழல்களைக் கையாற்றொழுது, நின்னையிரந்தேனென, வரைவு தோன்றத் தலைமகனைத் தொழுதிரந்து கூறல்.

(வ - று.)

கழிகட் டலைமலை வோன்புலி யூர்கரு தாதவர்போல்
குழிகட் களிறு வெரீஇயரி யாளி குழீஇவழங்காக்
கழிகட் டிரவின் வரல்கழல் கைதொழு தேயிரந்தேன்
பொழிகட் புயலின் மயிலிற் றுவளும் இவள்பொருட்டே.

(திருக். உஙஙி)

தாயறிவு கூறல்

என்பது, தொழுதிரந்து கூறவும், வேட்கை மிகவாற் பின்னுங் குறியிடைச் சென்று நிற்ப, அக்குறிப்பறிந்து, நங்கான லிடத் தரையிரவின்கண் ஒருதேர் வந்ததுண்டாகக் கூடுமென வுட்கொண்டு, அன்னை சிறிதே கண்ணுஞ் சிவந்து என்னையும் பார்த்தாள், இருந்தவாற்று னிவ்வொழுக்கத்தை யறிந்தாள் போலுமெனத், தோழி தலைமகளுக்குக் கூறுவாள் போன்று, சிறைப்புறமாகத் தலைமகனுக்கு வரைவு தோன்றத் தாயறிவு கூறல்.

(வ - று.)

விண்ணுஞ் செலவழி யாவெறி யார்கழல் வீழ்சடைத்தீ
வண்ணன் சிவன்றில்லை மல்லெழிற் கானல் அரையிரவின்
அண்ணல் மணிநெடுந் தேர்வந்த துண்டாம் எனச்சிறிது
கண்ணுஞ் சிவந்தன்னை யென்னையும் நோக்கினள் கார்மயிலே.

(திருக். உஙஎ)

மந்திமேல் வைத்து வரைவுகடாதல்

என்பது, சிறைப்புறமாகத் தாயறிவு கூறிச்சென் றெதிர்ப் பட்டு, ஒரு கடுவன் தன் மந்திக்கு மாங்கனியைத் தேனின்கண் தோய்த்துக் கொடுத்து நுகர்வித்துத் தம்மூளின்புறுவது கண்டு, இது நங்காதலர்க்கு நம்மாட் டரிதாயிற்றென, நீ வரை

யாமையை நினைந்தாற்றுளாயினுளென, மந்திமேல் வைத்துத் தலைமகள் வருத்தங்கூறி வரைவுகடாதல்.

(வ - று.)

வான்றேய் பொழிலெழில் மாங்கனி மந்தியின் வாய்க்கடுவன்
தேன்றேய்த் தருத்தி மகிழ்வகண் டாடிரு நீண்முடிமேல்
மீன்றேய் புனற்பெண்ணை வைத்துடை யாளையும் மேனிவைத்தான்
வான்றேய் மதிற்றில்லை மாநகர் போலும் வரிவளையே.

(திருக். உஇஎ)

காவல்மேல் வைத்துக் கண்டுயிலாமை கூறல்

என்பது, மந்திமேல்வைத்து வரைவு கடாவப்பட்ட தலைமகன், இது நங்காதலியிடத்து நமக்கரிதாயிற்றெனத் தானு மாற்றுளாய் இரவுக்குறிச் சென்று நிற்ப, அந் நிலைமைக்கண், இவ்விடத்துள்ளார் இவள் காவற் பறைகேட்கும் தோறுங் கண்டுயிலாமைக்குக் காரணமென்னே வெனத் தம்முட்கூறல்.

(வ - று.)

நறைக்கண் மலிகொன்றை யோனின்று நாடக மாடுதில்லைச்
சிறைக்கண் மலிபுனற் சீர்நகர் காக்குஞ்செவ் வேலினுஞர்
பறைக்கண் படும்படுத் தோறும் படாமுலைப் பைந்தொடியான்
கறைக்கண் மலிகதிர் வேற்கண் படாது கலங்கினவே.

(திருக். உ இஅ)

பகலுடம்பட்டாள்போன் றிரவரவு விலக்கல்

என்பது, சிறைப்புறமாகக் கண்டுயிலாமை கேட்ட தலைமகன், ஆதரவுமிகவா லெதிர்ப்படலுற்று நிற்பத், தோழி யெதிர்ப்பட்டு, நீ வந்தொழுகாநின்ற இப்புலராவிரவும் பொழியா மழையும் புண்ணின்கண் நுழையும் வேல் மலராம்படி யெங்களை வருத்தாநின்றன, இதற்கொரு மருந்தில்லையோ நும் வரையிடத் தெனப், பகலுடம்பட்டாள்போன் றிரவரவு விலக்கல்.

(வ - று.)

கலரா யினர்நினை யாத்தில்லை யம்பலத் தான்கழற்கண்
பிலரா யினர்விண போலிருள் தூங்கி முழங்கிமின்னிப்
புலரா இரவும் பொழியா மழையும்புண் ணின்னுழைவேல்
மலரா வருமருந் தும்மில்லை யோதும் வரையிடத்தே

(திருக் உஇக)

இரவுடம்பட்டான் போன்று பகல்வரவு விலக்கல்

என்பது, இவள் மருந்தில்லையோ வென்றது யானிரவுக் குறிச் செல்லின் மழைக்கா லிருளானெதிர்ப்பட லருமையான், வேட்கையுற்றுப் பகற்குறி யுடம்பட்டானென வுட்கொண்டு, பகற் குறிச் செல்லாநிற்பத், தோழி யெதிர்ப்பட்டு, பகல்வந் தருளா நின்றது அவளுக்கு வருத்த முறும்படியாக மிக்கவலராகா நின்றது, அதனற் பகற்குறி வரற்பாலை யல்லையென, இரவுக்குறி யுடம்பட்டாள்போன்று பகற்குறி விலக்கா நிற்றல்.

(வ - று.)

இறவரை யும்பர்க் கடவுட் பராய்நின் றெழிலியுன்னிக்
குறவரை யார்க்குங் குளிர்வரை நாட கொழும்பவள
நிறவரை மேனியன் சிற்றம் பலநெஞ் சுருதவர்போல்
உறவரை மேகலை யாட்கல ராம்பகல் உன்னருளே.

(திருக். உசo)

இரவும் பகலும் வரவு விலக்கல்

என்பது, இரவுடம் பட்டாள் போன்று பகல்வரவு விலக்கின தோழி, நீபகல்வரின் அலர் மிகுதியா னெங்களுக்கும், மிக்க பழிவந் தெய்தும், இராவரி னெவ்வாற்றானு நின்னை யெதிர்ப்படு தலருமை யாற் சிறிதும்பயனில்லை, அதனல் நீ யிருபொழுதும் வரற்பாலை யல்லையென, இரவும் பகலும் வரவு விலக்கல்.

(வ - று.)

சுழியா வருபெரு நீர்சென்னி வைத்தென்னைத் தன்றொழும்பிற்
கழியா அருள்வைத்த சிற்றம் பலவன் கரந்தருமான்
விழியா வரும்புரி மென்குழ லாடிறத் தையமெய்யே
பழியாம் பகல்வரின் நீயிர வேதும் பயனில்லையே.

(திருக். உசுக)

காலங்கூறி வரைவுகடாதல்

என்பது, இருபொழுதும் வரவு விலக்கின தோழி, மதி நிரம்பா நின்றது, வேங்கை பூவாநின்றன, இனி நினக்கு வரை வொடு வருதற்குக் காலமிது வெனக், காலங் கூறி வரைவு கடாதல்.

(வ - று)

மையார் கதலி வனத்து வருக்கைப் பழம்விழுதேன்
எய்யா தயின்றிள மந்திகள் சோரும் இருஞ்சிலம்பா
மெய்யா அரியதென் அம்பலத் தான்மதி யூர்கொள்வெற்பின்
மொய்யார் வளரிள வேங்கைபொன் மாலையின் முன்னினவே.

(திருக். உகூஉ)

கூறுவிக்குற்றல்

என்பது, காலங்கூறி வரைவுகடாவவும் வரைவுடம்படாமையின், அவடன்னைக் கொண்டே கூறுவிப்பாளாக, அலரான் வருகாணினையும் காணுமையான் வருமாற்றுமையையும்பற்றிக் கிடந்தகம்மல்லலை, நம்மாற் றலையளிக்கப்படுவாரிவ்வாறு வருந்துதகாதெனத் தாமாக அறிகின்றிலராயின், நாம் சொல்லுந்தன்மைகளென்னை வெனப் புலந்து, யோகிலும் போய்க்கூறென்பது குறிப்பாற்றோன்றத், தலைமகன் வரைவுடம்படாமையைத் தோழி தலைமகட்குக் கூறல்.

(வ - று.)

தேமாம் பொழிற்றில்லைச் சிற்றம் பலத்துவிண் ணோர்வணங்க
நாமா தரிக்க நடம்பயில் வோனை நண் ணுதவரின்
வாமான் கலைசெல்ல நின்ரூர் கிடந்தநம் அல்லல்கண்டால்
நாமா அறிகில ராயினென் னுஞ்சொல்லுந் தன்மைகளே.

(திருக் உகூக.)

செலவுநினைந் துரைத்தல்

என்பது, வரைவுடம்படாமையின் தோழி தலைமகனைடு புலந்து கூறக் கேட்டு, அக்குறிப்பறிந்து, இக்கல்லதரின் கண்ணீர் வந்தவாறென்னை வென்று வினவுவாரைப் பெற்றேமாயின், இத்தன்மையை யுடைத்தாகிய மிக்க இருளின்கண் யாமவருழைச் சேறலரிதன்று, சென்றே மாயினு மவ்வாறு சொல்லுவாரில்லையெனத், தலைமகள் செலவு நினைந்து கூறல்.

(வ - று.)

வல்சியின் எண்கு வளர்புற் றகழமல் கும்மிருள்வாய்ச்
செல்வரி தன்றுமன் சிற்றம் பலவரைச் சேரலர்போல்
கொல்களி யீயம் குறுகா வகைபிடி தானிடைச்செல்
கல்லதர் என்வந்த வாறென்ப வர்ப்பெறின் கார்மயிலே.

(திருக். உகூச)

பொலிவழி வுரைத்து வரைவுகடாதல்

என்பது, தலைமகடன்னை யெதிர்ப்படலுற்று வருந்தா நின்றமை நிறைப்புறமாகக் கேட்ட தலைமகன் குறியிடை வந்து நிற்பத், தோழி யெதிர்ப்பட்டு, என் ஐயரதுகாவலை நீவி, நின் வயத்தளாய் நின்று, பொலிவழிந்து வருந்தா நின்றவளை நீ வரைந்து கொள்ளாதிவ்வாறிகழ்ந்து மதித்தற்குக் காரண மென்னை வெனத், தலைமகள் பொலிவழிவு கூறி வரைவுகடாதல்.

(வ - று.)

வாரிக் களிற்றின் மருப்புகு முத்தம் வரைமகளிர்
வேரிக் களிக்கும் விழுமலை நாட விரிதிரையின்
தாரிக் களிக்கமர் நன்மாச் சடைமுடி நம்பர்தில்லை
ஓரிக் களிக்கரு மஞ்ஞையிந் நீர்மையென் எய்துவதே.

(திருக். உகஅ) (உக)

வரைவுமுடுக்கம் முற்றும்.

உச. வரைபொருட்பிரிதல்

அறிஉ. மூலைவிலை கூறலும் வரைவுடம் படுத்தலும்
வரைபொருட் கேகலை யுரையவட் கென்றலும்
நீகூ றென்றலுஞ் சொல்லா தேகலும்
பிரிந்தமை கூறலு நெஞ்சோடு கூறலும்
நெஞ்சோடு வருந்தலும் வருத்தங்கண் டுரைத்தலும்
வற்பு றுத்தலும் வன்புறை யழிதலும்
வாய்மை கூறலு மன்னவன் மெய்யுரை
தேறுது புலம்பலுங் காலமறைத் துரைத்தலுங்
தூதுவர வுரைத்தலுந் தூதுகண் டழுங்கலு
மெலிவு கண்டு செவிலி யுரைத்தலு
மேவிய செவிலி கட்டுவைப் பித்தலுங்
கலக்குற்று நிற்றலுங் கட்டுவித்தி கூறலும்
வேலனை யழைத்தலு மின்ன லெய்தலும்
விலக்க நினைத்தலு நிலைமை யுரைத்தலும்
அறத்தொடு நிற்றலு மையந் தீர்த்தலும்
அவன்வெறி விலக்கலுஞ் செவிலிக்குத் தோழி
அறத்தொடு நிற்றலும் நற்றாய்க்குச் செவிலி

அறத்தொடு நிற்றலுந் தேர்வ வுரைத்தலு
மணமுரசு கேட்டு மகிழ்ந்து ரைத்தலும்
ஐயுற்றுக் கலங்கலு மவனிதி காட்டலும்
ஆறைந் துடனே கூறிய மூன்றும்
வரைபொருட் பிரிதலா மென்மனூர் புலவர்.

என்பது, முலைவிலை கூறல், வருமது கூறி வரைவுடம் படுத்தல், வரை பொருட் பிரிவை யுரையெனக் கூறல், நீயே கூறென்றல், சொல்லாதேதகல், பிரிந்தமை கூறல், நெஞ்சொடு கூறல், நெஞ்சொடு வருந்தல், வருத்தங் கண்டுரைத்தல், வழி யொழுகி வற்புறுத்தல், வன்புறை யெதிரழிந்திரங்கல், வாய்மை கூறி வருத்தந் தணித்தல், தேருது புலம்பல், காலமறைத் துரைத்தல், தூது வரவுரைத்தல், தூது கண்டழுங்கல், மெலிவு கண்டு செவிலி கூறல், கட்டுவைப்பித்தல், கலக்கமுற்று நிற்றல், கட்டுவித்தி கூறல், வேலனை யழைத்தல், இன்னலெய்தல், வெறி விலக்குவிக்க நினைத்தல், அறத்தொடு நிற்றலை யுரைத்தல், அறத்தொடு நிற்றல், ஐயந்தீரக் கூறல், வெறி விலக்கல், செவிலிக்குத் தோழியறத்தொடு நிற்றல், நற்றாய்க்குச் செவிலி யறத்தொடு நிற்றல், தேர்வவு கூறல், மணமுரசு கேட்டு மகிழ்ந் துரைத்தல், ஐயுற்றுக்கலங்கல், நிதிவவு கூருநிற்றல் ஆகிய முப்பத்துமூன்றும் வரைபொருட் பிரிதலாம்.

முலைவிலை கூறல்

என்பது, வரைவு முடுக்கப்பட்ட தலைமகன் யான் வரைவொடு வருதற்கு நீ சென்று அவள் ஐயன்மாரை முலைவிலை கேட்பாயாக வென, எல்லாவற்றினு நின்வரைவை யெமரேற்றுக் கொளினல்லது விலை கூறுவாயின் அவளுக் கேழுலகும் விலை போதாதெனத், தோழி முலைவிலை கூறல்.

(வ - று)

குறைவிற்கும் கல்விக்கும் செல்விற்கும் நின்குலத் திற்கும்வந்தோர்
நிறைவிற்கும் மேதகு நீதிக்கும் ஏற்பினல் லானிலையின்
இறைவிற் குலாவரை யேந்திவண் டில்லையன் ஏழ்பொழிலும்
உறைவிற் குலாநுத லாள்விலை யோமெய்ம்மை ஓதுநர்க்கே.

(திருக். உசுசு)

வருமது கூறி வரைவுடம்படுத்தல்

என்பது, முலைவிலை கூறிய தோழி, நீ வரைவொடு வாராது, இரவருள் செய்யாநின்ற விதுகெர்ப்பத்துக் கேதுவானல் கம்

மேல்லார்க்கும் பொல்லாதாம், அது படாம லெமராற் ரெடுக்கப் பட்ட வருங்கலங்களீ விரைய வரவிட்டு அவளீ வரைந்தெய்துவா யாகவென, மேல்வரு மிடுக்கண் கூறித் தலீமகனீ வரைவுடம் படுத்தா நிற்றல்.

(வ - று.)

வடுத்தன நீள்வகிர்க் கண்ணீவெண் ணீத்தில வாணகைக்குந்
தொடுத்தன நீவிடுத் தெய்தத் துணியென்னைத் தன்ரெழும்பீற்
படுத்தநன் லீள்கமுல் ஈசர்சிற் றம்பலம் தாம்பணியார்க்
கடுத்தன தாம்வரிற் பொல்லா திரவினின் ஆரருளே.

(திருக். உசுஎ).

வரைபொருட் பிரிவை யுரையெனக் கூறல்

என்பது, மேல்வருமது கூறி வரைவுடம்படுத்தின தோழிக்கு, யான் போய் நுமர் கூறு நிதியமுந் தேடிக்கொண்டு, நும்மையும் வந்து மேவுவேன், நீ சென்று அவள் வாடாதவண்ணம் யான் பிரிந்தமை கூறி யாற்றுவித்துக்கொண் டிருப்பாயாக வெனத், தலீமகன் ருன் வரைபொருட்குப் பிரிகின்றமை கூருநிற்றல்.

(வ - று.)

குன்றங் கிடையுங் கடந்துமர் கூறும் நிதிகொணர்ந்து
மின்றங் கிடைநும்மை யும்வந்து மேவுவன் அம்பலஞ்சேர்
மன்றங் கிடைமரு தேகம்பம் வாஞ்சியம் அன்னபொன்னீச்
சென்றங் கிடைகொண்டு வாடா வகைசெப்பு தேமொழியே.

(திருக். உசுஅ)

நீயே கூறென்றல்

என்பது, பிரிவறிவிப்பக் கூறின தலீமகனுக்கு, நீ யிரவு வரினும் பகற்பிரிந்து செல்வையென வுட்கொண்டு, கின்னெடு கூடிய வப்பொழுதும் யானுயிர் வாழேனென்று நினைந்திருப் பாளுக்குத், தாழேனென்னுமுரை முன்னுக கின்பிரிவை நீயே சொல்லிப் போவாயாகவென, அவன் விரைய வருவது காரணமாகத் தோழி தலீமகள் பிரிவாற்றுமை கூரு நிற்றல்.

(வ - று.)

கேழே வரையுமில் லோன்புலி யூர்ப்பயில் கிள்ளையன்ன
யாழேர் மொழியாள் இரவரி னும்பகற் சேறியென்று

வாழே னெனவிருக் கும்வரிக் கண்ணியை நீவருட்டித்
தாழே னெனவிடைக் கட்சொல்லி யேகு தனிவள்ளலே.

(திருக் உகக)

சொல்லாதேகல்

என்பது, நீயே கூறென்ற தோழிக்கு, யானெவ்வாறு கூறினும் அவள் பிரிவுடம்படா ளாதலி னெருகாலும் வரைந்து கொள்கையில்லை, யான் விரைய வருவேன், அவ்வளவும் நீ யாற்று வித்துக்கொண்டிருப்பாயாக வெனக் கூறித் தலைமகன் தலை மகளுக்குச் சொல்லாது பிரியா நிற்றல்.

(வ - று.)

வருட்டிற் றிகைக்கும் வசிக்கிற் றுளங்கும் மனமகிழ்ந்து
தெருட்டிற் றெளியலள் செப்பும் வகையில்லை சீரருக்கன்
குருட்டிற் புகச்செற்ற கோன்புலி யூர்குறு கார்மனம்போன்
றிருட்டிற் புரிகுழ லாட்கெங்ங னேசொல்லி யேகுவனே.

(திருக். உஎ0)

(சு - ரை.) வருட்டின் திகைக்கும் - நுதல், தோள் முதலாயின வற்றைத் தைவந்து ஒன்று உரைக்கின மயங்கும். வசிக்கின் துளங்கும் - இன்சொல்லால் வசீகரப் படுத்தி (தன்வயப்படுத்தி) பிரிவுரைப்பின் அது கண்டு உள் நடுங்கும்.

பிரிந்தமை கூறல்

என்பது, தலைமகன் முன்னின்று பிரிவுணர்த்த மாட்டா மையின் சொல்லாது பிரியாநிற்பத், தோழி சென்று, நமராற் றெடுக்கப்பட்ட வெல்லா நிதிபத்தையு மொருங்கு வரவிட்டு நின்னை வரைந்துகொள்வானுக அழற்கடலெறியே பொருள்தேடப் போயினன், அப்போக்கு, அழற்கடலுஞ் சென்றமையா னமக்குத் துன்பமென்பேனே, வரைவு காரணமாகப் பிரிந்தானுதலின் நமக்கின்ப மென்பேனுவெனப், பொதுப்படக் கூறி, வரைவு காரணமாகப் பிரிந்தானுதலி னிது நமக்கின்பமேயெனத், தலைமகள் வருந்தாம லவன் பிரிந்தமை கூறல்.

(வ - று.)

நல்லாய் நமக்குற்ற தென்னென் றுரைக்கேன் நமர்தொடுத்த
எல்லா நிதியும் உடன்விடுப் பானிமை யோரிறைஞ்சும்
மல்லார் கழலழல் வண்ணர்வண் டில்லை தொழார்களல்லாற்
செல்லா அழற்கடம் இன்றுசென் றார்நம் சிறந்தவரே.

(திருக். உஅக)

நெஞ்சொடு கூறல்

என்பது, பிரிந்தமை கூறக் கேட்டு வருந்தாநின்ற நெஞ்சிற்கு, நமக் கேதம் பயக்கு மொழுக்கமொழிந்து, குற்றந்தீர்ந்த முறைமை யாகிய வொழுக்கத்துப் பிரிந்தவிது, நம்மைக் கெடுக்குமென்று நீ கருதின் இதுவொழிய நமக்கின்புற்று வாழு முபாயம் வேறுளதோவெனத், தலைமகள் அந்நெஞ்சின் வருத்தந்தீரக் கூறல்.

(வ - று.)

அருந்தும் விடமணி யாமணி கண்டன்மற் றண்டர்க்கெல்லாம்
மருந்தும் அமிர்தமும் ஆகுமுன் னேன்றில்லை வாழ்த்தும்வள்ளல்
திருந்துங் கடனெறி செல்லுமிவ் வாறு சிதைக்குமென்றுள்
வருந்தும் மடநெஞ்ச மேயென்ன யாமினி வாழ்வகையே.

(திருக். உஎஉ)

நெஞ்சொடு வருந்தல்

என்பது, பிரிந்தமை கூறக் கேட்ட தலைமகள், அன்றவரை விடாதென்னை விட்டவர் தேர்ப்பின் சென்ற நெஞ்சம், இன்று மவ்வாறு செய்யாதென்னை வருத்துகின்றதெனத், தன்னெஞ் சொடு வருந்தல்.

(வ - று.)

ஏர்ப்பின்னை தோண்முன் மணந்தவன் ஏத்த எழிறிகழுஞ்
சீர்ப்பொன்னை வென்ற செறிகழ லோன்றில்லைச் சூழ்பொழில்வாய்க்
கார்ப்புன்னை பொன்னைவிழ் முத்த மணலிற் கலந்தகன்ஞர்
தேர்ப்பின்னைச் சென்றவெ னெஞ்சென் கொலாமின்று செய்கின்றதே.

(திருக். உஎக)

வருந்தங்ணண் டுரைத்தல்

என்பது, தலைமகடன் நெஞ்சொடு வருந்தக் கண்ட தோழி, இத்தன்மைத்தாகிய வெற்பராகலிற் ருழாது விரைய வரைவொடு வருவாராதலால் நீ யின்னுமையை யடையாதொழிவாயாக வென்று, அவள் வருத்தந்தீரக் கூறல்.

(வ - று.)

கானமர் குன்றர் செவியுற வாங்கு கணைதுணையாம்
மானமர் நோக்கியர் நோக்கென மானம் ரெடைமடக்கும்

வானமர் வெற்பர்வண் டில்லியின் மன்னை வணங்கலர்போல்
தேனமர் சொல்லிசெல் லார்செல்லல் செல்லல் திருநுதலே.

(திருக். உஎசு)

(சு - ரை.) தேனமர் சொல்லி, தில்லியின் மன்னை வணங்கலர் போல் செல்லல் செல்லல் எனக் கூட்டுக. செல்லல் செல்லல் - இன்னாமையை அடையாதொழி யாயாக.

வழியொழுகி வற்புறுத்தல்

என்பது, தலைமகள் வருத்தங்கண்ட தோழி, அவளை வழி யொழுகி யாற்றுவிக்கவேண்டு மளவாகலி னற்றுமைக்குக் காரண மாகியவற்றைக் கூறித், தானுமவளொடு வருத்தமுற்று, அது கிடக்க, இம்மலர்ப்பாவையை அன்னட்கிவ்வேறுபாடு வந்தவா றென்னேவென்று, அயலவரை யுருகிற்பரா தலால் நீ யாற்ற வேண்டுமென்று அவள் வழியொழுகி வற்புறுத்தல்'

(வ - று.)

மதுமலர்ச் சோலையும் வாய்மையும் அன்பும் மருவிவெங்கான்
கதுமெனப் போக்கும் நிதியின ருக்குமுன் னிக்கலுழ்ந்தால்
நொதுமலர் நோக்குமொர் மூன்றுடை யோன்றில்லை நோக்கலர் போல்
இதுமலர்ப் பாவைக்கென் னேவந்த வாறென்பர் ஏந்திழையே.

(திருக். உஎடு)

வன்புறை யெதிரழிந்திரங்கல்

என்பது, வழியொழுகி வற்புறுத்தின தோழியோடு, தலைமகன் வரைவு நீடுதலால் தமக்கோர் பற்றுக்கோடு இன்றி வருந்துந் திருவினையுடையார்க்கு அவன் வரைவு மிகவுமினிது, யானற்றேனெனத், தலைமகள் வன்புறை யெதிரழிந் திரங்கல்.

(வ - று.)

வந்தாய் பவரையில் லாமையில் முட்டை இலையமந்தி
பந்தா டிரும்பொழிற் பல்வரை நாடன்பண் போவினிதே
கொந்தார் நறுங்கொன்றைக் கூத்தன்றென் றில்லை தொழார்குழுப்போல்
இந்தா குலமுற்றுப் பற்றின்றி நையுந் திருவினர்க்கே.

(திருக். உஎசு)

வாய்மை கூறி வருத்தந் தணித்தல்

என்பது, வரைவு நீடுதலான் வன்புறை யெதிரழிந்து வருந்திய தலைமகளுக்கு, அவர் சொன்ன வார்த்தை தினக்குப் பொய்யென்பதே கருத்தாயின் இவ்வுலகத்து மெய்யென்பது

சிறிதுமில்லையெனத், தோழி தலைமகன் வாய்மை கூறி, அவள் வருத்தந் தணியா நிற்றல்.

(வ - று.)

மொய்யென்ப தேயிழை கொண்டவன் என்னைத்தன் மொய்கழற்காட்
செய்யென்ப தேசெய்த வன்றில்லைச் சூழ்கடற் சேர்ப்பர்சொல்லும்
பொய்யென்ப தேகருத் தாயிற்புரிகுழற் பொற்றொடியாய்
மெய்யென்ப தேதுமற் றில்லைகொ லாமிவ் வியலிடத்தே.

(திருக். உஎஎ)

தேருது புலம்பல்

என்பது, தலைமகன் வாய்மை கூறி வருத்தந் தணியாநின்ற தோழிக்கு, யான் அவர் கூறிய மொழியின்படியே மெய்ம்மையைக் கண்டுவைத்தும் என்னெஞ்சமுநிறையும் என் வயமாய்நிற்கின்றன வில்லை, அதுவேயுமன்றி எனதுயிரும் பொறுத்தற் கரிதாகா கின்றது, இவை இவ்வாறுதற்குக் காரணம் யாதென்றறிகின்றிலே னெனத், தான் றேறுமை கூறிப் புலம்பா நிற்றல்.

(வ - று)

மன்செய்த முன்னுள் மொழிவழி யேயன்ன வாய்மைகண்டும்
என்செய்த நெஞ்சும் நிறையுமில் லாவென தின்னுயிரும்
பொன்செய்த மேனியன் றில்லையு ளூரிற் பொறையரிதாம்
முன்செய்த தீங்குகொல் காலத்து நீர்மைகொல் மொய்குழலே.

(திருக். உஎஅ)

காலமறைத்துரைத்தல்

என்பது, தேறுமை கூறிப் புலம்புகின்ற தலைமகள் காந்தள் கருவுறக் கண்டு, இஃதவர் வரவு குறித்த காலமென்று கலங்க, நம்முடைய ஐயன்மார் தினைக்கதிர் காரணமாகக் கடவுளைப் பராவ, அக்கடவுளாணையாற் காலமன்றியுங் கார்நீரைச் சொரிய, அதனை யறியாது, காலமென்று இக்காந்தள் மலர்ந்தன, நீயதனைக் காலமென்று கலங்கவேண்டாவெனத், தோழி அவளை யாற்றுவித் தற்குக் காலமறைத்துக் கூறு நிற்றல்.

(வ - று.)

கருந்தினை யோம்பக் கடவுட் பராவி நமர்கலிப்பச்
சொரிந்தன கொண்மூச் சுரந்ததன் பேரரு ளாற்றெழும்பிற்

பரிந்தெனை யாண்டசிற் றம்பலத் தான்பரங் குன்றிற் றுன்றி
விரிந்தன காந்தள் வெருவரல் காரென வெள்வகீயே.

(திருக். உஎக)

தூதுவர வுரைத்தல்

என்பது, காலமறைத்த தோழி, ஒரு தூது வந்து தோன்ரு நின்றது, அஃது இன்னார் தூதென்று தெரியாதெனத், தானின் புறவோடு நின்று, அவள் மனமகிழும்படி தலைமகளுக்குத் தூது வரவுரைத்தல்.

(வ - று.)

வென்றவர் முப்புரம் சிற்றம் பலத்துணின் ரூடும்வெள்ளீக்
குன்றவர் குன்ரு அருடரக் கூடினர் நம்மகன்று
சென்றவர் தூதுகொல் லோவிருந் தேமையும் செல்லல்செப்பா
நின்றவர் தூதுகொல் லோவந்து தோன்றும் நிரைவகீயே.

(திருக். உஅ0)

தூதுகண்டழுங்கல்

என்பது, தூதுவர வுரைப்பக் கேட்ட தலைமகள், மனமகிழ் வோடு நிஸ்ரு, இஃது அயலாரது தூதாகையால் இவை வருவன செல்வனவாகா நின்றன', காதலர் தூதின்று வாராதிருக்கின்ற தென்செயக் கருதி யென்றறிகின்றிலே னென்று, ஏதிலார் தூது கண்டழுங்கல்.

(வ - று.)

வருவன செல்வன தூதுக ளேதில வான்புலியூர்
ஒருவன தன்பரின் இன்பக் கலவிகள் உள்ளுருகத்
தருவன செய்தென தாவிகொண் டேகியென் நெஞ்சிற்றம்மை
இருவின காதலர் ஏதுசெய் வானின் றிருக்கின்றதே.

(திருக். உஅ0)

மெலிவுகண்டு செவிலிகூறல்

என்பது, ஏதிலார் தூதுகண் டழுங்காகின்ற தலைமகளைச் செவிலி யெதிர்ப்பட்டு, அடியிற்கொண்டு முடிகாறு நோக்கி, இவள் பண்டைத் தன்மையளல்லல், இவ்வாறு மெலிதற்குச் சேயினதாட்சியிற் பட்டனள்போலு மென்றறிகின்றிலேனென்று, அவள் மெலிவுகண்டு கூறுகிற்றல்.

(வ - று.)

வேயின மென்றோள் மெலிந்தொளி வாடி விழிபிறிதாய்ப்
பாயின மேகலை பண்டையள் அல்லள் பவளச்செவ்வி
ஆயின ஈசன் அமரர்க் கமரன்சிற் றப்பலத்தான்
சேயின தாட்சியிற் பட்டன ளாமித் திருந்திழையே.

(திருக். உஅஉ

கட்டுவைப்பித்தல்

என்பது, மெலிவுகண்ட செவிலி, அவள் பருவங்கூறி, இவ் வணங்குற்ற நோயைத் தெரியவறிந்துரைமி னெனக் கட்டுவித்திக் குரைத்துக் கட்டுவைப்பித்தல்.

(வ - று)

சுணங்குற்ற கொங்கைகள் சூதுற் றிலசொல் தெளிவுற்றில
குணங்குற்றங் கொள்ளும் பருவ முரூள்குறு காவசுரர்
நிணங்குற்ற வேற்சிவன் சிற்றம் பலநெஞ் சுருதவர்போல்
அணங்குற்ற நோயறி வுற்றுரை யாடுமின் அன்னையரே.

(திருக். உஅஊ)

கலக்கமுற்று நிற்றல்

என்பது, செவிலி கட்டுவைப்பியா நிற்ப, இவளுள்ளங் ஓடியவாறு முழுதையும் புலப்படுத்தி, நம்மை வருத்தி, அயலா ரன்று மொழியாத பழியையும் வெளிப்படக்கூறி, எம்மிடத் துண்டாகிய நாணினையுந்தள்ளி, எங்குடியினையுங் குற்றப்படுத்தி யல்லவே இக்கட்டுவித்தி நிற்கப்புகுகின்ற தெனத், தோழி கலக்க முற்று நில்லா நிற்றல்.

(வ - று.)

மாட்டியன் றேயெம் வயிற்பெரு நாணினி மாக்குடிமா
சூட்டியன் றேநிற்ப தோடிய வாறிவள் உள்ளமெல்லாம்
காட்டியன் றேநின்ற தில்லைத் தொல் லோணக்கல் லாதவர்போல்
வாட்டியன் றேர்குழ லார்மொழி யாதன வாய்திறந்தே.

(திருக். உஅசு)

கட்டுவித்தி கூறல்

என்பது, தோழி கலக்கமுற்று நில்லா நிற்ப, இருவரையும் நன்மையாகக் கூட்டுவித்த தெய்வம் புறத்தார்க் கிவ்வொழுக்கம்

புலப்படாமல் தானிட்ட நெல்லின்கண் முருகணங்கு கட்ட, இதனை யெல்லீருங் காண்மின், இவளுக்கு முருகணங் கொழியப் பிறிதொன்றுமில்லை யெனக், கட்டுவித்தி நெற்குறி காட்டிக் கூறுகிற்றல்.

(வ - று.)

குயிலிதன் றேயென்ன லாஞ்சொல்லி கூறன்சிற் றம்பலத்தான்
இயலிதன் றேயென்ன லாகா இறைவிறற் சேய்கடவும்
மயிலிதன் றேகொடி வாரணங் காண்கவன் சூர்தடிந்த
அயிலிதன் றேயிதன் றேநெல்லிற் றோன்றும் அவன்வடிவே.

(திருக். உஅஅ)

வேலனை யழைத்தல்

என்பது, கட்டுவித்தி முருகணங் கென்று கூறக்கேட்டு, இப் பாலன் இக்குடியின்கட் பிறந்து நம்மை யிவ்வாறு நிற்பித்த பண்பினுக்கு, வேலன் புகுந்து வெறியுமாடுக, அதன்மேல் மறிய மறுக்க வெனத் தாயர் வேலனை யழைத்தல்.

(வ - று.)

வேலன் புகுந்து வெறியா டுகவெண் மறியறுக்க
காலன் புகுந்தவி யக்கழல் வைத்தெழிற் றில்லைநின்ற
மேலன் புகுந்தென்கண் நின்றுன் இருந்தவெண் காடனைய
பாலன் புகுந்திப் பரிசினின் நிற்பித்த பண்பினுக்கே.

(திருக். உஅசு)

இன்னலெய்தல்

என்பது, வெறியாடுதற்குத் தாயர் வேலனை யழைப்பக் கேட்ட தலைமகள், இருவாற்றானும் நமக்குயிர்வாழும் நெறியில்லை யெனத், தன்னுள்ளே கூறி இன்னலெய்தா நிற்றல்.

(வ - று.)

அயர்ந்தும் வெறிமறி யாவி செகுத்தும் விளர்ப்பயலார்
பெயர்ந்தும் ஒழியா விடினென்னை பேசுவ பேர்ந்திருவர்
உயர்ந்தும் பணிந்தும் உணரான தம்பலம் உன்னலரின்
துயர்ந்தும் பிறிதின் ஒழியினென் ஞதும் துறைவனுக்கே.

(திருக். உஅள்)

வெறிவிலக்குவிக்க நினைதல்

என்பது, இருவாற்றானும் நமக்குயிர்வாழும் நெறியில்லை யாதலால் துறைவற்குற்ற நோயைப் பிறர் சிதைக்கப்படின், நாண் துறந்தும் வெறி விலக்குவிப்பனெனத், தலைமகடோழியைக் கொண்டு வெறி விலக்க நினைதல்.

(வ - று.)

சென்றூர் திருத்திய செல்லனின் றூர்கள் சிதைப்பரென்றூல்
நன்று அழகுதன் றேயிறை நில்லை நொழாரினைந்தும்
ஒன்றும் இவட்கு மொழி நல்கில் லேன்மொழி யாதுமுய்யேன்
குன்றூர் துறைவர்க் குறுவேன் உரைப்பனிக் கூர்மறையே.

(திருக். உஅஅ

அறத்தொடு நிற்றலை யுரைத்தல்

என்பது, நாண்டுறந்தும் மறையுரைத்தும் வெறிவிலக்குவிக்க நினைக்கின்ற தலைமகள், மேலறத்தொடு நிற்பாளாக, அயலாரேசுக, ஊர்நகுக அதுவேயுமன்றி, யாயும் வெகுள்வளாக, அதன்மேல் யுமென்னை முனிவாயாக, நீ தேறுயாகில் சூளுற்றுத் தருவேன், யான்சொல்லுகின்ற இதனைக் கேட்பாயாக வெனத் தோழிக்குக் கூறு நிற்றல்.

(வ - று.)

யாயும் தெறுக அயலவர் ஏசுக ஊர்நகுக
நீயும் முனிக நிகழ்ந்தது கூறுவல் என்னுடைய
வாயும் மனமும் பிரியா இறைநில்லை வாழ்த்துநர்போல்
தூயன் நினக்குக் கடுஞ்சூள் தருவன் சுடர்க்குழையே.

(திருக். உஅக)

அறத்தொடு நிற்றல்

என்பது, அறத்தொடு நிற்பாளாக முன்தோற்றுவாய் செய்து, எம்பெருமாற்குப் பழிவருங்கொல்லோ வென்னுமையத் தோடு நின்று, யாம் முன்பு ஒருநாள் கடற்கரையிடத்தே வண்டல் செய்து விளையாடா நின்றேமாக, அந்நேரத்து, ஒரு தோன்றல், நும்வண்டல் மணக்கு யாம் விருந்தென்று வந்து நின்றபொழுது, நீ பூக்கொய்யச் சிறிது புடை பெயர்ந்தாய், அந்நிலைமைக்கண், கீழ்காற்று மிகுதலால், கரைமேலேறுங் கடல், மேல்வந்துற்றது, உற

யான்தோழியோ தோழியோ வென்று நின்னை விளித்தேன், அது கண்டிரங்கி, அவன் அருளொடு வந்து தன்கையைத் தந்தான், யானும் மயக்கத்தாலே அதனை நின் கையென்று தொட்டேன், அவனும் பிறிதொன்றுஞ் சிந்தியாது, என்னுயிர்கொண்டு தந்து, என்னைக் கரைக்கண் உய்த்துப்போயினன், அன்று என் காணினல் நினக்கு அதனைச் சொல்ல மாட்டிற்றிலேன், இன்று இவ்வாருயின பின் இது கூறினேன், இனி நினக்கடுப்பது செய்வாயாகவெனத் தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நில்லா நிற்றல்.

(வ - று.)

வண்டலுற் றேமெங்கண் வந்தொரு தோன்றல் வரிவளையீர்
உண்டலுற் றேமென்று நின்றதொர் போழ்துடை யான்புலியூர்க்
கொண்டலுற் றேறுங் கடல்வர வெம்முயிர் கொண்டுதந்து
கண்டலுற் றேர்நின்ற சேரிச்சென் றுனைர் கழலவனே.

(திருக். உகo)

ஐயந்தீரக் கூறல்

என்பது, எம்பெருமாற்குப் பழிவருமோவென்று ஐயுற்று அறத்தொடு நின்ற தலைமகள் குறிப்பறிந்த தோழி, அவ்வையந்தீர, கங்குடிக்குப் பழிவரினும் அவற்குப் பழிவாராமல் மறைத்துக் கூறுமாறென்னையெனத், தான் தலைமகளைப் பாதுகாத்தல் தோன்றக் கூறு நிற்றல்.

(வ - று)

குடிக்கலர் கூறினுங் கூரு வியன்றில்லைக் கூத்தனதாள்
முடிக்கல ராக்குமொய் பூந்துறை வற்கு முரிபுருவ
வடிக்கலர் வேற்கண்ணி வந்தன சென்றுநம் மாயறியும்
படிக்கல ராமிவை யென்னும் மறைக்கும் பரிசுகளே.

(திருக். உகக)

வெறிவிலக்கல்

என்பது, தலைமகளை ஐயந்தீர்த்து, வெறிக்களத்தே சென்று, வேலனை நோக்கிப், புனலிடைவீழ்ந்து கெடப்புகவந் தெடுத்துய்த்த கதிர்த்தோள் நிற்க, இந்நோய் தீர்த்தற்குப் பிறிதோருபாயத்தைக் கருதும் நின்னைப்போல, இவ்வுலகத்தின்கண் அறி வுடையாரில்லை யென, மேலறத்தொடு நிற்பாளாகத்தோழி வெறிவிலக்கல்.

(வ - ரு.)

விதியுடை யாருண்க வேரி விலக்கலம் அம்பலத்துப்
பதியுடை யான்பரங் குன்றினிற் பாய்புனல் யாமொழுகக்
கதியுடை யான்கதிர்த் தோணிற்க வேறு கருதுநின்னின்
மதியுடை யார்தெய்வ மேயில்லை கொல்லினி வையகத்தே.

(திருக். உகஉ)

(கு - ரை.) வேரி - கள்.

செவிலிக்குத் தோழி யறத்தொடுநிற்றல்

என்பது, வெறிவிலக்கிநிற்ப, நீ வெறிவிலக்குதற்குக் காரண மென்னே வென்று கேட்ட செவிலிக்கு, நீ போய்ப் புனங் காக்கச் சொல்ல, யாங்கள் போய்த் தினைக்கிளி கடியா நின்றேம், அவ்விடத் தொருயானை வந்து நின்மகளை ஏதஞ்செய்யப் புக்கது, அதனைக் கண்டு அருளுடையா ளொருவ னெடிவந் தணைத்துப் பிறிதொன் றுஞ் சிந்தியாமல் யானையைக் கடிந்து, அவளுயிர் கொடுத்துப் போயினன், அறியாப் பருவத்து நிகழ்ந்ததனை இன்றறியும் பருவ மாதலான், உற்றூர்க்குரியர் பொற்றொடி மகளிரென்பதனை யுட் கொண்டு, இவ்வாறு உள் மெலியா நின்றுள், இனியடுப்பது செய்வாயாகவெனத் தோழி அறத்தொடு நிற்றல்.

(வ - ரு.)

மனக்களி யாயின்றி யான்மகிழ் தூங்கத்தன் வார்கழல்கள்
எனக்களி யாநிற்கும் அம்பலத் தோனிருந் தண்கயிலைச்
சினக்களி யானை கடிந்தார் ஒருவர்செவ் வாய்ப்பசிய
புனக்கிளி யாங்கடி யும்வரைச் சாரற் பொருப்பிடத்தே.

(திருக். உகஊ)

நற்றாய்க்குச் செவிலி யறத்தொடு நிற்றல்

என்பது, தோழி அறத்தொடு நிற்பக்கேட்ட செவிலி, இளைய ளாகிய இல்வாழ்க்கைச் செல்வத்தையுடைய இவளை என்சொல்லிப் புகழுவோம், முன்னெழு மிரண்டெயிறு முளையாத இளமைப் பருவத்தே அறிவு முதிர்ந்தாளெனத், தலைமகள் கற்புமிகுதி தோன்ற நற்றாய்க் கறத்தொடு நிற்றல்.

(வ - ரு.)

இளையா ளிவளென் றெல்லிப் பரவுதும் ஈரெயிறு
முளையா அளவின் முதுக்குறைந் தாள்முடி சாய்த்நிமையோர்

வகீயா வழுத்தா வருதிருச் சிற்றம் பலத்துமன்னன்
திகீயா வருமரு விக்கயி லைப்பயில் செல்வியையே.

(திருக். உகூ)

தேர்வரவு கூறல்

என்பது, நற்றாய்க்குச் செவிலி அறத்தொடு நில்லாநிற்ப, அந் நிலைமைக்கண் தலைமகனது தேரொலி கேட்ட தோழி, உவகையோடு சென்று, தலைமகளுக் கதன் வரவெடுத்துக் கூறுநிற்றல்.

(வ - று.)

கள்ளினம் ஆர்த்துண் ணும்வண் கொன்றை யோன்றில்லைக்
[கார்க்கடல்வாய்ப்
புள்ளினம் ஆர்ப்பப் பொருதிரை ஆர்ப்பப் புலவர்கடம்
வள்ளினம் ஆர்ப்ப மதுகரம் ஆர்ப்ப வலம்புரியின்
வெள்ளினம் ஆர்ப்ப வரும்பெருந் தேரின்று மெல்லியலே.

(திருக். உகஞ)

மணமுரசுகேட்டு மகிழ்ந்துரைத்தல்

என்பது, தோழி தலைமகளுக்குத் தேர்வரவு கூறுகின்ற அந் நிலைமைக்கண் மணமுரசு கேட்டு, மனையிலுள்ளார் இஃதிவளை நோக்கி ஒலியா நின்றது மணமுரசென வுட்கொண்டு, யாம் பூரண பொற்குடந் தோரண முதலாயினவற்றான் மனையை அலங்கரிப் போமென மகிழ்வொடு கூறுநிற்றல்.

(வ - று)

பூரண பொற்குடம் வைக்க மணிமுத்தம் பொன்பொதிந்த
தோரண நீடுக தூரியம் ஆர்க்கநொன் மாலயற்கும்
காரணன் ஏரணி கண்ணுத லோன்கடற் றில்லையன்ன
வாரண வும்முலை மன்றலென் றேங்கும் மணமுரசே.

(திருக். உகூ)

ஐயுற்றுக்கலங்கல்

என்பது, மணமுரசு கேட்டவள், மகிழ்வொடு நின்று மனையை யலங்கரிப்ப, மிகவுங் களிப்பை யுடைத்தாய நமது சிறந்த நகரின்கண் முழங்கிய இப்பெரிய முரசம் யானெவற்கோ அறிகின்றிலேனெனத், தலைமகள் கலக்கமுற்றுக் கூறல்.

(வ · று.)

அடற்களி யாவர்க்கும் அன்பர்க் களிப்பவன் துன்பவின்பம்
படக்களி யாவண் டறைபொழிற் றில்லைப் பரமன்வெற்பின்
கடக்களி யானை கடிந்தவர்க் கோவன்றி நின்றவர்க்கோ
விடக்களி யாநம் விழுநகர் ஆர்க்கும் வியன் முரசே.

(திருக். உகஎ)

நிதிவரவு கூருநிற்றல்

என்பது, முரசொலிகேட் டையுற்றுக் கலங்கிய தலைமகளுக்கு, நமர் வேண்டினபடியே ஆருங்கலங் கொடுத்து நின்னை வரைந்து கொள்வாராக, யானை கடிந்தார், நமது கடைமுன் கொணர்ந் திறுத்தார் குறைவில்லாத நிதி, இதனை நீ காண்பாயாகவெனத், தோழி மகிழுமனத்தோடு நின்று நிதிவரவு கூறல்.

(வ · று.)

என்கடைக் கண்ணினும் யான்பிற ஏத்தா வகையிரங்கித்
தன்கடைக் கண்வைத்த தண்டில்லைச் சங்கரன் தாழ்கயிலைக்
கொன்கடைக் கண்டரும் யானை கடிந்தார் கொணர்ந்திறுத்தார்
முன்கடைக் கண்ணிது காண்வந்து தோன்றும் முழுநிதியே.

(திருக். உகஅ)

(கு - ரை.) கொன்கடைக்கண் தரும் - தமக்கொரு பயன் கருதாது நமக்கு இறுதியைப் பயக்கும். யானை கடிந்தார் - யானையை முன்பு கடிந்தவர்; களிறுதரு புணர்ச்சி குறித்தது. (உச)

வரைபொருட்பிரிதன் முற்றும்.

ரு. கற்பொழுக்க வியல்

கற்பு

புறநூ. பொற்பமை சிறப்பிற் கற்பெனப் படுவே
மகிழ்வு மூடலு மூட லுணர்த்தலும்
பிரிவும் பிறவு மருவிய தாகும்.

என்பது, அழகிய சிறப்பையுடைய கற்பென்று கூறப்படுவது மகிழ்ச்சியு மூடலு மூடலுணர்த்தலும் பிரிவு மிவைபோல் வன பிறவுமாம். (க)

உரு. மணஞ் சிறப்புரைத்தல்

ஆரூசை. வரைந்த பின்னர் மணஞ்சிறப்புக் கூரூநிற்றல்
மணமுரசு கூறலு மகிழ்ந் துரைத்தலும்
வழிபாடு கூறலும் வாழ்க்கைநலங் கூறலுங்
காதல்கட் டுரைத்தலுங் கற்பறி வித்தலுங்
கற்புப்பயப் புரைத்தலுங் காதன்மரு வுரைத்தலுங்
கலவி யுரைத்தலுங் கருதிய வொன்பதும்
நலமிகு மணமிவை நாடுங் காலே.

என்பது, மணமுரசு கூறல், மகிழ்ந்துரைத்தல், வழிபாடு கூறல், வாழ்க்கை நலங்கூறல், காதல் கட்டுரைத்தல், கற்பறி வித்தல், கற்புப்பயப் புரைத்தல், மருவுதலுரைத்தல், கலவியின்பங் கூறல் ஆகிய வொன்பதும் மணஞ் சிறப்புரைத்தலாம்.

மணமுரசு கூறல்

என்பது, வரைபொருட் பிரிந்து வந்தபின்னர், அருங்கலம் விடுத்தற்கு முன்றிற்கணின்று தலைமகனது முரசு முழங்கக்கண்டு மகிழ்வுற்ற தோழி, நாம் துயரந்தீர நம்மில்லின்கட் புகுந்து நின்று யாணை கடிந்தார் முரசு முழங்குகின்றது, இனியென்ன குறை யுடையோமென, வரைவு தோன்றத் தலைமகளுக்கு மணமுரசு கூரு நிற்றல்.

(வ - று.)

பிரசந் திகழும் வரைபுரை யாணையின் பீடழித்தார்
முரசந் திகழும் முருகியம் நீங்கும் எவர்க்குமுன்னும்
அரசம் பலத்துநின் ரூடும் பிரானருள் பெற் றவரிற்
புரைசந்த மேகலை யாய்துயர் தீரப் புகுந்துநின்றே.

(திருக். உகக)

மகிழ்ந்துரைத்தல்

என்பது, மணமுரசொலி கேட்ட தோழி, சிலம்பன்தந்த பிபறுதற்கரிய தழைகளை வாடாமல்வைத்து, அத்தழையே பற்றுக் கோடாக வாற்றியிருந்தாளெனத், தலைமகளைத் தன்னுள்ளே மகிழ்ந்து கூறல்.

(வ - று.)

இருந்துதி யென்வயிற் கொண்டவன் யானெப் பொழுதுமுன்னும்
மருந்து திசைமுகன் மாற்கரி யோன்றில்லை வாழ்த்தினர்போல்

இருந்து திவண்டன வாலெரி முன்வலஞ் செய்திடப்பால்
அருந்துதி காணு மளவும் சிலம்பன் அருந்தழையே.

(திருக். கூ00)

வழிபாடு கூறல்

என்பது, மணஞ் செய்தபின்னர் மணமனை காணவந்த செவிலிக்குக், காவலர் உடம்பு முயிரும்போல வொருவரை யொருவர் இன்றியமையாமையா லிவள் கருத்தைக் கடவார், கமலங்கலந்த தேனுஞ் சந்தன மரமும்போல இயைந்திவள் கற்புவழியே நிற்றலி யுடையராய் இவள் வழியே நின்றொழுகா நின்றனெனத், தோழி தலைமகன் தலைமகள்வழி யொழுகா நின்றமை கூறல்.

(வ · று)

சீரிய லாவியும் யாக்கையும் என்னச் சிறந்தமையால்
காரியல் வாட்கண்ணி யெண்ணக லார்கம லங்கலந்த
வேரியும் சந்தும் வியறந் தெனக்கற்பின் நிற்பரன்னே
காரியல் கண்டர்வண் டில்லை வணங்குமெங் காவலரே.

(திருக். கூ0ச)

வாழ்க்கை நலங்கூறல்

என்பது, மணமனை கண்ட செவிலி மகிழ்வொடு சென்று, நின் மகளுடைய இல்வாழ்க்கை நலத்துக்கு உவமைகூறில், நின்னுடைய இல்வாழ்க்கை நலமல்லது வேறுவமை யில்லையென, கற்றுய்க்குத் தலைமகளது வாழ்க்கை நலங் கூறல்.

(வ - று.)

தொண்டினம் மேவுஞ் சுடர்க்கழ லோன்றில்லைத் தொன்னகரில்
கண்டின மேவுமில் நீயவள் நின்கொழு நன்செழுமென்
தண்டின மேவுநின் டோளவன் யானவள் தற்பணிவோள்
வண்டின மேவுங் குழலாள் அயன்மன்னும் இவ்வயலே.

(திருக். கூ0உ)

காதல் கட்டுரைத்தல்

என்பது, அவள் இல்வாழ்க்கை நலங்கிடக்க, அவன் அவள்மேல் வைத்த காதலான் இவ்வியையன்றிப், பொறையாமென்று கருதி, நுதலின்க ணின்றியமையாத காப்பாகிய பொட்டையு மணியான், இஃதவன் காதலெனத், தலைமகனது காதல்மிகுதி கூறல்.

(வ - று.)

பொட்டணி யானுதல் போயிறும் பொய்போல் இடையெனப்பூண்
இட்டணி யான்றவி சின்மல ரன்றி மிதிப்பக்கொடான்
மட்டணி வார்குழல் வையான் மலர்வண் டுறுதலஞ்சிக்
கட்டணி வார்சடை யோன்றில்லை போலிதன் காதலனே.

(திருக். கூ0கூ)

கற்பறிவித்தல்

என்பது, தலைமகனது காதல் மிகுதி கூறின செவிலி, அது கிடக்க, அவளவனை யொழிய வேறொரு தெய்வத்தைத் தெய்வமாகக் கருதாளாதலால், அவன் தன்னை வணங்காத பகைவரைச் சென்று கிட்டித் திறை கொள்ளச் சென்றுலும், திறைகொண்டு வந்து, அவளில்லத்தல்லது ஆண்டுத் தங்கியறியான், இஃதவர தியல்பெனக் கூறி, நற்றாய்க்குத் தலைமகளது கற்பறிவித்தல்.

(வ - று.)

தெய்வம் பணிகழ லோன்றில்லைச் சிற்றம் பலமனையாள்
தெய்வம் பணிந்தறி யாளென்றும் நின்று திறைவழங்காத்
தெவ்வம் பணியச்சென் றுழுமன் வந்தன்றிச் சேர்ந்தறியான்
பௌவம் பணிமணி யன்னுர் பரிசின்ன பான்மைகளே.

(திருக். கூ0ச)

(சு - ரை.) திறை வழங்காத் தெவ்வம் - திறை கொடாத பகைவர். தெவ்வு - பகை; ஈண்டுத் தெவ்வம் என விரிந்து நின்றது.

கற்புப்பயப் புரைத்தல்

என்பது, கற்பறிவித்த செவிலி, அவள் அவனை யொழிய வணங்காமையின், அவனூருங் களிறும் வினைவயிற் சென்றால் அவ்வினை முடித்துக் கொடுத்துவந்து, தன் பந்தியிடத்தல்லது ஆண்டுத் தங்காதாதலான், அவள் கற்பு அந்திக்காலத்து வட மீனையும் வெல்லுமென, அவள் கற்புப் பயந்தமை நற்றாய்க்குக் கூறல்.

(வ - று)

சிற்பந் திகழ்தரு திண்மதிற் றில்லைச்சிற் றம்பலத்துப்
பொற்பந்தி யன்ன சடையவன் பூவண மன்னபொன்னின்
கற்பந்தி வாய்வட மீனுங் கடக்கும் படிகடந்தும்
இற்பந்தி வாயன்றி வைகல்செல் லாதவன் ஈர்ங்களிறே.

(திருக். கூ0கி)

மருவுதலுரைத்தல்

என்பது, கற்புப் பயப்புரைத்த செவிலி, வேந்தற்குற்றுழிப் பிரியினும், அவனூருந்தேரும் வினை முடித்துத் தன் னிலையினல்லது புறத்துத் தங்காது, அவளும் அவனையொழிய மற்றோர் தெய்வமும் மனத்தானும் நினைந்தறியாள், இஃது இவர் காதலென, அவ்விருவர் காதலும் மருவுதல் கூறல்.

(வ - று.)

மன்னவன் தெம்முனை மேற்செல்லு மாயினும் மாலரியே
றன்னவன் தேர்புறத் தல்கல்செல் லாது வரகுணனுந்
தென்னவன் ஏத்துசிற் றம்பலத் தான்மற்றைத் தேவர்க்கெல்லாம்
முன்னவன் மூவலன் னுளுமற் றோர்தெய்வம் முன்னலரே.

(திருக். கூ0க)

கலவியின்பங் கூறல்

என்பது, இருவர் காதலு மருவுதல் கூறின செவிலி, இவ்விரு வருடைய காதலுங் களிப்புமின்ப வெள்ளத்திடை யழுந்தப் புகுகின்ற தோருயிர் ஒருடம்பாற்றுய்த்த லாராமையான், இரண் டுடம்பைக் கொண்டு, அவ்வின்ப வெள்ளத்திடைக் கிடந்து திளைத்ததனை டொக்கும், அதுவன்றி, அவ்வின்ப வெள்ளமொரு காலத்தும் வற்றுவது முற்றுவதுஞ் செய்யாதென, நற்றாய்க்கு அவர் கலவியின்பங் கூறல்.

(வ - று)

ஆனந்த வெள்ளத் தழுந்துமோ ராருயிர் ஈருருக்கொண்
டானந்த வெள்ளத் திடைத்திளைத் தாலொக்கும் அம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத் தறைகழ லோனருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம்வற் றுதுமுற் றுதிவ் வணிநலமே.

(திருக். கூ0எ) (உ)

மணஞ்சிறப்புரைத்தல் முற்றும்.

கற்பிற் பிரிவின் வகை

அஃதே. ஓதல் காவல் பகைதணி வினையே
வேந்தற் குற்றுழி பொருட்பிணி பரத்தையென்
றாங்கவ் வாறே யவ்வயிற் பிரிவே.

என்பது, ஓதற்பிரிவு, காவற்பிரிவு, பகைதணிவினைப்பிரிவு, வேந்தற் குற்றுழிப்பிரிவு, பொருள் வயிற்பிரிவு, பரத்தையிற் பிரிவு என ஆறுவகைப்படும். (கூ)

உசு. ஓதற் பிரிவு

என்பது, வரைந்துகொண்ட பின்னர்த் தலைமகனுக்கு முதற் பிரிவு ஓதலாதலால் கல்வியின் மிகுதிகூறி நீங்காநிற்றல்.

அதன்வகை

புடுசு. அவற்றுள்,
கல்விநலங் கூறலும் பிரிவுநினை வுரைத்தலும்
கலக்கங்கண் டுரைத்தலுங் காதலர் தமது
வாய்மொழி கூற லாகிய நான்கு
மோதற் பிரிவென வுரைத்திசி னோரே.

என்பது, கல்வி நலங்கூறல், பிரிவு நினைவுரைத்தல், கலக்கங் கண்டுரைத்தல், காதலர் தமது வாய்மொழி கூறல் ஆகிய நான்கும் ஓதற் பிரிவாம்.

கல்விநலங் கூறல்

என்பது, வரைந்துகொண்ட பின்னர், ஓதற்குப் பிரியலுறு கின்ற தலைமகன், தலைமகளுக்குப் பிரிவுணர்த்துவாளை, மிகவுங் கற்றூரே அளவில்லாத பெருமை யுடையராவரெனத், தோழிக்குக் கல்வி நலங் கூறல்.

(வ - று.)

சீரள வில்லாத் திகழ்தரு கல்விச்செம் பொன்வரையின்
ஆரள வில்லா அளவுசென் றூரம் பலத்துணின்ற
ஓரள வில்லா வொருவன் இருங்கழல் உன்னினர்போல்
ஏரள வில்லா அளவின ராகுவர் ஏந்திழையே.

(திருக். கூ0அ)

பிரிவு நினைவுரைத்தல்

என்பது, கல்விநலங் கேட்ட தோழி, அவன் பிரிதற் குறிப் பறிந்து, மிகவுங் கற்றோர் நன்மைக் கெதிரில்லாத தன்மையராவ ரென்பதனை யுட்கொண்டு, நின் புணர்முலையுற்ற புரவலர், அழற் கானத்தே போய்க், கல்வியான் மிக்காரைக் கிட்டி, அவரோடுசாவி,

தங் கல்வி மிகுதி புலப்படுத்தப் பிரியாகின்றாரெனத், தலைமக னேதுதற்குப் பிரிவு நினைந்தமை தலைமகளுக்குக் கூறல்.

(வ . றா.)

வீதலுற் றார்தலை மாலையன் றில்லெமிக் கோன்கழற்கே
காதலுற் றார்நன்மை கல்விசெல் வீதரும் என்பதுகொண்
டோதலுற் றருந் றுணர்தலுற் றார்செல்லன் மல்லழற்கான்
போதலுற் றார்நின் புணர்முலை யுற்ற புரவலரே.

(திருக். கூகக)

கலக்கங் கண்டுரைத்தல்

என்பது, பிரிவு நினைவுரைப்பக் கேட்ட தலைமகளது கலக்கங் கண்ட தோழி, அன்பர் சொற்பா விரும்பின ரென்ன, அச்சொல் இவள் செவிக்கட் காய்ந்த வேல்போலச் சென்றெய்திற்று, இனி மற்றுள்ள பிரிவை யெங்ஙனம் ஆற்றுவளெனத் தன்னுள்ளே கூறு கின்றல்.

(வ - றா.)

கற்பா மதிற்றில்லைச் சிற்றம் பலமது காதல்செய்த
விற்பா விலங்கலெங் கோனை விரும்பலர் போலவன்பர்
சொற்பா விரும்பின ரென்னமெல் லோதி செவிப்புறத்துக்
கொற்பா இலங்கிலை வேல்குளித் தாங்குக் குறுகியதே.

(திருக். கூகஅ)

வாய்மொழி கூறித் தலைமகள் வருந்தல்

என்பது, கலக்கங் கண்டுரைத்த தோழிக்கு, முன்னிலைப் புற மொழியாக, நின்னிற் பிரியேன், பிரிவுமாற்றேனென்று சொனனவர் தாமே பிரிவராயின், இதற்கு நாம் சொல்லுவ தென்னெனெத், தலைமகனது வாய்மொழி கூறித் தலைமகள் வருந்தா கின்றல்.

(வ - றா.)

பிரியா மையுமுயி ரொன்று வதும்பிரி யிற்பெரிதுந்
தரியா மையுமொருங் கேநின் றுசாற்றினர் தையன்மெய்யிற்
பிரியாமை செய்துநின் ரேன்றில்லைப் பேரிய லாரரன்ன
புரியா மையுமிது வேயினி யென்னும் புகல்வதுவே.

(திருக். கூகக) (சு)

ஓதற்பிரிவு முற்றும்.

உஎ. காவற் பிரிவு

என்பது, எல்லா வுயிர்களையும் அரசன் பாதுகாக்க வென்னும் தருமநூல் விதியான் அக் காவற்குப் பிரிதல்.

அதன்வகை

அடுஎ. பிரிவறி வித்தலும் பிரிவுகேட் டிரங்கலும்
வருபவை யிரண்டும் வையங் காவ
லாகு மென்மனு ரழிந்திசி னோரே.

என்பது, பிரிவறிவித்தல், பிரிவுகேட்டிரங்கல் ஆகிய இரண்டும் காவற் பிரிவாம்.

அவற்றுள் பிரிவறிவித்தல்

என்பது, தருமநூல் விதியால், நமருலகத்தைப் பாதுகாப்பான் பிரியக்கருதா நின்றானெனத், தலைமகன் காவலுக்குப் பிரியக்கருதா நின்றமை தோழி தலைமகளுக்கு அறிவியா நிற்றல்.

(வ - று.)

மூப்பான் இளையவன் முன்னவன் பின்னவன் முப்புரங்கள்
வீப்பான் வியன்றில்லை யானரு ளால்விரி நீருலகம்
காப்பான் பிரியக் கருதுகின் றார்நமர் கார்க்கயற்கண்
பூப்பால் நலமொளி ரும்புரி தாழ்குழற் பூங்கொடியே.

(திருக். கூகஉ)

பிரிவு கேட்டிரங்கல்

என்பது, பிரிவறிவித்த தோழிக்கு, முற்காலத்துக் கூரவர்களாற் பாதுகாக்கப்படும் நம்மை வந்து யாணை தெறப்புக, அதனை விலக்கி, நம் முயிர் தந்தவர், இன்று தம்மல்லதில்லாத இக் காலத்துத் தாம் நினைந்திருக்கின்ற திதுவோ, இது தமக்குத் தகுமோவெனத், தலைமகனது பிரிவு கேட்டுத் தலைமகளிரங்கல்.

(வ - று.)

சிறுகட் பெருங்கைத்திண் கோட்டுக் குழைசெவிச் செம்முகமாத்
தெறுகட் டழியமுன் உய்யச்செய் தோர்கருப் புச்சிலையோன்
உறுகட் டழலுடை யோனுறை யம்பலம் உன்னலரின்
துறுகட் புரிகுழ லாயிது வோவின்று சூழ்கின்றதே.

(திருக். கூகஉ) (இ)

காவற்பிரிவு முற்றும்.

உஅ. பகைதணி வினைப்பிரிவு

என்பது, தம்மிற்பகைத்த வேந்தரைப் பகையைத் தணித்து இருவரையும் பொருந்தச் செய்தலாம்.

அதன் வகை

அடுஅ. பிரிவு கூறலும் வருத்தந் தணித்தலு
மிருபகை தணித்தற் கேக லென்ப.

என்பது, பிரிவுகூறல் வருத்தந் தணித்தல் ஆகிய இரண்டும் பகைதணிவினைப்பிரிவாம்.

பிரிவு கூறல்

என்பது, ஒருவரதுள்ள மிகுதியை ஒருவர் தணித்தற்கரி தாகிய இருவேந்தர், தம்முட் பகைத்துடன் மடியப்புகுதா நின்ரு ரெனக்கேட்டு, அவ்விருவரையும் அடக்கவல்ல திறலுடைய ராதலின், அவரைப் பகைதணித்து, அவர் தம்மில் ஒன்றுபட வேண்டி நின்னைப் பிரியக் கருதா நின்ரு ரெனத், தலைமகன் பகை தணிக்கப் பிரியலுரு நின்றமை தோழி தலைமகளுக்குக் கூறல்.

(வ - று.)

மிகைதணித் தற்கரி தாமிரு வேந்தர்வெம் போர்மிடைந்த
பகைதணித் தற்குப் படர்தலுற் ரூர்நமர் பல்பிறவித்
தொகைதணித் தற்கென்னை யாண்டுகொண் டோன்றில்லைச்
[சூழ்பொழில்வாய்
முகைதணித் தற்கரி தாம்புரி தாழ்தரு மொய்குழலே.

(திருக். கூகச)

வருத்தந் தணித்தல்

என்பது, தலைமகனது பிரிவுகேட்டு, உள்ளுடைந்து, தனிமை யுற்று வருந்துகின்ற தலைமகளை, நின்னைவிட்டு அவர் பிரியார், நீ நெருப்பையுற்ற வெண்ணெயும், நீரையுற்ற உப்பும்போல இவ் வாறுருகித் தனிமையுற்று வருந்தா தொழியெனத், தோழி அவளது வருத்தந்தணித்தல்.

(வ - று.)

நெருப்புறு வெண்ணெயும் நீருறும் உப்பும் எனவிங்ஙனே
பொருப்புறு தோகை புலம்புறல் பொய்யன்பர் போக்குமிக்க

விருப்புறு வோரைவிண் ணேரின் மிகுத்துநண் ணுர்கழீயத்
திருப்புறு சூலத்தி னேன்றில்லை போலுந் திருநுதலே.

(திருக். உகஇ) (சு)

பகைதணிவினைப்பிரிவு முற்றும்.

உக. வேந்தற் குற்றுழிப்பிரிவு

என்பது, ஒரு வேந்தனுக்கு ஒரு வேந்தன் தொலைந்து வந்தடைந்தால் அவனுக்கு உதவிசெய்யப் பிரியா நிற்றல்.

அதன் வகை

அருக. பிரிந்தமை கூறலும் பிரிவாற் ருமை
கார்மிசை வைத்தலுங் காரை நோக்கி
வருந்தி யுரைத்தலு மலர்க்குழ லரிவை
கூதிர்கண்டு கவறலுங் குளிர்முன் பனிக்கவள்
நொந்து கூறலு நோக்கிப் பின்பனிக்
கிரங்கி யுரைத்தலு மிளவேனில் கண்டவள்
இன்ன லெய்தலு மிதுவவர் குறித்த
பருவ மாமென வரவு கூறலும்
பருவமறைத் துரைத்தலு மறுத்துரை செய்யலுந்
தேர்வரவு கூறலும் வினைமுற்றி நினைதலும்
நிலைமைநினைந் துரைத்தலு முகிலொடு கூறலும்
வரவெடுத் துரைத்தலு மறவாமை கூறலும்
மற்றிவை யீரேட்டு முற்றுழிப் பிரிவே.

என்பது, பிரிந்தமை கூறல், பிரிவாற்ருமை கார்மிசை வைத்தல், வாளைக்கி வருந்தல், கூதிர்கண்டு கவறல், முன்பனிக்கு நொந்துரைத்தல், பின்பனி நினைந்திரங்கல், இளவேனில் கண்டின்ன லெய்தல், பருவங் காட்டி வற்புறுத்தல், பருவமன்றென்று கூறல், மறுத்துக் கூறல், தேர்வரவு கூறல், வினைமுற்றி நினைதல், நிலைமை நினைந்து கூறல், முகிலொடு கூறல், வரவெடுத்துரைத்தல், மறவாமை கூறல் ஆகிய பதினேறும் வேந்தற்குற்றுழிப் பிரிவாம்.

பிரிந்தமை கூறல்

என்பது, தம்மைவந்து அடைந்த வேந்தனுக்குத் தாம் உதவி செய்வாராக, வெய்ய போரையுடைய பாசறை மேல் நமர் சென்றார், இனி அவ்வேந்தன பகைவராலிடப்பட்ட மதில் இன்றென்னுய் முடியுமோவென, தலைமகன் வேந்தற்குற்றுழிப் பிரிந்தமை தோழி தலைமகளுக்குக் கூறல்.

(வ - று.)

போது குலாய புனைமுடி வேந்தர்தம் போர்முனைமேல்
மாது குலாயமென் னேக்கிசென் றார்நமர் வண்புலியூர்க்
காது குலாய குழையெழி லோனைக் கருதலர்போல்
ஏதுகொ லாய்வினை கின்றதின் றென்னுர் இடுமதிலே.

(திருக். கூகக)

பிரிவாற்றுமை கார்மிசைவைத்தல்

என்பது, பிரிவுகேட்ட தலைமகள், தனது வருத்தங்கண்டு, காதலர் வினைவயிற் பிரிய, நீ வருந்தினுல் வினைமுடியுமாறென்னே வென்ற தோழிக்கு, யான் அவர் பிரிந்ததற்கு வருந்துகின்றே னல்லேன், இக்கார்முகில் சென்று அப்பாசறைக்கண்ணே தோன்றுமாயின், நம்மை நினைந்து ஆற்றுராய், அவ்வினை முடிக்க மாட்டாரென்று அதற்கு வருந்துகின்றேனெனக், கார்மிசை வைத்துத் தனது வருத்தங் கூறல்.

(வ - று.)

பொன்னி வளைத்த புனல்சூழ் நிலவிப் பொலிபுலியூர்
வன்னி வளைத்த வளர்சடை யோனை வணங்கலர்போல்
துன்னி வளைத்தநந் தோன்றற்குப் பாசறைத் தோன்றுங்கொலோ
யின்னி வளைத்து விரிநீர் கவரும் வியன்முகிலே.

(திருக். கூகள)

வாலேக்கி வருந்தல்

என்பது, உற்றுழிப் பிரிந்த தலைமகன், பார்ப்புக்களோடு பெடைக்குருகைச் சேவல் தன் சிறகால் ஒடுக்கிப் பனியான் வரு மிக்க குளிரைப் பாதுகாக்கின்ற இரவின்கண், எனது போதரவு அவளுக் கென்னுங் கொல்லோவெனத், தலைமகள் வடிவை நினைந்து வானேநோக்கி வருந்தா நிற்றல்.

(வ - று.)

கோலித் திகழ்சிற கொன்றின் ஒடுக்கிப் பெடைக்குருகு
பாலித் திரும்பனி பார்ப்பொடு சேவல் பயிலிரவின்
மாலித் தணையறி யாமறை யோனுறை யம்பலமே
போலித் திருநுத லாட்கென்ன தாங்கொலென் போதரவே.

(திருக். கூகஅ)

கூதிர்கண்டு கவறல்

என்பது, விழாநின்ற பனியிடத்து எல்லாரும் நெருப்புத் திரளை மேவாநிற்ப, மலைத்திரளையேறித் துணையில்லா தாரைத் தேடும் புயலினம், நமக்கே யன்றித் தம்மை யடைந்தார்க்கு உதவி செய்யச் சென்ருர்க்கும் சென்று பொருந்துமோ, பொருந்துமாயின், நம்மை நினைந்தாற்ருராய், அவ்வினை முடிக்கமாட்டாரெனத், தலைமகள் கூதிர்கண்டு கவலாநிற்றல்.

(வ - று.)

கருப்பினம் மேவும் பொழிற்றில்லை மன்னன்கண் ஆரருளால்
விருப்பினம் மேவச்சென் ருர்க்குஞ்சென் றல்குங்கொல்
[வீழ்பனிவாய்
நெருப்பினம் மேய்நெடு மாலெழில் தோன்றச்சென் ருங்குநின்ற
பொருப்பினம் ஏறித் தமியரைப் பார்க்கும் புயலினமே.

(திருக். கூகக)

முன்பனிக்கு நொந்துரைத்தல்

என்பது, மக்களே யன்றிப் புள்ளுந்தம் பெடையைச் சிறகால் ஒடுக்கிப், பிள்ளைகளையுந் தழுவி, இனஞ் சூழ வெருவாது துயிலப் பெறுகின்ற இம் மயங்கிருட்கண், இடையருது விழாநின்ற பனியிடைக் கிடந்து வாடித் துயர்வாயாக வென்றென்னைப் பெற்றவளை நோவதல்லது, யான் யாரை நோவேனென, முன்பனிக்காற்ருது தாயொடு நொந்துகூறு நிற்றல்.

(வ - று.)

சுற்றின வீழ்பனி தூங்கத் துவண்டு துயர்கவென்று
பெற்றவ ளேயெனைப் பெற்ருள் பெடைசிற காணெடுக்கிப்
புற்றில வாளர வன்றில்லைப் புள்ளுந்தம் பிள்ளைதழீஇ
மற்றினஞ் சூழ்ந்து துயிலப் பெறுமிம் மயங்கிருளே.

(திருக். கூஉ)

(கு - ரை.) துயர்க - துயர்கூர்வையாக.

பின்பனி நினைந்திரங்கல்

என்பது, இப்பெரிய பனி வையமெங்கும் பரந்து துவலைகளைப் பரப்பியவாறு அவள் பொறுக்கும் அளவன்று, அவளைச் சொல்லுகின்ற தென், எனக்கு மாற்றுதலரிதென்பது போதர, மிக்க தனிமையை உடையார்க்கு இப்பனி வான் சரத்தைத் தருமாயின், அதனோடு ஒக்குமென்று, தலைமகன் தலைமகளது துயர் நினைந்திரங்கா நிற்றல்.

(வ - று.)

புரமன் றயரப் பொருப்புவில் லேந்திப்புத் தேளிர்நாப்பண்
சிரமன் றயனைச்செற் றேன்றில்லைச் சிற்றம் பலமனையாள்
பரமன் றிரும்பனி பாரித்த வாபரந் தெங்கும்வையம்
சரமன்றி வான்றரு மேலொக்கும் மிக்க தமியருக்கே.

(திருக் கூஉக)

இளவேனில் கண்டின்னலெய்தல்

என்பது, மேலு மேலு நிறம் பெற்றிருளாகின்ற இக்குயில்கள், மாம்பொழிலைச் சுற்றும்வந்து பற்றின, இனி உயிர் வாழுமா றொன்றுங் கண்டிலேனெனத், தலைமகள் இளவேனில்கண் டின்னலெய்தல்.

(வ - று.)

வாழும் படியொன்றுங் கண்டிலம் வாழியிம் மாம்பொழிற்றேன்
சூழும் முகச்சுற்றும் பற்றின வாற்றெண்டை யங்கனிவாய்
யாழின் மொழிமங்கை பங்கன்சிற் றம்பல மாதரியாக்
கூழின் மலிமனம் போன்றிரு ளாநின்ற கோகிலமே.

(திருக். கூஉஉ)

(கு - ரை.) கூழின் மலிமனம் - உணவாற் செருக்கு மனம்போல. கோகிலம் - குயில். ஈண்டு இருள் என்றது உவமைக்கண் பண்பைக் குறிக்கும். பொருளின்பால் நிறத்தைக் குறிக்கும். 'புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி, மூக்கிற் கரியா ருடைத்து (உஎஎ) என்னும் திருக்குறளிலும் இங்ஙனம் வருதல் காண்க.

பருவங்காட்டி வற்புறுத்தல்

என்பது, தலைமகன் தான் வருதற்குக் குறித்துப் போகிய கார்ப்பருவத்தின் வரவு கண்டு கலங்கா நின்ற தலைமகளுக்கு, இக்கார்வந்து வானிடத்துப் பரந்தமையால், நம்மைக் கலந்தவர்

தேர், இன்ரூக நாளையாக இங்கே வாரா நிற்பக் காணப்படுவதை இனியுள்ளதெனத், தோழி அப்பருவந் தன்னையே காட்டி அவளை வற்புறுத்தல்.

(வ - று.)

பூண்பதென் றேகொண்ட பாம்பன் புலியூ ரரன்மிடற்றின்
மாண்பதென் றேயெனை வானின் மலரும் மணந்தவர்தேர்
காண்பதன் றேயின்று நாளையிங் கேவரக் கார்மலர்த்தேன்
பாண்பதன் தேர்குழ லாயெழில் வாய்த்த பனிமுகிலே.

(திருக். கூஉங)

பருவமன்றென்று கூறல்

என்பது, காரும் வந்தது, காந்தளு மலரா நின்றன, காதலர் வாராதிருந்த தென்னெவென்று கலங்கிய தலைமகளுக்கு, சிற்றம் பலத்தின்கண்ணே குடமுழா முழங்க, அதனை யறியாது காரென்று கொண்டு, இக்காந்தள் மலர்ந்தன, நீயிதனைப் பருவமென்று கலங்காதொழியெனத், தலைமகன் வரவு நீட்டித்தலால், தோழி அவள் கலக்கந்தீரப் பருவத்தைப் பருவமன்றெனக் கூறல்.

(வ - று.)

தெளிதரற் காரெனச் சீரனம் சிற்றம் பலத்தடியேன்
களிதரக் கார்மிடற் றோனட மாடக்கண் ணீர்முழவம்
துளிதரற் காரென வார்த்தன ஆர்ப்பத்தொக் குன்குழல்போன்
றளிதரக் காந்தளும் பாந்தளைப் பாரித் தலர்ந்தனவே.

(திருக். கூஉசை)

மறுத்துக் கூறல்

என்பது, பருவமன்றென்ற தோழிக்கு, காந்தளேயன்றி இதுவும் பொய்யோவெனத், தோன்றியின் மலரைக் காட்டி, இது பருவமேயென்று, அவளோடு தலைமகள் மறுத்துக் கூறல்.

(வ - று.)

தேன்றிக் கிலங்கு கழலழல் வண்ணன்சிற் றம்பலத்தெங் [ஞண்
கோன்றிக் கிலங்குதிண் டோட்கொண்டற் கண்டன் குழையெழி
போன்றிக் கடிமலர்க் காந்தளும் போந்தவன் கையனல்போல்
தோன்றிக் கடிமல ரும்பொய்ம்மை யோமெய்யிற் றோன்றுவதே.

(திருக். கூஉகு)

தேர்வரவு கூறல்

என்பது, மறுத்துக் கூறின தலைமகளுக்குக், கொண்டல்க ளெட்டுத்திசைக்கண்ணும் வாரா நின்றமையின், இது பருவமே, இனி உடன்ற மன்னர் தம்முட் பொருந்துதலால், கம்மைக் கலந்தவர்தேர், நம்மில்லின்கண் இன்று வந்து தோன்றுமென்று, அவள் கலக்கந்தீரத் தோழி தலைமகனது தேர் வரவு கூறல்.

(வ - று.)

திருமால் அறியாச் செறிகழற் றில்லைச்சிற் றம்பலத்தெம் [சையும்
கருமால் விடையுடை யோன்கண்டம் போற்கொண்டல் எண்டி
வருமால் உடன்மன் பொருந்தல் திருந்த மணந்தவர்தேர்
பொருமால் அயிற்கணல் லாயின்று தோன்றுநம் பொன்னகர்க்கே.

(திருக். கூஉசு)

வினைமுற்றி நினைதல்

என்பது, வேந்தற்குற்றுழிப் பிரிந்த தலைமகன், வினைமுற்றிய பின்னர், கயலையும் வில்லையும் கொண்டு, மன்கோபமுங் காட்டி, ஒரு திருமுகம் வாரா நின்றது, இனிக் கடிது போதுமெனத், தேர்ப் பாகன் கேட்பத் தலைமகளது முகநினைந்து கூறல்.

(வ - று.)

புயலோங் கலர்சடை யேற்றவன் சிற்றம் பலம்புகழும்
மயலோங் கிருங்களி யானை வரகுணன் வெற்பின்வைத்த
கயலோங் கிருஞ்சிலை கொண்டுமன் கோபமுங் காட்டிவரும்
செயலோங் கெயிலெரி செய்தபின் இன்றேர் திருமுகமே.

(திருக். கூஉஎ)

நிலைமை நினைந்து கூறல்

என்பது, வினைமுற்றிய பின்னர், அவள் முகங்கண்டு வாரா நின்றவன், புருக்கள் தம் துணையோடு துயின்று முன்றிற்கண் விளையாடுவ கண்டு, இது நமக்கரிதாயிற்றென்று, என்னிலைமை நினைந்தாற்றகில்லாளாவள், நீ விரையத் தேரைச் செலுத்துவாயாக வெனத், தலைமகளது நிலைமை நினைந்து தேர்ப்பாகனுக்குக் கூறல்.

(வ - று.)

சிறப்பிற் றிகழ்சிவன் சிற்றம் பலஞ்சென்று சேர்ந்தவர்தம்
பிறப்பிற் றுணைந்து பெருகுக தேர்பிறங் கும்மொளியார்

பிறப்பொழ் புரிசை மறுகினிற் றுன்னி மடநடைப்புள்
இறப்பிற் றுயின்றுமுற் றத்திரை தேரும் எழினகர்க்கே.

(திருக். நூஅ)

முகிலொடு கூறல்

என்பது, காரோட்டங்கண்ட பாகன், அதனோடு விரையத் தேரோட்டா நிற்பான், பிரிதலால் திருந்திய வழகெல்லாமழிந்து துன்புரு நின்றவளது சீரிய நகரின்கண் வாராநின்ற எனது தேரின் முற்பட்டுச் சென்றியங்கா தொழியவேண்டும், இயங்கினும், அத்தமியாள் கேட்ப முழங்கா தொழிய வேண்டுமெனத், தலைமகன் முந்துறச் செல்லா நின்ற முகிலொடு கூறல்.

(வ - று.)

அருந்தே ரழிந்தனம் ஆலமென் றேல மிடுமிமையோர்
மருந்தே ரணியம் பலத்தோன் மலர்த்தாள் வணங்கலர்போல்
திருந்தே ரழிந்து பழங்கண் தருஞ்செல்வி சீர்நகர்க்கென்
வருந்தே ரிதன்முன் வழங்கேல் முழங்கேல் வளமுகிலே.

(திருக். நூஉசு)

வரவெடுத்துரைத்தல்

என்பது, தலைமகன் முகிலொடு வாரா நிற்பக் கண்ட தோழி, வணங்குவாராக உடம்பட்டவர் கொடுத்த திறையையும், வணங்காது மாறுபட்டவ ரடையாளங்களையும் தமது தேருக்கு முன்னுகக்கொண்டு, வீரமுரசார்ப்ப, ஆலியா நின்ற மாவினோடும் வந்தணுகினர், இனி நமக்கொரு குறையில்லையெனத், தலைமக னுக்கு அவன் வரவெடுத்துக் கூறல்.

(வ - று.)

பணிவார் குழையெழி லோன்றில்லைச் சிற்றம் பலமனைய
மணிவார் குழன்மட மாதே பொலிகநம் மன்னர்முன்னுப்
பணிவார் திறையும் பகைத்தவர் சின்னமும் கொண்டுவண்டேர்
அணிவார் முரசினை டாலிக்கு மாவோ டணுகினரே.

(திருக் நூசு0)

மறவாமை கூறல்

என்பது, விண்ணமுற்றி வந்து தலைமகளோடு பள்ளியிடத் தானுகிய தலைமகன், நீயிர் விண்ணியிடத்தெம்மை மறந்தீரே யென்ற

தோழிக்கு, யான் பாசறைக்கட் டாழ்த்தவிடத்தும், கண்முத்திலங்க நின்றிவ ளென்னுடைய நெஞ்சைவிட்டு நீங்கிற்றில ளாதலால், யான் மறக்குமாறென்னெனத், தானவளை மறவாமை கூறல்.

(ஙூ - ஙூ.)

கருங்குவ ளைக்கடி மாமலர் முத்தங் கலந்திலங்க
நெருங்கு வளைக்கிள்ளை நீங்கிற் றிலணின்று நான்முகனை
டொருங்கு வளைக்கரத் தானுண ராதவன் றில்லையொப்பாய்
மருங்கு வளைத்துமன் பாசறை நீடிய வைகலுமே.

(திருக். ஙூஙூ) (எ)

வேந்தற் குற்றுழிப்பிரிவு முற்றும்.

ஙூ. பொருள்வயிற்பிரிவு

என்பது, குரவர்களாற் படைக்கப்பட்ட பொருள்கொண்டு இல்லறஞ் செய்தால், அதனல் வரும்பயன் அவர்க்காமத் துணை யல்லது தமக்காகாமையால், தமது பொருள்கொண் டில்லறஞ் செய்தற்குப் பொருள் தேடப் பிரியா நிற்றல்.

அதன் வகை

ஙுசூ. வாட்டங் கூறலும் பிரிவுணை வுரைத்தலு
மாற்றுது புலம்பலு மாற்றுமை கூறலுங்
திணைபெயர்த் துரைத்தலும் பொருத்தமழிந் துரைத்
பிரிந்தமை கூறலும் பிரிவாற் றுமையான் [தலும்
இரவுறு துயரத்திற் கிரங்கி யுரைத்தலும்
இகழ்ச்சிணைங் தழிதலு முருவுவெளிப் படுதலும்
நெஞ்சோடு நோதலும் நெஞ்சோடு புலத்தலும்
நெஞ்சோடு மறுத்தலும் காளெண்ணி வருந்தலும்
ஏறு வரவுகண் டிரங்கி யுரைத்தலும்
பருவங்கண் டிரங்கலு முகிலோடு கூறலுங்
தேர்வரவு கூறலு மிளையரெதிர் கோடலும்
உண்மகிழ்ந் துரைத்தலு மோதிய விருபதும்
மாமதி நுதலாய் வான்பொருட் பிரிவே.

என்பது, வாட்டங் கூறல், பிரிவு நினைவுரைத்தல், ஆற்றாது புலம்பல், ஆற்றுமை கூறல், தினைபெயர்த் துரைத்தல், பொருத்த மறிந்துரைத்தல், பிரிந்தமை கூறல், இரவுறு துயரத்திற் கிரங்கி யுரைத்தல், இகழ்ச்சி நினைந்தழிதல், உருவு வெளிப்பட்டு நிற்றல், நெஞ்சொடு நோதல், நெஞ்சொடு புலத்தல், நெஞ்சொடு மறுத்தல், நாளெண்ணி வருந்தல், ஏறுவரவு கண்டிரங்கி யுரைத்தல், பருவங் கண்டிரங்கல், முகிலொடு கூறல், தேர்வரவு கூறல், இளைய ரெதிர் கோடல், உண்மகிழ்ந்துரைத்தல் ஆகிய இருபதும் பொருள் வயிற் பிரிவாம்.

வாட்டங் கூறல்

என்பது, பொருள்வயிற் பிரியலுறுகின்ற தலைமகன், இருமையும் பொருளானே முற்றுப்பெறும் என்று யான் பொதுவகையாற் கூற, அக் குறிப்பறிந்து, கண்பனிவர, இத்தன்மையளாய் வாடினாள், இனி யென்னுற் பிரிவுரைத்தலரிது, நீ யுணர்த்து மாற்றுணர்த்தெனத், தோழிக்குத் தலைமகளது வாட்டங் கூறல்.

(வ - று.)

முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னின் முடியுமெனப்
பனிவருங் கண்பர மன்றிருச் சிற்றம் பலமனையாய்
துனிவரு நீர்மையி தென்னென்று தூநீர் தெளித்தளிப்ப
நனிவரு நாளிது வோவென்று வந்திக்கும் நன்னுதலே.

(திருக். கூகூஉ)

பிரிவு நினைவுரைத்தல்

என்பது, வாட்டங்கேட்ட தோழி, பொருளில்லாதார் இருமையின்கண் வருமின்பமு மறியாரென வுட்கொண்டு, அருஞ் சுரம் போய், நமர் பொருள்தேட நினையா நின்றாரெனத், தலைமகளுக்குத் தலைமகன் பிரிவு நினைவுரைத்தல்.

(வ - று.)

வறியார் இருமை யறியார் எனமன்னு மாநிதிக்கு
நெறியா ரருஞ்சுரஞ் செல்லலுற் றார்நமர் நீண்டிருவர்
அறியா அளவுநின் றேன்றில்லைச் சிற்றம் பலமனைய
செறிவார் கருங்குழல் வெண்ணகைச் செவ்வாய்த் திருநுதலே.

(திருக். கூகூகூ)

ஆற்றுது புலம்பல்

என்பது, பிரிவு நினைவுரைப்பக்கேட்ட தலைமகள், இத்தோழி யாகிய கொடியவள் இத்தன்மையை யறிந்திருந்தும், அன்பர் பிரிவரெனக், குவளைப்பூ வெறிதற்கு வாளுறை கழித்தாற்போலக் கூறினள், இதற்கியான் கூறுவதுண்டோவென ஆற்றுது புலம்பல்.

(வ - று.)

சிறுவாள் உகிரும் றுருமுன்னஞ் சின்னப் படுங்குவளைக்
கெறிவாள் கழித்தனள் தோழி எழுதிற் கரப்பதற்கே
அறிவாள் ஒழிகுவ தஞ்சனம் அம்பல வர்ப்பணியார்
குறிவாழ் நெறிசெல்வர் அன்பரென் றம்ம கொடியவளே.

(திருக். கூகூ)

ஆற்றுமை கூறல்

என்பது, தலைமகள் வருத்தங்கண்ட தோழி, காதலர் கான லாகிய சுரத்திற் போய்ப் பொருள் தேட நினையா நின்றரென்று யான் கூறுமளவில், அவள் கண்ணு முலையு முத்தும் பொன்னுந் தாரா நின்றன, இனி நீ சேட்சென்று தேடும் பொருள் யாதோ வெனத், தோழி தலைமகனுக்கு அவளது பிரிவாற்றுமை கூறல்.

(வ - று.)

வானக் கடிமதிற் றில்லையெங் கூத்தனை யேத்தலர்போல்
கானக் கடஞ்செல்வர் காதல ரென்னைக் கதிர்முலைகள்
மானக் கனைகந் தருமலர்க் கண்கண்முத் தம்வளர்க்கும்
தேனக்க தார்மன்னன் என்னை இனிச்சென்று தேர்பொருளே.

(திருக். கூகூஙி)

திணைபெயர்த்துரைத்தல்

என்பது, யான் அவற்கு நினதாற்றுமை கூறினேன், இனி அவர் நினைவறியேனென்ற தோழிக்குத், தாமெனக் கருளைப்புலப் படுத்திய சொற்களெல்லா மறந்தோ காவலர் தினையேற்குப் பொருளைத்தரத் தொடங்குகின்ற தெனப், பிரிவுள்ளிப், பாலை நிலத்தனுகிய தலைமகனை மருத நிலத்தனுக்கித், தலைமகள் புலந்து கூறுகிற்றல்.

(வ - று.)

சுருடரு செஞ்சடை வெண்சுட ரம்பல வன்மலயத்
திருடரு பூம்பொழில் இன்னுயிர் போலக் கலந்திசைத்த
அருடரு மீன்சொற்க ளத்தனை யும்மறந் தத்தஞ்சென்றே
பொருடரக் கிற்கின் றதுவினை யேற்குப் புரவலரே.

(திருக். கூஙூசு)

பொருத்த மறிந்துரைத்தல்

என்பது, திணைபெயர்த்துக் கூறின தலைமகளுக்கு, யாம் எல்லாஞ் சொன்னேமாயினும், காதலர்க்கு நினைவு பொருண் மேலாயிருந்தது, இனி யானுரைப்பதென்னே வெனத், தோழி தலை மகனது பொருத்த மறிந்து அதற்குத் தானெய்து கூறல்.

(வ . று.)

மூவர்நின் றேத்த முதலவன் ஆடமுப் பத்துமும்மைத்
தேவர்சென் றேத்துஞ் சிவன்றில்லை யம்பலஞ் சீர்வழுத்தாப்
பாவர்சென் றல்கும் நரக மனைய புனையழற்கான்
போவர்நங் காதலர் என்னும் உரைப்பது பூங்கொடியே.

(திருக். கூஙூஎ)

பிரிந்தமை கூறல்

என்பது, பொதுவகையா னுணர்த்தினேமாயின், இனித் தீயது பிற்காண்கின்றுமெனத் தலைமகனுணர்த்தாது பிரியா நிற்ப, நின்முன்னின்று பிரிவுணர்த்தினுல் நீமேனியொளி வாடுவை யென உட்கொண்டு பொருள் முடித்துக் கடிதின் மீள்வாராக நால்வகைத் தானையோடு நம் மனனர் வினைவயிற் சென்றுரெனத், தோழி தலைமகளுக்குத் தலைமகன் பிரிந்தமை கூறு நிற்றல்.

(வ - று.)

தென்மாத் நிசைவசை தீர்தரத் தில்லைச்சிற் றம்பலத்துள்
என்மாத் தலைக்கழல் வைத்தெரி யாடும் இறைநிகழும்
பொன்மாப் புரிசைப் பொழிற்றிருப் பூவண மன்னபொன்னே
வன்மாக் களிற்றெடு சென்றனர் இன்றுநம் மன்னவரே.

(திருக். கூஙூஅ)

இரவுறு துயரத்திற் கிரங்கியுரைத்தல்

என்பது, பிரிவு கேட்ட தலைமகளதாற்று முகங்கண்ட தோழி, இவ்வுறுப்புக் குறையோடெங்கும் திரிந்திளைத்து அருக்கன்தேர்

வருதல் யாண்டையது, இவளாற்றுதல் யாண்டையது என, அவளிரவுறு துயரத்திற்குத் தானிரக்கமுற்றுக் கூறல்.

(வ - று.)

ஆழியொன் றீரடி யும்மிலன் பாகன்முக் கட்டில்லையோன்
ஊழியொன் ருதன நான்குமைம் பூதமும் ஆருெடுங்கும்
ஏழியன் ருழ்கட லும்மெண் டிசையும் திரிந்திளைத்து
வாழியன் ருெவருக் கன்பெருந் தேர்வந்து வைகுவதே.

(திருக். ஈஈக)

இகழ்ச்சி நினைந்தழிதல்

என்பது, தோழி இரக்கமுற்றுக் கூருநிற்ப, முற்காலத்து அவருலகின்மேல் வைத்துணர்த்திய வழி நீட்டித்துப் பிரிவாராயினும் இப்பொழுதைக்கு இவர் பிரியாரென யான் அவர் பிரிவி கழ்ந்திருந்தேன், முன்னின்று பிரிவுணர்த்தினுல் இவளுயிர் தரியாளென்று அவருணர்த்துதலே இகழ்ந்துபோனுர், அத் தன்மையவாகிய இரண்டிகழ்ச்சியு மென்னே யித்தன்மைத்தாக அழிவியா நின்றனவெனத், தலைமகளிகழ்ச்சி நினைந்தழியா நிற்றல்.

(வ - று.)

பிரியா ரெனவிகழ்ந் தேன்முன்னம் யான்பின்னை எற்பிரியின்
தரியா ளெனவிகழ்ந் தார்மன்னர் தாந்தக்கன் வேள்விமிக்க
எரியா ரெழிலழிக் கும்மெழி லம்பலத் தோனெவர்க்கும்
அரியான் அருளிலர் போலன்ன என்னை அழிவித்தவே.

(திருக். ஈசஅ)

உருவு வெளிப்பட்டு நிற்றல்

என்பது, தலைமகளிகழ்ச்சி நினைந்தழியா நிற்பத், தானுணர்த்தாது பிரிந்தமையுட்கொண்டு பொருள் வலித்த நெஞ்சொடு செல்லா நின்ற தலைமகன், காணுந் திசைதோறுங் கயலையும் வில்லையுஞ் சிவந்த கனியையு முலையையுங் கொண்டொரு பூங்கொடி தோனரு நின்றதெனத், தலைமகளுருவை நினைந்து, மேற்போக மாட்டாது மீளலுற்றுச் சுரத்திடை நில்லா நிற்றல்.

(வ - று.)

சேணுந் திகழ்மதிற் சிற்றம் பலவன்றெண் ணீர்க்கடனஞ்
சூணுந் திருத்து மொருவன் திருத்தும் உலகினெல்லாம்

காணுந் திசைதொறும் காக்கய லுஞ்செங் கனியொடுபைம்
பூணும் புனர்முலை யுங்கொண்டு தோன்றுமொர் பூங்கொடியே.

(திருக். கூசக)

நெஞ்சொடு நோதல்

எனபது, மீள நினைந்த தலைமகன், பின்னும் பொருண்மேற் செல்லா நின்ற உள்ளத்தனுய் நின்று மீளமாட்டாது, இவ்விரண் டனுள் இப்பொழுது நீ யேதுக்குப்போக முயல்கின்றுயெனத், தன் நெஞ்சொடு நொந்து கூறல்.

(வ - று.)

பொன்னணி யீட்டிய வோட்டரு நெஞ்சமிப் பொங்குவெங்கா
னின்னணி நிற்குமி தென்னென்ப தேயிமை யோரிறைஞ்சும்
மன்னணி தில்லை வளநக ரன்னவன் னந்நடையாள்
மின்னணி நுண்ணிடைக் கோபொருட் கோநீ விரைகின்றதே.

(திருக். கூசஉ)

நெஞ்சொடு புலத்தல்

என்பது, நெஞ்சொடு நொந்து கூறு நின்றவன், பேயிடத்துஞ் செய்தலரிதாம் பிரிவை இவளிடத்தே யெளிதாக்குவித்துச் சேய்த்தாகிய இவ்விடத்துப் போந்த நினது சிக்கனவுக்கு அஞ்சத் தக்கதெனப், பின்னுமந் நெஞ்சொடு புலந்து கூறு நிற்றல்.

(வ - று.)

நாய்வயி னுள்ள குணமுமில் லேனநற் ரெண்டுகொண்ட
தீவயின் மேனியன் சிற்றம் பலமன்ன சின்மொழியைப்
பேய்வயி னும்மரி தாகும் பிரிவெளி தாக்குவித்துச்
சேய்வயிற் போந்தநெஞ் சேயஞ்சத் தக்கதுன் சிக்கனவே.

(திருக். கூசஙு)

(கு - ரை.) சிக்கனவு - இரக்கம் இல்லாமை.

நெஞ்சொடு மறுத்தல்

என்பது, நெஞ்சொடு புலந்து கூறிப் பின்னும் பொருண்மேற் செல்லா நின்ற வுள்ளத்தோடு தலைமகனை நினைந்து, இத்தன்மைத் தாகிய பொன்னை விட்டு வேறு பொன் தேடியோ எம்மை வாழச் செய்வது, இதற்கு யாமுடம்படேம், நாமே நடக்கவெனச், செல வுடம்படாது பொருள் வலித்த நெஞ்சொடு மறுத்துக் கூறல்.

(ஐ - ஐ.)

தீமே வியநிருத் தன்றிருச் சிற்றம் பலமனைய
பூமே வியபொன்னே விட்டுப்பொன் தேடியிப் பொங்குவெங்கான்
நாமே நடக்க ஒழிந்தனம் யாநெஞ்சம் வஞ்சியன்ன
வாமே கலையையிட் டோபொருள் தேர்ந்தெம்மை வாழ்விப்பதே.

(திருக். நடசச)

நாளெண்ணி வருந்தல்

என்பது, தலைமகன் வரவு நீட்ட நினைந்து வருந்தா நின்ற தலைமகளது வருத்தங்கண்ட தோழி, இவள் நோயுறப் போனவர் போன நாளை யெண்ணுந் தனமையாற் பலகாலிடுதலின் நிலனுங் குழிந்து விரலுந் தேய்ந்ததென அவன் சென்ற நாளெண்ணி வருந்தா நிற்றல்.

(ஐ - ஐ.)

தெண்ணீர் அணிசிவன் சிற்றம் பலஞ்சித்தி யாதவரின்
பண்ணீர் மொழியிவ ளோப்பையு ளெய்தப் பனித்தடங்க
ணுண்ணீர் உகவொளி வாடிட நீடுசெண் ணூர்சென்றநாள்
எண்ணீர் மையினில னுங்குழி யும்விரல் இட்டறவே.

(திருக். நடசடு)

ஏறுவரவு கண்டிரங்கி யுரைத்தல்

என்பது, பொருண்முற்றித் திரும்பிய தலைமகன், மாலையின் நாகொடுவாரா நின்ற ஏறு வரவுகண்டு, இச்சிறந்த செக்கர்மாலை அவள் பொறுக்குமளவன்றென விரங்கிக் கூறு நிற்றல்.

(ஐ - ஐ.)

சுற்றம் பலமின்மை காட்டித்தன் தொல்கழல் தந்ததொல்லோன்
சிற்றம் பலமனை யாள்பர மன்றுதிண் கோட்டின்வண்ணப்
புற்றங் குதர்ந்துநன் னுகொடும் பொன்னுர் மணிபுலம்பக்
கொற்றம் மருவுகொல் லேறுசெல் லாநின்ற கூர்ஞ்செக்கரே.

(திருக். நடசசு)

(சு - ரை.) சுற்றம்பலம் இன்மை காட்டி • சுற்றத்தால் பயனின்மை காட்டி.

பருவங்கண்டிரங்கல்

என்பது, ஏறுவரவு கண்டிரங்கிவருந் தலைமகன், இம் மேகங்க ளொன்றேடொன்று தம்மில் விரவுதலால் பொழில் கடோறு மயில்கள் கூடி யாடாநின்ற இக்கார் காலத்து அவளென்னை நினைந்தாற்று ளெனப் பருவங் கண்டிரங்கல்.

(வ - ம.)

கண்ணுழை யாதுவிண் மேகங் கலந்து கணமயிருக்
கெண்ணுழை யாத்தழை கோலிநின் ரூலும் இனமலர்வாய்
மண்ணுழை யாவும் அறிதில்லை மன்னன தின்னருள்போல்
பண்ணுழை யாமொழி யாளென்ன ளாங்கொன்மன் பாவியற்கே.

(திருக். கூசஎ)

முகிலொடு கூறல்

என்பது, பருவங் கண்டிரங்கி விரைவில் வருந் தலைமகன் இவ்விடத் தெல்லாம் முற்பட்டா யாயினும், முதுபெண்டிர் திரண்டு அவள் இன்னுமையை நீக்கற்கு இல்லுறை கடவுட்குப் பூசனை செய்யாநிற்கும் நீ ணகரத்திற்கு என்னின் முற்படாதொழி வாயாக வென, முற்பட்டுப் போகு முகிலொடு கூறல்.

(வ - ம.)

அற்படு காட்டினின் ரூடிசிற் றம்பலத் தான்மிடற்றின்
முற்படு நீண்முகில் என்னின்முன் னேன்முது வோர்குழுமி
விற்படு வாணுத லாள்செல்லல் தீர்ப்பான் விரைமலர் தூய்
நெற்படு வான்பலி செய்தய ராநிற்கும் நீணகர்க்கே.

(திருக். கூசஅ)

தேர்வரவு கூறல்

என்பது, பொருள் வயிற்பிரிந்த தலைமகன், முகிலொடுவந்து புகாநிற்ப, இம்முகில் இவள் ஆவியை வெகுளாநின்ற காலத்தொரு தேர்வந்து காத்தமையால், இனிவரக் கடவதனை வெல்லுமாறு இல்லையெனத் தோழி தலைமகளுக்குத் தேர்வரவு கூறல்.

(வ - ம.)

பாவியை வெல்லும் பரிசில்லை யேமுகில் பாவையஞ்சீர்
ஆவியை வெல்லக் கறுக்கின்ற போழ்தத்தின் அம்பலத்துக்

காவியை வெல்லு மிடற்றோன் அருளிற் கதுமெனப்போய்
மேவிய மாநிதி யோடன்பர் தேர்வந்து மேவினதே.

(திருக். கூசக)

இளையரெதிர் கோடல்

என்பது, தோழி தலைமகட்குத் தேர் வரவு கூறுகிற்ப, இந் நிலைமைக்கண், இனி இவளாவி செல்வதற்கு முன்னே நிதியோடு அன்பர் தேர் வந்தது, இனி ஊழின் வலியது வேறொன்றும் இல்லையெனப் பொருண் முடித்து வாராநின்ற தலைமகனைச் சென்றியாய ரெதிர்கோடல்.

(வ - று.)

யாழின் மொழிமங்கை பங்கன்சிற் றம்பலத் தானமைத்த
ஊழின் வலியதொன் றென்னை யுளிமே கலியுகளும்
வீழும் வரிவளை மெல்லிய லாவிசெல் லாதமுன்னே
சூழுந் தொகுநிதி யோடன்பர் தேர்வந்து தோன்றியதே.

(திருக். கூஙo)

உண்மகிழ்ந் துரைத்தல்

என்பது, பொருண்முடித்து இளைஞர் எதிர்கொள்ள வந்து புகுந்த தலைமகன், தலைமகளுடன் பள்ளியிடத்தனையிருந்து, இம் மானைப் பிரிந்து பொருள்தேட யான் வெய்ய சுரஞ்சென்ற துன்பம் எல்லாம் இவள் கொங்கைக ளென்னுறுப்புக்க விடை மூழக, இப் பூவணமேல் அணையா முன்னம் துவள்வுற்றதெனத் தன்னுள்ளே மகிழ்ந்து கூறல்.

(வ - று.)

மயின்மன்னு சாயலிம் மானைப் பிரிந்து பொருள்வளர்ப்பான்
வெயின்மன்னு வெஞ்சுரஞ் சென்றதெல் லாம்விடை யோன்புலியூர்க்
குயின்மன்னு சொல்லிமென் கொங்கையென் அங்கத் திடைக்குளிப்பத்
துயின்மன்னு பூவணை மேலணை யாமுன் துவளுற்றதே.

(திருக். கூஇக) (அ)

பொருள்வயிற்பிரிவு முற்றும்.

நூக. பரத்தையிற்பிரிவு

என்பது, தலைமகளை வரைந்து எய்திய பின்னர், வைகலும் பாலே நுகர்வானெருவன் இடையே புளிங்காடியும் நுகர்ந்து அதனினிமையை அறிந்தாற்போல, அவள் நுகர்ச்சி இனிமை அறிதற்குப் புறப்பெண்டிர் மாட்டுப் பிரியா நிற்றல், அல்லதூஉம், பண்ணும் பாடலு முதலாயின காட்டிப் புறப்பெண்டிர் தன்னைக் காதலித்தால் தான் எல்லார்க்குந் தலைவனுகலின், அவர்க்கும் இனபஞ் செய்யப் பிரியா நிற்றல் என்றுமாம், அல்லதூஉம், தலைமகளை ஊடலறிவித்தற்குப் பிரிதல் என்றுமாம். இவ்வா றெழிந்து தனக்கு இன்பம் வேண்டிப் பிரிவனையின, இவளுக்குத் தலைமகள் என்னும் பெயரோடு மாறுபட்டுத் தனது பெருமையோடு மாறுபடா நிற்கும்.

அதன் வகை

அசூக. கண்டவர் கூறலுங் காதற் றோழி
பொறையுவந் துரைத்தலும் பொதுப்படக் கூறி
வாடி யழுங்கலு மாறுகொண் டவளெடு
கனவிழந் துரைத்தலும் விளக்கொடு வேறுத்தலும்
வாரம் பகர்ந்து வாயின் மறுத்தலும்
பள்ளியிடத் தூடலும் பணிமொழி யாடன்
செவ்வணி விடுக்க வில்லோர் கூறலும்
அயலறி வுரைத்தவ ளழுக்க மெய்தலும்
செவ்வணி கண்ட வாயிலவர் கூறலும்
மனைபுகல் கண்ட வாயிலவர் கூறலு
முகமலர்ச்சி கூறலு முனிவ தென்னெனக்
காலநிகழ் வுரைத்தலுங் கலவி யெய்தலை
எடுத்துப் பகரலுங் கலவியைக் கருதிப்
புலத்தலுங் குறிப்பறிந்து புலந்தமை கூறலும்
வாயிலவர் வாழ்த்தலும் புனல்வர வுரைத்தலுந்
தேர்கண்டு மகிழ்தலுஞ் சேடியர் விழவிற்
றம்மு ளுரைத்தலுந் தன்னை வியத்தலும்
நகைத்துக் கூறலு நாண்கண் டியம்பலும்
பாணன்வர வுரைத்தலும் பாங்கியியற் பழித்தலும்
உழையரியற் பழித்தலு மொண்ணுத லாளவற்
கியற்பட மொழிதலு மியல்புனைந் துரைத்தலும்

வாயில் பெறுது மகன்றிற நினைதலும்
வாயிற் கணின்று தோழிக் குரைத்தலும்
வாயில் வேண்டத் தோழி கூறலும்
மன்னிய தோழி வாயில் வேண்டலு
மனையவர் மகிழ்தலும் வாயின் மறுத்தலும்
பாணனெடு வெகுடலும் பாணன் புலத்தலும்
விருந்தொடு செல்லத் தணிந்தமை கூறலும்
ஊடறணி வித்தலு மனைந்தவழி யூடலும்
புனலாட்டு வித்தமை கூறிப் புலத்தலுங்
கலவி கருதிப் புலவி யியம்பலு
மிகுத்துரைத் தூடலும் விறல்வேற் காளை
ஊட னீட வாடி யுரைத்தலும்
துனியோழிந் துரைத்தலுந் துகளோன் றில்லாப்
புதல்வன் மேல்வைத்துப் புலவி தீர்தலுங்
கலவியிடத் தூடலு முன்னிகழ் வியம்பலும்
பரத்தையைக் கண்டமை பயன்படக் கூறலும்
ஊதிய மெடுத்துரைத் தூட றீர்த்தலும்
எண்ணு ரெுன்றிவை பரத்தையிற் பிரிவெனப்
பண்ணுர் மொழியாய் பகர்ந்திசி னோரே.

என்பது, கண்டவர்கூறல், பொறையுவந்துரைத்தல், பொதுப்படக் கூறி வாடியழுங்கல், கனவிழந்துரைத்தல், விளக்கொடு வெறுத்தல், வாரம் பகர்ந்து வாயின் மறுத்துரைத்தல், பள்ளியிடத் தூடல், செவ்வணி விடுக்க வில்லோர் கூறல், அயலறிவுரைத்தவ ளழுக்க மெய்தல், செவ்வணிகண்ட வாயிலவர் கூறல், மனைபுகல்கண்ட வாயிலவர் கூறல், முகமலர்ச்சி கூறல், காலநிகழ்வுரைத்தல், எய்த லெடுத்துரைத்தல், கலவி கருதிப்புலத்தல், குறிப்பறிந்து புலந்தமை கூறல், வாயிலவர் வாழ்த்தல், புனல்வரவுரைத்தல், தேர்வரவுகண்டு மகிழ்ந்து கூறல், புனல் விளையாட்டிற் றம்முளுரைத்தல், தன்னை வியந்துரைத்தல், நகைத்துரைத்தல், நாணுதல் கண்டு மிகுத்துரைத்தல், பாணன வரவுரைத்தல், தோழி இயற்பழித்தல், உழையரியற்பழித்தல், இயற்படமொழிதல், நினைந்து வியந்துரைத்தல், வாயில் பெறுது மகன்றிற நினைதல், வாயிற்கணின்று தோழிக்குரைத்தல், வாயில் வேண்டத் தோழி கூறல், தோழி வாயில் வேண்டல், மனையவர் மகிழ்தல், வாயின் மறுத்துரைத்தல், பாணனெடு வெகுடல், பாணன் புலந்துரைத்தல், விருந்தொடு செல்லத் தணிந்தமை

கூறல், ஊட றணிவித்தல், அணைந்தவழியூடல், புனலாட்டு விழத்தமை கூறிப் புலத்தல், கலவி கருதிப் புலத்தல், மிகுத்துரைத் தூடல், ஊடனீடவாடி யுரைத்தல், துனி யொழிந்துரைத்தல், பூதல்வன்மேல் வைத்துப் புலவி தீர்தல், கலவியிடத் தூடல், மூன்னிகழ் வுரைத்தூடல் தீர்த்தல், பரத்தையைக் கண்டமை கூறிப்புலத்தல், ஊதிய மெடுத்துரைத் தூடல் தீர்த்தல் ஆகிய நாற்பத்தொன்பதும் பரத்தையிற் பிரிவாம். அவற்றுள்,

கண்டவர் கூறல்

என்பது, தலைமகன் பரத்தையர் சேரிக்கட் செல்லா நிற்ப, அப்பரத்தையர் அவனை யொருங்கு எதிர்கொண்டு சுற்றும் பற்றிப் போர் செய்யா நின்றமையின இஃது இவன் காதலி மாட்டு என்னை மென, அவ்விடத்துக் கண்டவர் தம்முட் கூருநிற்றல்.

(ஐ - று)

உடுத்தணி வாளர வன்றில்லை யூரன் வரவொருங்கே
எடுத்தணி கையே றினவளை யார்ப்ப இளமயிலோர்
கடுத்தணி காமர் கரும்புரு வச்சிலை கண்மலரம்
படுத்தணி வாளிளை யோர்சுற்றும் பற்றினர் மாதிரமே.

(திருக். கூருஉ)

பொறையுவந்துரைத்தல்

என்பது, தலைமகனைப் பரத்தையர் எதிர்கொண்டமை கேட்ட தலைமகள், நெஞ்சுடைந்து, புறத்து வெளிப்படாமற் பொறுத்தமை கண்ட தோழி, யான் இவ்வாருகவுங் கலங்காது நினற பெரும் பொறையாட்டியை யாளின்று பேசுவன வென்னென்று, அவளை உவந்து கூரு நிற்றல்.

(ஐ - று.)

சுரும்புறு கொன்றையன் தொல்புலி யூர்ச்சுருங் கும்மருங்குல்
பெரும்பொறை யாட்டியை யென்னின்று பேசுவ பேரொலிநீர்க்
கரும்புறை யூரன் கலந்தகன் ரூனென்று கண்மணியும்
அரும்பொறை யாகுமென் ஆவியும் தேய்வுற் றழிகின்றதே.

(திருக். கூருகூ)

பொதுப்படக் கூறி வாடியழுங்கல்

என்பது, பொறை யுவந்துரைத்த தோழிக்கு, முன்னிலைப் புறமொழியாகத், தமது நலங்கவரக் கொடுத்து, வேறு துணை

யின்மையிற் றமதணையையே தமக்குத் துணையாகக் கொண்டு கிடந்த என்னைப் போல, உயிர் தேய்வார் இனி யாவரோ வெனப், பொதுப்படப் பரத்தையர்க் கிரங்குவாள் போன்று, தலைமகன் கொடுமை நினைந்து உரைத்து வாடியழுங்கல்.

(வ - று)

அப்புற்ற சென்னியன் றில்லை யுரூரின் அவருறுநோய்
ஒப்புற் றெழினலம் ஊரன் கவரவுள் ளும்புறம்பும்
வெப்புற்று வெய்துயிர்ப் புற்றுத்தம் மெல்லணை யேதுணையாச்
செப்புற்ற கொங்கையர் யாவர்கொல் ஆருயிர் தேய்பவரே.

(திருக். ஈஇச)

கனவிழந்துரைத்தல்

என்பது, தலைமகன் கொடுமை நினைந்து கிடந்து வாடிய தலைமகள், கனவிடை வந்து, அவன் மார்புதரத், தானதணை நன வென்று மயங்கிப் புலந்து, அவனோடு புணராதிழந்தமையைத் தோழிக்கு இயம்பா நிற்றல்.

(வ - று.)

தேவா சுரரிறைஞ் சுங்கழ லோன்றில்லை சேரலர்போல்
ஆவா கனவு மிழந்தேன் நனவென் றமளியின்மேற்
பூவா ரகலம்வந் தூரன் தரப்புலம் பாய்நலம்பாய்
பாவாய் தழுவிற்றி லேன்விழித் தேனரும் பாவியனே.

(திருக். ஈஇஇ)

விளக்கொடு வெறுத்தல்

என்பது, கனவிழந்தமை கூறி வருந்திய தலைமகள், **யோயி**னுங் கலந்தவர்க்குப் பொய்முகங் காட்டிக் கரத்தல் பொருத்தமன்று என்றிலையே யென, விளக்கொடு வெறுத்துக் கூறுநிற்றல்.

(வ - று.)

செய்ம்முக நீல மலர்தில்லைச் சிற்றம் பலத்தரற்குக்
கைம்முகங் கூம்பக் கழல்பணி யாரிற் கலந்தவர்க்குப்
பொய்ம்முகங் காட்டிக் கரத்தல் பொருத்தமன் றென்றிலையே
நெய்ம்முக மாந்தி யிருண்முகங் கீழும் நெடுஞ்சுடரே.

(திருக். ஈஇஈ)

வாரம்பகர்ந்து வாயின்மறுத்துரைத்தல்

என்பது, விளக்கொடு வெறுத்து வருந்திய தலைமகள், தலைமகன பரத்தையிற் பிரிந்துவந்து வாயிற்க ணிற்ப, வண்டோ ரனையராடவர், பூவோரனையர் மகளிராதலான், யாமுமவன் தலையளிபெற்ற பொழுதேற்றுக் கொள்வதன்றே நமக்குக்காரியம், ஈரம் அவணெடு புலக்கற்பாலே மல்லேமென்று வாயினேர் வித்தார்க்கு, ஊரனது மாலையுந் தோளும் அவ்விடத்து வீழ்த்து வைத்து, வேண்டினர் கொள்ள அமையும், யான் மனனனைப் பாத்தையர்க்கு உருவரையாகக் கொடுத்தேனென, மறுத்துரையா கிற்றல்.

(வ - று.)

பூங்குவ ளைப்பொலி மாலையும் ஊரன்பொற் றேரளிணையும்
ஆங்கு வளைத்துவைத் தாரேனுங் கொள்கநள் ளாரரணம்
தீங்கு வளைத்தவில் லோன்றில்லைச் சிற்றம் பலத்தயல்வாய்
ஓங்கு வளைக்கரத் தார்க்கடுத் தோமன் உருவரையே.

(திருக். உடுஎ)

பள்ளியிடத் தூடல்

என்பது, வாயின் மறுத்த தலைமகள், ஆற்றுமையே வாயி லாகப் புக்குப் பள்ளியிடத்தாளுகிய தலைமகளோடு, நின்னை யிடை விடாது நுகர்தற்கு முற்காலத்துத் தவஞ் செய்யாத தீவினையேனை நோவாது, இனறிவ்வாறுகிய நின்னை நோவதெனனை, அது கிடக்க, நின் காதலிமார், புறமே கற்று நினக்குப் புதிதாகச் செய்த அப்புல்லுதலை யாம் செய்ய மாட்டோம், அதனால் எம்மைத் தொடாதே, எம் கலியை விடுவாயாகவென, கலவிகருதிப் புலவா கிற்றல்.

(வ - று.)

தவஞ்செய்தி லாதவெத் தீவினை யேம்புன்மைத் தன்மைகள்ளா
தெவஞ்செய்து நின்றினை யின்றுனை நோவதென் அத்தன்முத்தன்
னிவன்செய்த சீரரு ளார்தில்லை யூரநின் சேயிழையார்
தவஞ்செய்த புல்லங்கண் மாட்டேம் தொடல்விடு நற்கலியே.

(திருக். உடுஅ)

(கு - ரை.) எவம் செய்து - துன்பம் செய்து. எவ்வம் எவம் என நின்றது. நலம் செய்த புல்லங்கள் - புதிதாகச் செய்த புல்லல்கள். புல் என்பது புல்லம் என விரிந்து நின்றது.

செவ்வணிவிடுக்க வில்லோர் கூறல்

என்பது, இக்கொங்கை கள்தாங்கித் தளராநின்ற மருங்குலை யுடைய இவள் வருந்த, இவ்வாயத்தார் முனனே அப்பரத்தையர் மனைக்கண், இப்பேதை இக்குறி அறிவிக்கச் செல்லாநின்ற இஃது, நமக்கு மிகவும் இளிவரவுடைத்தெனச், செவ்வணி விடுக்க விரையாநின்ற இல்லோர் தம்முட் கூருகிற்றல்.

(வ - று.)

தணியுறப் பொங்குமிக் கொங்கைகள் தாங்கித் தளர்மருங்குல்
பிணியுறப் பேதைசென் றின்றெய்து மாலர வும்பிறையும்
அணியுறக் கொண்டவன் றில்லைத்தொல் லாயநல் லார்கண்முன்
பணியுறத் தோன்றும் நுடங்கிடை யார்கள் பயின்மனைக்கே. [னே

(திருக். ஙடுங)

அயலறிவுரைத்தவ ளழுக்கமெய்தல்

என்பது, இல்லோர் செவ்வணி விடுக்க நினையாநிற்ப, அயலார் முனனே இவளால் இக்குறியறிந்த விடத்து, ஒருத்தி நமக்குத்தர நாம் அவனை யெய்தும்படி யாயிற்று நம்முடைய பெண் தன்மையென, அயலறிவுரைத்துத் தலைமகள் அழுக்க முற்றுக் கூறல்.

(வ - று.)

இரவனை யும்மதி யேர்நுத லார்நுதிக் கோலஞ்செய்து
குரவனை யுங்குழ லிங்கிவ ளாவிக் குறியறிவித்
தரவனை யுஞ்சடை யோன்றில்லை யூரனை ஆங்கொருத்தி
தரவனை யும்பரி சாயின வாறுநந் தன்மைகளே.

(திருக். ஙசுஐ)

செவ்வணிகண்ட வாயிலவர் கூறல்

என்பது, தலைமகளிடத்து நின்றுஞ் செவ்வணி செல்லக் கண்டு, நம்மூரற் குலகியலா றுரைப்பான்வேண்டிச், செம்மலரும் செம்பட்டும் செஞ்சாந்தும், நமது திருவையுடைய மனையினகண் வந்து தோன்றின வெனப், பரத்தைவாயிலவர் தம்முண் மதித்தி யம்பா கிற்றல்.

(வ - று.)

சிவந்தபொன் மேனி மணிதிருச் சிற்றம் பலமுடையான்
சிவந்தவந் தாளணி யூரற் குலகிய லாறுரைப்பான்

சிவந்தபைம் போதுமஞ் செம்மலர்ப் பட்டுங்கட் டார்முலைமேற்
சிவந்தவஞ் சாந்தமுந் தோன்றின வந்து திருமனைக்கே.

(திருக். நகூக)

மனைபுகல்கண்ட வாயிலவர் கூறல்

என்பது, செவ்வணிகண்ட தலைமகன், பரத்தை யிடத்து நின்றும் வந்து தடையின்றி மனைவயிற் புகுதா நிற்ப, பண்டிரவும் பகலும் வாயில் பெறாது நின்றுணங்கும் இக்காவலையுடைய கடையை இத்துணைக் காலத்திற் கழித்து, வாயிலின்றிப் புகுதா நின்றான், மனைக்கடன் பூண்டலால் இனிப் புலந் தடங்காதார் ஒருவருமில்லையெனத், தலைமகள் வாயிலவர் தம்முட் கூறு நிற்றல்.

(வ - று.)

சூராப்பயில் கூழை யிவளின்மிக் கம்பலத் தான்குழையாம்
அராப்பயில் நுண்ணிடை யாரடங் காரெவ ரேயினிப்பண்
டிராப்பகல் நின்றுணங் கீர்ங்கடை யித்துணைப் போழ்திற்சென்று
கராப்பயில் பூம்புன லூரன் புகுமிக் கடிமனைக்கே.

(திருக். நகூஉ)

முகமலர்ச்சி கூறல்

என்பது, பரத்தையிற் பிரிந்த தலைமகன், செவ்வணிகண்டு வந்தானென்றியம்பு மளவில், தலைமகள் கண்கள் சிவந்தன, அப் புலவி நோக்கத் தெதிர் காதலனேக்க, அச்சிவப்பாறி, முகம் அலர்ந்தமையை அவ்விடத்துக் கண்டவர் தம்முட் கூறல்.

(வ - று.)

வந்தான் வயலணி யூரன் எனச்சின வாண்மலர்க்கண்
செந்தா மரைச்செவ்வி சென்றதிற் றம்பல வன்னருளான்
முந்நா யினவிய னேக்கெதிர் நோக்க முகமடுவிற்
பைந்தாட் குவளைகள் பூத்திருள் சூழ்ந்து பயின்றனவே.

(திருக். நகூநஉ)

காலநிகழ் வுரைத்தல்

என்பது, பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகன், ஆற்றுமையைத் தலைமகள் நீக்காதிருப்ப, வண்டுதுமல்லிகைப் போதானும் அந்திப் பிறையானும் கங்குற் பொழுதானும் ஆற்றுளுய்ப் புகுதரா நின்றான், இனி நீ புலக்கற்பாலை யல்லையென, உழையர் கூறு நிற்றல்.

(வ - று.)

வில்லிகைப் போதின் விரும்பா அரும்பா வியர்களன்பிற்
செல்லிகைப் போதின் எரியுடை யோன்றில்லை யம்பலஞ்சூழ்
மல்லிகைப் போதின்வெண் சங்கம்வண் டூதவிண் டோய்பிறையோ
டெல்லிகைப் போதியல் வேல்வய லூரற் கெதிர்கொண்டதே.

(திருக். ஈகூசா)

எய்தலெடுத்துரைத்தல்

என்பது, பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகன், பூப்புநிகழ்ந்த திறத்தியைப் புலவிதீர்த்து, இன்புறப் பண்ணி யெய்தலுற்று மகிழ்ந்தமையை, அவ்விடத்துள்ளாரெடுத் துரைத்தல்.

(வ - று.)

புலவித் திரைபொரச் சீறடிப் பூங்கலஞ் சென்னியுய்ப்பக்
கலவிக் கடலுட் கலிங்கஞ்சென் றெய்திக் கதிர்கொண்முத்தம்
நிலவி நிறைமது ஆர்ந்தம் பலத்துநின் ரேனருள்போன்
றுலவிய லாத்தனம் சென்றெய்த லாயின ஊரனுக்கே.

(திருக்.ஈகூஇ)

கலவி கருதிப் புலத்தல்

என்பது, புலவிதீர்த்தின்புறப் புணரப்பட்டு மயங்கிய தலைமகள் தனக்கவன் செய்த தலையளியை நினைந்திவ்வா றருளு மருளொரு ஞான்று பிறர்க்குமாமென வுட்கொண்டு, பொருமி யழுது, பின்னும் அவனெடு கலவி கருதிப் புலத்தல்.

(வ - று)

செவ்வாய் துடிப்பக் கருங்கண் பிறழச்சிற் றம்பலத்தெம்
மொய்வார் சடையோன் அருளின் முயங்கி மயங்குகின்ரூள்
வெவ்வா யுயிர்ப்பொடு விம்மிக் கலுழ்ந்து புலந்துநைந்தாள்
இவ்வா றருள்பிறர்க் காகும் எனநினைந் தின்னகையே.

(திருக். ஈகூசூ)

குறிப்பறிந்து புலந்தமை கூறல்

என்பது, புலவிதீர்ந்து கலுழ்ந்து புணர்ந்து தானுமவனுமே யாய்ப் பள்ளியிடத்தாளாகிய தலைமகள், பின்னும் ஒரு குறிப்பு வேறுபாடு கண்டு புலந்து, இப்பள்ளி பலரைப் பொருதென்றிழிய, இப்பொழுது இவள் இவ்வாறிழிதற்குக் கருதிய குறிப்பெனனே கொல்லோவென, உழையர் தம்முட் கூறு நிற்றல்.

(வ - று.)

மலரைப் பொருவடி மானும் தமியண்மன் னன்னெருவன்
பலரைப் பொருதென் றிழிந்துநின் ருள்பள்ளி காமனெய்த
அலரைப் பொருதன் றழல்விழித் தோனம் பலம்வணங்காக்
கலரைப் பொருச்சிறி யாளென்னை கொல்லோ கருதியதே.

(திருக். ஈகூன)

(சு - ரை.) கலரைப் பொருச் சிறியவள் - தீய மக்களைப் பொருத சிறியவள்.

வாயிலவர் வாழ்த்தல்

என்பது, செவ்வணி விடுக்கப் பூப்பியற் செவ்விகெடாமல் மெலிவறிந்து இவளது பொலிவோடு வந்தமையால், இவன் மெய்யே தக்க வாய்மையனெனத், தலைமகனை வாயிலவர் வாழ்த்தல்.

(வ - று.)

வில்லைப் பொலிநுதல் வேற்பொலி கண்ணி மெலிவறிந்து
வல்லைப் பொலிவொடு வந்தமை யானின்று வான்வழுத்துந்
தில்லைப் பொலிசிவன் சிற்றம் பலஞ்சிந்தை செய்பவரின்
மல்லைப் பொலிவய லூரன்மெய் யேதக்க வாய்மையனே.

(திருக்.ஈகூஅ)

புனல் வரவுரைத்தல்

என்பது, தலைமகளுடன் மனைவயிற்றங்கி இன்புறு நின்றவன் தோள்களைப் பரத்தையர் பொருந்தி மகிழப், புதுப்புனல் வந்து பரந்தது, இனிப் புனலாட்டினுல் இவன் காதலி புலக்கும்போலு மென, வையத்தார் தம்முட் புனல்வரவு கூறு நிற்றல்.

(வ - று.)

சூன்முதிர் துள்ளு நடைப்பெடைக் கிற்றுணைச் சேவல்செய்வான்
தேன்முதிர் வேழத்தின் மென்பூக் குதர்செம்ம லூரன்றிண்டோள்
மான்முதிர் நோக்கினல் லார்மகி ழத்தில்லை யானருளே
போன்முதிர் பொய்கையிற் பாய்ந்தது வாய்ந்த புதுப்புனலே.

(திருக். ஈகூஈ)

தேர் வரவுகண்டு மகிழ்ந்து கூறல்

என்பது, புனல்வரவு கேட்ட தலைமகன், புனலாட்டு விழ விற்குப் பரத்தையர் சேரிக்கட் செல்லா நிற்ப, இவனைப் புணர்

தற்குத் தக்க தவத்தினை முற்காலத்தே செய்திர்கள், தேர்வந்து தோன்றிற்று, இனிச் சென்றிவன் தோளைத் தோய்மினெனத் தேர்வரவு கண்டு பரத்தையர் தம்முள் மகிழ்ந்து கூறல்.

(வ - று.)

சேயே யெனமன்னு தீம்புன லூரன்றிண் டோளிணைகள்
தோயீர் புணர்தவந் தொன்மைசெய் தீர்சுடர் கின்றகொலம்
தீயே யெனமன்னு சிற்றம் பலவர்தில் லைந்நகர்வாய்
வீயே யெனவடி யீர்நெடுந் தேர்வந்து மேவினதே.

(திருக். ஈஎ0)

புனல்விளையாட்டிற் றம்மூரைத்தல்

என்பது, தலைமகனுடன் புனலாடா நின்ற பரத்தையர் சேடிமார் அரமங்கையரைப் போலப் புனலாடா நின்ற அவ்வவரே யென்று விளித்து, நாமெல்லாம் இத்தன்மையேமாக வானர மங்கையரென்று கூறுமாறு மற்றொருத்தி வந்து இவனைத் திரித்துக் கொள்ளக் கொடுத்துப் பின் வருந்தாது முன்னுறக் காப்போமெனத் தம்முட்கூறல்.

(வ - று.)

அரமங் கையரென வந்து விழாப்புகும் அவ்வவர்வான்
அரமங் கையரென வந்தனு கும்மவள் அன்றுகிராற்
சிரமங் கையனைச்செற் றேன்றில்லைச் சிற்றம்பலம் வழுத்தாப்
புரமங் கையரினை யாதைய காத்துநம் பொற்பரையே.

(திருக். ஈஎக)

தன்னை வியந்துரைத்தல்

என்பது, சேடிமார் பின் வருந்தாது முன்னுறக் காப்போமென்று தம்முட் கூறுவதனைக் கேட்டு, இவனை யமரப்புல்லும் பரத்தையர்மாட் டிவனருள் செல்லாமல் விலக்கேனியின், என்மாட்டிவனைத் தந்தழா நின்ற இவன் மனைக்கிழத்தியாகின்றேனெனப், பரத்தைத் தலைவி தன்னை வியந்துரைத்தல்.

(வ - று.)

கனலூர் கணைதுணை யூர்கெடச் செற்றசிற் றம்பலத்தெம்
அனலூர் சடையோன் அருள்பெற் றவரின் அமரப்புல்லும்

மீனலூர் நகையவர் தம்பா லருள்விலக் காவிடின்யான்
புனலூ ரணைப்பிரி யும்புன லூர்கணைப் பூங்கொடியே.

(திருக். ஈஎஉ)

நகைத்துரைத்தல்

என்பது, பரத்தைத் தலைவி தன்னை வியந்து கூறினளென்று கேட்ட தலைமகள், எங்கைச்சியார் தமக்குமொரு தங்கைச்சியார் தோன்றின பொழுதே தம் இறுமாப் பொழியத் தம்முடைய இணை முலைகளின் இறுமாப்பும் ஒழியப் புகாநின்றன. இதனை அறியாது தம்மைத் தாம் வியக்கின்ற தென்னெவெனப், பரத்தையை நோக்கி நகைத்துக் கூறுநிற்றல்.

(வ - று.)

இறுமாப் பொழியுமன் றேதங்கை தோன்றினென் எங்கையங்கைச்
சிறுமான் தரித்தசிற் றம்பலத் தான்றில்லை யூரன்றிண் டோள்
பெறுமாத் தொடுந்தன்ன பேரணுக் குப்பெற்ற பெற்றியினே
டிறுமாப் பொழிய இறுமாப் பொழிந்த இணைமுலையே.

(திருக். ஈஎஈ)

நாணுதல்கண்டு மிகுத்துரைத்தல்

என்பது, தலைமகனைப் பரத்தையர் வசம் புனலாட விட்டுச், சூடுவாரின்றிச் செப்பின்கண் இட்டடைத்துத் தமியே வைகும் பூப் போல்வாள், இஃது அவனுக்குத் தகாத பழியாமெனக் கருதி நாணி அதனை மறைத்திருந்தமை கண்ட தோழி, இவளது கற்பும் நலனும் நல்ல பகுதியை யுடையனவா யிருந்தன வென, அவணலத்தை மிகுத்துக் கூறுநிற்றல்.

(வ - று.)

வேயாது செப்பின் அடைத்துத் தமிவைகும் வீயினன்ன
தீயாடி சிற்றம் பலமனை யாடில்லை யூரனுக்கின்
றேயாப் பழியென நாணியென் கண்ணிங்ங னேமறைத்தாள்
யாயா மியல்பிவள் கற்புநற் பால இயல்புகளே.

(திருக். ஈஎச)

பாணன் வரவுரைத்தல்

என்பது, நாணேடு தனியிருந்து வருந்துகின்ற தலைமகளுக்கு, இராப்பொழுதின்கட் சென்று திசையைக் கடக்கும் வாவல் இரை

தேருங் காலமன்மையால், பகற்பொழுதின்க ணுறையு மரம்போலுங் தமியோமை யறியாது விறலியும் பாணனும் நம் வேந்தற்குத் துயிலெழு மங்கலம் பாடவந்து நின்றுரெனத், தோழி பாணன் வரவு கூறல்.

(வ - ரு.)

விறலியும் பாணனும் வேந்தற்குத் தில்லை யிறையமைத்த
நிறலியல் யாழ்கொண்டு வந்துநின் ரூர்சென் றிராத்திசைபோம்
பறலியல் வாவல் பகலுறை மாமரம் போலுமன்னே
அறலியல் கூழைநல் லாய்தமி யோமை அறிந்திலரே.

(திருக். ஈஎடு)

தோழி யியற்பழித்தல்

என்பது, பாணன் வரவுரைத்த தோழி, இருள்வருந்த அயலாரிடத்து நல்குதலால் எம்முடைய வள்ளல் இன்று தக்கிருந்திலனெனத், தலைமகனை யியற்பழித்தியம்பல்.

(வ - ரு.)

திக்கின் இலங்குதிண் டோளிறை தில்லைச்சிற் றம்பலத்துக்
கொக்கின் இறைக ணிந்துநின் ரூடிதென் கூடலன்ன
அக்கின் நகையிவள் நைய அயல்வயின் நல்குநலான்
தக்கின் றிருந்திலன் நின்றசெவ் வேலெந் தனிவள்ளலே.

(திருக். ஈஎசு)

உழைய ரியற்பழித்தல்

என்பது, தோழி தலைமகனை யியற்பழித்துக் கூறுகிற்பக் கேட்டு, தன்மாட்டன்புடை நெஞ்சத்தையுடைய இவள் பேதுற, இதற்குப் பிரியாமையின் வயலூரன் வரம்பிலனென, உழையர் அவனை யியற்பழித்துக் கூறுகிற்றல்.

(வ - ரு.)

அன்புடை நெஞ்சத் திவள்பே துறவம் பலத்தடியார்
என்பிடை வந்தமிழ் தூறநின் ரூடி இருஞ்சுழியல்
தன்பெடை நையத் தகவழிந் தன்னம் சலஞ்சலத்தின்
வன்பெடை மேற்றுயி லும்வய லூரன் வரம்பிலனே.

(திருக். ஈஎஎ)

இயற்பட மொழிதல்

என்பது, தலைமகனை இயற்பழித்தவர்க்கு, அன்று நம் பொருட்டாக, நம்புனத்தின்கண்ணே மாந்தழை யேந்தி வந்தார் இன்றென் னெஞ்சத்தின் கண்ணர், அதுகிடக்க, மறந்து உறங்கி னேனுயின், அமளியிடத்து வந்தென் பயோதரத்தைப் பிரியாதார், இத்தன்மையாரை நீங்கள் கொடுமை கூறுகின்ற தென்னை வெனத், தலைமகள் அவனை இயற்பட மொழிதல்.

(வ - று.)

அஞ்சார் புரஞ்செற்ற சிற்றம் பலவரந் தண்கயிலை
மஞ்சார் புனத்தன்று மாந்தழை யேந்திவந் தாரவரென்
நெஞ்சார் விலக்கினும் நீங்கார் நனவு கனவுமுண்டேல்
பஞ்சார் அமளிப் பிரிதலுண் டோவெம் பயோதரமே.

(திருக். கூஎஅ)

நினைந்து வியந்துரைத்தல்

என்பது, புனலாடப் பிரிந்து பரத்தையிடத் தொழுகாநின்ற தலைமகன், யான் தன்னை நினையாது வேறொன்றன்மே லுள்ளத்தைச் செலுத்தும் வழியுந்தானென்னை நினைந்து என்னுள்ளம் புகாநின்றுள், அவ்வாறன்றி யான் தன்னை நினையுந்தோறும் பள்ளத்துப் புகும் புனல்போல நிறுத்த நில்லாதென் மனத்தாளாகா நின்றுள், ஆதலால் பிரிந் தீண்டிருத்தல் மிகவும் அரிதெனத், தலைமகனை நினைந்து வியந்து கூறல்.

(வ - று.)

தெள்ளம் புனற்கங்கை தங்குஞ் சடையன்சிற் றம்பலத்தான்
கள்ளம் புகுநெஞ்சர் காணா இறையுறை காழியன்னாள்
உள்ளம் புகுமொரு காற்பிரி யாதுள்ளி யுள்ளுதொறும்
பள்ளம் புகும்புனல் போன்றகத் தேவரும் பான்மையளே.

(திருக். கூஎக)

வாயில்பெருது மகன்றிறநினைதல்

என்பது, பரத்தையிற் பிரிந்து நினைவோடு வந்த தலைமகன், வாயிற்கணின்று, இத் தன்மையானென்னை வந்தணுகின்றிலன், யானினி வண்டுறையுங் கொங்கையை யெவ்வாறு நண்ணுவ தென்று வாயில்பெருது மகன்றிற நினையா நிற்றல்.

(வ - று.)

தேன்வண் டுறைதரு கொன்றையன் சிற்றம் பலம்வழுத்தும்
வான்வண் டுறைதரு வாய்மையன் மன்னு குதலையின்வா
யான்வண் டுறைதரு மாலமு தன்னவன் வந்தணையான்
நான்வண் டுறைதரு கொங்கையெவ் வாறுகொல் நண்ணுவதே.

(திருக். ஈஅ0)

வாயிற்கணின்று தோழிக்குரைத்தல்

என்பது, வாயில் பெருது மகன்றிற ஙினையாகின்ற தலைமகன், நல்ல நாட்டுப் பொலியும் மகளிர்தங் கண்ணிணையான் வந்த அச்சத்தால் வந்த மயக்கத்தால் உண்டாகிய வாட்டத்தை நீக்காத இவ்விரதம் யாதாமென, வாயில் வேண்டித் தோழிக்குக் கூறு நிற்றல்.

(வ - று.)

கயல்வந்த கண்ணியர் கண்ணிணை யான்மிகு காதரத்தான்
மயல்வந்த வாட்டம் அகற்று விரதமென் மாமதியின்
அயல்வந்த ஆடர வாடவைத் தோனம் பலநிலவு
புயல்வந்த மாமதிற் றில்லைநன் னாட்டுப் பொலிபவரே.

(திருக். ஈஅக)

வாயில்வேண்டத் தோழி கூறல்

என்பது, வாயில் வேண்டிய தலைமகனுக்குப் பண்டு நீர் வரும் வழியிடை வருமேதமும் இருளும் எண்ணது கன்றை அகன்ற ஈற்றுவை யொத்து எம்மாட்டு வருதிர், என்று எம் பொருந்தாதார் தெருவே அன்றெம்மாட்டு ஊர்ந்து வந்த தேர்மேலேறிப் போகா நின்றீர், இதுவன்றே எம்மாட்டு நுமதருளெனத் தோழி அவன் செய்தி கூறுநிற்றல்.

(வ - று.)

கூற்று யினசின ஆளியெண் ணீர்கண்கள் கோளிழித்தால்
போற்றுன் செறியிருட் பொக்கமெண் ணீர்கன் றகன்றபுனிற்
றீற்று எனநீர் வருவது பண்டின்றெம் ஈசர்தில்லைத்
தேற்றுர் கொடிநெடு வீதியிற் போதிரத் தேர்மிசையே.

(திருக். ஈஅஉ)

தோழி வாயில்வேண்டல்

என்பது, தலைமகளுக்கு அவன் செய்தது கூறிச்சென்று, அன்று நம்புனத்தின்கண்ணே வந்து யானை கடிந்த விருந்தினர் தாம் தம் பெருமையை நினையாது இன்று நம் வாயிற்கண் வந்து, வேட்கைப் பெருக்கந் தம்மிடத்துச் சிறப்ப நின்று ஒன்றும் வாய் திறக்கின்றிலர், இதற்கியான் செய்யுமாறென்னெனவெனத், தலைமகளைத் தோழி வாயில் வேண்டல்.

(வ - று.)

வியந்தலை நீர்வைய மெய்யே யிறைஞ்சவிண் டோய்குடைக்கீழ்
வயந்தலை கூர்ந்தொன்றும் வாய்திற வார்வந்த வாளரக்கன்
புயந்தலை தீரப் புலியூ ரரனிருக் கும்பொருப்பின்
கயந்தலை யானை கடிந்த விருந்தினர் கார்மயிலே.

(திருக். கூஅகூ)

மனையவர் மகிழ்தல்

என்பது, தோழி வாயில் வேண்டத் தலைமகள் துனித்த நோக்கங் கண்டு ஓகை கொண்டு செல்லவேண்டிக் காதலன் வந்தானெனறியம்பு மளவில், இவளுடைய காவியங் கண்கள் கழுநீர்ச் செவ்வியை வௌவுதல் கற்றனவென, மனையவர் தம்முள் மகிழ்ந்து கூறல்.

(வ - று.)

தேவியங் கண்டிகழ் மேனியன் சிற்றம் பலத்தெழுதும்
ஓவியங் கண்டன்ன ஒண்ணுத லாடனக் கோகையுய்ப்பான்
மேவியங் கண்டனை யோவந் தனனென வெய்துயிர்த்துக்
காவியங் கண்கழு நீர்ச்செவ்வி வௌவுதல் கற்றனவே.

(திருக். கூஅச)

வாயின் மறுத்துரைத்தல்

என்பது, மனையவர் துனிகண்டு மகிழாநிற்ப, இவனை நமக்குத் தந்தபினைனர் நம்முடைய ஆயத்தார் முன்னே நங்காதலரின்று நங்கடையைக் கண்டார், இதுவன்றே நம்மாட்டவர் அருளெனத், தோழிக்குத் தலைமகள் வாயின மறுத்துக் கூறல்.

(வ - து.)

உடைமணி கட்டிச் சிறுதே ருருட்டி யுலாத்தருமீந்
நடைமணி யைத்தந்த பின்னர்முன் நான்முகன் மாலறியா
விடைமணி கண்டர்வண் டில்லைமென் றேகையன் னார்கண்
கடைமணி வாணகை யாயின்று கண்டனர் காதலரே. [முன்னம்

(திருக். உஅடு)

பாணனெடு வெகுளல்

என்பது, தோழிக்கு வாயின் மறுத்த தலைமகள், நின் னிடத்து அவர் நீங்காத அருள் பெரியரென்று நீ சொல்ல வேண்டுமோ, அது கிடக்க, கொற்சேரியிலுள்ளவிற்றுப், புலையா, எம்மில்லத்து நின்னுடைய நல்ல நல்ல பொய்யைப் பொருந்தி நிற்கலுற்றே நீ போந்ததென, வாயில் வேண்டிய பாணனெடு வெகுண்டு கூறல்.

(வ - து.)

மைகொண்ட கண்டர் வயல்கொண்ட தில்லைமல் கூரார்நின்வாய்
மெய்கொண்ட அன்பின ரென்பதென் விள்ளா அருள்பெரியர்
வைகொண்ட வூரிகொற் சேரியின் விற்றெம்மில் வண்ணவண்ணப்
பொய்கொண்டு நிற்கலுற் றேபுலை யாத்தின்னி போந்ததுவே.

(திருக் உஅசு)

பாணன் புலந்துரைத்தல்

என்பது, தலைமகள் வெகுண்டு உரையாநிற்ப, நின்புருவம் நெரிய, வாய் துடிப்ப, என்னை யெறிதற்குக் கல்லெடுக்க வேண்டா, நினது கரிய கண்களின் சிவப்பாற்றுவாயாக, நீ வெகுளப்படுவ தன்று, நினக்குப் பல்லாண்டு செல்வதாக, யான் வேண்டிய விடத்துப்போக நின் அடியை வலங்கொள்ளா நின்றேனென, வாயில் பெருமையிற் பாணன் புலந்து கூறல்.

(வ - து.)

கொல்லாண் டிலங்கு மழுப்படை யோன்குளிர் தில்லையன்னுய்
வில்லாண் டிலங்கு புருவம் நெரியச்செவ் வாய்துடிப்பக்
கல்லாண் டெடேல்கருங் கண்சிவப் பாற்று கறுப்பதன்று
பல்லாண் டடியேன் அடிவலங் கொள்வன் பணிமொழியே.

(திருக். உஅஎ)

விருந்தொடுசெல்லத் துணிந்தமை கூறல்

என்பது, வாயில்பெறாது பாணன் புலந்து நீங்க, யாவருக்கும் வாயினேராது வெகுண்டுரைத்தலால், தழல்சுவல்போல் மிளிர்ந்து முத்தம் பயக்கும் இவளுடைய கண்கள், விருந்தொடு வந்தா னென்று உரைக்கு மளவிற் பண்டை நிறமாகிய கருங்குவளையது செவ்விபரந்த, என்ன மனையறக் கிழத்தியோவென இல்லோர் தம்முட் கூறல்.

(வ - று.)

மத்தக் கரியுரி யோன்றில்லை யூரன் வரவெனலும்
தத்தைக் கிளவி முகந்தா மரைத்தழல் வேள்மிளிர்ந்து
முத்தம் பயக்குங் கழுநீர் விருந்தொடென் ஞதமுன்னம்
சித்தக் கருங்குவ ளாச்செவ்வி யோடிக் கெழுமினவே.

(திருக். உஅஅ)

ஊடறணிவித்தல்

என்பது, விருந்தேற்றுக் கொண்ட தலைமகளுழைச் சென்று நம்முடைய தோன்றலைத் தனக்குத் துணையாகக் கொண்டுவந்து தோன்றலால் நினதுளகத்துக் கவற்சியை யொழிந்தினி நம்மரசற் குக்குற்றேவல் செய்வாயாகவெனத், தோழி அவனை ஊடறணி வியா நிற்றல்.

(வ - று.)

கவலங்கொள் பேய்த்தொகை பாய்தரக் காட்டிடை யாட்டுவந்த
தவலங் கிலாச்சிவன் றில்லையன் னுய்தழு விம்முழுவிச்
சுவலங் கிருந்தநந் தோன்றற் றுணையெனத் தோன்றுதலால்
அவலங் களைந்து பணிசெயற் பாலை அரசனுக்கே.

(திருக். உஅக)

அணைந்தவழி யூடல்

என்பது, தோழியாலூட றணிவிக்கப்பட்டுப் பள்ளியிடத் தாளாகிய தலைமகள், நீசெய்கின்ற வித்தினை யறியில்கின் காதலிமார் நின்னை வெகுள்வர், அதுகிடக்க, யாம் மேனி முழுதும் சிறுவளை உண்டாக்கப்பட்ட பால் புலப்படுந் தன்மை யுடையேம், அதன் மேல் யாமும் நீ செய்கின்ற இக் கள்ளத்தை விரும்பேம், அதனால் எங் காலைத் தொடாதொழி எங் கையை விடுவாயாக வெனத், தலைமகன் தன்னை யணைந்தவழி யூடல்.

(வ - று.)

சேரூன் திகழ்வயற் சிற்றம் பலவர்தில் லைநகர்வாய்
வேரூன் திகழ்கண் ணிகோயார் வெகுள்வர்மெய்ப் பாலன்செய்த
பாரூன் திகழும் பரிசினம் மேவும் படிறுவவேம்
காரூன் தொடரெரு டேல்விடு தீண்டலெங் கைத்தலமே.

(திருக். ஙகஅ)

புனலாட்டுவித்தமை கூறிப்புலத்தல்

என்பது, அணைந்தவழி யூடாகின்ற தலைமகளுட நீராகின்ற தலைமகனெடிவர் செய்த பிழை யெல்லாம் பொறுக்கலாம் பலரு மறிய வொருத்தியைப் புனலாட்டுவித்து அது செய்யாதார்போல வென்மனையின்கணிவர் வந்து நிற்கின்ற விஃதெனக்குப் பொறுத்த லரிதெனத் தணிக்கத் தணியாது பரத்தையைப் புனலாட்டு வித்தமை கூறிப் புலத்தல்.

(வ - று.)

செந்தார் நறுங்கொன்றைச் சிற்றம் பலவர்தில் லைநகரோர்
பந்தார் விரலியைப் பாய்புன லாட்டிமன் பாவியெற்கு
வந்தார் பரிசுமன் ருய்நிற்கு மாறென் வளமனையிற்
கொந்தார் தடந்தோள் விடங்கா லயிற்படைக் கொற்றவரே.

(திருக். ஙகக)

கலவிகருதிப் புலத்தல்

என்பது, புனலாட்டு வித்தமை கூறிப் புலவாகின்ற தலை மகள், ஊடநீர்க்க நுதலும் தோளு முதலாயினவற்றைத் தைவந்து வருடித் தலையளி செய்யாகின்ற தலைமகனே டெம்முடைய சிறிய வில்லின்கண் வந்தன்று நீயிர்செய்த தலையளி யெங்கட்கன்று வேண்டுதுமாயினும் இன்று உமது திருவளெங்கட்கு நீயிர் வந்த வித்துணையு மமையும், வேறு நீயிர் தலையளி செய்ய வேண்டுவ தில்லையெனக், கலவிகருதிப் புலத்தல்.

(வ - று.)

மின்றுன் னியசெஞ் சடைவெண் மதியன் விதியுடையோர்
சென்றுன் னியகழற் சிற்றம் பலவன்றென் னம்பொதியில்
நன்றுஞ் சிறியவ ரில்லெம தில்லநல் லூரமன்னே
இன்றுன் திருவருள் இத்துணை சாலுமன் எங்களுக்கே.

(திருக். ஙகஉ)

மிகுத்துரைத்தூடல்

என்பது, கலவி கருதிப் புலவாகின்ற தலைமகள், புணர்தல் உருகின்ற தலைமகனுட னீர்விழுமிய நாட்டு விழுமிய நல்லூர் விழுமிய குடியிலுள்ளீர், எம்போல்வா ரிடத்திவ்வாறு புணர்தல் விரும்புதலுமக்கு விழுமிய வல்லவென, மிகுத்துரைத்தூடல்.

(வ - று)

செழுமிய மாளிகைச் சிற்றம் பலவர்சென் றன்பர்சிந்தைக்
கழுமிய கூத்தர் கடிபொழி லேழினும் வாழியரோ
விழுமிய நாட்டு விழுமிய நல்லூர் விழுக்குடியீர்
விழுமிய அல்லகொல் லோவின்ன வாறு விரும்புவதே.

(திருக். ஈடுகூ)

ஊடனீடவாடியுரைத்தல்

என்பது, தணிக்கத் தணியாது மிகுத்துரைத்துத் தலைமகள் மேன்மேலு மூடா நிற்ப, அன்றம் மலையிடத்துத் தன்னையெய்து தற்கோ ருபாய மின்றி வருந்தாநிற்ப, யானுய்யும் வண்ணந் தன்னிணைமலர்க்கண்ணின இனிய நோக்கத்தைத் தந்தருளி யென்னைத் தன் வயமாக்கிய நம் பெண்ணமுத மதுவன்று, இது நம்மை வருத்துவதோர் மாயமாமெனத் தன்னெஞ்சிற் கியம்பி யூடனீடத் தலைமகன் வாடல்.

(வ - று.)

திருந்தேன் உயநின்ற சிற்றம் பலவர்தென் னம்பொதியில்
இருந்தேன் உயவந் திணைமலர்க் கண்ணினின் நோக்கருளிப்
பெருந்தே னெனநெஞ் சுகப்பிடித் தாண்டநம் பெண்ணமிழ்தம்
வருந்தேல் அதுவன் றிதுவோ வருவதோர் வஞ்சனையே.

(திருக். ஈடுகூ)

துனியொழிந்துரைத்தல்

என்பது, ஊடனீடலால் தலைமகன் தாற்ருவாயில் கண்ட தலைமகள், அன்று நங்குன்றிடத்து மிக்க விருளின்கண்ணே அரி திரண்டு யானை வேட்டஞ் செய்யு மதரகத்துத் தமது வேலே துணையாக வந்தியல்பைப் பொருந்திய வன்பை நமக்குத் தந்தவர்க் கின்று நாமுடம்படாது நிற்குமிந்நிலைமை யென்னுமெனத், துனி யொழிந்தவளோடு புணர்ச்சிக் குடம்படாது நிற்றல்.

(வ - று.)

இயன்மன்னும் அன்புதந் தார்க்கென் னிலையிமை யோரிறைஞ்சும்
செயன்மன்னுஞ் சீர்க்கழற் சிற்றம் பலவர்தென் னம்பொதியில்
புயன்மன்னு குன்றிற் பொருவேல் துணையாப் பொம்மென்னிருள்
அயன்மன்னும் யாணர் துரந்தரி தேரும் அதரகத்தே. [வாய்

(திருக். நகஎ)

புதல்வன் மேல் வைத்துப் புலவி தீர்தல்

என்பது, துனி யொழித்துக் கூடிப் பிரிந்தவழிப் பின்னும் பரத்தை மாட்டுப் பிரிந்தானென்று கேட்டுப் புலந்து வாயின் மறுக்க, வாயிற்கணின்று விளையாடுகின்ற புதல்வனை யெடுத் தணைத்துத் தம்பலமிட்டு முத்தங் கொடுத்து அது வாயிலாகக் கொண்டு, தலைமகன் செல்லாநிற்ப, அப்புதல்வனை வரங்கி யணைத்துக்கொண்டு, அவன் வாயிற்றம்பலந் தன் மெய்யிற் படுதலா னெல்லார்க்கும் பொதுவாகிய தம்பலத்தைக் கொண்டு வந்தோ ரீ யெம்மைக் கொண்டாடுவது, அது கிடக்க, இதனை நினக்குத் தந்தவா றியம்புவாயாக வெனப், புதல்வன்மேல் வைத் துத் தலைமகள் புலவிதீரா நிற்றல்.

(வ - று.)

கதிர்த்த நகைமன்னுஞ் சிற்றவ்வை மார்களைக் கண்பிழைப்பித்
தெதிர்த்தெங்கு நின்றெப் பரிசளித் தானிமை யோரிறைஞ்சும்
மதுத்தங் கியகொன்றை வார்சடை யீசர்வண் டில்லைநல்லார்
பொதுத்தம் பலங்கொணர்ந் தோபுதல் வாவெம்மைப் பூசிப்பதே.

(திருக். நகசு)

கலவியிடத்தூடல்

என்பது, புதல்வனை வாயிலாகப் புக்குப் புலவி தீர்த்துப் புணரலுற்ற தலைமகனைத் தலைமகளொரு காரணத்தால் வெகுண் டவன் மார்பகத்து தைப்ப, அவ்வெகுடல் தீரவேண்டி அவனவள் காலைத் தன்றலைமேலேற்றுக் கொள்ள, அது குறையாகவவள் புலந்தழா நின்றமையை யவ்விடத்துழையர் தம்முட் கூறல்.

(வ - று.)

சிலைமலி வாணுதல் எங்கைய தாகம் எனச்செழும்பூண்
மலைமலி மார்பின் உதைப்பத்தந் தான்றலை மன்னர்தில்லை
உலைமலி வேற்படை யூரனிற் கள்வரில் என்னவுன்னிக்
கலைமலி காரிகை கண்முத்த மாலை கலுழ்ந்தனவே.

(திருக். நகஎ)

முன்னிகழ்வுரைத்தூட றீர்த்தல்

என்பது, கலவியிடத் தூடிய தலைமகளுக்கு, யாங்கொடிய நெறியைச் சென்று சிறிய வூரின்கண் மரையதட்பள்ளியினிச் செறிந்த மெல்லிய மூலிகளென் மார்பிடை வந்தடர்க்கத் தங்கிய சிறிய துயிற்கு மாறுகண்டிலம், அதனை நீ யுள்ளியுமறிதியோ வென, முன்னிகழ் வுரைத்துத் தலைமகனவனை யூடறீரா நிற்றல்.

(வ - று.)

ஆறூர் சடைமுடி யம்பலத் தண்டரண் டம்பெறினும்
மாறூர் மழவிடை யாய்கண் டிலம்வண் கதிர்வெதுப்பு
நீறூர் கொடுநெறி சென்றிச் செறிமென் மூலைநெருங்கச்
சீறூர் மரையத ளிற்றங்கு கங்குற் சிறுதுயிலே.

(திருக். ஙகஅ)

பரத்தையைக் கண்டமை கூறிப்புலத்தல்

என்பது, முன்னிகழ்வுரைத் தூடறீர்த் தின்புறப்புணரப் பட்ட தலைமகள், பிறர்க்கு நீ யிவ்வாறின்பஞ் செய்தி யெனறு கூற, நின்னை யொழிய யான் வேறொருத்தியையுமறியே னென்ற தலைமகனுக்கு நின்பரத்தை போகாநினறவள் நம் வாயிற்கணின்று தேருருட்டி விளையாடிய புதல்வனைக் கண்டு நின்மகனென் றையுற்றுத், தழுவ, நீ யையுறவேண்டா, அவன் உன் மகன், உறவு மெய்யாகிய உறவே, ஈதும் உனதில்லமே ஈண்டு வருவாயாக வென்று யான் கூற, அது கேட்டுத் தாணுணிப்போயினள், யான் அவனையறியேனுக, நீ மாயங் கூற வேண்டுவதில்லையென, நான் பரத்தையைக் கண்டமை கூறிப் பின்னுமவளெடு புலத்தல்.

(வ . று.)

ஐயுற வாய்நம் மகன்கடைக் கண்டுவண் டேருருட்டும்
மையுறு வாட்கண் மழவைத் தழுவமற் றுன்மகனே
மெய்யுற வாமிதுன் னில்லே வருகென வெள்கிச்சென்றுள்
கையுறு மான்மறி யோன்புலி யூரன்ன காரிகையே.

(திருக். ஙகக)

ஊதியமெடுத்துரைத் தூடறீர்த்தல்

என்பது, பரத்தையைக் கண்டமை கூறிப் புலந்து வேறு பட்ட தலைமகளுக்கு, இத்தன்மையன் யாவர்க்கு மூதிய மாகலின், அன்பானன்றியருளாற் பரத்தையர்க்குந் தலையளி செய்ய வேண்டு மென்றே, புறப்பெண்டிரைப் போல யாமவளெடு புலக்கற்பாலே

மல்லேம், அவன் வரும்பொழு தெதிர் தொழுதும், போம்பொழுது புறந்தொழுதும், புதல்வனைப் பயந்திருக்கையன்றே நமக்குக் கடனுவதெனத், தோழி, தலைமகனதூதிய மெடுத்துரைத்தவளை யூடறீர்த்தவனெடு பொருந்தச் செய்யா நிற்றல்.

(வ - ரு.)

காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தா மணியணி தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் தக்கோர்தஞ் சங்க நிதிவிதிசேர்
ஊருணி யுற்றவர்க் கூரன்மற் றியாவர்க்கு மூதியமே.

(திருக். ச00) (கூ)

(கு - ரை.) மணிவாசகர் அருளிய நூல்கள் இரண்டு. (1) திருவாசகம் (2) திருக்கோவையார். திருவாசகத்தில் முதற்கண் 'தமச்சிவாய வாழ்க' எனத் தொடங்கி, இக்கோவையில் 'யாவர்க்கும் ஊதியமே' என நிறைவு பெறுகிறது. எனவே உயிர்களுக்கு ஊதியம் திருவைந் தெழுத்தே என்பது புலனுகும்.

கற்பொழுக்கவியல் முற்றும்

பொருளதிகாரம் முற்றும்.

———

சு. யாப்பதிகாரம்

உறுப்பியல்

தற்சிறப்புப்பாயிரம்

அசுஉ. எலாந்தா மாக விருக்கும் பொருளேது
அதனடி மலர்தொழு தறைகுவன் யாப்பே.

என்பது, பிருதிவிமுதலிய ஐம்பெரும் பூதங்களும் அவற்றுட் டோன்றிய சராசரங்களுமாக இருக்கும்பொருள் எதுவோ அப்பொருளின் அடியாகிய மலரை வணங்கி யாப்பிலக்கணத்தைக் கூறுவேனென்க. (க)

நேரசை

அசுஉ. நெடில்குறில் தனியா நின்றும் ஒற்றெடுத்தும்
நடைபெறு நேரசை நால்வகை யானே.

என்பது, நெட்டெழுத்துத் தனித்தும், குற்றெழுத்துத் தனித்தும், நெட்டெழுத்து ஒற்றடுத்தும், குற்றெழுத்து ஒற்றடுத்தும் வருவது நேரசை.

(வ - று.)

போதுசாந்தம் பொற்ப ஏந்தி
ஆதிநாதற் சேர்வோர்
சோதிவானந் துன்னுவோரே. (உ)

நிரையசை

அசுச. குறிலிணை குற்றினெடில் தனித்தும் ஒற்றடுத்தும்
நெறிமையி னின்காய் வருநிரை யசையே.

என்பது, குறிலிணைந்து தனித்தும், குறிநெடில் இணைந்து தனித்தும், குறிலிணைந்து ஒற்றடுத்தும், குறினெடில் இணைந்து ஒற்றடுத்தும், வருவது நிரையசை.

(வ - று.)

அணிகிழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிக முவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப்பவரே. (கூ)

அகவற் குரிய சீர்கள்

அசுரு. நேர் நேர் தேமா நிரைநேர் புளிமா
நிரை நிரை கருவிளம் நேர்நிரை கூவிள
மாகு நாற்சீரு மகவற் குரிய.

என்பது,

நேரசையும் நேரசையும் கூடினுல் தேமா
நிரையசையும் நேரசையும் கூடினுல் புளிமா
நிரையசையும் நிரையசையும் கூடினுல் கருவிளம்
நேரசையும் நிரையசையும் கூடினுல் கூவிளம்

ஆகிய நான்குசீரும் ஆசிரியப்பாவிற்குரியன.

(வ - று.)

குன்றக்குறவன் காதன் மடமகள்
வரையர மகளிரைப் புரையுஞ்சாயலள்
ஐய ளரும்பிய முகிலியள்.
செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே. (சு)

வெண்பாவிற் குரிய சீர்கள்

அசுசு. ஈரசை நாற்சீர் ஈற்றினு நேரசை
விளந்துகா யெனவரல் வெண்பாக் குரிய.

என்பது, இரண்டசையாலுகிய நாற்சீரினது இறுதியினும் நேரசையடைந்து, தேமாங்காய்; புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காயென மூன்றசையான் வருகிற நான்குசீரும், வெண்பாவிற்குரியன.

(வ - று.)

யாதானு நாடாமா லூராமா லென்னெருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு. (குறள்-கூசுஎ) (இ)

வஞ்சிப்பாவிற் குரிய சீர்கள்

அசுஎ. நிரையசை யடைந்து கனியென நேர்வது
வஞ்சிக் குரியவாம் வழுத்துங் காலே.

என்பது, இரண்டசையானுகிய நான்குசீரினது இறுதியினும் நிரையசை யடைந்து தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி யென மூன்றசையான் வருகிற நான்குசீரும் வஞ்சிப் பாவிற்குரியன.

(வ - று.)

பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்,
நாளும்,
மகிழு மகிழ்தூஉங் கூரன்
புகழ்த லானுப் பெருவண் மையனே. (சு)

பொதுச்சீர்கள்

அசுஅ. தண்ணிழல் தண்பூ நறும்பூ நறுநிழல்
புணர்ந்து வருவது பொதுச்சீ ராகும்.

என்பது, தண்ணிழலடைந்து, தேமாந்தண்ணிழல், புளிமாந்தண்ணிழல், கருவிளந்தண்ணிழல், கூவிளந்தண்ணிழல் எனவும், தண்பூவடைந்து, தேமாந்தண் பூ, புளிமாந்தண் பூ, கருவிளந்தண் பூ, கூவிளந்தண் பூ எனவும், நறும் பூ வடைந்து தேமாநறும் பூ, புளிமாநறும் பூ, கருவிளநறும் பூ, கூவிளநறும் பூ எனவும், நறு நிழலடைந்து தேமாநறுநிழல், புளிமாநறுநிழல், கருவிளநறுநிழல், கூவிளநறுநிழல் எனவும் நான்கசையான் வருகிற பதினறுசீரும் பொதுச் சீர்க்குரியன.

(வ - று.)

அள்ளற்பள்ளத் தகன்சோணாட்டு
வேங்கைவாயின் வியன்குன்றூரன். (எ)

ஓரசைச்சீர்

அசுக. ஓரசை நின்றுஞ் சீரா கும்மே.

என்பது, நேரசை தனித்துநின்று நாள் எனவும், நிரையசை தனித்து நின்று மலர் எனவும், சீராகும்.

(வ - ம்.)

பாலொடு தேன்கலந் தற்றே பனிமொழி
வாலெயி றூறிய நீர். (குறள்-கஇஉக)

நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர். (குறள்-கoஎஉ) (அ)

வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும்

அஎo. **காய்முன் னேரே வெண்சீர் வெண்டளை**
மாமுன் னிரையும் விளமுன் னேரும்
இயற்சீர் வெண்டளை யென்மனர் புலவர்.

என்பது, காய்முன் நேர்வருவது வெண்சீர்வெண்டளை.

(வ - ம்.)

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு. (குறள்-கூஎள)

மாமுன் னிரையும் விளமுன் னேரும்
இயற்சீர் வெண்டளை.

(வ - ம்.)

பாலொடு தேன்கலந் தற்றே பனிமொழி
வாலெயி றூறிய நீர். (குறள்-ககஉக) (கூ)

நேரொன்றுசிரியத் தளையும் நிரையொன்றுசிரியத் தளையும்

அஎக. **மாமுன் னேர் நேரொன்றிய வகவற்**
றளையாம் விளமுன் னிரைநிரை யொன்றிய
அகவற் றளையா மாயுங் காலே.

என்பது, மாமுன்நேர்வருவது நேரொன்றிய அகவற்றளை.

(வ - ம்.)

போது சாந்தம் பொற்ப வேந்தி
யாதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னு வோரே.

விளமுன் னிரைவருவது நிரையொன்றிய வகவற்றளை

(வ - று.)

அணிநிழல சோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிக முவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே. (கஅ)

வஞ்சித்தளைகள்

அஎஉ. கனிமுன் னேரோன் ருதவஞ் சித்தளை
ஒன்றிய தளைநிரை வரினு கும்மே.

என்பது, கனிக்குமுன்னேர் வருவது ஒன்ருத வஞ்சித்தளை, நிரைவருவது ஒன்றிய வஞ்சித்தளை.

(வ - று.)

பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ். (கக)

கலித்தளை

அஎங. காய்முன் னிரைவரிற் கலித்தளை யாகும்.

என்பது, காய்க்கு முன்னர் நிரைவருவது கலித்தளை.

(வ - று.)

செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாளி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போ
யெல்லிநீர் வியன்கொண்மூவிடைநுழையு மதியம்போன்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே. (கஉ)

பொதுச்சீர்கள் தளைகொள்ளுமாறு

அஎச. பொதுச்சீர்ப் பூக்கா யாகு நிழல்கனி
ஆகு மென்ரு ரறிந்திசி னோரே.

என்பது, பூவிற்குமுன்னர் நேரசைவரின் வெண்சீர் வெண்டளை - நிரையசைவரிற் கலித்தளை - நிழலிற்குமுன்னர் - நிரையசைவரினென்றிய வஞ்சித்தளை நேரசைவரின் ஒன்ருத வஞ்சித்தளையாகும். (கஙூ)

ஓரசைச்சீர்கள் தளை கொள்ளுமாறு

அளடு. அகவற் சீரற் ருகுமோ ரசைச்சீர்

என்பது, நாள்முன்னர் நேரசைவரின், நேரொன்றிய அகவற்றளை, நிரையசைவரின் இயற்சீர்வெண்டளை, மலர்முன்னர் நிரையசைவரின் நிரையொன்றிய அகவற்றளை, நேரசைவரின் இயற்சீர் வெண்டளையாகும்.

(வ - டு.) வந்துழிக் காண்க (கச)

குறளடி

அளசு. இருசீ ரான்வரல் குறளடி யெனலே.

என்பது, அடிகள்தோறும் இரண்டு சீராகவருவது குறளடியாகும்.

(வ - டு.)

திரைத்த சாலிகை, நிரைத்த போனிரங்,
திரைப்ப தேன்களே, விரைக்கொண் மாலையாய். (கஙி)

சிந்தடி

அளஎ. மூச்சீ ரான்முடி வதுசிந் தடியே

என்பது, அடிகள்தோறும் மூன்று சீராகவருவது சிந்தடியாகும்,

(வ - டு.)

இருது வேற்றுமை யின்மையாற்
சுருதி மேற்றுறக் கத்திஞை
டரிது வேற்றுமை யாகவே
கருது வேற்றடக் கையினுய். (கசு)

அளவடி

அளஅ. நாற்சீ ரான்வரல் அளவடி யாகும்.

என்பது, அடிகடோறு நான்குசீராகவருவது அளவடியாகும்.

(வ - டு.)

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய

னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்திவ ணங்குவாம். (பெரியபு-க) (கள)

நெடிலடி

அஎக. ஐஞ்சீ ரான்வரு வதுநெடி லடியே.

என்பது, அடிகடோறும் ஐந்து சீராகவருவது நெடிலடி யாகும்.

(வ - று.)

ஒழுகு தீம்புனற் சிறைசெயு மோதையு முழுநர்
குழுவின் சும்மையு முழுத்தியர் குரவை யினுர்ப்புங்
கழனி வாழ்கென வான்முகீ வித்துநர் கலிப்பு
மழைமுழக்கொடு மாறுகொண் டொலித்தன மாதோ. (கஅ)

கழி நெடிலடி

அஅ0. அறுசீர் முதலே யிருசீ ரடிகடை
யாக வருவது கழிநெடி லாகும்.

என்பது, ஆறுசீர் முதலாகப் பதின்சி ரிறுதியாகவருவது, கழிநெடிலடியாகும்.

(வ - று.)

பூவாய் நெடுங்கோட் டுறுபசுந்தேன் கை கான் முடங்கு பொறியிலிதன்
நாவா யெழுகிற் றெனவுலக மளந்த மாலு நான்முகனுங்
காவா யெனகின் றேத்தெடுப்பத் தானே வந்தென் கரதலத்தின்
மேவா வமர்ந்த மாமணியைத் தொழுது வீணக்கு விடைகொடுப்பாம்.
(பிரபுலீங்க லீலை)

பிறவும் வந்துழிக்காண்க. (ககூ)

வெண்பாவிற்குரிய அடிச் சிறுமை

அஅக. வேள்ளைக் கிரண்டடி சிறுமை யாகும்.

என்பது, வெண்பாவிற்கு இரண்டடி சிறுமையாகும்.

(வ - று.)

புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி
மூக்கிற்கரியா ருடைத்து. (குறள்-உஎஎ) (உ0)

அகவற்குரிய அடிச்சிறுமை

அஅஉ. அகவற் கொருமூன் றடிசிறு மையே.

என்பது, ஆரியப்பாவிற்கு மூன்றடி சிறுமையாகும்.

(வ - று.)

போது சாந்தம் பொற்ப வேந்தி
யாதி நாதர் சேர்வோர்
சோதி வானந் துன்னு வோரே. (உக)

வஞ்சிப்பாவிற்குரிய அடிச்சிறுமை

அஅஊ. வஞ்சிப் பாவு மவற்றே ரற்றே.

என்பது, வஞ்சிப்பாவிற்கு மூன்றடி சிறுமையாகும்.

(வ - று.)

செங்கண்மேதி கரும்புழக்கி
யங்கணீலத் தலரருந்திப்
பொழிற்காஞ்சி நிழற்றுயிலுஞ், செழுநீர்,
நல்வயற் கழனியூரன்
புகழ்த லானுப் பெருவண் மையனே. (உஉ)

கலிப்பாவிற்குரிய அடிச்சிறுமை

அஅஎ. கலிப்பா விற்கொரு நாலடி சிறுமை
யாகு மென்மனு ரறிந்திசி னோரே.

என்பது, கலிப்பாவிற்கு நான்கடி சிறுமையாகும்.

(வ - று.)

செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாளி
மூல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போ
யெல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போன்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே. (உங)

நால்வகைப் பாக்களுக்கும் உரிய அடிப்பெருமை

அஅஏ. பெருமை யுரைப்போன் பெற்றித் தாகும்.

என்பது, நான்கு பாவிற்கும் பெருமை கவி கூறுவோனறி வினளவேயாம்.

(வ - று.)

வந்துழிக் காண்க. (உசு)

அடிமோனை

அஅசு. அடிதோறு முதலெழுத் தணைந்து வரலடி
மோனை யென்மனார் முழுதுணர்ந் தோரே.

என்பது, அடிதோறு முதலெழுத் தொன்றிவருவது, அடி மோனைத் தொடையாகும்.

(வ - று.)

மாவும் புள்ளும் வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலைதொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடை
மாயோ ளின்னுயிர்ப் புறத்திறுத் தற்றே. (உஙி)

அடியியையுத் தொடை

அஅஎ. இறுதி யசையெழுத் தேனு மொன்றுவ
தடியியை பாமென வறையப் படுமே.

என்பது, இறுதி அசையேனும் எழுத்தேனும் ஒன்றிவருவது அடியியையுத் தொடையாகும்.

(வ - று.)

இன்னகைத் துவர்வாய்க் கிளவியு மணங்கே
நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே
ஆடமைத் தோளி யூடலு மணங்கே
அரிமதர் மழைக்கணு மணங்கே
திருநுதற் பொறித்த திலகமு மணங்கே. (உசு)

எதுகை

அஅஅ. இரண்டா மெழுத்தோன் றுவதெது கையே.

என்பது, அடிதோறும் இரண்டாமெழுத் தொன்றிவருவது அடி யெதுகைத் தொடையாகும்.

(வ - று.)

காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலான் முகத்த களிறு. (குற்ள்-கூ00) (உஎ)

முரண்டொடை

அ.அகூ. மூரணத் தோடுப்பது முரண்டோடை யாகும்.

என்பது, அடிதோறுந் தம்முள் மறுதலைப்படத் தொடுப்பது அடி முரண்டொடையாகும்.

(வ - று.)

இருள்பரந் தன்ன மாநீர் மருங்கி
னிலவுகுவித் தன்ன வெண்மண லொருசிறை
இரும்பி னன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னி னன்ன நுண்டா துறைக்குஞ்
சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கணு முடையவா லணங்கே. (உஅ)

அளபெடைத் தொடை

அகூ0. அளபெடுத் தொன்றுவ தளபெடைத் தோடையே.

என்பது, அடிதொறு மளபெடுத்து வருவது அடியள பெடைத் தொடையாகும்.

(வ - று.)

ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர். (குறள்-சுஙிக) (உக)

அந்தாதித் தொடை

அகூக. அந்த மூதலாத் தோடுப்பதந் தாதி.

என்பது, இறுதி யெழுத்தேனும் அசையேனும் சீரேனும் அடியேனும் மற்றோரடி முதலில் வருவது அந்தாதித் தொடை யாகும்.

(வ - று.)

உலகுடன் விளக்கு மொளிதிக ழுவிர்மதி
மதிநல னளிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாதனம்
ஆதனத் திருந்த திருந்தொளி யறிவினை
யறிவுசே ருள்ளமோ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தர தென்ப
பன்னிருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே. (கூ0)

இரட்டைத் தொடை

அகூ உ. ஓரடி முழுது மொருசொல் லேவரத்
தொடுப்ப திரட்டைத் தொடையெனப் படுமே.

என்பது, ஓரடிமுழுவதும் ஒருசொல்லே வருவது இரட்டைத் தொடையாகும்.

(வ - று.)

ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்
விளக்கினுட் ஔறரி யொக்குமே யொக்குங்
குளக்கொட்டிப் பூவி னிறம். (கூக)

செந்தொடை

அகூஙு. செந்தொடை யொவ்வாத் திறத்தன வாகும்.

என்பது, மோனைமுதலியன பிறவும் ஒவ்வாது வருவது செந்தொடையாகும்.

(வ - று.)

பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாட
னன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே. (கூஉ)

இணைத்தொடை

அகூச. இணையிரு சீர்மிசை யெய்துவ தாகும்.

என்பது, முதலிரு சீர்க்கண்ணு மோனை முதலியவைந்தும் வருவது இணைத் தொடையாகும்.

(வ - று.)

அணிமல ரசோகின் தளிர்நலங் கவற்றி
இணை மோனை

மொய்த்துடன் றவழு முகிலே பொழிலே
இணையியைபு

பொன்னின் அன்ன பொறிசுணங் கேந்தி
இணையெதுகை

சிறடிப் பேரகல் அல்கு லொல்குபு
இணைமுரண்
தாஅட் டாஅ மரைமல ருழக்கி
இணையளபு. (கூங)

பொழிப்புத் தொடை

அகூடு. பொழிப்பிடை யிட்டுப் போதுவ தென்ப.

என்பது, முதற்சீர்க் கண்ணும் மூன்றாஞ் சீர்க்கண்ணும் மோனைமுதலாயின ஐந்தும் வருவது பொழிப்புத் தொடையாகும்.

(வ - று.)

அரிக்குரற் கிண்கிணி அரற்றுஞ் சிறடி
பொழிப்புமோனை
மற்றத னயலே முத்துறழ் மணலே
பொழிப்பியைபு
பன்னரும் கோங்கி னன்னலங் கவற்றி
பொழிப்பெதுகை
சுருங்கிய நுசுப்பிற் பெருவடங் தாங்கி
பொழிப்புமுரண்
பூஉக் குவளைப் போஒ தருந்தி
பொழிப்பளபு. (கூச)

ஒரூஉத் தொடை

அகூசு. இருசீ ரிடையிட் டாதியு மந்தமு
மொன்றி னொரூஉவென் றுரைத்திசி னோரே.

என்பது, நடுவிருசீர்க்கண்ணுமின்றி முதற்சீர்க்கண்ணும் ஈற்றுச் சீர்க்கண்ணும் மோனைமுதலாயின ஐந்தும் வருவது ஒரூஉத்தொடை.

(வ - று.)

அம்பொற் கொடிஞ்சி நெடுந்தேர் அகற்றி
ஒரூஉமோனை
நிழலே யினியத னயலது கடலே
ஒரூஉவியைபு

அன்னம் பயிலிய தாமரை அன்ன
ஒருஉவெதுகை

குவிந்து சுணங் கரும்பிய கொங்கை விரிந்து
ஒருஉமுரண்

காஅய்ச் செந்நெல் கறித்துப் போஒய்
ஒருஉவளபு (கூடு)

கூழைத் தொடை

அகூஎ. இறுதிச் சீரோழித் தெல்லாங் தோடேப்பது
கூழை யென்மனூர் குறிப்புணர்ந் தோரே.

என்பது, ஈற்றுச் சீர்க்கணின்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனைமுதலாயின ஐந்தும் வருவது கூழைத்தொடை.

(வ - று.)

அகன்ற அல்குல் அந்துண் மருங்குல்
கூழைமோனை

மாதர் நகிலே வல்லே யியலே
கூழையியைபு

நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி
கூழையெதுகை

சிறிய பெரிய நிகர்மலர்க் கோதை
கூழைமுரண்

மாஅத் தாஅண் மோஒட் டெருமை
கூழையளபு (கூசு)

மேற்கதுவாய்த் தொடை

அகூஅ. முதலயற் சீரோழித் தேனைய சீரேலா
மிையையத் தோடுப்பது மேற்கது வாயே.

என்பது, முதலயற் சீர்க்கணின்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணு மோனை முதலாயின ஐந்தும் வருவது மேற்கதுவாய்த் தொடை.

(வ - று.)

அரும்பிய கொங்கை அவ்வளை அமைத்தோள்
மேற்கதுவாய்மோனை
வில்லே நுதலே வேற்கண் கயலே
மேற்கது வாயியைபு
என்னையும் இடுக்கண் துன்னுவித் தின்னடை
மேற்கதுவாயெதுகை
வெள்வளைத் தோளுஞ் சேயரிக் கருங்கணும்
மேற்கதுவாய் முரண்
தேஎம் புனலிடைச் சேஎர்பாஅல்
மேற்கதுவாயளபு (கஎ)

கீழ்க்கதுவாய்த் தொடை

அகக. ஈற்றயற் சீரோழித் தெல்லாம் தொடுப்பது
கீழ்க்கது வாயின் கிழமைய தாகும்.

என்பது, ஈற்றயற் சீர்க்கணின்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயின ஐந்தும் வருவது கீழ்க்கதுவாய்த்தொடை.

(வ - று.)

அவிர்மதி அனைய திருநுதல் அரிவை
கீழ்க்கதுவாய் மோனை
பல்லே தளவம் பாலே சொல்லே
கீழ்க்கதுவாயியைபு
அன்ன மென்பெடை போலப் பன்மலர்
கீழ்க்கதுவா யெதுகை
இருக்கையு நிலையு மேந்தெழி லியக்கமும்
கீழ்க்கதுவாய்முரண்
மீஇ ஞஅர்ந் துகளுஞ் சீஇர்
கீழ்க்கது வாயளபு (கஅ)

முற்றுத்தொடை

கஂ00. முழுவது மியைவது முற்றெனப் படுமே.

என்பது, நாற்சீர்க்கண்ணும் மோனைமுதலாயின ஐந்தும் வருவது முற்றுத்தொடை.

(வ - று.)

அயில்வேல் அனுக்கி அம்பலத்து அமர்ந்த
முற்றுமோனை

புயலே குழலே மயிலே யியலே
முற்றியைபு

கன்னியம் புன்னை யின்னிழற் றுன்னிய
முற்றெதுகை

துவர்வாய்த் தீஞ்சொலு முவந்தெனை முனியா
முற்றுமுரண்

ஏன ராஅ னீஇ ரூஉரன்
முற்றளபு (கூகூ)

உறுப்பியன் முற்றும்.

உ. செய்யுளியல்

வெண்பாவடிக்குரிய சீர்வரையறை

கூ0க. வெண்பா வளவடி வேண்டப் படுமே.

என்பது, வெண்பாவெல்லாம் ஓரடி நாற்சீரான் வரப்பெறும்.

(வ - று.)

நுனிக்கொம்ப ரேறினு ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும். (க)

குறள் வெண்பா

கூ0உ. அவற்றுள்
உரத்தெழு செப்ப லோசையைத் தழுவி
யிரண்டடி யாயீற் றடிமுச் சீரா
யொருவிகற் பானு மிருவிகற் பானும்
வருவது குறள்வெண் பாவெனப் படுமே.

என்பது, மூற்கூறியவற்றுள் குறள்வெண்பா உரத்தினின் றெழுகின்ற செப்பலோசையைத் தழுவி இரண்டடியாய் ஈற்றடி முச்சீராய் ஒரு விகற்பானும் இருவிகற்பானும் வருவது.

(வ - று.)

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின். (குறள்-உ)

ஒருவிகற்பு.

யாதானு நாடாமா லூராமா லென்னெருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு. (குறள்-கூகஎ)

இருவிகற்பு. (உ)

நேரிசை வெண்பா

கூ0கூ. இடையிற் றனிச்சோற பேற்றிரு குறளா
யொருவிகற் பானு மிருவிகற் பானும்
வருவது நேரிசை வெண்பா வாகும்.

என்பது, இரண்டு குறள்வெண்பாவாக நடுவிற்றனிச் சொற் பெற்று ஒரு விகற்பானும் இருவிகற்பானும் வருவது நேரிசை வெண்பாவாகும்.

(வ - று.)

திருமுடியிற் கண்ணியு மாலையும் பாம்பு
திருமார்பி லாரமும் பாம்பு, பெருமான்,
றிருவரையிற் கட்டிய கச்சையும் பாம்பு
பொருபுயத்திற் கங்கணமும் பாம்பு. (சி. செ. கோவை)

ஒருவிகற்பு.

நீல மணிமிடற்ற னீண்ட சடைமுடிய
னூலணிந்த மார்ப னுதல்விழியன், மேலுடையன்,
கைம்மான் மறியன் கனன்மழுவன் கச்சாலே
யெம்மா னிமையோர்க் கிறை. (தண்டி-மேற்)

இருவிகற்பு. (கூ)

இன்னிசை வெண்பா

கூ0ச. தனிச்சோ லின்றி யொருவிகற் பானும்
தனிச்சோ லின்றி யிருவிகற் பானும்

தனிச்சோ லின்றிப் பலவிகற் பானும்
தனிச்சொற் பெற்றுப் பலவிகற் பானும்
தனிச்சொன் மூன்று மடியிற் றழுவி
யிருவிகற் பானும் வருவதின் னிசையே.

என்பது, தனிச்சொலின்றி யொருவிகற்பானும், தனிச் சொலின்றி யிருவிகற்பானும், தனிச்சொலின்றிப் பலவிகற்பானும், தனிச்சொற் பெற்றுப் பலவிகற்பானும், தனிச்சொல் மூன்று மடியிற் பெற்று இருவிகற்பானும் வருவது இன்னிசை வெண்பா வாகும்.

(வ - று.)

துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும். (நாலடியார்)

ஒருவிகற்பு.

உவர்நிலத் திற்பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்தி னெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினுங் கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்துள் வைக்கப்படும். (நாலடியார்)

பலவிகற்பு.

பிறவும் வந்துழிக் காண்க. (சு)

இதுவுமது

கூ०று. அடியடி தோறுந் தனிச்சொற் பெற்று
வருவது மதனியல் பாமென மொழிப.

என்பது, அடிகடோறுந் தனிச்சொற் பெற்றுவருவதும் இன்னிசை வெண்பா.

(வ - று.)

மழையின்றி மாநிலத்தார்க் கில்லை, மழையும்
தவமிலா னில்வழி யில்லை, தவமும்,
அரசிலா னில்வழி யில்லை, அரசனும்,
இல்வாழ்வா னில்வழி யில். (இ)

நேரிசைச் சிந்தியல் வெண்பா

கூ.oசு. நேரிசை போல விரண்டா மடியிற்
றனிச்சொற் பெற்றொரு விகற்பத் தானுங்
தனிச்சொற் பெற்றிரு விகற்பத் தானுங்
மூன்றடி யாக முடிவது நேரிசைச்
சிந்திய லென்மனார் தெளிந்திசி னோரே.

என்பது, நேரிசை வெண்பாவைப்போல இரண்டாமடியில் தனிச்சொற் பெற்று மூன்றடியாக ஒருவிகற்பானும் இருவிகற் பானும் வருவது நேரிசைச் சிந்தியல் வெண்பாவாகும்.

(வ - று.)

அறிந்தானை யேற்றி யறிவாங் கறிந்து
சிறந்தார்க்குச் செவ்வ னுரைப்பச், சிறந்தார்
சிறந்தமை யாராய்ந்து கொண்டு.

ஒருவிகற்பு.

நற்கொற்ற வாயி னறுங்குவளைத் தார்கொண்டு
சுற்றும்வண் டார்ப்பப் புடைத்தாளே, பொற்றேரான்
பாலிநல் வாயின் மகள்.

இருவிகற்பு. (சு)

இன்னிசைச் சிந்தியல் வெண்பா

கூ.oஎ. இன்னிசை போலத் தனிச்சொ லின்றி
ஒருவிகற் பானும் பலவிகற் பானும்
வருவ தின்னிசைச் சிந்திய லாகும்.

என்பது, இன்னிசை வெண்பாவைப் போலத் தனிச் சொலின்றி மூன்றடியாக ஒருவிகற்பானும் பலவிகற்பானும் வருவது இன்னிசைச் சிந்தியல் வெண்பாவாகும்.

(வ - று.)

நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரில்
அறநாட்டுப் பெண்டி ரடி.

ஒருவிகற்பு.

சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.

பலவிகற்பு. (எ)

சவலை வெண்பா

கூ0அ. இருகுறள் சவலை யொருவிகற் பாகும்.

என்பது, இரண்டுகுறள் வெண்பாவாக ஒருவிகற்பொடு வருவது சவலை வெண்பாவாகும்.

(வ - று.)

திருமுடியிற் கண்ணியு மாலையும் பாம்பு
திருமார்பி லாரமும் பாம்பு
திருவரையிற் கட்டிய கச்சையும் பாம்பு
பொருபுயத்திற் கங்கணமும் பாம்பு.
(சிதம்பரச் செய்யுட் கோவை) (அ)

பஃறொடை வெண்பா

கூ0கூ. பாதம் பலவரிற் பஃறொடை யாகும்.

என்பது, நான்கடிக்குமேல் ஏழடியிறுதியாக வருவது பஃறொடை வெண்பாவாகும்.

(வ - று.)

சேற்றுக்கா னீலஞ் செருவென்ற வேல்வேந்தன்
கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகயல்
தோற்றந் தொழில்வடிவு தம்முற் றடுமாறும்
வேற்றுமை யின்றியே யொத்தன மாவேடர்
ஆற்றுக்கா லாட்டியர் கண். (கூ)

கலிவெண்பா

கூகo. அடிவரை யின்றித் தனிச்சொற் பெற்றும்
பெறுதும் வருவது கலிவெண் பாவே.

என்பது, எண்ணிறந்த வடிகளையுடைத்தாய்த் தனிச்சொற் பெற்றும் பெறுதும் வருவது கலிவெண்பாவாகும்.

(வ - று.)

வந்துழிக் காண்க. (க0)

வெண்பாவினிறுதிச்சீர் அலகிடுமாறு

கூகக. நேர்நா ணிரைமலர் தேமாக் காசு
புளிமாப் பிறப்பெனப் புகலப் படுமே.

என்பது, நேரசையிறின் நாளெனவும், நிரையசையிறின் மலரெனவும், தேமாவிறின் காசெனவும், புளிமாவிறின் பிறப் பெனவும் பெயர்பெறும்.

(வ - று.)

பாலொடு தேன்கலந் தற்றே பனிமொழி
வாலெயி றூறிய நீர். (குறள்-ககஉக)

நாள்.

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின். (குறள்-உ)

மலர்.

தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றுமை நன்று. (குறள்-உகூ)

காசு.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. (குறள்-க)

பிறப்பு. (கக)

வெண்பாவிற் குரிய ஓசை

கூகஉ. செப்ப லோசையிற் சிறக்கும்வெண பாவே.

என்பது, வெண்பாச் செப்பலோசையைப் பெறும். (கஉ)

செப்பலோசையின் வகை

கூகஙூ. அதுதான்
ஏந்திசை தூங்கிசை யோழுகிசை யெனவோரு
மூன்று வகைப்படு மோழியுங் காலே.

என்பது, அச்செப்பலோசை ஏந்திசைச் செப்பலெனவும், தூங்கிசைச் செப்பலெனவும், ஒழுகிசைச் செப்பலெனவும் மூன்று வகைப்படும். (கஙூ)

ஏந்திசைச் செப்பல்

கூகச. வெண்சீர் வெண்டூஉ யான்வரும் பாவே
ஏந்திசைச் செப்ப லென்மனூர் புலவர்.

என்பது, வெண்சீர் வெண்டூஉயான் வருஞ்செய்யுள் ஏந்திசைச் செப்பலோசையாகும்.

(வ - று.)

யாதானு நாடாமா லூராமாலென் ஞெருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு. (குறள்-கூஉள) (கச)

தூங்கிசைச் செப்பல்

கூகஞ. இயற்சீர் வெண்டூஉ யான்வரும் பாவே
தூங்கிசை யாமெனச் சொல்லப் படுமே.

என்பது, இயற்சீர் வெண்டூஉயான் வருஞ்செய்யுள் தூங்கிசைச் செப்பலோசையாகும்.

(வ - று.)

பாலொடு தேன்கலந் தற்றே பனிமொழி
வாலெயி றூறிய நீர். (கஙி)

ஒழுகிசைச் செப்பல்

கூகசு. வெண்சீ ரியற்சீர் விரவி யொழுகுவ
தோழுகிசை யென்மனூ ருணர்ந்திசி னோரே.

என்பது, வெண்சீர் வெண்டூஉயும் இயற்சீர் வெண்டூஉயும் விரவிவருஞ் செய்யுள் ஒழுகிசைச் செப்பலோசையாகும்.

(வ - று.)

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின். (குறள்-உ) (கசு)

குறட்டாழிசை

கூகள. இரண்டடி யாயீற் றடிசீர் குறைநவுஞ்
சேந்துறைப் பாட்டிற் சிதைந்து வருநவுஞ்
சந்தழி குறளுந் தாழிசைக் குறளே.

என்பது, இரண்டடியாய் முதலடியளவிற்கு இறுதியடியொரு சீரேனுஞ் சிலசீரேனுங் குறைந்து வருவனவும் செந்துறைப்பாவிற் சிதைந்து வருவனவும் குறள் வெண்பாவினோசை கெட்டுவருவனவும் குறட்டாழிசையாகும்.

(வ - று.)

நண்ணு வார்வினை நைய நாடொறு நற்ற வர்க்கர சாய ஞானநற்
கண்ணி னனடி யேயடை வார்கள்கற் றவரே !

ஈற்றடி குறைவு.

பிண்டியி னீழற் பெருமான் பிடர்த்தலை
மண்டிலந் தோன்று மால்வாழி யன்னாய் !

குறட்செந்துறைச் சிதைவு.

வண்டார் பூங்கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டைய ளல்லள் படி !

குறள் வெண்பாவிற் சிதைவு. (கள)

குறள்வெண் செந்துறை

கூகஅ. தம்முள் ளளவொத் தளவடி யிரண்டாய்
விழுமிய பொருளு மொழுகிய வோசையும்
ஆய்வரல் குறள்வெண் செந்துறை யாகும்.

என்பது, தம்முள் அளவொத்து நாற்சீரடி இரண்டாய் விழுமிய பொருளும் ஒழுகிய வோசையுமாய் வருவது குறள்வெண் செந்துறை யாகும்.

(வ - று.)

கொன்றை வேய்ந்த செல்வ னடியிணை
என்று மேத்தித் தொழுவோ மியாமே. (கஅ)

வெண்டாழிசை

கூகசு. மூன்றடி யாயீற் றடிமுச் சீராய்
வருநவு மொருபொருண் மேன்மூன் றடுக்கி
வருநவும் வெள்ளோத் தாழிசை யாகும்.

என்பது, மூன்றடியாய் ஈற்றடி முச்சீராக வருவனவும் ஒரு பொருண்மேன் மூன்றடுக்கி வருவனவும் வெண்டாழிசை யாகும்.

(வ - று.)

நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யார்
அன்பு வேண்டு பவர்.

ஈற்றடி முச்சீர்.

அன்னு யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
ஒன்னு ருடைபுறம் போல நலங்கவர்ந்து
துன்னுன் றுறந்து விடல்.

ஏடீ யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
கூடா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
நீடான் றுறந்து விடல்.

பாவா யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
மேவா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
காவான் றுறந்து விடல்.

ஒரு பொருண்மேன் மூன்றடுக்கு. (கசு)

வெண்டுறை

கூஉo. மூன்றடி முதலா யேழடி காறும்வந்
தீற்றடி சிற்சில சீர்தப நிற்பினும்
வேற்றெலி விரவினும் வெண்டுறை யாகும்.

என்பது, மூன்றடி முதல் ஏழடி யிறுதியாகவும் வந்து சிலசீர் ஈற்றடியிற் குறைந்து வரினும் வேற்றெலி விரவினும் வெண்டுறை யாகும்.

(வ - று.)

தாளாள ரல்லாதார் தாம்பல ராயக்கா லென்னு மென்னும்
யாளியைக் கண்டஞ்சி யாஞைதன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்ந்துவிடும் பிளிற்றி யாங்கே.

பிறவும் வந்துழிக் காண்க. (உ0)

வெளி விருத்தம்

கூஉக. அளவடி யாயநான் கடிமூன் றடியாய்
அடியடி தோறும் தனிச்சொற் பெற்று
வருவது வெளிவிருத் தம்மா கும்மே.

என்பது, நாற்சீரடி நான்கடியேனும் மூன்றடியேனும் வந்து அடிகடோறுந் தனிச்சொற் பெற்று வருவது வெளிவிருத்த மாகும்.

(வ - று)

ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா ரொருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டா ரொருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தா ரொருசாரார்
ஏகீர் நாகே ரென்செய்து மென்ரு ரொருசாரார்.

மூன்றடி வந்துழிக் காண்க. (உக)

அகவற்பா

கூஉஉ. அகவ லோசை யொடுமெள வடித்தாய்
வருவ தகவற் பாவென மொழிப.

என்பது, அகவலோசையைத் தழுவி நாற்சீரடியாக வருவது ஆசிரியப்பாவாகும். (உஉ)

கூஉங. அதுதான்
ஈற்றய லடிமுச் சீராய் வருவது
நேரிசை யகவற் பாவா கும்மே.

என்பது, அவ்வாசிரியப்பா ஈற்றுக்கயலடி மூன்று சீராக வருவது நேரிசை யகவற்பாவாகும்.

(வ - று.)

போது சாந்தம் பொற்ப வேந்தி
ஆதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னு வோரே. (உங)

நிலைமண்டில ஆசிரியப்பா

கூஉச. எல்லா வடியுமொத் திழினிலை மண்டில
அகவ லென்மனார் அறிந்திசி னோரே.

என்பது, அடிகளெல்லா மொத்துவருவது நிலை மண்டில அகவற்பாவாகும்.

(வ - று.)

கடம்பணி தொடையன் மிடைந்த தடந்தோள்
வன்றிற லெஃக மேந்திய லேவன்
கொன்றையன் சடிலத் தாசான் மன்ற
பற்றினர் பையுட் பற்றீ தென்னே. (உச)

இணைக்குற ளாசிரியப்பா

கூஉடு. ஆதியு மந்தமு மளவடி யாகி
குறளடி சிந்தடி யென்றுங் கிரண்டும்
இடைவர லிணைக்குற ளாசிரி யம்மே.

என்பது, முதலடியும் கடையடியும் நாற்சீரடியாய் இடையடி இருசீரடியும் மூச்சீரடியுமாய் வருவது இணைக்குற ளகவற் பாவாகும்.

(வ - று.)

நீரின் றண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சாரலுடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே. (உடு)

அடிமறி மண்டில ஆசிரியப்பா

கூஉசு. மூன்றடி முதலா முடிந்தெலா வடியும்
இடைக டைமுத லாயெடுத் தாலும்
ஓசையும் பொருளு முலவாது வருவன
அடிமறி மண்டில வகவலா கும்மே.

என்பது, மூன்றடி முதலாகப் பலவடிகளானும் முடிந்தெல்லா வடிகளையும் முதலிடை கடையாக வைத்துக் கூறினு மதனைசையும் பொருளுங் கெடாது வருவது அடிமறி மண்டிலவகவற்பாவாகும்.

(வ - லு.)

தீர்த்த மென்பது சிவகங் கையே
மூர்த்தி யம்பலக் கூத்தன துருவே
ஏத்த ருந்தல மெழிற் புலியூரே.

(சிதம்பரச் செய்யுட் கோவை) (உசு)

ஆசிரியத் தாழிசை

கூஉஎ. மூன்றடி யோத்து வருவது மொருபோரூள்
மேல்மூன் றடுக்கி வருவது மகவற்
றாழிசை யாமெனச் சாற்றப் படுமே.

என்பது, மூன்றடியாக மூன்றடியுமொத்து வருவதும் ஒரு பொருள்மேன் மூன்றடுக்கி வருவதும் அகவற்றாழிசை யாகும்.

(வ - லு.)

வானுற நிமிர்ந்தநீ வையக மளந்தநீ
பான்மதி விடுத்தநீ பல்லுயி ரோம்பிநீ
நீனிற வண்ணனின் னிறைகழ றொழுதனம்.

தனி.

கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்
இன்று நம் மானுள்வருமே லவன் வாயிற்
கொன்றையந் தெங்குழல் கேளாமோ தோழி.

பாம்பு கயிறுக் கடல்கடைந்த மாயவன்
சங்குநம் மானுள் வருமே லவன்வாயி
லாம்பலந் தெங்குழல் கேளாமோ தோழி.

கொல்லியஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லிநம் மானுள் வருமே லவன் வாயில்
மூல்லியந் தெங்குழல் கேளாமோ தோழி.

(சிலம்பு-ஆய்ச்சியர் குரவை, க, உ, கூ) (உஎ)

ஆசிரியத் துறை

கூஉஅ. அளவடி யாயீற் றயலடி குறைகவும்
ஈற்றய லடிகுறைந் திடைமடக் காக

வருநவு மிடையிடை குறைந்து வருநவும்
இடையிடை குறைந்திடை மடக்காய் வருநவும்
அகவற் றுறையென வறையப் படுமே.

என்பது, நான்கடியா ஈற்றயலடி குறைந்து வருவதும் ஈற்ற யலடி குறைந் திடைமடக்காக வருவதும் இடையிடை குறைந்து வருவதும் இடையிடை குறைந்து இடை மடக்காக வருவதும் அகவற்றுறை யாகும்.

(வ - று.)

கரைபொரு கான்யாற்றங் கல்லத ரெம்மூள்ளி வருவீராயின்
அரையிருள் யாமத் தடுபுலியே றஞ்சி யகன்றுபோக
நரையுறு மேறுநுங்கை வேலஞ்சு நும்மை
வரையர மங்கையர் வெளவுத லஞ்சுதும் வாரலீயோ.

பிறவும் வந்துழிக் காண்க. (உஅ)

ஆசிரிய விருத்தம்

கூஉசு. **கழிநெடி லடிநான் கோத்திறி னகவல்**
விருத்த மென்மனுர் மெய்யுணர்ந் தோரே.

என்பது, ஆறுசீர் முதல் பதின்சீரிறுதியாகிய கழி நெடிலடி நான்கடியா யொத்துவருவது அகவல் விருத்தமாகும்.

(வ - று.)

பையர வணிந்த வேணிப் பகவனே யணைய தங்க
ளையனும் வியாழப் புத்தே ளாயிடை யடைந்தா னுகச்
செய்யதாள் வழிபா டின்றித் தேவர்கோ னிருந்தா னந்தோ
தையலார் மயலிற் பட்டார் தமக்கொரு மதிதா னுண்டோ.
(திருவிளையாடல் - இந்திரன்பழி)

பிறவும் வந்துழிக் காண்க. (உசு)

அகவலோசையின் வகை

கூஉ0. **அகவ லேந்திசை யகவ றூங்கிசை**
அகவ லொழுகிசை யகவல்மூ வகைப்படும்.

என்பது, அகவலோசை ஏந்திசையகவலும் தூங்கிசையக வலும் ஒழுகிசையகவலு மென மூன்றுவகைப்படும். (கூ0)

ஏந்திசை யகவல்

கூஉக. நேரோன் ரூசிரி யத்தளை யால்வரல்
ஏந்திசை யகவ லெனப்படு மெனலே.

என்பது, முற்கூறியவற்றுள் நேரொன்ரூசிரியத் தளையான் வருவது ஏந்திசையகவ லோசையாகும்.

(வ - று.)

போது சாந்தம் பொற்ப வேந்தி
ஆதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னு வோரே. (கக)

தூங்கிசை யகவல்

கூஉஉ. நிரையோன் ரூசிரி யத்தளை யால்வரல்
தூங்கிசை யகவ லெனச்சொலப் படுமே.

என்பது, நிரையொன்ரூசிரி பத் தளையான் வருவது தூங்கிசை யகவலோசை யாகும்.

(வ - று.)

அணிநிழல் அசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிக முவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே. (கஉ)

ஒழுகிசை யகவல்

கூஉஊ. இவ்விரு தளையும் பிறவு மயங்கி
வருவ தொழுகிசை யாம்வழுத் திடினே.

என்பது, நேரொன்றிய வகவற்றளையும் நிரையொன்றிய வகவற்றளையும் பிற தளைகளும் விரவிவருவது ஒழுகிசையகவ லோசையாகும்.

(வ - று.)

குன்றக் குறவன் காதன் மடமகள்
வரையர மகளிரைப் புரையுஞ் சாயலள்
ஐய ளரும்பிய முலையள்
செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே. (கஊ)

கலிப்பா

கூஎச. அளவடி யாய்த்துள லமைந்து வருவது
கலியா மென்மனர் கற்றுணர்ந் தோரே.

என்பது, அடிநாற்சீராய் துள்ளலோசையை யுடைத்தாய் வருவது கலிப்பாவாகும். (கூசு)

ஒத்தாழிசைக்கலி

கூஎடு. அதுதான்,
தரவு தாழிசை தனிச்சொற் சுரிதகம்
எனுநான் குறுப்பின தொத்தா ழிசைக்கலி.

என்பது, அக்கலிப்பாவினுள் ஒரு தரவும் மூன்று தாழிசையும் தனிச்சொல்லுமாகிய நான்குறுப்போடும் வருவது, நேரிசையொத் தாழிசைக் கலிப்பாவாகும்.

(வ - று.)

வாணெடுங்கண் பனிகூர வண்ணம்வே றுய்த்திரிந்து
தோணெடுந் தகைதுறந்து துன்பங்கூர் பசப்பினவாற்
பூணெடுங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ
சூருடைய கடுங்கடங்கள் சொலற்கரிய வென்பவாற்
பீருடைய நலந்தொலையப் பிரிவரோ பெரியவரே
சேணுடைய கடுங்கடங்கள் செலற்கரிய வென்பவால்
நாணுடைய நலந்தொலைய நடப்பரோ நல்லவரே
சிலம்படைந்த வெங்கானஞ் சிரிலவே யென்பவாற்
புலம்படைந்த நலந்தொலையப் போவரோ பொருளிலரே,

எனவாங்கு,

அருளெனு மிலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்
பன்னெடுங் காலமும் வாழியர்
பொன்னெடுந் தேரொடுந் தானையிற் பொலிந்தே. (கூடு)

அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா

கூகூசு. அளவடி சிந்தடி குறளடி யாகும்
அசையடி யாகிய வம்போ தரங்க
உறுப்பைத் தாழிசை தனிச்சொற் கிடையிற்
கொண்டு தரவு தாழிசை யம்போ
தரங்கந் தனிச்சொற் சுரிதக மென்னும்

ஐந்துறுப் பொடும்வர லம்போ தரங்க
ஒத்தா ழிசைக்கலி யாமுரை தரினே.

என்பது, நாற்சீரடியும் முச்சீரடியும் இருசீரடியும் ஆகிய வம்போதரங்க வுறுப்பைத் தாழிசைக்குந் தனிச்சொற்கு நடுவிற் கொண்டு தாவுதாழிசை அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதக மாகிய ஐந்துறுப்பையு முடைத்தாய் வருவது அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா வாகும்.

(வ - று.)

கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் றெழுதேத்தக்
கடல்கெழு கீணசுடரிற் கலந்தொளிரும் வாலுளைய
அழலவிர் சுழல்செங்க ணரிமாவாய் மலிந்தாணைத்
தாரொடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
வார்புன லிழிகுருதி யகலிட முடனணிப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலிமலி தடக்கையோய்
முரசதிர் வியன்மதுரை முழுவதுந் தலிபனிப்பப்
புரைதொடித் திரடிண்டோள் போர்மலிந்த மறமன்னர்
அடியொடு முடியிறுப்புண் டயர்ந்தவர் நிலஞ்சேரப்
பொடியொடு வெங்களத்துப் புடைத்ததுனின் புகழாமோ
கலியொலி வியனுலகங் கலந்துட னனிநடுங்க
வலியிய லவிராழி மாறெறிந்த மருட்சோர்வு
மாணுதா ருடம்பொடு மறம்பிதிர வெதிர்கலங்கிச்
சேணுய ரிருவிசும்பிற் செகுத்ததுனின் சினமாமோ
படுமணி யினநிரைகள் பரந்துட னிரிந்தோடக்
கடுமுர ணெதிர்மலிந்த காரொலி யெழிலேற
வெரிநொடு மருப்பொசிய வீழ்ந்துதிறம் வேருக
வெருமலி பெருந்தொழுவி னிறுத்ததுனின் னிகலாமோ
இலங்கொளி மரகத மெழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கை மாஅ னின்னிறம்
விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய் புரையு நின்னுடை
கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை
தண்சுட ருறுபகை தவிர்த்த வாழியை
ஒலியிய லுவண மோங்கிய கொடியினை
வலிமிகு சகட மாற்றிய வடியினை.
போரவுணர்க் கடந்தோய் நீ
புணர்மருதம் பிளந்தோய் நீ
நீரகல மளந்தோய் நீ
வீழறிகழும் படையோய் நீ.

ஊழிநீ யுலகுநீ யுருவுநீ யருவுநீ
ஆழிநீ யருளுநீ யறமுநீ மறமுநீ.

எனவாங்கு,

அடுதிற லொருவனீற் பரவுது மெங்கோன்
தொழுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரி
புயலுறழ் தடைக்கப் போர்வே லச்சுதன்
தொன்றுமுதிர் கடலுலக முழுதும்
ஒன்றுபுரி திகிரி யுருட்டுவோ னெனவே. (கூசு)

வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா

கூகூஎ. தாழிசை யம்போ தரங்கக் கிடையே
அராக மடைந்துமுன் றரவு தாழிசை
யராக மம்போ தரங்கந் தனிச்சொற்
சுரிதக மாறுடு தோன்றுவ வண்ணக
ஒத்தா ழிசைக்கலி யாமுரை தரினே.

என்பது, அம்போதரங்கத்துக்கும் தாழிசைக்கும் நடுவே அராகவுறுப்புப் பெற்றுத் தரவு தாழிசை அராகம் அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகம் ஆகிய ஆறுறுப்போடும் வருவது வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவாகும்.

(வ - று.)

விளங்குமணிப் பசும்பொன்னின் விரித்தமைத்துக் கதிர்கான்று
துளங்குமணிக் கீணகழற்காற் றுறுமலர் நறும்பைந்தார் [றுங்
பருஉத்தடக்கை மதயானைப் பணியெருத்தின் மிசைத்தோன்
குரூஉக்கொண்ட மணிப்பூணெய் குறையிரந்து மூங்காட்கண்
மாயாத வனப்பீனையாய் மகிழ்வார்க்கு மல்லார்க்குந்
தாயாகித் தலையளிக்குந் தண்டுறை யூரகேள்.
காட்சியாற் கலப்பெய்தி யெத்திறத்துங் கதிர்ப்பாகி
மாட்சியாற் கறியாத மரபொத்தாய் கரவினுற்
பிணிநலம் பெரிதெய்திப் பெருந்தடந்தோள் வனப்பழிய
அணிநலந் தனியேவந் தருளுவது மருளாமோ.
அன்பினு லமிழ்தனீ இ யறிவினுற் பிறிதின்றிப்
பொன்புனை பூணகம் பசப்பெய்தப் பொழிலிடத்துப்
பெருவரைத்தோ ளருளுதற் கிருளிடைத் தமியையாய்க்
கருவரைத்தோள் கதிர்ப்பிக்குங் காதலுங் காதலோ.
பாங்கணியே வாயிலாப் பல்காலும் வந்தொழுகும்
தேங்காத காவினீயுந் தெளியாத விருளிடைக்கட்

குடவரைவேய்த் தோளிணைகள் குளிர்ப்பிப்பான் றமியையாத்
தடமலர்த்தா ரருளுரின் றகுதியுந் தகுதியோ.
தாதுறு மூறிசெறி தடமல ரிடையிடைத் தழலெனவிரி
வனபொழில், போதுறு நறுவிரை புதுமலர் தெரிதரு
கருநெய்தல் விரிவனகழி, தீதுறுதிறமறு கெனநனி
முனிவன துணையொடு பிணைவன துறை, மோதுறு
ஒலிகலி நுரைதரு திசையொடு கடிதொடர் புடையதுகடல்.
கொடுந்திற லுடையன சுறவேறு கோட்பதனுல்
இடுங்கழி யிராவருதல் வேண்டாவென் றிசைத்திலமோ,
கருநிறத் துறுதொழிற் கராம்பெரி துடைமையா
இருணிறத் தொருகானி லிராவார லென்றிலமோ.
நாணெடு கழிந்தன்ரு பெண்ணரசி நலத்தகையே
துஞ்சலு மொழிந்தன்ரு ரெடித்தோளி தடங்கண்ணே,
அரற்ரெடு கழிந்தன்ரு லாரிருளு மாயிழைக்கே
நயப்பொடு கழிந்தன்ரு னனவது நன்னுதற்கே,
அத்திறத்தா லசைந்தனதோ ளலர்தற்கு மெலிந்தனகண்
பொய்த்துரையாற் புலர்ந்ததுமுகம் பொன்னிறத்தாற் போர்த்
அழலினு லசைந்தனநகை யணியினு லொசிந்ததிடை [தனமுலை
குழலினு னிமிர்ந்ததுமுடி குறையினுற் கோடிற்றுநிறை
உட்கொண்ட தகைத்தொருபா லுலகறிந்த வலற்ரெருபால்
கட்கொண்ட றுளித்தொருபால் கழிவெய்தும் படிற்ரெருபால்
பரிவுறூஉந் தகைத்தொருபால் படிவுறூஉம் பசப்பொருபால்
இரவுறூஉந் துயரொருபால் இளிவந்த வெணிற்ரெருபால்
மெலிவுறூஉந் தகையொருபால் விளர்ப்புவந் தடைந்தொருபால்
பொலிவுசென் றகன்ரெருபால் பொறைவந்து கூர்ந்தொருபால்
காதலிற் கதிர்ப்பொருபால் கட்படாத் துயரொருபால்
ஏதில்சென் றணைந்தொருபா லியனுணிற் செறிவொருபால்.

எனவாங்கு,

இன்னதிவ் வழக்க மித்திற மிவணலம்
என்னவு முன்னுட் டுன்னு யாகிற்
கலந்தவ னிலைமை யாயினு நலந்தகக்
கிளையொடு கெழீஇய தளையவிழ் கோதையைக்
கற்பொடு காணியம் யாமே
பொற்பொடு பொலிகநும் புணர்ச்சி தானே. (கூஎ)

தரவுக் கொச்சகக் கலிப்பா

கூகூஅ. தரவுக்கொச் சகமொரு தரவோடு போதரும்.

என்பது, ஒருதரவொடு வருவது தரவுக் கொச்சகக் கலிப்பாவாகும்.

(வ - று.)

செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த் தெறிந்த னெவாளி
மூல்லித்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லிநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போன்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே. (கூஅ)

தரவிணைக் கொச்சகக் கலிப்பா

கூகூக. தரவிணைக் கொச்சகந் தானிரு தரவோடு
தனிச்சொற் சுரிதகந் தழுவியும் வருமே.

என்பது, இரண்டு தரவும் தனிச்சொல்லும் சுரிதகமும் ஆகிய மூன்றுறுப் பொடும் வருவது தரவிணைக் கொச்சகக் கலிப்பாவாகும்.

(வ - று.)

வடிபடுவெவ் வேறிகழு மதரரிய நெடுந்தடங்கட்
கொடிபுணைந்தான் விறற்சேவற் கொடிபுணைந்தா னீதென்னை
கடிபடுதண் டார்விரவுங் கரியகுழற் குறவர் குலம்
ஒடிவினெடுந் தவநெறிகூர்ந் துயங்கியதா லஞ்ஞான்று
மிடிபடுநுண் ணிடைதயங்கு மின்னுரை மணத்துமென் னும்
படிபடுநீ ளருண்முறையாற் பயிலுமண மாமன்றே. (கூகூ)

சிஃறுழிசைக் கொச்சகக் கலிப்பா

கூசஅ. தரவொரு தாழிசை மூன்று தனிச்சொற்
சுரிதக நான்கின வாஞ்சிஃ றுழிசை.

என்பது, ஒரு தரவும் மூன்று தாழிசையும் தனிச் சொல்லும் சுரிதகமு மாகிய நான்குறுப்போடும் வருவது சிஃறுழிசைக் கொச்சகக்கலிப்பாவாகும்.

(வ - று.)

பரூஉத்தடக்கை மதயானைப் பணை யெருத்தின்
மிசைத் தோன்றிக், குரூஉக்கொண்ட வெண்குடைக் கீழ்க்
குடை மன்னர் புடைசூழப், படைப் பரிமான்
றேரினெடும் பரந்துலவு மறுகினிடைக், கொடித்தானை
யிடைப்பொலிந்தான் கூடலார் கோமானே,

ஆங்கொரு சார், உச்சியார்க் கிறைவனு யுலகமெல்லாங்
காத்தளிக்கும், பச்சையா மணிப்பைம் பூட்
புரந்தரனுப் பாவித்தார், வச்சிரங்காணுத காரணத்தான்
மயங்கினரே ஆங்கொரு சார், அக்கால
மணி நிரைகாத் தருவரையாற் பனிதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனுப் பாவித்தார்
சக்கரங் காணுத காரணத்தாற் சமழ்த்தனரே,
ஆங்கொரு சார், மால்கொண்ட பகை தணிப்பான்
மாத்தடிந்து மயங்காச்செங், கோல்கொண்ட
சேவலங் கொடியவனுப் பாவித்தார், வேல்கொண்ட
தின்மையால் விம்மிதராய் நின்றனரே அஃதான்று,
கொடித்தே ரண்ணல் கொற்கைக் கோமான்
நின்புக ழொருவன் செம்பூட் சேஎய்
என்றுநனி யறிந்தனர் பலரே தானு
மைவரு ளொருவனென் றறிய லாகா
மைவரை யாடீன மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே. (சo)

பஃறுழிசைக் கொச்சகக் கலிப்பா

கூசக. தரவொன்று தாழிசை யாறு தனிச்சொற்
சுரிதக நான்கின வாம்பஃ றுழிசை.

என்பது, ஒரு தரவும் ஆறு தாழிசையும் தனிச் சொல்லும் சுரிதகமும் ஆகிய நான்குறுப்போடும் வருவது பஃறுழிசைக் கொச்சகக் கலிப்பாவாகும்.

(வ - று.)

கண்மதியோர் முகத்தாளைத் தனியிடத்து நனிகண்டாங்கு
உண்மதியு முடைநிறையு முடன்றளர முன்காட்கண்
கண்மதியொப் பிவையின்றிக் காரிகையை நிறைகவர்ந்து
பெண்மதியின் மகிழ்ந்தனின் பேரருளும் பிறிதாமோ.
இளநல மிவள்வாட விரும்பொருட்குப் பிரிவாயேல்
தளநல முகைவெண்பற் றுழ்குழ நளர்வாளே,
தகைநல மிவள் வாடத் தரும்பொருட்குப் பிரிவாயேல்
வகைநல மிவள்வாடி வருந்தியில் விருப்பாளோ,
அணிநல மிவள்வாட வரும்பொருட்குப் பிரிவாயேல்
மணிநல மகிழ்மேனி மாசோடு மடிவாளே.
நாம்பிரியே மினியென்று நறுநுதலைப் பிரிவாயேல்
ஓம்பிரியோ மெனவுரைத்த வுயர்மொழியும் பழுதாமோ.

குன்றளித்த திரடோளாய் கொய்புனத்திற் கூடியநாள்
அன்றளித்த வருண்மொழியா வருளுவது மருளாமோ,
சிலபகலு மூடியக்காற் சிலம்பொலிச்சீ றடிபரவிப்
பலபகலுந் தலையளித்த பணிமொழியும் பழுதாமோ.

எனவாங்கு,

அரும்பெற லிவளினுந் தரும்பொரு ளதனினும்,
பெரும்பெற லரியன வெறுக்கையு மற்றே,
அதனால், விழுமிய தறிமதி வாழி,
கெழுமிய காதலிற் றரும்பொருள் சிறிதே. (சக)

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

கூசஉ. மயங்கி வருவது மயங்கிசைச் கொச்சகக்
கலியா மென்மனூர் கற்றுணர்ந் தோரே.

என்பது, தரவு முதலிய ஆறு றுப்பையும் பெற்று முறைமாறி வருவது மயங்கிசைக் கொச்சகக் கலியாகும்.

(வ - று.) வந்துழிக் காண்க. (சஉ)

வெண்கலிப்பா

கூசஙூ. கலித்தளை தட்டுக் கலியொலி விரவியும்
வெண்டளை தட்டு வெள்ளொலி தழுவியு
மீற்றடி சிந்தடி யாய்வரல் வெண்கலிப்
பாவா மெனப்பெயர் பகரப் படுமே.

என்பது, கலித்தளை விரவிக் கலியோசையைத் தழுவியும் வெண்டளை விரவி வெள்ளோசையைத் தழுவியும் ஈற்றடி முச்சீரான் வருவது வெண்கலிப்பாவாகும்.

(வ - று.)

வாளார்ந்த மழைத்தடங்கண் வனமுலைமேல் வம்பனுங்கக்
கோளார்ந்த பூணுகங் குழைபுரளக் கோட்டெருத்தின்
மாலைதாழ் கூந்தலார் வரன்முறையான் வந்தேத்தச்
சோலைதாழ் பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தவர்தஞ் சொன்முறையான்
மனையறமுந் துறவறமு மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும்
வினையறுக்கும் வகைதெரிந்து வீடொடுகட் டிவையுரைத்த
தொன்மைசால் கழிகுணத்தெந் துறவரசைத் தொழுதேத்த
நன்மைசால் வீடெய்து மாறு. (சஙூ)

துள்ள லோசையின் வகை

கூசச. துள்ள லேந்திசை பிரிந்திசை யகவல்
எனமூ வகைப்படு மென்மனூர் புலவர்.

என்பது, முற்கூறியவற்றுள் துள்ளலோசை, ஏந்திசைத் துள்ளலும் பிரிந்திசைத் துள்ளலும் அகவற்றுள்ளலு மென மூவகைப்படும். (சச)

ஏந்திசைத் துள்ளல்

கூசஞ. ஏந்திசைத் துள்ள லியையின் கலித்தளா.

என்பது, கலித்தளையான் வருஞ்செய்யுள் ஏந்திசைத் துள்ள லோசையாகும்.

(வ - று.)

திருவனைய கருநெடுங்கட் சிலைநுதலார் மயல்வலையில்
இருநிலக்கண் விழுந்துழலு மெளியவனை யெடுத்தன்பிற்
பொருவரிய கினதடியாற் புகழுரைத்துத் தினமகக்கட்
பரவவருள் புரிவாய்கொல் பசுபதியெம் பெருமானே. (சஞ)

பிரிந்திசைத் துள்ளல்

கூசசு. வெண்டளா தன்றளா விரவி வருவது
பிரிந்திசைத் துளலெனப் பேசப் படுமே.

என்பது, வெண்சீர் வெண்டளையும் கலித்தளையும் விரவிவருஞ் செய்யுள் பிரிந்திசைத் துள்ள லோசையாகும்.

(வ - று.)

வாளார்ந்த மழைத்தடங்கண் வனமுலைமேல் வம்பனுங்கக்
கோளார்ந்த பூணுகங் குழைபுரளக் கோட்டெருத்தின். (சசு)

அகவற்றுள்ளல்

கூசஎ. இவ்விரு தளையும் பிறவு மயங்கித்
தொடருவ தகவற் றுள்ளலா மெனலே.

என்பது, வெண்சீர் வெண்டளையும் கலித்தளையும் பிறதளை களும் விரவிவருவது அகவற் றுள்ளலோசையாகும்.

(வ - று.)

நேரலார் போரேறே நிடதத்தார் கோமானே
ஆர வரைமார்பா வடியே னுயிர்க்குயிரே
காரிருளில் யான்புலம்பக் கானகத்தில் விட்டகன்று
சாரலியா யின்னு மிதுவோகின் றண்ணளியே. (சள)

கலித்தாழிசை

கூசஅ. இரண்டடி யாயிற் றடிநீண் டிசைப்பது
கலித்தா ழிசையெனக் கருதப் படுமே.

என்பது, இரண்டடியாக ஈற்றடி நீண்டொலிப்பது கலித் தாழிசை யாகும்.

(வ - று.)

வாயிற் சிவப்பை விழிவாங்க மலர்க்கண் வெளுப்பை
[வாய்வாங்கத்
தோயக் கலவி யமுதளீப்பீர் துங்கக் கபடாந் திறமிதுவே. (சஅ)

இதுவுமது

கூசகூ. ஒருபொருண் மேன்மூன் றடுக்கி யிரண்டடி
ஆக வருவஃ ததன்சிறப் பாகும்.

என்பது, முற்கூறிய கலித்தாழிசை யிரண்டடியாய் ஒரு பொருண்மேன் மூன்றடுக்கி வருவது சிறப்பாகும்.

(வ - று.)

கொய்தினை காத்துங் குழவி யடுக்கத்தெதம்
பொய்தற் சிறுகுடில் வாரணீ யைய நலம்வேண்டின்
ஆய்தினை காத்து மருவி யடுக்கத்தெதம்
மாசில் சிறுகுடில் வாரணீ யைய நலம்வேண்டின்
மென்றினை காத்து மிகுபூங் கமழ்சோலைக்
குன்றச் சிறுகுடில் வாரணீ யைய நலம்வேண்டின். (சகூ)

கலித்துறை

கூருo. ஐஞ்சீ ரடிநான் காயள வோத்து
வருவது கலித்துறை யாம்வழுத் திடினே.

என்பது, ஐஞ்சீரடி நான்காகத் தம்முள் அளவொத்து வருவது கலித்துறையாகும்.

(வ - று.)

விலகி வில்லுமிழ் விரிகதிர் மணிபல வரன்றிப்
பொலன் முகட்டுயர் பொன்னெடுங் குன்றின்வீ ழருவி
குலவு வெண்டிரைக் குரைகட லுடுத்தபார் மடந்தை
அலர்மு லேத்தலேத் துயல்வரு மாரமொத் துளதால். (நிஎ)

கலிவிருத்தம்

கூறுக. அளவடி நான்காய் வரல்கலி விருத்தம்.

என்பது, நாற்சீரடி நான்காகத் தம்முள் அளவொத்து வருவது கலிவிருத்தமாகும்.

(வ - று.)

உலகெலா முணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.
(பெரிய புராணம்-க) (நிக)

வஞ்சிப்பா

கூறுஉ. தூங்க லிசையன வஞ்சி மற்றவை
குறளடி சிந்தடி கொடுவரு மெனலே.

என்பது, தூங்க லோசையை யுடையனவாயிரு சீரடியும் மூச்சீரடியும் பெற்று வஞ்சிப்பா வரும். (நிஉ)

குறளடி வஞ்சிப்பா

கூறுங. இருசீ ரடியேனைத் தானும் வந்து
தனிச்சொற் பெற்ற கவற்சுரி தகத்தால்
வருவது குறளடி வஞ்சி யாகும்.

என்பது, இரு சீரடி பல வடியானும் வந்து தனிச்சொற் பெற்று அகவற் சுரிதகத்தால் வருவது குறளடி வஞ்சிப்பாவாகும்.

(வ - று.)

பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வீணைக்கம்பலை மணிச்சிலம்பவு
மணிச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்,

நாளும்,

மகிழு மகிழ்தூஉங் கூரன்
புகழ்த லானைப் பெருவண் மையனே. (நிகூ)

சிந்தடி வஞ்சிப்பா

கூநிச. சிந்தடி யாகத் தனிச்சொற் பெற்றே
அகவற் சுரிதகத் தாலே மூடிவது
சிந்தடி வஞ்சியாஞ் செப்புங் காலே.

என்பது, மூச்சிரடியாகப் பலவடி வந்து தனிச்சொல் நடுவிற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தான் முடிவது சிந்தடி வஞ்சிப் பாவாகும்.

(வ - று.)

கொடியவாலன குருகிறத்தன குறுந்தாளன
வடிவாலெயிற் றழலுளையன வள்ளுகிரன
பணையெருத்தி னிணையரிமா னணையேறித்
துணையிலாத் துறவுநெறிக் கிறைவனுகி
எயினடுவ ணினிதிருந் தெல்லோர்க்கும்
பயில்படுவினை பத்திமையிற் சொன்னேனுன் புணையெனத்
திருவுறு திருந்தடி திசைதொழ
வீரிவுறு நாற்கதி வீடுநனி யெளிதே. (நிசி)

தூங்கலோசையின் வகை

கூநிரு. தூங்க லேந்திசை பிரிந்திசை யகவல்
ஆகு மென்மனு றறிந்திசி னோரே.

என்பது, தூங்கலோசை, ஏந்திசைத் தூங்கலும், பிரிந்திசைத் தூங்கலும், அகவற் றூங்கலுமென மூன்றுவகைப்படும்.

ஏந்திசைத் தூங்கலோசை

ஒன்றிய வஞ்சித் தளையா னெழுகுவ
தேந்திசைத் தூங்க லெனப்படு மெனலே.

என்பது, ஒன்றியவஞ்சித் தளையான் வருஞ்செய்யுள் ஏந்திசைத் தூங்கலோசையாகும்.

(வ - று.)

• [1]வளவயலிடைக் களவயின்மகிழ்.

(நகு)

பிரிந்திசைத் தூங்கலோசை

கூஙுசு. ஒன்றுத வஞ்சித் தளையான் வருமது
பிரிந்திசைத் தூங்க லெனப்பெயர் பெறுமே.

என்பது, ஒன்றுத வஞ்சித்தளையான் வருவது பிரிந்திசைத் தூங்கலோசை யாகும்.

(வ - று.)

[2]பூந்தாமரைப் போதலமர.

(நசு)

அகவற்றூங்க லோசை

கூஙுஎ. இவ்விரு தளையும் பிறவும் விரவித்
தொடருவ தகவற் றூங்கலா மெனலே.

என்பது, ஒன்றிய வஞ்சித்தளையும் ஒன்றுத வஞ்சித்தளையும் பிறதளைகளும் விரவிவருவது அகவற் றூங்க லோசையாகும்.

(வ - று.)

பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்.

(நஎ)

வஞ்சித் தாழிசை

கூஙுஅ. குறளடி நான்கா யொருபொருள் மேல்மூன்
றடுக்கி வருவது வஞ்சித் தாழிசை.

---

1. இப்பாடல் சசசு ஆம் பக்கத்திற் காண்க.
2. இப்பாடல் சசசு ஆம் பக்கத்திற் காண்க.

என்பது, இருசீரடி நான்காய் ஒரு பொருண் மேன் முன்றடுக்கி வருவது வஞ்சித் தாழிசையாகும்.

(வ - று.)

மடப்பிடியை மதவேழந் தடக்கையான் வெயின்மறைக்கு
மிடைச்சுர மிறந்தார்க்கே நடக்குமென் மனனேகாண்
பேடையை யிரும்போத்துத் தோகையான் வெயின்மறைக்குங்
காடக மிறந்தார்க்கே யோடுமென் மனனேகாண்
இரும்பிடியை யிகல்வேழம் பெருங்கையான் வெயின்மறைக்கு
மருஞ்சுர மிறந்தார்க்கே விரும்புமென் மனனேகாண். (நிஅ)

வஞ்சித்துறை

கூடுகூ. இருசீ ரடிநான் காய்வரல் வஞ்சித்
துறையா மெனப்பெயர் சொல்லப் படுமே.

என்பது, இரு சீரடி நான்காய் வருவது வஞ்சித் துறை யாகும்.

(வ - று.)

காமரு சித்த,
ராம னிடத்திற்
போமணல் சொற்ற,
சீர்மை யுரைப்பாம். (நிகூ)

வஞ்சி விருத்தம்

கூசூ0. சிந்தடி நான்காய்ச் செல்வது வஞ்சி
விருத்த மென்மனுர் மெய்யுணர்ந் தோரே.

என்பது, மூச்சீரடி நான்காய் வருவது வஞ்சி விருத்தமாகும்.

(வ - று.)

ஓட்ட னென்றனீ யும்பருஞ்
சிட்ட னென்றுகொள் சித்தனீ
துட்ட வென்று சுளித்தனர்,
வெட்டி ருந்தடமேவினர். (சூ0)

மருட்பா

கூசூக. புறநீலை கைக்கிளை யென்றிப் பொருண்மிசை
வேண்பா முதல்வந் தகவல்பின் வருவது
மருட்பா வெனப்பெயர் வைக்கப் படுமே.

என்பது, புறவிலை கைக்கிளை ஆகிய பொருள்களைக் கொண்டு வெண்பா முதலில் வந்து அகவல் பின்னை வருவது மருட்பா வாகும்

(வ - று.)

தென்ற லிடைபோழ்ந்து தேனூர் நறுமுல்லை
முன்றின் முகைவிரியு முத்தநீர்த் - தண்கோளூர்க்
குன்றமர்ந்த கொல்லேற்று னிற்புறங் காப்ப
வென்றுந் தீரா நண்பிற் றேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே. (கூக)

செய்யுளியல் முற்றும்.

———

3. ஒழிபியல்

இகர, உகர, ஐகாரக் குறுக்கங்கள் அலகுபெறுத இடம்

கூகூஉ. தகரயுஞ் சீருந் தபவரிற் குறுகிய
இ, உ, ஐ, யு மிசைபெறு வென்ப.

என்பது, தகரயும் சிரும் கெடவருங்கால் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஐகாரக் குறுக்கமும் அலகு காரியம் பெறுவாம்.

(வ - று.)

"சிறுநன்றி யின்றிவர்க்கியாஞ் செய்தக்கால் நாளைப்
பெறுநன்றி பின்னும் பெரிதென்—றுறுநன்றி
தானவாய்ச் செய்வதுந் தானமன் றென்பவே
வானவா முள்ளத் தவர்."

குற்றியலிகரம்.

"கொன்றுகோடு நீடு குருதி பாயவும்
சென்று கோடுநீடு செழுமலை பொருவன
வென்று கோடுநீடு விறல்வேழம்
என்று மூடுநீடு பிடியுள போலும்
அதனால்,
இண்டிடை யிரவிவண் நசைஇ வரின்
வண்டுண் கோதை உயிர்வா முலளே."

குற்றியலுகரம்.

''அன்னையையான் நோவ தவமா லணியிழாய்
புன்னையையான் நோவன் புலந்து''

ஐகாரக் குறுக்கம். (க)

உயிரளபெடை அலகு பெருமை

கூசுகூ. அளபெடை யாவியு மவற்றே ரற்றே.

என்பது, உயிரளபெடையும் அலகு காரியம் பெறுவாம்.

(வ - று.)

''பல்லுக்குத் தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள்
சொல்லுக்குத் தோற்றின்னந் தோற்றிலவால்—நெல்லுக்கு
நூறேஒநூ றென்பாள் நுடங்கிடைக்கும் மென்முலைக்கும்
மாறேமா லன்றளந்த மண்.''

உயிரளபெடை. (உ)

ஆய்தமும் ஒற்றும் அலகு பெறுமிடம்

கூசுச. ஆய்தமு மொற்று மளபெழ நிற்புழி
வேறல கெய்தும் விதியின வாகும்.

என்பது, ஆய்தமும் மெய்யும் அளபெடுப்புழிக் குற்றெழுத்தின் பயத்தவாம்.

(வ - று.)

எஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்
வெஃஃகு வார்க்கில்லை வீடு.

ஆய்தம்.

கண்ண் கருவிளை கார்முல்லை கூரெயிறு.

மெய். (கூ)

மொழிமுதற் குறில் தனித்து நின்று அலகு பெறும் இடம்

கூசுடு. விட்டிசைத் தல்லா விடின்முதற் றனிக்குறில்
நேரசை யாகா தென்மனார் புலவர்.

என்பது, விட்டிசைத்து நின்றவழியல்லது விட்டிசையாதவழி மொழிமுதற்கணின்ற தனிக்குறில் நேரசையாகாவாம்.

(வ - று.)

உண்ணு ணெளிகிறு ணேங்குபுகழ் செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களேயான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும். (நாலடியார்) (ச)

முதனிலை அளபெடையும் கடைநிலை அளபெடையும் அல்ந பெறுமாறு

கூசுசு: முதனிலை யளபெடை நேர்நே ராங்கடை
நிலையள பெடைநிரை நேரா கும்மே.

என்பது, தனிநிலையளபெடை நேர் நேராகும், இறுதிநிலை யளபெடை நிரை நேராகும்.

(வ - று.)

ஏளர்சிதைய-முதனிலையளபு ; வழாஅ லெலாஅகின், இறுதிநிலையளபு. (இ)

மாச்சீர்க் கலியுள் புகாமை

கூசுஎ. மாச்சீர் கலியுள் வரப்பெறு வேன்ப.

என்பது, தேமா புளிமா ஆகிய சீரிரண்டும் கலிப்பாவினுட் புகாவாம்.

(வ - று.) வந்துழிக் காண்க. (சு)

கனிச்சீர்கள் கலியுட் புகாமை

கூசுஅ. விளங்கனி கலிப்பாவி னுட்புகா வெனலே.

என்பது, கருவிளங்கனி கூவிளங்கனி ஆகிய விரண்டும் கலிப்பாவினுட் புகாவாம். (எ)

கனிச்சீர்கள் ஆசிரியப்பாவில் புகாமை

கூசுகூ. அகவ லிடத்து மடையப் பெறுவே.

என்பது, முற்கூறிய கருவிளங்கனி கூவிளங்கனி ஆசிரியப்பா வினுட் புகாவாம். (அ)

கூஎ0. இவைநீங் கியசீ ரேல்லா மயங்கும்.

என்பது, இவை யொழிந்த சீர்களெல்லாம் எல்லாப் பாவி னுள்ளும் மயங்கும். (கூ)

கூஎக. எல்லாத் தளைகளு மிவற்றே ரற்றே.

என்பது, எல்லாத் தளைகளும் எல்லாப் பாவினுள்ளும் எல்லாப் பாவினத் துள்ளும் வந்து மயங்கும். (க0)

வஞ்சிச் சீர்கள் வெண்பாவினுட் புகாமை

கூஎஉ. வெண்பா வில்வஞ்சி விரவப் பெறுவே.

என்பது, எல்லாச் சீரும் எல்லாப் பாவினுள்ளும் பாவினத் துள்ளும் வந்து மயங்கப் பெறும் என்றாயினும் வஞ்சிச் சீர் கான்கும் வெண்பாவினுட் புகப் பெறுவாம். (கக)

வெண்பாவில் வேற்றுத்தளை விரவாமை

கூஎங. வெண்பா வயற்றளை விரும்பா தொழுகும்.

என்பது, வெண்பா இயற்சீர் வெண்டளையும், வெஞ்சீர் வெண்டளையும் அன்றி வேற்றுத்தளை விரவப் பெறுவாம். (கஉ)

அடி மயக்கம்

கூஎச. இயற்றளை வெள்ளடி வஞ்சியின் பாதம்
அகவற் பாவினு ளடையப் பெறுமே.

என்பது, இயற்சீர் வெண்டளையான் வந்த வெண்பா வடியும் வஞ்சியடியும் ஆசிரியப் பாவினுள் வந்து மயங்கும். (கங)

இதுவுமது

கூஎடு. வஞ்சியு ளகவ லடிகலி யடியும்
விரவி வரப்பெறும் விளம்புங் காலே.

என்பது, வஞ்சிப் பாவினுள் ஆசிரிய வடியும் கலியடியும் வரும். (கச)

இதுவுமது

கூஎசு. கலியினுள் வெள்ளடி யகவலுங் கலக்கும்.

என்பது, கலிப்பாவினுள் வெண்பா வடியும் ஆசிரியவடியு மயங்கும். (கஞ)

இதுவுமது

கூஎஎ. கலியினு மகவ லினுமைஞ் சீரடி
வருவது முளவென வகுத்தனர் புலவர்.

என்பது, கலிப்பாவினுள்ளும் ஆசிரியப் பாவினுள்ளும் ஐஞ்சீரடியும் வரப்பெறும்.

(வ - று.)

அணிகிளர் சிறுபொறி யவிர்துத்தி மாநாகத் தெருத்தேறி.

கலிப்பா.

உமணர்ச் சேர்ந்து கழிந்த மருங்கின கன்றலி.

ஆசிரியப்பா. (கசு)

எதுகையும் மோனையும்

கூஎஅ. வருக்க நெடிலினம் வந்தா லெதுகையும்
மோனையு மாமென மொழியப் படுமே.

என்பது, வருக்கவெழுத்தும் நெடிலெழுத்தும் இன வெழுத்தும் எதுகையும் மோனையுமாக வந்தால், அவற்றை வருக்க வெதுகை நெடிலெதுகை இனவெதுகை, வருக்கமோனை நெடில் மோனை இனமோனை எனப் பெயரிட்டு வழங்கப்படும்.

(வ - று.)

நீடிணர்க் கொம்பர்க் குயிலாலத் தாதூதிப்
பாடும்வண் டஞ்சி யகலும் பருவத்துத்
தோடார் தொடிநெகிழ்த்தா ருள்ளார் படலொல்லா
பாடமைச் சேக்கையுட் கண்.

வருக்க வெதுகை.

ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா ரொருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டா ரொருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தா ரொருசாரர்
ஏகீர் நாகீ ரென்செய்து மென்று ரொருசாரார்.

நெடில்எதுகை.

தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும். (திருக்குறள்)

இனவெதுகை.

பகலேபல் பூங்கானற் கிள்கூ யோப்பியும்
பாசிலைக் குழவியொடு கூதளம் விரைஇப்
பின்னும் பிணியவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்
பீர்ங்கப் பெய்து தேம்படத் திருகிப்
பூந்தார் மார்ப புனத்துட் டோன்றிப்
பெருவரை யடுக்கத் தொருவே லேந்திப்
பேயு மறியா மாவழங்கு பெருங்காட்டுப்
பைங்க ணுழுவைப் படுபகை வெரீஇப்
பொங்கு சினந்தணியாப் பூநுத லொருத்தல்
போகாது வழங்கு மாரிரு ணடுநாள்
பௌவத் தன்ன பாயிரு ணீந்தி
இப்பொழுது வருகுவை யாயின்
நற்றூர் மார்ப தீண்டலெங் கதுப்பே.

வருக்கமோனை.

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.

நெடின்மோனை.

கயலே ருண்கண் கலுழ நாளும்
சுடர்புரை திருநுதல் பசலை பாயத்
திருந்திழை யமைத்தோ ளரும்பட ருழப்பப்
போகல் வாழியைய பூத்த கொழுங்கொடி
அணிமலர் தயங்கப் பெருந்தண் வாடை வரும் பொழுதை.

இனமோனை (கஎ)

ஆசெதுகை

கூஎகூ. ய-ர-ல-ழ, விடையுறி ஞசெனப் படுமே.

என்பது, ய-ர-ல-ழ, இந்நான்கு மெய்களும் இடைவரல் ஆசெதுகையாகும்.

(வ - று.)

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து

தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையாற் றிசைபோய தன்றே.
(சிவக சிந்தாமணி)

ய.

கார்க்கொடி முல்லையுங் கலந்து மல்லிகை
பூக்கொடிப் பொதும்ப ருங்கானல் ஞாழலும்.

ர.

ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம்—பால்போல்.

ல.

வாழ்கின்றே மென்று மகிழன்மின் வாணாளும்
போகின்ற பூழையே போன்று.

ழ. (கச)

தரவு தாழிசைகட்கு அடிவரையறை

கூஎ0. அம்போ தரங்கவண் ணகவொத் தாழிசைக்
கலியல் லாத கலிப்பா வினுக்குத்
தரவு மூன்றடி சிறுமை பெருமை
உரைப்போன் குறிப்பின வாமள வின்றே.

என்பது, அம்போதரங்க வொத்தாழிசைக் கலியும் வண்ணக வொத்தாழிசைக் கலியுமல்லாத கலிப்பாவிற்குத் தரவு மூன்றடியே சிறுமை, பெருமை பாடுவோன் பொருண்முடிவின் குறிப்பே, அளவின்றும். (ககூ)

அம்போதரங்க, வண்ணக வொத்தாழிசைக் கலிகளின் தரவிற்கு அடிவரையறை

கூஎக. அம்போ தரங்கவண் ணகக்குஞ் சிறுமை
பெருமை தரவீணப் பேசுங் காலை
ஆறடி யென்மனு ரறிந்தி சினோரே.

என்பது, அம்போதரங்க வொத்தாழிசைக் கலிக்கும் வண்ணக வொத்தாழிசைக் கலிக்கும் பெருமை சிறுமையில்லை, தரவாறடியே யாகும். (உ0)

கூன்

கூஅஉ. அடிமுதற் கட்பாப் பொருளைத் தழுவித்
தனியே நிற்பது கூனு மக்கூன்
வஞ்சியு ளிடைகடை முதலினும் வருமே.

என்பது, அடிமுதற்கட் பாவினது பொருளைத் தழுவித் தனியே நிற்பது கூனும். அக்கூன் வஞ்சிப்பா முதலிடை கடை யாகிய மூவிடத்தினும் வரப்பெறும்.

(வ - று.)

உதுக்காண், சுரந்தானு வண்கைச் சுவணமாப் பூதன்
புரந்தானுப் பல்புகழைப் பாடி—யிரந்தார்மாட்
டின்மை யகல்வது போல விருணீங்க
மின்னு மளிதேர் மழை.

வெண்பா முதல்.

அவரே, கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடி றந் தோரே. (குறுந். உகசு)

அகவல் முதல்.

உலகினுள், பெருந்தகையார் பெருந்தகைமை பிறழாவே
[பிறழினும்
இருந்தகைய விறுவரைமே லெரிபோலச் சுடர்விடுமே,

கலிப்பா முதல்.

உலகே, முற்கொடுத்தார் பிற்கொளவும்,

வஞ்சிப்பா முதல்

மாவழங்கலின் மயக்குற்றன, வழி.

வஞ்சிப்பா கடை

கலங்கலா, லித்துறை, கலக்குற்றன.

வஞ்சிப்பா நடு. (உக)

வல்லிசை வண்ணம்

கூஅஙூ. எதுகை முதலடி யெல்லாம் வல்லின
மிகுவன வல்லிசை யாம்விளம் பிடினே.

என்பது, எதுகை முதலடி யெல்லாம் வல்லெழுத்து மிக்கு வருவன வல்லிசை வண்ணமாகும். (உஉ)

மெல்லிசை வண்ணம்

கூஅச. மெல்லின மிகுவன மெல்லிசை யாகும்.

என்பது, மெல்லெழுத்து மிக்குவருவன மெல்லிசை வண்ண மாகும். (உங)

இடையிசை வண்ணம்

கூஅஞ. இடையின மிகுவன விடையிசை யெனலே.

என்பது, இடையெழுத்து மிக்குவருவன இடையிசை வண்ணமாகும். (உச)

ஒழுகிசை வண்ணம்

கூஅசு. விரவிழு வினமு மிகுவன வோழுகிசை.

என்பது, வல்லினமும் மெல்லினமும் இடையினமும் மிக்கு வருவன ஒழுகிசை வண்ணமாகும். (உஞ)

எண்ணு வண்ணம்

கூஅஎ. எண்ணி வருவன வெண்ணெனப் படுமே.

என்பது, பலவற்றையு மெண்ணிவருவன எண்ணு வண்ண மாகும். (உசு)

உருட்டு வண்ணம்

கூஅஅ. உருட்டா மராகத் தொடுவரு வனவே.

என்பது, அராகத்தொடு வருவன உருட்டு வண்ணமாகும். (உஎ)

முடுகு வண்ணம்

கூஅகூ. அராகமாய் வருகுவ தன்றி யடிமுதல்
ஈறுந் தோன்ற மற்றொடர்ந் தெழும்பிய
வடியான் வருவன முடுகா கும்மே.

என்பது, அராகமாய் வருவதன்றி யடிமுதலீறுந் தோன்றுமற் றொடர்ந்து நீண்டவடியால் வருவன முடுகுவண்ணம். (உஅ)

ஏந்திசை வண்ணம்

கூகூ0. நேரிறு வுரிச்சீர் மிகவந் தேந்திய
ஓசையின் வருவன வேந்திசை யாகும்.

என்பது, நேரீற்ற வுரிச்சீர் மிகவந்து ஏந்திய வோசையின் வருவன ஏந்திசை வண்ணமாகும். (உகூ)

தூங்கிசை வண்ணம்

கூகூக. நிரையிறு வுரிச்சீர் மிக்குத் தூங்கிய
ஓசையின் வருவன தூங்கிசை யாகும்.

என்பது, நிரையீற்ற வுரிச்சீர் மிகவந்து தூங்கிய வோசையின் வருவன தூங்கிசை வண்ணமாகும். (ஙo)

வகைப்பு வண்ணம்

கூகூஉ. மறுத்தறுத் தியல்வன வகைப்பா கும்மே.

என்பது, மறுத்து, அறுத்து, வருவன வகைப்பு வண்ண மாகும். (ஙக)

புறப்பாட்டு வண்ணம்

கூகூங. முடிந்தது போல முடியாது வருவன
புறப்பாட் டென்மனூர் புலமை யோரே.

என்பது, முடிந்ததுபோல முடியாது வருவன புறப்பாட்டு வண்ணமாகும். (ஙஉ)

அகப்பாட்டு வண்ணம்

கூகூச. முடியா ததுபோன் முடிந்து வருவன
அகப்பாட் டென்மனூ ரறிந்திசி னோரே.

என்பது, முடியாததுபோல முடிந்து வருவன அகப்பாட்டு வண்ணமாகும். (ஙங)

அளபு வண்ணம்

கூகூஞ. அடிதோறு மளபெடை யெதுகை யாக
வருவன வளபாம் வகுக்குங் காலே.

என்பது, அடிதொறும் அளபெடை யெதுகையாக வருவன, அளபு வண்ணமாகும். (நூசு)

பாவண்ணம்

கூகூசு. நூற்பா லுரைத்து வருவன பாவே.

என்பது, நூற்பாற்கூறி வருவன பாவண்ணமாகும். (நூடு)

நலிபு வண்ணம்

கூகூஎ. அடிதோறு மெதுகை யாக வாய்தங்
கோடுவர னலிபாங் குறிக்குங் காலே.

என்பது, அடிதொறுமாய்த மெதுகையாகக் கொண்டு வருவன நலிபு வண்ணமாகும். (நூசூ)

தரவு வண்ணம்

கூகூஏ. ஓரடிக் கோரடி மத்தியில் விட்டடி
எதுகை யொன்றி யியல்வன தரவே.

என்பது, ஓரடிக்கோரடி யிடையில்விட்டு, அடியெதுகை யுற்றுவருவன தரவு வண்ணமாகும். (நூஎ)

ஒரூஉ வண்ணம்

கூகூகூ. அடிதோறு மொன்றுத் தொடையொடு வருவன
ஒரூஉ வெனப்பெய ருரைக்கப் படுமே.

என்பது, அடிதோறும், ஒன்றுத தொடையொடு வருவன ஒரூஉ வண்ணமாகும். (நூஅ)

குறுஞ்சீர் வண்ணம்

கoOO. குற்றெழுத் தியைந்து வருவன குறுஞ்சீர்
ஆகு மென்மனு ரறிந்தி சினோரே.

என்பது, குற்றெழுத்தியைந்து வருவன, குறுஞ்சீர் வண்ணமாகும். (நூகூ)

நெடுஞ்சீர் வண்ணம்

கoo க. நெட்டெழுத் தியைந்து வருவன நெடுஞ்சீர்
ஆகு மென்மனு ரறிந்திசி னோரே.

என்பது, நெட்டெழுத்தியைந்து வருவன நெடுஞ்சீர் வண்ண மாகும். (சo)

சித்திர வண்ணம்

கoo உ. நெடிலுங் குறிலு நீங்காது வருவன
சித்திர மென்மனுர் தெளிந்திசி னோரே.

என்பது, நெட்டெழுத்தும், குற்றெழுத்தும், வீரவிவருவன சித்திர வண்ணமாகும். (சக)

பத்துவகைக் குற்றங்கள்

கoo ங. யாப்பினு ளெழுத்துச் சொற்பொருள் யாப்பணிக்
குற்றமு மைவகை குறிக்குமா னந்தமும்
வாரா துரைப்பது வழுவில வாகும்.

என்பது, செய்யுளில், எழுத்துக் குற்றமும், சொற்குற்றமும், பொருட் குற்றமும், யாப்புக் குற்றமும், அலங்காரக் குற்றமும், ஐவகை யானந்தமும் வாராமற் பாடுவது குற்றமிலவாம். (சஉ)

எழுத்துக் குற்றம்

கoo ச. எழுத்துக் குற்ற மெழுத்திலக் கணத்தில்
வழுத்திய முறையின் மாறுபட்டு
வருவ தாமென வழுத்தப் படுமே.

என்பது, எழுத்துக் குற்றமாவது, எழுத்திலக்கணத்திற் கூறிய முறையின் மாறுபட்டு வருவதாகும். (சங)

ஏனைய குற்றம்

கoo ஞ. ஏனைய குற்றமு மிவற்றோ ரற்றே.

என்பது, சொற்பொருள் யாப்பணிக் குற்றமும், அவ்வவ் விலக்கணத்தின் மாறுபட்டு வருவனவாம். (சச)

எழுத்தானந்தம்

கooசு. ஆனந்த மைவகை யறையுங் காலை
எழுத்தி னிலைபிறழ்ந் தனவெழுத் தானந்தம்.

என்பது, எழுத்தானந்தம், சொல்லானந்தம், பொருளானந்தம், யாப்பானந்தம், அணியானந்தமாம். அவற்றுள், எழுத்துநிலை பிறழ்ந்தன எழுத்தானந்தம்.

(வ - று.)

ஆழி யிழைப்பப் பகல்போ மிரவெல்லாந்
தோழி துணையாய்த் துயர்தீரும்—வாழி
நறுமாலைத் தாராய் திரையவோ வென்னுஞ்
செறுமாலை சென்றடைந்த போது.

இதனுள் திரையன் திரையஓ ஓன அளபெடை எழுத்தானந்தம். (சநி)

சொல்லானந்தம்

கooள. சொல்லா னந்தஞ் சொன்னிலை பிறழ்ந்தன.

என்பது, சொன்னிலை பிறழ்ந்து வருவன சொல்லானந்தம்.

(வ - று.)

என்னிற் பொலிந்த திவண்முகமென் றெண்ணியே
தன்னிற் குறைபடுப்பான் றண்மதிய—மின்னி
விரிந்திலங்கு வெண்குடைச் செங்கோல் விசயன்
எரிந்திலங்கு வேலி னெழும்.

இதனுள் விசயனெரிந்து எனச் சொல்லானந்தம். (சசு)

பொருளானந்தம்

கoo அ. பொருணிலை பிறழ்வன பொருளா னந்தம்.

என்பது, பொருள்நிலை பிறழ்ந்து வருவன பொருளானந்தம்.

(வ - று.)

வலிக்குமாம் மாண்டார் மனம், எனப் பொருளானந்தம். (சள)

யாப்பானந்தம்

கoo கூ. யாப்பினிலை பிறழ்வன யாப்பா னந்தம்.

என்பது, யாப்பினிலே பிறழ்ந்து வருவன யாப்பானந்தம்.

(வ - று.)

மனுக்கு முதல்வனிதி வாழ்வான் சிலேரா
மனுக்கு நிகர் யாரைவகுப் பாம், என யாப்பானந்தம். (சஅ)

அணியானந்தம்

கஅகஅ. அணிநிலே பிறழ்ந்து வருவன வணியா
னந்தமா மென நவிலப் படுமே.

என்பது, அலங்கார நிலேபிறழ்ந்து வருவன அணியானந்தம்.

(வ - று.)

இந்திரனே போலு மிளஞ்சாத்தன் சாத்தற்கு
மந்திரமே போன்றிலங்கு மல்லாகம்.

இதனுள், சாத்தனுகிய கிழ்மகனே அரசனேப்போல் உவமித்தது அணியானந்தம். (சகூ)

நான்கு பாவினுக்கும் நாள், கிரகம் முதலியன உள என்பது

கஅகக. வெண்பா முதல்வஞ் சிப்பா விறுதி
நான்குபா வினுக்கு நாளுங் கிரகமும்
நிலனுங் குலனு நிறமு மிராசியும்
ஆகிய விருமூன் றிலக்கணப் பகுதி
குறித்தார் முற்றுணர் குரவ ரென்ப.

என்பது, வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா நான்கிற்கும் நாளும், கிரகமும், நிலனும், குலனும், நிறமும், இராசியும் ஆகிய ஆறிலக்கணப் பகுதியைப் புலவர் குறித்தார். (நிஅ)

வெண்பாவிற்குரிய நாள், நிறம் முதலியன

கஅகஉ. அவற்றுள்
வெண்பா வெண்ணிறம் விருச்சிகங் கார்த்திகை
முதலிய வெழுநாண் முற்படு விருச்சிக
மீன மிராசி விப்பிர குலமதி

குருவே கிரகங் குழுமிய மூல்லை
இருநில மற்றத னியல்பென மொழிப.

என்பது, முற்கூறியவற்றுள், வெண்பா வெண்ணிறம்; கார்த்திகை முதலிய வேழும் நாள்; விருச்சிகம் மீனம் இராசி, பிராமணகுலம், சந்திரன் வியாழம் கிரகம், முல்லைநிலம். (நுசு)

அகவற்பாவிற்குரிய நாள், நிறம் முதலியன

கஂகங. அகவல் செந்நிற மரைய குலமகம்
பூர முதலிய வெழுநாண் மேடஞ்
சிங்க விராசி செங்கதிர் செவ்வாய்
கிரகங் குறிஞ்சி நிலனு கும்மே.

என்பது, அகவற்பா செந்நிறம், க்ஷத்திரியகுலம்; மகமுதலிய வேழும் நாள்; மேடம் சிங்கம் தனுசு இராசி; சூரியன் செவ்வாய் கிரகம், குறிஞ்சிநிலம். (நுஉ)

கலிப்பாவிற்குரிய நாள், நிறம் முதலியன

கஂகச. கலிபோன் னிறங்குலம் காமகு வணிகம்
அகணி நெடுநில மனுட முதலிய
ஆறுநாண் மிதுனங் கும்பந் துலாமும்
இராசி புதன்சனி கிரகமென் றியம்புப.

என்பது, கலிப்பா பொன்னிறம், வணிககுலம், மருதநிலம்; அனுட முதலியவாறும் நாள்; மிதுனம் கும்பம் துலாம் இராசி; புதன் சனி கிரகம். (நுஙூ)

வஞ்சிப்பாவிற்குரிய நாள், நிறம் முதலியன

கஂகடு. வஞ்சி நிறங்கறுப்பு வாருதி நெய்தல்
நிலங்கடைக் குலம விட்டமூத லேழு
நாளிட பங்கனி மகர மிராசி
வெள்ளி யிராகு கிரக மென்ப.

என்பது, வஞ்சிப்பா கறுப்பு நிறம், நெய்தல் நிலம், சூத்திர குலம்; அவிட்ட முதலிய வேழும் நாள்; இடபம் கன்னி மகரம் இராசி; வெள்ளி இராகு கிரகம். (நுசு)

நாற்கவிகள்

கஂகசு. ஆசு மதுரஞ் சித்திரம் வித்தாரம்
ஆகு நாற்கவி யறையுங் காலே.

என்பது, ஆசுகவி, மதுரகவி, சித்திரக்கவி, வித்தாரக்கவி எனக் கவி நான்கு வகைப்படும். (நிரு)

ஆசுகவி

கஂகள. அவற்றுள்
பொருளடி பாவணி முதலிய கொடுத்துப்
பாடெனப் பாடுவோ னேயாசு கவியே.

என்பது, முற்கூறியவற்றுள், பொருளும், அடியும், பாவும், அணியும், முதலியவை கொடுத்துப் பாடுகவெனப் பாடுவோன் ஆசுகவி. (நிசு)

மதுரகவி

கஂகஅ. தோடையுந் தொடையின் விகற்பமுஞ் செறியச்
சொற்சுவை பொருட்சுவை தோன்ற வுருவகம்
ஆதிய வணிகளோ டணிபெறப் பாடுவோன்
மதுர கவியென வழுத்தப் படுமே.

என்பது, தொடையும் தொடைவிகற்பமும் செறியச், சொற் சுவையும் பொருட்சுவையும் விளங்க, உருவகவணி முதலிய முப்பத்தைந்தணிகளோடு, அலங்காரம் பெறப் பாடுவோன் மதுர கவி. (நிஎ)

சித்திரக்கவி

கஂகக. ஏக பாத மெழுகூற் றிருக்கை
காதை கரப்புக் கரந்துறைச் செய்யுள்
கூட சதுக்கங் கோமூத் திரிமுதல்
தேர்ந்து பாடுவோன் சித்திரக் கவியே.

என்பது, ஏகபாதமும், எழுகூற்றிருக்கையும், காதை கரப்பும், கரந்துறைச் செய்யுளும், கூடசதுக்கமும், கோமூத்திரியும் இவை முதலிய வறிந்து பாடுவோன் சித்திரக்கவி. (நிஅ)

வித்தாரகவி

கஉ2ம. மறங்கலி வெண்பா மடலூர்த லியலிசை
பாசண் டத்துறை பன்மணி மாலை
தசாங்க மும்மணிக் கோவை கிரீடை
இவைமுத லியவிரித் திசைத்துப் பாடுவோன்
வித்தா ரக்கவி யாம்விளம் பிடினே

என்பது, மறம், கலிவெண்பா, மடலூர்தல், இயல், இசை, பாசண்டத் துறை, பன்மணிமாலை, மும்மணிக்கோவை, கிரீடை இவை முதலியன பிறவும் விரித்துப் பாடுவோன் வித்தாரக்கவி.
(நிகூ)

கவிஞர்கள் நால்வர்

கஉ2க. கவியே கமகன் வாதி வாக்கியென்
றிவையோரு நான்கும் புலமைக் கியல்பே.

என்பது, கவி, கமகன், வாதி, வாக்கி இவை நான்கும் புலமைக்கியல்பு.
(சூ0)

கவி

கஉ2உ. ஆசு மதுரஞ் சித்திரம் வித்தாரங்
கண்டு பாடுவோன் கவியா கும்மே.

என்பது, ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரக்கவி அறிந்து பாடுவோன் கவியாகும்.
(சூக)

கமகன்

கஉ2ங. ஞாபகஞ் செம்பொரு ணடையினைப் பொருளும்
அறைகுவோன் கமகனும் வழுத்துங் காலே.

என்பது, ஞாபகம் செம்பொருணடையின் எப்பொருளையும் எடுத்துக் கூறுவோன் கமகனுகும்.
(சூஉ)

வாதி

கஉ2ச. ஏதுமேற் கோளு மெடுத்துக் காட்டித்
தன்கோ ணிறீஇப் பிறன்கோண் மறுப்போன்
வாதி யாமென வைக்கப் படுமே.

என்பது, ஏது, மேற்கோள், எடுத்துக் காண்பித்து, தன் கோட்பாட்டை நிறுத்திப, பிறன்கோட்பாட்டை மறுப்பவன் வாதியாகும். (சுகூ)

வாக்கி

கஅஉடு. அறம்பொரு ளின்பம்வீ டாகிய நான்கும்
கேட்போர் வேட்ப வினியன கிளத்தும்
ஆற்ற லுடையோன் வாக்கியா மெனலே

என்பது, அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பொருட் பயனையும், கேட்போர் விரும்ப இனியன கூறும் ஆற்றலுடையான், வாக்கியாகும். (சுச)

பாக்களுக்குரிய பத்துவகைப் பொருத்தம்

கஅஉசு. துகளறு மங்கலஞ் சொல்லுட னெழுத்து
தானம் பாலுணைச் சாதி நாள்கதி
கணமொரு பத்துமுற் காணுவ பொருத்தம்.

என்பது, மங்கலப் பொருத்தம், சொற்பொருத்தம், எழுத்துப் பொருத்தம், தானப்பொருத்தம், பாற்பொருத்தம், உண்டிப் பொருத்தம், வருணப் பொருத்தம், நாட்பொருத்தம், கதிப் பொருத்தம், கணப்பொருத்தம் எனப் பொருத்தம் பத்துவகைப் படும். (சுஞ)

மங்கலப் பொருத்தம்

கஅஉஎ. அவற்றுள்,
மங்கலங் கார்புயன் மாமணி வாருதி
ஆரண முலகல ரமுதந் தேர்வயல்
திங்கள்போன் னெழுத்துத் திவாகரன் கரிபரி
கங்கை நிலந்திருக் காட்டிய பிறவும்
ஆகு மென்மனு ரறிந்திசி னோரே.

என்பது, முற்கூறியவற்றுள், மங்கலப் பொருத்தமாவன, கார், புயல், மா, மணி, கடல், ஆரணம், உலகு, பூ, அமுதம், தேர், வயல், திங்கள், பொன், எழுத்து, சூரியன், யானை, குதிரை, கங்கை, நிலம், திரு, இவை முதலியன பிறவுமாம். (சுசூ)

முதற் சீர் மொழிக் காகாதன

கஅஉ. சீர்நனி சிதைதல் சிறப்பின்றாய் நிற்றல்
ஈறு திரித லிரும்பொரு ளின்மை
பலபொருள் பயத்தல் முதலிய பிறவு
முதற்சீர் மொழிக்கா காவென மொழிப.

என்பது, சீர்சிதைந்து நிற்றல், சிறப்பில்லாமை, ஈறுதிரிதல், பொருளின்மை, பலபொருடருதல் இவை போல்வன பிறவும் முதற் சீர் மொழிக்குக் குற்றமாகும். (சுஎ)

முதற்சீர்க்குரிய எழுத்து வரையறை

கஅஉக. ஐந்தோடு மூன்றே ழாறோடு மூன்றும்
ஆகுநா லாறெட் டெழுத்தா காவே.

என்பது, ஐந்தெழுத்து, மூன்றெழுத்து, ஏழெழுத்து, ஒன்பதெழுத்து, முதற் சீர்க்காகும்; நாலெழுத்து, ஆறெழுத்து, எட்டெழுத்து, ஆகாவாம். (சுஅ)

முதற்சீர்க்காகும் எழுத்துக்கள்

கஅஊ. அ ஆ இ ஈ ஐயும் உ ஊ
ஔவும் எ ஏ ஒ ஓ வென்றிவை
பாலன் குமார னிராசன் மூப்பு
மரண முறையே யைந்து மெண்ணுக
மூப்பு மரணமு முதற்சீர்க் காகா.

என்பது, அ, ஆ, பாலன்; இ, ஈ, ஐ, குமரன்; உ, ஊ, ஔ, இராசன்; எ, ஏ, மூப்பு; ஒ, ஓ, மரணம். இவற்றில் பாலன், குமரன், இராசன், ஆம்; மூப்பு, மரணம் முதற்சீர்க்காகாவாம். (சுகூ)

எழுத்துக்களுக்குரிய பாற்பகுப்பு

கஅஎக. குற்லாண் நெடில்பெண் ணைந்தனி நிலுமெய்
அலியாம் பெண்ணிலை டாண்பாற் புணர்ச்சிக்
கவ்வவ் வெழுத்தா மயங்கினும் வழுவே.

என்பது, குற்றெழுத்தெல்லாம், ஆண்பால்; நெட்டெழுத்தெல்லாம் பெண்பால்; ஆய்தமும் மெய்களும் பேடு! பெண்பாற்குப்

பெண்பாலெழுத்தும், ஆண்பாற்கு ஆண்பாலெழுத்தும், ஆம், இருமையும் மயங்கிப் புணரிற் குற்றமாம். (எ0)

அமுத வெழுத்தும் நஞ்செழுத்தும்

கஎகூஉ. அ இ உ எ க ச த ந ப ம வவும்
அமுதெழுத் தியாயோ ராரோ லாலோ
அவற்றி னேற்று மளபெடை மக்குறள்
ஆய்தமு நஞ்செழுத் தாமுத லாம்பின்
ஆகா வென்மனு ரறிந்திசி னேரே.

என்பது, அ, இ, உ, எ, ஆகிய நான்குயிரும், க, ச, த, ந, ப, ம, வ ஆகிய ஏழு மெய்யும், அமுத வெழுத்தாம். யா, யோ, ரா, ரோ, லா, லோ, இவ்வாறு மெய்யும், ய, ர, ல, ஆகிய மூன்று மெய்யும், உயிரள பெடையும், ஒற்றள பெடையும், மகரக்குறுக்கமும், ஆய்தமும் நஞ்செழுத்தாம். இவற்றுள் முற்கூறிய அமுத வெழுத்து நன்மையாகும். பிற்கூறிய நஞ்செழுத்தாகாவாம். (எக)

எழுத்துக்களுக்குரிய வருணம்

கஎகூங. வருமுயி ரடங்கலும் வல்லினப் புள்ளியும்
அந்தணர்க் காந்தந யரபமப் புள்ளி
மன்னவர்க் காம்லவ றனவணி கர்க்காம்
பின்னவர்க் காம்ழளப் பேசுங் காலே.

என்பது, பன்னிரண்டுயிரும், வல்லெழுத்தாறும், பார்ப்பாருக்காகும். த, ந, ய, ர, ப, ம இவ்வாறு மெய்யும், அரசருக்காகும். ல, வ, ற, ன இந்நான்கு மெய்யும் வணிகருக்காகும். ழ, ள, இவ்விரண்டு மெய்யும் சூத்திரருக்காகும். (எஉ)

எழுத்துக்களுக்குரிய நாட் பெயர்கள்

கஎகூசு. ஆவிநான் கைந்தொடு நான்குமாய்ப் பிரிவது
கார்த்திகை பூராடமுத்திராட மாமெய்யிற்
ககரநான் கிரண்டு மூன்று மூன்றிவை
ஓணமா திரையிரு பூசமா முறையே
சகரநான் கைந்துமூன் றிரேபதி யச்சுவினி
பரணிஞ ஞாஞே ஞொவவிட்ட மேனைய
தகர மிரண்டேழு தான்கடை மூன்று

சோதி விசாகமே தூயவான் சதய
நவ்வரி யாறுட னுடுமும் மூன்றும்
அனுடங் கேட்டை யாய்பூரட் டாதி
பகரநான் கிரண்டொடு மாறுமுத் திராடம்
அத்தஞ்சித் திரைமவ் வாறுடு மூன்று
மூன்று மகமா யிலியம் பூரம்
யய்யா வுத்திரட் டாதி யுய்யோ
மூலம்வ வாவிவீயு ரோகணிவே வேவைவேள
மிருகசீ ரிடமென விளம்பினர் புலவர்.

என்பது, அ, ஆ, இ, ஈ கார்த்திகை; உ, ஊ, எ, ஏ, ஐ பூராடம்; ஒ, ஓ, ஔ, உத்திராடம்; க, கா, கி, கீ, திருவோணம்; கு, கூ, திருவாதிரை; கெ, கே, கை, புனர்பூசம்; கொ, கோ, கௌ, பூசம்; ச, சா, சி, சீ, இரேவதி; சு, சூ, செ, சே, சை, அச்சுவினி; சொ, சோ, சௌ பரணி; ஞ, ஞா, ஞெ, ஞொ, அவிட்டம்; த, தா, சோதி; தி, தீ, து, தூ, தெ, தே, தை, விசாகம்; தொ, தோ, தௌள, சதயம்; ந, நா, நி, நீ, நு, நூ, அனுடம்; நெ, நே, நை, கேட்டை; நொ, நோ, நௌ, பூரட்டாதி; ப, பா, பி, பீ, உத்திரம்; பு, பூ, அத்தம்; பெ, பே, பை, பொ, போ, பௌ, சித்திரை; ம, மா, மி, மீ, மு, மூ மகம்; மெ, மே, மை, ஆயிலியம்; மொ, மோ, மௌள, பூரம்; ய, யா, உத்திரட்டாதி; யு, யூ, மூலம்; வ, வா, வி, வீ, உரோகணி; வெ, வே, வை, வௌள, மிருகசீரிடமாமென்க.

(எஉ)

பாட்டுடைத் தலைவனுக்குரிய எழுத்துப் பொருத்தம்

கஅஉடு. நாயகன் முதற்பெய ராதி யெழுத்தினுண்
முதற்கொண் டொன்ப தொன்ப தாக
மங்கலச் சொன்முத லெழுத்தினு ளளவும்
எண்ணி யிரண்டு நான்கு மாறும்
எட்டு மொன்பதுங் காணி னல்லவாம்
ஒன்று மூன்று மைந்து மேழுங்
காணிற் றீங்கெனக் கருதப் படுமே.

என்பது, பாட்டுடை நாயக னியற்பெயராதி யெழுத்தினுளே முதற் கொண்டு, ஒன்பது ஒன்பது ஆக, எடுத்த மங்கலச்சொல், முதலெழுத்து நாளளவுமெண்ணி, இரண்டும், நான்கும், ஆறும், எட்டும், ஒன்பதும் கண்டால் நல்லவாம்; ஒன்றும், மூன்றும், ஐந்தும், ஏழும் கண்டால் தீயவாம். (எச)

எழுத்துக்களுக்குரிய கதிகள்

கo௯சு. அ, இ, உ, எ, வோடு க, ச, ட, த, பவாம்
ஒன்பதுந் தேவர் கதியாம் ஆ
ஊ, ஏ, ங, ஞ, ண, ந, ம, வா, மொன்பது
மாந்தர் கதி ஒ, ஓ, யரலழற
விலங்கின் கதிஐ, ஔவோடு வளன
ஐந்து நரகர் கதியா மிவற்றுண்
முன்னவை நல்லன பின்னவை தீயன.

என்பது, அ, இ, உ, எ, க, ச, ட, த, ப, ஆகிய வொன்ப தெழுத்தும் தேவர்கதி; ஆ, ஈ, ஊ, ஏ, ங, ஞ, ண, ந, ம, ஆகிய வொன்பதெழுத்தும் மக்கட்கதி; ஒ, ஓ, ய, ர, ல, ழ, ற, ஆகிய ஏழெழுத்தும் விலங்கின் கதி; ஐ, ஔ, வ, ள, ன, ஆகிய ஐந்தெழுத்தும் நரகர்கதி; இவற்றுள் முற்கூறிய தேவர்கதியும், மக்கள் கதியும் நல்லனவாம். பிற்கூறிய விலங்கின் கதியும், நரகர் கதியும் தீயனவாம். (எடு)

காய்ச்சீர், கனிச்சீர்களுக்குரிய கணங்கள்

கo௯எ. தேமாங் காயிந் திரகணம் புளிமாங்
காய்சந் திரகணங் கருவிள மென்கனி
நிலக்கணங் கூவிளங் கனிநீர்க் கணமிவை
ஆகுங் கருவிளங் காயந் தரகணங்
கூவிளங் காயிர விக்கணந் தேமாங்
கனிகாற் கணம்புளி மாங்கனி தீக்கணம்.

என்பது, தேமாங்காய் இந்திரகணம். புளிமாங்காய் சந்திர கணம். கருவிளங்கனி நிலக்கணம். கூவிளங்கனி நீர்க்கணம். இவை நல்லனவாம். கருவிளங்காய் அந்தரகணம். கூவிளங்காய் சூரியகணம். தேமாங்கனி வாயுக்கணம். புளிமாங்கனி தீக்கணம் இவையாகாவாம். (எசு)

பிரபந்தங்கள்

(சிற்றிலக்கியங்கள்)

சாதகக் கவி

கo௯அ. ஓரை திதிநீலே யோகநாண் மீனிலே
வாரங் கரண நிலைவரு கிரக

நிலையெழு வவயவ நிலையையு முணர்வுற்
றவற்றை யமைத்தவற் றுற்றலே மகனுக்
கடைவன வறைதல்சா தகமென மொழிப.

என்பது, ஓரைநிலையும், திதிநிலையும், யோகநிலையும், நாண் மீனிலையும், வார நிலையும், கரணநிலையும், கிரகநிலையும், ஆகிய வேழுறுப்புகளி னிலையையும், சோதிடநூலால் நன்குணர்ந்து, அவற்றை அமைத்து, அவற்றுல் தலைமகனுக்கு அடைவன கூறல் சாதகக் கவியாமென்க. (எஎ)

பிள்ளைத் தமிழ்

கஅகூக. தீதில் காப்பே செங்கீரை தாலே
சப்பாணி முத்தம் வாரானை யம்புலி
சிறுபறை சிற்றில் சிறுதே ரிவற்றை
முறையே யகவல் விருத்தத் தாலே
பப்பத் தாகப் பாடுவ தாண்பாற்
பிள்ளைக் கவியிவ் வுறுப்பினிற் கடைமூன்
றெழித்துக் கழங்கம் மனையூச லென்றிவை
கூட்டிமுற் கூறிய வாறுரைப் பதுவே
பெண்பாற் பிள்ளைக் கவியெனப் படுமே.

என்பது, காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம் வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர், இவற்றை முறையே, ஆசிரிய விருத்தத்தால், பத்துப்பத்தாகக் கூறுவது ஆண்பாற் பிள்ளைக்கவி யாகும். இவ்வுறுப்பினில், கடைமூன் றெழித்துக், கழங்கு, அம்மனை, ஊசல் என்றிவற்றைக் கூட்டி, முற்கூறியவாறே கூறுவது, பெண்பாற் பிள்ளைக்கவியாகும். (எஅ)

பரணி

கஅசஅ. போர்முகத் தாயிரம் புகர்முகக் களிற்றைக்
கொன்ற வனைத்தலை மகனுக் கொண்டு
கடவுள் வாழ்த்துக் கடைதிறப் புப்பலி
காளி கோயிலும் பேயோடு காளியும்
காளியோடு பேய்களு முரைக்கத் தானகஞ்
சாற்றக் கருதிய தலைவன் சீர்த்தி
புலப்பட வவன்வழி யாகப் புறப்போருள்
தோன்றப் போர்த்தொழி றொடங்க விரும்பல்

என்றிவை யெல்லா மிருசீர் முச்சீர்
அடியொழித் தேனைய வடிகொடு வீரடிப்
பஃறு ழிசையாற் பாடுவது பரணி.

என்பது, போர் முகத்து, ஆயிரம் யானையைக் கொன்ற வீரனைத் தலைவனுகக் கொண்டு, கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, பாலைநிலம், காளிகோயில், பேய்களோடு காளி; காளியோடு பேய்கள் கூறத் தான்சொல்லக் கருதிய தலைவன் கீர்த்தி விளங்க, அவன் வழியாகப் புறப்பொருள் தோன்ற, வெம்போர் வழங்க விரும்பல், இவை யெல்லாம், இருசீரடி, முச்சீரடி யொழித்து, ஒழிந்த மற்றடியாக, ஈரடிப் பலதாழிசையாற் பாடுவது பரணி யாகும். (எசு)

கலம்பகம்

கoசக. வெண்பாக் கலித்துறை யோடோரு போகு
முதற்கலி மூன்றுறுப் பாக மொழிந்து
வாகு வகுப்பு மதங்க மம்மனை
காலஞ் சம்பிரதங் கார்தவங் குறமறம்
பாண்களி யிரங்கல் சித்தூசல் கைக்கிளை
தூதளி தழையிவை தோன்ற மடக்கு
மருட்பா வகவல் வஞ்சி கலிப்பா
அகவல் விருத்த மொடுகலித் தாழிசை
கலிவிருத் தந்துறை காமரு வெண்டுறை
விரவியந் தாதியாய் விளம்புங் காலைத்
தேவர்க்கு நூறந் தணர்க்கைந் தொழித்தல்
அரசர்க்குத் தோண்ணூ றைம்பது வசியர்க்
காறைந்து சூத்திரர்க் காகப் பகர்தரல்
கலம்பக மென்மனூர் கற்றுணர்ந் தோரே.

என்பது, வெண்பா, கலித்துறை, ஒருபோகு முதற்கலி யுறுப்பாக முற்கூறி, புயவகுப்பு, மதங்கு, அம்மனை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் இவ்வவயவங் களியைய, மடக்கு, மருட்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை, வெண்டுறை என்னுமிவற்றுள், இடையே வெண்பா, கலித்துறை விரவி, அந்தாதித் தொடையான் முற்றுறக்

கூறுங்கால், தேவர்க்கு நூறும், அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், வைசியர்க்கு ஐம்பதும், சூத்திரர்க்கு முப்பதுமாகப் பாடுவது கலம்பகமாகும். (அ0)

அகப்பொருட் கோவை

கo சஉ. முதல கருவுரிப் பொருளொரு மூன்றும்
அடைந்து கைக்கிளை யன்புடைக் காமப்
பகுதிய வாங்கள வொழுக்கமுங் கற்பும்
இயம்புத லேயெலி யாகக் கட்டளைக்
கலித்துறை நானூற் றுற்றிணை முதலாத்
துறையீ றுகச் சொல்லப் பட்டும்
ஈரா றகப்பாட் டுறுப்பு மியையக்
கூறுவ தகப்பொருட் கோவையா மற்றிஃ
தகவல்வெண் பாக்கலி யடுக்கியவ் வண்ண
வஞ்சியி னனும் வழுத்தப் படுமே.

என்பது, இருவகையாகிய முதற்பொருளும், பதினொன்று வகையாகிய கருப்பொருளும், பத்துவகையாகிய வுரிப்பொருளும் பெற்றுக், கைக்கிளை முதலுற்ற அனபுடைக் காமப்பகுதியவாம் களவொழுக்கமுந், கற்பொழுக்கமும் கூறலே யெல்லியாகக் கட்டளைக் கலித்துறை நானூற்றுல், திணை முதலாகத் துறை யீறுகக் கூறப்பட்ட பன்னிரண்டகப்பாட்டுறுப்பும் வழுவின்றித் தொன்றப் பாடுவது அகப்பொருட்கோவையாகும். இது அகவல், வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா வண்ணம், இவற்றுலும் வழங்கப் படும். (அக)

ஐந்திணைச் செய்யுள்

கo சஙூ. புணர்தன் முதலிய வைந்துரிப் பொருளும்
அணிபெறக் குறிஞ்சி முதலிய வைந்திணை
இணையு மியம்புவ தைந்திணைப் பாவே.

என்பது, புணர்தன் முதலிய வைந்துரிப் பொருளும் விளங்கக் குறிஞ்சி முதலிய வைந்திணையையுங் கூறுவது ஐந்திணைச் செய்யுளாகும். (அட)

வருக்கக் கோவை

கo சச. அகர முதலா கியவா மக்கர
வருக்க மொழிக்கு முதல்வரு மெழுத்து

முறையே கட்டளைக் கலித்துறை யாக
வழுத்துவ ததுவே வருக்கக் கோவை.

என்பது, அகரமுதலாகிய வெழுத்துவருக்கம் மொழிக்கு முதலாமெழுத்துக் கட்டளைக் கலித்துறையாகப் பாடுவது வருக்கக் கோவையாகும். (அஙு)

மும்மணிக் கோவை

கoசடு. அகல்வெண் பாக்கட் டளைக்கலித் துறையும்
முறையே தொகைபெற முப்ப தடுக்கி
அந்தாதித் தொடை யாகச் செய்வது
மும்மணிக் கோவையா மொழியுங் காலே.

என்பது, ஆசிரியப்பாவும், வெண்பாவும், கட்டளைக்கலித் துறையும் முறையே தொகை முப்பது பெறவடுக்கிப் பாடுவது மும்மணிக் கோவையாகும். (அச)

அங்கமாலை

கoசசு. ஆடூஉ மகடூஉ வாயிரு பெயர்க்கும்
மிகவெடுத் துரைக்கு மெய்யவ யவத்தை
வெண்பா வாயினும் வெளிவிருத் தத்தின்
ஆயினுங் கேசாதி பாதம்
பாதாதி கேசமாகப் பாடுவ
தங்க மாலையா மாயுங் காலே.

என்பது, ஆண்மகனுக்கும், பெண்மகளுக்கும் மிக்கென வெடுத்துக் கூறுமவயவங்களை வெண்பாவாலாயினும், வெளி விருத்தத்தாலாயினும், பாதாதிகேசம், கேசாதிபாதம் முறை பிறழாது தொடர்வுறப்பாடுவது அங்கமாலையாகும். (அடு)

அட்டமங்கலம்

கoசள. கடவுளைப் பாடியக் கடவு டானே
காக்கவென் றகவல் விருத்த மிருநான்
கந்தாதித் தறைகுவ தட்டமங் கலமே.

என்பது, கடவுளைப் பாடி, அக்கடவுள் காக்கவென ஆசிரிய விருத்தம் எட்டு அந்தாதித்துப் பாடுவது அட்டமங்கலமாகும். (அசு)

அனுராகமாலை

கஅசஅ. கனவி லொருத்தியைக் கண்டுகேட் டுண்டுயிர்த்
தினிமை யுறப்புணர்ந் ததைத்தன் னின்னுயிர்ப்
பாங்கற்குத் தலைமகன் பகர்ந்த தாக
நேரிசைக் கலிவெண் பாவா னிகழ்த்துவ
தனுராக மாலையா மாயுங் காலே.

. என்பது, தலைவன், கனவின்க ணொருத்தியைக்கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, இனிமையுறப் புணர்ந்ததைத் தன்னுயிர்ப் பாங்கற் குரைத்ததாக நேரிசைக் கலிவெண்பாவாற் கூறுவது அனுராகமாலையாகும். (அஎ)

இரட்டை மணிமாலை

கஅசக. இருபஃ தந்தா தித்துவெண் பாவும்
கட்டளைக் கலித்துறை யுங்கலந் துரைத்தல்
இரட்டை மணிமாலை யென்மனூர் புலவர்.

என்பது, முறையானே வெண்பாவும், கட்டளைக்கலித் துறையும் இருபது அந்தாதித் தொடையான் வருவது இரட்டை மணிமாலையாகும். (அஅ)

இணைமணிமாலை

கஅடுஅ. வெண்பா வகவல் வெண்பாக் கலித்துறை
இரண்டிரண் டாக விணைத்து வெண்பா
அகவ லிணைமணி மாலை வெண்பாக்
கலித்துறை யிணைமணி மாலை யாகும்.

என்பது, வெண்பாவும், அகவலும், வெண்பாவும், கலித் துறையும், இரண்டிரண்டாக விணைத்துப் பாடுவது வெண்பாவகவ லிணைமணிமாலை யெனவும், வெண்பாக்கலித்துறை யிணைமணி மாலை யெனவும் பெயர் பெறும். (அக)

நவமணிமாலை

கஅடுக. அந்தா தித்து வெண்பா வாதிய
பாவும் பாவினமு மாக வொன்பது
செய்யு ளணிபெறச் செப்புவ ததுதான்
நவமணி மாலையா நாடுங் காலே.

என்பது, வெண்பாமுதலாக வேறுபட்ட பாவும் பாவினமுமாக வொன்பது செய்யுளந்தாதித்துப் பாடுவது நவமணிமாலையாகும். (கூ0)

நான்மணிமாலை

கo0உ. அந்தா தித்து வெண்பாக் கலித்துறை
விருத்தமு மகவலும் விரவி நாற்பது
நவில்வது நான்மணி மாலை யாகும்.

என்பது, வெண்பாவும், கலித்துறையும், விருத்தமும், அகவலும் அந்தாதித்து, நாற்பது பாடுவது நான்மணிமாலை யாகும். (கூக)

நாமமாலை

கo0ரூ. அகவ லடிகலி யடியு மயங்கிய
வஞ்சியாற் புருடனை வாழ்த்திப் புகழ்வது
நாம மாலையா நாடுங் காலே.

என்பது, அகவலடியும், கலியடியும் வந்து மயங்கிய வஞ்சிப் பாவால் ஆண்மகனைப் புகழ்ந்து பாடுவது நாமமாலையாகும். (கூஉ)

பலசந்தமாலை

கo0ரு. பப்பத் தாகப் பலசந் தத்தோடு
வீரைம் பான்பாட் டியல்வ ததுபல
சந்த மாலையாஞ் சாற்றுங் காலே.

என்பது, பத்துப் பத்துச் செய்யுள், வெவ்வேறுசந்தமாக நூறு செய்யுட் கூறுவது பலசந்த மாலையாகும். (கூங)

பன்மணிமாலை

கo0ருரு. முற்கூ றியகலம் பகத்துள் வருமொரு
போகு மம்மனை யூசலும் போக்கி
ஏனைய வுறுப்புக ளெல்லா மமையப்
பாடுவ ததுதான் பன்மணி மாலை.

என்பது, முற்கூறிய கலம்பகத்துள், ஒருபோகும் அம்மனையும் ஊசலுமின்றி ஏனைய வுறுப்புக்களெல்லாம் அமையப் பாடுவது பன்மணி மாலையாகும். (கூச)

மணிமாலை

கஎடுகூ. எப்பொருண் மேலும் வெண்பா விருபதுங்
கலித்துறை நாற்பதுங் கலந்து வருவது
மணிமாலை யாகும் வழுத்துங் காலே.

என்பது, எந்தப் பொருண்மேலும், வெண்பாவிருபதும், கலித்துறை நாற்பதும் விரவிப் பாடுவது மணிமாலையாகும். (கூடு)

புகழ்ச்சிமாலை

கஎடுஎ. அகவ லடிகலி யடியு மயங்கிய
வஞ்சியி னரிவையர் மாண்பை யுரைப்பது
புகழ்ச்சி மாலையின் பொருளா கும்மே.

என்பது, அகவலடியும், கலியடியும் வந்து மயங்கிய வஞ்சிப் பாவால், பெண்களின் சிறப்பைக் கூறுவது புகழ்ச்சிமாலையாகும். (கஃசு)

பெருமகிழ்ச்சிமாலை

கஎடுஅ. தெரிவை யெழில்குண மாக்கஞ் சிறப்பை யுரைப்பது
பெருமகிழ்ச்சி மாலை யெனப்பெயர் பெறுமே.

என்பது, பெண்கள் அழகும், குணமும், ஆக்கமும், சிறப்பும் முதலியன கூறுவது பெருமகிழ்ச்சி மாலையாகும். (கூஎ)

வருக்கமாலை

கஎடுகூ. முதலாம் வருக்க வெழுத்தினுக் கோவ்வோரு
செய்யு ளணிபெறச் செப்புவ ததுதான்
வருக்க மாலையாம் வழுத்துங் காலே.

என்பது, மொழிக்கு முதலாகும் வருக்க வெழுத்தினுக்கு ஓவ்வொரு செய்யுட் கூறுவது வருக்க மாலையாகும். (கூஅ)

மெய்க்கீர்த்திமாலை

கஎசுஎ. சோற்சீ ரடியெனுங் கட்டுரைத் தோடர்பாற்
குலமுறை யாற்றிய கீர்த்தியைக் கூறன்
மெய்க்கீர்த்தி மாலையாம் விளம்புங் காலே.

என்பது, சொற்சீரடி யென்னும் கட்டுரைச் செய்யுளால் குலமுறையிற் செய்த கீர்த்தியைக் கூறுவது மெய்க்கீர்த்தி மாலை யாகும். (கூகூ)

காப்புமாலை

கo௯க. கடவுள் காத்த லாக வோருமூன்
றைந்தே ழானு மறைவது காப்பு
மாலை யெனப்பெயர் வைக்கப் படுமே.

என்பது, தெய்வங் காத்தலாக மூன்று செய்யுளானும் ஐந்து செய்யுளானும் ஏழு செய்யுளானும் பாடுவது காப்பு மாலை யாகும். (கoo)

வேனில்மாலை

கo௯உ. வேனி லொடுமுதிர் வேனிலும் புனைந்து
விளம்புதல் வேனின் மாலை யாகும்.

என்பது, வேனிலையும் முதிர் வேனிலையும் சிறப்பித்துப் பாடுவது வேனின் மாலையாகும். (கoக)

வசந்தமாலை

கo௯ஙூ. தென்றலைப் புகழ்ந்து செப்புதல் வசந்த
மாலை யெனப்பெயர் வைக்கப் படுமே.

என்பது, தென்றலை வருணித்துப் பாடுவது வசந்த மாலை யாகும். (கoஉ)

தாரகைமாலை

கo௯ச. அருந்ததிக் கற்பி னரிவையர்க் குள்ள
இயற்கைக் குணங்களை வகுப்பா லியம்புதல்
தாரகை மாலையாஞ் சாற்றுங் காலே.

என்பது, அருந்ததிக் கற்பின் மகளிர்க்குள்ள இயற்கைக் குணங்களை வகுப்பிற் கூறுவது தாரகை மாலையாகும். (கoங)

உற்பவமாலை

கஅசுரு. அரிபிறப் பீரைந் தனையுமா சிரிய
விருத்தத்தால் விளம்புவ துற்பவ மாலை.

என்பது, திருமால் பிறப்புப் பத்தையும் ஆசிரிய விருத்தத்தால் கூறுவது உற்பவ மாலையாகும். (கஅச)

தானமாலை

கஅசுரு. அகவலோ சையிற்பிற ழாதகவ லின்மூனர்
எடுத்துச் செல்லுங் கொடிப்படை யியம்பல்
தானமா லைப்பெயர் தழுவுமா மெனலே.

என்பது, அகவலோசையிற் பிறழாது ஆசிரியப் பாவால் முன்னெடுத்துச் செல்லும் கொடிப்படையைக் கூறுவது தான மாலையாகும். (கஅள)

மும்மணிமாலை

கஅசுஎ. ஆதிப் பாக்கலித் துறையு மகவலும்
அந்தா தித்தா றைந்தியம் புவது
மும்மணி மாலையா மொழியுங் காலே.

என்பது, வெண்பாவும் கலித்துறையும் ஆசிரியப்பாவும் அந்தாதித்து முப்பது செய்யுட் பாடுவது மும்மணி மாலையாகும். (கஅசு)

தண்டகமாலை

கஅசுஅ. வெண்பா வான்முந் நூறு விரிப்பது
தண்டக மாலையாஞ் சாற்றுங் காலே.

என்பது, வெண்பாவினால் மூந்நூறு செய்யுட் கூறுவது தண்டக மாலையாகும். (கஅஎ)

வெட்சிமாலை

கஅசுகூ. ஆனிரை கவர்ந்து வருபவன் வேற்றி
விளம்புதல் வீர வெட்சி மாலை.

என்பது, சுத்த வீரன் பகைவரூரிற் சென்று பசுனிரை கவர்ந்து வருவதை மிகுத்துக் கூறுவது வெட்சி மாலையாகும். (கஅஅ)

வெற்றிக் கரந்தை

கo எ0. தழுவார் கொண்ட தந்நிரை மீட்போர்
கரந்தை பூணந்து கனன்றுலவை யிற்செலீஇ
மீட்பதைக் கூறல் வெற்றிக் கரந்தை.

என்பது, பகைவர் கொண்ட தந்நிரை மீட்போர் கரந்தைப் பூமாலை சூடிப் போய் மீட்பதைக் கூறுவது வெற்றிக் கரந்தை வஞ்சரியாகும். (கo கூ)

போர்க்கெழுவஞ்சி

கo எக. போர்க்கெழு மன்னவர் வஞ்சிப் பூத்தொடை
அணிந்து புறப்படு மடுபடை யெழுச்சிச்
சிறப்பக வலினுற் செப்புதல் போர்க்கெழு
வஞ்சி யெனப்பெயர் வைக்கப் படுமே.

என்பது, பகைவர் மேல் போர்குறித்துப் போகின்ற வய வேந்தர் வஞ்சிப் பூமாலை சூடிப் புறப்படும் படையெழுச்சிச் சிறப்பை யாசிரியப்பாவாற் கூறுவது போர்க்கெழு வஞ்சியாகும். (கக0)

வரலாற்று வஞ்சி

கo எஉ. வீழுமிய குலமுறை பிறப்புமேம் பாட்டின்
பலசிறப் பிசையையும் வஞ்சிப் பாவால்
வழுத்தல் வரலாற்று வஞ்சியா மென்ப.

என்பது, குலமுறை பிறப்பு முதலிய மேம்பாட்டின் பல சிறப்பையும் கீர்த்தியையும் வஞ்சிப்பாவாற் கூறுவது வரலாற்று வஞ்சியாகும். (கஉக)

செருக்கள வஞ்சி

கo எகூ. போர்க்களத் திறந்த புரவி நால்வாய்
மக்களுடலையும் வாயசங் கழுகு
பேய்நாய் பசாசம் பிடுங்கிப் பருகிக்
களித்துப் பாடிய சிறப்பைக் காட்டல்
செருக்கள வஞ்சியாஞ் செப்புங் காலே.

என்பது, போர்க் களத்தில் இறந்த குதிரை யுடலையும் யானை யுடலையும், மனிதருடலையும், நாயும், பேயும், பிசாசமும் காகமும், கழுகும் தின்று, களித்துப் பாடிய சிறப்பைப் பாடுவது செருக்கள வஞ்சியாகும். (ககஉ)

காஞ்சிமாலை

கo௭ச. காஞ்சி புனைந்து கருதா ரூர்ப்புறம்
ஊன்றலை யுரைப்பது காஞ்சி மாலை.

என்பது, பகைவரூர்ப் புறத்துக் காஞ்சிப் பூமாலை சூடி ஊன்றலைக் கூறுவது காஞ்சி மாலையாகும். (ககக)

நொச்சிமாலை

கo௭ஞ. கோலிய மாற்றூர் கோட லின்றி
நொச்சிவேய்ந் தகலெயி னெக்குந் திறனை
வழுத்துத னெச்சி மாலை யாகும்.

என்பது, புறத்தான்றிய பகைவர் கோடலின்றி நொச்சிப் பூமாலை சூடித் தன் மதில் காக்குந் திறங்கூறுவது நொச்சிமாலை யாகும். (ககச)

உழிஞைமாலை

கo௭சு. மாற்றூ ரூர்ப்புறம் வளைதர வுழிஞை
வனைந்து காலாள் வளைப்பது கூறல்
உழிஞை மாலையா முணருங் காலே.

என்பது, பகைவர் ஊர்ப்புறஞ் சூழ உழிஞைப்பூமாலை சூடிப் படை வளைப்பதைக் கூறுவது உழிஞைமாலையாகும். (ககஞ)

தும்பைமாலை

கo௭எ. தும்பைவேய்ந் தோளொரோடு சூழ்ந்து பொருவது
சொல்வது தும்பை மாலை யாகும்.

என்பது, பகைவரொடு தும்பைப்பூமாலை சூடிப்பொருவதைக் கூறுவது தும்பைமாலையாகும். (ககசு)

வாகைமாலை

கஎஅ. மாற்றரை வென்று வாகை சூடுவதை
அகவலி னுலறை வதுவாகை மாலை.

என்பது, பகைவரை வென்று புகழ்படைத்து வாகைப் பூமாலை சூடுவதை ஆசிரியப்பாவாற் கூறுவது வாகை மாலை யாகும். (ககள)

வாதோரண மஞ்சரி

கஎகூ. யானைவயப் படுத்தி யடக்கின வருக்கும்
எதிர்போரு மியானையை யீர வெட்டி
அடக்கின வருக்கு மதட்டிப் பிடித்துச்
சேர்த்த வர்க்கும் வீரச் சிறப்பை
வஞ்சியாற் பாடுவே ததுவா தோரண
மஞ்சரி யெனப்பெயர் வைக்கப் படுமே.

என்பது, யானையை வயப்படுத்தி அடக்கினவருக்கும், எதிர்த்த யானையை வெட்டி அடக்கினவருக்கும், பற்றிப் பிடித்துச் சேர்த்தவருக்கும் வீரப்பாட்டின் சிறப்பை வஞ்சிப்பாவால் தொகுத்துப் பாடுவது வாதோரண மஞ்சரியாகும். (ககஅ)

எண் செய்யுள்

கஎஅ. பாட்டுடைத் தலைவ னூரும் பெயரும்
பத்துமுத லாயிர மளவும் பாடி
எண்ணுற் பெயர்பெற லெண்செய்யு ளாகும்.

என்பது, பாட்டுடைத்தலைவன் ஊரையும் பெயரையும் பத்து முதல் ஆயிரமளவும் பாடி. எண்ணுற்பெறுவது எண்செய்யுளாகும். (ககக)

தொகைநிலைச் செய்யுள்

கஎஉ. நெடிலடிப் பாவாற் றொகுத்தது நெடுந்தொகை
குறளடிப் பாவாற் றொகுத்தது குறுந்தொகை
கலியிற் றொகுத்தது கலித்தொகை போல்வன
தொகைநிலைச் செய்யு ளெனச்சொலப் படுமே.

என்பது, நெடிலடிச் செய்யுளால் தொகுத்தது நெடுந் தொகை, குறளடிச் செய்யுளால் தொகுத்து குறுந்தொகை, கலிப் பாவால் தொகுத்தது கலித்தொகை போல்வன தொகைநிலைச் செய்யுளாகும். (கஉ0)

ஒலியலந்தாதி

கo அஉ. பதினறு கலியோ ரடியாக வைத்து
நாலடிக் கறுபா னலுகலி வகுத்துப்
பலசந்த மாக வணங்கலி வைப்பும்
வழுவாதந் தாதித்து முப்பது செய்யுட்
பாடுவே தெட்டுக் கலியானும் வரப்பெறும்
அன்றியும் வெண்பா வகவல் கலித்துறை
பப்பத் தாக வந்தா தித்துப்
பாடு வதுமா மொலியலந் தாதி.

என்பது, பதினறுகலி யோரடியாக வைத்து, இங்ஙனம் நாலடிக்கறுபத்து நாலுகலி வகுத்துப், பலசந்தமாக வண்ணமும், கலிவைப்பும் தவறாம லந்தாதித்து முப்பது செய்யுட்பாடுவதும், சிறுபான்மை யெட்டுக்கலியானும் வரப்பெறும். அன்றியும் வெண்பா, அகவல், கலித்துறை ஆகிய இம்மூன்றையும் பத்துப் பத்தாக அந்தாதித்துப் பாடுவதும் ஒலியலந்தாதியாகும். (கஉக)

பதிற்றந்தாதி

கo அஊ. ஈரைந்து வெண்பாக் கலித்துறை யீரைந்
தரும்பொருள் புலப்பட வந்தாதித்துப்
பாடு வனபதிற் றந்தாதி யாகும்.

என்பது, பத்துவெண்பா, பத்துக்கலித்துறை, பொருட்டன்மை தோன்ற அந்தாதித்துப் பாடுவது பதிற்றந்தாதியாகும். (கஉஉ)

நூற்றந்தாதி

கo அஎ. வெண்பா நூற்றினு லேனுங் கலித்துறை
நூற்றினு லேனு மந்தாதித் துரைப்பது
நூற்றந் தாதியா நுவலுங் காலே.

என்பது, நூறு வெண்பாவினுலேனும் நூறு கலித்துறை யினுலேனும் அந்தாதித்துக் கூறுவது நூற்றந்தாதியாகும்.

(கஉங)

உலா

கஅஆ. இளமைப் பருவத் தலைமகன் குலனுங்
குடியும் பிறப்பு மங்கலம் பரம்பரை
இவற்று ளின்னு னென்பது தோன்ற
மாதர் நெருங்கிய வீதி யிடத்தவன்
பவனிவரப் பேதை முதலிய வேழு
பருவப் பெண்களும் பார்த்து வணங்க
உலாவந்த தாக வுன்னி நேரிசைக்
கலிவெண் பாவாற் கழறுவ துலாவே.

என்பது, இளமைப் பருவத் தலைமகனைக் குலம், குடி, பிறப்பு, மங்கலம், பரம்பரை இவற்று ளின்னுனென்பது தோன்ற, மாதர் நெருங்கிய வீதியிடத்து அவன் பவனிவரப், பேதை முதலிய ஏழு பருவப் பெண்களும் கண்டுதொழ உலாவந்ததாக, நேரிசைக் கலிவெண்பாவாற் கூறுவது உலாவாகும். (கஉச)

உலா மடல்

கஅஅ. கனவி லொருத்தியைக் கண்டு கலவி
இன்ப நுகர்ந்தோன் விழித்த பின்னவள்
போருட்டு மடலூர்வே னென்பது கலிவெண்
பாவான் முடிப்ப துலாமட லாகும்.

என்பது, கனவி லொருபெண்ணைக் கண்டு கலவியின்பம் நுகர்ந்தோன், விழித்தபின், அவள் பொருட்டு மடலூர்வே னென் பதைக் கலிவெண்பாவால் முற்றுவிப்பது உலா மடலாகும்.

(கஉடு)

வளமடல்

கஅஇ. அறம்போரு ளின்ப மாகிய பயனை
எள்ளி மகடூஉக் காமவின் பத்தைப்
பயனெனக் கொண்டு பாட்டுடைத் தலைமகன்
இயற்பெயர்க் கெதுகை யியல்பு நாடிப்

பகர்ந்தவ் வெதுகைப் படத்தனிக் கிளவி
இன்றி யின்னிசைக் கலிவெண் பாவால்
தலைமக னிரந்து குறைபெ ருது
மடலே றுவதா யீரடி யெதுகை
வரப்பா டுவது வளமட லாகும்.

என்பது, அறம் பொருளின்பமாகிய பயனை நிந்தித்து மங்கையர் காமவின்பத்தைப் பயனெனக்கொண்டு, பாட்டுடைத் தலைமகன் இயற்பெயர்க்குத் தக்கதை எதுகையாக நாட்டிக்கூறி, அவ்வெதுகைப்பட் தனிச்சொலின்றி, இன்னிசைக் கலிவெண் பாவாற் றலைமகனிரந்து குறை பெருது மடலேறுவதாய், ஈரடி யெதுகையாக வரப்பாடுவது வளமடலாகும். (கூசு)

ஒருபா ஒருபது

கo஫ஆ. அகவல் வெண்பாக் கலித்துறை யாகிய
இவற்று ளொன்றினு லந்தாதித் தொடையாய்
ஒருபஃ துரைப்ப தொருபா வொருபது.

என்பது, அகவல், வெண்பா, கலித்துறை இவற்றுளொன்றினால் அந்தாதித்துப் பத்துப் பாடுவது ஒருபா வொருபதாகும். (கூஎ)

இருபா இருபது

கo஫கூ. அகவல்வெண் பாவு மந்தாதித் தொடையாய்
இரு பதினைந்து வரவெடுத் துரைப்பது
இருபா விருபஃ தென்மனூர் புலவர்.

என்பது, பத்து அகவலும், பத்து வெண்பாவும் அந்தாதித் தொடையால் இருபதினைந்து வருவது இருபாவிருபதாகும்.
(கூஅ)

ஆற்றுப்படை

கoகூo. அகவற் பாவால் விறலி பாணர்
கூத்தர் பொருநர் நால்வரு ளொருவர்
பரிசிற் குப்போ வாரைப் பரிசு
பெற்று வருவா ராற்றிடைக் கண்டு
தலைவன் கீர்த்தியுங் கொடையுங் கோற்றமு
மறைவ தாற்றுப் படையா கும்மே.

என்பது, அகவற்பாவால், விறலி, பாணர், கூத்தர், பொருநர் இந்நால்வருளொருவர் பரிசிற்குப் போவாரைப், பரிசு பெற்று வருவோர் ஆற்றிடைக் கண்டு, தலைவன் கீர்த்தியும் கொடையும் கொற்றமும் கூறுவது ஆற்றுப்படையாகும். (கஉகூ)

கண் படைநிலை

கoகூக. அரசரு மரசர் தமைப்போல் வாரும்
அவைக்க ணெடிது நாளாக வைகிய
வழிமருத் துவரு மந்திரி மாரு
மூதலியோர் தமக்குக் கண்டுயில் கோடலைக்
கருதி யுரைப்பது கண்படை நிலையே.

என்பது, அரசரும் அரசரைப் போல்வாரும் அவைக்கண் நெடிது வைகியவழி, மருத்துவரும் மந்திரிமாரும் மூதலியோர்க்குக் கண்டுயில் கோடலைக் கருதிக் கூறுவது கண்படை நிலையாகும். (கஙo)

பெயரின்னிசை

கoகூஉ. பாட்டுடைத் தலைமகன் பெயரைச் சார
வின்னிசை வெண்பா வெழுபா னிருபஃ
தேனு மெழுபா னேனு மைம்பஃ
தேனு முரைப்பது பெயரின் னிசையே.

என்பது, பாட்டுடைத் தலைவன் பெயரைச் சார, இன்னிசை வெண்பாவால், தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும் பாடுவது பெயரின்னிசையாகும். (கஙக)

ஊரின்னிசை

கoகூங. பாட்டுடைத் தலைமக னூரைச் சார
இன்னிசை வெண்பா வெழுபா னிருபஃ
தேனு மெழுபா னேனு மைம்பஃ
தேனு மியம்புவ தூரின் னிசையே.

என்பது, பாட்டுடைத் தலைமகனூரைச் சார, இன்னிசை வெண்பாவால் தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும் பாடுவது ஊரின்னிசையாகும். (கஙஉ)

பெயர் நேரிசை

கஅகூச. பாட்டுடைத் தலைமகன் பெயரைச் சார
நேரிசை வெண்பாத் தொண்ணூ றேனும்
எழுப தேனு மைம்ப தேனும்
அறைவது பெயர்நே ரிசையா கும்மே.

என்பது, பாட்டுடைத் தலைவன் பெயரைச் சார, நேரிசை வெண்பாவால், தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும் பாடுவது பெயர் நேரிசையாகும். (கஉஉ)

ஊர் நேரிசை

கஅகூரி. ஊரைச் சார வுரைப்பதூர் நேரிசை.

என்பது, பாட்டுடைத் தலைவனூரைச் சார, நேரிசை வெண்பாவால், தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும் பாடுவது ஊர் நேரிசையாகும். (கஉச)

ஊர் வெண்பா

கஅகூசு. வெண்பா வாற்சிறப் பித்தூ ரோருபான்
பாவிரித் துரைப்பதூர் வெண்பா வாகும்.

என்பது, வெண்பாவால் ஊரைச் சிறப்பித்துப் பத்துச் செய்யுட் பாடுவது ஊர் வெண்பாவாகும். (கஉரி)

விளக்குநிலை

கஅகூஎ. வேலும்வேற் றலையும் விலங்கா தோங்கிய
வாறுபோற் கோலொடு விளக்கு மொன்றுபட்
டோங்குமா ரேங்குவ தாக வுரைப்பது
விளக்கு நிலையென விளம்பப் படுமே.

என்பது, வேலும் வேற்றலையும் விலங்கா தோங்கியவாறு போலக் கோலொடு விளக்கு மொன்றுபட் டோங்குமா ரேங்குவ தாகக் கூறுவது விளக்கு நிலையாகும். (கஉசு)

புறநிலை

கoகூ.அ. நீவணங் கோருவ னினைப்பாது காப்ப
நின்னுடைய வழிவழி நீளுவ தாக
எனவியம் புவது புறநிலை யென்ப.

என்பது, நீ வணங்குந் தெய்வம் நின்னைப் பாதுகாப்ப, நின் வழி வழி மிகுவதாகவெனக் கூறுவது புற நிலையாகும். (கஙஎ)

கடைநிலை

கoகூகூ. பேரியோர் சேணிடை வருதலாற் பிறந்த
வருத்தந் தீர வாயில்காக் கின்றோற்
கென்வர வினையிறைக் கியம்புதி நீயெனக்
கடைக்கணின் றுரைப்பது கடைநிலை யாகும்.

என்பது, சான்றோர் தூரத்தில் வருதலால் பிறந்த வருத்தந் தீர, வாயில் காக்கின்றவனுக்கு, என்வரவைத் தலைவற் கிசை யெனக் கடைக்கணின்று கூறுவது கடைநிலையாகும். (கஙஅ)

கையறுநிலை

ககoo. கணவனொடு மனைவி கழிந்துழி யவர்கட்
பட்ட அழிவுப் பாக்கிய மெல்லாம்
பிறருக் கெடுத்தறி வுறுத்தித் தாமும்
இறந்துபடா தொழிந்த வாயத் தாரும்
வேண்டுவன பெறும் விறலியர் குழாமுங்
தனிப்பட ருழந்த செயலறு நிலையை
நிகழ்த்துவது கையறு நிலையா கும்மே.

என்பது, கணவனொடு மனைவி கழிந்துழி, அவர்கட்பட்ட அழிவுப் பொருளெல்லாம் பிறர்க் கறிவுறுத்தித் தாமிறந்து படாதொழிந்த வாயத்தாரும், பரிசில்பெறும் விறலியரும் தனிப் படருழந்து செயலறு நிலையைக் கூறுவது கையறு நிலையாகும்.
(கஙகூ)

தசாங்கப் பத்து

ககoக. தலைவன் படைத்த தசாங்க நேரிசை
வேண்பா வாக வீரைந்து விளம்புதல்
தசாங்கப் பத்தெனச் சாற்றப் படுமே.

என்பது, நேரிசை வெண்பாவால் அரசன் படைத்த தசரங்கத் தினைப் பத்துச் செய்யுட் கூறுவது தசாங்கப்பத்தாகும். (கசஅ)

தசாங்கத் தயல்

கக௦உ. அரசன் றசாங்க மாசிரிய விருத்தம்
ஐயிரண் டறைவது தசாங்கத் தயலே.

என்பது, அரசன் தசாங்கத்தை யாசிரியவிருத்தத்தாற் பத்துச் செய்யுட் கூறுவது தசாங்கத்தயலாகும். (கசக)

அரசன் விருத்தம்

கக௦ஙூ. கலித்துறை பத்துங் கலித்தா ழிசையும்
விருத்த முப்பதும் வெற்புநீர் நாடு
வருணனை யோடுநில வருணனை தாமும்
வாண்மங் கலமுந் தோண்மங் கலமும்
அறைகுவ தரசன் விருத்த மாகும்.

என்பது, பத்துக்கலித்துறையும் முப்பது விருத்தமும் கலித் தாழிசையுமாக, மலை கடல் நாடு வருணனையும், நிலவருணனையும், வாண்மங்கலமும், தோண்மங்கலமும் பாடிமுடிப்பது அரசன் விருத்தமாகும். இது முடிபுனைந்த வேந்தற்காம். (கசஉ)

நயனப் பத்து

கக௦ச. பார்வையைப் பத்துப் பாட்டா லுரைப்பது
நயனப் பத்தென நவிலப் படுமே.

என்பது, கண்களைப் பத்துச் செய்யுளாற் கூறுவது நயனப் பத்தாகும். (கசஙூ)

பயோதரப் பத்து

கக௦டு. பருமுலை பத்துப் பாவா லறைவது
பயோதரப் பத்தெனப் பகரப் படுமே.

என்பது, முலையைப் பத்துப் பாவாலுரைப்பது பயோதரப்பத் தாகும். (கசச)

பாதாதி கேசம்

ககஂசூ. கால்முதன் முடிவரை கலிவெண் பாவாற்
பாடு வதுபா தாதி கேசம்
ஆகு மென்மனு ரழிந்திசி னேரே.

என்பது, கலிவெண்பாவால் அடிமுதன் முடியளவும் கூறுவது பாதாதி கேசமாகும். (கசஙி)

கேசாதி பாதம்

ககஂஎ. கலிவெண் பாவான் முடிமுதற் கால்வரை
கிளத்தல் கேசாதி பாத மாகும்.

என்பது, கலிவெண்பாவான் முடிமுதலடியளவும் கூறுவது கேசாதி பாதமாகும் (கசசூ)

அலங்கார பஞ்சகம்

ககஂஅ. வெண்பா வகவல் கலித்துறை யகவல்
விருத்தஞ் சந்த விருத்தமிவ் வகையே
மாறி மாறியந் தாதித் தோடையாய்ப்
பாடுவ தலங்கார பஞ்ச கமாகும்.

என்பது, வெண்பா, கலித்துறை, அகவல், ஆசிரிய விருத்தம், சந்தவிருத்தம் இவ்வகையே மாறி மாறி நூறு செய்யுள் அந்தாதித்துப் பாடுவது அலங்கார பஞ்சகமாகும். (கசஎ)

கைக்கிளை

ககஂகூ. ஐந்து விருத்தத் தாலே யொருதலைக்
காமத் தைக்கூ றுவது கைக்கிளை.

என்பது, ஒருதலைக் காமத்தை ஐந்து விருத்தத்தாற் கூறுவது கைக்கிளையாகும். (கசஅ)

இதுவுமது

ககஙஂ. அன்றியும் வெண்பா வாறைந் திரண்டு
பாடுவ ததன்பாற் படுமென மொழிப.

என்பது, ஈதல்லாமலும் முப்பத்திரண்டு வெண்பாவாற் பாடுவதுங் கைக்கிளையாகும். (கசசு)

மங்கல வள்ளை

ககக க. மேற்குலத்திற் பிறந்த மின்னுலை வெண்பா
ஒன்பதா லும்வகுப் பொன்பதி னாலும்
வழுத்துவது மங்கல வள்ளை யாகும்.

என்பது, உயர்குலத்திற் பிறந்த மடவரலை வெண்பா வொன்பதாலும் வகுப்பொன்பதாலும் பாடுவது மங்கலவள்ளை யாகும். (கஞ0)

தூது

ககக உ. ஆணும் பெண்ணு மவரவர் காதல்
பாணன் முதலிய வுயர்திணை யோடுங்
கிள்ளை முதலிய வஃறிணை யோடுஞ்
சொல்லித் தூது போய்வா வென்னக்
கலிவெண் பாவா லறைவது தூது.

என்பது, ஆண்பாலும் பெண்பாலும், அவரவர் காதலை, பாணன் முதலிய வுயர்திணையோடும், கிளிமுதலிய வஃறிணை யோடும் சொல்லித் தூது போய்வாவென்னக் கலிவெண்பாவாற் கூறுவது தூதாகும். (கஞக)

நாற்பது

ககக ங. இடம்பொருள் கால மிவற்றி லொன்றனை
வெண்பா நாற்பதால் விளம்ப னூற்பது.

என்பது, இடமும் பொருளும் காலமும் ஆகிய விவற்று ளொன்றனை நாற்பது வெண்பாவாற் கூறுவது நாற்பதாகும். (கஞஉ)

சூழமகன்

ககக ச. கலிவெண் பாவாற் காரிகை யார்கரங்
கண்ட விலோமைத் தன்மையை யுடைய
சூழமகன் றன்னைப் புகழ்ந்து கூறுவது
சூழமக னுமெனக் குறிக்கப் படுமே.

என்பது, கலிவெண்பாவால் பெண்கள் தங் கையிற் கண்ட இகீமைத் தன்மையையுடைய குழமகனைப் புகழ்ந்து கூறுவது குழமகலுகும். (கநிகூ)

தாண்டகம்

ககககடு. இருபத் தேழெழுத் தாதி யாக
உயர்ந்த வெழுத்தடி யினவா யெழுத்துங்
குருவு மிலகுவு மொத்து வந்தன
அளவியற் முண்டக மெனவு மக்கரம்
ஒவ்வாது மெழுத்தல கோவ்வாதும் வந்தன
அளவழித் தாண்டக மெனவும் பெயர்பெறும்.

என்பது, இருபத்தே ழெழுத்து முதலாக வுயர்ந்த வெழுத் தடியினவாய், எழுத்துங் குருவும் இலகுவு மொத்துவந்தன அளவியற்முண்டக மெனவும், எழுத்தொவ்வாதும் எழுத்தல கொவ்வாதும் வந்தன அளவழித் தாண்டகமெனவும் பெயர் பெறும். (கநிச)

பதிகம்

ககககசு. கோதிலோர் பொருளைக் குறித்தை யிரண்டு
பாவெடுத் துரைப்பது பதிக மாகும்.

என்பது, ஒருபொருளைக் குறித்துப் பத்துச் செய்யுளாகக் கூறுவது பதிகமாகும். (கநிஙி)

சதகம்

ககஙள. அகப்பொரு ளொன்றன்மே லாதல் புறப்பொருள்
ஒன்றன்மே லாதல் கற்பித் தொருநூறு
செய்யு ளுரைப்பது சதகமா மென்ப.

என்பது, அகப்பொரு ளொன்றன் மேலாதல், புறப்பொரு ளொன்றன்மேலா தல் கற்பித்து, நூறுசெய்யுட் கூறுவது சதக மாகும். (கநிசு)

செவியறிவுறூஉ

ககஙஎ. பொங்குத லின்றிப் புரையோர் நாப்பண்
நவிறல்கட னெனவவை யடக்கியற் பொருளை
மருட்பாவா லுரைப்பது செவியறி வுறூஉவே.

என்பது, பொங்குதலின்றிப் புரையோர் நாப்பணிற் கூறல் கடனென, அவையடக்கியற்பொருளும் மருட்பாவாற் பாடுவது செவியறிவுறூஉவாகும். (கநிஎ)

வாயுறை வாழ்த்து

ககஙக. கடுவும் வேம்புங் கடுப்பன வாகிய
வேஞ்சொற் றுங்க மேவா தாயினும்
பின்னர்ப் பெரிதும் பயன்றரு மென்ன
மெய்ப்பொரு ளுறமருட் பாவால் விளம்புதல்
வாயுறை வாழ்த்தென வைக்கப் படுமே.

என்பது, வேம்புங் கடுவும் போல்வனவாகிய வெஞ்சொற்கள், முன்னர்த் தாங்கக் கூடாவாயினும் பின்னர்ப் பெரிதும் பயன் றருமென, மெய்ப் பொருளுற மருட்பாவாற் கூறுவது வாயுறை வாழ்த்தாகும். (கநிஅ)

புறநிலை வாழ்த்து

ககஉ0. வழிபடு தெய்வ நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமோ டொருகாற் கொருகாற்
சிறந்து பொலிவா யெனமருட் பாவாற்
புகல்வது புறநிலை வாழ்த்தெனப் படுமே.

என்பது, வழிபடு தெய்வ நின்னைப் புறங்காப்பக் குற்ற மில்லாத செல்வத்தோடு ஒருகாலைக் கொருகால் சிறந்து பொலிவா யென்று மருட்பாவாலறைவது புறநிலை வாழ்த்தாகும். (கநிக)

பவனிக் காதல்

ககஉக. காமரு முலாவற் காட்சி யாலே
அடைந்த காம மிக்கால வற்றைப்
பிறரோடு மெடுத்துப் பேசி வருந்துதல்
பவனிக் காதலாம் பகருங் காலே.

என்பது, உலாக்காட்சியா லெய்திய காமமிக்கால், அவை பிறரொடு முரைத்து வருந்துவது பவனிக்காதலாகும். (கசஎ0)

ஊசல்

ககஉஉ. அகவல் விருத்தத் தானு குதல்கலித்
தாழிசை யானு னுகுதல் சுற்றத்
தோடும் பொலிக வாடூ ரூசல்
ஆடா மோவூச லூச லாகும்.

என்பது, ஆசிரிய விருத்தத்தானுதல், கலித்தாழிசை யானுதல், சுற்றத்தோடும் பொலிவதாக, ஆடூருசல் ஆடாமோ வூசல் என்றிறக் கூறுவது ஊசலாகும். (ககூக)

எழுகூற்றிருக்கை

ககஉங. கோதி லேழறை யாக்கிக் குறுமக்கண்
முன்னின்றும் புக்கும் போந்தும் விளையாடும்
பெற்றி யால்வழு வாமை யொன்று
முதலாக வேழீ றுய்முறை யானே
இயம்புவ தெழுகூற் றிருக்கை யாகும்.

என்பது, கோதிலேழறை யாக்கிக், குறுமக்கள் முன்னின்றும் புக்கும் போந்தும் விளையாடும் பெற்றியால் வழுவாமை, ஒன்று முதலேழிறுதியாக முறையானே பாடுவது எழுகூற்றிருக்கை யாகும். (ககூஉ)

கடிகை வெண்பா

ககஉச. அமர ரிடத்து மரச ரிடத்து
நடக்குங் காரிய நாழிகை யளவிற்
ரூன்றி யோழுகுவ தாகமுப் பாலே
டிரண்டு நேரிசை வெண்பா வியம்பல்
கடிகைவெண் பாவெனக் கருதினர் புலவர்.

என்பது, தேவரிடத்தும் அசரிடத்தும் நிகழுங்காரியம், கடிகையளவிற் ரூன்றி நடப்பதாக, முப்பத்திரண்டு நேரிசை வெண்பாவாற் கூறுவது கடிகை வெண்பாவாகும். (ககூங)

சின்னப்பூ

ககஉஞ. நேரிசை வெண்பா வாலே நிருபன்
சின்னமாந் தசாங்கத் தினைச்சிறப் பித்து

விரித்தைம் பதுதோண் ணூறெழு பதுமுப்
பதுநூ றெனுமெண் படவேடுத் துரைப்பது
சின்னப் பூவெனச் செப்பினர் புலவர்.

என்பது, நேரிசை வெண்பாவால், அரசனது சின்னமாகிய தசாங்கத்தைச் சிறப்பித்து, நூறு தொண்ணூறு எழுபது ஐம்பது முப்பது என்னும் தொகைபடக் கூறுவது சின்னப் பூவாகும். (ககூச)

விருத்தம்

ககஉசூ. வில்வா ளோடுவேல் செங்கோல் யானை
குதிரை நாடுர் குடையிவ் வொன்பதும்
ப்ப்பத் தகவல் விருத்தத் தாலே
ஒன்பது வகையுற வுரைப்பது விருத்த
விலக்கண மென்மனு ரியல்புணர்ந் தோரே.

என்பது, வில் வாள் வேல் செங்கோல் யானை குதிரை நாடு ஊர் குடை இவ்வொன்பதையும் பத்துப்பத்து அகவல்விருத்தத்தால் ஒன்பது வகையுறப் பாடுவது விருத்த விலக்கணமாகும். (ககூடு)

முதுகாஞ்சி

ககஉஎ. இளமைகழிந் தறிவு மிக்கோ ரிளமை
கழியாத வழிவின் மாக்க டமக்கு
மொழியப் படுவது முதுகாஞ்சி யாகும்.

என்பது, இளமைகழிந்து அறிவின்மிக்கோர், இளமை கழியாத அறிவின் மாக்கட்குக் கூறுவது முதுகாஞ்சியாகும். (ககூசூ)

இயன்மொழி வாழ்த்து

ககஉஅ. இக்குடி பிறந்தோர்க் கெல்லா மிக்குணம்
இயல்பென் றுரீயு மவற்றை யுடையை
என்று மின்னோர் போனீயு மியல்பாக
ஈயென்று மூயர்ந்தோ ரேடுத்துமற் றவனை

வாழ்த்துவ தாக வழுத்தலி யன்மொழி
வாழ்த்தா மென்ன வழுத்தினர் புலவர்.

என்பது, இக்குடியிற் பிறந்தோர்க்கெல்லாம் இக்குணமியல் பென்றும். அவற்றை நீயும் இயல்பாகவுடையை யென்றும், இன்னோர்போல நீயும் இயல்பாக ஈயென்றும், உயர்ந்தோரவனை வாழ்த்துவதாகக் கூறுவதும் இயன்மொழி வாழ்த்தாகும்.:(கசுஎ)

ஒழிபியல் முற்றும்.

வாப்பிலக்கணம் முற்றும்

ரு. அணியதிகாரம்

சொல்லணியியல்

தற்சிறப்புப் பாயிரம்

ககஉகூ. சுத்தமெய்ஞ் ஞானச் சுடர்மணி விளக்கைச்
சித்தம திருத்திச் செப்புவ லணியே.

என்பது, பரிசுத்தமாகிய மெய்ஞ்ஞான மணிவிளக்கை இதய மலரிலிருத்துதலைச் செய்து, யான் அணியிலக்கணத்தைக் கூறுவேன். ஏகார மீற்றசை. (க)

மறிநிலைப் பொருள்

ககஉ0. அக்கர மொழியடி யாவது மாறிப்
புணர்ப்பது மறிநிலைப் பொருளா கும்மே.

என்பது, எழுத்தாவது, சொல்லாவது, அடியாவது மாறிப் புணர்வது, மறிநிலைப் பொருளாகும்.

(வ - று.) ஞிமிறு மிஞிறு.

எழுத்து மாறியது.

சுரையாழ அம்மி மிதப்ப.

சொல் மாறியது.

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு.

அடி மாறியது. (உ)

அந்தாதி மடக்கு

ககஉக. அந்த முதலாத் தொடுப்பதந் தாதி
மடக்கா மென்மனூர் மறையுணர்ந் தோரே.

என்பது, இறுதி முதல்வரத் தொடுப்பது அந்தாதி மடக்காம்.

(வ - று.)

உலகுடன் விளக்கு மொளிதிக முவிர்மதி
மதிநல னழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாதனம்
ஆதனத் திருந்த திருந்தொளி யறிவனே
அறிவுசே ருள்ளமோ டருந்தவம் புரிந்து
துன்னி யமர்ந்த தென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே. (கூ)

அடுக்கு மடக்கு

ககஙூஉ. அக்கர மொழியடி யாவ தடுக்கி
வருவ தடுக்கு மடக்கா கும்மே.

என்பது, எழுத்தாவது, சொல்லாவது, அடியாவது அடுக்கி வருவது மடக்கணியாம்.

(வ - று.)

நா நா நா தங் கூடிசை நாடுந் தொழிலோவா
தா தா தார மாகவி ரைத்தண் மலர்மீதே
வா வா வார்தண் சோலையில் வாழும் வரிவண்டே.
யா யா யாளிற் சேர்த்துவ தன்பற் கிசையாயால்

எழுத்து மடக்கு.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

சொல் மடக்கு.

ஆடு நாகமு மத்திக ளும்வரை
ஆடு நாகமு மத்திகை யேபுனல்
ஓடு நாகமு முற்றிட லானதி
ஓடு நாகமு மேந்தியை யொத்ததே.

அடி மடக்கு. (ச)

மடக்கு

ககஙூங. எழுத்தடி மொழியிடை யிட்டு மிடரமலும்
மாறிமற் றேருபொருள் வந்து விளைவது
மடக்கா மெனப்பெயர் வைக்கப் படுமே.

என்பது, எழுத்துக்கள், அடிகளின் சொற்கள், இடை விட்டும், இடைவிடாமலும் மாறி, வேறே யொருபொருள் வந்து தோன்றுவது மடக்கணியாம். (இ)

மடக்கு வருதற்குரிய அடிகள்

க.க.கூ.ச. அதுதான்,

ஓரடி முதலா நான்கடி காறுஞ்
சேரு மென்மனோர் தெளிந்திசி னேரே.

என்பது, அம்மடக்கு, ஓரடிமுதலாக நான்கடியளவு நடக்கும்.

(வ - று.)

துறைவா துறைவார் பொழிற்றுணைவர் நீங்க
உறைவார்க்கு முண்டாங்கொல் சேவல்—சிறைவாங்கிப்
பேடைக் குருகாரப் புல்லும் பிறங்கிருள்வாய்
வாடைக் குருகா மனம்.

முதலடி மடக்கு.

கனிவா யிவள்புலம்பக் காலுநீ நீங்கில்
இனியா ரினியா ரெமக்குப்—பனிநாள்
இருவராத் தாங்கு முயிரன்றி யெங்குண்
டொருவராத் தாங்கு முயிர்.

இரண்டாம் அடிமடக்கு.

தேங்கானன் முத்தலைக்குந் தில்லைப் பெருந்தகைக்கு
ஓங்காரத் துட்பொருளா மொண்சுடர்க்கு—நீங்கா
மருளா மருளா தரித்துரைக்கு மாற்றம்
பொருளாம் புனைமா லியாம்.

மூன்றுமடி மடக்கு.

இவளளவுந் தீயுமிழ்வ தென்கொலோ தோயுங்
கவள மதமான் கடத்திற்—றிவளு
மலையார் புனலருவி நீயணுகா நாளின்
மலையா மலையா நிலம்.

நான்காமடி மடக்கு. (சு)

இரண்டடி மடக்கு

க.க.கூ.டு. அதன்வகை,

எழுவா யடியிரண் டிடையீ ரடிமுதல்

அடிமூன் றுமடி யாதி யடியோடு
நான்கா மடிகடை யீரடி யிரண்டடி
நாலடி யினும்வரு நாடுங் காலே.

என்பது, முதலடிக் கண்ணும் இரண்டாமடிக் கண்ணும், நடுவிலிரண்டடிக் கண்ணும், முதலடிக் கண்ணும் மூன்றுமடிக் கண்ணும், முதலடிக் கண்ணும் நான்காமடிக் கண்ணும், இறுதி யிரண்டடிக் கண்ணும், இரண்டாமடிக் கண்ணும் நான்காமடிக் கண்ணும் வரும்.

(வ - று.)

நினையா நினையா நிறைபோ யகலா
வினையா வினையா மிலமா—லனையாள்
குரவாருங் கூந்தற் குமுதவாய்க் கொம்பிற்
புரவாள நீபிரிந்த போது.

முதலடி இரண்டாமடி மடக்கு.

குரவார் குழலாள் குவிமென் முலைதாம்
விரவா விரவாமென் றென்ற—லுரவா
வரவா வரவா மெனநினையா வையம்
புரவாளர்க் கீதோ புகழ்.

நடுவிரண்டடி மடக்கு.

அடையா ரடையா ரரணழித்தற் கின்னல்
இடையாடு நெஞ்சமே யேழை—யுடையோர்
மயிலா மயிலா மதர் நெடுங்கண் மாற்றங்
குயிலாமென் றெண்ணல் குழைந்து.

முதலடி மூன்றுமடி மடக்கு.

மானவா மானவா நோக்கின் மதுகரஞ்சூழ்
கானவாங் கூந்தலெங் காரிகைக்குத்—தேனே
பொழியாரந் தார்மேலு நின்புயத்து மேலுங்
கழியா கழியா தரவு.

முதலடி நான்காமடி மடக்கு.

மாதருயிர் தாங்க வள்ளல்வரு நெறியிற்
பேதுறவு செய்யும் பெரும்பாந்தள்—யாதும்
வரையா வரையா மெனுமா மதமா
விரையா விரையா வெழும்.

இறுதி யிரண்டடி மடக்கு.

மழையார் கொடைத்தடக்கை வாளபய னெங்கோன்
வீழையார் வீழையார்மெல் லாடை—குழையார்
தழையா முணவுங் கனியா மினமு
முழையா முழையா முறை. (எ)

இரண்டாமடி நான்காமடி மடக்கு.

மூன்றடி மடக்கின் வகை

ககஙசஞ. எழுவா யடியோழித் தேனைய வடியினுங்
கடையோழித் தேனைய காலினு மிரண்டாம்
அடிதவிர்த் தேனைய வடியினு மூன்றும்
அடியோழித் தேனைய வடியினும் வருமே.

என்பது, முதலடி தவிர மற்றைய மூன்றடிக் **கண்ணும்,** சற்றடி தவிர மற்றைய மூன்றடிக் கண்ணும், இரண்டாமடி **தவிர** மற்றைய மூன்றடிக் கண்ணும், மூன்றுமடி தவிர மற்றைய மூன்றடிக் கண்ணும் வரும்.

(வ - று.)

பாலையாழ் தன்னிற் பதிற்றிரட்டி வெய்தன்றே
மாலைவாய் மாலைவா யின்னிசை—மேலுரை
மேவலர் மேவலர் மெல்லாவி வாட்டாதோ
காவலர் காவலராங் கால்.

முதலடி தவிர வேனைய மூன்றடி மடக்கு.

இறைவா விறைவால் வகோகாத் திருந்தியா
ருறைவா ருறைவார் புயலா—னறைவாய
வண்டளவு வண்டளவு நாளின் மயிலாலக்
கண்டளவி னீர்பொழியுங் கண்.

சற்றடி தவிர வேனைய மூன்றடி மடக்கு.

கொடியார் கொடியார் மதின்மூன்றுங் கொன்ற
படியார் பணைத்தடக்கை நால்வாய்க்—கடியா
குரியா குரியா ரெமையாள வோதற்
கரியார் கரியார் களம்.

இரண்டாமடி தவிர வேனைய மூன்றடி மடக்கு.

மலையு மலையு மகிழ்ந்துறையும் வேயுங்
கலையுங் கலையுங் கடவுந், தொலைவி

லமரி யெமக்கரணு மென்னுமவர் முன்னிற்
குமரி குமரிமேற் கொண்டு.

மூன்றுமடி தவிர வேணைய மூன்றடி மடக்கு. (அ)

மடக்கின் சிறப்பு

ககஙூஎ. அடிதோறு மடங்குவ தாங்கதன் சிறப்பே.

என்பது, நாலடிக்கண்ணு மடங்கி வருவது, அம்மடக்கினது சிறப்பாகும்.

(வ - று.)

வரைய வரைய சுரஞ்சென்றூர் மாற்றம்
புரைய புரையவெனப் பொன்னே—யுரைய
னணைய நணைய தொடைநம்மை வேய்வர்
விணையர் விணையர் விரைந்து.

நாலடிக் கண்ணும் மடக்கு வந்தமை காண்க. (கு)

ஓரடி மடக்கின் வகை

ககஙூஅ. ஓரடிக் கண்ணெழு கியமடக் கேழாம்
அவையடி யாதியு மந்தமு மிடையினும்
அடிமுத லிடையினுங் கடையினு முதலினும்
இடையினுங் கடையினு முதலிடை கடையினு
மடங்கு மென்மனூர் மறையுணர்ந் தோரே.

என்பது, ஓரடிக்கண் நடக்கு மடக்கு, ஏழுவகைப்படும். அவை, அடிமுதலினும், அடி நடுவினும், அடி யிறுதியினும், முதல் இடையினும், முதல் கடையினும், இடை கடையினும், முதல் இடை கடையினும் மடங்கி வரும்.

(வ - று.)

இனையா ரினையா ருடனுய் முலையின்
வனையா வனையா மனவேண் டுவமை
விணையா விணையாட் டயருந் தொழிருன்
தனையா தனையார் பொழிலின் றடமே.

அடிமுதல் மடக்கு.

அளியாடு மரவங்கல் மரவங்கண் மகிழ்ந்தாணு
விணையாடு மாலந்த மாலந்தந் தாம்பிரிதும்
வணையார்த மகிழ்மான மகிழ்மான மலர்சோர
விணையாரை வெயினன்னை வெயினன்னை யிடமேவா.

அடிநடு மடக்கு.

வரைவாய் நிவர்ந்த வடுமா வடுமா
விரைவாய் நிவர்ந்து விரியா விரியா
புரைவா யசும்பு புலரா புலரா
விரைவா யிருபா யிடமே யிடமே.

அடியிறுதி மடக்கு.

கொண்டல் கொண்டலர் பொழிவிருறும்
பண்ணேயாயப் பண்ணேயாயத் துள்ளார்
• வண்டல் வண்டலர் தாதுகொண் டியற்றலின்
வருமண மணன் முன்றிற்
கண்டல் கண்டக மகிழ்செய வோதிமங்
கலந்துறை துறைவெள்ள
மண்டன் மண்டல முழுதுடன் வளைதரு
வளைதரு மணிவேலை.

முதல் இடை மடக்கு.

நிரையா நிரையா மணிபோனிறை கோடல் கோடல்
வரையா வரையா மிருண்முன்வரு மாலை மாலை
விரையா விரையா வெழுமின்னெளி மேகமேக
முரையா முரையா ரினுமொல்லன முல்லை முல்லை.

முதல் கடை மடக்கு.

வருகம் புனிலம் புனிலம்பயில் வேலைவேலை
யொருகா லுலவா வுலவாவரு மோத மோத
வருகே தகைகே தகைசேர்தரு மன்ன மன்ன
பெருகா தனவே தனவேரசை மாதர் மாதர்.

இடைகடை மடக்கு.

கனைகனைய முளரியரு கடை கடைய மகளிர்
கதிர்மணியு மணியும்
வனைவனைய கரதலமு மடைமடை யமது
மலரு மலைய மலைய,
விளையிளைஞர் கிளைவிரவி யரியரியின்
மிசைகுவளை மலரு மலரும்,
நினைகினை கொளிசை யளிகண் மகிழ் மகிழ்செய்
கெழுதகைய மருத மருதம்.

முதல் இடை கடை மடக்கு. (கo)

இதுவுமது

சகசுக.. முதலடி யிரண்டினு மூன்றினு முதலினும்
இடையடி யிரண்டினு முதலினு மிறுதியும்
இறுதி யிரண்டினு முதலொழித் தேனைய
அடியினுங் கடையய லல்லன மூன்றினு
மூன்று மடியொழித் தேனைய மூன்றினும்
இரண்டா மடியொழித் தேனைய வடியினும்
எல்லா வடியினு மெய்து மென்ப.

என்பது, முதலடி யிரண்டினும், மூன்றுமடியினும் முதலடியினும், கடுவிரண்டடியினும், முதலடியினும், கடையினும் கடையடியிரண்டினும், முதலடி தவிர மற்ற மூன்றடியினும், ஈற்றயலல்லனவாகிய மூன்றடியினும், மூன்றுமடி தவிர மற்றைய மூன்றடியினும், இரண்டாமடி தவிர மற்றைய மூன்றடியினும், அடிகளெல்லாவற்றினும் வரும்.

(வ - று.)

வீரைமேவு மதமாய விடர்கூடு கடுநாக
விரைமேவு மதமாய விடர்கூடு கடுநாக
வரைமேவு நெறியூடு தனிவாரன் மலைநாட
நிரைமேவு வளைசோர விவளாவி நிலைசோரும்.

முதலிரண்டடி மடக்கு.

கடன்மேவு கழிகாதன் மிகநாளு மகிழ்வார்க
ளுடன்மேவு நிறைசோர மெலிவாட னுயிர்நோவ
கடன்மேவு கழிகாதன் மிகநாளு மகிழ்வார்க
ளுடன்மேவு பெடைகூடு மறுகாலு முரையாகொல்.

முதலடி மூன்றுமடி மடக்கு.

கருமாலை தொறுகாதல் கழியாது தொழுதாலும்
உருமாய மதனுக மடுமாறு புரிவார்முன்
உருமாய மதனுக மடுமாறு புரிவார்முன்
வருமாய வினைதீர வொருநாளு மருளார்கொல்.

இடையடி இரண்டு மடக்கு.

மறைதுவல் கங்கை தாங்கினர்
நிறைதவ மங்கை தாங்கினர்

குறையென வண்டர் வேண்டவே
மறைநுவல் கங்கை தாங்கினர்.

முதலடி கடையடி மடக்கு.

கொல்லியம் பொருப்பனை மேவார் கோநகர்
இல்லெரி மேவுவ தியம்ப வேண்டுமோ
வல்லியந் தாமரை வனங்க ளாயின
வல்லியந் தாமரை வனங்க ளாயின.

இறுதி இரண்டடி மடக்கு.

வரிய வாங்குழன் மாதரி னங்கொடி
அரிய வாங்கய தானவ னங்களே
அரிய வாங்கய தானவ னங்களே
அரிய வாங்கய தானவ னங்களே.

முதலடி தவிர மற்றைய மூன்றடி மடக்கு.

காமரம் பயினீர மதுகரங்
காமரம் பயினீர மதுகரங்
காமரம் பயினீர மதுகரம்
நாம ரந்தையுறனினை யார்நமர்.

கடையடி தவிர மற்றைய மூன்றடி மடக்கு.

வெண்ணி லாவிரி சோதி விளங்கிழை
வெண்ணி லாவிரி சோதி விளங்கிழை
உண்ணிலாவுயி ருய்குவ தெங்ஙனம்
வெண்ணி லாவிரி சோதி விளங்கிழை.

மூன்றுமடி தவிர மற்றைய மூன்றடி மடக்கு.

புன்னை யம்பொழில் சூழ்தரு கானலே
மன்னர் வந்துநம் வான்றுயர் தீர்க்கலர்
புன்னை யம்பொழில் சூழ்தரு கானலே
புன்னை யம்பொழில் சூழ்தரு கானலே:

இரண்டாமடி தவிர மற்றைய மூன்றடி மடக்கு.

கழுநீர் கண்ணுறும்
கழுநீர் கண்ணுறும்
கழுநீர் கண்ணுறும்
கழுநீர் கண்ணுறும். (ககு)

நான்கடி மடக்கு.

எழுத்து மடக்கு

ககசo. ஓரெழுத் தோடுமுயி ரினுமுட லினுமூ
வினத்தினும் வருமென விசைக்கப் படுமே.

என்பது, ஓரெழுத்தினும், உயிரினும், மெய்யினும், வல்லினம், மெல்லினம், இடையினமாகிய மூவினத்தினும் வரும், அவை, ஓரெழுத்துமடக்கு, உயிர்மடக்கு, மெய்ம்மடக்கு, வல்லினமடக்கு, மெல்லினமடக்கு, இடையினமடக்கு எனப் பெயர் பெறும்.

(வ - று.)

நாநா நாதங் கூடிசை நாடுந் தொழிலோவா
தாதா தார மாகவி ரைத்தண் மலர்மீதே
வாவா வார்தண் சோலையில் வாழும் வரிவண்டே
யாயா யாளிற் சேர்த்துவ தன்பற் கிசையாயால்.

ஓரெழுத்து மடக்கு.

தாயாயா ளாராயா டாமாரு தாராயா
யாமாரா வாளுடா மாதாமா—தாவாவா
யாவாகா லாருகா வாகாகா ணாமா
மாலாரு மாநாதா வா.

உயிரெழுத்து மடக்கு.

தத்தித்தா தூதுதி தாதூதித் தத்துதி,
துத்தித் துதைதி துகைத்ததா—தூதுதி,
தித்தித்த தித்தித்த தாதெது தித்தித்த
தெத்தாதோ தித்தித்த தாது.

மெய்யெழுத்து மடக்கு.

துடித்துத் தடித்துத் துடிப்பெடுத்த கோட
றெடுத்த தொடைகடுக்கை பொற்போற்—பொடித்துத்
தொடிபடைத்த தோடுடித்த தோகைகூத் தாடக்
கடிபடைத்துக் காட்டிற்றுக் காடு.

வல்லெழுத்து மடக்கு.

மானமே நண்ணு மனமென் மனமென்னு
மானமான் மன்னு நனிநா ணுமீனமா
மாணுமீ னன்மின்னி முன்முன்னே நண்ணினு
மாணு மணிமேனி மான்.

மெல்லெழுத்து மடக்கு.

யாழியல் வாய வியலள வாயலொலி
ஏழிய லொல்லாவா லேழையுரை—வாழி
உழையே லியலா வயில்விழி யையோ
இழையே லொளியா லிருள்.

இடையெழுத்து மடக்கு. —(கஉ)

சித்திரகவி

காதைகரப்பு

ககசக. யாப்பிறு மொழிமுத லக்கரந் தொடங்கி
ஒவ்வோ ரெழுத்திடை யோழித்து வாசிக்க
வேறொரு செய்யுள் விளைப்பது காதை
கரப்பா மென்மனர் கற்றுணர்ந் தோரே.

என்பது, செய்யுளிறுதி மொழிக்கு முதலாகிய வெழுத்துத் தொடங்கி, ஒரெழுத்தை நடுவினீக்கி வாசிக்க, வேறொரு பாவுண்டாகுவது காதை கரப்பணியாம்.

(வ - று.)

தாயேயா நோவவா வீரு வெமதுநீ
பின்னே வெருவா வருவதொ ரத்தப
வெம்புகல் வேறிருத்தி வைத்திசி னிச்சைகவர்
தாவா வருங்கலநீ யே.

காதை கரப்பணி.

இதனுள்,
கருவார்கச்சித்,
திருவேகம்பத்,
தொருவாவென்னீ,
மருவாநோயே. (கங)

கரந்துறைச் செய்யுள்

ககசஉ. ஓர்பா வினிலிருந் தோர்பாக் குரியன
அக்கரம் போறுக்கிக் கோளலா கும்படி
பாடல் கரந்துறைப் பாட்டென மொழிப.

என்பது, ஒரு செய்யுளினின்று வேறொரு செய்யுட்குரிய வெழுத்துக்கள் பொறுக்கிக் கொளலாகும்படிக்குப் பாடுவது கரந்துறைச் செய்யுளாம்.

(வ - று.)

அகலல்குற் றேரே யதர மமுதம்
பகர்தற் கரிதிடையும் பார்க்கின்—முகமதிய
முத்தென்ன லாமுறுவன் மாதர் முழுநீல
மைத்தடங்கண் வெவ்வேறு வாள்.

கரந்துறைச் செய்யுளணி.

இதனுள்,

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. (கசை)

விஞவுத்தரம்

ககசஞ. விஞவோடு விடையும் விரிந்து வருவது
விஞவுத் தரமென விளம்பப் படுமே.

என்பது, விஞவும் விடையும் விரிந்து வருவது விஞவுத்தர வணியாம்.

(வ - று.)

வந்ததென் குரங்கொன் றில்லை யடைத்ததென் கடல்வாய் மந்தி
சிந்தையின் களிப்பா லென்னைத் தெரியுமோ தெரியா தென்றன்
இந்திரன் னகரி லங்கை யிறைவனே தெரியு மென்றன்
விந்தைசேர் திருப்பு யத்து வீடண னென்னும் வேந்தே. (கஞ)

எழுத்து வருத்தனவணி

ககசஎ. பதங்களி னக்கரங் கூப்பகுத் தோன்றற்
குரியவக் கரங்களை மற்றொரு பதத்தோடு
புணர்த்திரு தனப்பொருள் புதுக்குவ தெழுத்து
வருத்தன மாமென வழுத்தப் படுமே.

என்பது, சொற்களி னெழுத்துக்களைப் பிரித்து மற்றொரு சொற்குரிய வெழுத்துக்களை வேறு சொற்களோடு சேர்த்து நூதனமான அருத்தங்களை யுண்டுபண்ணுவது எழுத்து வருத்தன வணியாம்.

(வ - று.)

ஏந்திய சங்கமு முன்னு ளெடுத்ததுவும்
பூந்துகிலு மாலுந்தி பூத்ததுவும்—வாய்ந்த

உலிவி லெழுத்தடைவே யோரொன்று யேற்றத்
தலிமலிபொன் முமரை யென்றும்.

இதனுள்-கம்-நகம்-கஙகம்-கோகஙகம். (கசு)

எழுத்தழிவணி

ககசடு. ஒருபொருள் பயப்ப தோருமொழி யிருந்ததில்
ஒவ்வோ ரக்கர மொழிக்கவெவ் வேறு
சொல்லும் பொருளுந் தோன்றுவ தெழுத்தழி
வாகு மென்மனு ரறிந்திசி னோரே.

என்பது, ஒரு பொருளைத் தருவது ஒரு சொல்லிலிருந்து, அதிலே யொவ்வொரு எழுத்துக் குறைக்க, வேறு வேறு சொல்லும் பொருளும் தோன்றுவது எழுத்தழி வணியாகும்.

(வ - று.)

பொற்றூணில் வந்தசுடர் பொய்கையில் வந்தவண்ணல்
சிற்றுயன் முன்வனிதை யாகி யளித்த செம்மல்
மற்றியார் கொல் லென்னில் மலர்தூவி வணங்குநாளும்
கற்றோர்பரவு கஙகாரிநகாரி காரி. (கள)

மாலை மாற்றணி

ககசசு. இறுதி முதலாக வெடுத்துவா சிப்பினும்
அதுவே யாவது மாலைமாற் றாகும்.

என்பது, கடைமுதலாக வெடுத்து வாசித்தாலும் அச் செய்யுளேயாவது மாலைமாற்றணி.

(வ - று.)

நீவாதமாதவா
தாமோகராகமோ
தாவாத மாதவாநீ. (கஅ)

நிரோட்டக வணி

ககசள. இதழ்குவி யாவெழுத் தெடுத்துப் பாடுவ
தநிரோட் டகமென் றறையப் படுமே.

என்பது, இதழ்குவியாத எழுத்துக்களாலெடுத்துப் பாடுவது நிரோட்டக வணியாம்.

(வ - று.)

சிலத்தான் ஞானத்தாற் றேற்றத்தாற் சென்றகன்ற
காலத்தா லாராத காதலான்—ஞாலத்தார்
இச்சிக்கச் சாலச் சிறந்தடியேற் கேயினிதாங்
கச்சிக்கச் சாலிக் கனி. (ககூ)

மாத்திரைச் சுருக்கவணி

ககசஅ. **ஒருபொரு டருஞ்சொலோர் மாத்திரை குறைய
மற்றொரு பொருடரன் மாத்திரைச் சுருக்கம்.**

என்பது, ஒருபொருளைத் தருஞ்சொல், ஒருமாத்திரை குறைய, வேறொரு பொருளைத் தருவது மாத்திரைச் சுருக்க வணியாம்.

(வ - று.)

நேரிழையார் கூந்தலிலோர் புள்ளிபெற நீண்மரமாம்
நீர்நிலையோர் புள்ளி பெறநெருப்பாஞ்—சீரிய
காட்டொன் றெழிப்பவிசை யாகு மதனுள்ளு
மீட்டொன் றெழிப்ப மிடறு.

இதனுள், ஒதி, *ஓதி (ஒதி) ஏரி, *ஏரி (எரி) காந்தாரம், கந்தாரம், கந்தரம். (உ0)

மாத்திரை வருத்தனம்

ககசகூ. **மாத்திரைச் சுருக்க மறுதலைப் படவொரு
மாத்திரை யேற்றிடின் மாத்திரை வருத்தனம்.**

என்பது, மாத்திரைச் சுருக்க மாறுபடவொரு மாத்திரை யேற்றினுல் மாத்திரை வருத்தனம்.

(வ - று.)

நீண்மரத்தி லொன்றேற நேரிழையார் கூந்தலாம்
பூநெருப்பி லொன்றேறப் பூங்குளமாம்—பேணுங்
கழுத்திலொன் றேறவிசை காணுமிசை யெல்லாம்
எழுத்திலொன் றேறவெழு நாடு.

இதனுள் ஒதி-ஓதி-எரி-ஏரி-கந்தரம்-கந்தாரம். (உக)

---

*மூற்காலத்தில் எகர ஒகரங்கள் இப்போதைய வடிவிலில்லாமல் ஏ, ஓ—என இவ்வாறு அமைந்திருந்தன.

திரிபங்கியணி

ககரூ0. ஒருகவிக் குட்கவி மூன்ரெழு குவது
திரிபங்கி யென்மனூர் தெளிந்திசி னேரே.

என்பது, ஒரு செய்யுளில் மூன்று செய்யுள் வருவது திரிபங்கியணி.

(வ - று.)

ஆதரந் தீரன்னே போலினியா யம்பி காபதியே
மாதுபங் காவன்னி சேர்சடை யாய்வம்பு ணீண்முடியரய்
ஏதமுய்ந் தாரின்னல் சூழ்வினை தீரெம்பி ரானினியார்
ஓதுமொன் றேயுன்னு வாரமு தேயும்பர் நாயகனே.

ஆதரந்தீர்
மாதுபங்கா
ஏதமுய்ந்தார்
ஓதுமொன்றே. (க)

அன்னேபோலினியாய்
வன்னிசேர் சடையாய்
இன்னல்சூழ் வினைதீர்
உன்னுவா ரமுதே. (உ)

அம்பிகாபதியே
வம்புணீண்முடியாய்
எம்பிரானினியா
ரும்பர்நாயகனே. (ங) (உஉ)

திரிபாகியணி

ககரூக. மூன்றெழுத் தொருபெயர் முதலிடை முரிபகின்
மூப்பெய ரொதிர்மூலப் பதுதிரி பாகி.

என்பது, மூன்றெழுத்தானகிய ஒருசொல்லை முதலிலழுத்தை நீக்க, ஒரு சொல்லும், நடுவெழுத்தை நீக்க மற்ரொரு சொல்லுமாக மூன்று சொற்ரொன்றுவது திரிபாகியணி.

(வ - று.)

மூன்றெழுத்து மெங்கோ முதலீ ரொருவள்ளல்
ஏன்றுலகங் காப்ப நிடைகடை—யான்றுரைப்பிற்
பூமாரி பெய்துலகம் போற்றிப் புகழ்ந்தேத்துங்
காமாரி காரிமா ரி. (உங)

ஒற்றுப் பெயர்த்தலணி

ககநிஉ. ஒருமொழி தொடர்மொழி யாகவொண் பொருள்படும்
அவற்றை யப்பொரு டவிர மறுபொருள்
பெறச்சோல லொற்றுப் பெயர்த்த லாகும்.

என்பது, ஒருமொழி யாகவும், தொடர்மொழி யாகவும் பொருள்படு மவற்றை, அப்பொருடவிர வேறுபொருள்படக் கூறுவது ஒற்றுப் பெயர்த்தலணி.

(வ - று.)

வண்புயலைக் கீழ்ப்படுத்து வானத் தருமலைந்து
மண்குளிரச் சாயல் வளர்க்குமாந்—தண்கவிகைக்
கொங்கா ரலங்க லனபாயன் கொய்பொழில்சூழ்
கங்கா புரமா ளிகை.

இதனுள், கங்காபுரமாளிகை - நிழலைப் பெருக்கும், கங்காபுர மாளும் - அனபாயன்கை - காவல் புரியும். (உசு)

பிறிதுபடு பாட்டு

ககநிந. பாவடி தோடைகளும் படுப்ப வேறு
மேவருஞ் சொற்பொருள் வேறுப டாமன்
மற்றேரு பாவாய் வருவது பிறிது
படுபாட் டெனப்பெயர் பகரப் படுமே.

என்பது, ஒருபாவினடிகளும், தொடைகளும் வேறுபடுப்பச், சொல்லும், பொருளும் வேறுபடாது, வேறொருரு செய்யுளாய் வருவது பிறிதுபடு பாட்டணி.

(வ - று.)

தெரிவருங் காதலிற் சேர்ந்தோர் விழையும் பரிசுகொண்டு
வரியளி பாட மருவரு வல்லி யிடையுடைத்தாய்த்
திரிதருங் காமர் மயிலிய லாயநண் ணுத்தேமொழி
அரிவைதன் னேரேன லாகுமெம் மையயா மாடிடமே.

தெரிவருங் காதலிற் சேர்ந்தோர் விழையும்
பரிசு கொண்டு வரியளி பாட
மருவரு வல்லி யிடையுடைத் தாய்த்திரி
தருங்காமர் மயிலிய லாய நண்ணுத்
தேமொழி யரிவைதன் னேரென
லாகுமெம் மைய யாமா டிடமே. (உடு)

சொல்லணி முற்றும்.

உ. பொருளணி இயல்

தன்மையணி

ககஙுச. எவ்வகைப் பொருளு மெடுத்தத னியல்பை
அறைவது தன்மையா மாயுங் காலே.

என்பது, எவ்வகைப்பட்ட பொருளையுந் தெரிந்து அதனுடைய தன்மையைக் கூறல் தன்மையணியாம். (க)

அதன்வகை

ககஙுடு. குணம்பொரு டொழில்குலத் தோடுபுலப் படுமே.

என்பது, முற்கூறிய தன்மையணி, பண்பும், பொருளும், வினையும், சாதியுமாகிய நான்கனோடும் புலப்படும்.

(வ - று.)

பண்புத்தன்மை :

எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில். (குறள்-கஉ0உ)

பொருட்டன்மை :

கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யும்
அருவினையு மாண்ட தமைச்சு. (குறள்-சுஙுக)

தொழிற்றன்மை :

சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு. (குறள்-ஙுக)

சாதித்தன்மை :

பத்தித் தகட்ட கறைமிடற்ற பைவிரியுந்
துத்திக் கவைநாத் துளையெயிற்ற-மெய்த்தவத்தோர்
ஆகத்தா னம்பலத்தா னரா வமுதணங்கின்
பாகத்தான் சாத்தும் பணி. (தண்டி-மேற்கோள்) (உ)

உவமையணி

ககஙுசு. பண்புந் தொழிலும் பயனுமென் றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளோடு பொருள்புணர்ந்
தோப்புமை தோன்றச் செப்பினஃ துவமை.

என்பது, குணமும், வினையும், பயனும் ஆகிய இவற்றில் ஒன்றேனும் பலவேனும் பொருளொடு பொருள் புணர்ந்துவமை தோன்றக் கூறுவது உவமையணி.

(வ - று.)

பண்பு:

'பவளத்தன்ன மேனி'. (குறுந்-க)

வினை:

அரிமாவன்ன வணங்குடைத் துப்பு. (பட்டின-உகஅ)

பயன்: (கூ)

மாரியன்ன வண்கை. (புறம்-கஉஉ)

விரியுவமை

கஉடுஎ. விழுமிய குணமுதல் விரிந்து வருவது
விரியா மென்மனோர் மெய்யுணர்ந் தோரே.

என்பது, குணமும், வினையும், பயனும், விரிந்து வருவது விரியுவமை.

(வ - று.)

பால்போலு மின்சொற் பவளம்போற் செந்துவர்வாய்ச்
சேல்போற் பிறழுந் திருநெடுங்கண் — மேலாம்
புயல்போற் கொடைக்கைப் புனலுடன் கொல்லி
அயல்போலும் வாழ்வ தவர். (தண்டி-மேற்) (ச)

தொகையுவமை

கஉடுஅ. அக்குண முதலிய வடங்கி வருவது
தோகையா மெனப்பெயர் சூட்டப் படுமே.

என்பது, முற்கூறிய பண்பு முதலிய மூன்றும் தொக்கு வருவது தொகையுவமை.

(வ - று.)

அன்னங் கண்படு தண்பணை நிடதநா டளிக்கு
மன்னர் மன்னவன் மண்டமர் கடந்தவொள் வேலின்

DIRECTOR OF ARCHAEOLOGY
21 JAN 1975

மின்னி யாங்கவன் முரசென விண்ணிடை யதிர்ந்து
பொன்னங் குன்றின்மே லவன்கொடை போன்மெனப்
பொழிந்த. (ஞ)

இதரேதரவுவமை

ககருகூ. ஒருகாற் பொருளுவம மாகியு முவமை
ஒருகாற் பொருளா கியுமொரு தோடர்ச்சி
இடையே போதுவ திதரே தரமே.

என்பது, ஒரு தொடர்ச்சிக்கண், பொருள், ஒருகால் உவமை யாகியும், உவமை ஒருகால், பொருளாகியும் வருவது, இதரேதர வுவமை.

(வ - று.)

களிக்குங் கயல்போலு நின்கணின் கண்போற்
களிக்குங் கயலுங் கனிவாய்த்—தளிர்க்கொடியே
தாமரை போன்மலரு நின்முக நின்முகம்போல்
தாமரையுஞ் செவ்வி தரும். (தண்டி - மேற்) (சு)

உண்மை யுவமை

ககசுo. உவமையைக் கூறி மறுத்துப் பொருளை
உரைத்து முடிப்பஃ துண்மையா மெனலே.

என்பது, உவமைப் பொருளைச் சொல்லிப் பொருளை மறுத்துக் கூறல், உண்மையுவமை.

(வ - று.)

தாமரை யன்று முகமேயீ தீங்கிவையுங்
காமருவண் டல்ல கருநெடுங்கண்—தேமருவு
வல்லியி னல்ல ளிவளென் மனங்கவரும்
அல்லி மலர்க்கோதை யாள். (தண்டி - மேற்) (எ)

மறு பொருளுவமை

ககசுக. புகன்றுமுன் வைத்த பொருட்கு நிகர்வதோர்
பொருள்பினும் வைப்பது மறுபொரு ளாகும்.

என்பது, முற்கூறி வைத்த பொருளுக்கு ஒப்பாகிய வேறொரு பொருளைக் கூறிப் பின்னும் வைப்பது மறுபொருளுவமை.

(வ - று.)

அன்னேபோ லெவ்வுயிருந் தாங்கு மனபாயா
கின்னேயா ரொப்பர் நிலவேந்தர்—அன்னதே
வாரி புடைசூழ்ந்த வையகத்திற் கில்லையாற்
சூரியனே போலுஞ் சுடர். (தண்டி - மேற்) (அ)

புகழுவமை

ககசூஉ. உவமையைப் புகழ்ந்துவ மிப்பது புகழே.

என்பது, உவமைப் பொருளைப் புகழ்ந்துகூறி உவமேயப் பொருளை வியப்பது புகழுவமை.

(வ - று.)

இறையோன் சடைமுடிமே லெந்நாளுந் தங்கும்
பிறையேர் திருநுதலும் பெற்ற—தறைகடல்சூழ்
பூவலயந் தாங்கு மரவின் படம்புரையும்
பாவைகின் னல்குற் பரப்பு. (தண்டி - மேற்) (கூ)

நிந்தையுவமை

ககசூஊ. உவமையைப் பழித்துவ மிப்பது நிந்தை.

என்பது, உவமைப்பொருளை நிந்தித்து உவமேயப்பொருளை வியப்பது நிந்தையுவமை.

(வ - று.)

மறுப்பயின்ற வாண்மதியு மம்மதிக்குத் தோற்கு
நிறத்தலரு நேரொக்கு மேனுஞ்—சிறப்புடைத்துத்
தில்லைப் பெருமா னருள்போற் றிருமேனி
முல்லைப்பூங் கோதை முகம். (தண்டி - மேற்) (கo)

நியமவுவமை

ககசூசு. இதற்கிஃ தேயுவம மென்பது நியமம்.

என்பது, இந்தப் பொருளுக்கு இப்பொருளேயுவமை யென்று கூறல் நியமவுவமை.

(வ - று.)

தாதொன்று தாமரையே நின்முக மொப்பதுமற்
றியாதொன்று மொவ்வா திளங்கொடியே—மீதுயர்த்த

சேலே பணியப் புலியுயர்த்த செம்பியர்கோன்
வேலே விழிக்கு நிகர். (தண்டி - மேற்) (கக)

அநியமவுவமை

ககசுடு. நியமித்த வுவமையை நீக்கிப் பிறிதோரு
பொருளோடு புணருவ தநியம மாகும்.

என்பது, நியமித்தவுவமையை விலக்கி வேறொரு பொருளொடு புணர்வது அநியமவுவமை.

(வ - று.)

கௌவை விரிதிரைநீர்க் காவிரிசூழ் நன்னாட்டின்
மௌவல் கமழுங் குழன்மடவாய்—செவ்வி
மதுவார் கவிரேநின் வாய்போல்வ தன்றி
அதுபோல்வ துண்டெனினு மாம். (தண்டி - மேற்) (கஉ)

ஐயவுவமை

ககசுசு. ஐயுற் றிருமையு மறைகுவ தைய
உவமை யென்மனு ருணர்ந்திசி னோரே.

என்பது, உவமானப் பொருளையும் உவமேயப் பொருளையும் ஐயமுற்றுக் கூறுவது ஐயவுவமை.

(வ - று.)

தாதளவி வண்டு தடுமாறுந் தாமரைகொல்
மாதர் விழியுலவு வாண்முகங்கொல்—யாதென்
றிருபாற் கவர்வுற் றிடையூச லாடி
ஒருபாற் படாதென் னுளம். (தண்டி - மேற்) (கஙு)

தேற்றவுவமை

ககசுஎ. ஐயுற் றதனை யழிந்து துணிவது
தேற்ற மென்மனுர் தெளிந்திசி னோரே.

என்பது, ஐயுற்றபொருளைத் தெளிந்து துணிவது தேற்றவுவமை.

(வ - று.)

தாமரை நாண்மலருந் தண்மதியால் வீறழியுங்
காமர் மதியுங் கறைவிரைவும்—ஆமதனற்

பொன்னே மயக்கும் பொறிசுணங்கி னுர்முகமே
என்னே மயக்கு மிது. (தண்டி - மேற்) (கசை)

விபரீதவுவமை

ககசுஉ. புகலரு முவமையைப் பொருள தாக்கிப்
பொருளே யுவமைப் பொருள தாக்கி
உரைப்பது விபரீத வுவமை யாகும்.

என்பது, உவமையைப் பொருளாக்கிப் பொருளே யுவமை யாக்கிக் கூறல், விபரீதவுவமை.

(வ - று.)

திருமுகம் போன்மலருஞ் செய்ய கமலங்
கருநெடுங்கண் போலுங் கயல்க—ளரிவை
இயல்போலு மஞ்ஞை யிடைபோலுங் கொம்பர்
மயல்போலும் யாம்போம் வழி. (தண்டி - மேற்) (கஙி)

வேட்கையுவமை

ககசுக. பொருளே யின்னது போலுமென் றுறைய
வேட்கின்ற தென்னுள மென்பது வேட்கை.

என்பது, பொருளேயின்னது போலக்கூற, எனது மனம் இச்சிக்கின்ற தெனல் வேட்கையுவமை.

(வ - று.)

நன்றுதீ தென்றுணரா வென்னுடைய நன்னெஞ்சம்
பொன்றதைந்த பொற்சுணங்கிற் பூங்கொடியே —மன்றன்
மடுத்ததைந்த தாமரையின் வாண்முகத்துக் கொப்பென்
றெடுத்தியம்ப வேண்டுகின்ற தின்று. (தண்டி - மேற்) (கசு)

பலபொருளுவமை

ககஎ0. ஒருபொருட் குப்பல வுவமமுறல் பலபொருள்
உவமை யென்மனு ருணர்ந்திசி னோரே.

என்பது, ஒருபொருளுக்குப் பலவுவமை வரல் பலபொருளுவமை.

(வ - று.)

வேலுங் கருவிலோயு மென்மானுங் காவியுஞ்
சேலும் வடுவகிருஞ் செஞ்சரமும்—போலுமால்
தேமருவி யுண்டு சிறைவண் டறைகூந்தற்
காமருவு பூங்கோதை கண். (தண்டி - மேற்) (கள)

விகாரவுவமை

ககளக். விகாரமோ வுவமையை விகாரப் படுத்திப்
பொருளை யுவமித்துப் போதர லாகும்.

என்பது, ஒருவுமையை விகாரப்படுத்திப் பொருளை யுவமித் தொழுகல் விகாரவுவமை.

(வ - று.)

சீதமதியி னெளியுஞ் செழுங் கமலப்
போதின் புதுமலர்ச்சி யுங்கொண்டு—வேதாத்தன்
கைம்மலரா னன்றிக் கருத்தால் வகுத்தமைத்தான்
மொய்ம்மலர்ப்பூங் கோதை முகம். (தண்டி. மேற்) (கஅ)

மோகவுவமை

ககளஉ. விழுமிய வொருபொருண் மேலெழும் வேட்கை
வருமன மயக்கம் புலப்பட வகுத்து
மொழிவது மோக வுவமை யாகும்.

என்பது, ஒருபொருண்மேற் றோன்றிய இச்சையினாலே வரப் பட்ட மன மயக்கம் வெளிப்பட வகுத்துக் கூறல் மோகவுவமை.

(வ - று.)

கயல்போலு மென்றுகின் கண்பழிப்பல் கண்ணின்
செயல்போற் பிறழுந் திறத்தாற்—கயல்புகழ்வல்
ஆரத்தா னேம்மருங்கு லந்தரள வாண்முறுவல்
ஈரத்தா லுள்வெதும்பும் யான். (தண்டி · மேற்) (கக)

கூடாவுவமை

ககளங. கூடா ததனைக் கூடுவ தாகக்
கொண்டத னொன்றற் குவமை யாக்கி
உரைப்பது கூடா வுவமை யாகும்.

என்பது, கூடாதவொரு பொருளைக் கூடுவதாகக் கொண்டு, அதனை யொன்றற்குவமை யாக்கிக் கூறல் கூடாவுவமை.

(வ - று.)

சந்தனத்திற் செந்தழலுந் தண்மதியில் வெவ்விடமும்
வந்தனவே போலுமா னும்மாற்றம்—பைந்தொடியீர்
வாவிக் கமல மலர்முகங்கண் டேக்கறுவார்
ஆவிக் கிவையோ வரண். (தண்டி - மேற்) (உ0)

பொதுநீங்குவமை

ககஎச. உவமையைக் கூறி யோதுக்கிப் பொருளை
உவமை யாக்கி யுரைப்பது பொதுநீங்
குவமை யென்மனு ருணர்ந்திசி னோரே.

என்பது, உவமையைச் சொல்லிலீக்கிப் பொருளையுவமை யாக்கிக் கூறல் பொதுநீங்குவமை.

(வ - று.)

திருமருவு தண்மதிக்குஞ் செந்தா மரையின்
விரைமலர்க்கு மேலாந் தகையாற்—கருநெடுங்கண்
மானே யிருளளகஞ் சூழ்ந்தகின் வாண்முகந்
தானே யுவமை தனக்கு. (தண்டி - மேற்) (உக)

உருவக அணி

ககஎடு. உவமைப் பொருளுவ மேயப் பொருளையும்
வேறுபா டொழித்தோன் றெனும்பொருள் விளங்க
உரைப்ப துருவக மாமுரை தரினே.

என்பது, உவமைப் பொருளையும் உவமேயப் பொருளையும் வேறுபாடு நீக்கி யொன்றெனும் பொருள் விளங்கக்கூறல் உருவக வணி.

(வ - று.)

பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார். (உஉ)

தொகை யுருவகம்

ககஎசு. தொகுத்து ரைப்பது தொகையெனப் படுமே.

என்பது, ஆகியவென்னு மாட்டேற்றுச் சொல்லை மறைத்துக் கூறல் தொகையுருவகம்.

(வ - று.)

அங்கை மலரு மடித்தளிருங் கண்வண்டுங்
கொங்கை முகிழுங் குழற்காருந்—தங்கியதோர்
மாதர்க் கொடியுளதா னண்பா வதற்கெழுந்த
காதற் குளதோ கரை. (உக)

விரி யுருவகம்

ககளஎ. விரிந்து நிற்பது விரியெனப் படுமே.

என்பது, ஆகியவென்னு மாட்டேற்றுச் சொல் வெளிப்பட்டு நிற்றல் விரி யுருவகம்.

(வ - று.)

கொங்கை முகையாக மென்மருங்குல் கொம்பாக
அங்கை மலரா வடித்தளிராத்—திங்கள்
அளிநின்ற மூர லணங்கா மெனக்கு
வெளிநின்ற வேனிற் றிரு. (உச)

தொகைவிரி யுருவகம்

ககளஅ. தோக்கும் விரிந்து நிற்பது தொகைவிரி.

என்பது, ஆகியவென்னு மாட்டேற்றுச் சொல் மறைந்தும் வெளிப்பட்டும் நிற்றல் தொகைவிரி யுருவகம்.

(வ - று.)

வையந் தகழியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டுவன் சொன்மாலை
இடராழி நீங்குகவே யென்று. (உடு)

இயை புருவகம்

ககளகூ. உருவகம் பலபொரு ளாயுமுஞற் றுங்கால்
தம்மு ளியையுடைத் தாக வுருவகஞ்
செய்வ தியைபெனச் செப்பினர் புலவர்.

என்பது, பல பொருள்களையும் உருவகஞ் செய்யுங்கால் தம்முளியை புடையனவாக வைத்து உருவகஞ் செய்தல் இயைபுருவகம்.

(வ - று.)

செவ்வாய்த் தளிரு நகைமுகிழுங் கண்மலரு
மைவ்வா ரளக மதுகரமுஞ்—செவ்வி
உடைத்தாந் திருமுகமென் னுள்ளத்துள் வைத்தார்
துடைத்தாரே யன்றே துயர். (உசு)

இயைபிலுருவகம்

ககஅo. இயைபிலி யியைபுடைத் தின்றிப் போதுவ
ஆகு மென்மனு ரறிந்திசி னோரே.

என்பது, பல பொருளையுந் தம்முளியைபிலாதுருவகஞ் செய்தல் இயைபிலியுருவகம்.

(வ - று.)

தேனக் கலர்கொன்றை பொன்னுகச் செஞ்சடைமேல்
கூனற் பவளக் கொடியாகத்—தான
மழையாகக் கோடு மதியாகத் தோன்றும்
புழையார் தடக்கைப் பொருப்பு. (உஎ)

வியனிலை யுருவகம்

ககஅக. ஒன்றனங் கம்பல வற்றினுள் ளுஞ்சில
உருவகஞ் செய்துசெய் யாமலு முரைப்பது
வியனிலை யென்மனுர் மெய்யுணர்ந் தோரே.

என்பது, ஒன்றன தவயவம் பலவினுள்ளும் சிலவற்றை யுருவகஞ் செய்து, செய்யாமலும் வருவது வியனிலை யுருவகம்.

(வ - று.)

செவ்வாய் நகையரும்பச் செங்கைத் தளிர்விளங்க
மைவ்வா ணெடுங்கண் மதர்த்துலவச்—செவ்வி
நறவலருஞ் சோலைவாய் நின்றதே நண்பா
குறவர் மடமகளாங் கொம்பு. (உஅ)

உருவக வுருவகம்

ககஅஉ. ஒருபொரு ளுருவகஞ் செய்துமற் றப்பொருண்
மீட்டு முருவகஞ் செய்வ துருவக
உருவக மென்மனு ருணர்ந்திசி னோரே.

என்பது, ஒருபொருளை யுருவகஞ்செய்து அப்பொருளை மீட்டும் பிறிதொன்றாக வுருவகஞ் செய்தல் உருவக வுருவகம்.

(வ் - று.)

கன்னிதன் கொங்கைக் குவடாங் கடாக்களிற்றைப்
பொன்னெடுந்தோட் குன்றே புனைகந்தா—மன்னவனின்
ஆகத் தடஞ்சே வகமாக யானணைப்பல்
சோகித் தருளே றுவண்டு. (தண்டி - மேற்) (உக)

ஏகாங்க வுருவகம்

ககஅஊ. ஒருபொரு ளவயவம் பலவி னுள்ளும்
ஒன்றனை யுருவகஞ் செய்துமற் றொன்றனை
இயம்பா தகற்றுவ தேகாங்க மாகும்.

என்பது, ஒரு பொருளினுடைய அங்கம் பலவினுள்ளும் ஓரங்க முருவகஞ் செய்து, ஓரங்கத்தை யுருவகஞ் செய்யாதுவிடல் ஏகாங்க வுருவகம்.

(வ - று.)

காதலனைத் தாவென் றுலவுங் கருகெடுங்கண்
ஏதிலனுல் யாதென்னு மின்மொழித்தேன்—மாதர்
மருண்ட மனமகிழ்ச்சி வாண்முகத்து வந்த
இரண்டினுக்கு மென்செய்கோ யான். (தண்டி-மேற்) (ஊ0)

அனேகாங்க வுருவகம்

ககஅஎ. ஒருபொரு ளவயவ மெல்லா முருவக
மாக்கல னேகாங் கப்பொரு ளாகும்.

என்பது, ஒன்றனதங்கம் பலவற்றையு முருவகஞ் செய்தல் அனேகாங்க வுருவகம்.

(வ - று.)

கைத்தளிராற் கொங்கை முகிழ்தாங்கிக் கண்ணென்னு
மைத்தடஞ்சேன் மைந்தர் மனங்கலங்க—வைத்ததோர்

மின்னுளதான் மேக மிசையுளதான் மற்றதுவும்
என்னுளதா கண்பா வினி. (தண்டி - மேற்) (கக)

ஏகதேச வுருவகம்

ககஅநி. ஒருபொரு ளுருவகஞ் செய்துமற் றொருபொருள்
உருவகஞ் செய்யா துரைத்துப் போதரல்
ஏகதே சப்பொரு ளென்மனூர் புலவர்.

என்பது, ஒருபொருளை யுருவகஞ்செய்து வேருகிய ஒரு பொருளை யுருவகஞ் செய்யாது வரல் ஏகதேச வுருவகம்.

(வ - று.)

உரனென்னுந் தோட்டியா னேரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து. (குறள்-உச) (கஉ)

பல்பட்ப் பூனைவணி

ககஅசு. பலரு மொருபொரு ளிற்பல தருமங்
களினுற் பலபொருள் களையெடுத் துரைத்தல்
பலபடப் பூனைவேனப் பகரப் படுமே.

என்பது, ஒருபொருளிற் பலரும் பலவறங்களால் பல பொருள்களை யெடுத்துக்கூறல் பலபடப்பூனைவணி.

(வ - று.)

ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமனன் னூலதென்பர்
ஏரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே.
(திருக்கோவையாரைப் பற்றியது) (கங)

மயக்கவணி

ககஅஎ. ஒப்புமை யாலொரு பொருளை மற்றொரு
பொருள தாகப் பூனைவது மயக்க
அணியா மென்மனு ரறிந்தீசி னூரே.

என்பது, ஒப்பினுலொருபொருளை வேறொரு பொருளாகக் காணல் மயக்கவணி.

(வ - று.)

மழைக்கண் மங்கையர் பயிறர மரகத மணியின்
இழைத்த செய்குன்றிற் பைங்கதிர் பொன்னிலத் தெய்தக்
குழைத்த வைந்தரு நீழலிற் குலவுமா னினங்கள்
தழைத்த புல்லென விரை வொடு தனித்தனி கறிக்கும். (கூசு)

ஐயவணி

ககஅஅ. ஒப்புமை யாலொரு பொருளை நோக்குபு
இதுவோ வதுவோ வெனச்சந் தேகப்
படுவதை யப்பொரு ளாம்பகர் தரினே.

என்பது, ஒப்பினாலொரு பொருளைப் பார்த்து, இதுவோ வத்துவோவெனச் சந்தேகப்படல் ஐயவணி.

(வ - று.)

அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு. (குறள் கoஅக) (கூடு)

எடுத்துக் காட்டுவமை

ககஅக. ஒருபொருட் கொருபொரு ளுவமையாக
எடுத்துக் காட்டுவ தெடுத்துக் காட்டுவமை
ஆகு மென்மனு ரழிந்திசி னோரே.

என்பது, ஒரு பொருளுக்கு வேறொரு பொருளை உவமையாக வெடுத்துக் காட்டல் எடுத்துக் காட்டுவமை.

(வ - று.)

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. (குறள் க) (கூசு)

கூடாமையணி

கககூo. பேசரு மொருகா ரியம்பிறப் பதனை
அருமை யுடையன வாகக் கூறல்
கூடாமை யென்மனூர் குறிப்புணர்ந் தோரே.

என்பது, ஒரு காரியம் பிறப்பதை யருமையாகக் கூறல் கூடாமையணி.

(வ - று.)

அடுக்கலியோர் கையினு லாயச் சிறுவன்
எடுக்குமென லாரறிவா ரீங்கு. (கூ எ)

தொடர்பின்மையணி

ககஙூக. காரண மோரிடத் திருப்பக் காரியம்
வேறோரு மருங்கின் விளைவ தாக
வரல்தொடர் பின்மையாம் வழுத்துங் காலே.

என்பது, காரணமொருவிடத் திருப்பக் காரியம் வேறோரிடத்துப் பிறந்ததாய் வரல் தொடர்பின்மையணி.

(வ - று.)

வேறொரு மாதர்மேல் வேந்த னகநுதியால்
ஊறுதர விம்மா துயிர்வாடுங்—கூறின்
இருவரே மெய்வடிவி னேந்திழை நல்லார்
ஒருவரே தம்மி லுயிர். (தண்டி - மேற்) (கூஅ)

தகுதியின்மையணி

ககஙூஉ. பொருத்தமில் பொருட்குத் தானொரு பொருத்தம்
இயம்புவ தகுதி யின்மை யாகும்.

என்பது, பொருத்தமில்லாத பொருளுக்குத் தானொரு பொருத்தங்கூறல் தகுதியின்மையணி.

(வ - று.)

பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே—மின்போலு
மானவேன் முட்டைக்கு மாறுய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு.
(பொய்யாமொழியார்) (கூக)

தகுதியணி

ககஙூங. தகுதியா மிருபொரு டனக்குச் சம்பந்தம்
அறைவது தகுதியென் றறையப் படுமே.

என்பது, தகுதியாகிய இரண்டு பொருள்களுக்குச் சம்பந்தங் கூறல் தகுதியணி.

(வ - று.)

இந்தத் தரளவட மேந்திழைகின் கொங்கைகளிற்
சந்தமுறச் சேர்த றகும். (சஂ)

வியப்பணி

கககூச. அரிதொரு பயனைக் கருதிய தற்குப்
பகையா முயற்சி பணல்வியப் பாகும்.

என்பது, அரிதாகிய வொரு பிரயோசனத்தை யெண்ணி அதனுக்குப் பகையாகிய முயற்சி செய்தல் வியப்பணி.

(வ - று.)

ஓதுந் திறத்தா லுயர்ந்தோர்க டாழ்குவரெப்
போது முயர்வெய்தற் பொருட்டு. (சக)

பெருமையணி

கககூடு. ஆதா ரத்தினு மாதே யத்தைப்
பெரிதா யுரைப்பது பெருமை யாகும்.

என்பது, ஆதாரப் பொருளினும் ஆதேயப் பொருளைப் பெரிதாகக் கூறல் பெருமை.

(வ - று.)

உலக முழுதடங்கு மாவிசும்பி லுன்றன்
அலகில் குணமடங்கா வாம். (சஉ)

சிறுமையணி

கககூசு. ஆதே யத்தினு மாதா ரத்தைச்
சிறுமை யாகச் செப்புதல் சிறுமை.

என்பது, ஆதேயப் பொருளினும் ஆதாரப் பொருளைச் சிறுமையாகக் கூறல் சிறுமையணி.

(வ - று.)

விரலாழி கைவளையாய் விட்டதினி யார்த்து
வரலாழிக் கென்செயுமெம் மாது.

ஆதாரம் - பெருமை. ஆதேயம் - சிறுமை. (சஊ)

ஒன்றற்கொன் றுதவியணி

ககக. **ஒன்றற் கொன்றுப கரித்தலே யுரைத்தல்**
ஒன்றற் கொன்றுத விப்பொரு ளாகும்.

என்பது, ஒன்றனுக்கொன் றுபகரித்தலைக் கூறல் ஒன்றற் கொன் றுதவியணி.

(வ - று)

திங்களிர வால்விளங்குஞ் செப்புங் கதிர்த்திங்கள்
கங்குலினு லேவிளங்குங் காண். (சச)

சிறப்பு நிலையணி

ககஉ. **ஆதார மில்லா திருப்பவா தேய**
இருப்பை யுரைப்பது சிறப்புநிலை யாகும்.

என்பது, ஆதாரப் பொருளில்லா திருக்க ஆதேயப் பொரு ளிருக்கையைக் கூறல் சிறப்புநிலை.

(வ - று.)

தினகரனில் லாமலவன் செய்ய கதிர்க
ளினிதிலங்குந் தீபத் திருந்து. (சடு)

முறையிற் படர்ச்சியணி

கககக. **அடைவது பற்பல விடங்களி லொருபொருண்**
முறையிற் படர்ச்சி யாமென மொழிப.

என்பது, ஒருபொருள் பற்பல விடங்களி லுறைவது முறையிற் படர்ச்சி.

(வ - று.)

நஞ்சமே நீபண்டை நாளி னதிபதிதன்
நெஞ்சிலிருந் தாங்கதன்பி னீங்கியே—செஞ்சடிலச்
சங்கரனூர் கந்தரத்திற் சார்ந்திக் கொடியோன்வாய்
தங்குதியிக் காலந் தனில். (சசு)

மாற்றுநிலையணி

கஉ00. **இழிவாம் பொருள்கொடுத் துயர்வா கியபொருள்**
வாங்குவ மாற்று நிலைப்பொரு ளாகும்.

என்பது, இழிவாகிய பொருளைக் கொடுத்து உயர்வாகிய பொருளை வாங்கல் மாற்றுங்கிலை.

(வ - து.)

சடாயு கிழவுடம்பைத் தான்கொடுத்துப் பெற்றான்
கெடாததொரு கீர்த்தி யுடம்பு. (சஎ)

ஒழித்துக் காட்டணி

கஉ0க். ஒருபொரு ளோரிடத் திலையென நீக்கி
வேறோ ரிடத்துள தெனவிடுத் தியம்பல்
ஒழித்துக் காட்டென வுரைக்கப் படுமே.

என்பது, ஒரு பொருளொருவிடத்து இல்லையென்று நீக்கி வேறோரிடத் துண்டென்று கூறல் ஒழித்துக்காட்டு.

(வ - து.)

சிறைபடுவ புட்குலமே யன்றிகின் றேயத்
திறைவமக் கட்கு ளிலை. (சஅ)

கூட்டவணி

கஉ0உ. இகலின் மையினு லேயொரு காலங்
கூடத் தகும்பொருட் குக்குழாங் கூறல்
கூட்ட மெனப்பெயர் குறிக்கப் படுமே.

என்பது, பகையில்லாமையா லொருகாலஞ் சேரத்தகுந்த பொருள்களுக்குக் கூட்டத்தைக் கூறல் கூட்டவணி.

(வ - து.)

நின்சீ ருருவும் வெளிப்படுத னேக்கி நோக்கி வெய்துயிர்க்கும்
என்பு டுருக விளமுலைமேற் புல்லு முனிந்தா யெனவருந்தும்
அன்போ டுடை நீர்த்தனன்போ னகைக்கு மகன்ரு யெனவெளியிற்
பின்போ தருநல் லுணர்விழந்த பித்தர் போலப் பேதுறுமால்.
(சக)

எளிதில் முடிபணி

கஉ0ங. ஆற்ற வொருவனு ரம்பித் தவையோடு
காரண வுதவியாற் கைப்பட லதுதான்
எளிதின் முடிபென வியம்பப் படுமே.

என்பது, ஒருவன் செய்யத் தொடங்கிய காரியம் வேறொரு காரண வுதவியா லெளிதின் முடிதல் எளிதின்முடிபணி.

(வ - று.)

மதிநுதலாட் கியானூடன் மாற்றத் தொழும்போ
துதவிமுகில் செய்தன் றெலித்து. (நo)

இன்பவணி

கஉoச. முன்னிய காரிய முயற்சி யில்லாமற்
சித்திப்ப தின்பமாஞ் செப்புங் காலே.

என்பது, தானினைத்த காரியம் முயற்சியின்றிக் கிடைத்தல் இன்பவணி.

(வ - று.)

தன்னு யகன்விழைந்த தையலேயே தூதாக
வன்னுன்க ணுய்த்தா ளணங்கு. (நக)

துன்பவணி

கஉoடு. கோதற விரும்பும் பொருளைக் குறித்தே
ஏதமின் முயற்சி யெடுத்ததற் கிகல்போருள்
அடைவது துன்பமென் றறையப் படுமே.

என்பது, தான் விரும்பிய பொருளைக் குறித்து முயற்சி செய்து அதற்குப் பகையாகிய பொருளடைதல் துன்பவணி.

(வ - று.)

சோருஞ் சுடர்விளக்கைத் தூண்டு கையிலவிந்த
தாருமிடர் கூர வகத்து. (நஉ)

அகமலர்ச்சியணி

கஉoசு. ஒன்றன் குணங்குற் றங்களான் வேறுன்
றற்கவை யுளவா தலையறி வித்தல்
அகமலர் பென்மனு ரறிந்திசி னேரே.

என்பது, ஒன்றனது குணத்தினனும் குற்றத்தினனும் வேறொன்றற்கு, அவையுளவா தல் அகமலர்ச்சியணி.

(வ - று.)

இக்கற்பி னண்மூழ்கித் தகைமை செயுமோ வெனினயென்
றக்கங்கை கொள்ளு மவா. (ஙிகூ)

இகழ்ச்சியணி

கஉ०எ. ஒன்றன் குணங்குற் றங்களால் வேறுன்
றற்கவை யுளவா காமையைக் கூறல்
• இகழ்ச்சி யென்மனு ரியல்புணர்ந் தோரே.

என்பது, ஒன்றனது குணத்தினனும், குற்றத்தினனும் வேறுென்றற் கவையுளவாகாமையைக் கூறல் இகழ்ச்சி.

(வ - று.)

ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடனீர்
நாழி முகவாது நாணுழி—தோழி
நிதியுங் கணவனு நேர்படினுந் தன்றன்
விதியின் பயனே பயன். (ஙிச)

வேண்டலணி

கஉ०அ. குற்றத் தாற்குணங் குறுகுத லேக்கி
அக்குற் றத்தினை யவாவுதல் வேண்டல்
அணியா மென்மனு ரறிந்திசி னோரே.

என்பது, குற்றத்தினுலே குணமுண்டாதலேயறிந்து அக் குற்றத்தை விரும்பல் வேண்டலணி.

(வ - று.)

வெண்டிரு நீறு புனையுமா தவர்க்கு
விருந்துசெய் துறுபெரு மிடியுங்
கொண்டகல் விரதத் திகோக்கும்யாக் கையுநீ
கொடியனுக் கருளுநா ளுளதோ. (ஙிஙி)

மறையணி

கஉ०க. பொதுக்குணத் தாலிரு பொருள்களுக் குரிய
வேற்றுமை வெளிப்படா திருப்பது மறையே.

என்பது, பொதுமைக் குணத்தால் இரண்டு பொருள்களுக்கு உரிய வேற்றுபாடு தோன்றுமை மறையணி.

(வ - று.)

பேதமுறத் தோன்றுதிப் பேதையியற் கைச்சிவப்பாற்
பாதமுற வூட்டியசெம் பஞ்சு. (இசு)

பொதுமையணி

**கஉகo. ஓதிய வோப்புமை யாலிரு பொருட்கு
விசேடம் விளங்கா திருப்பது பொதுமை.**

என்பது, ஒப்புமையா லிரண்டு பொருள்களுக்கு விசேடம் விளங்காதிருப்பது பொதுமையணி.

(வ - று.)

வண்பதும வாவி யடைந்தமட வார்வதனம்
பண்பி னறியப் படா. (நள)

மறையாமையணி

**கஉகக. ஓதும் பொதுக்குணத் தோப்புமை யுடைய
விருபொருட் கொருகார ணத்தால் வேற்றுமை
வெளிப்படன் மறையாமை யாம்விளம் பிடினே.**

என்பது, பொதுக்குணத் தொப்புமையுடைய இரண்டு பொருள்களுக்கு ஒரு காரணத்தால் வேற்றுமை தோன்றல் மறையாமையணி.

(வ - று.)

ஒழுகுறு மருவி யீட்ட மொலியினு னகுவெண் டிங்கள்
பழகுறு முடற்க ளங்கால் பாகசா தனன்கூர்ங் கோட்டு
மழகளி றுமிழ்ம தத்தான் மலர்மிசைக் கடவு ளுர்தி
அழகுறு நடையா லன்றி யறிதரப் படாவக் குன்றில்.
(பிரபுலிங்கலீலை) (இஅ)

உலகவழக்கு நவிற்சியணி

**கஉகஉ. உலக வழக்கைத் தழுவி யுரைப்பது
உலக வழக்கு நவிற்சி யாகும்.**

என்பது, உலக வழக்கைத் தழுவிக்கூறல் உலகவழக்கு நவிற்சியணி.

(வ - று.)

அண்ணனீ பேசாதைந் தாறுமா தம்வரையிற்
கண்ணீரூ டிக்கொண் டிரு. (இக)

வல்லோர் நவிற்சியணி

கஉகஙு. உலக வழக்கத் தொடுவே ரொருபோருண்
மனங்கொண் டிருப்பது வல்லோர் நவிற்சி.

என்பது, உலகவழக்கச் சொல்லோடு வேரொரு பொருளூடீ கொண்டிருப்பது வல்லோர் நவிற்சியணி.

(வ - று.)

பறிமலர்ப்பூங் குஞ்சியாய் பாம்பேபாம் பின்கா
லறியுமுல கத்தென் றறி. (கூ0)

தீபகவணி

கஉகச. குணந்தொழி லாக்கங் குலங்குறித் தோருசொல்
ஒருவயி னின்றும் பலவயிற் போருடரின்
தீபக மூவிடத் தியலு மென்ப.

என்பது, பண்பும் வினையும் பொருளும் சாதியும் குறித்தொரு சொல் ஓரிடத்திருந்தும் பலவிடத்திருக்கும் பொருளீத்தரின் தீபகவணியாம், அது, முதலிடை கடையாகிய மூன்றிடத்தினும் புலப்படுமெனவே, முதனிலைத்தீபகம், இடைநிலைத்தீபகம், கடைநிலைத்தீபகமென மூன்றும், அவை, குணம், தொழில், சாதி, பொருள் என்பவற்றோடும் கூடிப் பன்னிரண்டாம்.

(வ - று.)

முதனிலைக் குணத் தீபகவணி.

சேந்தன வேந்தன் றிருநெடுங்கண் டெவ்வேந்தர்
ஏந்து தடந்தோ ளிழிகுருதி—பாய்ந்த
திசையனீத்தும் வீரச் சிலைபொழிந்த வம்பு
மிசையனீத்தும் புட்குலமும் வீழ்ந்து. (தண்டி - மேற்)

முதனிலைத் தொழிற் றீபகம்.

சரியும் புனைசங்குந் தண்டளிர்போன் மேனி
வரியுந் தனதடஞ்சூழ் வம்புந்—திருமான
ஆரந் தழுவுந் தடந்தோ ளனபாயன்
கோரந் தொழுத கொடிக்கு. (தண்டி - மேற்)

முதனிலைச் சாதித்தீபகம்.

தென்ற லனங்கன் றுணையாஞ் சிறுகொம்பர்
மன்றற் றலைமகனும் வான்பொருண்மேற் —சென்றவர்க்குச்
